ஸ்ரீ:

ஸ்ரீராமாயணம்.

நித்தியகாண்டம்.

தமிழ் வசனம்.

இஃது

ஸ்ரீவால்மீகி ராமாயணத்திற்கிணங்க

ஸ்ரீ. அ. வீ. நரஸிம்ஹாசாரியரால்

இயற்றப்பெற்று

சென்னை

ஆர். வெங்கடேச்வர் அண்டு கம்பெனியாரவர்களால

ஆனந்த அசசுக்கூடத்தில் அச்சிட்டு,

வெளியிடப்பட்டது

1913

ALL RIGHTS RESERVED.

ALL RIGHTS RESERVED.

காபிரைட். 1913வது :—ஆர். வெங்கடேஸ்வர் அண்டு கம்பெனியாரவர்கள் காபிரைட்டுக்குரியவர்கள். இப்புத்தகம் இந்தியன் காபிரைட் பிரகாரமாகவும், அங்யதேசியரது காபிரைட் பிரகாரமாகவும், காக்கப்பட்டிருக்கின்றது. எவராயினும் இப்புத்தகத்தை முழுவதுமாவது, அல்லது இதில் ஒரு பாகத்தையாவது தாம் வேறுக அச்சிடவும், மற்றொரு பாஷையில் மொழிபெயர்த்து அச்சிடவும் அதிகாரமில்லை. இதிலுள்ள படங்களையாவது, பாவங்களையாவது, படங்களையாவது காபி செய்வார்களாயின், அது காபிரைட்டை உல்லங்கனஞ் செய்ததே ஆகும்.

விஷயங்கள்.

ஸர்க்கம்.		பேஜ்.
1	கிஷ்கிந்தாகாண்டம்	1601
2	ஸுக்ரீவன் ஹனுமானை ராமலக்ஷ்மணர்களிடம் அனுப்புதல் ...	1625
3	ஹனுமான் ராமலக்ஷ்மணர்களோடு ஸம்பாஷித்தல் ...	1629
4	லக்ஷ்மணன் ஹனுமானுக்குத் தமது வ்ருத்தாந்தத்தைத் தெரிவித்தலும் அவர்கள் ஸுக்ரீவனிடம் போதலும் ...	1638
5	ராமனும் ஸுக்ரீவனும் அக்னிஸாக்ஷிகமாக ஸ்நேஹஞ் செய்துகொள்ளல்	1644
6	ஸுக்ரீவன் ராமகார்யத்தைச் செய்வதாக ப்ரதிஜ்ஞை செய்தல் ...	1648
7	ராம ஸுக்ரீவர்கள் ஒருவர்க்கொருவர் ப்ரதிஜ்ஞை செய்துகொள்ளல் ...	1651
8	ஸுக்ரீவன் தன் சோகத்தின் காரணத்தை ராமனுக்குத் தெரிவித்தல் ...	1658
9	வாலி தனக்குச்செய்த அபராதங்களை ஸுக்ரீவன் ராமனுக்குச்சொல்லுதல்.	1663
10	ஸுக்ரீவன் வாலியை வேண்டிக்கொள்ளலும், வாலி தயைபாராமல் ஸுக்ரீவனை நிக்ரஹஞ்செய்ததலும்	1667
11	ஸுக்ரீவன் வாலியின் பராக்ரமத்தையும் துந்துபியுத்தத்தையும் மந்தங்கசாபத்தையும் வாலி ஸப்தஸாலாந்த்ராஞ் செய்	

ஸர்க்கம். பேஜ்.

தனதையும் கூறுதலும், ராமன் துந்துபி சரீரத்தைத் தூக்கியெறிதலும், ஸுக்ரீவன் ஸப்த ஸாலங்களைப் பேதிக்க வேண்டுதலும் 1671

12 ராமன் ஸப்தஸாலங்களைப் பேதித்தலும் வாலி ஸுக்ரீவர்களின் ப்ரதமயுத்தமும். 1683

13 ராமஸுக்ரீவாதிகள் மீளவும் கிஷ்கிந்தைக்குப்போதல் 1687

14 ஸுக்ரீவன் வாலியை யுத்தத்திற்கழைக்க பயப்படுகையில், ராமன் அவன் பயத்தைப் போக்குதல் ... 1691

15 வாலி ஸுக்ரீவனது நாதத்தைக்கேட்டு இரண்டாந்தடவை யுத்தத்திற்குப்புறப்படுதலும், தாரை வேண்டாமென்று தடுத்தலும் 1695

16 வாலி தாரைக்குஸமாதானங் கூறுதலும், வாலி ஸுக்ரீவர்கள் மீளவும் யுத்தஞ் செய்தலும் ராமன் வாலியின்மேல் பாணப்ரயோகஞ் செய்தலும் ... 1702

17 வாலி ராமனை நிந்தித்தல் ... 1708

18 ராமன் வாலிக்கு மறுமொழிகூறுதல். 1716

19 தாரை மரணம்அடைந்த வாலியிடம் வருதல் 1728

20 தாரை புலம்புதல் 1732

21 ஹனுமான் தாரைக்குநல்வார்த்தை சொல்லுதல் 1737

22 மரணம் அடைந்தாற்போல் மூர்ச்சித்துக் கிடக்கும் வாலி மூர்ச்சைதெளிந்துமேற்செய்யவேண்டுங்கார்யத்தைக்கூறுதல் 1740

ஸர்க்கம.		பேஜ்
23	வாலி மரணம் அடைந்தபின்பு தாரை புலம்புதல்	1745
24	தாரையின் புலம்பலைக்கேட்டு ஸுக்ரீவன் துக்கித்தலும், ராமன் அவனை ஸமாதானப்படுத்துதலும், தாரை ராமனிடம்ப்ரபத்தி செய்தலும்	1749
25	ராமன் எல்லோர்க்கும் ஸமாதானஞ்சொல்லுதலும், வாலிக்கு ஸம்ஸ்காரஞ் செய்தலும்	1764
26	ஸுக்ரீவ பட்டாபிஷேகம் ...	1771
27	ராமன் ஸீதாவிரஹத்தால் சோகித்தலும் லக்ஷ்மணன் சமாதானப்படுத்தலும்.	1777
28	ராமன் வர்ஷருதுவை வர்ணித்தல் ...	1784
29	ஹனுமான் ராமகார்யத்தை மறந்த ஸுக்ரீவனுக்குத் தெரிவித்தலும், ஸுக்ரீவன் கலனைக்கொண்டு ஸகல ஸைன்யங்களையும் வரவழைக்கும்படி ஆஜ்ஞாபித்தலும்	1797
30	சரத்ருது வருவதும், ஸுக்ரீவன் ப்ரயாணத்துச் செய்யாமைக்கு ராமன் கோபித்தலும்.	1802
31	அங்கதன் ஸுக்ரீவனிடம் லக்ஷ்மணன் கோபித்துவருவதைக் கூறுதல் ...	1817
32	ஹனுமான் ஸுக்ரீவனுக்கு ஹிதோபதேசஞ் செய்தல்	1825
33	அந்தப்புரத்திற்கு வந்த லக்ஷ்மணனைத் தாரை அருள்புரியச் செய்தல் ...	1828
34	ஸுக்ரீவனிடம் லக்ஷ்மணன் சர்மன்சொன்னஸங்கதியைச் சொல்லுதல் ...	1839

ஸர்க்கம்.		பேஜ்.
35	தாரை மீளவும் லக்ஷ்மணனை நல்வார்த்தைகளால் ஸமாதானப் படுத்துதல்.	1842
36	லக்ஷ்மணனும் ஸுக்ரீவனும் ஸ்நேஹத்துடன் ஸம்பாஷித்தல் ...	1845
37	ஸுக்ரீவன் ஸமஸ்த வானரர்களையும் வரவழைத்தல்	1848
38	ஸுக்ரீவனும் லக்ஷ்மணனும் ராமனிடம் போதல்	1852
39	ஸமஸ்த வானரனைன்யங்களும் வந்து கூடுதல்	1857
40	ஸீதையைத் தேடும்பொருட்டு விநதனைக் கீழ்த்திசைக்கனுப்புதல் ..	1862
41	ஸுக்ரீவன் தென்திசைக்கு ஹனுமான் முதலானவர்களை அனுப்புதல் ..	1871
42	ஸுக்ரீவன் மேற்றிசைக்கு ஸுஷேணன் முதலிய வானரர்களை அனுப்புதல் ...	1878
43	ஸுக்ரீவன் வடதிசைக்கு சதவலி முதலிய வானரர்களை அனுப்புதல் ..	1885
44	ராமன் ஹனுமானுக்கு அடையாளமாக அங்குலீயகங் கொடுத்தல் ...	1894
45	அனுப்பப்பட்ட வானரர்களின் ஸ்நாஹம்.	1896
46	ஸுக்ரீவன் ராமனுக்கு ஸமஸ்த பூமண்டலமும் தனக்குத்தெரிந்த வித்தைதக்கூறுதல்	1899
47	தென்திசைக்குப் போனவர் தவிர மற்றத் திசைகளுக்கு போனவரெல்லோரும் திரும்பிவருதல்	1902
48	ஹனுமான் முதலானவர்கள் தென்திசைக்குப்போய் ஸீதையைத்தேடுதலும் அங்கு ஓர் அஸுரனைக் கொல்லுதலும்.	1904

ஸர்க்கம். பேஜ்.

49 ஹனுமான் மீளவும் வேறு இடங்களில் தேடிப்பார்த்தல் 1907

50 ஹனுமான் முதலியவர் ருக்ஷபிலத்தில் ஸ்வயம் ப்ரபையைக் காணுதல் ... 1909

51 ஸ்வயம்ப்ரபை வானரர்களுக்கு ருக்ஷபில வ்ருத்தாந்தத்தைக் கூறுதல்... 1914

52 ஹனுமான் ஸ்வயம்ப்ரபைக்குத் தாம்வந்த கார்யத்தை தெரிவித்தல் ... 1916

53 ஸ்வயம்ப்ரபை வானரர்களைப் பிலத்தினின்று தன் மஹிமையால் வெளிப்படுத்துதலும், வானரர்கள் கெடுகடந்ததற்கும் ஸீதையைக் காணுமைக்கும் வெறுப்புறுதலும் 1919

54 ஹனுமான் அங்கதனுடைய மதத்தைக் கண்டித்து ஸுக்ரீவனிடம் போகலாமென்றுரைத்தல் 1924

55 அங்கதாதி வானரர்கள் ப்ராயோபவேசஞ் செய்தல் 1928

56 ஸம்பாதி வருதலும், ஸம்பாதியைபபார்த்து வானரர்கள் துக்கஸம்பாஷணஞ் செய்தலும் 1932

57 ஸம்பாதிக்கும் வானரர்களுக்கும் ஸம்பாஷணம் ... 1934

58 ஸம்பாதி ஸீதையிருக்குமிடத்தை வானரர்களுக்குக் கூறுதல் ... 1937

59 ஜாம்பவான் வினவுகையில் ஸம்பாதி தன் புத்ரனாகிய ஸுபார்ச்வன் மூலமாய்ராவணன் ஸீதையை எடுத்துக்கொண்டு

ஸர்க்கம். பேஜ்

போன வ்ருத்தாந்தம் தனக்குத் தெரியு
மென்று கூறுதல் ... 1942

60 ஸம்பாதி தன் இறகுகள் தீய்ந்துபோனது
முதலிய வ்ருத்தாந்தங்களைக் கூறுதல். 1946

61 ஸம்பாதி தன் இறகுகள் வெந்துபோன
வ்ருத்தாகதத்தை நிசாகர மஹர்ஷிக்
குச் சொல்லுதல் ... 1949.

62 நிசாகரமுனி ஸம்பாதிக்கு இறகுகள் முளை
க்குமப்ரகாரத்தைக் கூறுதல ... 1951

63 ஸம்பாதிக்கு இறகுகள் முளைத்தலும், வா
னர்களுக்கு ஸம்பாதி செய்யவேண்
டிய கார்யத்தைக் கூறுதலும் ... 1953

64 வானர்கள் ஸமுதரத்தினருகில் சேருதல். 1956

65 வானர்கள் ஸமுத்ரத்தாண்டுவதில் தமக்
குள்ள சக்தியின் அளவைக்கூறுதல்... 1959

66 ஜாம்பவான ஹனுமானை ஸமுத்ரந்தாண்
ட உத்ஸாஹப் படுத்துதல் ... 1963

67 ஹனுமான் வானரர்களை உத்ஸாஹப்படுத்
தி ஸமுத்ரத்தைத் தாண்டிப்பாரு
மஹேந்த்ர பர்வதத்தின்மேல் ஏறுதல். 1968

படங்களின் விவரம்.

1601. ராமன் பம்பாதீரத்தில் பக்ஷிமுதலியவற்றைக் கண்டு தன் விரவேதனையை லக்ஷ்மணனுக்குக் கூறுதல்.

1629. ஹனுமான் ஸந்யாஸி வேஷம்பூண்டு ராமலக்ஷ்மணரிடம் வருதல்.

1643. ஹனுமான் ராமலக்ஷ்மணர்களைத் தோள்மேல் ஏற்றிக்கொண்டு ஸுக்ரீவனிடம் போதல்.

1649. ஸுக்ரீவன் ஸீதையின் ஆபரணங்களைக் காண்பித்தலும், ராமன் அதைக்கண்டு வருத்தமுறுதலும்.

1681. ராமன் துந்துபி சரீரத்தை மேற்கிளம்பும்படி ஏடுத்தெறிதல்.

1683. ராமன் ஸப்த ஸாலங்களைப் பேதித்தல்.

1707. வாலி ஸுக்ரீவர்களின் யுத்தமும், வாலியின்மேல் ராமன் பாணப்ரயோகஞ் செய்தலும்.

1733. தாரை வாலியைக்கண்டு புலம்புதல்.

1775. ஸுக்ரீவ பட்டாபிஷேகம்.

1834. அங்கதப்புரத்திற்கு வந்த லக்ஷ்மணனைத் தாரை ஸமாதானப் படுத்துதல்.

1911. வானரர்கள் ஸ்வயம்ப்ரபையின் பிலத்தில் புகுதல்.

1916. ஸ்வயம்ப்ரபை வானரர்களுக்குப் பல மூலாதிகளைக் கொடுத்தல்.

1933. ஸம்பாதியைக்கண்டு வானரர்கள் பயப்படுதல்.

1955. ஸம்பாதி மீளவும் இறகுகள் முளைக்கப்பெற்று மேற்கிளம்புதல்.

1959. அங்கதாதிகள் ஸமுத்ரந் தாண்டுவதில் தமக்குள்ள சக்தியை ஜாம்பவானுக்கு அறிவித்தல்.



1601. ராமன் பம்பாதீரத்தில் பக்ஷி முதலியவற்றைக கண்டு தன் விரவேதனையை லக்ஷ்மணனுக்குக் கூறுதல.



ஸ்ரீ ஃ

ஸ்ரீ ஸீதாஸமேத ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம ஃ

பஞ்சவடீகாண்டம்.

கிஷ்கிந்தாகாண்டம்.



ஸ்ரீ [1] ராமன், கோதாவரீ நதியின் வடகரையில் பஞ்சவடீ யென்னும் புஷ்கரிணியையடைந்து, அதில் ஸீதையின் முகத்தைப்போல் விளங்கும் தாமரைமலர்களையும், அவள் கண்ணைப் போல் தோன்றும் நீலோற்பலங்களையும் மற்றும் அவள் கடைக்கண் பார்வையைப்போல் ஸஞ்சரிக்கும் மத்ஸ்யங்களையும் பார்த்து அவளுடைய முகம் முதலிய அவயவங்களை நினைத்து மனம் முதலிய இந்த்ரியங்கள் கலங்கப்பெற்று, தனக்கு அந்த

---

1 ஆரண்யகாண்டத்தில் தின ஜனரக்ஷணமென்னும் தர்மம் அனுஷ்டித்துக் காட்டப்பட்டது. இக்காண்டத்தில் மித்ர ஸம்ரக்ஷணமென்னும் தர்மம் அனுஷ்டித்துக் காடடப்படுகிறது. மேலும் பூர்வகாண்டத்தில் மோக்ஷங்கொடுத்தலாகிற பரத்வஸிஷ்டம் காட்டப்பட்டது. இதில் கணக்கில்லாத கலயாணகுணங்கள நிரூபிக்கபடுகின்றன. வாஸ்தவத்தில் பூர்வகாண்டத்தில மாரீசதர்ஶந வ்ருத்தாந்தம் முதலாகச சேதநன் உஜ்ஜீவிக்கும் விதம் சொலலப்படுகிறது. அதில மாரீசதர்ஶந வ்ருத்தாந்தத்தால் பகவந்நித்யாநுபவத்

ரங்கனை லக்ஷ்மணன் அருகேயிருந்து ஸமாதானப் படுத்துதும் பொழுதும் வருந்திப் புலம்பலுற்றனன். அந்தப் புஷ்கரிணியைப் பார்த்தவுடனே ராமனுடைய இந்த்ரியங்கள் ஸந்தோஷத்தினின்று நழுவின. அப்பால் அவன ஸீதையை நினைத்துக்கொண்டு காமபரவசனாகி லக்ஷ்மணனைப் பார்த்து 'லக்ஷ்மண! இதப் பம்பாஸரஸ்ஸான து வைடூர்யம் போல் நிர்மலமான ஜலத்தையும் தாமரை நெய்தல் முதலிய மலர்களையுமுடைய தாய்க் கரைகளில் முளைத்

திற்கு யோகயனாகிய சேதநனுககு உரியதல்லாத விஷயாந்தரத்தில் ஆஸக்தியும், அதனல் ராவணனென்னும் மஹாமோஹம் மூடிக்கொளளுதலும், ஜடாயுவின்வ்யாபாரத்தினலாவணனிடத்தினின்று ஸீதை விடுபடாமையைக் கூறுதலால-கேவல கர்மத்தினல ஸம்ஸாரத்தைதக்கடக்க முடியாமையும், லங்கையில புகுவதனல ஸாம்ஸாரிக சரீரத்தில் புகுவதும், ஏகாக்ஷி ஏககர்ணி முதலானவாகளின் வ்யாபாரதினல் தாபத்ரயத்தினல பரிதாபமுறுவதும், ராமன் தேடினதால்-பகவான் சேதனர் உஜ்ஜீவிக்கும் உபாயத்தை ஆராய்தலும், ஆரண்யகாண்டத்தில் சொல்லப்பட்டன. இனி, இதில ஹனுமானைக்கொண்டு ஸீதையைத் தேடுவிக்கையால் ஆசார்யமுகமாகச சேதனனுக்குத் தன்பக்கல பக்தியைப் பிறப்பிக்கும்பொருட்டுப் பகவான் தேடுதல் சொல்லப்படுகிறது.இதில முதலஸாக்கத்தில் ராமன்பம்பா நதியின் ஸம்ருத்தியைப் பாதது ஸீதையை நினைததுகொணடு வருததமுறுதலால் - 'ஸஏகாகீரமேத' (அவன் தனியனகமனகளிப்புரூன்) என்கிறபடியே 'இவர் தன்னை அனுபவிககிறப்போல ஸம்ஸாரி சேதனர்களும் அநுபவனம் அனுபவிக்க உரியராயிருக்கச செய்தேயும் அவர்கள ஏன்னென்னைப் பெறுதிருக்கிறர்கள ' என்று பகவானுடைய துககாதிசயம் தெரிவிகக்படுகிறது. இந்த ஸர்க்கத்தில் பம்பாதீரத்தைப் பரமபதமாகவும் அநகுளள பகஷிவ்ருகஷாதிகளை நித்யஸூரிமுதலியவராகவும், வாயுவைப் பகவத க்ருபையாகவும், புஷ்பங்களை ஜ்ஞானிகளின் ஜ்ஞானதிகளாகவும், நிர்மலமான ஜலத்தைத் தெளிந்த ஹருதயமாகவும், இப்படியே அந்தந்த ஸங்கேதநகளை ஊஹித்துக்கொள்க.

திருக்கும் பற்பல வ்ருக்ஷங்களால் சூழப்பட்டு விளங்கு கின்றது, பார். ஏ! லக்ஷ்மீ! இந்தப் பம்பாதீரத்தி லுள்ள இனிய காட்சியையுடைய கானகத்தைக் காண்பா யாக. இங்கு வ்ருக்ஷங்கள் உயர்ந்த கிளைகளுடையனவா கிச், சிகரங்களோடு கூடிய பர்வதங்கள் போலத்தோன்று கின்றன. அங்கே பரதன் பட்டணத்திற்கு வெளியில் வ ரோதவாஸாதிகளால் மெலித்து வருத்துகிறானே யென் றும், ஸீதை காணாது போயினளே யென்றும் இவ்வித துக்கத்தினால் நான் பரிதபித்துக் கொண்டிருக்கின்றேன். இங்ஙன மிருக்கின்ற என்னை வலக்தருது மேன்மேலும் பீடிப்பதுபோலிருக்கின்றது. துக்கமுற்றவன் மனத்திற்கு எதுவும் இனிதாயிராது. நான் துக்கத்தினால் பரிதபித் துக் கொண்டிருப்பினும் எனக்குங்கூட இந்தப் பம்பை விசித்ரமான வனங்களும் பலவகைப் புஷ்பங்களும் நிறைந் து குளிர்ந்த ஜலத்துடன் கூடி எவ்வளவோ ரமணீயமா ய்த்தோன்றுகின்றது. மேலும், இங்கு மலைப்பாம்புகளும் மஹா ஸர்ப்பங்களும் மிகுதியாயிருப்பினும் ம்ருகங்களும் பக்ஷிகளும் உலாவப்பெற்றுத் தாமரை நெய்தல் முதலிய புஷ்பங்கள் நிரம்பப் பெற்றிருக்கையால் இவ்விடம் பார்க்க மிகவும் இனிதாயிருக்கின்றது. கறுத்துப் பொன்வர்ணமு டையதாய் மென்மையும் பளபளப்புமான மயில்கழுத்து நிறமுடைய இதப் பசும்புல்லின தரை, வ்ருக்ஷங்களி னினின்று உதிர்ந்த புஷ்பங்களால் நிரம்பியதாகி மேலே ரத்ன கம்பளம் விரிக்கப் பெற்றதுபோல் மிகவும் அழகாய் விளங்குகின்றது. வ்ருக்ஷங்களின் நுனிகள் நாற்புறமும் கன்கு புஷ்பித்து அதிப்புஷ்பபரத்தைச் சுமந்து கொடி களால் சுற்றப்பட்டு விளங்குகின்றன. லக்ஷ்மணா! வஸந்த மாதம் வந்திருக்கின்றது. இக்காலத்தில் காற்று ஸு கமாக வீசுகின்றது. மன்மத விகாரம் மிகுந்திருக்கின்றது.

அனறி வானவினகளரும் கமழ்கின்றன. இக்காலத்தில் வ்ருக்ஷங்கள் புஷ்பங்களரும் பழங்களரும் நிறைபப்பெற்றிருக்கின்றன. லக்ஷ்மணா! புஷ்பங்கள் நிறைந்து அவற்றை வர்ஷிக்கின்ற இவ்வரண்யங்கள் ஜலத்தைப் பெய்யும் மேகங்கள் போல் விளங்குகின்றன பார். பலவித வ்ருக்ஷங்கள் காற்றின் வேகத்தினால் அசைந்து ரமணீயமான கற்களின்மேல் புஷ்பங்களை இறைக்கின்றன. காற்றின் வேகத்தினால் சில புஷ்பங்கள் கீழே உதிர்ந்தும் சில உதிர்ந்துகொண்டும் மற்றும் சில வ்ருக்ஷங்களிலேயே தங்கியும் இருக்கின்றன. ஆகையால் காற்று காற்புறத்திலும் புஷ்பங்களால் க்ரீடிப்பதுபோல் புலப்படுகின்றது பார். புஷ்பங்களையணிந்த கூந்தல் அவிழ்ந்து அலைவதுபோல, காற்றினால் மலர்ந்நிறைந்த கிளைகள் அசைந்துகொண்டிருக்கையில், வண்டுகள் தாம் தங்கியிருந்த மலர்களினின்று கிளம்பி அந்தக்காற்றைக் குறித்துக் கானஞ்செய்வதுபோல ரீங்காரஞ் செய்கின்றன. மற்றும் அக்காற்றானது வ்ருக்ஷங்களை நர்த்தனஞ் செய்விக்கத் தொடங்கிற்போல் மதமேறின குயில்களின் த்வனியினால் மேலான கானத்தைச் செய்துகொண்டு பர்வத குஹைகளினின்று வெளிப்பட்டு வருகின்றது. அந்தக் காற்று காற்புறமும் வீசிக் கிளைகளை அசைத்துக கொண்டிருக்கையில் அந்த வ்ருக்ஷங்களினின்னிக்கிளைகள் அதன்வேகத்தினால் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு தொடுக்கப்பட்ட பூமாலைபோல் புலப்படுகின்றன. இதோ இக்காற்று மலயசந்தனம் போல் குளிர்ந்து திவ்ய வானவினனை அளைந்து ப்ராமங்களெல்லாம் திரும்படி நம்மேல் வீசுகின்றது. தேன மணம் வீசப்பெற்ற வனப்ரதேசங்களில் இந்த வ்ருக்ஷங்கள் காற்றினால் அசைக்கப்பட்டு வண்டுகளின த்வனியினால் கூச்சலிடுவனபோலிருக்கின்றன. பர்வதங்கள் அழகான தமது தாழ்வரை

கனிவுள்ள கற்களில் முழுவதும் முழுவதும் புஷ்பித்து மலைமரங்களாகி உயர்ந்திருக்கிற மஹாவிருக்ஷங்களால் தமது சிகரங்கள் ஒன்றோடொன்று கூடப்பெற்று மிகவும் ப்ரகாசிக்கின்றன. இத்தவ்ருக்ஷங்கள் புஷ்பபாரங்களால் நுனி தெரியாமல் மறைக்கப்பட்டனவாகிக் காற்று வேகத்தினால் இப்படியும் அப்படியும் அசைந்து கொண்டு நுனிக்ளில் வண்டிகள் மதுபானம்செய்த ஸந்தோஷத்தைப்பார, புஷ்பங்களைச் சூடிக்கறுத்த தலைபாகையுடனிருந்துத் தம்மனைவியை அசைத்துக்கொண்டு கானஞ் செய்பவர்போல் புலம்பின்றன. நுனியெல்லாம் நன்றாகப் புஷ்பித்திருக்கின்ற இந்தக் கர்ணிகார விருக்ஷங்கள் (கோங்குமரங்கள்) ஸ்வர்ணபாணங்களை அணிந்து பீதாம்பரத்தைத் தரித்த மனிதர்கள் போல் காற்புறத்திலும் புலம்பின்றன, பார். லக்ஷ்மண! இந்த வஸந்தருதுவில் காணவைகப் பக்ஷிகள் கலகலவென்று கூவிக்கொண்டிருக்கையால் லீலைதணைப்பிரிந்திருக்கிற எனக்குச் சோகத்தை மிகவும் வர்த்தின்றன. துக்கத்தினால் பரவசனாயிருக்கின்ற என்னை மன்மதன் மிகவும் பரிதபிக்கச்செய்கின்றனன். குயில், தான் துகத்தைக் ருப்பதைக்கண்டு மிகவும் ஸந்தோஷம் அடைந்து ஜயகோஷம் இட்டுக்கொண்டு என்னோடு பொறாமைப்படுவதுபோலிருக்கின்றது. லக்ஷ்மண! அரண்யத்தினிடையில் தோற்றும் அழகியதான மலைபருவியில் இந்த நீர்க்கோழி இனிதாகக் கூவிக்கொண்டு மனமதவிகாரம் அதிகரிக்கபெற்றிருக்கின்ற என்னை மேன்மேலும் வருத்தமுறச்செய்கின்றது. முன்பு ஆஸ்ரமங்களில் இருக்கும்பொழுது எனப்ரானாயகி, இந்த நீர்க்கோழியின் த்வனியைக்கேட்டுக் காதல் மிகுதியினல் ஸந்தோஷமுற்று என்னை அழைத்துப் பலவகைப்பட்ட லீலாரஸங்களை மிகுதியும் அனுபவித்தனள். இவ்வனம் சித்ர விசித்ரங்களான பக்ஷி

கள் காணவித்வனிகளைச் செய்துகொண்டு ஆங்காங்
குச் செடிகளையும் புதர்களையும் கொடிகளையும் சுற்றித்
திரிகின்றன, பார். ஆண்பறவைகளால் ஆலிங்கனஞ்செய்
யப்பட்ட பெண்பறவைகள் தமது ஜாதியில்பிறந்த மற்
றைப் பறவைகளால் 'தகுந்த புருஷனைப்பெற்றாய்' என்று
புகழப்பட்டவைகளாகிச் சிறந்த வண்டுகளின் ஜுங்காரத்வ
னிகளைக்கேட்டு மனக்களிப்புற்று அதனால் மன்மதவிகா
ரம் மேலெழப்பெற்று இனிய ரதிகூஜிதங்களைச் செய்
கின்றன, காண்பாய். நீர்க்கோழிகளின் சத்வனிகளாலும்
ஆண்குயில்களின் குலாவல்களாலும் இந்த வ்ருக்ஷங்கள்
சப்தம் செய்பவைபோன்று எனக்கு மன்மத விகாரத்தை
மேன்மேலும் வளர்க்கின்றன. இந்தவஸந்தருதுவே அக்
னியாகி என்னைக் கொளுத்தப்போகின்றது. இதற்குச்
சிவந்த அசோகவ்ருக்ஷத்தின் பூங்கொத்துக்களே கொ
ள்ளிக்கட்டைகள்; வண்டுகளின் த்வனியே இது எரியும்
போதுண்டாகும் படபட சப்தம். தளிர்களே இதற்குச்
சிவந்த ஜ்வாலைகள். லக்ஷ்மண! நுண்ணிய இமைமயிர்க
ளையுடைய கண்கள் விளங்கப்பெற்றவளும் அழகிய கூ
ந்தலையுடையவளும் மிருதுவான இனிய சொற்களை உரைப்
பவளுமாகிய ஸீதையைக் காணாதிருப்பின் பிழைத்திருப்ப
தால் எனக்கு ப்ரயோஜனம் யாதும் உண்டாகாது.
குற்றமற்றவனே! ரமணீயமான அரண்யங்களையுடையதும்
கற்புறத்து எல்லைகளிலும் விசேஷமாகக் குயில்கள் கூ
வப்பெற்றதும் என்னோடு கூடியிருக்கும்போது என் ப்ரா
ணநாயகியான வைதேஹிக்கு மிகவும் பரிபமாயிருப்பது
மான இந்த வஸந்தருதுவானது இங்ஙனம் அவளைப் பி
ரிந்திருக்கின்ற எனக்கு மிகவும் வருத்தத்தைச் செய்கின்
றது. இந்தத் துக்காக்னியானது மன்மதபீடையால்
உண்டானது. மேலும் இந்தருதுவினது அழகின் மிகுதி

யால் அது மேன்மேலும் பெருகிவந்திருக்கின்றது. இனி என்னைச் சீக்ரத்திலேயே இந்தச் சோகாக்னி தஹித்து விடும். அந்த ப்ராணநாயகியைப் பாராமல், மீண்டுவாரங்களாகி மன்மத விகாரங்களை விளக்கின்ற இந்த வ்ருக்ஷங்களைப்பார்க்கின்ற எனக்கு இம்மன்மதபீடை மேன்மேலும் பருப்பருத்து வளரப்போகின்றது. ஸீதை என் கண்களுக்குப்புலப்படாமையாலும், மலயமாருதத்தினால் புழுக்கத்தைப்போக்கி ஸம்போகலீலையாலுண்டாகும் ப்ரமத்தை அழிக்கவல்ல இந்த வஸந்தருது புஷ்பம் முதலியவற்றால் விளக்கமுற்றுப் புலப்படுவதாலும் என்வருத்தம் மேன்மேலும் வளரப்போகின்றது. லக்ஷ்மண! மான்குட்டியின் கண்கள்போன்ற கண்களையுடைய வைதேஹி தன் விஷயமான சிந்தையும் சோகமும் மேலெழப்பெற்று வருத்துகின்ற என்னை என்கண்ணுக்குப் புலப்படாமல் பரிதபிக்கச் செய்கின்றனள். அரண்யத்தினின்று வீசுகின்ற இந்தக்கொடிதான வஸந்தவாயுவும் சிறிதும் தயையின்றி என்னைப் பரிதபிக்கச் செய்கின்றது. 'காற்றானது வீசித்தமது இறகுகளைக் களைக்கும்போது அவற்றின வெளுத்த அடிப்புறங்கள் ஸ்படிகரத்நமயமான சாளரங்கள்போல் விளங்காநிற்க இந்த மயில்கள் ஆங்காங்கு நர்த்தனஞ்செய்துகொண்டு மிகவும் ப்ரகாசிக்கின்றன. இம்மயில்கள் ஆண்மயில்களால் சூழப்பெற்றிருக்கையால் மதம் அதிகரிக்கப்பெற்று மூனனமே மனமதபாதையால் பரிதபிக்கின்ற எனக்கு மேன்மேலும் அம் மனமதபாதையை வளர்க்கின்றன. லக்ஷ்மண! இந்தப் பர்வதங்களின் தாழ்வரைகளில் தனக்குத்தானே லீலாரஸத்தினால் நர்த்தனஞ்செய்கின்ற தன் கணவனாகிய ஆண்மயிலைப்பார்த்து இந்தப் பெண்மயில் மனமயக்கங்கொண்டு ரதிதேவியின்பெருட்டி அதை அழைத்துக்கொள்ளவிரும்பி அதனருகிற்

சென்று கர்த்தனஞ்செய்கின்றது பார். ஆண்மயிலும், மரகதத்தின்பொருட்டு அழகிய தன் இறகுகளை விரித்துக்கொண்டு சிரித்தமுகத்துடன், ப்ராணநாயகியைப் பிரிந்திருக்கிற என்னைப் பரிஹஸிப்பதுபோன்று, தன் ப்ரியையான பெண்மயிலின் அருகிற்போக மனத்தில் விரும்புகின்றது. இந்த மயிலின் ப்ராணநாயகியை வனத்தில் ராக்ஷஸன் எடுத்துக்கொண்டு போகவில்லை. இதுவும் நிஜம். ஆனதுபற்றியே இம்மயில் தன ப்ராணநாயகியோடுகூட, ரமணீயங்களும் போகத்திற்குத் தகுந்தவைகளுமாகிய வனப்ரதேசங்களில் கர்த்தனஞ் செய்கின்றது. வஸந்தகாலத்தில் ஸீதையைப்பிரிந்து வனத்தில் வாஸஞ் செய்வது எனக்கு எவ்வளவும் பொறுக்கக்கூடியதன்று. லக்ஷ்மண! உலகத்தில் புருஷன் ஸ்த்ரீயைப் பின்செல்வானென்பது ப்ரஸித்தமாயிருக்கவும், இதோ பார், இந்தப் பெண்மயில் காமவேகத்தினால் தானே கணவனைக்கிட்டி விளையாடுகின்றது. திர்யக்ஜாதிகளிலுங்கூடப் பெண்களுக்கு எவ்வளவு அனுராகம் இருக்கின்றது பார். பெண்களுக்குங்கூட இப்படிப்பட்ட காமவிகாரத்தை விளக்கின்ற இந்த வஸந்த ருதுவின்வைபவம எப்படிப்பட்டதோ! என் ப்ராணநாயகியான ஸீதையுங்கூட, ராக்ஷஸன் அபஹரித்துக்கொண்டு போகாதிருப்பாளையின், என்னைப் பார்த்துக் கண்கள் மலரப்பெற்றுக் காதலைமேற்கொண்டு இங்ஙனம் என்னை எதிர்நோக்கிவருவாள். இது நிச்சயம். லக்ஷ்மண! இந்த வஸந்த ருதுவில் வனப்ரதேசங்கள் நிரம்பப் புஷ்பித்திருப்பினும்; அவை அத்தப் புஷ்பங்களால் எனக்கு எள்ளளவும் ப்ரயோஜனப்படாமலிருக்கின்றன; பார். செடிகளிலுள்ள புஷ்பங்கள் மிகுந்த சோபையுடன்கூடி எவ்வளவு அழகாயிருப்பினும் எனக்குச் சிறிதும் ப்ரயோஜனப் படாதிருக்கின்றன. ஆகை

யால் இந்தப் புஷ்பங்கள் தம்மீது தேனுக்காக மொய்த் துக்கொண்டிருக்கும் வண்டினங்களோடுகூட வீணைகளே தரையில் வீழ்கின்றன. பக்ஷிகள் எனக்குக் காமவெறி யை விளைப்பனவாகி, அதற்காகக் கூட்டங்கூடும்பொருட் டு ஒன்றையொன்று அழைப்பனபோன்று ஸ்தோஷத்தி னால் இனிதாகக்கூவுகின்றன. என் ப்ராணநாயகியிருக் கும் இடத்திலுங்கூட இந்த வஸந்தருது இருக்குமாயின் அந்தஸீதையும் பாவனைபோகி என்னைப்போலவே வருத்த முறுவாள்; இது நிச்சயம். அந்த ஸீதையைக் கொண்டு போய் எங்கேயோ மறைவான இடத்தில் சத்ருக்கள் வை த்திருப்பார்களாகையால் அவளிருக்குமிடத்தில் வஸந்த ருது இருக்கமாட்டாது இது நிச்சயம். இப்படி வஸந்த ருதுவின் ப்ரபலத்தியில்லாமையால் துக்கம் உண்டாகாத னலாகுமோ? வஸந்தருது இல்லாமற்போயினும் கா னில்லாமையால், என்னைவிட்டுப் பிரிந்து கருநெய்தல் போன்ற கண்களையுடைய அபலாபரமுகி எப்படிப்ராணனை வைத்துக்கொண்டிருப்பாள்? கடற்பரிவமும் தாமரை யிதழ்போன்ற கண்களும் எப்பொழுதும் மிருதுவான சொற்களும்பொருந்திய ஸீதை இந்த வஸந்தருதுவைப் பொறுக்கமுடியாமல் ப்ராணனைவிட்டுவிடுவாள்; இது நிச் சயம். ஸீதை பதிவ்ரதை; மேலும், என்னைவிட்டுப் பிரிந் திருக்கின்றனள். ஆகையால் அவள் என்னை விட்டுப்பிரி திருக்கமாட்டாளென்று என் மனத்தில் இபொழுது கெட்டியாகத் தோற்றுகின்றது. ஸீதை என்னிடத்தில் வாஸ்தவமாகவே மிகுந்த அனுராகமுடையவள். காரணம் ஸீதையிடத்தில் எல்லாவிதத்திலும் மிகுந்த ப்ரீதிவைத் திருப்பவன். இந்தக் காற்று புஷ்பங்களைப் பறித்துக்கொ ண்டுவந்து ஸுகஸ்பர்சமுடையதாகிக் குளிர்ந்து மெது வாக வீசிக்கொண்டிருப்பினும் அந்த என் காதலியைப்

பிரிந்து சிந்தித்துக்கொண்டிருக்கிற எனக்கு அக்னிபோ. லிருக்கின்றது. முனபு ஸீதையோடு கூடியிருக்கும்பொழு தும் எனத, எனக்கு எப்பொழுதும் ஸுகமாயிருக்குமென்று நினைப்பேனை அப்படிப்பட்ட இந்த மந்தமாருதம், இப் பொழுது ஸீதையைப் பிரிந்திருக்கையால் எனக்கு மேன் மேலும் துயரத்தை வ்ருத்திசெய்கின்றது. முன்னம் ஸீதையைப் பிரியாதிருந்தபொழுது எதத்க்காகம் ஆகா யத்திற்சென்று பருஷமாக இரைச்சலிட்டுக்கொண்டு ஸீதாவியோகத்தை ஸூசனைசெய்தேதா, அந்தக் காக மே இப்பொழுது ஸீதையைப் பிரிந்திருக்கையில் செடி யின்மேலேறி மிக்க ஸந்தோஷத்துடன் கூச்சலிட்டுக்கொ ண்டு [1] ஸீதா ஸமாகமத்தை ஸூசனைசெய்கின்றது. இந் தக் காகமே அப்பொழுது ஸீதையைப் பிரித்துவிட்டது. [2]இப்பொழுது இது என்னை அகன்றழகிய கண்களையுடை ய அந்த ஸீதையின் அருகில் கொண்டுசேர்க்கக்கூடும். லக்ஷ்மணா! வனத்தில் நுனியெல்லாம் புஷ்பித்திருக்கிற வ்ருக்ஷங்களின்மேல் பக்ஷிகள் மதுரமாகக் கூவிக்கொண் டிருக்கின்றன பார். அந்தத்வனி மிகவும் காமவிகாரத் தை விளைக்கின்றது. காமவிகாரத்தினால் ஒருவன் தன் காதலியை அணைவதுபோல் இந்த வண்டுகாற்றினால் இப் படியும் அப்படியும் அசைகின்ற திலகவ்ருக்ஷத்தின் பூங் கொத்தைத் திடீலென்று மேல்விழுந்து அணைகின்றது. இயற்கையாகவே விரஹி ஜனங்களுக்குத் துயரத்தை வ்ருத்திசெய்யும்படியான இந்த அசோகவ்ருக்ஷம் காற் றால் இலைகளினின்று வெளிப்பட்டு அசைகின்ற சிவந்த

---

1 ஸீதையுடன் சேருதலை.

2 காக்கையின் கரைதலைக்கொண்டு நன்மை தீமைகளை அறிவ தண்டு. 'கரையாய் காக்கைப் பிள்ளாய' முதலிய ப்ரயோகங்களைக் காண்க.

பூங்கொத்துகளால், 'உன்னை ஸம்ஹரிக்கும்பொருட்டுக் காய்ச்சப்பட்ட இத்தப் பாணங்களை மன்மதன் என்னிடம் வைத்திருக்கிறான்' என்று என்னைப் பயப்படுத்துவதுபோ லிருக்கின்றது. லக்ஷ்மண! புஷ்பங்கள் நிறைந்திருக்கிற இந்த மாமரங்கள் மேனியெல்லாம் சந்தனம்பூசிக்கொண்டு விலாஸத்தினால் மனத்தில் செருக்கு மிகுந்திருக்கிற காழுகர்போல புலப்படுகின்றன. ஏ! புருஷப்ரேஷ்டனே! லக்ஷ்மண! பம்பாதீரத்தில் வரிசையாயிருக்கின்ற விசித்ர மான வனங்களில் அந்தந்த இடங்களில் கின்னரர்கள் வி ஹாயாடுகின்றனர். கண்பாயாக. தல்ல வாஸனை வீசுகின்ற இந்தத் தாமரைமலர்கள் ஜலத்தினிடையில் ஒவ்வொரு அலையின்மேலும் ப்ரதிபலிக்கின்ற பாலஸூர்யன்போல் ப்ரகாசிக்கின்றன. இத்தப் பம்பாஸரஸ்ஸு நிர்மலமான ஜலமும் அழகிய தாமரைகளும் கருநெய்தல்களும் செங் கழுநீர்களும் அமைபப்பெற்று ஹம்ஸங்களும் நீர்க்காகங் களும் நிறைந்து மிகவும் ப்ரகாசிக்கின்றது. மற்றும் இப் பொய்கை தன் ஜலப்ரவாஹங்களில் ப்ரதிபலிகின்ற பால ஸூர்யன்போல் விளங்குகின்றவைகளும் வண்டுகள் மொ ய்க்கப் பெற்றவைகளுமான தாமரைமலர்களை நாற்புறத் திலும் கொண்டு மிகவும் அழகாயிருக்கின்றது. மேலும் இது சக்ரவாகங்கள் நிறைந்து, சித்ரபடம்போல் கரை யில் விளங்குகின்ற அழகிய வனந்தரங்களடைந்தது, ஜலம் பருகுவதற்காக வந்த யாதினக்கூட்டங்களாலும் மிருக ஸமூஹங்களாலும் எப்பொழுதும் ப்ரகாசிக்கின்றது. லக்ஷ்மண! நிர்மலமான ஜலத்தில் தாமரைகள், காற்றினால் வேகத்துடன் கிளம்பும் அலைகள் வந்து மோதுகையில் சாட்டைகளால் அடிக்கப்பட்டவைபோல் அலைகின்றன. இப்படிப்பட்ட இடத்தில் தாமரையிதழ்போன்ற கீண்ட கண்களையுடையவளும் எப்பொழுதும் தாமரைமலர்களில்

மிக்க விருப்பமுடையவளுமாகிய ஸீதையைப் பாராமல் பிழைத்திருப்பது எனக்கு என்னளவும் இஷ்டமாயில்லை. ஐயோ! மன்மதனுடைய கொடுமையே! ஆ! காமனுடைய கோணலே! அந்த மங்களஸ்வபாவை—'மானைப் பிடித்துக்கொடு' என்று மேலான சொற்களை உரைத்த ஸீதை என்னைப்பிரிந்து வெகுதூரஞ்சென்று எனக்குப் பெறமுடியாதவளாயிருப்பினும், மன்மதன் அவளை அடிக்கடி எனதினைவிற் கொணர்கின்றானே! புஷ்பித்த வ்ருக்ஷங்கள் நிறைந்த இந்த வனதருது மீளவும் என்னை வருத்தி என் ப்ராணனைக்கொள்ளாதிருக்குமாயின், தான் எப்படியாவது இப்பொழுதுண்டாயிருக்கும் மன்மதபாணத்தையப் பொறுத்திருக்கக்கூடும். அந்த ஸீதை என்னோடுகூட இருக்கும்பொழுது எந்தெந்த ஸ்துக்கள் எனக்கு ரமணீயங்களாயிருந்தனவோ, அவையெல்லாம் ஸீதையைப் பிரிந்திருக்கிற இப்பொழுது எனக்கு மிகவும் துயரத்தை விளைபவனவாயிருக்கின்றன. லக்ஷ்மணா! காமரைமொக்குகளின மேலிதழ்களைக் கண்டவுடனே எனது கண் 'இது ஸீதையின் கண்களுடைய இமைகளை நிகர்த்தவை' என்று பார்க்கின்றது. [1] தாமரைத் தாதுகளோடு

---

1 இங்கு 'பத்மகேஸரஸம்ஸ்பர்ஷடோ வ்யகூஹாந்தராவிஸ்ஸ்ருதஃ। நிஶி ஶி வாஸயிவ ஹி தாயா வாதி வாயுர் மநோஹரஃ'. என்பது மூலம். விஶேஷஹாதிதம்—ஸமஸ்த ப்ராணிகளுடைய ஜீவனத்திற்கும் ஹேதுவான காற்றே என்ஸர்வஸ்வத்தையும் கொள்ளை கொள்கிறதென்கிறான்—(பத்மகேஸரஸம்ஸ்பர்ஷடஃ) இந்தக் காற்றுக்குத் தூசியைக் கிளப்புவது காரியம். இது இவ்விடத்தாமரைத்தாதுகளிற்படிந்த தூளகளுடன் கிளம்பாநின்றது. ஸமஸ்தப்ராணிகளுக்கும் ஜீவனஹேதுவானவனே ஸர்வதத்தையும் தூளாக்கமுயன்றான். அதாவது ஸம்ஹாரஞ்செய்பத் தொடங்கினனென்றவாறு. அன்றியே (பத்மகேஸரஸம்ஸ்பர்ஷடஃ) பத்மத்தில் வஸிக்கும் பிராட்டியாகிய ஸீதை என்னை விட்டுப்பிரியவே பத்மகேஸரங்கள் எனக்கு ப்ரதிகூலமாகி வாயுவுக்

கூடவ்ருக்ஷங்களின் இடைவெளிகளின்று வரும் காற்றானது ஸீதையின் மூச்சுக்காற்றுபோல் நல்ல வாஸனையு

குத் துணையாகின்றன. 'பாதாருந்துஉமேவ பங்கஜராஜஃ'(தாமரைத் தாதுகளில படியுந்தூள் பாதங்களில் படில் பாதையைச் செய்வதே யன்றி ஸுகத்தைக் கொடுப்பதன்று) என்கிறபடியே ஸ்வஜனத் திற்கும் பாதகமானது சுமக்கு ஏன் பாதகமாகாது? பத்மம் - தாமரைப்பூ. கேஸரம்-தாது. இவ்வுகுத் தாதுகளைக்கொண்டுவருவது காற்றுக்குப் பொருந்தாதாகையால தாதுகளில் படிந்த தூள்களையே கேஸரசப்தத்தால் கொளளவேண்டும்.. ஆகையால் இப்படிப்பட்ட ராஜஸ்ஸுடன்கூடி ராஜஸப்ரக்ருதியாயிருக்கையால் இந்த காற்று நம்மையுங்கூடப் பாதிக்கத்தொடங்கிற்று. இதற்குக காரணம் கண்டகிகளோடு உளள ஸம்பந்தமே. (ராஜஸ்ஸாவது-தூளும் ரஜோ குணமும். கண்டகிகள்-முள்ளுடையவைகளும் துஷ்டாகளும். தாமரைத்தண்டுகளில் முள்ளிருக்கிறதாகையால் முள்ளுடையதென்று தாமரையைக் கண்டகியென்கிறது.) (பத்மகேஸரை: ஸம்ஸ்ருஷ்ட:) கேஸரமென்றுல் விம்ஹதத்தின் ஸடை. ஆகையால் இது காற்றனறு கேஸரி. அதாவது விம்ஹம். என்றும் தோற்றுகிறது. அன்றியே (பத்மகேஸரஸம்ஸ்ருஷ்ட:) தானே ஸம்ஹாரஞ்செய்யவலலது, அதற்குமேல் ஸஹாயமுங்கூட்டிக்கொண்டு வாராந்ன்றது. அன்றியே ரூபமுடையவனன்றே" ஆஸஹாயசூரனுயிருப்பான். இது ரூப மற்றதாகையால் ஸஹாயம் விரும்பாமல எப்படியிருக்கும்? இவ்வனம் இது பாதகமாமாயின் நீ முன்பாகவே இதைப் பரிஹரித்துக கொண்டிருக்கலாகாதோ? என்னின், சொல்லுகிறுன்-(வ்ருக்ஷாந்தர விநிஸ்ருத:) தூரத்திலு வரும்பொழுது புலப்படுமாயின் இதைப் பரிஹரித்திருக்கக்கூடும்; வ்ருக்ஷங்களின் இடையில் மறைந்திருந்து திடீலென்று வெளிப்பட்டது. எப்படி பரிஹரிசகமுடியும்? அன்றியே (வ்ருக்ஷாந்தர விநிஸ்ருத:) காப்பைபோ வாயமுடையவன் ஸௌகுமார்யத்திலு வெயில்படாதபடி நிழலிலேயே வருவதுபோல் இதுவும் செடிகளின் நிழலிலேயே வருகின்றது. அன்றியே மன்மததாபதிலுல் இளைப்பாறுவதற்குச் செடிகளின் நிழலில் ஒதுங்கவொட்டே னென்கிறது. இவ்வனம் பாதகமாயிருந்தால் தூரமாகத்தொலைத போகலாகாதோ? என்னின், சொல்லுகிறுன்-(நிஸ்ரீவாஸ இவ வீ

டன் மலேஹராமாக வீசுகின்றது. லக்ஷ்மண! பம்பாஸரஸ்ஸுக்குத் தக்ஷிணபார்ச்வதத்தில்(தென்பாகத்தில்) மலை

தாயா:) வீதையின் மூசசுக்காற்றை நிகாத்து முன்பு பரிசயப்பட்டதுபோல தோற்றுகையால் பரிஹரிக்கவுங்கூட ஸாத்யப்படாதிருக்கின்றேன். அன்றியே வீதையின் மூசசுக்காற்றேடொத்திருக்கையால் இதை வீதையின் மூசசுக்காற்றுகவே நினைத்து வீதை இங்குச செடியடியில் மறைந்திருந்து என்னிடம் வருகிறாளோவென்று மிக ஆவலுடனிருந்தமையால இங்கிருந்து போகவுங்கூடமாட்டாதிருக்கின்றேன். 'ஸுராஹிநிஸ்ரீ வவ்ரிதே ஊயதஸ்தூஷாம்' என்று மூசசுக்காற்றுக்குப் பரிமளத்தைக் கவிகள் சொல்லியிருக்கின்றனர். அன்றியே வாயு பத்மகேஸரம் முதலிய தன் பரிகரங்களோடு மேலஸ்பர்சித்து ஸங்கடப்படுத்துகை மாதரமேயன்று; நினைவுமூட்டியும் வருத்துகின்றது. இப்படிப்பட்ட காற்று ஒருபொழுது வருவதன்று-(வாதி) எப்பொழுதும் வாராநின்றது. அரண்யம் முழுமையும் தானேயாயிருகுகும்படி விலாஸத்துடன் திரிகின்றது. அன்றியே (வாதி) 'வா-ஹதி மந்யநயோ:' என்னும் பொருளைப்பற்றித் தான் ஸம்பாதித்த கந்ததிலுல் எல்லோரையும் பரவசமாக்குகின்றது. இப்படி பாதகமாயிருப்பது ஏதோஒன்றன்று (வாயு:) ஸர்வர்க்கும் ஜீவநஹேதுமான வாயுவே இங்ஙனம் செய்யாநின்றது. அன்றியே 'ஜீவாஸ்மாஜீவாத: பவதே' (இந்தப் பரமாத்மாவிடத்திலை அஞ்சி வாயு வீசுகின்றது) என்று என்னிடத்திலை அஞ்சியிருப்பவனே என்னைத் தத்தளிக்கச செய்கின்றனன். பாதிகரும்விதத்தைச சொலலுகின்றனன் (மநோஹர:) மேலுளள பதார்த்தமாகாமல உளளிருக்குஞ் பதார்த்தமாகிய மனஸ்ஸையுங்கூட அபஹரிக்கின்றது. (பஞ்சமகேஸரஸுஸ்ரூஷிடை) என்கையால குளிர்ச்சியும்,'(வ்ருக்ஷாந்தரவிநிஸ்ஸ்ருதை)என்கையால் மந்தமாயிருக்கையும், (நிஸ்ரீ வாஸ இவ வீதாயாை) என்கையால நன்மணமும் வாயுவுகருச சொல்லப்பட்டன. மேலும், இதிலவாயுவுக்கு வழிமடகியடிக்கும் திருடர்தன்மைசொல்லப்படுகின்றது. எப்படியெனில்—(பஞ்சமகேஸரஸுஸ்ரூஷிடை) தான் இன்னனென்று பிறாக்குத் தெரியாதபடிக்கும் பயபடுந்தன்மையர்களப்பயப்படுத்தும்படிக்கும் திருடர்கள முகத்தில் கரிபூசிக்கொண்டு வருவதுபோல் வருகின்றது.(வ்ருக்ஷாந்தரவிநிஸ்ஸ்ருதை)வழிப்போக்க

ச்சாரவில் ஒரு கர்ணிகாரவ்ருக்ஷத்தின்கிளை நன்றுகப்பூத்து அழகாயிருக்கின்றதுபார் பலவகையான [1] கைரிகதாதுக்களால் மிகவும் அழகாயிருக்கின்ற இந்தப் பர்வதப்ரதேஷ்டமானது காற்றுவேகத்தினால் கிளப்பப்பட்ட பலவர்ணங்களையுடைய தூளியை வெளிப்படுத்துகின்றது. லக்ஷ்மணா! மலைசாரல்களில் பலாசவ்ருக்ஷங்கள் முழு

காள. அருகே வரும்வரையில மறைந்திருந்து அவா அருகேவந்தவுடனே திடீரென்று வெளிப்படுவதுபோல வருகின்றது. (நிர்ஹ்ரீவாஸஇவஹீதயாஃ) வெகுநாள பரிசயப்பட்டவன்போல ஸாஸஸலலாபத்துடன்வந்து 'உன்னுரொன்ன? டேரென்ன?' என்று வினவுமவனைப்போலிருக்கின்றது. (வாதி) பணம் தன்கையில அகப்படும்வரையில ஆசையினறி இதுமதுரும் திரிவதுபோல திரிகின்றது. (வாயுஃ) தன்திருடடுத்தனத்தைக்கண்டு எவரேனும பிடிக்க முயலுவார்களாயின் கையிற்பிடிக்க அகப்படாதது. (மநோஹராஃ) வெளிப்பட்டதைமாத்ரம் திருடவில்லை; மிகவும் ரஹஸ்யமாக மறைத்துவைதிருப்பினும் திருடிக்கொணடுபோகின்றது. மேலும இதில நிர்ஹேதுமாகப் பகவானுடைய தயை பெருகுமதன்மையும் வர்ணிகக்பட்டது. எப்படியென்னில—(பத்மகேஸரஸம்ஸ்ரயக்ஷடா)(பத்மா) லக்ஷ்மியினுடைய) (கேஸரைஃ) தாதுக்களபோன்ற அனுராகங்களாடு, (ஸம்ஸ்ரயக்ஷடஃ) கூடினவன். புருஷகாரபூதையான பிராட்டியின் ப்ரீதிகுட்பட்டு வழிந்துவருகின்றது. (வ்ருக்ஷாந்தரவிநிஸ்ஸ்ரிதஃ) 'ஊர்யவலூலமய ஸ்ரீஸாவமஸ்ரீவத்யம் ப்ராஹுரார்யயம்' என்று வ்ருக்ஷமாக நிரூபிக்கப்பட்ட ஸம்ஸாரமண்டலத்தில பெருகிவருகின்றது. (நிர்ஹ்ரீவாஸஇவஹீதாயாஃ) 'ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம்' என்று லோகமெலலாம் ஸ்த்ரீயைப்போல் பராதீனமாயிருக்கையால் ஸ்த்ரீயைப் பேர்ன்றிருப்பதுபற்றி வீதாஸப்தத்தினல் உலகத்தைச சொல்லுகிறது. உலகத்திற்கு (நிர்ஹ்ரீவாஸஃ) ஆஸ்ரீவாஸப்படுதலுவதும் தாரகமுமாகி ப்ரவர்திக்கினறது. (வாயுஃ) எல்லா இடத்திலும் இடங்கொண்டிருப்பது.(மநோஹராஃ) மனத்திலுள்ள ஸமஸ்த கலமஷங்களையும் போக்குவது. என்று நிர்ஹேதுகதயாப்ரவாஹபரமாகவும் பொருளகொள்க.

1 கைரிகதாது - செங்கற்பொடி.

மையும் புஷ்பித்து இலைகள் சிறிதுமின்றி காற்புறத்திலும் அழகாயிருக்கின்றன. அதத் தாழ்வரைகள் அங்ஙனஞ் சிவந்தசெடிகளால் ஜ்வாலையுண்டாகப் பெற்று எரிகின்றவைபோல் புலப்படுகின்றன. பம்பாதிக்கரையில் முளைத்து இதோ ஒன்றோடொன்று பிணைந்தாற்போல சேர்ந்து தேன் மணம் கமழப்பெற்று நிரம்பவும் புஷ்பித்துக் கூட்டங்கூட்டமாயுள்ள ஜாதிமல்லிகளும் முலைகளும் புலிநகங்களும், மேலும் கண்டீரகாற்புறத்திலும் புஷ்பித்த தாழைகளும் கொச்சிலிகளும் சிறுமல்லிகைகளும மனைங்கமழ்கின்ற மாதவிப்புதர்களும் முலைப் புதர்களும் புங்கு இலுப்பை வஞ்சுளம் வகுளம் சண்பகம் திலகம் புன்னை கடம்பு வரணம் கர்சூரம் மாலிங்கை நீலாசோகம் முதலிய மரங்களும் விளங்குகின்றன. மலைத்தாழ்வரைகளில் சிங்கத்தின் கழுத்திலுள்ள லடை போலும்போல் பொன் வர்ணமுடைய வெள்ளிலத்திகளும் புஷ்பித்த அழிஞ்சிலகளும் மருதாணிகளும் பூர்ணகவருக்ஷங்களும் வெபபை மரங்களும் மாமரங்களும் பாதிரிகளும் மலையத்திமரங்களும் ப்ரகாசிக்கின்றன. காரத்தைகளும் மரமல்லிகளும் செந்தாழைகளும் உத்தாலக வருக்ஷங்களும் காட்டுவாகைகளும் சிமசுபைகளும் தவவருக்ஷங்களும் மலைச்சாரல்களில் புலப்படுகின்றன. இலவமரங்களும் பலாசவருக்ஷங்களும் செம்மருதாணிகளும் திணிசவ்ருக்ஷங்களும் கக்தபாலகளும் சந்தனமரங்களும் ஸ்பதன வருக்ஷங்களும காணப்படுகின்றன. லக்ஷ்மண! நன்கு புஷ்பிதகதநுனிகளையுடைய கொடிகளால் காற்புறத்திலும் சூழப்பெற்று அழகாயிருக்கின்ற பற்பல வ்ருக்ஷங்கள் இத்தப்பம்பையின கரையில புலப்படுகின்றன பார். காமவிகாரத்திலை மனமயக்கமுற்ற மடந்தையர் மணிகள் தமது காதலர் எப்படி போயினும் விடாமல் அனுவர்த்திப்பதுபோல், காற்றுவேகதகதினால் தழைக்கபபட்டு அசைதற்கு அனுகூலமாக அருகேயிருக்கின்ற இந்த வருக்ஷங்களை அனுஸரிகின்றன. காற்று, ஒரு வருக்ஷத்தினின்று மற்றொரு வ்ரு

க்ஷத்திற்கும் ஒரு மலையினின்று மற்றொருமலைக்கும் ஒரு வனத்தினின்று மற்றொருவனத்திற்கும் திரிந்துகொண்டு இப்படி பல இனியஸ்வரங்களைப்பருகித்திருப்தியடைந்து மனக்களிப்புற்றவன்போல் மெதுவாக வீசுகின்றது. சில வ்ருக்ஷங்கள் நிரம்பவும் புஷ்பித்துத் தேன்வாஸனை மிகவும் கமழப்பெற்றிருக்கின்றன. மற்றுஞ் சிலமரங்கள் அவ்வளவு புஷ்பங்களில்லாமல் மூடுதலையும் மொட்டுகளை கிறைப்பெற்று அவைகளின காம்பு வெனித்தோற்று வைபரல் பக்ஷை சிறகுடையனவாகி பரகரிக்கின்றன. 'இது அழுகாயிருக்கின்றது, இது ருசியுடையது, இது மலர்ந்திருக்கின்றது' என்று வண்டி எதையும்விதிவசத்தால் மனம் இல்லாமல் புதிய புஷ்பங்களிலுள்ள பராஸையால மனமயக்கமுற்றுப் புஷ்பங்கள் தோறும் போய் உட்காருகின்றது. இது இங்ஙனம் தேன்மீதுள்ள ஆஸையால் ஒருசெடியின்மேல் கொஞ்சகாலம் இருந்து, பிறகு அதினின்று கிளம்பி மற்றொருமரத்திற்குச் சென்று இங்ஙனம் பம்பாதீரத்திலுள்ள வ்ருக்ஷங்களெல்லாவற்றிலும் புகுகின்றது. இந்தப் பூமியின்மேல் புஷ்பஸமூஹங்கள் மிகம்ருதுவாயிருக்கையால், தாமே விழுந்திருப்பது பற்றிப் பக்ஷை பரப்பிஞற்போல் படுக்க ஸுகமாயிருக்கும்படி கேர்ந்திருக்கின்றது. லக்ஷ்மண! மலைச்சாரல்களில் சித்ர விசித்ரமான வர்ணங்களையுடைய புஷ்பங்கள் இங்குமங்கும் தாமே விழுந்திருக்கையால், அவற்றில் சில பச்சை யாகவும் சில சிவப்பாகவும் இப்படி விசித்ரமான பல வர்ணங்களையுடைய படிக்கைகள் பலவும் பரப்பிஞற்போலிருக்கின்றன. லக்ஷ்மண! வஸந்தருதுவில் வ்ருக்ஷங்களுக்குள்ள புஷ்ப ஸம்ருத்தியின் மிகுதி விளங்குவதைக் காண்பாயாக. வஸந்தருதுவில் வ்ருக்ஷங்கள் ஒன்றைக் காட்டிலும் ஒன்று மேலாகப் புஷ்பிக்கவேண்டுமென்று

போட்டியிட்டுக் கொண்டாற்போல் நிரம்பவும் புஷ்பித்த வையாகி வண்டுகளின் த்வனிகளால் 'நீங்கள் எம்மைப் போல் புஷ்பிக்கவில்லை' எனறு ஒன்றை ஒன்று அழைத்துச் சொல்பவைபோன்று இலைகளின் நுனியெல்லாம் நிரம்பவும் புஷ்பிக்கப்பெற்று மிகவும் ப்ரகாசிக்கின்றன. இந்த மீர்க்காகப்பறவை தன் காதலியோடுகூட அழகிய ஜலத்தில் இழிந்து எனக்கு மன்மதவிகாரத்தை வருத்தி பண்ணிக்கொண்டு விளையாடுகின்றது. இந்தப் பம்பாஸரஸ்ஸுக்குள்ள ரூபத்தைப்போலவே மந்தாகினியின் ரூபமும் அழகாயிருக்குமாயின் மலைஹாரங்களாகி உலகமெங்கும் புகழ்பெற்ற அதன் குணங்கள் தகுந்தவைகளேயாகும். ராகூத்தமனே! அந்த ஸீதை பிறரால் அபஹரிக்கப்படிலென்? அவளோ மஹா பதிவ்ரதை; அப்படிப்பட்ட பதிவ்ரதை மீளவும் புலப்படுவாளாயின், அவளோடுகூட காமமெல்லோரும் இங்கு வஸித்திருக்கக் கூடுமாயின் அயோத்தியையைக் குறித்தாயினும், அவ்வளவென்? தேவேந்த்ரபோகத்தைக் குறித்தாயினும், நான் ஆசைப்படமாட்டேன். இப்படி அழகாயிருக்கின்ற இந்தப் புல்ப்ரதேசங்களில் அந்த ஸீதையுடன் நான் கலந்து க்ரீடித்துக் கொண்டிருப்பேனாயின், எனக்கு இவ்வண்ணம் சிந்தை உண்டாகாது. அன்றியும், எப்படிப்பட்ட வேறு வஸ்துவிலும் மனவிருப்பமுறேன். இந்த அரண்யத்தில் பல வகைப் புஷ்பங்களோடுகூடி அழகான இலைகளையுடைய இந்த வ்ருக்ஷங்கள், பரத்தமரத்தில் ப்ராணனாயகியைப் பிரிந்திருக்கின்ற என் மனத்திற்கு மிகவும் மயக்கத்தை விளைக்கின்றன. லக்ஷ்மணா! குளிர்ந்த ஜலம் பொருந்தித் தாமரையும் நிறைந்திருக்கின்ற இந்தப் பம்பையைக் காண்பாயாக. இதில் சக்ரவாகங்கள் லஞ்சனிக்கின்றன. இங்கு மீர்க்காகங்களும் உலாவிக்கொண்டிருக்

கின்றன. மேலும் நீர்க்கோழிகளும் க்ரௌஞ்சப்பறவை களும் நிறைந்திருக்கின்றன. இதன் கரைகளில் பன்றி களும் மான்களும் மேய்ந்துகொண்டிருக்கின்றன. மே லும், இதரபக்ஷிகளும் மதுரமாகக் கூவிக்கொண்டிருக் கையில், பம்பாஸரஸ்ஸு மேன்மேலும் அழகாயிருக்கின் றது. நான், சிறந்த யௌவனமும் சந்த்ரன்போன்ற முக மும் தாமரை யிதழ்போன்ற கண்களும் உடையவளாய் மிகவும் அழகாயிருக்கின்ற என் ப்ராணகாயகியை நினைத்துக் கொள்கின்றேன். இங்ஙனம் பலவகைப் பட்ட பறவைகள் மனக்களிப்புற்று மதுரமாகக் கூவிக் கொண்டு எனக்கு மன்மத விகாரத்தை மேன்மேலும் விளைவிக்கின்றன. விசித்ரங்களான மலைச்சாரல்களில் பெண்மான்கள் ஆண்மான்களோடுகூடி விளையாடுகின் றன. நாளை மான்குட்டியின் கண்போன்ற கண்களை யுடைய ஸீதையைப் பிரிந்து வருந்துகின்றேன். இந்த விசித்ரத்தைதக் காண்பாயாக. மான்களும் பக்ஷிகளும் கூட்டம் கூட்டமாக நிறைந்த இவ்வழகான மலைச்சாரல் களில் இங்குமங்கும் ஸஞ்சரிக்கின்ற ம்ருகாதிகள் என் மனத்தை வருத்தச் செய்வனபோலிருக்கின்றன. நான் அந்த என் காதலியைக் காண்பேனுயின் அப்பொழுது தான் எனக்கு நன்மை உண்டாகும். லக்ஷ்மண! நுண்ணி ய அழகான இடையுடைய வைதேஹி என்னைத்கூடப் பம்பாஸரஸ்ஸினின்று விசும் இன்பமான இந்த மந்தமா ருதத்தை அனுபவிப்பாளாயின், நான் ஸுகமாக ஜீவித்தி ருப்பேன். [1] லக்ஷ்மண! தாமரைகளும் செங்கழுநீர்களும்

---

1 இங்கு 'பஶ்யமஸௌமித்ரகவஹ்ருஶ்யிவம் ஶோகவிநாஶநம்யுக்யா லக்ஷ்மணஸைவந்தே பம்போபவநமாருதம்' என்பது மூலம். (யுக்யா8) காதலிகளோடு கூடியிருக்கும் பாக்யமுடையோர். (பஶ்ய மஸௌமித்ரகவஹம்) தாமரை செங்கழுநீர் இவைகளுடைய வாஸ

நிரம்பின இடங்களினின்று அவற்றின் வாஸனையோடு வீசுவதும் மங்களத்தை விளைப்பதும் துக்கங்களைப்போக்குந் திறமுடையதுமாகிப் பம்பையின் அருகிலுள்ள வனத்திலிருந்து வீசுகின்ற. இம்மந்தமாருதத்தைப் புண்யஞ் செய்தவர்களே காதலிகளோடுகூடி அனுபவிப்பார்கள். எனதினைப் பிரிந்து, ப்ராணனை விடவும் ஸ்வாதந்திரியமின்றிப் பரதீனனாய் பெரியவனும் சிரம்பப்பெற்றுத் தாமரைபோன்ற கண்களையுடைய ஜனகராஜன் திருமகனான ஸீதைக் அப்ராப்தனாகிய ராவணனிடத்தில் ப்ராணன்களை எப்படி வைத்துக் கொண்டிருப்பாள்? பலர் முன்னிலையில், தர்மங்களை யுணர்ந்தவளும் ஸத்யத்தையே பேசுந் தன்மையருமாகிய ஜனகமஹாராஜர் ஸீதையின் க்ஷேமத்தைக்குறித்து என்னினை விளவுகையில தான் என்ன உபந்தரம்சொல்வேன்? தான் தந்தையால் அரண்யத்தில் அனுப்பப் பட்டனன்; பாக்யமற்றனன்; இப்படிப்பட்ட என்னை, அவள் பதிவ்ர

னையைக் கொண்டுவருவதும். இங்குத் தாமரை சங்கழுநீர் ஆகிய இவ்விரண்டையும் சொல்லுகையால் நாலுபுஷ்பங்களுந் தொடுத்த பூமாலையைத் தரித்தவன்போல நாலுபுஷ்பங்களின் பரிமளத்தைத் தரித்ததென்க. (ஸிவம்) சுத்தமானது. மற்றொன்றில் படாதது. முதலமலயமாருதமென்று தெரிகிறது. (ஸோகவிநாஸநம்)தென்காற்று விரஹிஜனங்களுக்குச் சோகத்தை வளர்க்குமேயன்றி அதைப் போகடிப்பதன்று; ஆகையால் இது ஜீவித்திருப்பவனுக்கன்றோ ஸோகத்தை விலகச் செலலது. ப்ராணனைப் போக்கினபின்பு அனுபவிக்குந் தர்மிபில்லாமையால் தர்மமான சோகத்தையும் இலலாததாகச் செய்கிறதென்று மருத்து. (யங்யா:) இப்படிப்பட்ட மலயமாருதம் வீசிக்கொண்டிருக்கையில் ஏகாந்தஸ்தலந்தேடி அங்குப் படுத்திருப்பார்கிலர் இருப்பார்களல்லவோ. அவர்கள்(ஸேவந்தே) எப்பொழுதுவருமென்று அவஸரத்தை எதிர்பார்த்துகொண்டிருப்பார்கள். (பம்போபவநமாருதம்) ஆகாத்தினின்று அக்னிபோலவும் ஸமுத்ரத்தினின்று படபாக்னிபோலவும் இருக்கின்றது.

தைகளின்மார்க்கத்தை அவலம்பித்துப்பின்றொடர்ந்துவந்தனளே! அப்படிப்பட்ட என் ப்ராணநாயகி இப்பொழுது எங்கே இருக்கின்றனள்? லக்ஷ்மண! ராஜ்யத்தினின்று கழுவிமனதிலே தப்பியிருக்கின்ற என்னைப் பின்றொடர்ந்துவந்த அந்த ஸீதையைப் பிரிந்து துக்கத்தினால் பரிதபிக்கின்ற நான் ப்ராணனை எப்படி வைத்துக்கொண்டிருப்பேன்? நிகுநிகென்ற இமைமயிர்களையுடைய கண்கள் விளங்க, கன்மணம் வீசப்பெற்று மங்களகரமாகி மாசற்று அழகாயிருக்கின்ற அவளது முகத்தைக் காணப்பெறுமல் என் மனது மிகவும் பரிதபிக்கின்றது. லக்ஷ்மண! இயற்கையாகவே விளங்கும் புன்னகையுடன்கூடி கறிவேவாத சிரிப்பும் கலந்து விளக்கமுற்றதாகி, என்வார்த்தைகளைக்காட்டிலும் மிக்க குணம்பொருந்தி மதுரங்களும் ஹிதங்களுமாகி நிகரற்ற ஸீதையின்வார்த்தைகளை மீளவும் எப்பொழுது கேட்கப்போகின்றேன்? நிறைந்த யௌவனப் பருவமுடைய அந்த வைதேஹி, தான் வனத்தில் வருத்தமுற்றிருப்பினும், நான் மன்மதவிகாரங்கொண்டிருக்கும்பொழுது துக்கஞ் சிறிது. மில்லாதவள் போலவும் ஸந்தோஷமுற்றிருப்பவள்போலவும் கடிதத்து எனக்கு மனக்களிப்பை விளைக்கும்படியான உரைகளைப் பேசிக்கொண்டு என்னை ஸந்தோஷப்படுத்துவாள். ராஜகுமாரனே! நான் அயோத்யைக்குப் போனதும், சிறந்த மனமுடையளாகிய என் தாய் கௌஸல்யை என்னைப் பார்த்து 'ஸமஸ்த ஸுகங்களையும் துறந்து உன்னைப் பின்றொடர்ந்த என் அழகிய மருகி எங்கே? எப்படி இருக்கின்றனள்?" என்று வினவுவாளாயின், நான் என்னென்று மறுமொழி கூறுவேன்? லக்ஷ்மண! நீ போய் உடன்பிறந்தவரிடத்தில் ப்ரீதியுடையோனாகிய பரதனைக் காண்பாயாக. ஜனகராஜன் புதல்வி

யாகிய ஸீதையைப்பிரிந்து நான் எவ்விதத்திலும் பிழைத்திருக்கப்பொறேன்' என்று ராமன் புலம்பினன். இங்ஙனம் அநாதன்போல் புலம்புகின்ற மஹானுபாவனாகிய ராமசைப்பார்த்துத் தம்பியாகிய லக்ஷ்மணன் பொருந்தியதும் மதுரமாயுமில்லாததுமாகி விளங்கும் வார்த்தைகளைச் சொல்லித்தொடங்கி 'ராமா! புருஷோத்தமா! தைர்யத்தை நீக்கவேண்டாம். மனக்கலக்கத்தை அடக்கிக்கொள்வாயாக. உனக்கு மங்கலம் உண்டாகுக. மனவருத்தப்படவேண்டாம். தர்மாத்மாக்களாகிய உனபோன்றவர்களுக்குப புத்தி எவ்வளவும் கலக்கமுறத் தகாதல்லவோ? 'மிகுந்த ஸ்நேஹம் வைப்பதனால் பின்பு பிரிவுநேரிடும்போது துக்கம் உண்டாகும்' என்னும் ந்யாயத்தை நினைத்து ப்ரிய ஜனங்கள்மீது அதிகஸ்நேஹத்தை விடுவ்வாயாக. அதிக ஸ்நேஹம் உளதாயின், (மிக்க எண்ணெய் உளதாயின்) நனைந்த வர்த்தியுங்கூட எரிந்து போய்விடும். ராமா! பாதாளத்திற்குப் போயினும், அன்றி அதைக்காட்டிலும் மேலான எந்த இடத்திற்குப் போயினும் ராவணன் என்னவோ இனிப் பிழைத்திருக்கமாட்டான. பாபிஷ்டனாகிய அந்த ராவணனுடைய ஜாடைமாத்ரம் நமக்குத் தெரியவேண்டும். பிறகு அவன் ஸீதையையாவது கொடுக்கவேண்டும். இல்லையென்றால் மரணத்தையாவது அடையவேண்டும். ராவணன் ஸீதையை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் இந்த்ரனதாயனத்திதியின் கர்ப்பத்தில் புகுவானாயினும், அவ்விடத்திலும் ஸீதையைக் கொடாவானாயின், அவனைக் கொன்று விடுவேன். மேன்மைமப் படுத்துகைக்குரிய மஹானுபாவனே! தைர்யம் நன்மையை விளைக்கவல்லது. அதையேகைப்பற்றுவாயாக. தீனபுத்தியைத் துறப்பாயாக. தைர்யத்தைவிட்டு முயற்சியைக் கைக்கொள்ளாதவர்களுக்கு எவ்

விதத்திலும் கார்யஸித்தி உண்டாகாது. பூஜிக்கத்தகுந்தவனே! உத்ஸாஹம் பலீயஸ்ஸாயிருப்பது. உத்ஸாஹத்தைக் காட்டிலும் மேலானபலம் ஒன்றுமே இல்லை. உத்ஸாஹமுடையவனுக்கு உலகத்தில் பெறக்கூடாதது சிறிதும் இல்லை. உத்ஸாஹமுடைய புருஷன் எப்படிப்பட்ட கார்பந்தனிலும் வருத்தமுறமாட்டான். நாம் உத்ஸாஹம் ஒன்றுமாத்ரம் கைப்பற்றுவோமாயின் ஸீதையைப்பிறக்கூடும். துக்கத்தைப் பின்புறத்தில் தள்ளி இந்த மன்மத வ்யாபாரத்தை வெல்லுவாயாக. மஹாப்ரபாவமுடையவன் போறிஞரையிருப்பவன; இப்படிப்பட்ட நீ உன்னினேபமறந்திருக்கின்றனை' என்று ராமனுக்கு ஸமாதானம் உண்டாகும்படிச் சொல்லினன். சோகத்தினல் முழுவதும் கவரப்பட்ட மனமுடையராமன், லக்ஷ்மணன் இவ்வாறுபோதிக்கையில் சோகத்தையும் மோஹத்தையும் விட்டு உடனே தைர்யம் பெற்றவனையினன். நினைக்கவும் அரிதான பராக்ரமத்தையுடையராமன் எள்ளளவும் மனஞக்கந்தவறுமல் பிறகு ரமணீயமாகி, ரமணீயங்களான வ்ருக்ஷங்கள் காற்றில் அசைந்துகொண்டிருக்கப் பெற்ற பம்பாஸரஸ்ஸைக் கடந்து போயினன். அம்மஹானுபாவன், தானும் லக்ஷ்மணனுமாக அவ்வனம் முழுவதும் திரிந்துபார்த்து அங்குள்ள அருவிகளையும் பர்வதகுஹைகளையும் பார்த்துக்கொண்டே ஸீதையைத்தேடி மனப்பரிவுற்று வருத்தம் மேலெழப்பெற்று வேகமாகப் புறப்பட்டுப்போயினன். மதம்பிடித்தயானைபோல் அழகாகநடக்குந்தன்மையுடையவனும் ராமகைங்கர்யலக்ஷ்மி விளங்கப்பெற்றவனுமாகிய லக்ஷ்மணன் அண்ணனிடத்தில் அழியாதபனப்ரீதியும் கைசோராத பெருந்தைர்யமுமுடையவனாகி ராமனது கைடையழகை அனுபவித்துக் கொண்டிருப்பினும் மனஞக்கந்தவறு

தவின்றி ஸீதாவியோகத்திலில் பீடிக்கப்பட்டு மத்தகஜம் போல்நடந்துசெல்கின்ற அந்த ஸ்ரீராமனுக்கு ராஜநீதி முதலிய தர்மங்களை எடுத்துரைத்தும் தன்பலத்தை வெளியிட்டும் அவனுடைய துக்கத்தை அடக்கிப் பாதுகாத்துக்கொண்டிருந்தனன். ஸுக்ரீவனென்னும் வானரர்தலைவனுருவன் மிகவும் பலிஷ்டனுகிய தன தமையனான வாலியிடம் பயமுடையனாய் ருஷ்யமூகபர்வதத்தினருகில் உலாவிக்கொண்டிருப்பது வழக்கம். அவன் ஒருகாலத்தில் பம்பாஸமீபத்தில் உலாவிக்கொண்டிருக்கையில், பார்வைக்கு மிகவும் ஆச்சர்யத்தை விளைக்கின்ற அந்த ராமலக்ஷ்மணர்களைக்கண்டு மிகவும் பயப்பட்டு ஏதுஞ்செய்யத் தோற்றுமல் சிந்தையில் ஆழ்ந்தனன். மத்தகஜம்போல் கம்பீரமானநடையுடைய மஹானுபாவனுகிய ஸுக்ரீவன் அந்தப் பம்பாவனத்தில் வெகுதாழியாகத் திரிந்துகொண்டிருக்கின்றஅந்த ராமலக்ஷ்மணர்களைக்கண்டு அவரது ருபாதிசயத்திற்குச் சிந்தையுற்றுப் பெரும்பயத்தில்ழுழ்கி மிக்க வருத்தமுற்றனன். அவனது மந்திரிகளாகிய வானரர்களுங்கூட மஹாதேஜஸ்விகளாகிய அந்த ராமலக்ஷ்மணர்களைக்கண்டு, வாலியால் அனுப்பப்பட்டு முனிவேஷம்பூண்டுவந்தவர்களென்னும் ஸந்தேஹத்திலில மிகவும் திகிலுற்றுப், புண்யத்தை வளரச்செய்வதும ஸுகத்தை விளைப்பதும் முனிஜனங்களுக்கு வாஸயோக்யமுமாகிவானரர்கள் எப்போதும் இடையில் வாஸஞ்செய்யப் பெற்றதாகிய அம்மதங்காச்ரமத்திற்குள் ப்ரவேசித்தனர்.[1] முதல் ஸர்க்கம் முற்றிற்று.

---

1 இங்ஙனமே மற்றப் புராணங்களிலும் ராமனுக்குப் பம்பையைக்கண்டதலை காமவெறி மேலிட்டமை கூறப்பட்டிருக்கின்றது. ஆனதுபற்றியே ராமன் விரஹத்தின்மிகுதியால் வண்டுகள் முதலிய

{ ஸுக்ரீவன் ஹனுமானை ராமலக்ஷ்மணர்களிடம் அனுப்புதல். }

அண்ணன் தம்பிகளாகிய அந்த ராமலக்ஷ்மணர்கள் உத்தம லக்ஷணங்களோடு கூடின பெரிய உருவம் பொருந்தி உத்தமங்களான ஆயுதங்களைத் தரித்திருப்பதனால் வீரத்தன்மையுடன் விளங்குவதைக்கண்டு உடனே ஸுக்ரீவ சங்கையுற்றனன். அந்த வானரர்தலைவன் மனத்தில் பயம் மேலெழப் பெற்றுத் திசைகளையெல்லாம் உற்றுப்பார்த்துக்கொண்டு ஓரிடத்திலும் நிலைகொள்ளாதிருந்தனன். அந்த வானரர்தலைவன் மஹா பலிஷ்டர்களான ராமலக்ஷ்மணர்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில் மனங்குதிரப் பெருதிருந்தனன். ஆனல் அவனது மனம் மேன்மேலும் பயம் வளர்ந்துவரப் பெற்று மிகவுத் துயரத்திலாழ்ந்தது. அந்த ஸுக்ரீவன் ராஜதர்மங்களில் மிகுந்த மதியுடையவன். ஆகையால், 'இங்கே நின்றிருக்கக்கூடுமோ, அல்லது ஓடிப்போக வேண்டுமோ, எது நல்லது' என்று ஏற்றக்குறைவுகளை மந்த்ரிகளுடன்கலந்து ஆலோசித்து மிகவும் அஞ்சினன். அனந்தரம் வானரப்ரபுவாகிய அந்த ஸுக்ரீவன் அந்த ராமலக்ஷ்மணர்களைப் பார்த்துக்கொண்டே மிகவும் அஞ்சினவனுகி மந்த்ரிகளை நோக்கி

வற்றைச சபிததாக ஸ்காந்த புராணத்தில் 'வைமுவீயம் மந்யமல் யாஸ்து ஜீமராநஸபதப்ரஷ:। கோகாந்திஸீயே விஸீலேஷம் பிக மநயவிவாயகம்। சந்தநம் ஸர்ப்பநிலயம் வாயும் ஸர்ப்பாஸநம் தயா। ஜ்யோத்ஸநாங்கலங்கஸஞ்ஜஹ்நா ஸஸாப ரவிநந்தந' (வண்டுகளைச சண்பகந் தீண்டாதிருக்கும்படியும், சக்ரவாகங்களை ராதரியில பிரிந்திருக்கும்படியும், குயில்களை மற்றொன்றுல் வளரும்படியும், சந்தன வ்ருக்ஷங்களை ஸர்ப்பங்களுக் கிடமாயிருக்கும்படியும், வாயுவை ஸர்ப்பங்களுக்கு ஆஹாரமாரமாயிருக்கும்படியும், நிலவை மறுவால் மறைக்கப்பட்டிருக்கும்படியும் ராமன் சபித்தான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவர்கள் வாலியால் அனுப்பப்பட்ட சாரர்கள், முனிவேஷமென்னும் வ்யாஜத்தினால் கார்த்துணிகளை உடுத்துத் திரிகதுகொண்டு இங்குப் புகக்கூடாத இவ்வனத்திற்கு வந்தனர். இது நிஜம்' என்றனன். பெருவில்லைத் தரித்திருக்கிற அந்த ராமலக்ஷ்மணர்களைக் கண்டு ஸுக்ரீவன் சொன்னது ஹிதமென்று நினைத்து வானரவீரர்கள் அத்தத் தாழ்வரையினின்று, உயர்ந்ததாகிய மற்றொரு பர்வதசிகரத்திற்குப் போயினர். அந்த வானரச்ரேஷ்டர்கள் நாலுதிசைகளிலும் ஓடிச்சென்று மீளவும் ஓரிடத்தில் ஒன்று கூடித்தமக்குப் ப்ரபுவாகிய ஸுக்ரீவனைச் சுற்றிக்கொண்டு அருகே நின்றனர். மீளவும் அவர்கள் ஒரு பர்வதத்தினின்று மற்றொரு பர்வதத்திற்குத் குதித்துச் சென்று பர்வத சிகரங்களை அசைக்கிக்கொண்டு க்ரமமாக ஓரிடத்தில் ஒன்ருய்க்கூடி, ஓடிச்சென்று ஒண்டியாயிருக்கின்ற ஸுக்ரீவனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டனர். பிறகு மஹாபலசாலிகளான அந்த வானரர்கள் அனைவரும், தொத்திச் சென்று பர்வதங்களில் புஷ்பித்திருக்கிற வ்ருக்ஷங்களை முறித்தனர். அப்பொழுது அந்த வானரர்கள் கிளம்பித் தாண்டிச்சென்றுகொண்டும், மான்கள் பூனைகள் புலிகள் முதலியவற்றைத் துரத்திக்கொண்டும் போயினர். அனந்தரம் அந்த ஸுக்ரீவனுடைய மந்த்ரிகள் அனைவரும்ருச்யமூகத்தின் தாழ்வரைகளில் முழுமையும் நிரம்பி மீளவும் அந்தப் பர்வதத்தைச் சேர்ந்து வானர ச்ரேஷ்டனாகிய ஸுக்ரீவனுடன் கூடி அவனருகில் கையைக்கூப்பிக்கொண்டு நின்றனர். பிறகு பேசுவதில் நிபுணனாகிய ஹனுமான், வாலி ஏதோ மோசஞ் செய்தானென்று சங்கித்து அஞ்சி வருந்துகின்ற அந்த ஸுக்ரீவனைப் பார்த்து 'நீங்கள் எல்லோரும் வாலி நிமித்தமாக இங்ஙனம் மனம் கலங்குவது யுக்தமன்று. இந்தப்

பர்வதம் ருஷ்யமூகமேயன்றி வேறன்று. இதில் வாலியால் எள்ளளவும் நமக்குப் பயமில்லை. வானரதிலகனே! வாலி மாறுவேஷம் பூண்டு வந்திருக்கிறானென்று ப்ரமிக்கின்றனையோ? எவனைப்பார்த்து நீ மனத்தில் இவனண்ணம் நிகில்பட்டு ஓடிப்போகின்றனையோ அந்த வாலி க்ரூர கர்மமுடையவன்; அவனது காட்சியும் க்ரூரமாயிருக்கும். அதற்குறி இவ்விடத்தில் எனக்குப் புலப்படவில்லை. கலியற்கையுடையவனே! உன் பக்ஷியை அபஹரித்த எதிப பாபகர்மாவிடம் பயப்படுகின்றனையோ, அதற்குத் துஷ்டாத்மாவாகிய உனதண்ணன் வாலியின் குணக்குறிகள் இவ்விடத்தில் இல்லை. ஆகையால உனக்கு எள்ளளவும் பயம் உண்டாகுமென்று எனக்குத் தோற்றவில்லை, நீ தீக்ஷண புத்தியுடன் நன்கு விசாரஞ் செய்து மனத்தை நிலைப்படுத்திக் கொள்ளாமல் தடுமாறுகின்றனையே! ஆ ஆ! உன் வானரத்தனமை நன்கு வெளியாயிற்றே! புத்தியும் விஜ்ஞானமும் நன்கு விளங்கப்பெற்று இங்கிதங்களால் பிறரது அபிப்ராயங்களை அறிந்து ஸமஸ்த கார்யங்களையும் செய்வாயாக. புத்திமுதலியவையில்லாத மனனவன் எந்த ப்ராணியையாயினும் பாதுகாக்க வல்லவனல்லன்' என்றனன். லக்ஷ்மீவன், ஹனுமான் சொன்ன சுபவாக்யங்களை யெல்லாங் கேட்டு, அதைக் காட்டிலும் சுபமான வாக்யங்களைச் சொல்லத்தொடங்கி அவனைப்பார்த்து 'முழந்தாள்வரையிலும் நீண்ட பாஹுதண்டங்களை யுடையவர்களும் கண்கள் அகன்றழகாயிருக்கப் பெற்றவர்களும் வில்லையும் பாணங்களையும் கத்தியையும் தரித்துத் தேவகுமாரர்கள்போல் விளங்குவார்களுமாகிய இவர்களைப்பார்க்கையில் எவனுக்குப் பயம் உண்டாகாது? வாலி எதிரில் வந்திருக்கிறானென்று பயப்படவில்லை. அவன் இத்தப் புருஷதிலகர்களை என்மேல்

அனுப்பினனென்று சங்கைப்படுகின்றேன். 'இப்படிப் பட்ட புருஷர்கள் வாலிக்கு கோரவழியில்லை' என்கிறீயோ? ராஜாக்களுக்கு ஸ்நேஹிதர்கள் பலர் இருப்பார்கள். ஆகையால ராஜாக்கள்விஷயத்தில் எவ்வளவும் நம்பிக்கை வைக்கலாகாது. சத்ருக்களையுடைய மனிதன் தன்மேல் பகையைத்தீர்த்துக்கொள்ளும்பொருட்டு மறைவாகத் திரிகின்ற பகைவனைக் கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். இல்லையாயின், அவர்கள் அவனைத் தம்மை நம்பும்படிக்குச் செய்து தாம் மாத்ரம் அவனை நம்பாமலேயிருந்து அந்நனம் நம்பிக்கையால் அவன் ஸமாதிருக்கும் ஸமயம்பார்த்துக் கொன்றுவிடுவார்கள். வாலி, வேண்டிய கார்யங்களைச்செய்வதில் மிகவும் தூரத்ருஷ்டியுள்ள பேரறிஞன். அரசர்கள் பல உபாயங்களைச் செய்து பகைவனைக்கொல்லப் பார்ப்பர்கள். ஆகையால் மனிதர்கள் தீனவேஷங்களைத் தரித்துத் தெரியாமலிருந்து அவரது அபிப்ராயங்களை அறியவேண்டும். வானரோத்தமனே! ஒரு ஸாமான்யனுடைய வேஷந்தரித்து அவரிடஞ்சென்று உட்கருத்தை அறிவிக்கும்படியான அவரது சரீரசேஷ்டைகளைப் பரிசீலித்து அவற்றில் ஒவ்வொன்றுக்குமுள்ள பேதங்களைப்பற்றியும், இனிமை கடுமை முதலிய ஆகாரங்களாலும் ஒருவர்க்கொருவர் பேசும் பேச்சுக்களாலும் அவரது உண்மையைத்தெரிந்துகொள்வாயாக. வானரஸ்ரேஷ்டனே! அவரது அபிப்ராயத்தைக்கண்டு அறிவாயாக. அவரது மனத்தில் கெடுதிவினவு இருக்குமாயின், அது போவதற்கு அந்தந்த கல்வார்த்தைகளாலும் புகழ்ச்சிகளாலும் அடிக்கடி அவர்க்கு நம்பிக்கையை உண்டுபண்ணி எனக்கு அனுகூலமாயிருக்கும்படி அவரைத் திடப்படுத்திப் பிறகு அவர்களில் லக்ஷ்மணித்து இவ்வனம் புகுவதற்கு ப்ரயோஜனம் என்?



!629. ஹனுமான் ஸங்யாஸி வேஷம்பூண்டு ராமலக்ஷ்மண ரிடம் வருதல்.

என்று வினவுவாயாக. ஹனுமானே! வில்லெப்பிடித்து வந்த இவர்கள் மனத்தில் கல்ல எண்ணமுடையோர்களாயின், அப்பொழுதும் அவர்களை என் பக்ஷமுடையவர்களாகச் செய்து அவரது வரவுக்கு ப்ரயோஜனத்தை வினவித் தெரிந்துகொள்வாயாக. அவரது வார்த்தைகளையும் அவர்கள் துஷ்டர்களோ கல்லவர்களோ தெரிந்துகொள்ளக்கூடும்' என்றனன். வாயுகுமாரனாகிய அந்த ஹனுமான் அந்தக்கபிராஜன் இங்ஙனம்சொல்லி அனுப்புகையில், கல்லதென்று அந்த ராமலக்ஷ்மணர்களிருக்கு மிடம்போக சிந்தித்தனன். சத்ருக்களுக்கு மிகவும் பயங்கரமும் எதிர்க்கமுடியாததுமாகிய அந்த ஸுக்ரீவன் சொன்ன வார்த்தைகளின் அபிப்ராயத்தை ஹனுமான் தெரிந்துகொண்டு அந்த ருஷ்யமூகபர்வதத்தினின்று ராமலக்ஷ்மணர்களிருக்கு மிடத்திற்குப் போயினன். அனந்தரம் வாயுகுமாரனாகிய அந்த ஹனுமான் வஞ்சிக்க வேண்டுமென்னும் எண்ணமுடையவனாகையால் வானரரூபத்தைவிட்டு ஸந்யாஸிவேஷத்தைக் கொண்டனன். அப்பொழுது அந்த ஹனுமான் வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்களிடம் வணக்கத்துடன் சென்று பக்திமிகுந்திருக்குமாறு

ஹனுமான் ராமலக்ஷ்மணர்களோடு ஸம்பாஷித்தல்.

புத்தியில் மிகுந்தவனாகிய அந்த ஸுக்ரீவன் சொன்ன வார்த்தைகளின் அபிப்ராயத்தை ஹனுமான் தெரிந்துகொண்டு அந்த ருஷ்யமூகபர்வதத்தினின்று ராமலக்ஷ்மணர்களிருக்கு மிடத்திற்குப் போயின்ன். அனந்தரம் வாயுகுமாரனாகிய அந்த ஹனுமான் வஞ்சிக்க வேண்டுமென்னும் எண்ணமுடையவனாகையால் வானரரூபத்தைவிட்டு ஸந்யாஸிவேஷத்தைக் கொண்டனன். அப்பொழுது அந்த ஹனுமான் வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்களிடம் வணக்கத்துடன் சென்று பக்திமிகுந்திருக்குமாறு

1 நமஸ்காரஞ்செய்து ம்ருதுவாகி மிகவும் இனிதாகிய உரைகளைச்சொல்லி உள்ளபடி அவர்களைப் புகழ்ந்தனன்.

---

1 இங்கு ஸந்ந்யாஸி வேஷந்தரித்த ஹனுமான் நமஸ்காரஞ் செய்தமைபற்றி ஸந்ந்யாஸி க்ருஹஸ்தாதிகளுக்குங கூட நமஸ்காரஞ் செய்யவேண்டியதே யென்று தெரிகின்றது. ஸந்ந்யாஸிகள் க்ருஹஸ்தாதிகளை நமஸ்கரிக்கலாகாதென்னும் நிஷேதவசனங்கள அஜ்ஞர்களான க்ருஹஸ்தாதிகள் விஷயத்திலேயே சொலலப்பட்டனவென்று நினைக்கவேண்டும். கர்ம மாத்ரதிலுல் அதிகரிகிய ஸந்ந்யாஸி ஜ்ஞானாதிகர்களைக் கண்டால நமஸ்காரஞ் செய்யாலுயின், அப்பொழுது 'விப்ராணாம் ஜ்ஞானதஃ ஸ்ரைஷ்டர்யம்' (ப்ராஹ்மணர்களுக்கு ஜ்ஞானத்திலுல மேன்மை) என்னும் மனுவசனத்திறகு விரோதம் வரும். மேலும் ஸந்ந்யாஸி அஞ்ஞனம் ப்ரணமஞ் செயயலாகாதென்று மனுவசனமேதும் புலப்படவிலலை. ஆலல் யதி நமஸ்காரஞ் செயயலாகாதென்று ஆகாமின்றி வதாதிமாதரமாகிய நிஷேத வசனங்கள அஜ்ஞாகளான க்ருஹஸ்தாதிகளைக் குறித்தவைபேயன்றி வேறல்ல சிலா 'மிகவும் அற்புதமான ராமலக்ஷ்மணாகளின் உருவத்தைக் கண்டவுடனே வியப்புற்றுத் தான் தரித்திருக்கிற பிக்ஷுவேஷத்தை மறந்து நமஸ்காரஞ் செய்தானென்பார்கள். அது ஆரம்பத்திற்கே விரோதமாம். பிறனுடைய ஹ்ருதயத்தைச சேஷ்டை முகவிகாரம் முதலியவற்றல் தெரிநதுகொளவதற்காக அனுப்பப்பட்ட இவன் மிகவும் நிபுணமதியுடைய மந்த்ரிஸ்ரேஷ்டனலையால், இந்தக காரயம் தான் முயனற காரயத்தைக் கெடுப்பதும் தான் தரித்திருக்கும் வேஷத்திற்கிணஙகாதது மாலையால எதிரிக்கு நம்பிக்லகயைப்போக்கி அதன்மூலமாய் அவரது முகவிகாரம் முதலியவற்றை வெளிப்படுதத நேராதாலையால் இப்படிப்பட்ட காரயத்தைச செய்யமாட்டான். மற்றுஞ் சிலர் 'ரூபமேவாஸ்யைதந்மஹிமாநம் வ்யாசஷ்டே' (ரூபமே இவனுக்குளள இம்மஹிமையை விவரித்துச் சொல்லுகிறது) என்னும் ந்யாயதந்தின்படி அவரைப் பார்த்தமாத்ரத்திலேயே ஸுக்ரீவனது. விரோதிநியைப்போக்க வலலவனென்று நிச்சயித்து வேறு வேஷந்தரித்திருப்பினும் தான் ஸுகரீவனுடைய சாரனேயென்று வெளிப்படுத்துவதற்காக நமஸ்கரித்தா'னென்பார்கள். அப்படியாயின் மேல 'ஸுக்ரீவனென்னும் தர்மாத்மா வானரக்

வீரணுகிய அந்த வாயுகுமாரணுன ஹனுமான் உண்மையா
ன பாக்ரமமுடைய அவ்விருவரையும் விதியின்படி பூஜித்
துப் பக்தி தோன்றும்படி மெதுவான உரையுடன் சொல்
லத் தொடங்கினன். 'ம்ருக ஸமூஹங்களையும் மற்றும் வ
னத்தில் ஸஞ்சரிக்கின்ற ஜந்துக்களையும் புதிய உமது உரு
வங்களால் துரத்திக்கொண்டுபம்பையின் கரையைச்சுற்றி
காற்புறத்திலும் முளைத்திருக்கிற வ்ருக்ஷங்களைப் பார்த்
துக்கொண்டிருக்கின்ற உமது உருவம் அழகியதாகி னிரு
கினென்று ஓனிவீசப் பெற்றிருக்கின்றது. ஆகையால் நீங்
கள் ராஜர்ஷிகளைப் போலவும் தேவதைகளைப்போலவும்
விளங்குகின்றீர்கள் இப்படிப்பட்ட நீங்கள் கொடிய வ்ர
தங்களில் முயன்று தாபஸவேஷந் தரித்துப் புகக்கூடாத
இந்த ப்ரதேசத்திற்கு எப்படிவந்தீர்கள்? அழகிய ஜ்ல
முடைய இந்தப் பம்பாநதியை உமது தேஜஸ்ஸினால்
விளங்கச்செய்கிறீர்கள். தாபஸரது வேஷந்தரித்திருக்கி
றீர்கள். நல்ல தைர்யம்பொருந்திப் பொன்வர்ணம் அ
மைந்து மரவுரி உடுத்து அடவியில் திரியும் ஆயாஸத்தி
னல் பெருமூச்செறிந்துகொண்டு அழகிய புஜங்கள்
விளங்க, என்றுங்காணுத உங்கள் உருவத்தைக் கண்டு
இந்தப் பக்ஷிகளும் ம்ருகங்களும் கலக்கமுற்றோடிப்

கூட்டங்களுக்குத் தலைவனொருவன்' என்று சொல்லப்போகிறவற்
றை இம்முதலிலேயே சொல்லியிருப்பானேனையால் இதுவும் பொரி
யன்று. சிலர் பிக்ஷுவென்றால ப்ரஹ்மசாரியென்பர்கள். ஹனுமான்
முன்னமே ப்ரஹ்மசர்யாசிரமத்தை யாலை இப்பொழுது புதிதாக அவ்வே
ஷந்தரிக்கவேண்டிய அவஸ்யமில்லை. சிலர் 'கபிரூபம் பரித்யஜ்ய'
என்று வானரரூபத்தையே விட்டதாகச் சொல்லுகையாலும் 'மேல்
மாறுவேஷமும் பூண்டமையைச சொல்லுகையாலும் மனுஷ்யரூபங்
கொண்டமை சொல்லவேண்டுவது அவஸ்யமானகையால் மனுஷ்ய
ரூபத்தோடுகூடின ப்ரஹ்மசர்யமே இங்குப் பிக்ஷுசப்தத்தினால் சொல்
லப்படுகிற தாகையால் விரோதமில்லையென்றனர்.

போக, ஸிம்ஹம்போல் கம்பீரமான பார்வையுடன் ஸிம்ஹத்தை அதிக்ரமித்த பல பராக்ரமங்களோடு விளங்குகின்றீர்கள். மேலும், இந்த தனுஸ்ஸைப்போன்ற வில்லைக் கையில்பிடித்துப் பகைவரையடக்குந் திறமுடையராகி ஒளி கொண்டு ஏநபலைளத்தர்யங்களால் தலைக்கழற்று மேலான வருஷபம்போல் சிறந்து விளங்குகின்றீர்கள், யானையின் துதிக்கைபோல் நீண்டு பருத்து புஜ முடையராகித் தீக்ஷ்ணவில்லுடன் ப்ரகாசிக்கின்றீர்கள். இப்படிப்பட்ட புருஷச்ரேஷ்டர்களாகிய நீங்கள் யாவர்? உங்களது தேஜஸாந்தியால் பார்வதீராஜ்ஞியாகிய இந்த ருஸ்ய மூகம் ப்ரகாசிக்கின்றது. நீங்கள் தேவதைகளோடொத்த பராக்ரமமுடையராயிருக்கின்றீர்கள்; ஆகையால் தேவலோகத்தினின்றுவந்த வீரர்கள்போல் புலபடுகின்றீர்கள். மேலும், தாமரையிதழ்போன்ற கண்களுடையவருமான லக்ஷ்மணர் தர்யாதிகளில், ஒருவரை ஒருவர் நிகர்த்தவருமாகித் தெய்வாதீனமாய்ப் பூமிக்குவந்த சந்த்ரஸூர்யர்கள்போல் விளங்குகின்றீர்கள். மேலும், விசாலவக்ஷஸ்தலமும் ஸிம்ஹத்தின் முசுப்புபோல் உயர்ந்த தோள்களும்பொருந்தி மிக்க உத்ஸாஹம் விளங்கப்பெற்று மதித்தவ்ருஷபங்கள்போல் தலங்கலுற்றுத் தேவதைகளைப்போன்ற உருவமுடைய மனுஷ்யவீரர்களாகிய நீங்களிருவரும் ஸமஸ்தராஜலக்ஷணங்களும் அமைந்திருக்கையால் ராஜ்யத்திற் குரியராயிருந்தும் ராஜ்யத்தைத் துறந்து ஜடாமண்டலந்தரித்து இந்த வனப்ரதேசத்திற்கு ஏன் வந்தீர்கள்? [1] உங்களது புஜங்கள் முழந்தாள்வரையிலும் நீண்டு பாம்பின் உடல்போல் உரு

---

1 இங்கு 'ஆயதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச வாஹவஃ பரிகோபமாஃ। ஸர்வஸுகுணஸுகுஹார்ஹாஃ கிமர்த்ஹ விஸுகுஷிதாஃ' என்று மூலம். (ஆயதாஃ) முழந்தாள்வரையிலும் நீண்டவைகளும். (ஸுவ்ரு.

ண்டு இரும்புத்தடிகள்போல் பலமும் உறுதியும் அமைந்து ஆபரணங்களுக்கும் ஆபரணங்கள்போன் றிருக்கின்றன வே. இப்படிப்பட்ட புஜங்களைப்பூஷணங்களால் ஏன் அலங்கரியாதிருக்கிறீர்கள்? நீங்களிருவரும் ஸமுத்ரத்தினல் சூழப்பட்டுலகலவணங்களோடுங்கூடி விந்த்யம் மேருமுதலிய பர்வதங்களும் உடையதாய் விளங்கும் இந்தப் பூமண்டலம் அனைத்தையும் பாதுகாப்பதற்குரியவரென்று யான் கினைக்கின்றனன். பார்வைக்கு ஆச்சர்யமும் ஸுகந்தமும் அற்புதமும் பொன்னல் பூசப்பட்டவையுமாகிய இந்தத் தனுஸ்ஸுக்கன் ஸ்வர்ணத்தினல் அலங்கரிக்கப்

த்தாஸீச) ஸர்ப்பத்தின் உடலபோல திரண்டிருண்டிருப்பவைகளும், (பரிவோபமாஃ) தமது ஸௌந்தாயத்தை அனுபவிபபவாகளுக்குளள ஸமஸ்த விரோதிகளையும் போகக வலலவைகளும், (ஸாவஹ்னிஷ்ண ஹ்விஷதார்ஹாஃ) 'ஆஹவணஸ்யாஹவணம்' என்ருறபோல ஆபரணங்களையும் அலங்கரிக்க வலலவைகளுமாகிய, (வாஹவஃ) புஜஙகள, (கிமாயம் நவிஹ்விஷிதா:) ஏன் அலங்கரிககப்படவிலலை. இவைகளை ஆபரணஙகளால அலங்கரித்து ஆபரணங்களுககும் ஆபரணமாயிருக் குந தன்மையை ஏன் வெளிப்படுத்தவிலலை யென்றபடி. அன்றியே, த்ருஷ்டிதோஷம் வாராதிருக்கும்பொருட்டு இப்படிப்பட்ட புஜஙகளின் ஸௌந்தர்யத்தை ஆபரணங்களால மறைகக வேண்டுமே; ஏன் மறைககவில்லை யென்றதாம். அன்றியே, ஆபரணங்களால மறைக்கப்பட்டு இவைகளின் ஸௌந்தர்யமே எம்மை வசப்படுத்தப்போதும். மறைகாமல் ஸௌந்தர்யத்தை வெளிப்படுத்துவது எங்களை வசீகரிகக மிகக மிகுதியானது. அன்றியே, ராஜகுமாரர்கள ஒரு நொடிப்பொழுதும் தாம்பூலமில்லாதபோது வாடி வதங்குவதுபோல நொடிப்பொழுது பிரியினும் நிலைபெற்றிருக்கமாட்டாத ஆபரணங்களை ஏன் பிரிய விட்டிருக்கிறீர்களென்று கருத்து. அன்றியே, இங்ஙனம் ஆபரணஙகளை விட்டிருக்கை எந்தச் சதிருவை வேருடன் கொல்லுவதற்கென்று கருத்து. இதலல தடைபடாத ஸுகங்களுடையவரலலையினும் நித்யஸ்ரிகளை விட்டு இங்ஙனம் நாலவகையாக அவதரித்ததற்குக் காரணமென்னென்று வினவினதாகத் தெரியவருகின்றது

பட்ட இந்த்ரனது வஜ்ராயுதங்கள்போல் ப்ரகாசிக்கின்
றன. பார்க்க இனியவைகளாயிருக்கின்ற இந்த அம்பரூத்
தூணிகளில் மூச்செறிகின்ற ஸர்ப்பங்கள்போல் ப்ராண
ஹ முடிப்பவைகளும் பயத்தை விளைப்பவைகளுமாகிய
கூரான பாணங்கள் நிறைந்திருக்கின்றன. மிக்க விசால
மானவைகளும் தங்கத்தினல் அலங்கரிக்கப்பட்டவைகளு
மாகிய இந்தக் கத்திகளிரண்டும் தோலுரித்த ஸர்ப்
பங்கள்போல் ப்ரகாசிக்கின்றன. நான் இப்படி அடிக்கடி
வினவிக்கொண்டிருப்பினும் நீங்கள் என் மறுமொழிகூரு
திருக்கிறீர்கள்? தர்மாத்மாவும் வீரனுமாகிய ஸுக்ரீவ
னென்னும் ஓர் வானரர்தலைவன் தன் தமையனல் வஞ்ச
னையாக வெளித்துரத்தப்பட்டுத் துக்கத்தினல் பூமியில்
திரிந்துகொண்டிருக்கின்றனன். வானரச்ரேஷ்டர்களுக்
கெல்லாம் அரசனும் மஹாநுபாவனுமாகிய ஸுக்ரீவனல்
அனுப்பப்பட்டு நான் இவ்விடம் வந்தனன். நான் ஹநு
மானென்னும் பேருடைய வானரன். தர்மாத்மாவாகிய
ஸுக்ரீவன் உங்களோடு ஸ்நேஹஞ் செய்துகொள்ள வி
ரும்புகின்றனன். நான் ஸுக்ரீவனுடைய மந்த்ரி. வான
ரனும் வாயுகுமாரனுமாக என்னை அறிவீர்களாக. 'ஸங்
க்யாஸி எப்படி ஆனாய்' என்கிறீர்களோ? நான் ஸுக்
ரீவனுக்கு ப்ரியஞ்செய்ய விரும்பிப் பிக்ஷுரூபத்தினல் மா
றுவேஷம்பூண்டு ருச்யமூக பர்வதத்தினின்று இவ்விடம்
வந்தனன். நான் நினைத்த இடம்போகவல்லவனென்றும்,
நினைத்தவடிவங்கொள்ள வல்லவனென்றும் அறிவீர்களா
கவென்றனன். ஹநுமான் பேசுவதில் நிபுணரைகயால்
வார்த்தைசொல்லுவதில் வல்லவர்களாகிய ராமலக்ஷ்மண
ர்களைநோக்கி இங்ஙனஞ்சொல்லி மேலொன்றுஞ்சொல்லா
மல் மௌனமாய் இருந்தனன். ஸ்ரீமானாகிய ராமன், ஹநு
மான்சொன்ன அந்த வார்த்தைகளைக்கேட்டு முகத்தில்

ஸந்தாஷம்விளங்க அருகேயிருக்கின்ற லக்ஷ்மணனைப் பார்த்து 'இவன் மஹாநுபாவனாகிய அந்தக் கபிராஜ ஸுக்ரீவனுடைய மந்த்ரி. அந்த ஸுக்ரீவனையேபார்க்க விரும்புகின்ற என்னிடம் இவன்மூலமாக அவனே வந்தனன். லக்ஷ்மண! சத்ருக்களையழிக்க வல்லவனே! ஸுக்ரீவனது மந்த்ரியும் பேசுவதில் நிபுணனுமாகிய இந்த வானரன் என்னிடத்திலும் ஸுக்ரீவனிடத்திலும் ஸ்நேஹமுடையவன். இவனோடு நீ மதுரவசனங்களைப் பேசுவாயாக. [1] ருக்வேதத்தில் அப்யாஸமில்லாதவனுக்கும் யஜுர்வேதத்தை உணராதவனுக்கும் ஸாமவேதமறியாதவனுக்கும் இங்ஙனம் பேசுவது எவ்விதத்திலும் ஸாத்யமன்று. மேலும் இவன் இலக்கணமெல்லாம் பலவாறு

I இஹ 'நாந்ருதீ வேத்விநீதஸ்ய நாயஜுர்வேத்யாநிண:! நாஸாமவேவிதுஷ: ஸகயமேவம் ப்ரபாஷிதும்' என்பது மூலம். சேதநேஜ்ஜீவநம் ஆசார்ய முகமாகவே ஆகவேண்டுமன்றி மற்றொருமூலமாகக கூடாதாகையால ஆசார்யன் கிடைத்ததமை இதில சொலலப்படுகிறது. 'ஆசார்யோ வேத்ஸம்பந்நோ விஷ்ணுஹக்தோ விமதஸர:! மந்தாஜ்ஞோ மந்த்ரலக்தஜ்ஞ ஸத்ய மந்தராஸ்ரயஸ்ஸுசி:! ஸுருலக்திஸமாயுக்த: புராணஜ்ஞோ விஶேஷத:! ஏவம்லக்ஷணஸம்பந்நோ ஆசார்யோநித்யமர்ஹதி' என்று சொல்லப்படும் ஆசாரயலக்ஷணம் இங்கு வெளியிடப்படுகிறது. (நாந்ருதீ வேத்விநீதஸ்ய) ருக்வேதத்தில் அப்யாஸமிலலாதவனுக்கு இங்ஙனம் பேசமுடியாதென்க. இஹ எனமே மேலும்பொருள உணர்க. ருக்வேதத்தில ஒவ்வொரு வாணத்திற்கும் ஸ்வரம மிகுந்திருகையால மனதை அடக்கி ஊக்கத்துடன் உசசரிக்கவேண்டுமாகையால அவ்வளவு ஸாமர்த்யமும் இவனுக்கு உண்டாயிருகையால ருக்வேதம் தெரிந்தவனென்று சொல்லப்பட்டது. யஜுர்வேதத்தில ஒவ்வொரு அனுவாகத்திலும் மற்றொரு அனுவாகத்தின் வாக்யங் கலந்திருகக மாகையால ஒன்றோடொன்று கலக்காமல தரித்திருக்கை அரிதென்று, அதுவும் இவனுக குண்டென்று யஜுர்வேதத்தில் தாரணமுடையவ னென்று சொலலப்பட்டது (நாஸாமவேதவிதுஷ:) ஸாமவேதத்தில்

ன்ருகப் படித்திருக்கின்றனன். இது வாஸ்தவம். ஏனென்னில் - இவன் இத்தனைகாலம் எத்தனைவார்த்தை சொன்னபோதிலும் அதில் சிறிதாயினும் அபசப்தம் அகப்படவில்லை. இவன் பேசிக்கொண்டிருக்கையில், இவன் முகத்திலாவது கண்களிலாவது நெற்றியிலாவது புருவங்களிலாவது மற்றுமுள்ள அவயவங்களிலாவது எதிலாவது எள்ளளவும் விகாரம் புலப்படவில்லை. மேலும், இவனுடைய இத்தவார்த்தைகள் சப்த விஸ்தரமின்றிப் பதவர்ணலகுதோஷமுமின்றி மிக்க விளம்பமும் மிக்க வேகமும் இல்லாமல் மார்பில்தோன்றிக் கம்பீரஸ்வரமுடையதும கண்டத்தில் வெளிப்பட்டு நடுத்தரமுமாகி

ஊஹம் ரஹஸ்யம் முதலியவை நிறைந்திருக்கும். கானவிசேஷங்கள் தெரிவது கஷ்டமாகையால அதுவும் இவனுக குண்டென்று ஸாம வைதுஷ்யஞ் சொல்லப்பட்டது. இங்ஙனம் மூன்று வேதங்களிலும் விநயமும் தாரணமும் வேதனமும் உடையவனென்று தெரிகிறது. (விநயம்—அப்யாஸம், தாரணம்—நினைவுமாறுதிருத்தல், வேதனம்—அறிவு). அன்றியே (நாந்ருதீ வேதவிதீதஸ்ய) (நீங்களிருவரும் இந்தப் பூமிமுழுமையும் ரக்ஷிக்கவல்லவா) என்று இது முதலியவற்றால் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்துகை சொலலப்பட்டது. ருக வேதத்தில் 'விரஹ்மவா இதமேக ஏவாக்ர ஆஸீத' இதயாதிகளால அந்த ஸ்ருஷ்ட்யாதிகளை செயதல சொலலப்பட்டது. இதை யறிந்திருப்பது பற்றியே இவன் அங்ஙனம் 'நீங்களிருவருமா . .' என்று னன்றித் தெரியாதபக்ஷத்தில் சொலல நேராதென்க. யஜுர்வேதத்தில் 'அஜாயமானோவஹுதாயாவிஜாயதே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை யறிந்திருப்பது பற்றியே இந்தப் பொருளை உட்கொண்டு 'தேவிரூபிகளான மனுஷ்யர்கள்' என்றனன். இதை யறியாதபக்ஷத்தில் இந்த அவதார ரஹஸ்யதத்தை சொலலமுடியாதென்க. சாந்தோகயத்தில் 'தஸ்யையயாகப்யாஸம் புண்யரீக மேவமக்ஷிணீ' என்றிருகிறது. இதை யறிந்தே 'தாமரையிதழ்போன்றகண்களையுடையவ' னென்றனன். ஸாமவேத மறியாலகில் இங்ஙனஞ் சொல்ல வல்லனல்லனென்று கருத்தாம்.

அவ்விரண்டிற்கும் இடையில் மிக்க உரப்பும் மிக்க தாழ்வு மின்றிவிளங்குகின்றது. இவன் வ்யாகரணஸம்ஸ்காரத்தி லல் சப்த சுத்தியுடன் பதங்கள்தெளிவாகவும் அக்ஷரங் கள்தனித்தனியே ஸ்பஷ்டமாகவும் இருக்கப்பெற்று விரை வும் மெதுவுமின்றி மற்றுமுள்ள குணங்களும் நிறைந்து மனத்திற்கினிதாயிருக்குமாறு மங்களகரமான வாக்ய ங்களைக் கூறுகின்றனன். அக்ஷரங்கள் வெளியாகும் ஸ்தா னமாகிய மார்பு கண்டம் சிரஸ்ஸு ஆகிய இம்மூன்று இட ங்களில் நிலையுற்றிருக்கும் உதாத்த அனுதாத்த ஸ்வரித ங்களென்னும் ஸ்வரங்களோடுகூடி வியப்பை விளக்கின்ற இவனது வார்த்தைகளைக் கேட்கையில், வெட்டுவதற்காக வாளையுருவிக் கையிலேந்தின பகைவனையிருப்பினும் அவ னுடைய மனமும் கொடுமைநீங்கி ஸ்நேஹமுடையா திராது. பாபமற்றவனே! (நம்மைப் புகழும் வ்யாஜத்தி லேயே நமதுகுலகோத்ராதிகளை யெல்லாம் விளவினனே.) இப்படி வினவும்படியான ஸமர்த்தன எந்த அரசனுக்குத் தூதனாயிருப்பானே, அவ்வரசனுக்குக் கார்யங்கள் எங்ங னம் கைகூடாது போகும்? இப்படிப்பட்ட குணகணங்கள் பொருந்திக் கார்யங்களை ஸாதிக்கும் தூதர் எந்த ராஜனு க்கு இருப்பார்களோ, அந்த ராஜனதுகார்யங்களெல்லாம், அவனுக்கு ப்ரமமின்றி அந்தத் தூதரது வாக்யமூலமாக வே ஸித்திபெறும்' என்று மொழிந்தனன். இங்ஙனம் ரா மனை மொழியக்கேட்ட லக்ஷ்மணன் தான் வார்த்தை சொ ல்லுவதில் வல்லவனாகையால், ஸுக்ரீவனது மித்ரியும் வா க்யங்களை யறிந்தவனும் வாயுகுமாரனுமாகிய அந்த வான ரனைப் பார்த்து 'அறிஞனே! மஹாநுபாவனாகிய ஸுக்ரீ வனது குணங்கள் எமக்குத் தெரிந்திருக்கின்றன. வானர் தலைவனாகிய அந்த ஸுக்ரீவனையே நாங்களும் இப்பொழு து தேடிக்கொண்டிருக்கின்றனம். மிகுந்த கண்மையுடைய

வனே! ஹனுமானே! நீ இப்பொழுது ஸுக்ரீவனுடைய கட்டளையில் யாது சொல்லினையோ, அதை அப்படியே கடத்துகினறும்' என்றனன். அனந்தரம் வாயுகுமாரனாகிய அந்த வானரன், லக்ஷ்மணன் நிபுணமாகச் சொன்ன வார்த்தையைக் கேட்டு மிகவும் ஸந்தோஷமுற்று வாலியை வெல்லும் உபாயத்தைப் பற்றி மனத்தில் நிச்சயித்துக்கொண்டு அந்த ராமலக்ஷ்மணர்களோடு ஸுக்ரீவனுக்கு ஸ்நேஹம் பண்ணுவிக்க விரும்பினன். மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

லக்ஷ்மணன் ஹனுமானுக்குத் தமது வருத்தாந்தகதைதத் தெரிவித்தலும், அவர்கள் ஸுக்ரீவனிடம் போதலும்.

அனந்தரம் ஹனுமான், லக்ஷ்மணன் மதுரமாகச் சொன்ன அந்த வார்த்தைகளைக் கேட்டு, ராமனுக்கு ஸுக்ரீவனுல் கார்யம் உளதென்று தெரிகையால் மிகவும் ஸந்தோஷம் அடைந்து ஸுக்ரீவனைக் குறித்துத் தன் மனத்தில், 'ராமன் ஸுக்ரீவனுல் கார்யமாகவேண்டி வந்தனன். ஆகையால் மஹாபாக்யமுள்ள ஸுக்ரீவனுக்கு ராஜ்யம் கை புகக்கூடும். இந்த ராஜ்யங் கை கூடுவதும் ஏறக்குறைய முடிந்தாற்போன்றதே' என்று நினைத்தனன். பின்பு, வார்த்தை சொல்லுவதில் நிபுணனாகிய ஹனுமான் பரம ஸந்தோஷம் அடைந்து ராமனைப் பார்த்து 'நீயும உன்தம்பியும், பயங்கரமாகி காணுகிற ஸர்ப்பங்களுடனும் மிருகங்களுடனும் நிரம்பின தண்டகாரண்யத்திற்கு, அதிலும் பம்பையின் ஸமீபத்திலுள்ள வனங்களால் விளக்கமுற்றுப் புகக்கூடாத இப்படிப்பட்ட ப்ரதேசத்திற்கு என் வந்தீர்கள்?' என்று வினவினன். லக்ஷ்மணன அந்த வார்த்தையைக்கேட்டு, ராமன் மறுமொழி கூறுவாயாக வென்றுரைக்கையில்

ஹனுமானுக்கு ராமன் மஹாநுபாவனென்றும் தசரத குமாரனென்றும் இங்ஙனஞ் சொல்லினன். 'தசரத ரென்று ஓர் மன்னவர் உளர். அவர் மிக்க ப்ரதாபமுடையவர்; தர்மத்தில் நிலைநின்றவர். அவர் தமது தர்மத்தினபடி தவறுமல் எப்பொழுதும் தான்கு வர்ணத்தவர்களையும் பரிபாலித்து வந்தனர்-அவர் மேல் த்வேஷமுள்ளவன் ஒருவனும் இரான். அவர்க்கும் ஒருவனிடம் த்வேஷம் உண்டாகாது. அவர் ஸமஸ்த ப்ராணிகளிலும் ப்ரஹ்மதேவன் போல் மிகவும் மேன்மையுடையவர். அவர் நன்கு தக்ஷிணைகள் கொடுத்து அக்னிஷ்டோமாதி யாகங்களைச் செய்தனர். இவன், அந்தத் தசரதருடைய மூத்த குமாரன். இவனை ஜனங்கள் ராமனென்பார்கள். இவன் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ரக்ஷகனையிருப்பவன்; தந்தையினுஜ்ஞையைத் தவறுமல் நிறைவேற்றுவானன்றி ஒருபொழுதும் தவறமாட்டான். மேலும், இவன் வீரன்; தசரதகுமாரர்களெல்லோரிலும் மிகுந்த குணமுடையவன்; ராஜலக்ஷணங்கள் அமைந்தவன்; மூத்தவனைகையால் ராஜஸம்பதிதியோடுங் கூடினவன். இவனுக்கு ராஜ்ய[1] ப்ரம்சம் நேருகையில் வனத்தில் வாஸஞ் செய்யும் பொருட்டு என்னோடுகூட இவ்விடம் வந்தனன். மஹா தேஜஸ்வியாகிய ஸூர்யனஸ்தமயங்காலத்தில் காந்தி குறைந்து அஸ்தமிக்கும் பொழுதும் அவனது ப்ரபை அவனைப்பின் செல்வதுபோல் மஹா தேஜஸ்வியாகிய ராமன் ஐச்வர்யத்தை இழந்து அடவிக்கு வரும்பொழுதும். அந்த ஜிதேந்த்ரியனுடைய பார்யையாகிய ஸீதையும் அவனை விடாமல் பின்தொடர்ந்து வந்தனள். [2] நான் இவனுடைய தம்பி, லக்ஷ்மணனென்

---

1 கைகேசாருதல்.

2 இங்கு 'அஹமஸ்யாவரோ ஹ்ராதா ஸௌஹார்தாஸ்யமுபாகத:। கூதஜ்ஞஸ்யைவ ஹ-ஜ்ஞஸ்ய லக்ஷ்மணோநாமநாமத:। ஸௌவார்ஹஸ்ய மஹார்ஹஸ்யவநவாஸாஸ்ரிதஸ்யச' என்பது மூலம். (அஸ்ய

னும் பேருடையவன். ராமன், தனக்குப் பிறர் கொஞ்சம் உபகாரஞ் செய்யினும் அதை மிகவும் மேலாக நினைக்குந் தன்மையன்; லோகத்தை அனுபவிப்பதற்கே தகுந்தவன்; ஐஸ்வர்யம் அமைந்தவன்; ஸர்வ பூதங்களுடைய மேன்மையினும் மனதுடையவன். இவன் ஐஸ்வர்யத்தைப் போக்கடித்துக்கொண்டு வனவாஸஞ் செய்ய வந்திருப்பினும் இவனது குணங்களுக்கு வசப்பட்டுதான் இவனுக்குத் தாஸனாகி இவனுடன் கூட வந்தனன். நாங்களி

அவரோஹீராதா) இவனைப்பற்றிப் பார்க்கையில் இவனுக்குப் பின் பிறந்தவ னாகின்றனன். (அஹம்து) என்னைப்பற்றிப் பார்க்கில நான் (மமனர்டாஸ்யமுபாமதஃ) இவன் குணங்களுக்கு மனதுவசப்பட்டு இவனுக்குத் தாஸனேயாயிருப்பவன். லக்ஷ்மணனுக்குப் 'பாவாநஸ்மி' இத்யாதிகளால் தாஸ்யம் ஸ்வரூப விதமாயிருக்கக் குணங்களைப் பற்றி யென்பது எப்படி யென்னில்—இங்கு ஸ்வரூப விதமான தாஸ்யம் யோக்யதையின் மிகுதியால் குணங்களைப்பற்றி மிகவும் வளர்ந்திருக்குமென்று கருத்துக்கொள்க. ஆகையால விரோதமில்லை. (உபாமதஃ) என்கிறவிடத்தில (உப) என்கிற இத்தால ஸர்வதேச காலகால ஸர்வாவஸ்தைகளுக்கும் உரியவையான ஸர்வவிதகைங்கர்யங்களையும் ப்ராப்தனானே னென்றமை தோற்றுவிக்கப் படுகிறது. இந்தக் கைங்கர்யமும் எனக்காகவன்று, அவனுடைய முகோல்லாஸத்திற்காக வென்கிறான். (கர்தவ்யஸ்ய வஹ-மஜ்ஞஸ்ய) செய்ததறிதாயிருப்பினும் அதைப் பெரிதாக நினைப்பவன். இந்தக் கைங்கர்யம் ஸஹஜமென்னும் நினைவோடு சொலலுகிறான். (லக்ஷ்மணோ நாமநாமதஃ) தன்பேரைப் பற்றியே கைங்கர்ய லக்ஷ்மியமைந்தவ னென்று ப்ரஹிததிபெற்றவன். ஆகையால் இந்தக் கைங்கர்யம் தனக்கு ஸஹஜமென்று கருதது. (மஹார்ஹஸ்ய) ஜகீவர்யம் அமைநதவன். (வநவாஸாகீ ரிதஸ்யச) வனவாஸஞ் சென்றவன்; துக்கமுற்றவ னென்க. அதாவது ஸம்ருத்திதசையிலும் அஸம்ருத்திதசையிலும் தன்தாஸ்யத்தைச சொல்லுகையால அது தனக்கு ஸஹஜமென்பது சொல்லப்பட்டது. கைங்கர்யம் ஸஹஜமே, குணங்களை அதை வளரச செய்கின்றனவென்பது கருத்து.

ருவரும் இல்லாத ஸமயத்தில் காமரூபியாகிய ராக்ஷஸனை ருவன் இவனது பார்யையை எடுத்துக்கொண்டு போயினன். இவனது பார்யையாகிய அந்த ஸீதையை எடுத்துக் கொண்டு போனவன் எவனே தெரியாதிருக்கின்றது. தனுவம்சத்தில் பிறந்த ஸுநீயென்பவன் புதல்வன் (திதிக்குப் புத்ரன்போன்றிருப்பவன்) சாபத்தினால் ராக்ஷஸனாயிருந்தனன். அவன், வானரர்தலைவனாகிய ஸுக்ரீவன் ஸமர்த்தனென்று மொழிந்தனன். மேலும், அவன் 'மஹாவீர்யனாகிய ஸுக்ரீவன், உன் பார்யையை எடுத்துக்கொண்டுபோனவனைத் தெரிந்துகொள்ளவல்லவன்'என்றுரைத்து அந்தத் தனுஜன் (கபந்தன்) ராக்ஷஸத் தன்மையை விட்டுத் திவ்யதேஹத்துடன் விளக்கமுற்று ஸுகமாக ஸ்வர்க்கம் போயினன். நீ வினவினதற்கு எமது வ்ருத்தாந்தத்தை யெல்லாம் உனக்கு கடந்தபடியே சொல்லினன். காகுத்ஸ்தனும் ராமனும் ஸுக்ரீவனைச் சரணம் அடைந்தனம்.

[1] இம்மஹாநுபாவன் மேன்மேலோர்களுக்குப் பலவகைப்

I இங்கு 'ஏஷ ஹ்யர்த்வாச வித்தாநிப்ராப்யசாநுத்தமம் யஶ: | லோகநாயஃ புரா ஹ்யேத்வா ஸுஶ்ரீவம்நாயமிச்ஹதி' என்பது மூலம். இங்கு (லோகநாயஃ)என்று லோகசப்தம தனியேயிருக்கையால ஸாவலோகங்களுக்கும் நாதனென்று தோற்றுகிறது. இதனால் பரத்வம் தோற்றுவிக்கப்பட்டது. (ஸுஶ்ரீவம்நாயமிச்ஹதி) என்கையால் ஸௌஶீல்யம் தோற்றுவிக்கப்பட்டது. ஸௌஶீல்யமாவது மேன்மையுடையவன் தாழ்ந்தவரோடு ஒருநீராகக்கலந்திருக்கை. (ப்ராப்யசாநுத்தமம் யஶ:) பாத்வத்தைக்காட்டிலும் அவதாரத்தில் மிகவும் புகழ் தோற்றுகிறது. பாத்வமில்லாத வெறும் ஸௌஶீல்யம் குணமாகாமையால் இங்குப் பாத்வத்தோடுகூட ஸௌஶீல்யம் சொலலப்பட்டது. இப்படிப்பட்ட மேன்மையுடையவன் அற்பஜனத்தை ஏன் வேண்டுகிறானென்னில்(இச்ஹதி) அவனுடைய இசைசையை ஒருவரால் தடுக்கமுடியாது. அந்த ஸ்வதந்த்ர இசைசையோடு வேண்டிக்கொள்வதும் குணமே. பாதீனன் வேண்டுவதே குணமன்றென்று கருத்து.

பட்ட தனங்களைக் கொடுத்தும் ஒப்பற்ற கீர்த்தியைப் பெற்றும் முன்பு லோகதாதையிருந்து இப்பொழுது ஸுக்ரீவனைத் தனக்கு நாதனாக விரும்புகின்றனன். எவனது தந்தை தசரதர் முன்பு தர்மவத்ஸலராகி அனைவரும் சரணமடையக்கூடியவராயிருந்தனரோ, அப்படிப்பட்டவரது குமாரன் அனைவரும் வந்து சரணம் புகத் தகுந்தவன், இப்பொழுது ஸுக்ரீவனைச் சரணம் அடைந்தனன். எவன் அருள்புரிவானையின், இந்தப்ரஜைகள் அனைவரும் ஸமஸ்த புருஷார்த்தங்களையும் பெற்று மனத்தில் தெளிவுற்றிருப்பரோ, அப்படிப்பட்ட ராமன் இப்பொழுது வானர ராஜனுடைய அனுக்ரஹத்தை விரும்புகின்றனன். பூமண்டலத்திலுள்ள ஸமஸ்த ராஜாக்களையும், எவர் ஸமஸ்த உபசாரங்களும் பெற்றவராகச் செய்து மன்னித்தனரோ, அப்படிப்பட்ட மஹாராஜ தசரதரது வயிற்றில் பிறந்த பெரிய குமாரன், மூன்று லோகங்களிலும் புகழ்பெற்றவன், ராமன், வனத்தில் திரியும் வானரமாத்ரங்களுக்கு ராஜனாகிய ஸுக்ரீவனைச் சரணம் அடைந்தனன். இங்ஙனம் சோகத்திற்காளாகிச் சோகத்திலுல் பீடிக்கப்பட்டுச் சரணம் அடைந்த ராமனிடத்தில் வானரக்கூட்டங்களுக்குத் தலைவனாகிய ஸுக்ரீவன் அனுக்ரஹஞ் செய்யவேண்டும்' என்றனன். இங்ஙனம் கண்களில் நீர்பெருக மனதிரக்கம் உண்டாகும்படி மொழிகின்ற லக்ஷ்மணனைப் பார்த்து ஹனுமான் வார்த்தையினை ஒழுங்கு தோற்ற 'புத்தியிற் சிறந்து கோபத்தை அடக்கி நீதிதந்திரியராயிருக்கும் இப்படிப்பட்டவர்களை ஸுக்ரீவனே தேடிக்கொண்டுவந்து பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட நீங்களே அவனது பாக்யவசத்தினால் அவனுக்குத் தர்சனங்கொடுக்கவந்தீர்கள். அந்த ஸுக்ரீவனும் அண்ணனாகிய வாலியோடு வைரங் கொண்டு, அவன் தன் பத்னியை அபஹரித்துத் தன்னை மிகவும்



1643. ஹனுமான் ராமலக்ஷ்மணர்களைத் தோள்மேல் ஏற்றிக்கொண்டு ஸுக்ரீவனிடம் போதல்.

வஞ்சித்துத் தூரத்துகையில், ராஜ்யங் கைசோரப்பெற்று வனத்தில் இருக்கின்றனன். ஸுர்யபுத்ரனகிய அந்த ஸுக்ரீவன் எம்முடன்கூடி ஸீதாதேவியைத் தேடுவதில் உங்களிருவர்க்கும் ஸஹாயஞ்செய்வான்' என்றனன். ஹனுமான் இங்ஙனம் மெதுவாகவும் இனிதாகவும் உரைத்து மீளவும் ராமனைப்பார்த்து 'இனி ஸுக்ரீவனிடம் போவோம்' என்றனன். ஹனுமான் இங்ஙனம் சொல்லிக்கொண்டிருக்கையில், தர்மாத்மாவாகிய லக்ஷ்மணன், தூதனைப் பூஜிக்கவேண்டிய ந்யாயத்தின்படி பூஜித்து ராமனைப்பார்த்து 'அண்ணா! என்வார்த்தைகளைக்கேட்டு வாயுகுமாரனகிய இவ்வானரன் ஸகலதாஷமுற்றவனைத் தோற்றுகையால் ஸீதையைத்தேடும் விஷயத்தை யதார்த்தமாகவே சொல்லுகின்றனன். அந்த ஸுக்ரீவனும் நம்மால் கார்யம் ஆகவேண்டியவனைவே நேர்ந்திருக்கின்றமையால் நங்கார்யத்தைச் செய்யாமல் தீராது. ஆகையால் நீ கார்யங்களைகூடப் பெற்றனை. வாயுகுமாரனகிய இவ்வீரன் ஹனுமான் தெளிந்தமுக வொளியுடன் ஸகலதாஷமுற்று ஸ்பஷ்டமாகப் பேசுகிறுணையால் இப்படிப் பட்டவன் அபத்தஞ் சொல்லமாடடான்' எனறனன். அதன்மேல் மஹாப்ராஜ்ஞனகிய ஹனுமான் வீரர்களாகிய ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு வானரப்ரபுவாகிய ஸுக்ரீவனிடம் போயினன். அந்தக் கபிகுஞ்சரன் ஸுகயாஸி வேஷத்தை விட்டு மீளவும் தனக்கு ஏற்பொழுதுமுள்ள வானரரூபம் பெற்று அவ்வீரர்களை முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு போயினன். ஸகலதேவதைகளின வரப்ரஸாதத்தினல் பெருங் கீர்த்திபெற்று ஸுக்ரீவன் போன்றவனையும் அடக்கி நடத்தும்படியான மேன்மையுற்ற வானரனும் மஹாபராக்ரமமும் மிகுந்தபுத்தியும் பொருந்தின வாயு குமாரனுமான ஹனுமான் 'இனித்

தவறாமல் ஸுக்ரீவனது அபீஷ்டம் நிறைவேறும்' என்று கார்யம் கைகூடப் பெற்றவன்போல் மிகவும் ஸந்தோஷமுற்று ராமலக்ஷ்மணர்களோடுகூட ரூப்யமூகபர்வதத்திற்குப்போயினன். நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ராமனும் ஸுக்ரீவனும் அக்னி ஸாக்ஷிகமாக ஸ்நேஹஞ் செய்து கொளளுதல். }

ஹனுமான் ரூப்யமூகபர்வதத்தினின்று அதன் தாழ்வரையாகிய மலயபர்வதத்திற்குச் சென்று ஸுக்ரீவனைப் பார்த்து அவனுடன ராமலக்ஷ்மணர்களின் வரவைக்குறித்து 'மிகவும் ப்ராஜ்ஞனும் மஹாபராக்ரமசாலியுமாகிய ராமனும் அவன் தம்பியும் இங்கே வந்திருக்கின்றனர். இந்த ராமன் ஸத்ய பராக்ரமன். இவன் இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தவன்; தசரத மஹாராஜரது புதல்வன்; பரம தார்மிகனென்று ப்ரஸித்தி பெற்றவன; தந்தையின் ஆஜ்ஞையைத்தவறாமல் நிறைவேற்றுந் தன்மையன்; அப்படிப்பட்டமஹானுபாவனாகிய இந்த ராமன் நியமங்களில் முயன்று அரண்யவாஸஞ் செய்கையில், இவனது பார்யையை ராவணன் அபஹரித்துக்கொண்டு போயினன். அந்த ராமன் இப்பொழுது உன்னைச் சரணம் புகுந்தனன். ராஜஸூயங்களாலும் அஸ்வமேதங்களாலும் அக்னிக்கு மிகவும் த்ருப்தியைச் செய்வித்து லக்ஷக்கணக்காகப் பசுக்களையும் தக்ஷிணை கொடுத்துத் தவத்தினால் ஸத்யந் தவறாமல் பூமண்டலத்தைப் பாதுகாக்குந் திறமுடைய மஹானுபாவனாகிய தசரத மஹா ராஜரது குமாரன் ராமன் ஸ்த்ரீ நித்தமாக உன்னைச் சரணம் புகுந்தனன். அண்ணனும் தம்பியுமாகிய அந்த ராமலக்ஷ்மணர்களிருவரும் உன்னுடைய ஸ்நேஹத்தை விரும்புகின்றனர். இவ்வீரர்களிருவரும் மிகவும் பூஜிக்கத்தகுந்தவர். ஆகையால்

இவர்களை எதிர்கொண்டு பூஜிப்பாயாக'என்றனன். ஸுக்ரீவன் ஹனுமான்சொன்ன வார்த்தையைக்கேட்டு மனத்தில் ஸந்தோஷமுற்றவனாகி உள்ளே இருந்தபரிதாபமெல்லாந் தீரப்பெற்று ராமலக்ஷ்மணரிடம் தனக்குண்டாயிருந்த பயத்தைத் துறந்தனன். வானரர் தலைவனை அதஸுக்ரீவன் மனுஷ்ய உருவந்தரித்து மிகவும் இனியனாய் ஸந்தோஷத்துடன ராமனைப் பார்த்துத் 'தாங்கள் நன்முகப் பயிற்சியுடையவர்; மிகுந்த பராக்ரமமுடையவர்; ஸமஸ்தப்ராணிகளிடத்திலும் வாத்ஸல்யமுடையவர். உமது குணங்களை யெல்லாம் உள்ளபடி ஹனுமான் எனக்குச் சொல்லியிருக்கின்றனன். ப்ரபூ! ஆகையால் கேவலம் ஓர் வானரனுகிய என்னைத் உம்மைப் போனறவர் ஸ்நேஹம் செய்ய விரும்புகிறுரென்னு மிது எனக்கு மிக்க ஸத்காரமும் உயர்ந்த லாபமுமாயிருக்கின்றது. உமக்கு ஸ்நேஹம் 'இஷ்டமாயிருக்குமாயின், இதோ கை நீட்டினன்; கையால் என் கையைப் பிடிப்பீராக. இந்த ஸ்நேஹத்தைக் கடவாதிருக்கும்படி திடமான ஏற்பாடும் கடத்துவீராக' என்றனன. அந்த ராமன், ஸுக்ரீவன் மெதுவாகச்சொன்ன அந்த வார்த்தைகளைக்கேட்ட மாத்ரத்திலேயே மனத்தில் ஸந்தோஷம் மிகப்பெற்று ஸுக்ரீவனது கையைத் தன்கையால் பிடித்துக்கொண்டனன். ராமன் மனத்திற்கு இனிய நேசத்தைப்பற்றி ஸுக்ரீவனை அழுத்தக் கட்டிக்கொண்டனன். அப்பால் பகைவரை அடக்குந திறமுடைய ஹனுமான், தான் ராமலக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு போன பின்பு மீளவும் தரித்திருந்த ஸந்யாஸி வேஷத்தைவிட்டு நிஜரூபத்தைக் கைப்பற்றி அரணிக்கட்டைகளைக்கடைந்து அக்னியைப் பிறப்பித்தனன். பின்பு அந்த ஹனுமான் எரிகின்ற அந்த அக்னியைப்

பூஜித்து அங்ஙனம் பூஜிக்கப்பட்ட அவ்வக்னியை மிகுந்த ப்ரீதியோடும் மனமுக்கத்தோடும் ராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் இடையில் கொண்டு வைத்தனன். அனந்தரம் ஸுக்ரீவனும் ராமனும் கைகளைப் பிடித்துக்கொண்டு எரிகின்ற அந்த அக்னியை ஸாக்ஷியாகவைத்து ஸ்நேஹம் பண்ணிக்கொண்டனர். அதனமேல், அந்த ராம ஸுக்ரீவர்களிருவரும் மிகவும் மனக்களிப்புற்று ஒருவரை ஒருவர் எவ்வளவு பார்த்துக்கொண்டிருந்தபோதிலும் த்ருப்தி அடையவில்லை. ஸுக்ரீவன் ராமனைப் பார்த்து மிகுந்த ஹர்ஷத்துடன 'நீர் எனக்கு மிகவும் அநுமையான ஸ்நேஹிதராயினீர். இனி உமது துக்கமும் என துக்கமும் ஒன்றே. உமது ஸுகமும் என் ஸுகமும் ஒன்றே' என்றனன். ஸுக்ரீவன், மிகுந்த இலைகளுடையதும் கண்கு புஷ்பித்திருப்பதுமாகிய ஓர் ஸாலவ்ருக்ஷத்தினுடைய கிளையை ஓடித்து அதைப் பரப்பிக்கொண்டு ராமனும் தானுமாக உட்கார்ந்தனன். பிறகு பரம ஸந்தோஷமுற்று ஹனுமான் லக்ஷ்மணனுக்காக மிகவும் புஷ்பித்திருக்கிற சந்தன மரத்தின் கிளையை ஓடித்துப் பரப்பினன. 'பிறகு ஸுக்ரீவன மிகவும் ஸந்தோஷமுற்று அப்பொழுது கண்களில் ஆநந்த நீர் பெருக, ராமனைப் பார்த்து மிருது மதுர வாக்யத்துடன் 'ராமா! என் தமையன் எனனை வருந்தி என் பாரியையை அபஹரித்துக் கொள்ளையில, நான் அவனிடம் பயப்பட்டு வருந்திப், புகக்கூடாத இவனத்தில் உனனைப் புற்றினன. அங்ஙனம் வாலி எனனை வருந்தித்து எனமேல் வைரங் கொண்டிருப்பதுபற்றி நான் அவனிடம் பயத்தினல் மனத்தில் திக்ப்ரமங்கொண்டு எதுக்தோற்றுமல் இவ்வனத்தில் இருக்கின்றனன. மஹா பாக்யமுடையவனே! வாலியிடம் பயத்தினல் பீடிக்கபபட்டிருக்கிறனைக்கு அபயங் கொடுப்பாயாக. காகுத்ஸ்தனே!

எனக்குப் பயமில்லாதிருக்கும்படி கடத்த வேண்டும்' என்
று மொழிகையில், தர்மங்களை யறிந்தவனும் தர்மங்களில்
யுகவிருப்பமுடையவனும் ககுத்ஸ்த குலாலங்காரனுமாகி
ய ராமன் மிகவும்மே தஜஸ்ஸியாகையால் ஸுக்ரீவனைப் பார்
த்து 'இதெவ்வளவு கார்யம்' என்று முகத்தில் புனலை
விளங்க 'வானரர் தலைவனே! ஸ்நேஹமித்ரு யிருக்கைக்கு
உபகாரஞ் செய்கையே பலனென்று எனக்குத் தெரிந்தே
இருக்கின்றது. ஆகையால் உன் பார்யையை அபஹரித்த
வாலியை நான் வதிக்கின்றனன். என கூரானபாணங்கள்
வீணுகாதனவை; ஸுச்யஸ்நேடோத்திருப்பனவை; கழுகின்
இறகுகள் கட்டப் பெற்று இந்த்ரனது வஜ்ராயுதத்தை
நிகர்த்துக்கூரான நுனியுடன் கூடிக் கோபித்த ஸர்ப்பங்
கள் போன்று மஹாவேகத்துடன் அந்த வாலியின்மேல்
விழப்போகின்றன. இதோ சீக்ரமாகவே அவ்வாலி க்ருஷ்
ணஸர்ப்பங்கள் போல் க்ரூரமான எனது பாணங்க
ளால் அடிக்கப்பட்டுப் பர்வதம்போல் தரையில் பதறி
வீழ்ந்திருக்கப் போகின்றனன் பார்' என்றனன். அந்த
ஸுக்ரீவன், தனக்கு ராமன் ஹிதமாகச் சொன்ன அந்த
வார்த்தைகளைக் கேட்டு மிகவும் மனக்களிப்புற்று மிக்க
மேன்மையுடைய வார்த்தையைச் சொல்லத் தொடங்கிப்
'புருஷஸிம்ஹனே! ராமா! உனது அனுக்ரஹத்தினால
என் ப்ராணனையும் என் ராஜ்யத்தையும் மீளவும்
பெறுவேன். கரதேவனே! ஆகையால நீ இப்பொழுது
அப்படிப்பட்ட வைரத்தினால் எனக்குப் பகைவனையிருக்
கிற என் தமையனை வதிக்கும்படியான ப்ரயத்னத்தைச்
செய்வாயாக' என்றனன். ஸுக்ரீவனும் ராமனும் ஸ்நே
ஹம் பண்ணிக்கொள்ளும் ஸமயத்தில், தாமரையிதழ்
போன்றஸீதையின் இடக்கண்ணும் பொன்வர்ணமுடைய
வாலியின் இடக்கண்ணும் அக்னிபோல் எரிகின்ற ராவ

ணனது இடக்கண்களும் ஓரே காலத்தில் துடித்தன. ஜந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் ராமகார்யத்தைச செய்வதாக ப்ரதிஜ்ஞை செயதல.

ஸுக்ரீவன் ஸந்தோஷமுற்றவனாகி ரகுகுலகுமாரனாகிய ராமனை மீளவும் பார்த்து 'ராமா! என் மந்த்ரியும் மந்த்ரிகள் அனைவரிலும் மேன்மையுற்றவனுமாகிய இந்த ஹனுமான் நீ ஜனஸஞ்சாரமில்லாத இந்த வனத்திற்கு ஏன் வந்தனையோ அதை எனக்குச் சொல்லியிருக்கின்றனன். நீயும் உன் தம்பி லக்ஷ்மணனும் வனத்தில் வாஸஞ் செய்து கொண்டிருக்கையில், ராவணன் ஸமயம் பார்த்திருந்து, நீயும் புத்திமானாகிய லக்ஷ்மணனும் இல்லாதபோது ஒன்றியாகித் திக்கின்றி ரோதனஞ் செய்கின்ற பதிவ்ரதையும் ஜனகராஜன் புதல்வியுமாகிய உன் பத்னி ஸீதையை அபஹரித்துக்கொண்டு, தடுக்கவந்த ஜடாயுவை வதித்து, அவளைக் கொண்டுபோயினன். உனக்கு இனிப் பார்யாவியோகதுக்கம் சீக்ரத்திலேயே விட்டுப் போய்விடும். மதுகைடபர்கள் அபஹரித்துகொண்டுபோன வேதப்ருதிவியை மத்ஸ்யாவதாரஞ் செய்த விஷ்ணு திருப்பிக்கொண்டு வந்தாற்போல், நான் அந்த ஸீதையைக் கொண்டு வந்து கொடுக்கிறேன். சத்ருக்களை யழிப்பவனே! உன் பார்யை, பாதாளத்திலிருப்பினும் ஆகாயத்திலிருப்பினும் நான் கொண்டுவந்து கொடுக்கிறேன். ராமா! நான் சொல்லும் இவ்வார்த்தை யதார்த்தமே. தப்பாதென்றறி வாயாக. மஹாபாஹுவே! விஷங் கலந்த நின்பண்டத்தைத் தின்றால் எப்படியோ, அப்படியே உன் பார்யையை அபஹரித்து இந்த்ரனும் தேவாஸுரர்களும் ஜரிபபித்துக்கொள்ளமுடியார்கள். மஹாபாஹு! சோகத்தை



1649. ஸுக்ரீவன் ஸீதையின் ஆபரணங்களைக் காண்பித்
தலும், ராமன் அதைக்கண்டு வருத்தமுறுதலும்.

விடுவாயாக. உன்காதலியாகிய அந்த ஸீதையை, நான் கொண்டுவந்து கொடுக்கிறேன். கொடுந்தாழிலுகிய ராக்ஷஸன் கொண்டுபோகுந் தருணத்தில் 'ராமா ராமா!' என்றும் 'லக்ஷ்மண!' என்றும் விகாரஸ்வரத்துடன் முறையிட்டு ரோதனஞ்செய்துகொண்டு ஸர்ப்பராஜ கன்னிகைபோல் ராவணன்மடியில் அல்லாடிக் கொண்டிருக்கும் ஓர் பெண்பிள்ளையைக் கண்டேன். உலுத்துப்பார்க்கையில் அவளே ஸீதையென்று எனக்குத் தோற்றுகிறது. அவளே ஸீதையென்பதற்கு ஸந்தேஹமும் இல்லை. அந்த ஸீதை, நான்கு வானரர்களோடு ஐந்தாவதாகிப் பர்வதத்தின் சாரலிலிருக்கும் என்னைப்பார்த்து உத்தரீயத்தை எடுத்து ஆபரணங்களைக் கழற்றி மூட்டையாகக்கட்டி என்னிடம் விழும்படிக்குப் போகட்டனள். ராமா! நாங்கள் அந்த ஆபரணங்களை எடுத்துப்பத்ரமாக வைத்திருக்கின்றனம். நான் அவைகளை எடுத்துகொண்டு வருகிறேன். நீ அவைகளைப்பார்த்து அடையாளங் கண்டுகொள்ளலாம்' என்றனன். அனந்தரம் ராமன் ப்ரியவசனங்களைக் கூறுகின்ற ஸுக்ரீவனைப் பார்த்து 'நண்பனே! அந்த ஆபரணங்களை வேகமாகக் கொண்டு வருவாயாக. தாமதஞ்செய்வதேன்?' என்றனன். ராமன் இங்ஙனஞ் சொல்லுகையில், ஸுக்ரீவன் அவனுக்குப்ரியஞ்செய்ய விரும்பி உடனே சீக்ரமாக அந்தப் பர்வதத்தில் புகக்கூடாத ஓர் குஹைக்குள் சென்று ஸீதையின் உத்தரீயத்தையும் அழகான ஆபரணங்களையும் கொண்டுவந்து 'இதோ பாராய்' என்று ராமனுக்குக் காண்பித்தனன். பின்பு ராமன் அந்த உத்தரீயத்தையும் அழகாகிய அந்த ஆபரணங்களையும் வாங்கிக்கொண்டு சந்த்ரன் பனியால் மூடப்படுவதுபோல் கண்ணீர் நிறைந்தவனுயினன். அவன் அவைகளைப் பார்த்தவுடனே ஸீதையிடத்திலுள்ள ஸ்நேஹத்தினால் பொங்கி

வருகின்ற கண்ணீரினால் விகாரமுற்றவனாகி 'ஆ! என் ப்ராணாதாயகி'! என்று கதறி ரோதனஞ்செய்துகொண்டு தைர்யத்தை விட்டுத் தரையில் வீழ்ந்தனன். அவன் உத்தமமான அந்த ஆபரணங்களைப் பலவாறாக மார்பின்மேல் வைத்துக்கொண்டு, பலாத்காரஞ் செய்து பிடித்துப் பெட்டியில் அடைக்கையில் கோபத்தினால் மிகவும் பெருமூச்செறிகின்ற லர்ப்பம்போல் பெருமூச்செறிந்தனன். ராமன் கண்களினின்றும் நீர் இடைவிடின்றி வேகத்துடன்வெருகா நிற்க பக்கத்தி லிருக்கின்ற லக்ஷ்மணனைனைப் பார்த்துப் புலம்பத் தொடங்கினான்: 'லக்ஷ்மண! ராக்ஷஸன் கொண்டு போனகாலை, வீதை தன் சரீரத்தினின்றும் வாங்கி வீசி யெறிந்த இந்த உத்தரீயத்தையும் ஆபரணங்களையும் காண்பாயாக. வீதை, தான் அபஹரிக்கப்பட்டுப் போதுமென்பொழுது, இந்த ஆபரணங்களைப் பூமியில் பரக்கட்டிருப்பாள். இது பரம்பரையாய் வருகிறது. பூர்வத்தில் பற்றியே நினைவு எவ்வளவும் தொங்காமல் மூணியிருந்தாரும் போலவே இப்பொழுதும் புலப்படுகின்றன' என்றனன். ராமன் இவ்வாறு சொல்லுகையில் லக்ஷ்மணன் அவனைப் பார்த்து 'ராம, அபரது தோள்வளைகளை அறிகிலேன்; குண்டலங்களையும் அறியேன். நித்யமும் பாதங்களில் வந்தனஞ் செய்துகொண்டிருப்பதே யல்லாமல் அவரது சிலம்பு தண்டைகளை மாத்ரமே அறிவேன்' என்றனன். அப்பால் ராமன் தைர்யமுற்று லக்ஷ்மணனைப் பார்த்து 'லக்ஷ்மீவனே! பயங்கரமான உருவமுடைய ராக்ஷஸன் என் ப்ராணனைக் காட்டிலும் ப்ரியையாகிய என காதலியை எவ்விடத்திற்குக் கொண்டுபோகையில் நீ கண்டனை? சொல்வாயாக. எனக்கு இப்படிப்பட்ட மஹாவ்யஸனத்தை விளைவித்த அந்த ராக்ஷஸன் எங்கே வஸிப்பானோ அதையாயினும் சொல்வாயாக. அவன் நிமித்தமாக நான்

ஸமஸ்த ராக்ஷஸர்களையும் நாசமடைவிக்கின்றேன். அவன் ஸீதையை அபஹரித்து எனக்கு மிகவும் கோபத்தை உண்டாக்கினதைக்கால தர்ப்ரானன் முடிவைக்குத் தானே தன் ம்ருத்யுவின் வாயைத் திறந்து விட்டனன். கபிரத்நனே! எனக்கு மிகவும் ப்ரீதிக்கிடமான பத்னியை அபஹரித்தவனும் பலாத்காரமாக எதிர்த்துக்கொன்றிருப்பவனுமான அந்த ராக்ஷஸனை எப்பக்கமுள்ள எவனே எங்கே இருக்கின்றானோ அவ்விடமெல்லாம் இப்பொழுதே எனக்குச் சொல்லவேண்டும். அவனை இப்பொழுதே யமபுரத்திற்கு அனுப்புகிறேன்' என்றனன். ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் இக்ஷ்வாகவம்சத்தைச் சேர்ந்தவனென்பதைக் குறிப்பிடுதல்.

ராமன் இக்ஷ்வாகவம்சத்தைச் சேர்ந்தவனென்பதை, வேதத்தை [illegible] ராக்ஷஸனை [illegible] உதாரணமாகக் கொண்டு [illegible] ராமனைப் பார்த்து ஹனுமான் [illegible]

I இங்கு ஸுக்ரீவன் தனக்கு ராவணன் வ்ருத்தாந்தம் ஒன்றுமே தெரியாதென்றனன். ஆதலை அவன் ஸீதையைத்தேடி வானராகளை அனுப்பும்பொழுது 'தீவ்பஸ்தஸ பாபஸ்ரேபாரே ஸுதர்யோஜநமயதஃ। அம்போமாலுமஹர்தேவைஸ்தமஸாமயிவம் ஸமந்ததஃ। ஸஹிதேஷு ஸ்துவியஸ்ய ராவணஸ்ய ஓராதமஃ। ராக்ஷஸாயிபதேர்வாஸஸ்ஸ ஹுஸ்ராக்ஷஸமதீயுதேஃ' (அந்த ஸமுத்ரத்திலுடைய மத்தகையில் நூறுயோஜனை தூரம் விஸ்தாரமுடையதும் மனிதர்களுக்கும் தேவதைகளுக்கும் புகக்கூடாததுமாகிய ஓர் தீவம் இருக்கின்றது. அதுமுழுவதும் தேடிப்பாருங்கள். அந்ததேசம் துஷ்டஸ்வபாவனும் தேவேந்திரனை நிகர்த்த தேஜஸ்ஸுடையவனும் ராக்ஷஸாதிபதியுமாகியராவணனுடையது) என்று அங்கு ஸுக்ரீவனுக்கு ராவணனுடைய இரு

பாபிஷ்டனுமாகிய அவனது ஸாமர்த்யமாவது பராக்ர

ப்பிடமும ஸாமர்த்யமும் பராக்ரமும் நன்கு தெரியுமென்று வெளியா கின்றது. இப்படியிருக்க அவன் ராமனைப்பார்த்து அவை யொன்றும் தனக்குத தெரியா தென்பது எப்படி யென்னில—இது தவறே ஆயினும் ஸுக்ரீவன் தன்காரியததை முதலில் ஈடததிக் கொளளும் பொருட்டு இஙஙனம் கூறினன். ஆனதுபற்றியே ராமன் பின்பு 'ஸுகரீவா! எவ்விடததிற்கு வீரதையை எடுத்துக்கொணடுபோகக் கண்டீர்?' என்று வினவினதற்குங்கூடமறுமொழிகூறவிலலை; ஏனெனில— 'அவள எடுபட்டுப்போகையில கண்டேன' என்று சொன்னால் தனக்கு அவளபோன இடஙகூட எபபடி தெரியாமற் போகும்? இஙஙனம் தெரிந்ததாக ஸுசனை செயததையுங்கூட மீளவும் வினவும்பொழுது சொன்னவனல்லன். இஙஙனம் தெரிநதும் சொலலா திருப்பின் ஆதியிலேயே மிதரதோஹஞ் செய்தவனென்று சொல்ல லாகாது. ஸுகரீவன் தீர்கக ஆலோசனையோடு தன்மனத்தில 'நான் ராவண வ்ருத்தாநதம் எனக்குத் தெரியுமென்று சொலலவேணடின், அப்பொழுது ராமன் பெரும் வ்யஸனத்தி லாழ்ந்திருகையால முத லிலேயே வீரதையைத் தேடவேணடு மென்பான். அது யுக்தமன் று. வானராகள் வாலிக்கு அதீனரா யிருககிறார்களேயன்றி எனகு உதபபடடவரல்லா. எப்படியாவது அவர்களில சிலரை வசப்படுத்திக் கொண்டாலும் ராவணனுடன் ஸ்நேஹம் பண்ணிக்கொண் டிருக்கி றவாலி நாம் விரும்பினபடி நடதத எப்படி பொறுத்திருப்பான். ஆகையால இருவர் காரயமும் பாழாய்விடும் என்று ஆலோசித்து மிகு ந்த மதியுடையோ லகையால் தெரியாதுபோல நடனஞ் செய்த னன். இப்படியாயின் பிறகு வானரார்களை அனுப்பும்பொழுது ஸுக் ரீவன் ராவணனைக்குறிதது சொலலும் வார்த்தைகளைப் பற்றி ராம னுக்குச சஙகை உண்டாகாதிருக்குமாவென்னில—தாரை லக்ஷ்மண னைத் தொன்னவார்த்தைகளைக் கேடடதலல் ராமனுககு அஙஙனம் சங்கை உண்டாக அவகாசமில்லை. அதாவது 'ஸுக்ரீவன் பூர்வத்தில் ராவணனுடைய ஸஙகதியை அறியான். பிறகு தாரையின்வார்த்தை களால் அறிந்தான்' என்று ராமனுக்கு மனத்தில் தோற்று மெனக. லக்ஷ்மணனைப்பார்த்துத் தாரை 'ஶதகோடி ஸஹஸ்ராணி ' லஙகாயா ங்கிலராக்ஷஸாஃ। அயுதாநிச ஷட்த்ரிஂஶத் ஸஹஸ்ராணி ஶதாநிச। அ ஹத்வா தாந் தூராயர்ஷாந் ராக்ஷஸாந்காமரூபிண: । நஸ்க்யோராவ.

மமரவது குலமரவது எனக்கு ஒன்றுமே தெரியாது. சத்

ருணு ஹந்து° யேஸுரானையில்லீஹ்ரதா' (ஸுகையில் நூறுயிரங் கோடி ராக்ஷஸர்கள இருக்கின்றனர். அவர்களெல்லோரையும் கொலலாமல ஸீதையை பெடுத்துக் கொண்டுபோன ராவணனைக் கொலல ஸாத்யமிலலை) எனறனன். மேலும் சகரவாளபர்வதம் வரையில் பூமிமுழுவதும திரிந்த ஸுக்ரீவனுககு அதனுளளிருக்கும் ராவணனுடைய இருப்பிடம் முதலியவை எப்படித தெரியா திருக்கும்? அநுமனம தெரிந்திருப்பதுபற்றியே ராமனது பலதைதப் பரீக்ஷிக்கும்பொழுது வாலி துந்துபி முதலானவர்களோடு எதிரிட்டதை ப்ரஸ்தாபிககும் ஸமயத்தில் வாலி ராவணண் ஜயித்த வ்ருத்தாந்தத்தை சொலலியிரு்கலை. ஆனால், ஸுக்ரீவனுக்கு அப்பொழுது தெரியாது, தாரை சொனனபிறகே தெரிவுமென்ன லாகாதோ? வென்னில்— தாரையைப்பாராத்தது முதலாகக காமவிகாரமகொண்டு மெய்ம்மறந்திருக்கும் ஸுக்ரீவன் தாரையோடு ராமகார்யத்தைகலந தாலோசிப்பதற்கு ப்ரஸகதியே நேரிட்டிராது. ஸுக்ரீவன்ஸர்வப்ரகாரத்தாலும் ராவணன்ஸகதி அறிபாலுபின் அப்பொழுது ஸீதையின் கூக்குரல முதலியவற்றால அவன போனதிகைகயாயினும் கனறுகத தெரிந்தமட்டும் அவஸ்யம் சொலலியிருபபான். இவ்வனம தெரிந்ததையுங் கூட சொலலாமையால மறறவையும் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே சொலலாதிருந்தானென்று ஊஹித்துககொளள. சிலர், ராவணனுடைய ஸ்தலதைத அறியேன்' என்பதற்கு இப்பொழுது ராவணனிருககுமிடம்தெரியாது என்று பொருளகொளள வேண்டுமென்பர். ஆனால் அது ஸரியன்று. ராமன் ஸாவப்ரகாரத்தாலும் ராவண வ்ருத்தாந்தம தெரியாமல் அவன் ஸ்வரூபம் கொஞ்சமாயினும் தெரியட்டுமென்னு மெண்ணததுடன ஸுக்ரீவனைப்பார்த்து 'அந்த ராக்ஷஸன் எங்கே வாஸமுசெயவான்' என்று வினவினன். அதற்கு ஸுக்ரீவன் தனககுததெரிந்த அளவும் சொலலாமல 'அவன் இப்பொழு திருக்குமிடம் எனககுத் தெரியாது' என்று மறுமொழி யுரைப்பது கபடமாகும். அவன எப்போதும வஸிததிருக்குமிடததை ராமன் வினவினனன்றி அப்பொழு திருககுமிடத்தை வினவவில்லை. ராவணனுடைய இருப்பிடம் மாத்ரம் தெரியிலும் அதை நாசஞ் செய்கையில் அவன் தானே இவ்விடம வருவானென்றன்றோ ராமனுக்குக் கருத்து. மேலும் ஸுக்ரீவனுக்கு அப்பொழுது ராவணனிருக்குமிடம் தெரியாமற்

போயினும் தனக்குத் தெரிந்திருக்கிற அவனுடைய ஸாமர்த்யபரா க்ரமங்களையாயினும் சொல்லவேண்டுமல்லவா? அவைகளையுங்கூடச சொல்லவில்லை 'ஸுக்ரீவனுக்கு ராவணனிருக்குமிடம் தெரிந திருக்குமாயின் அந்தத் திசைக்குமாத்ரமேவானராக்ள அனுப்புவானன்றி மற்றைத்திசைகளுக்குங்கூட அனுப்டுவாரே' என்னில அவன அந்தவானராகளைப்பாராத்து 'ராவணனையும் வீரதையையம இங்குமங்குத் தேடிப்பார்க்கவேண்டும' என்றுரைப்பது 'ராவணன வீரதையைக் கொண்டு வெகுகாலமானபடியால் அவன அந்த வீரதையை எங்கேனும் மறைத்து வைதிருப்பான்' எனறும் எண்ணதற்குடன பொன்னதாகக சொளளவேண்டு மாகையால இதறவும பொருந்து கின்றது. மற்றுஞ்சிலர் 'நஜாநேநிலயம்தஸ்ய ஸுகயிா டாபரகூளு.' என்று ஸர்வ விதத்திலும் அந்தப்பாபராகூஸனிருக்குமிடம் தெரியாதென்கையால் அவனிருக்குமிடம் எலலாவிதத்திலும் அழுழுதல நுணிவையிலதெரி யாது. ஏதோ சிலவிதமாகக தொந்தமே தெரியுமெனறும், இவ்வண்ணங்கொளகையால மேலஸுக்ரீவன தொந்தமராவணனுடைய ஸகதியைத் தெரிந்துகொண்டு சொலலுவதற்காடு விரோதமவாராதென்றும் சொலலுகின்றனர். இப்படியாயின் ஸுக்ரீவனபின்பு வானரர்களோடு ராவணனைக்குறித்து எவ்வளவுசொன்னலே அவ்வளவு முதலிலுங்கூட ராமரிடத்து சொலலியிருக்கவேண்டுமலலவா? அங்ஙனஞ் சொலலாமையால் இப்படியுங கூறலாகாது. மற்றுஞ்சிலர் 'ஒரு ஸம்வத்ஸரம் வரையில ராவணன் வீரதைக்குத தூயமம்விளைகா திருந்ததுபற்றி அவனுக்கு அவளைக கொணடுவநததறல பயன் இலலாமற் போயிற்று. ராவணன் தினந்தோறுமு சிவபூஜை செய்வது தான் விரும்பினதெலலாம் ஸுகமுடியபொருட்டே; அவன வீரதையைகைப் பற்றவிரும்பி அவனுக்கு அது கைகூடாதாயின் 'அவன் செயத சிவபூஜைவீணேமென்று நினைதது அந்தப் பூஜைக்கு வேறொரு பலனையாயினுங் கொடுப்பதறகாகத் தெய்வமே நின்று தடைசெயகையில ஸுக்ரீவனுக்கு ராவணனைபபற்றித் தெரிந்தும் தெரியாதுபோலவே யாயிற்று' என்பார்கள. நோனகாரணம் இருககையில அத்ருஷ்டத்தைக் காரணமாகக் கற்பித்துச சொலவது யுகதமனறு.பரதாரங்களைப்பட்டணருவது சிவபூஜாபலமென்பது நிரம்பவும அழகாயிருககின்றது; ஆகையால் ஸுக்ரீவன் ராவண வ்ருத்தாந்தந் தெரிந்தும் வேணடுமென்றே மறைத்தானென்பதே பொருந்துகின்றது.

ருக்கனையழிப்பவனே ! நீ சோகத்தை விடுவாயாக. இது ஸத்யம். ப்ரதிஞ்ஞை செய்கின்றேன். நீ ஸீதையைப் பெறும்படி தகுந்த ப்ரயத்னங்கள் செய்கின்றேன். நான் என்பெளருஷத்தினல் ராவணனைப் பரிவாரங்களோடுகூடக் கொன்று உனனை ஸகேதாஷப்படுத்தி உனக்குப்ரீதி உண்டாகும்படி சீக்ரத்தில் நடத்துகின்றேன். மனக்கனிப்பற்றிருந்தது போதும். உனக்கு ஸஹஜமாக உள்ளேயிருக்குந் தைர்யத்தை நினைத்து அதைக் கைபபற்றுவாயாக. உன்னைப்போன்றவர்க்கு இப்படிப்பட்ட [1] லாகவம் யுக்தமன்று. நான உனனைப்போலவே பார்யாவியோகம் அடைந்து மஹா வ்யஸனத்தில ஆழ்ந்திருக்கின்றனன். ஆனால் உன்னைப்போல் இபபடி துக்கிக்கவில்லை; தைர்யத்தையும் கைவிடவில்லை; நான் கேவலமான ஓர் வானரனேயாயினும் என் காதலியைக் குறித்து வருந்தாதிருக்கின்றேனே. இனி, மஹானுபாவன், பெரியோர்களிடம் சிக்ஷைபெற்றுத் தீர்கதிருப்பவன, தீரன்; இப்படிப்பட்ட நீ வருந்தலாகாதெனறு சொல்லவேண்டுமோ? கண்களினின்று பெருகிவருகினற நீரைத் தைர்யங்கொண்டு நிறுத்துவாயாக. வயவஸாயமுடையவர்க்கு என்றும் மாருதிருக்கும் மர்யாதையாகிய தைர்யத்தை நீ எள்ளளவும் துறக்கலாகாது. தைர்யமுடையவன், துக்கமாயினும் தனகாசமாயினும் ப்ராணத்தகாமான பயமாயினும் நேரிடினும் மனவருத்தமுறான். எவன் தெளிவில்லாதவனுகி எபபொழுதும் அதைர்யத்தைத் தொடாகதிருபபானே, அவன், பாரம் மிகுந்த ஓடம் ஜலத்தில் மூழ்குவதுபோல, ஸ்வாதீனந்தப்பிச் சோகத்தில மூழ்குவான. இதோ கான உனக்குக் கைகளைக் குவித்தனன். வேண்டினேனன. ஸ்நேஹத்தினல் உனனைத் தேற்றுகின்றேனன்றி வேறிலலை.

I. அற்பத்தனம்.

பௌருஷத்தைக் கைப்பற்றுவாயாக. சோகத்திற்கு இடங்கொடுக்கலாகாது. எவர் எப்பொழுதும் சோகத்தைக் கைப்பற்றியிருப்பார்களோ, அவர்களுக்கு ஸுகமே உண்டாகாது. மேலும், அவரது தேஜஸ்ஸும் க்ஷீணித்துப் போமாகையால் நீ சோகிப்பது யுக்தமன்று. ராஜேந்திரனே! எப்பொழுதும் சோகம் மேலெழப் பெற்றிருப்பவனுக்கு ப்ராண ஸம்சயங்கூட நேரிடும். ஆகையால் நீ சோகத்தை விடுவாயாக. தைர்யத்தையே கைப்பற்றுவாயாக. நான் ஸ்நேஹிதனாகி உனக்கு ஹிதஞ் சொல்லுகிறேனன்றிக் குருவைப்போல் உனக்கு உபதேசஞ் செய்யவில்லை. என் ஸ்நேஹத்தைக் கௌரவித்துக்கொண்டிருப்பது பற்றியாயினும் நீ என் வார்த்தையைக் கேட்டுச் சோகியாதிருக்க வேண்டும்' என்றனன். ஸுக்ரீவன் இங்ஙனம் இனிய உரைகளால் ஸமாதானப் படுத்துகையில் ராமன் கண்ணீர் தேய்ந்திருக்கும் முகத்தைத் வஸ்த்ரத்தின் நுனியால் துடைத்துக் கொண்டனன். ப்ரபுவாகிய ராமன் ஸுக்ரீவனது வார்த்தைகளால் தனக்கு எப்பொழுதுமுள்ள ஸ்வபாவத்தை எற்றுக்கொண்டு அவனைக் கட்டியணைத்து 'ஸுக்ரீவா! மித்ரனும் ஸ்நேஹிதனும் மேன்மையை விரும்புமவனாகிய ஒருவன் என் செய்யவேண்டுமோ அந்த ஸ்வார்த்தத்தை சொல்லுங் கார்யத்தை, நீ, உன ஸ்நேஹத்திற்குத் தகுதகபடியும் என் .வருத்தத்தைப் போக்கும்படியும் செய்தாய் கண்பனே! நீ என்னை ஸமாதானப்படுத்தினதால் இதோ நான் எனக்கு எப்பொழுதுமுள்ள தைர்யத்தைப் பெற்றனன். இப்படிப்பட்ட பந்து, விசேஷித்து இப்படிப்பட்ட ஆபத்காலத்தில் அகப்படுவது நிரம்பவும் அரிது. ஆனால் எனவெனில்—நீ, ஸீதை எங்கேயிருக்கிறாளென்பதையும், பயங்கரனும் துராத்மாவுமாகிய ராக்ஷஸன்

ராவணன் எங்கே இருக்கிறானென்பதையும் தெரியத் தேடும்பொருட்டு ப்ரயத்னஞ் செய்யவேண்டும். இனி நான் என்செய்யவேண்டுமோ அதை, என்னிடம் நம்பிக்கை வைத்துச் சொல்வாயாக. வர்ஷாகாலத்தில் கல்லு நிலத்தில் எல்லாம் பதிப்பதுபோல், நீ விரும்பும் ஸமஸ்தகார்யமும் எனனிடத்தில் கனறுக ஸித்திக்கும். வானரப்ரேஷ்டனே! நானும் இப்பொழுது அபிமானத்தினால் இந்த வார்த்தையை மொழிந்தேனல்லவா, இது யதார்த்தமே யென்று கெட்டியாக நினைத்துக் கொள்வாயாக. நான் இதுவரையில அபத்தஞ் சொன்னதும் இல்லை. இனி ஒருகாலும் சொல்வதும் இல்லை. நான் வாலியைக் கொல்லுகிறேனென்று இதோ ப்ரதிஜ்ஞை செயகின்றனன. உனக்காக இதோ ஸத்யத்தினமேல் ஆணையிடுகின்றேன' எனறனன். பின்பு ஸுக்ரீவனும் அவனது மந்த்ரிகளாகிய மற்றவர்களும், ராமன் சொன்னவார்த்தைகளையும் விசேஷித்து அவரசெய்த ப்ரதிஜ்ஞையையும் கேட்டு மிகவும் ஸந்தோஷமுற்றனர். இங்ஙனம் அந்த ராமனுமஸுக்ரீவனும் ஏகாந்தத்தில் ஸ்நேஹஞ் செய்துகொண்டு பிறகு ஒருவர்க்கொருவர் ஸமமான தத்தமது துக்கங்களைச் சொல்லிக்கொண்டனர். வானரப்ரேஷ்டனுகிய அந்த ஸுக்ரீவன கல்ல அறிவுடையவனுகையால் மஹானுபாவனுகிய புருஷப்ரேஷ்டன் ராமன் சொன்னவார்த்தையைக் கேட்டு அப்பொழுது தன் காரியம் நிறைவேறினாற்போலவே மனத்தில் நினைத்துக்கொண்டான். ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் தன்சோகத்திற் காரணத்தை ராமனுக்குத் தெரிவித்தல்.

ஸுக்ரீவன், ராமன்சொன்ன அந்தவார்த்தையைக் கேட்டு மிகவும் ஸந்தோஷப்பட்டு லக்ஷ்மணனுக்கு முன்னிலையில் ராமனைப் பார்த்து, ராஜயோக்யங்களான சௌர்யம் தைர்யம் முதலிய ஸமஸ்தகுணங்களும் அமைந்திருக்கிற நீ எனக்கு ஸகாயமாகக் கிடைத்தனையால் நான் எல்லாவிதத்திலும் தேவதைகளுடைய தயைக்குப் பாத்ரமாயினன். இதற்கு ஸந்தேஹமில்லை. ராமா! நீ ஸந்தோஷஸ்வபாவனே! உன்னைப்போன்றவன ஸஹாயமாயிருக்கையில், தேவராஜ்யமேயாயினும பெறஸாத்யமேபல்லவா? ப்ரபூ! இனி என் கபிராஜ்யத்தைப் பெறுவதுபற்றிச் சொல்லவேண்டியதேமோ? எனக்கு ராஜ்யம்சத்தில் பிறந்ததாரைருவர அக்னிஸாக்ஷிகமாக மித்ரமாகக் கிடைத்திருக்கிற ராகையால், நான பகதுக்களுக்கும் ஸ்நேஹிதர்களுக்கும் பூஜிக்கத் தகுந்தவனாயினன். காணும், உனக்குத்தகுந்த மித்ரனாயினனனறு நீ க்ரமக்ரமமாகத் தெரிந்துகொள்வாய. என்னிடமுள்ள குணங்களை நானே சொலலிக்கொள்வதற்குமாத்ரம் நான் ஸமர்த்தனல்லேன். மஹாஜனபாவர்களும் தீரகதமதியுடையவர்களுமான உன்னைப் போனறவர்களுக்கு உண்டாகும் ப்ரீதி, ஆத்மஜ்ஞானிக்கு உண்டாகும் தைர்யமேபோல் அதிசயித்து நிச்சலமாயிருக்கும். நட்புடையவர்கள், ஒருவர்க்கொருவருடைய வெள்ளி பொன் ஆடை ஆபரணம் முதலியவற்றைத் தமக்கு எல்லாம் ஒனறெனறே நினைப்பார்களன்றி எவனலைத்து யாருடையதென்று பேதம் பாராட்டமாட்டார்கள். தனமுடையோரையினும் தரித்ரரையினும் துயாமுற்றவரையினும் ஸுகித்திருப்பவரையினும் தோஷமுடையவரையினும் நிர்த்தோஷரையினும் மித்ர

னே பாமகதி. ஸ்நேஹிதர்கள் தமக்குத் தகுந்த உத்தம மான ஸ்நேஹத்தைக் காண்பார்களாயின், அப்படிப் பட்ட ஸ்நேஹ முடை யவன் நிமித்தமாகத் தனத்தையா யினும் ஸுகத்தையாயினும் தேஹத்தையாயினும் விடு வார்கள்' என்றனன். ராமன், புத்தியுடையவனும் காந்தி யால் இந்த்ரன்போன்றவனுமாகிய லக்ஷ்மணனுக்கு எதி ரில் ப்ரியமுரைப்பவனாகிய ஸுகரீவனைப்பார்த்து 'நீ சொ ன்னது ஸரி' என்றனன். பிறகு ஸுக்ரீவன், ராமனும் லக்ஷ்மணனும் நின்றுகொண்டிருப்பது கண்டி ஸீதை யொனறுக்காக அடவியில் சுற்றுமுழும் தன் கண்களைச் செலுத்தி உற்றுப்பார்த்தனன். பிறகு அச்சக் கபிராஜன் அருகில் தனக்கு புஷ்பித்துத் தளிர் அதிகமாகவும் இலை கள் கொஞ்சமாகவும் உடையதாய் வண்டினால் அலங் கரிக்கப் பட்ட ஓர் வருக்ஷத்தைக் கண்டனன். ஸுக் ரீவன் அதை வ்ருக்ஷத்தில் தளிர் மிகுந்திருப்பதும் கன்று புஷ்பித்திருபபதுமாகிய ஓர் கிளையை முறித்து அதைப் பரப்பி ராமனும் தானுமாக அதில் உட்கார்த் தனன். அனந்தரம் அவர்களிருவரும் உட்காரந்திருப்பது கண்டு ஹனுமான், லக்ஷ்மண விஷயத்தால் அதைக் கிளை யின்மேல் உட்காரமையால் தான் மறுமுருமரத்தின் கிளையை முறித்து அவரை உட்கார்வைத்தனன். பிறகு பழங்களும புஷ்பங்களும் நிறைந்திருக்கிற அதைச் சிறந்த பர்வதத்தினமேல் ஸுகமாயுட்கார்ந்து ஸுமித்ரம்போல் கம்பீரமாகவும் அழகாகவும் விளங்குகின்ற ராமனைப் பார்த்து மெதுவும் இனியதுமாகிய வாகயத்துடன் ஸந் தோஷத்தினால் வார்த்தைகள் தழுதழுகபபெற்று 'என் தமையன ஸீதை வஞ்சித்து எனபாரியையை அபஹரித் துக் கொள்கையில் மிகவும் வருந்திப் பயத்தினால் பீடிக் கப்பட்டவனாகி, இந்த ரூப்ய முகபர்வதத்தில் திரிகின்று

ணன். ராமா! என் தமையன் வாலி என்னை வஞ்சித்து என்மேலு வைரங்கொண்டிருப்பதுபற்றிப் பயமுற்று மனத்தில நிக்ப்ரமங் கொண்டு ஓன்றும் தோன்றுமல் இங்கு வாலஞ்செய்கின்றனன். ராமா! நீ ஸர்வலோகங்களுக்கும் அபயங் கொடுப்பவன், ஆகையால் எனக்கும் அபயங் கொடுக்க வேண்டியவனே. வாலிபபத்திரல் பீடிக்கப்பட்டு அநாதனை யிருக்கினற எனனிடத்திலும் விசேஷித்து ஸ்நேஹ முடையவ னாகையால அனுக்ரஹஞ் செய்யவேண்டும்' எனறனன். மஹா தேஜஸ்ஸுடன் ப்ரகாசிக்கின்றவனும் தர்மஜ்ஞனுமு தர்மவத்ஸலனுமாகிய ராமன், ஸுக்ரீவன் அங்ஙனஞ் சொல்லக்கேட்டு 'நான் ப்ரதிஜ்ஞை செய்திருகையில் மீளவும் வேண்டுகின்றனே' எனறு புனனகைசெய்துகொண்டு அவனைப்பார்த்து 'உபகாரஞ்செய்தலே மித்ரனுயிருத்தலுக்குப் பலன். அபகாரஞ்செய்தல் சத்ருவுக்கு லக்ஷணம். ஆகையால் உன்பாயையை அபஹரித்த அதத வாலியை இப்பொழுதே வதித்துவிதிகிறேன. இதோ என் பாணங்களைக்காண்பாயாக. மிகுத வேகழுடையவைகளும் இறகுகளோடுகூடி மிகவும் தீக்ஷணமாக ப்ரகாசிபபவைகளுமாகிய இதப் பாணங்கள் சரவணதில பிறத்தன. ஸ்வர்ணத்திலை அலங்காரஞ் செய்யப்பட்டுக் கழுகின் இறகுகளால் மறைக்கப்பட்டவைகளும் மஹாதத்ரனது வஜ்ராயுதத்தை நிகர்த்துச் சிறதத கணுக்களும் அமைத்து கூரான நுனியுடன் கூடிச் சினத்த ஸர்ப்பங்கள்போல் ப்ரகாசிக்கினறனவே. அண்ணனென்னும் பேரோடுகூடிப் பகைவனாகி உனக்கு இவ்வளவு பாபகாயத்தைச் செய்த வாலி இனி என் கூரான பாணங்களால் அடிக்கப்பட்டவனாகிப் பிளக்கப்பட்ட பர்வதம்போல் கீழே விழப்போகின்றான்' என்றனன். வானர ஸைனதிபதியாகிய ஸுக்ரீவன், ராமன்

சொன்னதுகேட்டு நிகரில்லாத ஸந்தோஷம் அடைந்து 'கல்லது கல்லது' என்று கொண்டாடினன். 'ராமா! நான் சோகத்தினல் மிகவும் பீடிக்கப்பட்டிருக்கின்றனன். நீயோ, சோகத்தினல் பீடிக்கப்பட்டவர்களுக்குக் கதியாயிருக்கின்றனை. நீ என்னைப்போன்றவனுக்குத் திக்காயிருப்பதுபற்றியே யன்றி நான் உனக்கு நண்பனையிருப்பது பற்றியும் உன்னிடம் என் துக்கங்களை முறையிடுகின்றேன். நீ கைகொடுத்து அக்னி ஸாக்ஷிகமாக எனக்கு ஸ்நேஹிதனை யல்லவா? ஆகையால் நீ எனக்கு ப்ராணக் காட்டிலும் மேலாயினை. இதற்கு வேண்டுமானல் ஸத்யத்தின்மேலுங்கூட ஆணையிடுகின்றனன். மேலும், நீ எனக்கு ஸ்நேஹிதனையிருப்பதுபற்றி, உள்ளபடியிருந்துகொண்டு என்றும் எனமனத்தை உருக்கி உண்கின்ற துக்கத்தை உன்னுடன் நம்பிக்கையோடு புலம்புகின்றேன்' என்றனன். அந்த ஸுக்ரீவன் இவ்வளவுமாத்ரம் சொல்லிக் கண்களில் நீரைப் பெருக்கி அதன் வேகத்தினல் வார்த்தைகள் தழுதழுக்கப்பெற்று உரக்கச் சொல்லமுடியாதிருந்தனன். ஸுக்ரீவன் நதிப்ரவாஹம்போல் பெருகிவருகின்ற கண்ணீர்ப் பெருக்கை, ராமனது முன்னிலையில் தைர்யத்தை அடைந்து உடனே அடக்கிக் கொண்டனன். மிகவும் தேஜஸ்வியாகிய ஸுக்ரீவன், அங்ஙனம் வந்த கண்ணீரை அடக்கி அழகிய கண்களைத் துடைத்துப் பெருமூச்செறிந்துகொண்டு ராமனைப்பார்த்து 'ராமா! முன்பு பலிஷ்டனாகிய வாலி என்னை பௌரவாஜ்யத்தினின்று தொலைத்து க்ரூரவாக்யங்களைச் சொல்லி ராஜ்யத்தினின்று தூரத்தி விட்டனன். மேலும் அவன், என் ப்ராணன்களைக் காட்டிலும் மேலான என் ப்ராண தாயகியையும் அபஹரித்தனன். என் ஸ்நேஹிதர்களையுங்கூடச் சிறையில் அடைத்துவிட்டனன். ராமா!

அவன் மிகவும் கொடியமனத்துடன் என்னைக் கொல்வ
தற்காக ப்ரயத்னங்கள் செய்துகொண்டிருக்கின்றனன்.
அவன் அனுப்பின வானரர்கள் பலரையும் நான் அடித்
திருக்கின்றேன். ராமா! நான வாலி யனுப்பினனென்
னும் சங்கையால் பரமகாருணிகனான உனைனப் பார்த்த
பொழுதும் பயப்பட்டு உன்னிடம் வரவில்லை. பயத்திற்குக்
காரணம் உன்னபொழுது எல்லோரும் பயப்படுவார்களல்
லவா? எனக்கு இக்ஷ்வாகுமன்னர் முதலானவர்கள் மாத்
ரமே ஸஹாயமன்றி மற்றெவரும் இலரே. இவ்வாறு ஸஹா
யத்தைத்தடுத்தியே னான இவ்வளவு கஷ்டத்தை அனைத்
தும் சரீரத்தில் ப்ராணனை வைத்துகொண்டிருக்
கின்றேன். இந்த வானரர்கள் என்மேல் மிகுந்த ஸ்நே
ஹமுடையவராகி எனதினை எல்லாவற்றினின்றும் காப்
பாற்றிக் கொண்டிருக்கின்றனர். நான் எவ்விடம்
போகுமெண்ணினும் நீயும் லக்ஷ்மணனும் கூடவே வருவார்கள். நான்
எவ்விடத்திலிருப்பினும் நானும் அவ்விடத்திலேயே
இருப்பார்கள். ராமா! உன்தேரை ஆயிரம்படைத்திரள்வி
லென்? சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள். பராக்ரமத்
தில் புகழ் பெற்ற என் தகப்பன் எனக்குப் பலகலன்.
அவன் முதுகை அனவரதமே என் தூக்கம் தின்றும். எட்
டாகமும் ஜீவிதமும் கூட அவன் முடித்த பின்பே உண்
டாக வேண்டுமென்பதே பற்றி வேறொன்றில்லை.
இதுவே என துக்கத்திற்கு மூலம். துக்கத்தைப்
பொறுக்க முடியாமல் உனக்குச் சொல்லிக் கொண்
டேன். ஏனென்னில்—துக்கித் திருப்பினும் ஸுகித்
திருப்பினும் மித்ரனுக்கு மித்ரனே எப்பொழுதும் கதி
என்றனன். ராமன், ஸுக்ரீவன் சொன்னதைக்கேட்டு
அவனைநோக்கி 'உனக்கும் வாலிக்கும் எந்தக் காரணத்தில்
வைரம் உண்டாயிற்று? உள்ளதை உள்ளபடியே கேட்க

விரும்புகின்றனன். லக்ஷ்மண! வைதேஹிக்குக் காரணத்தைக் கேட்டுப் பிறகு வைரம் பலீயல்லவா அதன்காரணம் பலீயல்லவா என்று அவ்விரண்டுடன் பலாபலத்தை விசாரித்துப் பின்பு உனக்கு லக்ஷ்மம் விளையுமாறு கடத்துகினேறன். வாலி உன்னை அவமானித்ததுகேட்டவுடனே, வர்ஷாகாலத்து ஜலப்ரவாஹம்போல் மிகவும் பலீயல்லான கோபம் உண்டாகி என் ஹ்ருதயத்தைத் தடுமாற்றுறச் செய்துகொண்டிருக்கின்றது. நீ லக்ஷ்மணாக்ரஜரிற்கும் கம்பிகையுடன் சொல்லுவாயாக. வாலி தொலைந்த பின்பும் உனக்கு என் மனவருத்தம். 'வாலி இன்னும் தொலையவில்லையே' என்கிறபோது சோகம் என் தலையில் சாஷாத் பாணத்தைப் ப்ரயோகித்ததும் உனாசத்ருவாகிய வாலி தொலைந்தாற்போலவேதான். ஆகையால் நீ லக்ஷ்மணனுடன் கம்பிக்கையுடன் எனக்குச் சொல்லுவாயாக. 'க்ரமத்தில் சொல்லுகிறேனென்றாயே! ராஜ்யம் பண்டிதனே! உன் பாஷையில் முழுதும் விளங்கவில்லை. விளங்கச் சொல்லுவாயாக' என்றனன். மறுபடியும் ராமன் இங்ஙனம் சொல்லுகையில், லக்ஷ்மணன் அவன்மந்த்ரிகள் தான்கு வானரர்களும் தானுமாகப் ப்ரமலக்ஷ்மாஷம் அடைந்தனன். அனந்தரம் லக்ஷ்மணன் ப்ரமலக்ஷ்மாஷமுற்று லக்ஷ்மணனுக்குத் தமையனாகிய ராமனுக்கு வைகாரணத்தை யெல்லாம் உள்ளபடி சொல்லத்தொடங்கினன். எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வாலி தனக்குச் செய்த அபராதங்களை ஸுக்ரீவன், ராமனுக்குச் சொல்லுதல். }

முன்பு சத்ருக்களை உருமாய்க்கவல்ல என் தமையனுகியவாலியை, என் தந்தை மிகவும் கௌரவித்துக்கொண்டிருந்தனர். நானும் அப்படியே கௌரவித்துக்கொண்டிருந்

க்தனன். என் தந்தை மரணம் அடைந்த பின்பு மந்திரிகள் மூத்த குமாரனென்று வாலியை, வானராராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ் செய்தனர். அந்த வாலி, தந்தை பாட்டன் காலத்தினின்றுவந்த பெரிய வானராராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டு வருகையில், நான் அவனுக்கு ஸமஸ்த காலங்களிலும் லக்ஷ்மணன்போல் வணக்கமுற்றிருந்தனன். துந்துபியின் ஜ்யேஷ்ட குமாரன் மாயாவியென்னும் மஹா பராக்ரமசாலியாகிய ராக்ஷஸனொருவன் இருந்தனன். அவனுக்கும் வாலிக்கும் ஸ்த்ரீநிமித்தமாகப் பெரும் வைரம் உண்டாயிற்று. இது உலகமெங்கும் ப்ரஸித்தமான வ்ருத்தாந்தம். அந்த மாயாவி, ஒருநாள் எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது அர்த்தராத்திரியில் கிஷ்கிந்தா த்வாரத்திற்கு வந்து மிகவும் விஜ்ரும்பணஞ் செய்து கர்ஜ்ஜித்துகொண்டு வாலியை யுத்தத்திற்கு அழைத்தனன். அப்பொழுது நித்ரைசெய்கின்ற எனதண்ணன் பயங்கரமான அவனது கர்ஜன த்வனியைக்கேட்டு அதைப் பொறுக்கமுடியாமல் அப்பொழுது வேகமாகவெளிப்புறப்பட்டனன். பிறகு ஸ்த்ரீகளும் நானும் வணக்கத்துடன் எவ்வளவு தடுத்தபோதிலும் நிற்காமல வாலி, கோபத்தினால் அஸுரஸ்ரேஷ்டனாகிய அந்த மாயாவியை வதிக்கும் பொருட்டு புறப்பட்டனன். மஹா பலசாலியாகிய அவ்வாலி எங்களெல்லோரையும் உதறிக்கொண்டு யுத்தத்திற்குப் போயினன். பிறகு நானும் ஸ்நேஹத்தினால் அவனுக்கு ஜன்றியாகப் போவதைப் பொறுக்கமாட்டாமல் அவனைப் பின்தொடர்ந்து போனேன். பிறகு எனதண்ணனும், தூரத்தில நானும் வருவதை அவ்வஸுரன், கண்டு பயப்பட்டு அதிவேகத்துடன் அங்கிருந்து ஓடிப் போயினன். அவன் அஞ்சியோடுகையில், நாங்களும் அவனைக் காட்டிலும் வேகமாகப் பின்தொடர்ந்தோம்.

அப்பொழுது சுத்ரன் உதயமாய்க்கொண்டிருந்தனன். அ தனல் மார்க்கமும் வெளிச்சமாயிருந்தது. அந்த ராக்ஷஸ ன் பூமியில் புத்களால் மூடப்பட்டிப்புகக்கூடாதிருக்கிறஓர் ம்லுரபிலத்தில் வேகமாகப் போய்ப்புகுந்தனன். தாங்களி ருவரும் அந்தப் பிலத்வாரத்தின் ஸமீபத்தில் சேர்ந்தனம். வாலி, பகைவன் அம்மஹாபிலத்தில் புகுவதுகண்டு கோ பத்திற்கானாகி இந்தியங்களெல்லாங் கலன்கப்பெற்று அ ப்பொழுது என்னை 'ஸுக்ரீவ! தான் இந்தப் பிலத்திற்கு ள் புகுந்து சீக்ரத்தில் பகைவனைக்கொன்று வரும் வரை யில் நீ மனவுக்கத்துடன் இதப்பிலத்தின வாயலிலேயே இருப்பாயாக' எனறனன். தான இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பரத்தபறகிய அவனை, தாணும் கூட வரும்படி எவ்வளவு வேண்டிக்கொண்ட போதிலும் அவன் கேளா மல் என்னுல் தன் பாதங்களின்மேல் ஆணையிடுவித்துக் கொண்டு அம்மஹாபிலத்தில ப்ரவேசித்தனன். அவன் அம்மஹாபிலத்தில் ப்ரவேசித்தபின்பு குறைவின்றி ஓரு ஸம்வத்ஸரம் ஆயிற்று. தான் பிலத்வாரத்தில அந்த ஸம் வத்ஸரம் முழுவதும் காத்துக்கொண்டிருந்தனன். அவ ன் அந்த ஸம்வத்ஸரம் முழுமையும் எனக்குப் புலப்படா மையால் ஸ்நேஹத்தைப்பற்றி எனக்கு மிகவும் மனப் பரிவு உண்டாயிற்று. அண்ணனும் புலப்படவில்லை. ஆகை யால் என் மனத்தில் மரணம் அடைந்தானே என்று ஸம் சயம் உண்டாயிற்று அனந்தரம் தெரிதான் சென்றபின்பு அந்தப் பிலத்தினின்று நுரையுடன் கூடிச் சிவந்த ரக்தம் வெளிப்பட்டது. தான் அதைக்கண்டு மிகவும வருத்தமுற் றவனுயினன். அனந்தரம் அஸுரர்கள் கர்ஜிக்கும் த்வனி யும் யுத்தத்தில் தோல்வியடைந்து என் தமையன் முறை யிடும் த்வனியும் எனக்குச் செவிப்பட்டன. கண்பனே! தான் இந்த மரணகாலத்தின் சிஹ்னங்களால் என் தமை

யன் வாலி அவர்களால் அடிபட்டு முடிந்தானென்று புத்தியிற்கொண்டு மலைபோன்ற ஓர் பாறையால் அந்தப்பிலத் வாரத்தை மூடிவிட்டு வருத்தத்தினல் பரிதபித்துக்கொண்டு ஜலதர்ப்பணஞ் செய்து கிஷ்கிந்தைக்கு வந்தனன். தான் யதார்த்தத்தை மறைத்துக்கொண்டேயிருப்பினும், மந்திரிகள் பல ப்ரயத்னங்களால் என்னிடமிருந்து நிஜமாக வாலி மரணத்தைத் தெரிந்துகொண்டனர். அனந்தரம் மந்திரிகள் எல்லோரும் கூடி ஸம்மதியுடன் எனக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தனர். ராமா ! நான இங்ஙனம் ந்யாயத்தினபடி ராஜ்யத்தைப் பரிபாலித்துக் கொண்டிருக்கையில், வாலியும் தன சத்ருவாகிய அந்த அஸுர ஸ்ரேஷ்டனை மாயாவியைக் கொன்று வெளிவந்தனன். வாலி, பட்டாபிஷேகம் பெற்று ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கிற எனவிணபபார்த்தவுடனே கோபித்துக்கண்கள் சிவக்கப் பெற்று என மந்திரிகளைப பத்தனஞ் செய்து என்னைப் பார்த்துப் பருஷ வசனங்களைச் சொல்வினன். ராமா ! அப்பொழுது நான் மந்திரிமுதலியவர்களோடும் ஸைன்யங்களோடுங் கூடியிருப்பதலை பாபிஷ்டனாகிய வாலியை சிக்ரஹஞ் செய்ய வல்லவனாயிருந்தும் அண்ணனென்னும் கௌரவத்திற்கு உட்பட்டு என புத்தி சிக்ரஹஞ் செய்யப் பொறுக்கவில்லை. அப்பொழுது மஹாதேமாவாகிய எனதண்ணன் பகைவனைக் கொன்று பட்டணத்தில் புகுந்தவுடனே நான நயாயத்தின்படி அவனைக் கௌரவித்து நமஸ்காரஞ் செய்தனன. அந்த வாலி அதற்கு மனத்தில் ஸந்தோஷமுற்று எனக்கு ஆசீர்வாதமுங்கூடச் செய்யவில்லை. ப்ரபூ! பிறகு நான் மீளவும் என் கிரீடம் அவனது அடிகளில் பட ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தனன். அப்பொழுதும் வாலிக்கு என்மேல் கோபத்தினல் அனுக்ரஹம் உண்டாகவில்லை'. ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் வாலியை வேண்டிக்கொள்ளலும், வாலி தயைபாராமல் ஸுக்ரீவனை நிக்ரஹஞ் செயதலும்.

'அனந்தரம் வாலி, மிகவும் கோபம் மேலெழப் பெற்றுப் பரபரப்புடன் வருவதுகண்டு, தான் அவனை ஸதேதரஷப் படுத்தவேண்டுமென்னும் எண்ணத்தினல் அவனைத் தெளிவுறச் செப்யும்பொருட்டு 'அத்ருஷ்டத்தினல் நீ க்ஷேமமாக வந்தனை. சத்ருவையுங்கூட வதித்தனை. நீ அநாதர்கள் அனைவரையும் ஸந்தோஷப் படுத்துக தன்மையன். அநாதனுகிய எனக்கும் நீ யொருவனேயன்றோ காதன். பல கம்பிகளிடம்பெற்று உதயமான பூர்ணசந்திரன் போல விளங்குகின்ற இந்த வெண்கொற்றக்குடையை எடுத்து உனக்குப் பிடிக்கின்றனன். இதந்தச் சாமரங்களையும் வீசுகின்றனன். அங்கீகரிப்பாயாக. ராஜனே! கன் பிலத்வாரத்தில் ஒருஸம்வத்ஸரம் காத்திருந்தனன. இவ்வளவேபன்றி நீ வராமற்போனதுடன் அதுப் பிலத்வாரத்தினின்று ரக்தமும் வெளிப்படுவதுகண்டு வருத்தமுற்றவனுயினன். அனந்தரம் கான் துக்கத்தினல் மனம் நடுங்கவும் இந்த்ரியங்கள் மிகவும் கலங்கவும் பெற்று நீ பார்த்தபடியே பிலத்வாரத்தை ஓர் பர்வத சிகரத்தால் மூடி, அங்கிருந்து புறப்பட்டு வந்து கிஷ்கிந்தாபுரஞ் சேர்ந்தனன். பட்டணத்து ஜனங்களும் மந்த்ரிகளும் வதனென்னைப் பார்த்து ராஜ்யம் கெட்டுப்போமென்னும் வருத்தத்தினல் எனக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார்களேயன்றி கான் ஜீவண்டவில்லை. ஓருக்கால் இதில எனமேல் தப்பிருப்பினும் நீ பொறுக்கவேண்டும். நீயே ராஜன்; பூஜ்யத்தகுந்தவன். நான் முன்போலவே இளவரசையிருந்து உன்னை பணிந்து வருகின்றனன். ஆனல் இதுவரையில் நீ இல்லாமையால் நான ராஜாவாயிருந்து ராஜ்யத்தைப் பாதுகாத்து வந்தேனன்றி வேறில்லை. இந்த ராஜ்யம் எ

ன்னிடம் காப்பாற்றும்படி வைக்கப்பட்டிருந்ததாகவே எண்ணி நான் மந்திகளோடும் பட்டணத்து ஜனங்களோடும் பட்டணத்தோடுங்கூட இந்த ராஜ்யத்தை இது வரையில் கண்டகமோனமுமில்லாதிருக்கும்படி காப்பாற்றி வந்தனன். மீளவும் உன் மொத்தை உனக்கே ஒப்புவிக்கின்றனன். சத்ருக்களையடக்கும் வீரனுமிருக்கின்றனன்; மேலும், கலியற்றகையுடையவன்; ராஜன்; என்மேல் கோபஞ் செய்பவனன்றாம். உனதினைத் தலைவணங்கி நமஸ்கரித்து மண்ணிக்கின்றனன். இதோ உனக்குக் கைகூப்பினன். மந்திகளும் பட்டணத்து ஜனங்களும் ஒன்றுகூடித்தோசம் ராஜனில்லாதிருப்பதைத் தொலைக்கவேண்டுமென்னும் விருப்பத்துடன் பலாத்காரமாக என்னை ராஜாவாகச் செய்தார்களேயன்றி நானுக விரும்பிச் செய்யவும் இல்லை. என் அங்கீகாரத்தை எதிர்பார்த்தும் செயலில்லை' என்று மொழிந்தனன். நான் இவ்வளவுதூரம் இப்படி ஸ்நேஹமாய்ங்குமாறு சொல்லிக்கொண்டிருப்பினும் எனதினை அதட்டிச் சினென்று வைது, மேலும் சொலலக்கூடாத அததத வார்த்தைகளைச் சொல்லினன். மேலும், அவன் பட்டணத்து ஜனங்களையும தனக்கு வேண்டின மந்திகளையும் வரவழைத்து ஸ்நேஹமில்லாதவனிடையில் எனதினைக்குறித்து அவர்களோடு மிகவும் நிந்தைக்கிடமான வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கி 'ஓருகால் ராத்ரிக்ரூரனும் மிகவும் துர்ப்புத்தியுமாகிய மஹாராக்ஷஸன் மாயாவியென்பவன் யுத்தம் விரும்பி என்னை அழைத்தஸங்கதி உங்களுக்குத தெரியுமல்லவா! அவன் அங்ஙனம் கூப்பிட்டது கேட்டு நான் பட்டணத்தினின்று புறப்பட்டனன். அனந்தரம மிகவும் பயங்கரனாகிய என் தம்பி இவனும் என்பின்னேவந்தனன். மஹாபலனாகிய அந்த மாயாவி, அன்றிரவு நானும் மற்றொருவனும் தன்மேல் வருவது

கண்டு பயந்து ஓடிப்போயினன். சுக்ரனும் அவனைப் பின் தொடர்ந்து ஓடினான். சுங்கள் இருவரும் பின் தொடர்கையில், அவன் வேகமாக ஓர் மஹாபிலத்தில் நுழைந்தனன். அவனை அந்நாளம் மிகவும் பயங்கரமாகி மிகப்பிரகாசிருக்கும் அத்தப் பிலத்தில் புகுவதுகண்டு கோடிய எண்ணங்கொண்ட என் தம்பி பாகிய இவனைப்பார்த்து 'நான் இந்த அஸுரனைக்கொல்லாமல் இங்கிருந்து பட்டணம் போகப்போறன். ஆகையால் நான் கொன்று திரும்பிவரும் வரையில், இந்தப் பிலத்வாரத்தில் காத்திருப்பாயாக' என்று மொழிந்தனன். இவன் வாசலில் காத்திருக்கிறு னென்று தினைந்தே நான், புகழுடபாத அந்தப் பெரும்பிலத்தில் புகுந்தனன். உடனே அந்த அஸுரனைத் தேடிக்கொண்டிருக்கையில் ஒரு ஸம்வத்ஸரம் கடந்தது. அனந்தரம் பயங்கரமாகிய அந்தச் சத்ருவைக் குப் புலப்பட்டனை. அவனையும் அவனது பந்துக்களையும் நான் ப்ரயாஸமினறியே அவனிடம் கொன்றனன. அந்தப் பூமியின் விவரத்தில் என் அடிக்குப் பொறுமல் அந்த மாயாவி கூச்சலிட்டுக் கொண்டிருக்கையில் அப்பொழுது அவனது முகத்தினின்று ரக்தம் ப்ரவாஹம் போல்பெருகி அந்தப்பிலம் முழுவதும் சிரம்புகையில் அதிலிருக்க அஸாத்யமாயிருந்தது. நான பராக்ரமமுடைய அந்தத்துந்துபிகுமாரனாகியமாயாவியைக்கொன்று அந்தப்பிலத்தி னின்று வெளிப்பட்டுவர யத்னிக்கையில் அதன் த்வாரம் மூடப்பட்டிருக்கையால் மிகவும் வருத்தமுற்றவனாயினன். பிறகு நான் காலால் பலவாறு உதைத்து அந்தப்பிலத்தின் த்வாரத்தில் மூடியிருந்த கல்லை உடைத்தனன். அனந்தரம் நான அந்தவழியாக வெளியேவந்து முன்போலவே இவ்விடம் சேர்ந்தனன். க்ரூரமாகிய இந்த ஸுக்ரீவன் தனக்கு ராஜ்யம் வேண்டுமென்று விரும்பி

உடன்பிறந்தவனிடத்தில் ஸ்நேஹத்தையும்மறந்து அந்தப் பிலத்தினின்று என்னை வெளிவரவொட்டாதபடி தடைசெய்தான்' என்றனன். வாலி இங்ஙனம் ஸ்நேஹிதர்களிடையிற் சொல்லி அப்பொழுது என்னைக் கொஞ்சமாயினும் சங்கையின்றி ஒரு வஸ்த்ரத்துடன் ஊரினின்றுந்துரத்திவிட்டனன. ராமா! அவன் என்னை அடித்து என் பார்யையையுங்கூட அபஹரித்தனன். நான் வாலி பயத்தினாலேயே இந்தப் பூமியெல்லாவற்றிலும் இதிலுள்ள ஸமுத்ரங்களிலும் எல்லா வனங்களிலும் திரிந்தனன். அங்ஙனம் பார்யை அபஹரிக்கப்பட்டதற்கு வருந்தி நான் மற்றொரு காரணத்தைப்பற்றி வாலிக்குப் புகக்கூடாத இந்த ரும்யமுகபர்வதத்தில் இருக்கின்றனன். ராமா! இந்த வைரவ்ருக்ஷம் பெரியது. எல்லாவற்றையும் உனக்குச் சொல்லினன. நான் எந்த அபராதமும் செய்யாதிருப்பினும் எனக்கு வ்யஸனம் நேரிட்டது காண்பாய். ராமா! நீ வீரன். ஸமஸ்த லோகங்களுக்கும் அபயங்கொடுப்பவன்; வாலியிடம் பயத்தினால் வருந்துகின்ற எனக்கு அவனை நிக்ரஹித்து அனுக்ரஹஞ் செய்யத் தகும்' என்றனன். ராமன் மிகவும் தேஜஸ்வி. மேலும் தர்மங்களையறிந்தவன்; ஆகையால் அவன், ஸுக்ரீவன் சொன்னதுகேட்டு முகத்தில் புன்னகை விளங்க அவனைப் பார்த்துத் தர்மம் அமைந்திருக்கும்படி 'வீணைகாதலைவகளும் ஸுரியன் போன்றவைகளும் கூராயிருப்பவைகளுமான இந்தஎன் பாணங்கள் மஹாவேகத்துடன் துராசாரனாகிய அந்த வாலியின் மேல் விழப்போகின்றன. உன் பார்யையை அபஹரித்த அதிதப் பாபிஷ்டன் எதுவரையில் என் கண்ணில் படாதிருப்பானோ அதுவரைக்குமே பெரியோர்கள் போற்றுகெடும்படியான கொடுங்கடத்தையுடைய அவன்;பிழைத்திருப்பான். உன் துக்கத்தைப் பிடித்து ஊஹித்துப்

பார்க்கையில், நீ துக்க ஸமுத்ரத்தில் மூழ்கிக்கிடக்கிறா யென்று தெரிகின்றது. அத்தத் துக்க ஸமுத்ரத்தினின்று உன்னைத் தான்பிழைக்கின்றனன். புஷ்கலமாக உன் அபீஷ்டம் ஸித்திக்கப்போகின்றது' என்றனன். ராமன் தனக்கு ஹிதமாகச் சொன்ன அந்த வார்த்தையைக்கேட்டு ஸுக்ரீவன் மிகவும் ஸந்தோஷமுற்றவனாகி ராமனை மிகவும் பெருமையுள்ள வாக்யங்களால் கொண்டாடினன். பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று

ஸுக்ரீவன் வாலியின் பராக்ரமத்தையும் துந்துபி யுத்தத்தையும் மதங்கசாபத்தையும், வாலி ஸப்தஸாலரந்த்ரஞ் செய்ததையுங் கூறுதலும், ராமன் துந்துபி சரீரத்தைத் தூக்கி யெறிதலும், ஸுக்ரீவன் ஸப்த ஸாலங்களைப் பேதிக்க வேண்டுதலும்.

ராமன் ஸந்தோஷமும் பெளருஷமும் பெருகும்படி பேசக்கேட்ட ஸுக்ரீவன் ராமனைக் கைகூப்புதல் முதலியவற்றால் பூஜித்து இங்ஙனம் புகழ்ந்தனன். நீ கோபமுறுவ தாயின் ப்ரளயகால ஸூர்யன்போல் விளக்க முற்றுத் தகதக வென்று ஜ்வலித்து மர்மங்களைப் பிளந்து கொண்டு போகும்படியான கூருள்ள பாணங்களால் உலகங்களை யெல்லாங் கொளுத்தி விடுவாய். ஸந்தேஹம் இல்லை. வாலியின் பலத்தையும் பராக்ரமத்தையும் வீர்யத்தையும் தைர்யத்தையும் மனவூக்கத்துடன்கேட்டு அதன் பிறகு செய்யவேண்டியவற்றைச் செய்வதாக. வாலி ப்ராஹ்மமுஹூர்த்தத்தில் எழுந்து ஸூர்யன் உதயமாவதற்கு முன்னமே ஸந்த்யாவந்தனத்திற்காகிக் கீழ்ஸமுத்ரத்திற்கும் தென் ஸமுத்ரத்தினின்று உத்தர ஸமுத்ரத்திற்கும் இப்படி நான்கு ஸமுத்ரங்களுக்கும் ஆயாஸமின்றி ஸுகமாகவே போய்க்கொண்டிருப்பான். மஹாவீர்யமுடையோரெனிய வாலி பர்வதங்களின் நுனிகளில்

ஏறி அங்குப் மிகப்பெரிய பர்வத சிகரங்களை வேகத்துடன் மேலெழும்படிவிட்டுப்பிடித்துக் கொள்வான். வாலி, தன் பலத்தை வெளியிடுவதற்காக வனங்களில் ஸாரமுடைய காணுவித வ்ருக்ஷங்கள் பலவற்றைத் தன் புஜபலத்தினல் முறித்திருகுகின்றனன். துந்துபி யென்னும் மஹாபராக்ரமசாலியாகிய ஒரு ராக்ஷஸன் உண்டு. அவன மஹிஷத்தின் உருவமுடையவன; கைலாஸ சிகரம்போல் அவன் புலப்படுவான். அவனுக்கு ஆயிரம் யானைபலம் இருந்தது. மிகவும் பெரிய சரீரமுடைய அதைக் கொடுத் தன்மையன பராக்ரமத்தினல் கர்வங்கொண்டு வரம்பெற்ற மஹிமையால மெய்ம் மறந்து நதீபதியாகிய ஸமுத்ரத்தினிடஞ் சென்று அதன்மேல் எதிர்த்துச் சண்டை செய்ய விரும்பி அலைகளுடன் விளக்கமுற்று ரத்னராசிகள் நிரம்பப்பெற்ற அமமஹா ஸமுத்ரத்தைப் பார்த்து 'எனக்கு யுத்தங் கொடுப்பாய்' எனறு வினவினன். ராஜனே! அனந்தரம் தர்மஸ்வபாவனும் மஹா பலிஷ்டனுமாகிய அந்த ஸமுத்ராராஜன் மனுஷ்ய உருவத்துடன் எழுந்து ம்ருத்யுவால் ஏவப்பட்ட அந்த ராக்ஷஸனைப் பார்த்து 'அடா! நீ யுத்தத்தில் பண்டிதன். உன்னோடு யுத்தஞ் செய்ய எனக்கு ஸாமர்த்யம் இல்லை. உன்னோடு யுத்தஞ்செய்யத்தகுந்தவனைச் சொல்லுகிறேன கேள். மஹாரண்யத்தில் பர்வதராஜ னெருவன் இருக்கின்றனன். அவன் முனிவர்களுக்கு மேலான வாஸஸ்தானம். மேலும் சங்கரனுக்கு மாமன். பேரிலல் ஹிமவானென்று ப்ரஸித்தி பெற்றவன். அவன் பெரியகுஹைகளும் அருவிகளும் நிரம்பப்பெற்றுப் பல சிறியகுஹைகளோடும் கல்பிளவுகளோடுங்கூடியிருப்பான். அவன் உனக்கு யுத்தத்தில் நிகரில்லாத த்ருப்தியைக் கொடுப்பான' என்றனன். அந்த ராக்ஷஸோத்தமன், அந்த ஸமுத்ராராஜன் தனக்குப் பயந்தா னென்று

தெரிந்துகொண்டு வில்லினின்றும் விடப்பட்ட பாணம் போல் மிக்க வேகத்துடன் ஹிமவத்பர்வதத்தின் தென்னைக்குப் போயினன். அனந்தரம் துந்துபி, அந்தப் பர்வதத்தில் யானைபோன்ற வெளுத்த கற்களைப் பூமியில்வீசியெறிந்து கூக்குரலிட்டனன். அனந்தரம் அந்த ஹிமவத்பர்வதம் வெளுத்தமேகம்போன்ற உருவத்துடன் லவணம்யனைகித் தன்னுருவம் பார்த்த மாத்ரத்திலேயே பெரும்ப்ரீதியை விளைக்குமாறு விளங்கப்பெற்றுத் தன்சிகரத்திலேயேயிருந்து அவனைப் பார்த்துத் 'தர்மத்தில் ப்ரீதியுடையவனே! துந்துபி! நீ என்னை வருந்தச்செய்யவேண்டாம். நான் யுத்தத்தில் ஸமர்த்தனல்லேன். அன்றியே என்னிடத்தில் ரிஷிகள் வாஸஞ்செய்கிறார்களாகையால் எனக்கு யுத்தம் செய்யவும் ஸாத்யமில்லை' என்றனன். புத்தியிற் சிறந்த அந்தப் பர்வதராஜன் சொன்ன அவ்வார்த்தைகளைக் கேட்டு, துந்துபி கோபத்தினால் கண்கள்சிவக்க 'உனக்கு யுத்தஞ் செய்யச் சக்தி இல்லாமற் போயினும் சக்தி இருப்பினும் எனக்குப் பயந்து யுத்தத்திற்கு முயற்சிசெய்யாமற் போயினும் ஸரி. உன்னோடு யுத்தஞ்செய்யவில்லை. ஆனால் எனக்கு யுத்தஞ்செய்ய வேண்டுமென்றுமிகவும் விருப்பமாயிருக்கையால் இப்பொழுது என்னோடு யுத்தஞ் செய்பவன் எவனோ அவனைச் சொல்வாயாக' என்றனன். தர்மாத்மாவாகிய அந்த ஹிமவத் பர்வதராஜன், இதுவரையில் எப்பொழுதும் சொல்லாத அந்த வாக்யத்தைக் கேட்டுச் சினந்து வார்த்தைகளில் நிபுணனாகையால் அந்த ராக்ஷஸோத்தமனைப் பார்த்து 'நிகரில்லாத ஒளியுடன் விளங்குகின்ற கிஷ்கிந்தாபுரத்தில் வாலியென்னும் ஓர் வானரோத்தமன் இருக்கின்றனன். அவனை மஹாப்ராஜ்ஞன்; பராக்ரமத்தில் தேவேந்த்ரனுக்கொப்பானவன்; மிகுந்த செல்வப்பெருக்குடையவன். அந்த

மஹாப்ரஜ்ஞன் யுத்ததத்தில் பண்டித ணைகபால் கழுசிக் குத் தேவேந்த்ரன கொடுத்தாற்போல் உனக்குப் பெரிய த்வத்வ யுத்தங் கொடுக்க வல்லவன். உனக்கு இப்பொ ழுது யுத்தம் வேண்டுமாயின், சீக்ரம் அத்த வாலியிடம் போலவாக. அவன் எப்பொழுதும் எப்படிப்பட்டவர்க் கும் னதிரிடக் கூடாதவன். யுத்த வ்யாபாரத்தில் சூரன் என்றனன். அத்தத் துந்துபி ஹிமவான் சொன்ன வார்த் தையைக் கேட்டுப் பெருங் கோபாவேச முற்று அப்பொ ழுதே புறப்பட்டு, வாலி பரிபாலித்துவரும் கிஷ்கிந்தாபு ரிக்குப்போயினன். அதத்துந்துபி மஹிஷத்தின் உருவந் தரித்துக் கூரான கொம்புகளுடன்கூடி மிக்க பயங்கரனகி வர்ஷாகாலத்தில் ஆகாயத்தின்கண் ஜலம்நிறைந்த மஹா மேகம்போல் ப்ரகாசித்துக்கொண் டிருந்தனன். அனந் தம் மஹா பலமுடைய அத்தத் துந்துபி கிஷ்கிந்தாகரத் வாசஞ் சேர்ந்து பூமி அதிரும்படி பேரி வாத்யம்போல் பெருஞ் சப்தத்துடன் கர்ஜித்தனன். அவன் மத்தகஜம் போல் அருகிலிருக்கும் வ்ருக்ஷங்களை முறித்துக்கொண் டும் சுழம்புகளால் பூமியைப் பிளந்துகொண்டும் கொம்பு களால் அத்தப் பட்டணத்து வாசற்படியைக் கொழுப்பு டன பேதித்துக் கொண்டும் கர்ஜனை செய்தனன. அப் பொழுது அத்தப் புரத்திலிருந்த வாலி அந்த த்வனியைக் கேட்டு அதைப் பொறுக்காமல் காதலிகளோடு, ஆகாயத் தில் நக்ஷத்ரங்களோடுகூடிய சந்த்ரன்போல் வெளிப்பட்டு வந்தனன். அனந்தரம் ஸமஸ்த வானரர்களுக்கும் வனத் தில் நிரியும் கீரடி முதலியவற்றிற்கும் காதலுகிய அவ் வாலி அக்ஷோரங்களும் உரைகளும் தெளிவா யிருக்குமா று மெதுவாகவும் கொஞ்சமாகவும் அவனைப் பார்த்து, 'துந் துபீ! நீ மஹா பலமுடையவன். நீ எனக்குத் தெரிந்தவனே! அப்படியிருக்க இத்தப் பட்டணத்து வாசலில் இங்ஙனம்

தகைந்துகொண்டு கர்ஜனை செய்கின்றனை ஏன்? உன் ப்ராணன்களைப் பாதுகாத்துக் கொள்வாயாக. திரும்பிப் போவாய்' எனறனன். புத்திமானகிய அந்த வானரர்தலை வன சொனன அவ்வார்த்தையைக் கேட்டுத் துந்துபி கோபத்தினல் கண்கள் சிவக்க 'வீர! நீ இங்ஙனம் ஸ்த் ரீகளின் முன்பு அவர்கள் மபங்கும்படியான வார்த்தை சொல்வது யுக்தமன்று. இப்பொழுது என்னுடன் யுத்தஞ் செய்வாயாக. அதன்பிறகு உன்பலத்தைத்தெரிந்துகொள் கிறேன். வானர! அப்படி யில்லையாயின் இந்த ராத்ரி யெல்லாம் என் கோபத்தை அடக்கிக்கொண்டிருந்தனன்; உனக்கு மன்மதபோகங்களுக்காக நாளை விடியற்காலம் வரையில் கெடு கொடுக்கினறனன். அதுவரையில் இஷ் டப்படி அனுபவிப்பாயாக. நீ ஸமஸ்த வானரர்களுக்கும் அதிபதி. ஆகையால் பந்துக்களாகிய வானரர்களெல்லோ ரையும் கட்டி யணைத்துக்கொண்டு சரமகாலத்தில் அவ ரவர்க்குக் கொடுக்கவேண்டியவற்றைக் கொடுப்பாயாக. மேலும், உனக்கு வேண்டிய நண்பர்களோடு கொஞ்சே ரம் கலந்திருப்பாயாக. கிஷ்கிந்தை முழுவதையும் நன்கு ஆசைதீரும்படி ஒருதடவை பார்த்துக் கொள்வாயாக. உன்னைப்போன்ற மற்றொருவனைப் பட்டணத்தில் அரச ஞகஏற்படுத்துவாயாக. ஸ்த்ரீகளோடு இஷ்டப்படி க்ரீடி ப்பாயாக. உன் விருப்பங்களெல்லாந் தீர்த்துக் கொண்ட பின்பு நான் உனகொழுபபை அடக்குகின்றனன். எவன், மதம்பிடித்தவனையும், ஏமாறியிருப்பவனையும், நித்ரை செ ய்கின்றவனையும், ஆயுதமில்லாதவனையும், உன்னைப்போல் பெண்களி னிடையி லிருந்து காமத்தினல் மெய்ம்மறந்தி ருப்பவனையும் வதிப்பானே, அவன்ப்ரஹஹத்யைபோன் ற பாபத்தைப் பெறுவான்' என்று மொழிந்தனன். அந்த வாலி அப்போது தாரைமுதலான ஸ்த்ரீகளை அந்தப்பு

ரத்திற்கு அனுப்பிக் கோபத்தினால் அந்த அஸுரோத் தமனைப் பார்த்துச் சிரித்து மெதுவாக 'நீ யுத்தத்தில் பயமில்லா திருப்பாயாயின், இவன் மதித்தவ னென்று நினைக்கவேண்டாம். இந்த மதமே இப்போது செய்யப் போகிற யுத்தத்திற்கு வீரபான மெனறு நினைப்பாயாக' என்றனன. வாலி இங்ஙனம் அந்த ராக்ஷஸனுக்குச்சொல் லிப் பிறகு வெகு கோபத்துடன முன்பு தனக்குத்தேவே ந்த்ரன் கொடுத்த காஞ்சனமாலையுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டனன். அப்பொழுது வானர் தலைவனுகிய அவ் வாலி பர்வதம்போனற உருவத்தையுடைய துந்துபியைக் கொம்புகளைப் பிடித்துக் கர்ஜனை செய்துகொண்டு கிரு கிரவென்று திருப்பிவிட்டனன. வாலி அவனை அங்ஙனந் திருப்பித் தரையில்லிழுத் தள்ளியடித்துப் பெருந் த்வனி உண்டாகுமபடி ஸிம்ஹநாதஞ் செய்தனன. அனந்தரம் அங்ஙனம் விழுகின்ற அந்தத் துந்துபியின் காதிலிருந்து ரக்தம் பெருகிற்று. அங்ஙனம் ஒருவரையொருவர் ஜயிக்க விரும்புகின்ற அந்தவாலி துந்துபிகளுக்குக் கோடமேவகத் தினால் பயங்கரமான யுத்தம் நடந்தது. அப்பொழுது தே வேகத்தினை டொத்த பராக்ரமமுடைய வாலி முட்டிக ளால குத்தியும் முழங்கால்களால் குமிக்கியும் கற்களால்வீ சியெறிதலும் வ்ருக்ஷங்களைக்கொண்டி அடித்தும்யுத்தஞ் செய்தனன். அப்பொழுது அவனிடத்தில்வாலியும் துந்து பியும் ஒருவரையொருவர் அடித்து யுத்தஞ் செய்துகொண் டிருக்கையில், யுத்தத்தில் அவ்வளவுக் கவ்வளவு துந்துபி யினபலம் க்ஷீணித்து விட்டது. தேவேந்த்ர ஸுதனுகிய வாலியின்பலம் மேன்மேலும் பெருகி வந்தது. யுத்தத்தில் துந்துபி செயலும் வீர்யமும் தைரயமும் பராக்ரமமும் க்ஷீணிக்கப்பெற்று அசக்தனுயிருப்பது கண்டு, வாலி அ வனை மேலுக்கெடுத்துத்தரையில்பொகட்டுத்தினன்.

அப்பொழுது ப்ராணன்களைப் போக்கும்படி பயங்கரமான அந்த யுத்தத்தில் பெருஞ் சரீரமுடைய துந்துபி, தேஹம் முழுவதும் முறியும்படி பிசையப்பட்டு மரணம் அடைந்து தரையில் வீழ்ந்தனன். வாலி மஹா பலமுடையவனைகையால் ப்ராணன்கள் தொலைந்து ப்ரஜ்ஞையின்றித் தரையில் வீழ்ந்திருக்கின்ற அந்தத் துந்துபியின் சரீரத்தைக் கைகளால் எடுத்து இப்படியும் அப்படியும் ஆட்டி ஓர வேகத்தில் ஒருயோஜனைதூரத்திற் கப்புறம்போய் விழும்படி வீசி யெறிந்தனன். அங்ஙனம் வேகத்துடன்வீசியெறியப்பட்ட அந்தத் துந்துபியின் வாயிலிருந்து ரக்த பிந்துக்கள் காற்றினால் தள்ளுண்டு மதங்கமாமுனியின் ஆச்ரமத்தில்போய் வீழ்ந்தன. மஹாதபோதனராகிய அம்மதங்கமாமுனி தன் ஆச்ரமத்தில் வீழ்ந்திருக்கிற அந்த ரக்தபிந்துக்களைப் பார்த்துக் கோபித்து 'இதைக் கார்யஞ்செய்தவன் எவன், என்று தனக்குள் சிந்தித்து 'என்மேல் ரக்தபிந்துக்கள், முன்பின் பாராமல் திடீலென்று விழும்படி செய்த அந்த துஷ்டஸ்வபாவன் அந்தத் துர்ப்புத்தி மனஸ்வாதீனமா யிருக்கப்பெறுத அம்மூடன் எவன், என்று மொழிந்து, உடனே அம்முனிவர் ஆச்ரமத்தினின்று வெளிப்பட்டுவந்து ஓரிடத்தில் ப்ராணன்கள் தொலைந்து தரையில்வீழ்ந்திருக்கின்ற பர்வதாகார முடைய மஹிஷரூபந் தரித்த துந்துபியைக் கண்டனர். அம்முனிவர்தபோ த்ருஷ்டியால் அந்தக் கார்யஞ் செய்தவன் வாலியென்று தெரிந்துகொண்டு, அங்ஙனம் துந்துபியை வீசியெறிந்த அவ்வாலியின்மேல் பெருஞ்சாபமிட்டனர். 'எவன் தபோவனம் ரக்தபிந்துக்கள் பட்டுக் கெடும்படியும், இந்த வருக்ஷங்கள் அனைத்தும் முறிந்து போகும்படியும் ராக்ஷஸ சரீரத்தை இங்கு வீசியெறிந்தானே அவன் இனி இவ்வனத்தில் புகக்கூடாது. புகுவானையின்சாவான். அந்தத்துர்

ப்புத்தி என் ஆஸ்ரமத்தைச் சுற்றிலும் யோஜனை தூரத்திற்குள் வருவாளையின் அவன் எள்ளளவும் ஜீவிக்கமாட்டான். இது ஸ்பஷ்டமே. அந்தவாலியைச் சேர்ந்த வானரர்கள் எவரெவர் என் வனத்தில் இருக்கின்றார்களோ, அவர்களனைவும் இனிமேல் இங்கிருக்கலாகாது. இதவரத்தையைக்கேட்டு ளாகமாகஇதவிட்டுப்போவார்களாக. நான் இத்தவனத்தைத் குழுதையைப்போல் நித்யமும் காப்பாற்றிக்கொண்டு வருகின்றனன். அந்த வானரர்கள் இனி இங்கிருப்பார்களாயின், இருது இலைகளையும் தளிர்களையும் காசஞ் செயதுகொண்டு பழங்களையும் வேர்களையும் பாழாக்கிகொண்டிருப்பார்களாயின், அவர்களையுங் கூடச் சபித்துவிடுவேன். இந்தச்சாபம் கடத்தைக்குவர ஞருநரன் கெடு கொடுத்தனன். காலைத்தினம் எவரையிலும் வானரன் இதில் எனகண்ணிற் படுவாளையின் பல ஆயிரம் ஆண்டுகள் பர்வதமாயிருப்பாளாக, எனறு சாபங் கொடுத்தனர். அந்த வானரர்கள் மதங்கமுனிவர்சொன்ன சாபவாக்யத்தைக் கேட்டு உடனே அந்த வனத்தினின்று புறப்பட்டு வாலியிடம் போயினர். வாலி அவர்களைக் கண்டு 'மதங்கவனத்தில் வாளுஞ்செய்து கொண்டிருந்த நீங்களெலலோரும் என்னிடம் வந்தீர்களென்? வானரர்களெல்லோர்க்கும் க்ஷேமமேபன்று' என்று விணவினன். அனந்தரம் வானரர்களெல்லோரும் அப்பொழுது காஞ்சனமாலையுடைய அவ்வாலிக்கு, தந்துபி சரீரம் விழுந்ததுமுதலாக மதங்கமுனிவர் சாபங்கொடுத்த தீருகத்தாம் வந்ததற்குள்ள காரணத்தை யெல்லாம் சொல்லினர். அததவாலி, வானரர்கள் சொனன அவவார்த்தையைக்கேட்டு அப்பொழுதே புறப்பட்டு மதங்கமுனியினஸ்திதானத்திற்குச் சென்று கைகளைக் குவித்துச் 'சாப மோக்ஷத்தை அனுக்ரஹிக்க வேணும்' என்று ப்ரார்த்

கித்தனன். அப்பொழுது மஹர்ஷி வாலியைப் பாராட்டா மலே தனது ஆச்ரமத்திற்குப் போயினர். அனந்தரம் வாலி சாபம் அனுபவிக்கவேண்டி வந்ததற்குப் பயப்பட்டு விலவிலத்துக் கிஷ்கிந்தைக்குப் போயினன். ஸகலதனே! அந்தமுனி சாபபயத்தினல் வாலி ருச்யமூக மலை பர்வ தத்திற்கு வரமாட்டான. பார்க்கவுங்கூடப் பொருண். ராமா? அதனவாலி இவ்விடம் வரமாட்டானென்று தெரிந்தேதான் மந்த்ரிகளோடுகூட வருத்த மின்றித் திரிதனு கொண்டிருக்கின்றனன். வாலிவீர்யகர்வத்தின் மிகுதியால் வீசியெறிந்த அதனத்துபியின் பெருஞ்சரீரம் உலர்ந்த எலும்புகள்மாத்ரம் குவியலாய்மிகுந்திருக்கப்பெற்று ஓர் பர்வதசிகரம்போல் இதோ இருக்கின்றது பார். இதனபெ ருத்த ஏழுஸாலவ்ருக்ஷங்கள் கிளைகள் தழைத்து ஸஞ்ச பலபெற்றுத் தென்படுகின்றனவே. இவைகளில்வாலிவிஷயும் பாணபலத்தினல் ஒரு ஸாலவ்ருக்ஷத்தைப் ஸிளந்து அந்த மரத்தில பாணமும் அதன் இறகுகளும் வெளிப் படத்தோன்றும்படி அப்புறஞ் சென்று மற்றொருமரத் தில் பொத்துக் கொள்ளுமாறு பாணப்ரயோகஞ் செய்ய வல்லவன். இந்த மரங்களில ஒன்றை அசக்குஷரஞ்யின், அது இலைகள்பாவும் உதிர்ந்து மொட்டையாய்விடும். ராஜனே! இதுவே வாலியின் பராக்ரமம்; நிகரற்றது. உனக்கு விவரித்து விட்டனன. அப்படிப்பட்ட வாலியை நீ எப்படி யுத்தத்தில் வதிக்க வல்லவாய்? என்று விணவினன். ஸுக்ரீவன் அங்ஙனஞ் சொல்லிக் கொண்டி ருக்கையில், லக்ஷ்மணன் சிரித்துக்கொண்டே அவனைப் பார்த்து 'என்ன கார்யஞ் செய்தால் இவன் வாலியைக் கொல்ல வல்லவனென்று உனக்கு நம்பிக்கை உண்டாம்? என்று விணவினன். பிறகு ஸுக்ரீவன் லக்ஷ்மணனைப்


பாத்து ‘முன்பு வாலி இந்த ஏழ்ஸாலவ்ருக்ஷங்களில் ஒவ்வொன்றையும் பாணத்தால் அடித்துப் பின்பு முன் சொன்னபடி அவைகளைப் பாணங்களால் பலதடவையும் அடித்துப் பிளந்திருக்கின்றனன். லக்ஷ்மண! ராமன் இந்த ஸாலவ்ருக்ஷங்களில் ஒன்றை ஒரு பாணத்தால் பிளப்பாரேயின், போதும். அடிபட்ட துந்துபியின் எலும்புக்குவியலை ஒரு காலால் எத்து இருநூறு வில்லளவு தூரம் போய்விழும்படி வேகத்துடன் வீசியெறிவாரேயினும், அப்பொழுது ராமனது பராக்ரமத்தைக் கண்டு வாலி ஹதனானென்று நிச்சயிப்பேன்’ என்றனன். லக்ஷ்மீவன் இவ்வாறு சொல்லிப்பிறகு முன்போர்த்தகாலம் வெறுமனே சிந்தித்திருந்து மீளவும் சிவந்த கடைக்கண்களையுடையகாகுத்ஸ்தராமனைப்பார்த்து ‘வாலி, மஹாசூரன், சூரர்களைக் கொன்றவன்; பல பெருங்ருக்ஷங்களில் புகழ்பெற்றவன்; மிகுந்த பலமுடையவன்; என்றும் இதுவரையில் யுத்தத்தில் தோல்வியடையாதவன். இந்த வாலி தேவதைகளுக்குங்கூடச் செய்யமுடியாத பல கார்யங்களைச் செய்திருப்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. நான் அவை யெல்லாவற்றையும் ஆலோசித்தே பயந்து இந்த ருஷ்யமூகபர்வதத்தில் புகுந்திருக்கின்றனன். எவர்க்காயினும் வெல்லமுடியாமலும் எவர்க்காயினும் எதிரிடக்கூடாமலும் விளங்கிப் பெருங்கோபமூற்றிருக்கும் வானரர்தலைவனாகிய வாலியை நினைத்தே நான் இந்த ருஷ்யமூக பர்வதத்தை எள்ளளவும் விடாதிருக்கின்றனன். மேலும் நான் என்னிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையஹனுமான் முதலான மந்த்ரி ஸ்ரேஷ்டர்களோடு இம்மஹாவனத்தில் பயந்து ஸதேதஹப்பட்டுக்கொண்டே திரிந்துகொண்டிருக்கின்றனன். நண்பர்களிடம் மிகுந்த வாத்ஸல்ய முடையவனே! இவ்வளவே யன்றி எனக்குப்



1681. ராமன் துந்துபி சரீரத்தை மேற்கிளம்பும்படி எடுத் தெறிதல்.

புகழுத்தகுந்த நல்ல நண்பனும் அகப்பட்டனை. புருஷ திலகனே! உன்னை ஹிமவத்பர்வதத்தைப் போல் ஆஸ்ர யித்தனன். ஆனு லென்னென்கிறுயோ? மஹாபலசாலி யும் என் கொடும் உடன்பிறந்தவனுமாகிய வாலியின்பலம் எனக்குத் தெரியும். உன் வீர்யத்தை மாத்ரம் யுத்தத் தில் நான் இது வரையில் பார்த்ததில்லை. அந்த வாலி கடத்தின பயங்கர கார்யங்களைப் பற்றி எனக்குப் பயம் உண்டாகி இந்த வார்த்தைகளைச் சொல்லுகின்றேனன்றி உனக்குச் சலனம் விளைக்க வேண்டுமென்னும் எண்ணத் துடன் சொல்லவில்லை. உன்னை அவமதிப்பதற்காகவும் அன்று. அன்றியே பயப்படுத்துவதற்காகவும் அன்று. ராமா! ஓரே தீர்ப்பாயிருக்கின்ற உன் வார்த்தையும் புத்தி யும் தைர்யமும் ஆகாரமும், தீறுபூத்தநெருப்புப்போன்ற உன் மஹாதேஜஸ்ஸைத் தெரிவிக்கின்றன. ஸந்தேஹ மில்லை' என்றனன். ப்ரபுவாகிய அந்த ஸ்ரீராமன் மஹா னுபாவனுகிய ஸுக்ரீவன் சொன்ன வார்த்தையைக் கே ட்டுப் புன்னகையுடன் அவனைப் பார்த்து 'ஸுக்ரீவா! எமது பராக்ரமத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையாயின், இப்பொழுது நான் உனக்கு யுத்தவிஷயமாக வேண்டிய நம்பிக்கையை விளைவிக்கின்றேன்' என்றனன். மஹா பாஹுவாகிய லக்ஷ்மணுக்ரஜன் ராமன் ஸுக்ரீவனுக்கு இங்ஙனஞ் சொல்லி, அவனை ஸமாதானப்படுத்திக்கொ ண்டு அந்தத்துந்துபியின் சரீரத்தைக் காலால் எடுக்கா மலே கால்கட்டை விரலால் அவலீலையாகவே எடுத்து ஆட்டிவித்துப் பத்துயோஜனை தூரத்திற்கபுறம் போய் விழும்படி வீசியெறிந்தனன். வீர்யம்பொருந்தின அந்த ஸுக்ரீவன் துந்துபியின் சரீரம் உலர்ந்திருக்கையால் மு ன்னைவிட அற்பமாயிருக்கையில் அதை ராமன் கால்கட் டைவிரலால் வீசியெறிந்தது கண்டு மீளவும் ராமனைப்பா

ர்த்து லக்ஷ்மணனுக்கு முன்னிலையில் 'நண்பனே! முன்பு இரத்தச்சரீரம் ரக்தத்தால் நனைத்து புதிதாகிக் கொஞ்சம் ப்ராணசேஷ்டையுடன்கூடி. மாம்ஸமும் நிறைந்திருக்கையில் வீசியெறியப்பட்டது. ராகவ! இப்பொழுது இது உலர்ந்து மாம்ஸமெல்லாம் அற்றுப் புற்குவியல்போல் அற்பமாயிருக்கையில் எறியப்பட்டது. ஆகையால் இதைப்பற்றி உன்பலம் அதிகமோ அவன்பலம் அதிகமோ தெரிந்துகொள்ளமுடியாது. ராம! 'நனைத்தது, உலர்ந்தது' என்பதே மிகவும் பெரிய தாரதம்யத்திற்கிடமாயிருக்கின்றது. ஆகையால உன்பலத்திலும் வாலிபலத்திலும் முன்பிருந்தஸங்கதஹமே இருக்கின்றது. நீ ஒருஸாலவருக்ஷத்தைப் பாணத்தால பேதிப்பாயாக. அப்பொழுது பலாபலம் விசேஷித்து வெளியாகும். நீ யானைத்துதிக்கைபோல் நீண்டிருக்கின்ற இந்தத் தனுஸ்ஸை காணற்றிக் காதுவரையிலும் இழுத்துப் பெரிய பாணமொன்றை விடுவாயாக. ராஜகுமாரனே! நீ ப்ரயோகிக்கும் பாணம் இந்த ஸாலவ்ருக்ஷத்தைப் பேதிக்கும். இதில் ஸந்தேஹம் இல்லை. மீளவும் என் கம்பிக்கை விளக்க வேண்டுமென்று ஆலோசிக்கவேண்டாம். எனக்கு ஸந்தோஷத்திற்காகவேயன்றி உன்னைப் பரீக்ஷிப்பதற் காகவன்று. இது நிஜம். இப்படியென்று உன்மேல் ஆணையிடுகின்றனன. தேஜஸ்ஸுடையவர்களில் ஸூர்யனும், மஹா பர்வதங்களில் ஹிமவத் பர்வதமும சதுஷ்பாதஜாதிகளில ஸிம்ஹமும் மேலாயிருப்பதுபோல், நீ பராக்ரமத்தில் ஸமஸ்த மனுஷ்யர்களிலும் மேலாயிருப்பவன்' என்றனன். பதிமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.



1683. ராமன் ஸப்த ஸாலங்களைப் பேதித்தல.

ராமன் ஸப்தஸாலங்களைப் பேதித்தலும்,
வாலி ஸுக்ரீவர்களின் ப்ரதம யுத்தமும்.

மஹா தேஜஸ்வியாகிய ராமன், ஸுக்ரீவன் கன்று கச் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டு அவனுக்கு நம்பிக்கை உண்டாகும்பொருட்டுத் தனுஸ்ஸை எடுத்துக் கொண்டனன். பகைவரை அடக்கும் பராக்ரமசாலியாகிய அவ்வீரன் பயங்கரமான தனுஸ்ஸையும் ஒருபாணத்தை யும் எடுத்துக்கொண்டு காண்சப்தத்தினால் திசைகள் கிர ம்பச் செய்துகொண்டு ஸாலவ்ருக்ஷத்தைக் குறிசெய்து பாணத்தை ப்ரயோகித்தனன். பலவானுகிய அந்த ராமன் ஒரு ஸாலத்தைக் குறிசெய்து நாட்டுகையில் ஸ்வர்ணரே கைகளால் விளங்குகின்ற அந்தப்பாணம் ஏழு ஸாலவ்ரு க்ஷங்களைப் பேதித்து அந்த மலைச்சாரலையும் பிளந்து கொண்டு பூமியுள் புகுந்தது. பூமியைப் பிளந்த அந்தப் பாணம் மஹா வேகமுடையதாகையால் முஹூர்த்தகால த்தில் பூமியினின்று வெளிப்பட்டு வந்து மீளவும் எப்பொ ழுதும் தானிருக்குமிடமாகிய அம்பறாத் தூணியில் புகு தது. வானரஸ்ரேஷ்டனுகிய ஸுக்ரீவன் ராமனது பாண வேகம் ஏழு ஸாலவ்ருக்ஷங்களையும் பேதித்தமை கண்டு மிகவும் ஆச்சர்யம் அடைந்தனன். அந்த ஸுக்ரீவன் பரமஸந்தோஷம் அடைந்து ராமனுக்கு அஞ்சலிசெய்து சிரஸு பூமியில்பட வயிறு தரையில் படுதலால் ஆபர ணங்கள் அசையப்பெற்று ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தனன். ஸுக்ரீவன் அந்த வ்யாபாரத்திற்கு மிகவும் ஸந்தோஷம் அடைந்து, தர்மங்களை யறிந்தவனும் ஸர் வாஸ்த்ரங்களையும் நன்குணர்ந்தவனும் சூரனுமாகிய ராம ன் நின்றுகொண்டிருக்கக் கண்டு 'புருஷ திலகனே! நீ, யுத்தத்தில் தேவேந்த்ரனேடுகூடத் தேவதைகளனைவ ரும் கலந்துவரினும், அவர்களெல்லோரையும் பாணங்க

ளால் வதிக்கவல்லவன். இனி வாலியை வதிப்பது சொல்ல வேண்டுமோ?' ராமா! ஒரு பாணத்தால் ஏழு பெரிய ஸால வருக்ஷங்களையும் பர்வதத்தையும் பூமியையும் பேதித்து விட்டனையே! இப்படிப்பட்ட உன்முன்பு எவன் நிற்கவல்லவன்? மஹேந்த்ரவருணர்களை நிகர்த்த உன்னை நண்பனைப்பெற்றதனையால் இப்பொழுது என் துக்கம் தீர்ந்து போய்விட்டது. இப்பொழுது எனக்குப் பராபவத்தோஷம் உண்டாயிற்று. ராமா! எனக்கு உடன்பிறந்தவனென்னும் உருவத்துடனிருக்கும் பகைவனாகிய அந்த வாலியை, எனக்கு ப்ரியஞ்செய்வதற்காக இப்பொழுதே முடிப்பாயாக. இதோ உனக்குக் கைகூப்பினேன்' என்றனன். அனந்தரம் ராமன் மஹாப்ராஜ்ஞனாகையால் இனிய காட்சியுடைய ஸுக்ரீவனைக் கட்டியணைத்து லக்ஷ்மணனுக்கு ஸம்மதமான உரைகளைச் சொல்லத் தொடங்கி 'ஸுக்ரீவா! இங்கிருந்தே கிஷ்கிந்தைக்குப்போவோம். நீ சீக்ரமாகக் கொஞ்சம் முன்னமேபோவாயாக. போய்த் தம்பியைப் பீடிக்கும் வாலியை யுத்தத்திற்கு அழைப்பாயாக' என்றனன். அனந்தரம் ராமன் முதலாக அவர்கள் அனைவரும் விரைவாக வாலியின பட்டணமாகிய கிஷ்கிந்தைக்குப் போய் அங்குப் புகக்கூடாத ஓர் வனத்தில் வ்ருக்ஷங்களின் மறைவில் மறைந்திருந்தனர். ஸுக்ரீவன கெட்டியாக வஸ்த்ரத்தை இடையில் கட்டிக்கொண்டு வாலியைக் கூப்பிடுவதற்காகக் கர்ஜனங்களால் ஆகாயம் இருபிளவாகும்படி பயங்கரமாகக் கோஷமிட்டனன். மஹாபலனாகிய வாலி தம்பியின் கர்ஜனையைக் கேட்டுச் சினந்து மஹாவேகத்துடன அஸ்தமய பர்வதத்தினின்று ஸூர்யன் புறப்படுவது போல் புறப்பட்டு வந்தனன். அனந்தரம் ஆகாயத்தில் புதன் அங்காரகன் ஆகிய இந்த க்ரஹங்களுக்குப்போல் அந்த வாலி ஸுக்ரீவர்களுக்குப்

பயங்கரமான துமுலயுத்தம் கடந்தது. அண்ணன் தம்பி கள் இருவரும் கோபாவேசத்தினல் உடம்பு தெரியாமல் யுத்தத்தில் இடிபோன்ற உள்ளங்கையறைகளாலும் வஜ் ராயுதம் போன்ற முட்டிகளாலும் ஒருவரையொருவர் அ டித்துக்கொண்டனர். அனந்தரம் ராமன் கையில் வில் லேந்தரித்து வீரர்களாகிய அந்த வாலி ஸுக்ரீவர்களி ருவரும் அபிஷி தேவதைகள் போல் ஒருவரையொருவர் நிகர்த்திருக்கக் கண்டு 'இவன் ஸுக்ரீவன், இவன் வாலி' என்று அடையாளந்தெரிந்து கொள்ளமுடியாமை யால் ப்ராணன்களையழிக்கும்படியான பாணத்தை விடு வதற்குப் புத்தி உண்டாகப் பெறுதிருந்தனன். இதன் கடிவில் ஸுக்ரீவன் அந்த வாலியால் தோல்வியடைந்து தனக்குத்திக்கான ராமனைக் காணுமல் ருஷ்யமூக பர்வ தத்திற்கு ஓடிப்போயினன். அந்த ஸுக்ரீவன் இளைப்பு ற்று ரக்தம் பெருகப்பெற்றுப் புடைகளால் உடம்பு முழு வதும் தழும்புற்றுப் பருஷமாகச் செய்யப்பட்டு, வாலியும் கோபத்தினல் பின்தொடர்ந்து துரத்துகையில் அந்த மதங்கமஹா வனத்தில் புகுந்தனன். ஸுக்ரீவன் அவ் வனத்தில் புகுவது கண்டு மஹாதேஜஸ்வியாகிய வாலி சாப பயத்தினல் வருந்தி 'அடா! தப்பித்துக் கொண் டனை' என்று மொழிந்து வெறுமனே திரும்பிப்போயி னன். ராமனும் தம்பி லக்ஷ்மணனும் வருவது கண்டு ஸுக்ரீவன் வெட்கித் தலையைப் பார்த்துக்கொண்டு தீனவசனத்துடன் 'எனக்குப் பராக்ரமத்தைக் காட்டி 'வாலியை யுத்தத்திற்கு அழைப்பாய்' என்று என்னுடன் சொல்லி என்னை வாலியால் அடிபடச் செய்தனையே! நீ என் நினைத்திருந்தனையோ? ராமா! நான் உன்னை வினவும் பொழுதே 'நான் வாலியை வெல்லவல்லனல்லேன்' என்று யதார்த்தமாகச் சொல்லியிருக்கவேண்டும். அப்

படி செய்திருப்பாயாயின் நான் இங்கிருந்து புறப்பட்டுப் போகவே மாட்டேனலலவா?" என்றனன். மறுநாளுபாலை னைய அந்த ஸுக்ரீவன் கேட்போர்களுக்குக் கருணை உ ண்டாகும்படி இங்ஙனம் தீன வாக்யங்களைச் சொல்லிக் கொண்டிருக்கையில் கேட்டு ஸ்ரீராமன் அவனைப்பார்த்து 'ஸுக்ரீவா! நான் பாணம் விடாததற்குக் காரணம் யாதோ அதைச் சொல்லுகிறேன் கேள். கோபத்தை விடுவாயாக. ஸுக்ரீவா! அலங்காரத்திலும் வேஷத்திலும் அளவிலும் நடையிலும் நீயும் வாலியும் ஒருவரையொருவர் நிகர்த்திருக்கிறீர்கள். ஸுக்ரீவா! கண்டத்வனியிலும் காந்தியிலும் பார்வையிலும் நடையிலும் வார்த்தைகளிலும் உங்களிருவர்க்கும் பேதம் சிறிதும் எனக்கு அகப்படவில்லை. வானரோத்தமனே! அங்ஙனம் உங்களிருவர்க்கும் ரூபம் ஒன்றுகவே யிருப்பதுபற்றி நான் மோசம்போயினன். நான் உங்களிருவருடைய மூர்த்தியும் ஸமானமாயிருப்பதுபற்றி ஸந்தேஹித்தே 'உம்மிருவர்க்கும் முதலே மோசம் வாராதிருக்குமாக' என்று நினைத்து மஹா வேகமுடையதும் பகைவரைக் கொல்வதும் ப்ராணன்களை முடிப்பதுமாகிய கொடிய பாணத்தை ப்ரயோகிக்கவில்லையே யன்றி மற்றேதுமில்லை. வானரோத்தமனே! எனது அஜ்ஞானத்தினாலும் லாகவத்தினாலும் உனக்கு ஏதேனும் ஆபத்து ஸம்பவிக்குமாயின், என்னுடைய மூடத்தனமும் பால்யமும் கற்புறத்திலும் வெளியாகுமல்லவா? எவனுக்கு அபயங் கொடுத்தோமோ, அவனை வதிப்பது மஹாபாதக மென்பர்கள். நானும் லக்ஷ்மணனும் பெண்மணியாகிய ஸீதையும் நாங்களெல்லோரும் உனததீனத்திலிருக்கின்றனம். எங்களுக்கு இவ்வனத்தில் நீயே சரணம். வானரோத்தமனே! ஆகையால் நீ மீளவும் சென்று யுத்தஞ் செய்வா

யாக. என்மேல் ஸந்தேஹம் வேண்டாம். ஸுக்ரீவா! இப்பொழுது யுத்தத்தில் வாலியை ஒரு பாணத்தினாலே யே வதித்துப் பூமியில் வீழ்ந்து புரளச் செய்கின்றனன் பார். கபீந்த்ரனே! மீளவும் நீ வாலியுடன் த்வந்த்வ யுத்தஞ் செய்யும்பொழுது உன்னை நான் குறித்தறியும்படி நீ ஏதேனும் ஓர் அடையாளந் தரிப்பாயாக. லக்ஷ்மண! சுபலக்ஷணமாகிப் புஷ்பித்திருக்கின்ற இந்தக் கஜபுஷ்பி யென்னும் ஓஷதியைப் பிடுங்கி மஹாஜுபாவனாகிய ஸுக்ரீவனது கண்டத்தில் கட்டுவாயாக' என்றனன். அனந்தரம் லக்ஷ்மணன் மலைச்சாரலில் முளைத்து நன்கு புஷ்பித்திருக்கின்ற அந்தக் கஜபுஷ்பி யென்னும் ஓஷதியைப்பிடுங்கிக் கொண்டு வந்து அந்த ஸுக்ரீவனது கண்டத்தில் கட்டினன். ஸ்ரீமானாகிய அந்த ஸுக்ரீவன் கண்டத்தில் அந்தக் கொடியைத் தரித்து, ஆகாயத்தில் நக்ஷத்ரமாலையால் சூற்றப்பட்ட ஸூர்யன் போல் ப்ரகாசித்தனன். பொன்வர்ணமுடைய அந்த ஸுக்ரீவன் அம்மாலையால் ஸந்த்யாகாலத்து மேகம் [1]தாரைகளின் ஸமூஹத்தால் சூழப்பட்டு விளங்குவதுபோல் சரீரம் ப்ரகாசிக்கப் பெற்று ராமனது வாக்யத்தினால் ஸமாதானம் அடைந்து ராமனுடன் கூடவே வாலியால் பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தாபுரத்திற்குப் போயினன். பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ராம ஸுக்ரீவாதிகள மீளவும் கிஷ்கிந்தைக்குப் போதல. }

லக்ஷ்மணனுக்குத் தமையனாகிய ராமன் தர்மஸ்வபாவனுகையால் ஸுக்ரீவனைப் பின்னே அழைத்துக்கொண்டு, வாலியின் பராக்ரமத்தினால் பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தாபுரத்திற்குப் போயினன். ராமன் ஸ்வர்ணத்தினால் ப்ரகாசிக்கின்ற பெரிய தனுஸ்ஸையும் யுத்தத்தில் வெற்றியை

---

1. நக்ஷத்திரங்களின்.

விசை விக்க வல்லவைகளும் ஸூர்யன் போல் ப்ரகாசிக்கின்ற வைகளுமான திவ்யபாணங்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டனன். மஹாதனுபாவனாகிய ராமனுக்கு முன்னால, கொருங்கின கண்டத்தையுடைய ஸுக்ரீவனும் மஹாதனுபாவனாகிய லக்ஷ்மணனும் போயினர். ராமனுக்குப்பின்பு வீரனாகிய ஹனுமானும் கலனும் நீலனும் மஹா பராக்ரமம் அமைந்து வானரஸைந்யங்களில் தலைமையுடையோராகிய தாரனும் போயினர். பாரத்திறல் தழைந்திருக்கின்ற வ்ருக்ஷங்களையும் நிர்மலஜலப்ரவாஹத்துடன் விளக்கமுற்று ஸமுத்ரத்தைத்குறித்துச் செலகின்ற நதிகளையும் க்ருஹங்கள்போன்ற குஹைகளையும் பர்வதங்களையும் கலவெடிப்புகளையும் ஸாதாரண குஹைகளையும் உயர்ந்த சிகரங்களையும் பார்க்க இனியனவைகளான குஹா விசேஷங்களையும்பார்த்துக்கொண்டே போயினர். மேலும் வைடூர்யமணிகள்போன்ற தாமரையிலைகளையும் சிறிது மலர்ந்த மொக்குகளோடுகூடின தாமரைகளால் ரமணீயங்களும் கல்ல ஜலமுடையவைகளுமாகி நீர்க்காகங்களும் ஸாரஸப்பறவைகளும் ஹம்ஸங்களும் வஞ்சுலங்களும் நீர்க்கோழிகளும் சக்ரவாகங்களும் மற்றுமுள்ள பறவைகளும் அருகில் கலகலவென்று கூவப்பெற்று விளங்குகின்ற தாமரைக்குளங்களையும் பார்த்துக்கொண்டு போயினர். மேலும் அவர்கள், மெத்தென்ற இளம் புற்களின முளைகளை மேய்ந்துகொண்டு பயமற்று அரண்ய பூமிகளில் கற்புறத்திலும் நிர்தமும் நின்றும் இருக்கிற மான்களையும் கண்டனர். அவர்கள் ஸுக்ரீவனைப் பின்தொடர்ந்து வனத்தில் தடாகங்களைக் கெடுப்பவைகளும் இரண்டு வெளுத்த தந்தங்கள் விளங்கப்பெற்றுப் பயங்கரங்களாகி ஓர்வொன்றுகத் திரிபவைகளும் ஆற்றின் கரைகளைக் கொத்திக் குளம் பறிப்பவைகளும் மதித்தவைகளும் மஹிஷாரல்களைக் குத்தி விளையாடுப

வைகளும் நடந்துசெல்லும் பர்வதங்களோ என்னும்படி பெரிய உருவமுடையவைகளும் மேகங்கள்போல் கறுத்துப் பூமியின் தூள்களால் அழுக்கடைந்தவைகளுமாகிய யானைகளையும் வனத்தில்திரியும் மற்றுமுள்ள மிருகங்களையும் ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளையும் பார்த்துக்கொண்டு வேகமாகப் போயினர். அங்கு அவர்களெல்லோரும் வேகமாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, ராமன் வ்ருக்ஷ ஸமூஹங்கள் நெருங்கியிருக்கின்ற ஓர் வனத்தைக் கண்டு லக்ஷ்மணனைப் பார்த்து 'மேகஸமூஹம்போல் விசாலமாகி காற்புறத்திலும் ஓரங்களில் வாழைமரங்கள் சூழப்பெற்று விளங்குகின்ற இந்த வ்ருக்ஷஸமூஹம் ஆகாயத்திலிருக்கும் மேகம்போல் ப்ரகாசிக்கின்றது. கண்பனே! இதுவென்? இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எனக்குக் குதூஹலமாயிருக்கின்றது. நீ என் விருப்பத்தைத் தீர்க்கவேண்டுமென்று விரும்புகின்றேன்' என்று மொழிந்தனன். லக்ஷ்மணன், மஹாநுபாவனாகிய ராமனது வார்த்தையைக் கேட்டு நடந்துபோய்க்கொண்டே அம்மஹாவனத்தைக் குறித்த வ்ருத்தாந்தத்தையெல்லாஞ் சொல்லத்தொடங்கி 'ராமா! இது ஓர் ஆச்ரமம்; இது விசாலமாய்க் குளிர்ந்திருக்கையால் ச்ரமத்தைப் போக்குந் தன்மையுடையது; உத்யானவனங்கள் பலவும் நிரம்பப் பெற்று ருசியுள்ள காய்கிழங்குகளும் வேர்களும் ஜலமும் நிறைந்திருக்கும். இந்த ஆச்ரமத்தில் ஸப்தஜனங்களென்னும் முனிவர்கள் எழுவர் வாஸஞ்செய்துகொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் கொடிய வ்ரதங்களைச் செய்துகொண்டு தலைகீழாக ஜலத்திலிருந்து நியமத்துடன்தவஞ் செலுத்திக்கொண்டிருப்பார்கள். அம்மஹர்ஷிகள் இந்தவனத்தில் எழுநாத்ரிகளுக்கு ஒருதடவை வாயுவை ஆஹாரமாகக்கொண்டு எழுநூறு ஸம்வத்ஸரங்கள் தவஞ்

செய்து சரீரத்துடனே ஸ்வர்க்கஞ் சென்றனர். இங்ஙனம் மஹாப்ரபாவர்களான அம்மஹர்ஷிகளின் ஆஸ்ரமம், சுற்றிலும் வ்ருக்ஷங்களால் வேலியுண்டாகப்பெற்று இக்ஷ்வாகூடித் தேவாஸுரர்கள் வரிலும் எவ்வளவும் எதிரிடமுடியாததாயிருக்கும். இனி மனிதர்கள் இவ்வாஸ்ரமத்தில் புகமுடியாதென்பது சொல்லவேண்டுமோ? பக்ஷிகளும் மற்றும் அடவியில் திரியும் ஜந்துக்களும் இவ்வாஸ்ரமத்திற்குள் எவ்விதத்திலும் புகமாட்டா. அங்ஙனம் தெரியாமல் எலையாயினும் புகுமாயின், அவை எவ்விதத்திலும் அங்கிருந்து திரும்பிவருவதில்லை; அங்கேயே அகப்பட்டுச் சாகவேண்டியதே. அந்த ஆஸ்ரமத்தில் கர்த்தனஞ் செய்யும் அப்ஸரஸ்த்ரீகளின் ஆபரணத்வனிகளும் அவ்யக்தமதுரமான அக்ஷரங்களோடுகூடின கீதசப்தங்களும் வாத்ய கோஷங்களும் எப்பொழுதும் செவிப்பட்டுக்கொண்டிருக்கும். மேலும் அதில் திவ்யகந்தம் எப்போதும் வீசிக்கொண்டிருக்கும். இவ்வாஸ்ரமத்தில் எப்பொழுதும் மூன்று அக்னிகளும் விளங்கிக்கொண்டிருக்கும். அதற்கு திதர்ஸனமாக இந்தப் புகை தட்டமாக வ்ருக்ஷங்களின் நுனிகளைச் சுற்றிக்கொண்டு புரூவின் மேனியின் வர்ணமுடையதாகிப் புலப்படுகின்றதல்லவா? இந்த வ்ருக்ஷங்கள், சிகரங்களில் புகைகளால மூடப்பட்டிருப்பது பற்றி மேகஸமூஹங்களால் மூடப்பட்ட வைடூர்யபர்வதம் போல் ப்ரகாசிக்கின்றன. தர்மஸ்வபாவனே! நீயும் லக்ஷ்மணனும் பரிசுத்தமான மனமுடையராகி அஞ்சலிசெய்து ஏதேனும் பலனை உத்தேசித்து அம் மஹர்ஷியைக் குறித்து நமஸ்காரஞ் செய்வீர்களாக. ராமா! ஆத்மவித்துக்களான அம்மஹர்ஷிகளுக்கு எவர் நமஸ்காரஞ் செய்வார்களோ, அப்படிப் பட்டவர்களுக்குத் தேஹத்தில் வ்யாதி முதலான கெடுதிகள் எள்ளளவும் புலப்படா. ஆகையால்

நமஸ்காரஞ்செய்வீர்களாக' என்றனன். அனந்தரம் ராம னும்அவன்தம்பி லக்ஷ்மணனும் கைகூப்பி மஹரானுபாவர்களான அம்மஹர்ஷிகளை உத்தேசித்து நமஸ்காரஞ் செய்தனர். அங்ஙனம் நமஸ்கரித்து தர்மஸ்வபாவனாகிய ராமனும் தம்பி லக்ஷ்மணனும் மற்றவானரர்களும் பரமஸந்தோஷத்துடன் போயினர். அவர்கள் அந்தஸப்தஜனவனிவாசது ஆஸ்ரமத்தினின்று வெகுதூரம் கடந்து வாலியால் பரிபாலிக்கப்படுவதும் ஆனதுபற்றியே பகைவரால் எதிரிடக்கூடாததுமாகிய கிஷ்கிந்தாபுரத்தைக் கண்டனர். அனந்தரம் ராமனும் லக்ஷ்மணனும் ஸுக்ரீவன் முதலிய வானரர்களும் நிகரில்லாத ஓஜஸியுடன் விளக்கமுற்று ஆயுதங்களைத்தரித்துச் சத்ருவைக் கொல்லும்பொருட்டு எல்லோரும் ஓரேகாலத்தில் தேவேந்த்ரபுத்ரனாகிய வாலியால் பராக்ரமங்கொண்டு பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தாபுரஞ் சேர்ந்தனர். பதின்மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் வாலியை யுத்தத்திற்கழைக்கப் பயப்படுகையில் ராமன் அவன் பயத்தைதப்போக்குதல்.

ராமன் முதலிய அவர்களெல்லோரும் சீக்ரமாக வாலியால் காக்கப்பட்ட கிஷ்கிந்தையைச் சேர்ந்து புகக்கூடாத ஓர்வனத்தில் வ்ருக்ஷத்தின்மறைவில் மறைந்திருந்தனர். அரண்யங்களில் ப்ரீதியுடையோனும் அகன்றகண்ணுடையவனுமாகிய ஸுக்ரீவன் அடவியில் காற்புறத்திலும் கண்களைவிட்டுப் பார்த்து மிகவும் கோபத்தையேற்றுக் கொண்டனன். அனந்தரம் அந்த ஸுக்ரீவன் ஹனுமான் முதலிய பரிஜனங்கள் சூழ்ந்திருக்கப் பெற்று வாயுவேகத்துடன்கூடிக் கர்ஜிக்கின்ற மஹாமேகம்போல ஆகாயம் பேதிக்கும்படி ஸிம்ஹநாதஞ் செய்துகொண்டு

வாலியை யுத்தத்திற்கு அழைத்தான். அனந்தரம் அப்போது பால ஸூர்யன்போல் விளக்கமுற்று மதித்த ஸிம்ஹம்போன்ற நடைபிதிக்குடன் ப்ரகாசிக்கின்ற ஸுக்ரீவன், கார்யங்களில் ஸமர்த்தனுகிய ராமனைப் பார்த்து 'நாம் வாலி பட்டணமாகிய கிஷ்கிந்தைக்கு வந்தோம். இது கேவலமாயிருப்பதன்றும் நகங்களைப் பிடுங்கும் வலை போல் பகைவரைப் பிடித்துப் பீடிக்கவல்ல வானரர்கள் பலர் இதில் நிறைந்திருக்கின்றனர். மேலான ஸ்வர்ணங்களால் இந்தப் பட்டணத்தின் த்வாரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் த்வஜங்களும் பத்ராங்களும் இங்கு நிறைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட வாலிநகரத்திற்கு வந்தோம். வீரர்களில் தலைவனே! நீ முன்பு வாலியைக் கொல்லுகிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்திருக்கின்றனை. பலிக்கவேண்டியகாலம் வந்தபொழுது, கொடி தவறுமல் பலிப்பதுபோல் அந்தப்ரதிஜ்ஞைக்கும் பலகாலம் இதோ வந்திருக்கிறதாகையால் அதை ஸபலஞ் செய்வாயாக' என்றனன். ஸுக்ரீவன் இங்ஙனம் சொல்லுகையில் சத்ருக்களையழிக்குந் திறமுடைய ராமன் தர்மஸ்வபாவனுகையால் ஸுக்ரீவனைப் பார்த்து 'லக்ஷ்மணன் அடையாளத்திற்காகக் கஜபுஷ்பியென்னும் கொடியைப் பிடுங்கி உன் கழுத்தில் போட்டிருக்கிறுனகையால், நீ இதனுல் ஸுகமாக அறியத்தகுந்தவனுயிருக்கின்றனை. வீர! நீ கழுத்தில்இந்தக் கொடியைத் தரித்தவனுகி ஆகாயத்தில் நகஷத்ரமாலையால் சுற்றப்பட்ட ஸூர்யன்போல் மிகவும் ப்ரகாசிக்கின்றனை. ஸுக்ரீவ! உனக்கு வாலியிடம் உண்டாகுக்கும் பயத்தையும் அவனுக்கு உன்னிடத்தில் உண்டான வைரத்தையும் நான் இப்பொழுது யுத்தத்தில்ஒருபாணத்தினுலேயே தீர்த்துவிடுகின்றனன். பயப்படவேண்டாம். ஸுக்ரீவ! உடன்பிறந்தவனென்ற உருவத்தோடிருக்கி

ன்ற உன் சத்ருவை எனக்குக் காட்டுவாயாக. நான் அவ
னைப் பார்ப்பதுமாத்ரமே தடை. பார்த்தவுடனே அவன்
அடிக்கப்பட்டு இவ்வனத்தில் தூசியின்மேல் புரளப்போ
கின்றனன். அவன் என் கண்களில்பட்டு மீளவும் ப்ரா
ணன்களோடு போவானையின், அப்பொழுது, நான் அந்
தத்தோஷத்தை செய்ததற்கு என்னிடம்வந்து அத்தக்ஷணை
மே என்னை நிந்திப்பாயாக. வாலி என் கண்களுக்கெதி
ரில் தோன்றி மீளவும் ப்ராணன்களோடு போகாதிருப்
பானையின், அப்பொழுது நீ என்னை நிர்த்தோஷனைத்
தெரிந்துகொண்டு என்னையுடனே நிந்தியாதிருப்பாயாக.
நான் ஸப்தஸாலங்களை ஓரேபாணத்தால் பிளந்தது உன
க்கு ப்ரத்யக்ஷமாகத் தெரிந்தவிஷயமே. அந்த வ்ருக்ஷங்
களைப் பிளந்த பலத்திறலேயே இதோ வாலியைத் தள்
ளிவிட்டே னென்று தெரிந்து கொள்வாயாக. வீரனே!
நான் எவ்வளவு கஷ்டம் வந்தபொழுதும் தர்மலோபத்
தைப் பொறுக்க முடியாமல் இதுவரையில் என்றும்
அபத்தஞ்சொன்னதில்லை. இனிமேலும் எவ்வளவுகஷ்டம்
நேரிடினும் சொல்லப்போகிறதுமில்லை. மூளைத்த சம்பாப்
பயிரை இந்த்ரன் மழை பெய்து பலிக்கச் செய்வது
போல் நான் வாலியைக் கொல்வதாகச்செய்த ப்ரதிஜ்ஞை
யைப் பராக்ரமத்திறல் ஸபலமாக்குகின்றனன். எவ்விதத்
திலும் ப்ரதிஜ்ஞையைத் தவறமாட்டேன். ஆகையால்
ஸத்தேஹமுற்றுத் தடுமாற வேண்டாம். அதனால் நீ இப்
போது காஞ்சனமாலையுடைய வாலியை அழைப்பதன்
நிமித்தம் எந்த த்வனிசெய்தால் அவனை வேகமாகப்புறப்
பட்டு வருவானோ அப்படிப்பட்ட சப்தத்தைச் செய்வா
யாக. வாலி எப்பொழுதும் வெற்றியால் விளங்குந்தன்மை
யன்; பலத்திறல் மிகவும் புகழ்பெற்றவன்; மேலும் பலத்
தைக் கொண்டாடுந் தன்மையன்; யுத்தத்தில் விருப்பமு

டையவன்; முன்பு நீ அவனை எதிர்த்திருக்கிறாயாகையால் அதைக் கோபத்தினால் நீ சபித்து செய்தவுடனே எவ்வளவும் தாமதஞ்செய்யாமல் கிளம்பி வருவான். சூராயிருப்பவர் யுத்தத்தில் சத்ருக்கள் செய்யுந் திரஸ்காரத்தை எள்ளளவும் ஸஹிக்கமாட்டார்கள். மேலும், தமது பராக்ரமம் அதிகமென்று நினைத்திருப்பாராயின், அதிலும் விசேஷித்து ஸ்த்ரீகளின் எதிரில் இருப்பார்களாயின், எள்ளளவும் ஸஹிக்க மாட்டார்கள்' என்றனன். பொன்போன்ற வர்ணம் பொருந்திய அந்த ஸுக்ரீவன் ராமன் சொன்னதுகேட்டு ஆகாசம் பிளந்துபோகும்படி பயங்கரமான கர்ஜனையுடன் கூச்சலிட்டனன். கற்குலத்தில் பிறந்த பெண்டிர்கள் ராஜனில்லாத தோஷத்தினால் கேட்பவரின்றிப் பாபபுருஷர்கள் தலைமயிரைப்பிடித் திழுக்கையில் போகவேண்டிய இடத்திற்குப் போகமுடியாமல் வருத்தப்படுவதுபோல், அந்த ஸுக்ரீவன் செய்த த்வனியைக் கேட்டுப் பசுக்கள் திகிலடைந்து முகவொளி மழுங்கப்பெற்று வ்யாகுலமுற்றுப் போயின. மான்கள் யுத்தத்தில் உடல்முறியப்பெற்ற குதிரைபோல் எள்ளளவும் வேகத்துடன் ஓடிப்போக முடியாதிருந்தன. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ரூபத்துடன் விளங்கும் புண்ய புருஷர்கள் தாம் செய்த புண்யமெல்லாம் க்ஷீணித்தபினபு பூமியில் விழுவதுபோல் பக்ஷிகள் தரையில் வீழ்ந்தன. ஸூர்யபுத்ரனாகிய அந்த ஸுக்ரீவன், மேகஸமூஹம ஒன்றுகூடி கர்ஜிப்பதுபோல், ஸிம்ஹநாதஞ் செய்வதில் ப்ரஸித்தனையால் காற்றால் அலைகள் மேலெழும்பப் பெற்ற ஸமுத்ரம்போல் வேகமாக நாதஞ்செய்து பராக்ரமத்தினால் தேஜோவிசேஷம் பெருகப்பெற்றிருந்தனன். பதினான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

வாலி ஸுக்ரீவனது நாதத்தைக் கேட்டு இரண்டாந் தடவை யுத்தத்திற்குப் புறப்படுதலும், தாரை வேண்டா மென்று தடுத்தலும்.

அனந்தரம், தம்பியாகிய ஸுக்ரீவன் மிகுந்த தைர்யத்துடன் செய்த மஹாத்வனியை அந்தப்புரத்தில் இருக்கும் வாலி எவ்வளவும் பொறுக்க முடியாமல் செவியுற்றனன். ஸமஸ்த பூதங்களையும் நடுங்கச்செய்ய வல்ல அந்த ஸுக்ரீவனது பெருத்த்வனியைக்கேட்டவுடனே வாலிக்கு ஓரடியில் காமத்தைப்பற்றின மதமெல்லாம் தொலைந்து பெருங்கோபம் உண்டாயிற்று. அவன் கோபத்தினால் சரீரம் முழுவதும் சிவக்கப்பெற்று ஸந்த்யாகாலத்து வெயில் போன்ற காந்தியுடையவனாகி அந்த க்ஷணத்திலேயே ராஹுவால் பிடிக்கப்பட்ட ஸூர்யன்போல் காந்தியற்றவனாயினன். வாலி வெளுத்த கோரைப்பற்களால் பயங்கரனாகிக் கோபத்தினால் எரிகின்ற அக்னிபோல் புலப்பட்டு மலர்ந்த செந்தாமரைகளோடும் வெண்மையான தாமரைத்தண்டுகளோடும் கூடின ஓர் மடிவைப்போல் ப்ரகாசித்தனன். ஸுக்ரீவனது ஸிம்ஹநாதம் சூரனுக்கு எள்ளளவும் ஸஹிக்கமுடியாத காரணத்தால் வாலி அதைக்கேட்டவுடனே வேகத்தினால் பூமியைப் பிளப்பவன்போல் அடிகளிட்டுக் கொண்டு யுத்தத்திற்கு விரைவாகப் புறப்பட்டனன். தாரை அப்பொழுது பயத்தினால் வேகமுற்றவளாகி ஸ்னேஹத்தினால் கட்டிக் கொண்டு தன மனத்திலுள்ள ஸ்னேஹம் வெளியாகும்படி ஹிதத்தை முன்னிட்டு விளக்கவல்ல வாக்யங்களைச் சொல்லத் தொடங்கி 'தீரோதாத்தமா! நதீப்ரவாஹம்போல் எதிரில்லாமல் பெருகிவருகின்ற இந்தப் பெருங்கோபத்தை, விடியற்காலத்தில் படுக்கையினின்று எழுந்திருந்து சூட்டியனுபவித்த தலைப்பூமா

லையை வீசியெறிவதுபோல் சிறிதும் சேஷமின்றிவிட்டுத் தொலைப்பாயாக. உனக்கு இந்த ஸுக்ரீவனோடு யுத்தஞ் செய்யவேண்டு மென்னும் விருப்பம் உளதாயின், நாளை விடியற்காலம் அவனோடு யுத்தஞ்செய்வாயாக. நீ மஹான வீரத்தன்மை யுடையவன்; ஆகையால் இங்ஙனஞ்செய்வ தில் உனக்கு ஒருலாகவமும் உண்டாகாது. உன்சத்ருக்குக் கும் ஓர்கௌரவம் உண்டாகாது. நீ கொஞ்சமும் முன் பின் ஆலோசியாமல் திடீலென்று யுத்தத்திற்குப் புறப்படு வது எனக்கு எள்ளளவும் யுக்தமாகத் தோற்றவில்லை. நான் உன்னை எதுக்காக வேண்டாமென்கிறேனை அதைச்சொல்லுகிறேன் கேட்பாயாக. ஸுக்ரீவன் முன்பு மேல் விழுந்து வந்தனன். நீ கோபத்துடன் புறப்பட்டுச்சென்று யுத்தத்தில் தலைப்பட்டு அவனை அடித்துத் துரத்துகை யில் திசைகளைப்பற்றி ஓடிப்போயினன். இப்படி உன்னால் துரத்தப்பட்டது மாத்ரமேயன்றி அடியும்பட்டு விசேஷித் துப் பீடிக்கவும்பட்டு ஓடிப்போயினன். இவன் மீளவும் இவ்விடம்வந்துநின்று உன்னை யுத்தத்திற்கு அழைப்பதைக் கண்டால், இவனுக்கு ஏதேதனும் ஒரு பலீயஸ்ஸானஸஹாயம் இருக்குமோ என்று ஸந்தேஹம் உண்டாகின்றது. இவ்வளவேயன்றி, இந்த ஸுக்ரீவன் கர்ஜிக்கும்பொழுது அவனதுகொழுப்பையும் ப்ரயத்னத்தையும் காதத்தையும் ஆடோபத்தையும் கண்டால், இவைகளுக்கெல்லாம் ஏதோ பெரியகாரணம் ஒன்று இல்லாமற்போகாது. அப்படிப்பட்ட ஸுக்ரீவன் இப்பொழுது இவ்விடம் வருவதுபற்றி ஸஹாயமின்றி இருக்கமாட்டானென்று எனக்குத் தன்றுகத் தோற்றுகின்றது. இவன் ஏதோ பெரிய ஸஹாயத்தைப் பற்றியே இருக்கின்றனன். அங்ஙனம் ஸஹாயமுண்டா யிருப்பதுபற்றியே இங்ஙனம் கர்ஜிக்கிறனன்றி வெறுமனேயன்று. ஸஹாயம் ஏற்பட்டதென்று உனக்கு

எப்படி தெரியுமென்கிறாயோ? ஸுக்ரீவன் ஸஹஜமாகவே மிகுந்த ஸாமர்த்யமுடையவன்; மேலும், போரிலுறுதியிருப்பவன். ஆகையால் தனக்கு ஸஹாயமா யிருப்பவனது பராக்ரமத்தை நன்கு பரீக்ஷித்துப் பாரமலே அவனைப் பின்தொடர்ந்து வரமாட்டான. உன் பராக்ரமத்தைக்காட்டி லும் அவன் பராக்ரமம் மேற்பட்டதென்று நிதர்ஸனங்களால்தரித்து கொண்டே அவனுடன் வந்திருப்பான். வீர! நான் வெறுமனே ஊஹித்து இது சொல்வதுமாத்ரமேயன்று. நான் முன்னமே குமாரனிய அங்கதனாலுமாகவும் கேடடிருக்கினறனன். உனக்கு ஹிதமான உரைகளைச சொல்லுகிறன் கேட்பாயாக. இதத நமகுமாரன் அங்கதன விளையாடுவதற்காக அரண்ய மத்யதிற்குப் போய் வந்தனன். அங்கு ஆப்தர்களான சாரர்மூலமாய்க் கேட்டவார்த்தையை எனக்குச்சொல்வினன். அதுவெனில்.—'அயோத்யாதிபதியாகிய தசரதமஹாராஜரது குமாரர்களான ராமலக்ஷ்மணர்களிருவர் உளர். அவர்கள் சூரர்கள். யுத்தத்தில் அவரைவெல்ல எவர்க்கும் தாமன்று. அவர்கள் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவாகள். மிகவும் ப்ரஸித்திபெற்று எப்படிப்பட்டவர்க்கும் அணுகமுடியாத அவ்விருவரும் ஸுக்ரீவனுக்கு ஸஹாயஞ்செய்யும் பொருட்டு ருஷ்யமூகபர்வதத்தில் வந்திருக்கிறாகளாம். உன் தம்பிக்கு ஸஹாயஞ்செய்யவந்தாமன், இதுவரைக்குமே விராதாதிகளைக் கொன்று ப்ரஸித்தி பெற்றவன், யுத்தத்தில் மிகவும் கைதேர்ந்தவன்; பின வாங்காதிருப்பவன்; சத்ரு ஸைனயங்களைப் பாழ்செய்யவல்லவன்; கிளம்பியெரிகின்ற ப்ரலய காலாக்னிபோன்றவன், [1] அவன் எல்

---

1 இங்கு 'நிவாஸவ்ருக்ஷஸ்ஸாயுதோநாமாபந்நாநாம் பராகதிः। ஆர்த்தாநாம் ஸம்ஶ்ரயஶ்சைவ யஶஸஶ்சைகலாஜநம்' என்றும், 'ஜ்ஞாந விஜ்ஞாந ஸம்பந்நோ நிதேஶே நிரதः பிதுः। யாதூநாமிவ ஶை

லோர்க்கும் குளிர்ந்த நிழலைக் கொடுத்துத் தாபத்தைப் போக்கும் நிவாஸ வருக்ஷம்போல் ஸாதுக்களுக்கு வருத் தங்களைப்போக்கி ஸந்தோஷத்தைக் கொடுக்கும் புதுமி

லேந்தீரோ மநுஷ்யராமாகரோ மஹாந' என்றும் மூலம தாஸ ஸ்ரீ ராமனது உண்மையை வெளியிடுகின்றனள். (ஸாயம்ராம நிவாஸவ்ரு க்ஷ:) ராமன் ஸுக்ரீவனுக்கு ஸஹாயமாவானையின் எனகேகன் ஆக மாட்டானென்று வாலி வினவுவாரேவென்று நினைத்து (ஸாயம் நாம்) என்கிறாள. தனது நிழலை யபேக்ஷிக்கும அனுகூலாககு நிவா ஸவ்ருக்ஷமாயிருபபவன் இங்கு ராமனை வ்ருக்ஷமேயாகப் பேதமின் றிச சொல்லுகையால எலலாவிதத்திலும வ்ருக்ஷத்தோடு ஒத்திருக் ககே தோற்றுகிறது. வ்ருக்ஷம் மூதலில தாபத்தைப் போக்கிப் புஷ்பம் பழம் மூதலியவற்றை கொடுகெகையால ஸமஸ்த இந்த்ரியங்களுக் கும் எப்படி தருப்தியை விளவிகக்குமோ, அப்படியே இவனுமென்று கருதது. (நிவாஸ) என்னும் விசேஷணதால் ஒருக்கால நிழல கொ டுக்கும வ்ருக்ஷமன்றென்றும எப்பொழுதும் நிழல கொடுகெகும் வ்ரு க்ஷம் போன்றவனென்றும தோற்றுவிககப்பட்டது. 'வாஸ்ரூஷவத ருசஹாயா நாதிஸீதா நவர்மஜ்ஞாநரகாங்மாரஸமஸ் ஸாகிமர்யம் நஸே வ்யதே' (வாஸ்ரூதேவ னென்னும் வ்ருக்ஷதது னுடைய நிழல் அதிக குளிர்சசிபுடைய தன்று, ஸந்தாபத்தைக கொடுப்பது மன்று, நரக மென்னும நருப்பை அணைக்கவலலது) என்று க்ரந்தாந்தரத்தில் சொலலப்பட்டிருக்கிறது. நாம் ஸுக்ரீவனுக்கு த்ரோஹஞ்செய்வது பற்றிச சிறிதும் ஸாதுகளாகமாட்டோம். ஆகையால் அவன் நமக்கு இப்படியாகமாட்டான். ஸாதுக்களுக்கே அவன் அப்படியாவான் (ஆபந்நாநாம் பராகதி:) தன்னை அடைந்தவர்களுக்குப். பெருந் திக்காயிருப்பவன். 'அநந்யாஸ் சிந்தயந்தோமாம் யே ஜநா: பர்யுபாஸ தே! தேஷாம் நித்யாஹியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்' (எவர் இதர விஷயங்களில மனம் வைக்காமல் வேறொரு கதியுண்டென் ன்னையாமல என்னையே த்யானஞ் செய்துகொண்டு என்னை உபாஸி க்கிறார்களோ, அவனனம் எப்பொழுதும் என்னிடத்திலேயே மனஞ் செல்லப்பெற்ற அவர்களுடைய யோகக்ஷேமங்களை நானே நடத்து கிறேன்) என்கிறபடியே தன்னைப் பற்றினர் விஷயத்தில உபாயா னுஷ்டான தசை முதலாகப் பல வித்திவரையிலும நடுவுள்ள ஸமஸ்த

டமாயிருப்பவன்; தன்னை யடைந்தவர்களுக்கு அவன்

காயங்களையும் நடத்துவோனென்று பொருள். (ஆர்த்தாநாம் ஸம்ஸ்ரயஸ்ரைவ) அந்த ஆஸ்ரிதாகளில வருந்தினவர்களுக்கோ வென்னில (ஸம்ஸ்ரயஃ) எப்பொழுதும் தகுந்த ஆஸ்ரயமானவன். ஸர்வ காரியங்களையும் நிவஹிக்குந தன்மையன். இப்படியே இருக்கட்டும்; எனக்கும் இப்படிப்பட்ட ஆஸ்ரயம் ஒன்று கிடைக்குமென்கிறதாகக் கொண்டு சொலலுகிறுள—(யஸ்ஸஸ்ரைகஹாஜநம்) கீர்த்திக்கு ஒரே இருப்பிடமாயிருப்பவன். அப்படிப்பட்ட கீர்த்தியுடையவன் ராமனொருவனே. அதாவது இப்படிப்பட்ட ரக்ஷகன் உலகத்தில மற்றொருவன் எவனும் அகப்படான் ஆகையால இப்படிப்பட்ட ரக்ஷகனைப் பற்றின ஸ்ரீவசனத திடமென்று பாகதலாகாது. இங்கு 'சதுர்வித ஹஜந்தே மாம் ஜநாஸ்ஸுகரதிநோSர்ஜுந! ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுராயார்தீ ஜ்ஞாநீச ஹரதர்ஷப' (அர்ஜுந! இழந்த ஐஸ்வர்யத்தை விரும்புமவனும் ஜ்ஞானத்தை விரும்புமவனும் புதிதாக ஐஸ்வர்யத்தை விரும்புமவனும ஜ்ஞானியும ஆகிய புண்யவான்களாகிய இநநான்குவகைப்பட்ட ஜநங்களும் என்னை அடைகின்றார்கள்) என்றுசொலலப்பட்ட அதிகாரிகள யாவரும சொல்லப்படுகின்றனர். எப்படியெனனில (ஸாயுஜ்யநாம்) ஆத்மயாதாத்ம்யத்தை அறியவிரும்பின ஜிஜ்ஞாஸுக்களுக்கு கைவலயத்தை ஆசைப்படுமவர்களுககு (ஆபந்நாநாம்) தமக்கு இதுவரையில் இலலாத ஐஸ்வர்யத்தை விரும்பும் அர்த்தார்த்திகளுககு. (ஆர்த்தாநாம்) இழந்த ஐஸ்வர்யத்தைப்பெற விரும்பும் ஆர்த்தர்களுககு. (யஸ்ஸஜ்ஞ) 'உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம்' (இவர்களெல்லோரும் உதாரர்களே. தாராளமுடையவர்களே. ஜ்ஞானிமாத்ரம் எனக்காத்மாவேயென்று என் அபிப்ராயம்) என்று பகவான் சொலலும்படியான மஹாயஸ்ஸையுடைய ஜ்ஞானிககு. இதகு ஒருமைபால ஜ்ஞானி மிகவும் அரியனென்று தோற்றுகிறது. (ஏகலாஜநம்) ஒரே ஸ்தானமாயிருப்பவன். நிகரிலலாத ஆஸ்ரயம். அன்றியே (ஸாயுஜ்யநாம்) உபாஸகர்களுக்கும் (ஆபந்நாநாம்) 'ஸகுஜ்ஜீவப்ரபந்நாய' என்கிறபடியே ஒருகால் நீயே தஞ்சமென்று தன்னைப்பற்றி அவ்வளவில் பயந்தீர்ந்திருக்கும் ப்ரபன்னர்களுக்கும் (ஆர்த்தாநாம்) ஒருகால் பற்றியும ஸம்ஸார பயத்திலுல் ஓயாது முறையிடும் ஆர்த்த ப்ரபன்னர்

மேலானகதி; வருந்தினவர்களுக்கு கல்ல புகுமிடமாயிருப்பவன்; கீர்த்திக்கு முக்ய ஸ்தானமாயிருப்பவன். அந்தராமன் லோகஜ்ஞானமும் சாஸ்த்ரஜ்ஞானமும் மிகுந்திருக்கப்பெற்றவன்; தந்தையின் ஆஜ்ஞையைச் சிறிதும் தான்டாதவன்; ஹிமவத்பர்வதம் கைரிகதாதுக்களுக்கு விளைகளுக்கும் (யஶஸ:) கீர்த்திக்கும (ஏகஹாஜநம்) ஒரே இடமாயிருப்பவன். இப்படிப்பட்டவன் மற்றொருவன் இலலையென்றபடி. ஆஸ்ரிதாகள் வேண்டினவற்றை அறிந்து நிறைவேற்றுகைக்கீடான ஜ்ஞான பூர்த்தியைச சொலலுகிறது—(ஜ்ஞாந விஜ்ஞாநஸம்பந்ந:) ஜ்ஞானமாவது லௌகிகஜ்ஞானம். விஜ்ஞானமாவது—சாஸ்த்ராப்யாஸத்தால் பிறக்கும் ஜ்ஞானம். அவ்விரண்டும் நிறைந்திருகபெற்றவன். அன்றியே ஜ்ஞானஸ்வரூபனும் ஜ்ஞான குணம் நிறைந்தவனுமாவன். இங்ஙனம் ஜ்ஞான பூர்த்தியைசசொலலி, மேல அனுஷ்டான பூர்த்தியைச சொல்லுகிறுள—(நிஷ்ப்ரதி: பிது:) பித்ருவசன பரிபாலனம் ப்ரதானமாகையால இங்குச சொலலப்பட்டதேயன்றி இது மற்றைத் தர்மங்களுக்கும் உபலக்ஷணம். மற்ற தாமங்களையும் இங்குச் சொன்னற்போலவே கண்டு கொளக. ஆகையால் லௌலப்யமும் இங்குச சொலலப்பட்டது. ஸமஸ்த கலயாணகுண ஸமருத்தியைச சொலலுகிறுள—(ஸுஜ்ஞாமாகர:) குணஙகளுக்குப் பிறப்பிடம். இங்குக் குணங்களுக்கென்னும் பரிமிதபால அளவு கணக்கிடமுடியாவென்று தெரிவிகபட்டது. (ஆகர:) கனி பொன்கையால குணஙகளையுடைய ராமன் குணஙகளுக்குமேறபட்டவனென்று தோற்றுவிக்கப்பட்டது. (மஹாந) பெரியகனி யென்கையால—குணஙகளுக்குங்கூட ஸ்வபாவஸித்தமான மேன்மையைக்காட்டிலும் மேன்மேலும் மேன்மையைக் குணியாகிய ராமனது ஸ்வரூபம் விளவிக்குமென்று தெரிவிக்கப்பட்டது. (யாதூநாமிவஸாலேங்கீர:) (யாதூநாம்) என்கையால கைரிகதாதுக்கள்போல் ராமகுணஙகளும் ஜ்ஞானம் சக்தி பலம் ஐஸ்வர்யம் என்னும் பேதஙகளால பற்பல வகைப்பட்டிருக்குமென்கை சொலலப்பட்டது. (ஸாலேங்கீர இவ) ஹிமவத்பர்வதம்போல என்னும் உபமானத்தால் ராமனிடத்திலுள்ள குணங்களுக்குச் சலனமில்லாமை, அலலது—ராமனது சலியாத தைர்யத்தின் மிகுதி தோற்றுகிறது.

நிலமாயிருப்பதுபோல், ஸமஸ்தஸத்குணங்களுக்கும் ஆகர மாயிருப்பவன். அதனல் யுத்தங்களில் ஜயிக்கமுடியாதவ னாகி இவ்வளவு அவ்வளவென்று அளவிடவொண்ணாத மேலான மாஹாத்ம்யங்களையுடைய அந்த ராமனுடன் விரோதித்துக்கொள்வது நமக்கு எவ்வளவும் யுக்த மன்று. சுரனே! உனக்கு ஒரு வார்த்தைசொல்லுகிறன். உன்மேல் ஓர் தோஷத்தை ஏற்றவேண்டுமென்று எப் பொழுதும் விரும்புமவனல்லனே. நான் ஹிதஞ் சொல் லிக்கொண்டிருக்கையில தோஷத்தை ஏற்றவேண்டாம். உனக்கு ஹிதஞ் சொல்லுகிறன. அதைச்சமிகொடுத் துக் கேட்பாயாக. அங்ஙனம் கேட்டு அப்படியே கடத் துவாயாக. வீர! ஸுக்ரீவனை யெளவராஜ்யத்தில் (இளவரசுபட்டத்தில்) சீக்ரத்தில் நன்குபட்டாபிஷேகஞ் செய்வாயாக. பலிஷ்டனுகிய தம்பியுடன் யுத்தம்வைத் துக்கொள்ளவேண்டாம் எனெனனில்—இப்பொழுதுள் ள ஸ்திதியைப்பற்றி ஆலோசித்துப்பார்க்கையில், ராம னைவிட்டு ஸ்நேஹஞ்செய்துகொள்வதும் ஸுக்ரீவனுடன் வை ரத்தைத் தூரத்தில்துறந்து ப்ரீதிபண்ணிக்கொள்வதும் உனக்குத் தகுந்தவையென்று எனக்குத் தோற்றுகின்றது. உன் தம்பியாகிய இந்த ஸுக்ரீவன் உனக்கு எவ்விதத்தி லும் உபலாலனஞ் செய்யத் தகுந்தவனேயல்லவா? இவன் ருஸ்யமூகபர்வதத்தில் இருந்தால் என்? இவ்விடத்திலிரு ந்தால என்? எப்படியாயினும் உன் பந்துவென்றி வேறு பட்டவனல்லன். உனக்கு அவனைப்போன்ற பந்து பூமி யில எங்கும் மற்றொருவனும் அகப்படான். ஆகையால் அவனுக்குப் பணம் பொன்முதலியவற்றைக் கொடுத்துக் கௌரவத்திலும் ஐச்வர்யத்திலும் உனக்குப்பின் இரண் டாவனைச் செய்து வைத்துக்கொள்வாயாக. ஸுக்ரீவன் என்றும் உனக்குப் பந்து. ஆகையால் இவனுடன் விரோ

தத்தை விட்டு அகன்ற கண்டத்துடன் விளங்கும் ஸுக்ரீவனை உன் பார்ஶ்வத்தில் இருக்கும்படி செய்விப்பாயாக. நீ இப்பொழுது தம்பியுடன் ஸ்நேஹஞ் செய்து கொள்வாயாக. இப்பொழுது உனக்கு இவனைக் காட்டிலும் வேறு கதி ஒருவனும் இல்லை. எனக்கு ப்ரியஞ்செய்யவேண்டுமென்று நீ நினைப்பாயாயின், நான் உன் ஹிதத்தை விரும்புபவனென்று நீ அறிகிருப்பாயாயின், நான இவ்வளவு பலப்ரயத்னங்களோடு வேண்டிக் கொள்வதற்கு ஹிதமான என வார்த்தையை அங்கீகரித்து அவ்வண்ணம் செய்வாயாக. கோபத்தைவிட்டு மனக்கலக்கம் தெளியப்பெற்று நான் சொல்லும் ஹிதவசனத்தைச் செவியில் ஏற்றுக் கொள்வாயாக. கோபத்தையே பின்தொடர்ந்து செல்வது யுக்தமனறு. நீ இக்ஷ்வாகு வம்சத்த பராக்ரமமுடையவனுயினும் கோஸலராஜன் குமாரனுகிய ராமனோடு போராடுவது உனககு எவ்வளவும் யுக்தமன்று' என்றனள். தாரை, ஹிதஞ்சொல்லவேண்டிய அக்காலத்தில், வாலிக்கு இவ்வளவு தூரம் மேனமையை விளக்கும்படியான வார்த்தைகளைச் சொன்னளல்லவா? ஆயினும் வாலி ம்ருத்யுவின கையில் அகப்பட்டிருபபதுபற்றியும விகாசகாலம் ஸமீபித்திருப்பது பற்றியும் அவனுக்கு அந்த ஹித வசனங்கள் எவ்வளவும் ருசிக்கவில்லை. பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வாலி தாரைக்கு ஸமாதானங் கூறுதலும், வாலி ஸுக்ரீவர்கள் மீளவும் யுத்தஞ் செய்தலும், ராமன் வாலிமேல பாணப்ரயோகஞ் செய்தலும். }

சந்த்ரபிம்பம் போன்ற முகமுடைய தாரை இங்ஙனஞ் சொல்லிக்கொண்டிருக்கையில், வாலி அவளை அதட்டி 'அழகிய முகமுடையவளே! இவன் கர்ஜனை செய்கின்ற

ணன். அதிலும் எனக்குத் தம்பியும் விசேஷித்துப் பகை வனுமாயிருந்து ஸிம்ஹாதம் செய்துகொண்டிருக்கையில், இவனது ஆடோபத்தை எந்தக்காரணத்தைப்பற்றிப் பொறுத்திருப்பேன்? நீ பயப்படும் தன்மையளாகையால் உனக்குத் தெரியாது. எப்பொழுதும் எவரிடத்திலும் தரஸ்காரம் பெறுமலும் யுத்தங்களில் பின்வாங்காமலும் விளக்கமுற்றிருக்கும் வீரர்களுக்கு எவராயினும் தரஸ்காரஞ் செய்வார்களாயின், அதைப்பொறுப்பது மரணத்தைக் காட்டிலும் மேலாயிருக்கும். மரணத்தையாயினும் பொறுத்திருப்பார்களேயன்றி அவமானத்தைப் பொறுக்கவல்லரல்லர். இப்படிப்பட்ட தான் கண்டம் மத்தமாயிருக்கப்பெற்ற ஸுக்ரீவன் யுத்தத்தில் விருப்பமுற்றுப் போர்புரிய வருவானென்று கர்ஜித்துக் காட்டும் ஆடோபத்தை எள்ளளவும் பொறுக்கமாட்டேன். ராமனுல் எனக்கு ஏதேனும் பாதை உண்டாமென்று நீ எவ்வளவும் வருததப்படவேண்டாம. அவன் தர்மங்களை யுணர்ந்தவன. பிறர் செய்யும் கார்யாகார்யங்களை நனகாராய்ந்தறியுந்திறமுடையவன. ஆகையால் நிரபராதியாகிய என்னைக்கொல்லும் பாபகார்யத்தை எபபடி செய்வான? தாரே! நீ உன்னுடன் வந்த ஸ்த்ரீகளோடு திரும்பிப்போவாயாக. 'போ' என்றால் மீளவும் என்னை ஏன பின்தொடர்ந்து வருகின்றனை? என்னிடத்தில் உனக்குள்ள ஸ்னேஹத்தைக் காட்டினை. என்னிடத்தில் உனக்குள்ள பக்தியையும் நிறைவேற்றினை. இவ்வளவே போதும். தான் போய் ஸுக்ரீவனோடு யுத்தஞ் செய்கின்றனன். நீ தொந்தரவு படவேண்டாம். அனைது கொழுப்பை மாத்ரம் போக்குவேனன்றி ப்ராணன்களை வாங்கமாட்டேன். போர்புரிவதில் மனக்கவலையுற்றிருக்கின்ற நீ அவன் ப்ராணன்களைக் காப்பது எப்படி யென்னவேண்டாம். அவன் ப்ரா

ணன்கூலை வாங்காதிருக்கையே யன்ரு நம் விருப்பம். நான். அவன் யுத்தத்தில் தலைப்படினும் நான் விரும்பினபடி அவன் ப்ராணன்கள் போகாதிருக்கும்படி பாதுகாத்துவருவேன். ஆகையால் அவன் என்னல் வ்ருக்ஷங்களாலும் குத்துவரிசைகளாலும் பீடிக்கப்பட்டுத் திரும்பிப்போய்விடுவான். துராத்மாவாகிய அந்த ஸுக்ரீவன் யுத்தத்தில் என் கர்வத்தையும் என் ப்ரயத்னத்தையும் எவ்வளவும் ஸஹிக்கவல்லனல்லன். தாரே! நீ தெரிக்தமட்டும் சொல்லி எனக்குப் புத்தியால் நிரம்பவும் ஸஹாயஞ் செய்தனை. என்னிடத்திலுள்ள ஸ்நேஹத்தையும் காட்டினை. இனிப்போகலாம். என ப்ராணன்களின் மேல் உனக்கு ஆணையிடுகின்றனன். சீக்ரம் திரும்புவாயாக. நான் ஜயிக்கும்படி ஆசீர்வாதஞ் செய்து மீளுவாயாக. நான் என் தம்பி ஸுக்ரீவனை யுத்தத்தில் வென்று திரும்பி வருகின்றேன்' எனறனன். இனிய உரைகளை உரைக்கின்ற அந்தத் தாரை தன் விஷயத்திலும் பிறர் விஷயத்திலும் ஒரே ரீதியாக ஹிதத்தை விரும்புந் தன்மையளாகையால், பர்த்தாவுக்கு மறுமொழி ஏதுஞ் சொல்லமுடியாமல் அவ்வாலியை அணைத்து அமங்கல மென்னும் பயத்தினல் மெதுவாக ரோதனஞ் செய்துகொண்டு அவனுக்கு பரதக்ஷிணஞ்செய்தனள். அனந்தரம் தாரை வாலிக்கு க்ஷேமம் உண்டாகவேண்டு மென்று பௌராணிக மந்த்ரங்களால் ஸ்வஸ்த்யயனஞ் செய்து மனவருத்தத்தினல் ஒன்றும் தோற்றப்பெறுமல் பரிதபித்துக்கொண்டு ஸ்த்ரீகளோடுகூட அந்தப்புரத்திற்குப் போயினள். இங்ஙனம் தாரையும் அவளுடன் வந்த ஸ்த்ரீகளும் அந்தப்புரத்திற்குப் போனபின்பு, அதுவரையில் அவர்கள் பயப்படுவார்களென்று தன் கோபத்தை அடக்கிக்கொண்டிருந்த வாலி, அப்பொழுது கோபித்து ம்ஹாஸர்ப்பம்போல்

கெடுமுச்செறிந்துகொண்டு கிஷ்கிந்தா புரத்தினின்று வெளிப்பட்டனன். மஹா தேஜஸ்வியும் மிகுந்த கோபிஷ்டனுமாகிய அவ்வாலி கெடுமுச்செறிந்துகொண்டு பகைவனுகிய ஸுக்ரீவனைக் காண்பதற்காக காற்புறத்திலும் கண்ணை விட்டுப் பார்த்தனன். அனந்தரம் வீரலக்ஷ்மி யமைந்த அவ்வாலி, ஸுக்ரீவன் இடையில் வஸ்த்ரத்தைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு யுத்தத்திற்கு ஸந்நாஹப் பட்டு ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அக்னி போல் பொன்வர்ணம் விளங்கப்பெற்று நின்றிருக்கக்கண்டனன். மஹா கோபஸ்வபாவனுகிய அவ்வாலி, அங்ஙனம் யுத்தஸந்நாஹத்துடன் அருகிலிருக்கின்ற மஹா வீர்யமுடைய ஸுக்ரீவனைக்கண்டு தானும் இடையில் வஸ்த்ரத்தைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டனன். இங்ஙனம் வீர்யசாலியாகிய அவ்வாலி இடையில் ஆடையைக் கட்டிக்கொண்டு யுத்தத்தில் உத்ஸாஹம் விளங்கப் பெற்றுக் கையைப பிடியாகப் பிடித்துக்கொண்டு ஸுக்ரீவன்மேல் தலைப்பட்டனன். ஸுக்ரீவனும் கெட்டியாகப் பிடியைப் பிடித்துக்கொண்டு மிகுந்த வேகத்துடன் காஞ்சனமாலையுடைய வாலிமேல் எதிர்த்துப் போயினன். வாலி கோபத்தினால் கண்கள் சிவக்கப்பெற்று அங்ஙனம் தன்மேல் யுத்தத்தில் கைதீர்ந்த வீரனுகிய ஸுக்ரீவன் மஹாவேகத்துடன வந்துகொண்டிருப்பது கண்டு 'இதோ! இந்தப் பிடியைப்பார். விரல்களையெல்லாம் கெட்டியாக மடக்கிக்கொண்டு கன்னுக இதைப்பிடித்துக்கொண்டிருக்கிறன். அப்பா இதனால் வேகத்துடன் ஒருகுத்து குத்தினவுடன் உன் ப்ராணனகளை எடுத்துக்கொண்டுபோம்' என்றனன். வாலி இங்ஙனஞ் சொல்லுகையில் ஸுக்ரீவன் கோபித்து வாலியைப் பார்த்து 'இதோ என்பிடி உன் தலையில் பட்டு உன் ப்ராணன்களையே தொலைக்கப்போகி

ன்றது' என்றனன். வாலி அங்ஙனம் சொன்னதுமாத்
மன்றிக்கே தீரர்களின் ஏற்பாட்டைக் கடந்து ஸுக்ரீவ
ன்மேல் எதிர்த்துவந்து முட்டியால் குத்துகையில் அந்த
ஸுக்ரீவன் மிகவுங்கோபித்து வேகத்துடன் வாலிமேல்
எதிர்த்து உடம்பெல்லாம் ரக்தம் பெருகப் பெற்று அரு
வியோடுகூடின மலைபோல் இருந்தனன். அப்பொழுது
ஸுக்ரீவனும் வேர்களுடன் ஓரு ஸாலவ்ருக்ஷத்தைத்
தனது பராக்ரமத்தினல் அனாயாஸமாகத் தடையின்றிப்
பிடுங்கி வாலியின் அவயவங்களெல்லா வற்றிலும் படும்
படி வஜ்ராயுதத்தினல் ஓர் பெரிய மலையை அடிப்பதுபோ
ல் அடித்தனன். அவ்வாலியும் அந்த ஸாலவ்ருக்ஷத்தின்
அடியினல் அவயவங்கள் விலவிலக்கப்பெற்று ஸுத்ரத்
தில் பாரத்தின் மிகுதியால் மூழ்குகின்ற வர்த்தகர்களின்
ஓடம்போல் நடுக்கமுற்றனன். பயங்கரமான பல புராக்ர
மங்கள் அமைந்தவர்களும் கருடனைப்போன்ற வேகமு
டையவர்களும் பயங்கரமான உருவத்துடன் விளக்கமுற்
றவர்களுமாகிய அநதவாலி ஸுக்ரீவர்கள் பூர்ணிமையினா
ன்று சநத்ரனும் ஸூர்யனும்போல மேல்மேலும் வளர்ந்
துவந்தனர். பகைவரை அடக்குந் தன்மையுள்ள அவ்விரு
வரும் யுத்தத்தில் ஒருவாமேல் ஒருவர் அவகாசந்தேடிக்
கொண்டிருந்தனர். அனந்தரம் பல வீர்யங்கள் அமைந்த
வாலிமாத்ரம் கொஞ்சநேரத்தில் யுத்தத்தில் பலம்பெரு
கப்பெற்றனன். ஸூர்யபுத்ரனாகிய ஸுக்ரீவன் மஹாவீர்
யனையிருந்தும் வாலியிடம் அது ஓங்கப்பெறுமல் வீர்யம்
குறையப்பெற்றனன். அப்பொழுது ஸுக்ரீவன் வாலியால்
தன் கொழுப்படங்கவும் ப்ராக்ரமம் குறையவும் பெற்று
வாலியினிடம் கோபித்துக்கொண்டு தனது அற்பத்தன
த்தை வெளியிடலாயினன். பிறகு அவ்விருவரும் கிளைக
ளோடும் நுனிகளோடும் பிடுங்கி வ்ருக்ஷங்களாலும் வஜ்



1707. வாலி ஸுக்ரீவர்களின் யுத்தமும், வாலியின் மேல் ராமன் பாணப்ரயோகஞ் செய்தலும்.

ராயுதத்தின் நுனிகளை நிகர்த்த நகங்களாலும் குத்துவ நிசைகளாலும் முழந்தாள்களாலும் கால்களாலும் ஙைக களாலும் ஒருவனையொருவன் அடிக்கடி புடைத்துக்கொ ண்டு வ்ருத்ராஸுரனும் தேவேந்த்ரனும்போல் பயங்கர மாக யுத்தஞ்செய்தனர். வனசாரிகளான அந்தவானர் களிருவரும் ரக்ததத்திலுல் நனைந்து பெருங் கர்ஜனை களால் ஒருவனையொருவன் அதட்டிக்கொண்டு காண் போர்க ளனைவரும் தத்தளிக்கும்படி யுத்தஞ்செய்தனர். அதன்மேல ஸ்ரீராமன், வானர ச்ரேஷ்டரெகிய ஸுக்ரீ வன் பலத்தில் குறைந்து வாலியின்முன் நிற்கமுடியாமல் தன் முயற்சி தெரியும்படி அடிக்கடி காற்றிலைகளையும் சோக்கிக்கொண்டிருக்கக் கண்டனன். அப்பால் வீர னும் மஹா தேஜஸ்வியுமாகிய ராமன் கபீந்த்ரனை ஸுக் ரீவன் வருந்துவதைக் கண்டு வாலியைக் கொல்லும்பொ ருட்டு அதற்குத்தகுந்த கல்லபாணம் எதுவெனறு ஆலோ சித்தனன. பிறகு ராமன மஹா விஷ்ணுஸ்ப்ரப்பம்போ ன்ற ஓர் பாணத்தைதத்தனுஸ்ஸில் ஸந்தானம்பண்ணி யம ன்கால சக்ரத்தைதப்போல் அந்தத் தனுஸ்ஸைஸக் காதுவ ரையிலும் இழுத்தனன். அந்த ராமனது கரனும் கைத் தலமும் ஒன்றேரிடான்றுறைந்து மோதிக்கொள்வதர லு ண்டாகும் பெருங் கோஷத்தைக் கேட்டுப் பெருப்பெரிய ப க்ஷிகளும் ம்ருகங்களும் ப்ரளயகாலத்திற்போல் பயந்து எதுவுந்தெரியாமல் திசைகளைப்பற்றி ஓடிப்போயின. ராம ன் அந்த மஹாபாணத்தை வில்லினின்றும் விட்டவு டனே அது வஜ்ராயுதம்போல் பெருங் கோஷமிட்டுக் கொண்டு தளதளவென்று மின்னற் கொடிபோல் விளக் கழுற்று வாலியின் வக்ஷஸ்தலத்தில்போய்ப் பொத்துக் கொண்டது. மஹா தேஜஸ்வியும் வீர்யத்தில் கர்வழுற்ற வனுமாகிய அந்த வானரேச்வரன் வாலி அந்தப் பாண

வேகத்தினல் அடிக்கப்பட்டு ஒளி மழுங்கி ப்ரஜ்ஞையும் தப்பிக் கார்த்திகைமாஸத்துப் பூர்ணிமையி னன்று உத்ஸவத்தின் முடிவில் நிலத்தில் தள்ளப்பட்ட இந்த்ரத்வஜம் விழுவதுபோல் கீழ விழுந்தனன். புருஷநிலகணிய ராமன் ப்ரளயகாலத்தில் ருத்ரன் முகத்தினல புகையோடுகூடி ஜ்வாலைகளை விடுகின்ற அக்னியைக் கக்குவது போல் ப்ரளயகாலத்து மிருத்யுவை நிகர்த்துப் பொன்னும் வெள்ளியாலும் அலங்காரஞ் செய்யப்பெற்றுப் பகைவரைப் படிசூர்ணஞ்செய்வதும் தகதகவென்று விளங்குவதும் இறகுகள் கட்டப்பெற் றிருக்கையால் புகையோடுகூடின அக்னிபோல் புலப்படுவதுமாகிய அம்மேலானபாணத்தை வாலியின்மேல் ப்ரயோகித்தனன். அதன்மேலஅந்த இந்த்ரகுமாரனிய வாலி யுத்தத்தில் தேஹம்முழுவதும் ரக்தப்ரவாஹத்தின பெருக்கினல நனைந்துப்ரஜ்ஞை தவறப்பெற்று* கன்து புஷ்பித்த அசோகவ்ருக்ஷம் காற்றினல் முறிக்கப்பட்டுத் தரையில் வீழ்வதுபோலும் உத்ஸவத்தின்முடிவில் தள்ளப்பட்ட இந்த்ரத்வஜம் பூமியில் வீழ்வதுபோலும் தான் பூமியில் வீழ்ந்தனன. பதினேழுவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வாலி ராமனை நிந்திதல். }

அதன்மேல் யுத்தத்தில் கைதீர்ந்த வல்லவனிய வாலி ராமபாணத்தினல் அடிக்கப்பட்டு அறுக்கப்பட்ட வருக்ஷம்போல் கபீலென்று தரையில வீழ்ந்தனன். மேலான பொன் பூஷணங்களை அணிந்திருக்கின்ற அவ்வாலி கட்டுக்கயிறு அறுகையில் இந்த்ரத்வஜம் தரையில் வீழ்வதுபோல் அவயவங்களெல்லாந தரையில் பதிம்படிவிழுந்தனன். வானரஸ்ரேஷ்ட்ங்களுக்கெல்லாம் ப்ரபுவாகிய அவ்வாலி தரையில் வீழ்ந்தவுடனே சந்த்ரனில்லாத ஆகா

யம்போல் பூமிமுழுவதும் விளக்கமுறு திருந்தது. அங்ஙனம் அம் மஹானுபாவன் தரையில்வீழ்ந் திருப்பினும் அவன் தேஹத்தைக் காந்தியும் ப்ராணன்களும் ப்ரதாபமும் விட்டுப் பிரியவிலவே. வீரனுகிய அவ்வானரர் தலைவன் அந்தக் காஞ்சனமாலையைத் தரித்திருக்கையால் சுற்றிலும் ஸத்யாராகம் படர்ந்திருக்கப்பெற்ற மேகம் போல புலப்பட்டனன். அப்பொழுது அவ்வாலி தரையில் வீழ்ந்திருப்பினும் அவன தேஹமும் அவனது காஞ்சனமாலையும் அவனது மர்மஸ்தானத்தில் பொத்துக்கொண்டிருக்கிற ஸ்ரீராமபாணமும் ஆக இம்மூன்றும் விளங்குவது கண்டால் அவனது தேஜஸ்ஸு அம்மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டதுபோல் மிகவும் விளங்கிற்று. அந்த அஸ்த்ரம் ஸாதாரணமாகத் தன்னுல் மரணம் அடைந்தவர் அனைவர்க்கும் ஸ்வர்க்கமார்க்கத்தை விலை விக்கவல்லது. அது மேலும் ராமதனுஸ்ஸினின்று புறப்பட்டதாகையால் வீரனுகிய அவ்வாலிக்குப் புனராவருத்தியில்லாத பரமகதியையே விளவித்தது. அங்ஙனம் அப்பொழுது யுத்தகதில் தரையில்வீழ்ந்து ஜ்வாலையில்லாத அக்னிபோன்றவனும் 'பாணத்தை நன்றுக எய்தான்' என்று பாணப்ரயோகஞ்செய்த அவ்வீரனைப் புகழ்ந்து அவன எங்கிருக்கிறுன என்று தெரிந்துகொள்ளும் பொருட்டும் பெருவேதனையுடன் மெல்லமெல்ல உற்றுப் பார்க்கின்றவனும் புண்யம் முடிகையில் தேவலோகத்தினின்று பூமியில்வீழ்ந்த யயாதியைப்போலவும் ப்ரளயகாலத்தில் தெய்வத்தினுல் பூமியில் தள்ளப்பட்ட ஸூர்யன் போலவும் புலப்பட்டுக்கொண்டு மஹேந்த்ரனைப்போல் எதிரிடவொண்ணுதவனும் மஹேந்த்ரனைப்போல் எதிர் நின்று பிறர்க்குப் பொறுக்கமுடியாதவனும் ஸிம்ஹம்போல் அகன்றமார்புடையவனும் நீண்ட பாஹுதண்டங்களும் பள

பளவென்று ஜ்வலிக்கின்ற முகமும் பொன்வர்ணமான கண்களும் காஞ்சனமாலையும் விளங்கப் பெற்றுத் தரையில் வீழ்ந்திருக்கின்றவனுமாகிய வாலியை ராமன் கண்டு தானும் லக்ஷ்மணனுமாக அவனருகிற் சென்றனன். வாலியும் ராமனையும் மஹா பலஞ்கிய லக்ஷ்மணனையும் கண்டு வணக்கத்துடன் பருஷமாகவும் தர்மம் அமைந்திருக்கும் படிக்கும் சொல்லத்தொடங்கி 'நீ மஹா ராஜனுயிருக்கின்றனை. மிகவும் புகழ்பெற்றவன்; சாஸ்த்ரங்களில் விருப்பமுடையவன்; நற்குலத்திலபிறந்தவன்; பலம் மிகுந்திருக்கப் பெற்றவன்; மஹா தேஜஸ்வி; பலவ்ரதங்களை ஆசரித்தவன்; நான் உன்னை எதிரிடாமல் மற்றொருவனேடு யுத்தஞ் செய்யும் ஸம்ப்ரமத்திலிருக்கையில் என்மார்பில் பாணத்தை காட்டியடித்தனையே! இப்படி வேறுமுகமாயிருப்பவனை அடிப்பதனுல் உனக்கு எனன பெருமை உண்டாயிற்று?' 'ராமன் காருண்யமறிந்தவன்; ப்ரஜைகளின் ஹிதத்தில் மனஞ்ஞ முடையவன்; தயை நிறைந்தவன்; உத்ஸாஹத்தை வென்றவன்; பெரியோர்களது ஆசாரங்களை அறிந்தவன்; வ்ரதங்களைத் தவறுமல் கடைத்துந்தன்மையன்' என்று பூமியில்உன்கீர்த்தியை ஸமஸ்த பூதங்களும் சொல்லுகினறன. ராஜனே! [1] இந்த்ரிய நிக்ரஹமும் சித்த ப்ரசாத்தியும் (மன அடக்கமும்) பொறுமையும் தைர்யமும் ஸத்யமும் பராக்ரமமும் அபராதிகளிடம் தண்டனையும் ஆகிய இவை ராஜலக்ஷணமென்பார்கள். நான், உன்னிடத்தில் அந்த குணங்களையும் மேலும் நீ பெருங்குலத்தில் பிறந்ததையும் நினைத்துத் தாரை போகவேண்டாமென்று தடுத்தபோதிலும் கேளாமல் எனக்கு நீ எதுங்கெடுதிசெய்யமாட்டா யென்று ஸுக்ரீவனேடு யுத்தஞ்செய்ய வந்தனன். உன்னைப்பாராதிருக்கும்பொழுது நான் மற்றொருவனேடு யுத்

தஞ்செய்துகொண்டு பராக்காயிருக்கையில், 'ராமன் என்னை ஏதுஞ்செய்பவனல்லன்' என்று நினைத்திருந்தனன். உன்னைப் பார்த்தபின்பு உனது வாஸ்தவமான ஸ்வபாவந் தெரியவந்தது. நீ மிகவும் புத்திகெட்டவ னென்றும் லோகங்களை வஞ்சிப்பதற்காகத் தர்மசிஹ்னந்தரித்தவ னென்றும் வாஸ்தவத்தில் அதார்மிகனென்றும் பாபாசாரமுடையவனென்றும் புல்லுமுடினகிணறுபோன்றவனென்றும் எனக்குத் தெரியாது. நீ ஸத்புருஷர்களைப்போல் வேஷந் தரித்துத் தர்மமென்னும் வியாஜத்தினால் உனது உண்மையை மறைத்துக்கொண்டு நீறுபூத்தநெருப்புபோன்ற பாபிஷ்டனென்று குறிதெரியப் பெருதுபோயினன். உன்தே சத்திலாவது உன்பட்டணத்திலாவது நான் எள்ளளவும் அபகாரஞ் செய்யவில்லை. உன்னை நான் எவ்விதத்திலும் அவமானித்ததில்லை. இப்படி ஒன்றுஞ் செய்யாமல் காய்களையும் வேர்களையும் தின்றுகொண்டு அரண்யத்தில் தினியுந் தன்மையுள்ள ஓர் கேவல வானரனும், உன்னைநினை எதிர்த்துச் சண்டைசெய்யாதவனும், அதிலும் உனக்கு முகங்காட்டாமல் மற்றொருவனை யுத்தஞ் செய்கின்றவனும் எந்தப் பாபத்தையும் அறியாதவனுமாகிய என்னை எதனால் வதித்தனை? ராஜனே! தர்மம்போல் தோற்றுங் கபடமும்கூட உன்னிடத்தில் இருக்கவே இருக்கின்றது. இதுஸ்பஷ்டமாக உன் கார்யத்தினால் தெரிய வருகின்றது. க்ஷத்ரியகுலத்தில பிறந்து கல்வியுடையவன் எவன் தர்மவேஷத்தினால் தன்னை மறைத்துக்கொண்டு சிறிதும் சங்கையின்றிப் பாபகார்யத்தைச் செய்வான்? ராமா! நீ ராஜவம்சத்தில் பிறந்தனை. தர்மிஷ்ட னென்று பெரும்புகழ் பெற்றனை. இப்படி யிருந்தும் வாஸ்தவத்தில் கொடுந்தன்மையனைப் பிறரை வஞ்சனை செய்வதற்காக மேலுக்கு ஸாதுவேஷத்துடன் திரிகின்றனை யேன்? ராஜனே!

கல்வார்த்தையும் தானமும் பொறுமையும் தர்மமும் ஸத்
யமும் தைர்யமும் பராக்ரமமும் அபராதஞ் செய்தவர்க
ளைத் தண்டித்தலும் ஆகிய இவை ராஜகுணங்கள். நரநர
தனே! நாங்கள் காய்கிழங்குகளை ஆஹாரமாகக்கொண்டு
அடவியில் திரியும் மிருகங்களா யிருக்கின்றனம். இது
எங்கள் ப்ரக்ருதி. நீயோ மனுஷ்யன். அதிலுமம் மனிதர்க
ளுக்கெல்லாம் மன்னவனாயிருப்பவன். பூமி பொன் வெள்ளி
ஆகிய இம்மூன்றும் யுத்தத்திற்குக்காரணமாயிருப்பவை.
அவைகளிலாவது அல்லது இவ்வனத்திலுள்ளா னென்ன
இதரபலங்களிலாவது உனக்குப் போராசை யேதனும்
உண்டாயிருக்கின்றதா? நீதியும் அனுக்ரஹமும் கல ரா
ஜாக்களுடைய தர்மங்கள். அபநீதியும் நிக்ரஹமும் கெட்ட
ராஜாக்களுடைய தர்மங்கள். இங்ஙனம் ராஜாக்களுடைய
நிலை வேறுவேறு யிருப்பவைகளேயன்றி ஒன்றோடொன
று கலந்து கூடிக்கொண்டிருப்பவையல்ல. மனம்போனபடி
நீதி அபநீதிகளையும் நிக்ரஹ அனுக்ரஹங்களையும் கலந்து
கடத்தலாகாது. ஆகையால் ராஜாக்கள் மனந்தான்றின
படி கடக்கத் தகாது. உனக்கோ காமமே முக்யமாயிருக்
கின்றது. நீ கோபஸ்வபாவன; மர்யாதை யற்றவன; அக்
ரமமாக ஒன்று செயயவேண்டி யிருக்க மற்றொன்றுசெய்
கின்றனை. ஆகையால உனது ராஜநிலைமை விபரீதமாயி
ருக்கின்றது. (ஸங்கீர்ணமா யிருக்கின்றது.) மேலும் வேட்
டையையே முக்யமாக வைத்துக் கொண்டு மனத்தில்
தோன்றினவினையெல்லாம் வதித்துக்கொண்டிருக்கின்ற
னை. மனிதர்களுக்குத் தலைவனே! உனக்குத் தர்மத்தில் எ
ள்ளளவும் ப்ரதிஷ்டை இல்லை. பணவிஷயத்திலும்கூட உன்
புத்திக்குப் பிறர் த்ரவ்யம் கூடாதென்னும் ஏற்பாடில்
லை. மேலும் இஷ்டம்போனபடியெல்லாம் கடந்துகொண்டி
இந்த்ரியங்கள் போனவழி யெல்லாம் போகின்ற யானை

யால் காமத்திலும் உனக்கு வ்யவஸ்தை இல்லை. ராமா! நீ பெரிய ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவன். உனக்கு எந்த அபராதமும் செய்யாத என்னைபாணத்தையெய்து அடித்தனையே! இங்ஙனம் நிக்ருதிக்கிடமான கார்யத்தைச் செய்து நற்செயலாகிய ஸத்புருஷர்களின முன்பு என்னஸமாதானஞ் சொல்லப்போகின்றனை? ராஜாவைக் கொன்றவனும் ப்ராஹ்மணனைக் கொன்றவனும் கோவதஞ் செய்தவனும்திருடனும் எப்பொழுதும் ப்ராணி ஹிம்ஸை செய்கின்றவனும் நாஸ்திகனும் அண்ணன் விவாஹமின்றி யிருக்கத் தான் விவாஹஞ்செய்துகொண்டவனும் ஆகிய இவ்வனைவரும் நரகத்தையடைவார்கள். கோள் சொல்பவனும் லோபியும் மித்ரகாதுகனும் குருபார்யையைப் புணர்ந்தவனும் ஆகிய இவர்கள் பாபிஷ்டர்கள் பெறும் லோகத்தைப் பெறுவார்கள். இதில் ஸந்தேஹம் இல்லை. 'ராஜாக்களாகிய எங்களுக்கு வேட்டையாடுவது தோஷமன்றே! என் படிக்கிறாய்? என்ன வேண்டாம். தர்மத்தை ஆசரிக்குந் தன்மையுள்ள உன்னைப்போன்ற ஸத்புருஷர்களுக்கு என் தோல் மான்தோலைப்போல் உடுக்கத்தக்கதன்று. எனது ரோமங்களும் அவர்க்கு உதவாதவைகளேயன்றிச் சாமரம்போல் உபயோகப்படத் தகுந்தவையல்ல. எனது எலும்புகள் யானையின் எலும்புபோன்றவை யல்ல; நிஷேதிக்கப்பட்டவைகளே. என் மாம்ஸமும் பக்ஷிக்கத் தகுந்ததன்று. ராமா! ஜகதுகமுடைய ம்ருகங்களில் முள்ளம்பன்றி காட்டுப்பன்றி உடும்பு முயல் ஆமை ஆகிய இவ்வைந்து ம்ருகங்கள் மாத்ரமே ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஸ்யர்களுக்குப் பக்ஷிக்கத் தகுந்தவை. மற்றவை பக்ஷிக்கத் தகுந்தவை யல்ல. பண்டிதரா யிருப்பவர் என்தோலையும் எலும்புகளையும் தொடமாட்டார்கள். என் மாம்ஸத்தைப் பக்ஷிக்க மாட்டார்கள். இங்ஙனம் பக்ஷிக்கத் தகாத பஞ்

சதக ம்ருகங்களில் (ஐந்துகழுடைய ம்ருகங்களில்) ஒரு வனுகிய என்னை வீணுகக்கொன்றனை. இவ்வளவு [1]பாபசிந்தையும் உனக்கு இல்லாமற்போயிற்றே! ஸர்வஜ்ஞையாகிய தாரை ஹிதமும் ஸத்யமுமாகிய வாக்யத்தையே எனக்குச் சொல்லினள். நான் தெரியாமையால் அந்த வார்த்தையை அதிக்ரமித்து ம்ருத்யு வசத்தில் வீழ்ந்தனன். கல்லொழுக்கழுடைய பெண்மணி, காதலனிருந்தும் அவனை தூர்த்தனுயிருப்பானுயின அவள் காதனற்றவள்போலவே இருப்பதுபோல், அதர்மிஷ்டனுகிய நீ பூமிக்கு காதனுயிருந்தும் அது காதனற்றதேயாகும். நீ தெரியாமல் பிறர்க்கு அனிஷ்டஞ் செய்பவன். பிறர்க்கு அபகாரஞ் செய்கையே உன் பிழைப்பு. மேலுக்குச் சாந்தனுயிருப்பவன்போல் அபிநயஞ்செய்யுங் குடிலன்; பாபிஷ்டன். இப்படிப்பட்ட நீ மஹானுபாவனுகிய தசரதமஹாராஜன் வயிற்றில் எப்படி பிறந்தனை? மதங்கொண்டயானை கட்டுக்கயிற்றை அறுத்துக்கொண்டு ஸாதுவான யானைகளின் மர்யாதையைக்கடந்து மாவெட்டியையும் பொருள்செய்யாமல் அகப்பட்டவர்களை அடிப்பதுபோல், நீ கன்னடத்தனையத் துறந்து அபாரதஞ் செய்தவர்களை மாத்ரமே தண்டிக்க வேண்டுமென்னும் ஸாதுக்களது மர்யாதையைக் கடந்து தர்மத்திற் குட்படாமல் என்னைக் கொன்றனை. நீ மங்களத்தை விளைப்பதும் தகாததும் பெரியோர்களனைவரும் மிகவும் பழிப்பதுமாகிய இப்படிப்பட்ட கார்யத்தைச் செய்தனையே? இனி எப்பொழுதாயினும் ஸத்புருஷர்களோடு கலக்கும்பொழுது அவர்க்கு 'இப்படிப்பட்ட அக்ருத்யத்தைச் செய்தேன்' என்று சொல்லவேண்டியிருக்கும். அன்றி அவர்க்கு என் சொல்லப் போகின்றனை? உன்விஷயமாக

---

1 'இது பாபம், ஆகையால் இதை நாம செய்யலாகா' தென்னுஞ் சிந்தை.

ஏதும் அபராதஞ் செய்யாதிருக்கிற என்மீது நீ காட்டின பராக்ரமத்தை உனக்கு அபகாரஞ்செய்த ராவணனிகளிடம் காட்டக் காணுதிருக்கின்றனன். ராஜகுமாரனே! நீ என் முன்னம் புலப்பட்டுக்கொண்டு என்னோடு யுத்தஞ் செய்திருப்பாயாயின், அப்பொழுது என்னல் அடிக்கப் பட்டவனாகி இப்பொழுது யமனிகவினப் பார்த்திருப்பாய். நீ கண்ணுக்குப் புலப்பட்டு யுத்தஞ்செய்வாயாயின், என்னருகில் வருவதுங்கூட உனக்குத் தாமன்று. மத்யபானஞ் செய்து மெய்ம்மறந்து நித்ரை செய்கின்றவனை லர்ப்பம் கடித்துக் கொல்வதுபோல் நீ கண்ணுக்குப் புலப்படாதவனாகி என்னைக் கொன்றனை. முதலில் நீ ஸீதையைத் தேடிக் கொடுக்கவேண்டுமென்று என்னையே வேண்டியிருப்பாயாயின், நான் ஒருதினத்திலேயே உன் பார்யையாகிய ஸீதையை எங்கிருக்கின்றாளோ தேடிக் கண்டு பிடிப்பதுமாத்ரமேயன்றிக் கொண்டுவந்து உனக்குக் கொடுத்துமிருப்பேனே! நீ ராவணனுக்காக ஸுக்ரீவனுக்கு ப்ரியஞ் செய்ய உத்தேசித்தன்றோ என்னைக் கொன்றனை; நீ என்னையே ஸஹாயஞ் செய்யவேண்டியிருப்பாயாயின், நான் அந்த ராவணனை யுத்தத்தில்கொன்று, கழுத்தில் கட்டி இழுத்துக்கொண்டுவந்து உனக்குக் கொடுத்திருப்பேன். நீ, 'ஸீதையைத் தேடிக் கொடுப்பாய்' என்று எனக்கு ஆஜ்ஞையிட்டிருப்பாயாயின், மூன்பு மதுகைடபர்களால் பாதாளத்தில் மறைக்கப்பட்ட வெண் கோவேறுகழுதை யுருவத்தரித்த வேதப்ருதியைப் பகவானகிய ஹயக்ரீவன் ஸாதித்தாற்போல், ராவணன் அவளை ஸமுத்ரஜலத்திலாவது இன்னம் மற்றை யெவ்விடத்திலாவது மறைத்து வைத்திருப்பானுயினும் நான் ஸாதித்துக் கொண்டுவந்து உனக்குக் கொடுத்திருப்பேன். நான் மரணம் அடைந்தபினபு ஸுக்ரீவன் வானராராஜ்யத்திற்கு அதிபதியாக

வேண்டு மென்பது யுக்தமே! அவன் என்னைக் கொன்று ராஜ்ஜியத்தை யுக்தமே. ஆனல் மற்றொருவனேடு யுத்தஞ்செய்துகொண்டிருக்கையில் நீ அதர்மத்திற்குட்பட்டு என்னை வதிப்பது எள்ளளவும் யுக்தமன்று. எப்படியாயினும் பிறந்தவன் மரணம் அடையவேண்டியதே யாகையால் உலகத்தார் இங்ஙனம் காலத்திலையினும் மரணத்திற்குட்படுவது ஸஹஜமாகவே இருக்கட்டும். ஆயினும் நீ இங்ஙனம் கண்ணுக்குப் புலப்படாமல் என்னை அடித்தது உனக்கு இன்னம் யுக்தமாகவே தோற்றுமாயின், அவைகளுக்கு ஸமாதானம் கன்கு மொழிவாயாக' என்றனன். இங்ஙனம் பாணத்தினல் அடிக்கப்பட்டு மிகவும் வருந்தி அம்மஹானுபாவன் தேவேந்த்ரகுமாரன் வாலி இவ்வாறு மொழிந்து அனந்தரம் மேன்மேலெனப் பேசுவதானுண்டாகும் ஆயாஸத்தினல வாய் உலரப்பெற்று, உடனே ஸூர்யன்போல் மிகவும் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற ராமனைப் பார்த்து மௌனமாகவே இருந்தனன். பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ராமன் வாலிக்கு மறுமொழி கூறுதல். }

வாலி அடிபட்டுக் கொஞ்சம் கொஞ்சம் தடைபடுகின்ற அறிவுடன் ராமனைக் குறித்து இவ்வாறு வணக்கம் பொருந்தியதும் தர்மார்த்தங்கள் மிகுந்திருப்பதும் தனக்கு ஹிதமுமாகத் தோற்றும்படி பருஷவசனத்தைப் பேசினன். வாலி அங்ஙனம் ராமனைப் பேசிப் பழித்தபின்பு ஒளிமழுங்கின ஸூர்யன்போலவும் ஜலத்தை யெல்லாம் பெய்து சூன்யமாயிருக்கும் மேகம்போலவும் எரிந்தெரிந்தணைந்த அக்னிபோலவும் ஒளியும் சேஷ்டையும் பராக்ரமும் மற்றிருக்கிற வானரர் தலைவனை வாலியைப்பார்த்து தர்மார்த்தங்கள் அமைந்திருப்பதும் குணங்கள் நிறைந்

தது மாகிய வார்த்தையை அழகாயிருக்கும்படி மொழியத் தொடங்கி 'நீ தர்மத்தையும் அர்த்தத்தையும் காமத்தை யும் லௌகிகமான ஆசாரங்களையும் அறியாமல் விபரீத மாக கடக்குந் தன்மையனுயினும் தெரியாமையால் உன்வி ஷயத்தில் எந்தத் தப்புஞ் செய்யாத என்னை எப்படி பழிக்கின்றனை? நல்லியற்கை யுடையவனே! புத்தியமைந் தவர்களையும் பெரியோர்களையும் பூஜ்யர்களான ஆசார் யர்களையும் இந்தத் தர்மார்த்த கர்மாதிகளின் ஸ்வரூபத் தைவினவித் தெரிந்துகொள்ளாமல் வானரத் தன்மையா னுண்டாகுஞ் சாபல்யதோஷத்தினுல் என்னைக் குறித்து வீணுக என்பேச விரும்புகின்றனை? ஸமஸ்த பர்வதங்க ளோடும் அரண்யங்களோடும் மஹாரண்யங்களோடும் கூடின இந்தப் பூமண்டலமெல்லாம் இக்ஷ்வாகு வம் சத்தாசர்களுடையதா யிருக்கின்றது. ம்ருகங்களையும் பக்ஷிகளையும் மனிதர்களையும் நிக்ரஹிப்பதும் அனுக்ர ஹிப்பதும் இக்ஷ்வாகு வம்சத்தின் அதிகார கார்யங்க ளாகின்றன. அத்தப்பூமியைத் தர்மாத்மாவும் ஸத்யவாதி யும் நிஷ்கபடனுமாகிய பாதன் பரிபாலித்து வருகின்ற னன். அவன் தர்மார்த்தகாமங்களின் உண்மையை நன் கறிந்தவன். துஷ்டர்களை நிக்ரஹிப்பதி லும் சிஷ்டர்களை அனுக்ரஹிப்பதி லும் விருப்பங்கொண்டு தர்மந் தவறுமல் பாதுகாக்கின்றனன். எவனிடத்தில் நீதியும் நிஷ்டையும் இரண்டும் ஸத்யமும் சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட பராக் ரமமும் எப்பொழுதும் நன்முக நிலைநின் றிருக்குமோ, எவன் தேசகாலங்களை அறிவானே, அப்படிப்பட்ட பர தன் இப்பொழுது ராஜனுயிருக்கின்றனன். அத்தப்பரதன் ராஜதர்மத்தை அனுஸரித்துச் செய்த ஆஜ்ஞையை ஏற் றுக்கொண்டு கர்ங்களும் மற்றை ராஜாக்களும் தர்மாபிவ் ருத்தியைவிரும்பிப் பூமிமுழுவதும் திரிகின்றனம். ராஜஸ்

ரோஷ்டனும் தர்மத்தில் ஊக்கமுடையவனுமாகிய பரதன் ஸமஸ்தபூமண்டலத்தையும் எள்ளளவும் தர்மத்தைத் தவறுதிருக்கும்படி பரிபாலித்துவருகையில் தர்மஹானியை எவன் செய்யக்கூடும்? அங்ஙனம் செய்வானையின், தப்பாமல தண்டனையடையான். அங்ஙனம் பரதனல் ஆஜ்ஞாபிக்கப்பட்ட நாங்கள், உத்க்ருஷ்டமான எமது ஸ்வதர்மத்தை அவலம்பித்துப் பரதனது ஆஜ்ஞையை முன்னிட்டுக்கொண்டு தாமந் தவறி நடப்பவனை விதியின்படி தண்டித்து வருகின்றனம். நீயோ தர்மத்தை அழித்துத் திரிபவன்; உன் கார்யங்களைப் பற்றிப் பார்க்கையில் நீ மிகவும் நிந்தைக்கிடமாயிருப்பவன். உனக்குக் காம வ்யாபாரமே முக்யம். ஆகையால் அரசனிருக்க வேண்டிய மார்க்கத்தில் சிறிதும் இருப்பவனல்லை. தமையனும் தந்தையும் தனக்குக் கல்வி கற்பித்தவனும் ஆகிய இம்மூவரும் தந்தைகளேயென்று தர்ம மார்க்கத்தில் இருப்பவன் எப்பொழுதும் பாவிக்கவேண்டும். தர்மத்தின்படியே நடக்கும் பக்ஷத்தில், தன்புதல்வனும் தம்பியும் குணமுள்ளசிஷ்யனும் ஆகிய இம்மூவரையும் பிள்ளைகளாகவே பாவிக்கவேண்டும். தர்மத்தின்படி நடக்காத பக்ஷத்தில் வேறு விதமாகப் பாவிக்கலாமன்றித் தர்மத்தை அனுஸரித்து நடக்கவேண்டுமாயின் அவச்யம் இவ்வண்ணமே பாவிக்கவேண்டும். தர்மம் மிகவும் ஸூக்ஷ்மமாயிருப்பது. இந்த்ரியங்களுக்குப் புலப்படாதது. ஆகையால் அது ஸத்புருஷர்களுக்குங்கூட எவ்விதத்திலும் அறிய முடியாதது. வானரனே! இனி உன்னைப்போன்றவர்களுக்கு எப்படி தெரியும் ஸர்வபூதங்களின் ஹ்ருதயங்களில் அந்தராத்மாவாகி நிலையுற்றிருக்கும் பரமாத்மா ஒருவனே சுபாசுபகாரணமான தர்மாதர்மங்களை அறிவானன்றி மற்றெவனுக்கும் அவற்றை அறியக்காமன்று. நீ மனம்போனபடி

போகுஞ் சபலன். பிறவிக்குருடனு யிருப்பவன் பிறவிக் குருடர்களோடு கலந்தாலோசிப்பதுபோல் புத்தியில்லாத உன்னைப்போன்ற சாபலமுடைய வானரர்களோடு கலந் தது எவ்வளவு ஆலோசனை செய்யினும் உனக்கு என்ன தெரியக்கூடும்? இதற்குமுன் பிள்ளையும் தம்பியும் சிஷ்ய னும் ஆகிய இம்மூவருரும் புத்தர்களேயென்று மொழிந்த னனே; இவ்வார்த்தையின் அபிப்ராயத்தை ஸ்பஷ்டமா கத் தெரியும்படி உனக்குச் சொல்லுகின்றேன். அப்பொ ழுது உனக்கு உன் தப்பு தெரியவரும். ஆகையால் அறி வின்றிக் கேவலம் ரோஷத்தைப்பற்றி என்னைப் பழிப்ப தது உனக்கு எள்ளளவும் தகாது. எதற்காக நான் உன் னைக் கொன்றேனே அந்தக் காரணத்தைச் சொல்லுகி றேன் கேட்பாயாக. நீ ஸனாதனமான தர்மத்தைக் கைவி ட்டு உன தம்பியாகிய ஸுக்ரீவனது பார்யையுடன் க்ரீடி க்கின்றனை. இம்மஹா பாபமே உன்னைக் கொன்றதற்குக் காரணம். ஸுக்ரீவன் உனக்குத் தம்பியாகையால் பிள்ளை யைப் போன்றவனே யாவான். ஆனதுபற்றி அவன் பார் யை உனக்கு மருமகளாகவேண்டும். மஹானுபாவனுகிய ஸுக்ரீவன் பிழைத்திருக்கையில் நீ பாபகார்யஞ் செய்ய முயன்று அவன் பார்யையும் உன் மருமகளுமாகிய ருமை யினிடத்தில் காமத்தினல் ரமித்துக் கொண்டிருக்கின்ற னை. வானரனே! ஆனதுபற்றி நீ தர்மத்தைக் கடந்து மனம்போனபடியெல்லாம் நடந்துகொண்டு தம்பியின் பா ர்யையோடு வ்யபிசரித்துசெயதாயாகையால் அந்தத் தோ ஷத்திற்காக உனக்கு இந்தத் தண்டனை செய்யப்பட்ட தது. அப்படியாயின் தண்டனையே செய்யவேண்டுமென்றி வதிப்பானென்' என்கிறீயோ? கபிராஜனே! தர்மத் தி ற்கு விபரீதமாக நடந்துகொண்டு லோகாசாரந் தப்பியிரு ப்பவனைச் சிக்ஷிக்கவேண்டுமேயன்றி அதைக்காட்டிலும்

வேறுவிதமாக நிக்ரஹஞ் செய்யும் உபாயம் புலப்படவில்லை. நான் நற்குலத்தில் பிறந்த க்ஷத்ரியன். ஆகையால் நீ செய்த பாபத்திற்குத் தகுந்த சிக்ஷைசெய்யாமல் வெறுமனே பொறுத்திருக்கமாட்டேன். ஒருவன் தன் குமாரத்தியையும் உடன்பிறந்தவளையும் தம்பியின் பார்யையையும் காமத்தினல் புணருவானையின் அவனுக்குவதமே சிக்ஷை சொல்லப்பட்டது. இப்பொழுது பரமதார்மிகனுகிய பரதன் ராஜனயிருக்கின்றனன். அவன் எள்ளளவும் தர்மத்தைக் கடக்கப் பொறுக்கமாட்டான். நாங்களோ அவனது ஆஜ்ஞையிலிருப்பவர்களே யன்றித் தான்தோன்றியாகித் திரிபவரல்லோம். தர்மத்தின்படி தவறுமல் நடத்தவேண்டியவர்களாயிருக்கின்றனம். நீ தர்மத்தை அதிக்ரமித்தனை. நாங்கள் உன்னை எங்ஙனம் வெறுமனே விடமுடியும்? பரதன் ராஜனுகையால் எல்லாரிலும் மேலானவன்; எல்லாமறிந்தவன்; ஆகையால் தர்மத்தை எள்ளளவும் ஜனங்கள் கடக்காதிருக்கும்படி பார்த்துக்கொண்டிருப்பான். ஆகையால் இஷ்டம் வந்தபடியெல்லாம் தர்மத்தை மீறி நடப்பவர்களைச் சிக்ஷிப்பதில் தீக்ஷித்துக்கொண்டிருக்கின்றனம். வானரர் தலைவனே! நாங்களோ அந்தப் பரதனது ஆஜ்ஞையையே சாஸ்த்ரமாகக்கொண்டு அதின்படி, தர்மநிலைமையைக்கடத்து நடக்கும் உன்னைப்போன்றவனைச் சாஸ்த்ரத்தின்படி சிக்ஷை செய்வதிலேயே திடமாக நிலைகொண்டிருக்கின்றனம். ஆகையால் உன்னை வெறுமனே எப்படி விடமுடியும்? இவ்வளவேயன்றி ஸுக்ரீவனுக்கும் எனக்கும் உள்ள ஸ்னேஹம் லக்ஷ்மணனுக்கும் எனக்கு முள்ள ஸ்னேஹம் போன்றதே; ஆகையால் எவ்வளவும் பரிஹரிக்கமுடியாது. மேலும் என்ஸ்னேஹம் பார்யைக்காகவும் ராஜ்யத்திற்காகவும் சேரிட்டது. அந்த ஸுக்ரீவனும் என் க்ஷேமத்திலேயே எப்பொழுதும் மன

வுக்கமுடையவன். அப்படிப்பட்ட ஸ்னேஹிதனது பார்யையை அபஹரித்த உன்னை எப்படி வெறுமனே விட்டிருக்கமுடியும்? அந்த ஸ்னேஹஞ்செய்துகொண்ட ஸமயத்தில் நான் வாலியைக் கொல்லுகிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்தனன். என்னைப் போன்றவன் செய்த ப்ரதிஜ்ஞையை எப்படி தவறமுடியும்? இங்ஙனம் உபேக்ஷித்திருக்கக்கூடாதாகையால் நான் தர்மம் நிறைந்திருக்குமாறு இதுவரையில் சொன்ன பெரிய காரணங்களையெல்லாம் பற்றிப் பார்க்கையில், தம்பியின் பார்யையை அபஹரித்த உனக்குச் செய்த தண்டனை சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டதே யென்று நீ அங்கீகரிக்கவேண்டும். ஆகையால் உன்னைச் சிக்ஷிப்பது எல்லாவிதத்திலும் தர்மமேயன்றி எள்ளளவும் அதர்மமன்றென்று தெரிந்துகொள்ளத் தக்கது. தர்மத்தையே முக்யமாக அனுஸரித்திருக்கும் மித்ரனுங்கூடத் தன் மித்ரனது சத்ருவைத்தப்பாமல் நிரஸிக்கவேண்டும். நீ அதர்மத்தையே அனுஸரிப்பவனுவாயாயின், உன்னை நிக்ரஹஞ் செய்த கார்யம் உன் பாபத்திற்கு ப்ராயஶ்சித்தமாகின்றதென்று ஒப்புக்கொள்ளத் தகுந்தது. வானரனே! முன்பு மனு ஸதாசாரத்தையே குறித்து இரண்டுஶ்லோகங்களை மொழிந்தனர். தர்மத்தில் நிபுணராயிருப்பவர் அனைவரும் அவ்விரண்டு ஶ்லோகங்களை அங்கீகரித்திருக்கின்றனர். அந்த ஶ்லோகங்களிற் சொன்னபடி நான் இப்பொழுது ஆசரித்தனன். அந்த ஶ்லோகங்கள் எவையென்னில்:— 'பாபஞ்செய்தவர் ராஜாக்களால் சிக்ஷிக்கப் படுவார்களாயின், பிறகு அவரது பாபமெல்லாம் நசிப்பதுமாத்ரமேயன்றி அவர்கள் புண்யம்மிக்க ஸத்புருஷர்களைப்போல் ஸ்வர்க்கம் அடைவார்கள். ராஜன் சிக்ஷைசெய்யினும், சிக்ஷைசெய்யாமல் விட்டுப்பொகடினும் திருட்டுத்தன்மையால் உண்டான பாபம்

என்னவோ கஸித்துப்போகின்றது. ஆனல் சிகழ்ந்திக்காமலே விடும்பகஷத்தில் அரசன் நிருடனுடைய பாபத்தைத் தானே அடைகின்றனன்' என்று இவவிரண்டு ப்லோகங்கள் மனுவால பாடப்பட்டனவ. நீ இப்பொழுது பாபஞ் செய்தவாறு முன்னம் ஓர் ப்ரமணன் பாபஞ்செய்தனன். அப்பொழுது எமதுவம்சத்தில் பூர்விகரும் பூஜ்யருமாகிய மாந்தாதா அவனுக்குப் பயங்கரமான சிகைஷ விதித்தனர். அந்த ப்ரமணனும் நீயு மாத்ரமே அன்று; ராஜாக்கள் ஏமாறியிருக்கும்பொழுது மற்றவரும் கூடப் பலர் பாபஞ் செய்திருக்கின்றனர். அனந்தரம் அந்த ராஜாக்கள் ஏமாறுதலைத் தவிர்ந்து ராஜகார்யங்களைப் பராமர்ஸிக்கும் பொழுது அந்தப் பாபிஷ்டர்களுக்கு வதாதியான ப்ராயஸ்சித்தங்களை கடத்துவார்கள். அதலை அவரது பாபம் கஸித்துப்போம். இது இப்பொழுதும ஆசாரமாயிருக்கின்றது. வானரர்தலவனே ! ஆகையால் இது விஷயத்தில் பரிதாபஞ் செய்யவேண்டாம், பட்டதுபோதும். தர்மத்தை அனுஸரித்தே உன்னைக் கொலை செய்தனம். நாங்கள் தோன்றினபடி செய்யும் ஸ்வதந்த்ரல்லோம். நாம் சாஸ்த்ரத்திற்கு உட்பட்டவராகையால் அதினபடி அவஸ்யம கடத்தவேண்டியவராகளே யன்றிக் கோபம் வந்தபொழுது தண்டிப்பதற்கும் தயை வந்தபொழுது விடுவதற்கும் அவகாசம் இல்லை. கபிராஜனே! வீரா ! மேலும் இன்னெரு காரணம் சொல்லுகிறேன் கேள். அது மிகவும் ஹேதுவுடன்கூடியிருக்குமாகையால் அதைக்கேட்டபின்பு என்மேல் கோபஞ் செய்யாதிருப்பாயாக. என்னை யமலோகத்திற்கு அனுப்புவனென்றனை. மறைந்திருந்து வதித்தே னென்றனை. நீ அங்ஙனம் சொன்னதற்கு எனக்குச் சிறிதும் மனஸ்தாபம் இல்லை. அன்றியே கோபமும் உண்டாகாது. மனிதர்கள் மறைந்திருந்தாவது புலப்பட்

நிக்கொண்டாவது வலிகளாலும் பாசங்களாலும் பலவகைப்பட்ட கபடவ்யாபாரங்களாலும் அரண்யத்திலிருக்கும் அனேகம்ருகங்களைப் பிடிக்கின்றனர். மேலும் மாம்ஸம் விரும்புவோர் அரண்யத்தில் ம்ருகங்களை ஓடிக்கொண்டிருக்கும் பொழுதும் பயந்திருக்கும் பொழுதும், தம்மைப்பாதிப்பவர் எவரும் இல்லை யென்று நிர்ப்பயமாயிருக்கும்பொழுதும் ஏமாறியிருக்கும்பொழுதும் மனவுக்கத்துடனிருக்கும்பொழுதும் தப்பாமல் கொல்லுகின்றனர். இவ்விஷயத்தில் தோஷமொன்றும் புலப்படாது. தர்மத்தில்ஸமர்த்தராகிய ராஜரிஷிகளுங்கூட அரண்யத்தில் வேட்டையாடிவதற்குப் போகின்றனர். நீயும் சாகாம்ருகம் (குரங்கு). ஆகையால் ம்ருகஜாதியிற் சேர்ந்தவனே. ஆதலால் நீ என்னோடு யுத்தஞ் செய்துகொண்டிருப்பினும் யுத்தஞ் செய்யாதிருப்பினும் ஆலோசிக்கவேண்டியதில்லை. ஆகையால் உன்னை, ஸுக்ரீவனோடு யுத்தஞ் செயதுகொண்டிருக்கும்பொழுது பாணத்தினால் வதித்தனன். வானரச்ரேஷ்டனே! பெறக்கூடாத தர்மத்தையும் ஜீவனத்தையும் சுபத்தையும் ப்ரஜைகளுக்கு ராஜாக்களே விலையச் செய்கின்றனர். இதற்கு ஸந்தேஹமே இல்லை. தேவதைகளே மானிட உருவந் தரித்து பூலோகத்தில் பிறந்து தர்மரக்ஷணத்தின் பொருட்டு அந்தந்த ராஜாக்களாகத் திரிகின்றனர். ஆகையால் ராஜாக்களை எவ்விதத்திலும் ஹிம்ஸிக்கையாவது நிந்திக்கையாவது ஆக்ஷேபிக்கையாவது அப்ரியங் கூறுகையாவது யுக்தமன்று. நீயோ தர்மம் எள்ளளவும் தெரியாமல் கேவலங் கோபமுற்றிருக்கிறாயாகையால் தந்தை பாட்டன ரள் முதலாகத் தவறுமல் வருகின்ற தர்மத்தில ஓர் மயிரிழையும் தவறுமல் நின்றிருக்கிற என்னை மிகவும் தூஷிக்கிறாய்' என்றனன். ராமன் இங்ஙனம் சொல்லுகையில் வாலி தர்மஸ்வரூ

பத்தை கண்முக அறிந்து தன்னை வதிப்பதில் யாதுங் தோஷமில்லையென்று தெரிந்துகொண்டு ராமனை அங்ங னம் ஆகேஷபித்ததற்கு மிகவும் மனவருத்த முற்றனன். அனந்தரம் வானரா தலிவனுகிய வாலி ராமனைப் பார்த் துக் கைகளை குவித்துக்கொண்டு 'புருஷோத்தமா! நீ யாது மொழிந்தனையோ, அது அப்படியே. இதில் ஸந்தே ஹமேயில்லை. தர்ம ஸூக்ஷ்மம் மிகவும் பெரிய விஷயம். அப்படிப்பட்ட விஷயத்தில் அற்பனுயிருப்பவனுக்குப் பதில் சொல்லமுடியாதல்லவா? மேலும் ஸர்வஜ்ஞனுகிய நீ சொன்னதற்கு அல்பஜ்ஞனுகிய நான் பதிலுரைக்கவல்ல னல்லனென்பது தெரிந்த விஷயமே. ராமா! நான் ஸு க்ரீவனுக்குச் செய்த அக்ருத்யத்தில்மாத்ரமேயன்றித் தெரியாமல் இதற்குமுன்பு உன்னை அயுக்தங்களான அ ப்ரிய வசனங்களை மொழிந்தேனே, அந்த விஷயத்திலுங் கூடத் தோஷத்தைநினையாமல் பொறுத்தருளவேண்டும். நீ எல்லாவற்றையும் அறிந்தவன்; தத்வந் தெரிந்தவன்; மேலும் ப்ரஜைகளுக்கு மேன்மை செய்வதிலேயே ஆஸை க்தியுடையவன். தண்டனை இதுவென்றும் அதற்குக் கா ரணமான பாபமிப்படிப்பட்டதென்றும் தெரிந்துகொள் ளும் விஷயத்தில் உன் புத்தி யாதொரு வைஷம்யமுமி ன்றி நிர்மலமாகிக் கெடுதியில்லாமல் நிலைநின்றிருப்பது. தர்மஜ்ஞனே! நான் செய்யவேண்டுந் தர்மத்தைச் செய் யாதவனும் செய்யத்தகாத அக்ரமத்தைச் செய்தவனு மாயிருக்கின்றனன். இப்படிப்பட்ட பாபிஷ்டனுகிய என னைத் தர்மம் பொருந்திய உன் வார்த்தையால் பொறுத் தேனென்றுரைத்துக் காப்பாயாக. நான் அடிபட்டுப் போனேனென்று என்னைக் குறித்தாவது தாரையைக் குறித்தாவது பந்துக்களைக் குறித்தாவது அவ்வளவாக எனக்கு வருத்தமில்லை. ஆனல் குணங்களில் மேலானவ

ஹும் பொன் தோள்வலைகளால் விளக்கமுற்றுக் கண் ஹுக்கினியஹும் அருமைக் குமாரஹுமாகிய அங்கதனைக் குறித்தே எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. அவன் பிறக்தகாள்முதல் மிக்க அருமையுடன் என்ஹால் வளர்க்கப்பட்டு வருகின்றமையால் என்னைப் பாராமல் நிமிஷமாயினும் இருக்கமாட்டான். ஆகையால் அவன், நான் மரணம் அடைந்தபின்பு எனைனப்பார்க்க நேராமையால் வருந்தித், தடாகம் நீரெல்லாம் வற்றினபின்பு உலர்ந்து போவதுபோல் மிகவும் இளைத்துப்போவான். ராமர! தாரையிடத்தில் போயும் வந்தும் நான் இவனொருவனையே பெற்றனன். மேலும் இவன் இளம்பிராயமாயிருப்பவன்; ஒன்றுந் தெரியாதவன்; எனக்கு மிகவும் அருமையான ஓரே புதல்வன்; மிகுந்த பலமுடையவன்; நீ இவனைப் பாதுகாக்கவேண்டும. ஸுக்ரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் பேதமின்றி ஒரு ரீதியான புத்தியை நிகரில்லாதிருக்குமாறு வைப்பாயாக. இவ்விருவர்களிலெவரேஹும் தீமை செய்யில் சிக்ஷிப்பவஹும் ரக்ஷிப்பவஹுமாகிய நீ இருக்கிறாயல்லவா? ஆகையால் இருவரையும் ஸமமாகப் பார்த்துக் கொள்வாயாக. மனிதர்களுக்கதிபனே! உனக்குப் பரதனிடத்திலும் லக்ஷ்மணனிடத்திலும் எந்த ப்ரீதி உள்ளதோ அப்படிப்பட்ட ப்ரீதியை ஸுக்ரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் வைப்பாயாக. தாரை தோஷமற்றவளாயினும் என்பார்யையாகையால் என் தோஷத்தைப்பற்றி அவளும் ஸுக்ரீவனுக்குத் தோஷஞ் செய்தவளேயாவாள். ஆகையால் ஸுக்ரீவன் தாரையைச் சிறிதும் அவமதியாதிருக்குமாறு நீ ஏற்பாடு செய்யவேண்டும். உனது அனுக்ரஹம் பெற்று உனக்குட்பட்டு நடந்துகொண்டு உன் சித்தத்தை அனுஸரித்திருப்பேனையின் எனக்கு ராஜ்யம் வைத்துக்கொ

ண்டு பாதுகாத்து வருவது ஸாத்யமேயாகும். கேவலம் எனது ராஜ்யமேயன்று; பூமண்டலத்தையெல்லாம் பரிபாலிப்பதற்கும் தேவலோகத்தைக் கைப்பற்றுவதற்கும் ஸாத்யமே. ஆனால் அப்படி ஏன் செய்யவில்லை யென்பாயாயின், எனக்குமாத்ரம் எப்படியாயினும் உன்னுல் மரணம் அடையவேண்டுமென்று விருப்ப மிருந்தபடியால், என்னைத் தாரை எவ்வளவு வேண்டாமென்று தடுத்தபோதிலும், நான் என் தம்பியாகிய ஸுக்ரீவனுடன் த்வந்த்வயுத்தஞ் செய்யவந்தேன்' என்றனன். வானரர்தலைவனுகிய! வாலி இங்ஙனம் வணக்கத்துடன் ராமனிடம் விண்ணப்பஞ் செய்து பிறகு வெறுமனே யிருந்தனன். அங்ஙனம் மனமயக்கமின்றித் தெளிந்து அறிவுடனிருக்கிற வாலியைப் பார்த்து ராமன தர்மத்தின் உருவம் தெளிவாகும்படி இனிய ஸமாதான வார்த்தைகளால் 'வாலி உனகுமாரனைக் காப்பாற்றும் விஷயத்தில நீ எள்ளளவும மனக்கவலையடையவேண்டாம். வானரர் தலைவனே! நாங்கள் தப்புச் செய்தோமென்று எங்களைக் குறித்தாவது தம்பியின் பார்யையை அபஹரித்துப் பாபஞ்செய்தனையென்று உன்னைக் குறித்தாவது நீ எவ்வளவும் சிந்திக்கவேண்டாம். ஏனென்னில்—நீ செய்த பாபத்தைப்பற்றி நாங்கள் உனக்கு ப்ராயஶ்சித்த ரூபமாகிய சிக்ஷையை விதித்தோமாகையால் அது தர்மமேயென்று ஸந்தேஹமின்றி நிச்சயித்திருக்கின்றனம். ஆனது பற்றியே எங்களைக் குறித்துச் சிந்திக்க வேண்டிய அவஶ்யமில்லை. உனக்கு ப்ராயஶ்சித்தம் சேர்ந்தமையால் உன்னைக் குறித்தும் சிந்திக்க வேண்டியதில்லை. எந்த அரசன் தண்டிக்கத் தகுந்தவன்மேல் தண்டனை விதிப்பானே, அன்றியே, தண்டிக்கத் தகுந்தவன் எவன் தண்டிக்கப்படவானே, அவர்களிருவரும், ஒருவன் தண்டனை விதித்த

மையாலும், மற்றொருவன் தண்டனை பெற்றமையாலும் தந் தமது ப்ரயோஜனங் ககூடப் பெறுகையால் எள்ளள்வும் பாபத்திலல் கெடுதியைப் பெறுர்கள். அரசன் தண்டிக்கத் தகுந்தவனேய தண்டித்தமையால் தன் தர்மத்தை நடத்தி க்ருதார்த்தனுவான். தண்டிக்கப் பட்டவன் தனது அபராதத்திற்குத் தகுந்த தண்டனை பெறுகையால் பாபந் தொலைத்து க்ருதார்த்தனுவான். ஆகையால் நீ தர்மசாஸ்திரத்திற் சொல்லியபடி உன் தண்டனையைப் பெற்று யாகையால் உன் பாபம் தொலைத்து தர்மம்பொருந்தின உன் சுத்த ஸ்வரூபத்தைப் பெற்றனை. வானர்தலைவனே! உன் மனத்திலுள்ள சோகத்தையும் மோஹத்தையும் பயத்தையும் விட்டுத் தொலைப்பாயாக. வீணுகப் பாதைப்படுவதேன்? ப்ராரப்தகர்ம மென்னும் விதியை உன்னுல் கடக்கப்போமோ? வானரேச்வரனே! அங்கதன் உன்னிடத்தில் இதுவரையில் எப்படி தந்தை யென்னும் பக்தியுடன் உன் வாத்ஸல்யத்தை அனுபவித்துக் கொண்டிருந்தானே, அப்படியே இனி ஸுக்ரீவனிடத்திலும் என்னிடத்திலும் பித்ருபக்தி உண்டாகப் பெற்று எமது வாத்ஸல்யத்தை அனுபவித்துக்கொண்டு ஸுகமாயிருக்கப் போகிறுன்' என்றனன். அங்ஙனம் மஹானுபாவனும் தர்மமார்க்கத்தில் நிலகின்றவனும் யுத்தங்களில் பகைவரை யொழிக்கும் பராக்ரமசாலியுமாகிய ராமன் இனிதாக மொழிந்த ஸமாதான வசனங்களைக் கேட்டு அவ்வாலி மிகவும் அமைந்திருக்கும்படி, ப்ரபூ! மனிதர்களுக்குத் தலைவனே! நீ தேவேந்த்ரனைப் போன்றவன்; பயங்கர ராமன் பராக்ரம முடையவன். ஆகையால் நான் உன்பாணங்களால் பீடிக்கப்பட்டு ப்ரஜ்ஞைதப்பித் தெரியாமல் உன்னை மிகவும் தூஷித்தனன். இந்த அபராதத்தைப் பற்றி நீ என்னிடத்தில் மனக் கலக்கமில்லாதிருக்கும்படி

ப்ரார்த்திக்கிறேறு ணைகயால் என்னை அணுக்ரஹித்து மன்னிக்க வேண்டும்' என்றனன். பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

தாரை மரணம் அடைந்த வாலியிடம் வருதல்.

ராமபாணத்தில் மிகவும் அடிக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்திருக்கும் வானர மஹாராஜனாகிய வாலி, ராமன் யுக்திகள் அமைந்திருக்கும்படி மொழிந்த மறுமொழியைக்கேட்டு 'என்னைப் பொறுத்தருள வேண்டும்' என்றிவ்வளவே மொழிந்து பிறகு ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தனன். அவ்வாலி, முன்பு ஸுக்ரீவன் தன் மேல் எறிந்த கற்களால் அவயவங்கள் தழுதழுக்கப் பெற்றும வ்ருக்ஷங்களால் தன்கடிக்கப்பட்டும் இப்பொழுது ராமபாணத்தால் பாதைப்பட்டுக்கொண்டும் இருக்கையால் ப்ராணத்தலைமயத்தில மூர்ச்சித்துக் கிடந்தனன். பிறகு அங்ஙனம் ராமன் ப்ரயோகித்த பாணத்தால் யுத்தத்தில் வானரச்ரேஷ்டனாகிய வாலி ஹதனானென்று அவன் பார்யையாகிய தாரை கேள்விப்பட்டனள். தாரை, ராமனால் உன் பர்த்தா வதிக்கப்பட்டானென்று அப்ரியமாகி மிகவும் பயங்கரமான இவ்வார்த்தையைக்கேட்டு மிகுதியும் பயந்து பிள்ளையுந்தானுமாக தாங்கவித கட்டடங்கள் பொருந்திப் பர்வதகுஹைபோன்ற கிஷ்கிந்தையினின்று புறப்பட்டு வந்தனள். அங்கதனுக்குப் பரிசாரகர்களும் மஹாபராக்ரமசாலிகளுமாகிய வானரர்கள் அனைவரும், அப்படிப்பட்ட வாலியையே ஒருபாணத்தால் முடித்த ராமனின் வில்லைப்பிடித்து நிற்கையில் அவனைப் பார்த்தவுடனே பயந்து பின்வாங்கி ஓடிப்போயினர். கூட்டத்திற்குத் தலைமையான மிருகம் அடிபட்டபின்பு பயந்து கூட்டத்தினின்று சிதறிப்பறக்கும் மிருகங்கள்போல், வாலி அடிபட்டதால்

பயந்தோடிவருகின்ற அந்த வானரவீரர்களைத் தாரை வழியில்கண்டனள். அங்ஙனம் துக்கித்து ராமனுக்கும் பயந்து ராமன் ப்ரயோகிக்கும் பாணங்களால் பின்தொட ரப்பட்டவர்போல் வேகத்துடன் ஓடிவருகின்ற அந்தவா னரர்களைக்கண்டு தாரை வருத்தமுற்று 'வானரர்களே! பயங்கரனுகிய தம்பி ஸுக்ரீவன் அண்ணனுகிய வாலியை ராஜ்யத்தின் நிமித்தமாக ராமனைக்கொண்டு வெகுதூர ஞ் செல்லவல்ல கொடிய பாணங்களைத் தொடுக்கச்செய்து கொன்றுவிட்டானினை உங்களுக்கு என்னபயம்? உங்க ளைக் கொல்விப்பதற்கு உங்களுக்கும் ராஜ்யம் இல்லையே? வாலிபைப்போல் உங்களுக்கும் பயம் என்? நீங்கள் எவ னுடைய வேலைக்காரர்களோ அபபடிப்பட்ட ராஜஶ்ரே ஷ்டனுகிய வாலியைக் கைவிட்டித் திக்கற்று மிகவும் தி கிலுற்று இப்படி என ஓடிவருகின்றீர்கள்' என்று விளவி னள். காமருபிகளான (இஷ்டப்படி வடிவங்கொள்ளவல்ல) அந்த வானரர்கள் வாலி பத்னியாகிய தாரை வினவின வார்த்தையைக்கேட்டு அந்த மடமதையைப்பார்த்து அப் பொழுதைக்குத்தகுந்த யுக்திகள் பொருந்தின வசனங்க ளைச் சொல்லத்தொடங்கி 'அம்மா! உனபிள்ளை ஜீவித்தி ருக்கின்றனன். ஆகையால் நீ திரும்பிப்போவாயாக. உன் பிள்ளையாகிய அங்கதனைக் காப்பாற்றிக் கொள்வாயாக. இப்பொழுது ம்ருத்யுவே ராமனென்னும் உருவத்துடன் வந்து வாலியைக்கொன்று பரலோகத்திற்குக் கொண்டு போகின்றனன். வாலி, ஸுக்ரீவன் எறிந்த வருக்ஷங்களை யும் பெரிய கற்களையும்தடுத்துக் கடைசியில் ராமனுல் வஜ் ரம்போன்ற பாணங்களால் முடிக்கப்பட்டனன். தேவேந் த்ரனை நிகர்த்த பராக்ரமமுடைய வானரஶ்ரேஷ்டனுகிய வாலி முடிந்துபோகையில் முன்பு கிஷ்கிந்தையி னின்று புறப்பட்டுவந்த இந்த ஸைன்யமெல்லாம் பயத்தினுல் மூலை

க்கொண்டிருக்கிறதென்று மீளவும் கிஷ்கிந்தையை நோக்கி ஓடிப்போகின்றது. பட்டணத்து வாசற்படியைக் கதவையிட்டு ஜாக்ரதையுடன் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும். வாலிகுமாரனே அங்கதன் ராஜ்யபாரஞ் செய்கையில் அவனையே வானரர்களெல்லோரும் சூழ்ந்திருப்பார்கள். அழகிய முகமுடையவளே! நாங்கள் சொன்னபடி செய்யாயாயின் போகட்டும்? நீ இந்தக் கிஷ்கிந்தையில் இருப்பதே எங்களுக்கு இஷ்டமன்று. ஏனெனில்:—நமக்குப் பகைவரான வானரர்கள் சீக்ரத்திலேயே கிஷ்கிந்தையில் நமதிராபிடத்தையும் மற்று முள்ள சோட்டை முதலான எல்லாவற்றையும் பிடித்துக்கொள்ளப் போகின்றனர். ஆனால் என்னென்னவோ? வாலி இங்கிருந்து வானரர்கள் பலரையுந் துரத்தியிருக்கின்றனன. அவர்களில் சிலர் நமது பார்யைகளைப் பிரிந்திருக்கின்றனர். சிலர் பிறருடையபார்யைகளைச் நமக்குப பார்யைகளாக கைப்பற்றியிருக்கின்றனர். இவர்களெல்லோரும் கிஷ்கிந்தையினின்றும் ஓடிப்போய்க் காட்டில் திரிந்துகொண்டிருக்கின்றனர்; இங்ஙனம் பார்யைகளைப் பிரிந்திருப்பவர்களும் தாமவைத்துக்கொண்டிருந்த பிறருடைய பார்யைகளை ஆசைப்படுமவர்களும் வெளுத்த ஜ்ஞாநிகளான ஸுக்ரீவாதிகளும் திரும்பிவருகையில், அவரால நமக்கு இவ்விடத்தில் எப்பொழுதும் பாபம் நேராதுகொண்டேயிருக்கும்' என்றனர். தாரை இங்ஙனம் அவர்கள் பேசுவதற்குக் கொஞ்சம் இடங்கொடுத்து அந்த அற்பபுத்திகள் சொன்னதைக் கேட்டுப் புன்னகை விளங்கப்பெற்றுத் தன்புத்திக்குத் தகுந்தபடி அவர்களை நோக்கி 'வானரச்ரேஷ்டனும் மஹாபாக்யனுமாகிய பர்த்தாவே போய்க்கொண்டிருக்கையில் இனி எனக்குப் பிள்ளையால் என்ன ப்ரயோஜனம்?

நாஜ்பம் எதுக்கு? இந்தச் சரீரமே எனக்கு எதுக்கு? ராமன் ப்ரயோகித்த பாணத்தினால் அடியுண்டு தரையில் வீழ்ந்திருக்கிற அம்மஹானுபாவனது பாதமூலத்திற்கே போய்ச் சேருவேன்' என்றனள். தாரை இங்ஙனஞ் சொல்லி உடனே துக்கத்தினால் வருந்தி சோதனஞ் செய்து கொண்டு துக்கத்தைப் பொறுக்கமுடியாமல் தலையையும் மார்பையும் கைகளால் மோதிக் கொண்டு ஓடிப்போயினாள். அங்ஙனம் ஓடிச்சென்று எப்படிப்பட்ட யுத்தத்திலாயினும் பின்வாங்காத மஹாசூரர்களான மாயாவிமூகவிபராக்ஷஸ ப்ரதானர்களைக் கொன்று மேனைமையுற்றிருப்பவனும் யுத்தங்களில் இந்திரன் வஜ்ராயுதத்தைப் ப்ரயோகிப்பதுபோல பெரிய பர்வதங்களை வீசியெறிபவனும் மஹாவாயுக்கினால்லாம் ஓடாது சேர்ந்தாற்போல் தடுக்க முடியாத மஹாவேகமுடையவனும் மஹாமேகலைமுதலும் கர்ஜிபதுபோன்ற பெரிய கண்ட கண்வனியுடையவனும் இந்திரனை நிகர்த்த பராக்ரமமுடையவனும் மழைபெய்து ஓய்ந்திருக்கிற மேகமபோல் ஓய்ந்திருப்பவனும் கர்ஜிப்பவர்களினாயினும் பயங்கரமாகக் கர்ஜிப்பவனும் சூரனுமாகிய தன் பர்த்தாவான வாலி, சூரனுகிய ராமனால் முடிக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்திருக்கக் கண்டனள். மேலும், அவன், மாம்ஸத்தின் திமித்தமாக மிகுந்த பராக்ரமமுடைய ஸிம்ஹத்தினால் அடிக்கப்பட்ட மற்றொரு ஸிம்ஹம் போன்று பராக்ரமாதி குணங்களைப் பற்றி ஸமஸ்த லோகங்களாலும் பூஜிக்கப்பட்டவனுயிருந்தும் தம்பியின் பாரையைக் கைப்பற்றினதோஷத்தைப்பற்றி ராமனால் முடிக்கப்பட்டிருக்கையால், ஸமஸ்த லோகங்களாலும் பூஜிக்கப்படுவதும் த்வஜத்தினால் அலங்காரஞ் செய்யப்பெற்றதும் இளபபாறுவதற்குரிய தின்னுகளால் விளக்கமுற்றதுமாயினும் தன்னிடத்தில் லர்ப்

பம்புகுத்து மறைத்திருக்குந் தோஷத்தைப்பற்றிக் கருட னல் முறிக்கப்பட்ட தேவாலயம்போல் புலப்பட்டனன். தாரை இப்படிப்பட்ட அவ்வாலியைக்கண்டு உடனே தன் ஸ்ஸைத் திடமாக வூன்றிக்கொண்டு நிற்கின்ற ராமனி னும் ராமனுக்குத் தம்பியாகிய லக்ஷ்மணனையும் தன் மைத் துனன ஸுக்ரீவனையும் கண்டனள். இங்ஙனங் கணவனை முடித்த ராமனையும் கொல்ல ஸஹாயமாயிருந்த லக்ஷ்ம ணனையும் கொல்வித்த மைத்துனனையும் கண்டும் தன் பர் த்தாவிடத்தி லுள்ள தோஷத்தைப்பற்றி இவர்கு இங்ங னம் செய்யவேண்டியதாய் வந்ததாகையால இவர்களிடத் தில் தப்பேது மில்லையென்று நினைத்து அவர்களிடத்தில் சிறிதும் த்வேஷம் பாராட்டாத மனமுடையவளாயினள். அனந்தரம் அந்தத்தாரை ராமாதிகளைத் தண்டிச்சென் று யுத்தத்தில அடிபட்டு வீழ்ந்திருக்கிற பர்த்தாவைக் கிட்டி அவனை உற்றுப்பார்த்து, அவனுக்குத்தான் வந் திருப்பது தெரியாமையால் பாழானேனென்று மிக வருத் தத்துடன் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தனள. அனந்த ரம் தூங்கி விழித்துக் கொள்வதுபோல எழுந்து 'ஆர்ய புத்ர' என்று கணவன்பேரைச் சொல்லிக் கண்ணீர் பெருக்கினள். இங்ஙனம் யமபாசத்திலல் கட்டப்பட்டு மர ணம் ஸம்பித்திருக்கப்பெற்ற பர்த்தாவைக் கண்டு தாரை ஐயோவென்று கதறத் தொடங்கினள். அங்ஙனம் அழு குரல்பக்ஷிபோல் கூக்குரலிட்டுப் புலம்புகின்ற தாரையை யும் அவ்விடம் வந்து முகம்வாடி நிற்கிற அங்கதனையும் பார்த்தவுடனே ஸுக்ரீவனுக்கு மிகுதியும் துக்கம் உண் டாயிற்று. பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

தாரை புலம்புதல்.

சந்த்ரன் போன்ற முகமுடைய அந்தத் தாரை, ரா



I733. தாரை வாலியைக்கண்டு புலம்புதல்.

மன் தனுஸ்ஸினின்று ப்ராணனை முடிக்கும்படியாக ப்ர
யோகித்த பாணத்தினால் அடிக்கப்பட்டுத் தரையில் வீழ்
ந்திருக்கின்ற தன் ப்ராணேச்வரனாகிய வாலியைப் பார்த்
து அருகிற் சென்று அவனை அழுந்தக் கட்டிக்கொண்ட
னள். மதித்த யானைபோல் புலப்பட்டு மலைகத்தினைப்
போல் விளங்கும் வாலி ஒரு பாணத்தினால் அடிக்கப்பட்டு
வேரறுத்த வருக்ஷம்போல் தரையில் வீழ்ந்திருக்கக்கண்டு
தாரை மிகவும் வருந்திப் பெரொலியுடன் இங்ஙனம் புலம்
பினள். 'வீரர்களில் தலைவனே! வானரசூடாமணீ! யுத்தத்
தில் உன் பராக்ரமம் மிகவும் பயங்கரமாயிருக்குமே! நான்
ஓரபராதமும் செய்தறியேனே. மேலும் தீனையாயிருப்ப
வள். இப்படிப்பட்ட என்னுடன் என் இப்பொழுது ஒன்
றும் பேசாதிருக்கின்றனையோ? வானரலிம்ஹனே! உன்
னைப்போன்ற ராஜஶ்ரேஷ்டர்கள் தரையில் படுக்கார்களா
கையால் நீ இங்ஙனம் இங்குப்படுத்திருப்பது யுக்தமன்று.
எழுந்திருப்பாயாக. மேலான படுக்கையின்மேல் படுத்துக்
கொள்வாயாக. பூரதனே! நீ மரணம் அடைந்த பின்பும்
எனையுங்கூட விட்டு இந்தப் பூமியையே ஸமஸ்த அவ
யவங்களாலும் அணைத்துக்கொண்டிருக்கிறாயே! ஆகை
யால் உனக்கு என்னைக்காட்டிலும் பூமியே மேலான அ
ன்பிற்கிடம். வீரர்களில் தலைவனே! நீ தர்மத்தின் மஹி
மையால் ஸ்வர்க்கத்திற்குப் போகும் வழியில் இதைக் கிஷ்
கிந்தையைப் போலவே மிகவும் அழகான மற்றொரு பட்
டணம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாற்போல் ஸ்படிக
மாகத்தெரியவருகின்றது. ஆனதுபற்றியே இதைவிட்டுப்
போகத் தொடங்கினை. இல்லையாயின போகமாட்டாய்.
நீ அத்தத்தக் காலங்களில் எங்களோடுகூடித் தென் மணி
ங்கமழப் பெற்ற உத்யான வனங்களில் நடத்தின விளையா
டல்களெல்லாம் இப்பொழுது முடிந்துவிட்டனவே! நீ

கேவலமாயிருப்பவனல்லவே! பெரிய வானரக் கூட்டத் தலைவர்களுக்கெல்லாம் அதிபதியன்றோ! இப்படிப்பட்ட நீ மரணம் அடைந்தனையே! நீ இப்படியானதால் நான் ஆகந்தஞ் சிறிதுமில்லாதவளானேன். இப்பொழுது இல்லாமற் போயினும் இனிமேலாவது உன்னைப்பெற நேருமென்கிறாயோ? அந்த ஆசையும் எனக்கு இல்லாமற்போயிற்றே! இப்படிப்பட்ட கதி உண்டாயிற்றே! என் துக்கத்தை எவ்வாறு கூறுவேன்? துக்க மஹா ஸமுத்ரத்தில் மூழ்கிப்போயினன. நீ அடிபட்டுத் தரையில் வீழ்ந்திருக்கக் கண்டும் என்மனது ஆயிரஞ் சுக்கலாய் வெடித்துப் போகாதிருக்கின்றதே! ஆகையால் மிகவும் கெட்டிக் கல்லென்று சொல்லவேண்டும். வானரநாதனே! நீ ஸுக்ரீவனுடைய பார்யையை அபஹரித்தனை. அத்தோடு போகாமல் அவனை உயிரவிட்டோடத் துரத்திவிட்டனை. அதன்பலனே உனக்கிப்பொழுது ஸம்பவித்ததேயன்றி வேறில்லை. வானரர்தலைவனே! நான் உன் மேன்மையை விரும்பி உனக்கு ஹிதஞ்சொல்லினன். அப்பொழுது உன்மேன்மையை விரும்பின என்னைத் தெரிபாமல் திக்தித்தனை. சத்ருக்களது கர்வத்தை யழிப்பவனே! கண்பர்களுக்கு மேன்மையை விளைவிப்பவனே! பெரியோனே! வீரஸ்வர்க்கம் பெற்றனை. ஆகையால இனி ஸுவர்க்கத்தில ரூபத்திலும். யௌவனத்திலும் செருக்குற்றுக் காம தந்த்ரங்களில் சாதுர்ய முடையவராகளுமாகிய அப்ஸரஸ்த்ரீகளது மனங்களை மயங்கச்செய்து கலக்கிக் கொள்ளை கொள்ளப் போகின்றனை. இது வாஸ்தவம். நீ ஸுவர்க்கும் ஸ்வாதீனப்படாதவன. இப்படிப்பட்ட உனையுத் தனது ஸாமர்த்யத்திலல் மனமயங்கச் செய்து ஸுக்ரீவன் வசம் அகப்படும்படி செய்தது, உன் ப்ராணனகளைக்கொள்ளும் பொருட்டு வந்த ம்ருத்யுவே யன்றி வேறன்று. இவ்விஷய

த்தில் ஸத்தேதஹமேயில்லை. நான் இதுவரையில் எள்ளள வும் துக்கப்படாமலும் தீனத்தன்மையறியாமலும் இருந்து இப்பொழுது தீனையாகி வைதவ்யம் அடைந்து துக்கத்தினால் பொறபொறவென்று பரிதபிக்கப் போகின்றனன் வீரனெகிப அங்கதன இதுவரையில் உன்னால் செல்வத் துடன வளர்க்கப்பட்டு வந்தனன்; மிகவும் ஸுகுமாரனை கையால் ஸுகத்திற்கே தகுந்தவனனறிக் கஷ்டத்தை அனுபவிக்கச் சிறிதும் பொறுதவன. இதச் சிறுவன் உனகதப் பின்பு, சிற்றப்பன் கோபத்தினால் மெய்ம்மறந்து அடித்துப் பயப்பதித்துகையில் எந்த அவஸ்தை அடையப்போகிறுனோ? எதுமின்றித் தப்பாமல் தசித்துப் போவானே' என்று மொழிந்து, உடனே அங்கதனைப்பார்த்து 'குழதாய! தர்மவத்ஸலனகிய உன்னை பெற்ற தந்தையை இப்பொழுதே தனறுகப் பார்த்துக் கொள்வாய். எனனப்பனே! இனி உனக்கு அவனை பாக்க முடியாது' என்றுரைத்து மீளவும் பர்த்தாவைப் பார்த்து 'நீ வெகு தூரதேசத்திற்கு பாயாணமாப்ப் போகிறுயாகையால், உன்பிள்ளையை உச்சி மோகது ஸமாதானப்பதித்து வாயாக இவனுக்குச் சொல்லவேண்டிய ஸமாசாரத்தைச் சொலலிவிட்டுப் போவாயாக. ராமன் உன்னை வதிக்கையால பெரிய வீரகார்யஞ் செயதவனறினன். அவன் ஸுக்ரீவனுக்குச் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக் கடனைத் தீர்தது கொண்டனன' எனறு மொழிந்து ஸுக்ரீவனைப் பாரத்து 'ஸுக்ரீவ! உன தமைபனை, உன சகோதரரினன. ஆகையால இனி உன விருப்பங்களை யெலலாந தீர்த்துக்கொள்வாயாக. ராஜ்யலக்ஷ்மியைப்பெறுவாய். இனிக் கண்டகமொனறு மிலலாமையால நிஷ்கண்டகராஜ்யத்தை அனுபவிப்பாயாக' என்று மொழிந்து உடனே மீளவும் வாலியைப் பார்த்து 'வானரர் தலைவனே! நான்

இங்ஙனம் ஓயாமல் புலம்புகின்றனை! இங்ஙனம் புலம்பிக்கொண்டிருப்பினும் என்மேல் கொஞ்சமாயினும் ப்ரீதியை வைத்துப் பேசாதிருக்கின்றனை யேன்? இதோ உத்தமிகளான உன் பார்யைகள் பலர் வந்திருக்கின்றனர். இவர்களையாயினும் கண்பாயாக' என்றனன். அதற்குத் தாரை அங்ஙனம் கதறினதைக் கேட்டு வாலியின் பார்யைகளான அவ்வானர ஸ்த்ரீகள் அனைவரும் சேர்ந்து துக்கத்தினால் வருந்திக் தீனமுகிய அங்கதனை அணைத்துக்கொண்டு வாலியைப் பார்த்து இங்ஙனம் ரோதனஞ் செய்தனர். தாரை 'நாதா! தேவர்களாலும் விலக்கமுற்று வீர்யப்பெருக்கினால் துலங்கும் புஜங்களுடையவனே! அங்கதனை விட்டு இப்பொழுது ஏன் தென்னாள் தாரதேசத்திலிருக்கப் போகின்றனை? நீயோ பின்னையிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவன். இவனும் குணங்களில் எறக்குறைய உன்னைப் போன்றவன். இப்படிப்பட்ட நீ இவ்வளவு குணமுள்ள பிள்ளையை இங்ஙனம் விட்டுப் போவது யுக்தமன்று. அன்பிற்கிடமானவனே! அழகிய உருவமுடையவனே! நாதா! என்னிடத்திலும் அங்கதனிடத்தில் அவ்வளவுமேலான ப்ரீதியுடைய நீ இப்பொழுது என்னையும் அங்கதனையும் கைவிட்டு வானாதாதேசத்திற்குப் போக ப்ரயாணமாயிருக்கின்றனை! அவ்வளவு தப்பு நாமவது உனபிள்ளை அங்கதனவது என்செய்தோம்? நீண்ட புஜங்களுடையவனே! கபிகுலநாதனே! வீரா! நான் எனக்கும் தெரியாமல் ஏதேனும் அப்ரியம் உனக்குச் செய்திருப்பேனாயின், இப்பொழுது என் தலை உன் பாதங்களில் பட வணங்குகின்றேன். என் அபராதத்தைத் தயை செய்து பொறுக்கவேணும்' என்று புலம்பினள். புகழும்படியான மேனியின் வர்ணத்தையுடைய தாரை பார்ப்போர்களுக்கும் துயரம் உண்டாகும்

படி வானரஸ்த்ரீகளும் தானுமாகப் பர்த்தாவினருகில் ரோதனஞ் செய்துகொண்டே யிருந்து வாலி வீழ்ந்திருக்குமிடத்தில் அவன் பக்கத்தில் தானும் ப்ராயோபவேசஞ் செய்வதாக நிச்சயித்துக்கொண்டனள். இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஹனுமான் தாரைக்கு நலவாத்தை சொலலுதல.

அனந்தரம் வானரர்கூட்டத்துத் தலைவனாகிய ஹனுமான், வாலியினருகில் தரையில் வீழ்ந்திருப்பவளும் ஆகாயத்தினின்று பூமியில் வீழ்ந்திருக்கிற நக்ஷத்ரம் போல் விளங்குகின்றவளுமாகிய தாரையை மெல்ல மெல்ல இனிய உரைகளால் ஸமாதானப்படுத்த முயன்று "ஓவ்வொரு ப்ராணியும் தன தன் கர்மவாஸனையைப் பற்றித் தெரிந்தும் தெரியாமலும் தான் செய்யும் நன்மை தீமைகளுக்கநுரூபமாகவே ஸுகதுக்கங்கள் பரலோகத்திலும் இப்பாமல் கூடவே வரப்பெற்று அவைகளை அனுபவிக்கின்றனன். இப்படி ஓவ்வொருவனும் தன் கர்மபலனையே அனுபவிக்கிறானன்றி, ஒருவனால் மற்றொருவனுக்கு நன்மை தீமை கள் உண்டாகின்றன என்னலாகாது. வாலியும் தன் கர்மதந்த்ரத்தாலேயே ஹதனானன்றி ஸுக்ரீவனாலன்று. நீ 'நான எந்தக் கர்மத்தினால் எந்த லோகத்திற்குப் போவேனோ' என்று உன்னைப் பார்த்து நீயே துக்கிக்கவேண்டியதா யிருக்கின்றதே! இப்படியிருக்க உன்னைப்போன்ற மற்றவனைப்பார்த்து ஏன சோகிக்கின்றனை? உனக்குள் நீயே தீனையாயிருக்கின்றனையே! மற்றை எத்தத் தீனனைப்பார்த்து மன இரக்கமுறுகின்றனை? தாம் தம்மைப் பார்த்துத் துக்கப்படவேண்டியதும் தீனர்களாவதுமின்றியிருப்பவரன்றே? அங்ஙனம் இல்லாதவரைப் பார்த்து

வருந்தி மன இரக்கமுறவேண்டும். மேலும், உன தே
ஹம் நீர்க்குமிழிபோன்றது. எல்லோருடைய தேஹமும்
அப்படிட்டதே யாகையால் தேஹத்தின் நிமித்தமாக
எவரைப்பார்த்து எவர் துக்கிக்கவேண்டியிருக்கிறது?
துக்கிப்பவருடைய தேஹமும் நீர்க்குமிழிபோன்றதே யல்
லவா? உனக்குப் பிள்ளை இருக்கிறு ணைபால் ஸஹகம
னஞ்செய்யலாகாது. நீ உன் பிள்ளை அங்கதனைப் பார்த்
துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அவனுக்கு
இனி முன்னம் நீ கன்மைகள் னைவ செய்யவேண்டுமோ
அவைகளை ஆலோசிப்பாயாக. தாரே! நீ அறிவுடைய
வள். பூமிமுதலிய பூதங்களின் வரத்துப்போக்குகள் நிலை
கின்றவை யல்லவென்று நீ அறிவாயல்லவா? ஆகையால்
இவ்வுலகத்தில் வழங்கிவரும் அசுபமான சோதனைகளை
யும் சுபமான ப்ரேத கார்யங்களையும் நடத்துவாயாக.
எவன் ஆயிரம் பத்துலக்ஷம் அர்ப்புதமென்னுட கணக்
குள்ள வானரகோடிகளை அவரவர்க்குத் தகுந்தபடி பிரி
விணைகளைச் செயது ஜீவனத்தை வற்பந்தித்திக்கொண்டிரு
க்தாரே, அப்படிபபட்ட மஹாணுபாவனுகிய வாலி இப
பொழுது காலதர்மத்தை அடைந்தனன். பலனைப் போ
ஷித்துவந்த புண்யபலனை அனுபவிபபதற்க ப்ரக பரலோ
கம் போயிருக்கையில அப்படிபபட்டவனைக் குறித்து
வருந்துவது யுக்தமன்று. இந்தவாலி சாஸ்த்ரங்களை நன்
ருகவாசித்துத் தத்வார்த்தங்களை உணர்ந்து தன ஜனங
கள் வருந்துவராயின் இனிய உரைகளால் ஸமாதானப்
படுத்தியும் யாசகர்களுக்கு வேண்டினவற்றைக கொடுத்
தும் அபராதிகளைத் தயையால் பொறுத்தும இப்படி
தர்மத்தில் நிலைனின்றிருந்து தாமக்ஷதக் ஷயஞ்செய்
துகொண்ட புண்யாத்மாக்கள் வஸிக்கும் உத்தமலோகங்
களைப் பெற்றனன். ஆகையால் இவனைப்பற்றி வருந்து

வது யுக்தமன்று. நிச்சைதக்கிடமாகாதவளே! இந்த ஸமஸ்தவானரர்தலைவனுக்கும் இந்தக் குரங்கு காடி ராஜ்யத்திற்கும் நீயே அரசானி. நீயே திக்கு. பெண்மணியே! இந்தச் சோகத்தையும் பரிதாபத்தையும் மெதுவாக விட்டுத் தொலைப்பாயாக. உன்னை ஸஹாயமாகப் பற்றி இவ்வங்கதன் ராஜ்யபரிபாலனஞ் செய்வானாக. எந்தப்ரயோஜனத்திற்காகத் தோற்றியதோ, எந்தக்கார்யம் இப்பொழுது செய்யத்தக்கதோ, அந்த பரோத கார்யங்களையெல்லாம் முன்பு வாலிக்கு. அங்கதனைக்கொண்டு செய்விப்பாயாக. இதுவே இப்பொழுதைக்குத் தகுந்ததன்றி சோகிப்பது யுக்தமன்று. வானராராஜனாகிய வாலிக்கு ஸம்ஸ்காரஞ் செய்விக்கவேண்டும். அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தவேண்டும். ஸிம்ஹாஸனத்தின்மேலேறி ராஜ்யலக்ஷ்மியை அனுபவிக்கின்ற பிள்ளையைப் பார்த்துக்கொண்டு துக்கத்தை மறந்து ஸுகித்திருப்பாய்' என்று ஆச்வாஸபடுத்தினன். அங்ஙனம் பர்த்தாவின் வசனத்திலல் வருத்தமுறுகின்ற அந்தத் தாரை ஹனுமான் சொன்ன வார்த்தையைக்கேட்டுத் தான் சொல்வதைத் கேட்கும்பொருட்டு மனஒக்கத்துடனிருக்கின்ற அவனைபபார்த்து 'எனது ஸஹகமனத்தைவிட்டுப் பிள்ளையைப் பார்த்துக்கொண்டிருப்பாய்' எனறனை. அங்கதனைப்போல குணமுடைய நூறுபிள்ளைகள் ஒரு தட்டில் இருக்கடும. ஹதனுகிய இவவீரனுடைய அங்கத்தை ஆலிங்கனஞ்செய்வதும் ஒரு தட்டிலிருக்கட்டும். எனக்கு எனனவோ! ஹதனுகிய இவவீரனுடைய அங்கத்தை ஆலிங்கனஞ் செய்வதே மேலாயிருகின்றது. வாலிகு ஸம்ஸ்காரஞ்செய்து அங்கதனுக்குப் பட்டங்கட்டுவானென்றனை, வானரர்தலைவனுகிய வாலிக்கு ஸம்ஸ்காரஞ் செய்யவாவது அங்கதனுக்குப் பட்டங்கட்டவா

வது நான் வல்லனல்லேன். வாலிக்குப் பின்பு ஸர்வகார்யங்களையும் நிறைவேற்ற வேண்டியவன் அங்கதனுக்குச் சிற்றய்யனாகிய ஸுக்ரீவனேயன்றி மற்றொருவனுமல்லன். வானரஸ்ரேஷ்டனே! அங்கதனைக் காப்பாற்றிக்கொண்டு அவனுக்கு ஹிதமான கார்யகளை முன்னம் ஆலோசிக்க வேண்டியவன் நானென்று நினைத்தனையோ! இவ்வெண்ணம் நீ கொள்ளலாகாது. எனென்னில் — பிள்ளையின் ஹிதத்தை விரும்பி அவனைப்பார்த்துக் கொள்ளவேண்டிய பந்து தந்தையே யன்றித் தாயன்று. அப்படிப்பட்ட தந்தையாயினும் தந்தைக்குப் பின்னுள்ளவன் சிற்றப்பனேயன்றி நானல்லேன். வானரராஜனாகிய வாலியைத் தொடருவதைத்தவிர்த்தலும் மேலாக உரியது இவ்வுலகத்திலாவது பரலோகத்திலாவது மற்றொன்றும் இல்லை. ஆகையால் யுத்தத்தில் சத்ருவுக்கு எதிர் முகமாயிருந்து அடிபட்ட வீரனாகிய வாலி படுத்திருக்கின்ற இத்தப்படுக்கையே எனக்கும் படுக்க உரியது. இதைத்தவிர்த்தலும் மற்றொன்று மில்லை' என்றனள். இருபத்தொன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

மரணம் அடைந்தாற்போல மூர்ச்சித்துக்
கிடக்கும் வாலி மூர்ச்சையைத் தெளிந்து மேல்
செய்யவேண்டுங் காரியத்தைக்
கூறுதல்.

குற்றுயிரோடிருக்கும் வாலி மெதுவாக மூர்ச்சையிட்டுக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்து முதலில் தன்பிள்ளைக்கு முன்னேயிருக்கின்ற ஸுக்ரீவனைக் கண்டனன். வானரர் தலைவனாகிய அவ்வாலி வெற்றி பெற்றிருக்கும் அந்த ஸுக்ரீவனைக்கண்டு தெளிவான வார்த்தைகளால் அழைத்து ஸ்நேஹமும் விளங்குமாறு 'ஸுக்ரீவ! உன்னரசுப் யத்தினின்று துரத்தி உன் பார்யையை அபஹரித்துப்

பாபஞ்செய்தேனென்று நீ அதன் விஷயமாக என்மேல் தோஷம் நினைக்கவேண்டாம். இப்படிப்பட்ட பலன்மேலே உண்டாகவேண்டிய காரணத்தைப்பற்றித் தெய்வாதீனத்தினல் என் புத்திக்குண்டான மயக்கம் பலாத்காரஞ்செய்து எனவை இழுத்து இங்ஙனம் என்னைக்கொண்டு செய்வித்ததென்று தெரிந்து கொள்வாயாக. அப்பனே! நம்மிருவர்க்கும் ராஜ்யலாபமும் உடன் பிறந்தவர்களுக்குரிய ஸ்னேஹமும் ஒரே காலத்தில் உண்டாகக்கூடாதென்று தெய்வம் ஸங்கல்பித்தாற் போல் எனக்குத் தோற்றுகிறது. இந்தத் தெய்வத்தின் ஏற்பாடு தவறுமல் அப்படியே ஆகுமன்றி மற்றொரு விதம் ஆகாது கான இப்பொழுதே சீக்ரத்தில் யமலோகத்திற்குப் போகிறேனென்று உணர்வாயாக. ஆகையால் நீ இனி வானராராஜ்பத்தை யெல்லாங் கைப் பற்றிப் பாதுகாத்து வருவாயாக. ப்ராணன்களும் ராஜ்யமும் விஸ்தாரமான இந்த ஸம்பத்தும், அன்றியே வாலி எபபடிப் பட்டவர்க்கும் ஜயிக்கமுடியாதவ னென்னும் பழிகடமாகாத பசஸ்ஸும் என்னை இதோ சீக்ரமாக விட்டுப போகின்றன. வீரனே! வானராராஜனே! இப்பொழுது என்னுடைய அந்திமகாலத்தில் உனக்கு எந்த வார்த்தை சொலவேனே, அது உனக்குச் செய்து நிறைவேற்றக் கஷ்டமாயிருப்பினும் நீ தப்பாமல் அதைச்செய்ததீரவேண்டும். இவவங்கதன் செல்வத்துடன் ஸுகமாக வளர்க்கப்பட்டவ னுகையால் ஸுகத்திற்கே தகுந்தவன்; கஷ்டப்படத் தகுந்தவனல்லன். மேலும் வயதில் பாலனுயினும் புத்தியில் இளைஞனல்லன். இவன் முகத்தில் கண்ணீர் பெருகப்பெற்றுப் பூமியில் விழுந்திருக்கின்றனன் பார். இந்தக் குமாரன் எனக்கு ப்ராணன்களைக் காட்டிலும் மேலான அன்பிற்கிடம். இவனை நீ பெற்ற

பின்னையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். தந்தையாகிய தான் இவனை விட்டுப்போகிற தனையால் இவனுக்கு உன்னிடத்தில் ஒருகுறையும் வராதிருக்கும்படி கண்ணுக்கண்காப்பாற்றவேண்டும். வானரர் தலைவனே ! இவ்வங்கதனுக்கு இனிமேல் என்னைப்போலவே வேண்டினவஸ்துக்களையெல்லாம் கொடுப்பவனும், ஆபத்துக்களைப் போக்கி ரக்ஷிப்பவனும், பயம் உண்டாகும் ஸமயத்தில் அபயங் கொடுப்பவனும் நீயே யன்றி மறெவரார் இருக்கின்றனர் ? ஸ்ரீமானாகிய இந்தக்காரகுமாரன் பரதனுக்கு மத்திலே உனக்கு கப்பானவன். ஸமஸ்த கார்யங்களிலும் உனக்கு ஸஹாயமாயிருப்பது மாத்ரமே யன்றி ரக்ஷகனும் கூட வந்திக்கும்பொழுது உனக்குமுன்னே நிற்பான். இந்தத்தாரையின குமாரன் அங்கதன் நல்ல வயதுடையவனும் மஹா பலமுடையவனுமிருக்கிறான். மேலும் வானரசேனைகளுக்கு மஹாபலமுடையவனும் ஸேனாதிபதியுமான நீலனைப்போல யுத்தத்தில் பராக்ரமத்தைத் தெளிவாகிக் தனக்குத் தகுந்த பெரியகார்யங்களை நடத்துவான். ஸுஷேணன் புதல்வியாகிய இந்தத்தாரை ஸுலக்ஷணமார்த்தங்களை நிச்சயிப்பதிலும், மேலும் வரப்போகிற பலவகை ஆபத்துக்களை ஆராய்வதிலும் மிகவும் தேர்ச்சியுடையவள். தாரை ஏதேனும் ஓர் அபிப்ராயஞ் சொல்லினாலும் அது வேறுவிதமாகத் திரும்பமாட்டாது. ஆகையால் இவள் எதை நல்லதென்று சொல்வாளோ அதை ஸகலரும் நிச்சயஞ் செய்யவேண்டும். ராமகார்யத்தையும் கூட நீ எள்ளளவும் சங்கைப்படாமல் அவச்யம் செய்யவேண்டும். செய்யாத பக்ஷத்தில் அதர்மம் மிகவுண்டாவது மாத்ரமேயன்றி, ராமன் பேச்சுத் தவறித் தனனை இங்ஙனம் அவமானித்ததற்குக்கோபித்து உன்னை வதிப்பான் ஸுக்ரீவா ! எனக்குத் தேவேந்த்ரன் கொடுத்த திவ்யமான இந்தக் காஞ்சனமாலையையுங்கூட இப்பொழுதே

கைப்பற்றுவாயாக. ஏனெண்னில் நான் மரணம் அடைந்த பின்பு இந்திலுள்ள சிறந்தகாந்தி மழுங்கிப்போம். ப்ராணன்கள் போவதற்கு முன்னமே வாங்கிக் கொள்வாயாக' என்றனன். வாலி அங்ஙனஞ்சொல்லுகையில் ஸுக்ரீவன் உடன்பிறந்தவனிடத்திலுள்ள ஸ்நேஹத்தினால் மனக் களிப்பின்றி வருந்தி ராஹுவால் பீடிக்கப்பட்ட சந்த்ரன் போல் காந்தியற்றவனாயினன். ஸுக்ரீவ வாலி சொன்னபடி வைரத்தை விட்டுச் சோம்பலின்றி வாலியின சொற்படி நடப்பவனாகி அண்ணனிடம் அனுமதியைப் பெற்று அந்தக் காஞ்சனமாலையைப் பெற்றுக்கொண்டனன். வாலி அந்தக் காஞ்சனமாலைய ஸுக்ரீவனுக்குக் கொடித்துத் தான் மரணம் அடைவதற்கு ஸங்கல்பித்துத் தன்னெதிரில் நிற்குங் குமாரனாகிய அங்கதனைப்பார்த்து ஸ்நேஹம் விளங்கும்படி 'நான் போனபின்பு நீ தேசத்தையும் காலத்தையும் அறிந்து ப்ரியத்தையாவது அப்ரியத்தையாவது ப்ரபு சொல்லுவானின் ப்ரியத்தைப் போலவே அப்ரியத்தையும் துக்ககாலத்தில் ஸுகத்தையும் ஸுககாலத்தில் துக்கத்தையும் பொறுத்துக்கொண்டு ஸுக்ரீவனுக்கு உட்பட்டு வர்த்திப்பாயாக. மஹாபாஹுவே! உன்னை நான் எப்பொழுதும் எப்படி பாராட்டிக்கொண்டிருந்தேனோ, அவ்விதமாகவே ஸுக்ரீவன் நீ எப்படியிருப்பினும் உன்னை வெகுமானத்துடன் பாராட்டமாட்டானையால் நீ இவனுடைய மதப்படியிருந்து இவன் மகிழும்படி நடப்பாயாயின் இவனும் உன் மீது அன்புடன் இருப்பான். சத்ருக்களை அழிப்பவனே! இந்த ஸுக்ரீவனது சத்ருக்களோடிசேரும் புருஷனுடைவது இவனது சத்ருக்களோடாவது சேரவேண்டாம். நீ ப்ரபுவாகிய ஸுக்ரீவனது கார்யங்களில் ஆஸக்தியுடையனாகி இந்தரியங்களை வென்று அவனது ஆஜ்ஞையின்படி

நடந்துகொண்டிருப்பாயாக. அதிகஸ்னேஹஞ்செய்தலும் ஸ்னேஹமே செய்யாதிருத்தலும் பெரியதப்புகளாகையால் அவ்விரண்டையும் விட்டு அவைகளுக்கு இடையிலிருப்பவனாகி நடப்பாயாக' என்றனன். வாலி இங்ஙனம் அங்கதனுக்குச் சொல்லிப் பிறகு பாணபாதத்தை மிகவும் அதிகமாகையில் கண்கள் கிருகிருவென்று சுழலவும் பற்கள் வெளிப்பட்டுப் பயங்கரமாகத் தோற்றவும்பெற்று ப்ராணனகளை விட்டனன். அளக்கரம் அங்குள்ள வானரச்ரேஷ்டர்களும் பல வானரஸ்ரீஹாகளைப பரதுகாப்பவருமாகிய வானரர்கள் அனைவரும் 'வானராதிபதியாகிய வாலி ஸ்வர்கத்திற்குப் போனதைகயால கிஷ்கிந்தாபுரம் பாழடைந்தாற்போல் காந்தி குன்றப்பெற்றதே! உத்யானங்களும பர்வதங்களும் அரண்யங்களும் சூன்யங்களாயின. வானரஸிம்ஹனாகிய வாலி ஹதனாகையில் வானரர்களனைவரும் ஓளிமழுங்கப்பெற்றனர். அவ்வாலி கடந்து போகுமபொழுது பெரிய அவனது துடைகளின வேகத்தினல் மஹாரண்யங்களும் சிறியவனங்களும் புஷ்பஸ்ரீஹங்களோடுகூட அவனைப் பின்தொடர்ந்து செல்லுமே! இப்பொழுது அப்படிப்பட்ட காரியத்தை எவன் செய்யவல்லவன்? இவன் மஹானுபாவனும் மஹாபுஜனுமாகிய கோலபனென்னுங் கதர்வனோடு பதினைந்து ஸம்வத்ஸரங்கள் பெரியயுத்தஞ் செய்தனன. அந்தயுத்தம் ராத்ரியும் பகலும் ஓயாமல் பதினைந்து ஸம்வத்ஸரங்கள் நடந்தது. பிறகு பதினாறுவது ஸம்வத்ஸரத்தில் கோலபன் கீழே தள்ளப்பட்டனன். துஷ்டனாகிய அந்தக் கோலபனையுங்கூட வதித்துப் பயங்கரமான கோரைப்பற்கள்விளங்க நம்மெல்லோர்க்கும் எப்படிப்பட்டபயம் உண்டாயினும் அபயங்கொடுத்துக் கொண்டிருந்த இவ்வாலி இப்பொழுது எவ்வாறு முடிக்கப்பட்டனன்? ஆச்-

சர்யமாயிருக்கின்றதே' என்று பெருங்கோஷம் ஒன்று உண்டாகும்படி சோதனஞ் செய்தனர். அப்பொழுது ஸிம்ஹம் இருக்கிற பெரிய அரண்யத்தில், கூட்டத்தில் தலைமையுள்ள காளை பருது வதிக்கப்படுகையில் அங்குள்ள பசுக்கள் படப்படிவதுபோல், ராமஸ்ரீ வீரனுகிய வானராதிபன் வாலி ஹதனுகையில் (ராமனிருக்கும் அவ்வனத்தில்) வானரர்கள் சிறிதும் லோகத்தைக்காணுமல் மிகவும் பயம அடைந்தனர். அனந்தரம் அந்தத் தாரை, மரணம் அடைந்திருக்கும் தன பர்த்தாவின் முகத்தைப பார்த்துப் பெருத்துயரமாகிற ஸமுத்ரத்தில் மூழ்கி மஹாவ்ருக்ஷம் அறுப்புண்டு வீழ்ந்தகாயில அதைச் சுற்றிக்கொண்டிருந்த கொடி அத்துடன்கூடத் தரையில் வீழ்வதுபோல, ஹதனுகிய வாலியை அணைத்துக்கொண்டு பூமியில வீழ்ந்தனள். இருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வாலி மரணம் அடைந்தபின்பு தாரை டலபடுதல. }

அனந்தரம் தாரை, வானராதிபனுகிய வாலியின் முகத்தை மோந்துகொண்டு, மரணம் அடைந்து இவ்வுலகத்தினின்று லோகாந்தரஞ்சென்ற கணவனைக்கண்டு "வீரர்களில் தலைவனே! நீ என்வார்த்தையைக் கேளாமற்போயினையே! ஆகையால் கற்கள் நிறைந்து மேடுபள்ளமாகி மிகவும் பாதையை விலக்கின்ற பூமியின் மேல் கஷ்டமாகப் படுத்திருக்கின்றனையே! வானராதா! நீ பூமியை அணைத்துக்கொண்டு படுத்து என்னைநீ மறுமொழி கூறுதிருப்பதுபற்றி உனக்கு இத்தப்பூமியே என்னைக் காட்டிலும் ப்ரீதிகரமெனபது நிஜம். வீரனே! ஸாஹஸஞ் செய்யுந் தன்மையனே! என ப்ரீதிக்கிடமா

யிருப்பவனே! உனனிடம் பலதடவைகள் பயந்தோடின லக்ஷ்மீவன் கையில் அகப்பட்டனையே! அங்ஙனம் ஓடிப் போன லக்ஷ்மீவனை இப்பொழுது பராக்ரமம் மிகப்பெற் றனன். தெய்வம் இங்ஙனஞ் செய்வதை, ஐயோ! என் னவென்னலாம்? மற்றபலரென உனதை ப்ரேஷ்டர்க ளான [1] பல்லாகர்களும் வானரமுக்யர்களும் சூழ்ந்திருக் கின்றனர். (அவர்களை என உதாஸிக்கின்றனை?) இவர் களது ரோதனத்வனியையும் துக்கித்திருக்கிற அங்கத னுடைய புலம்பலையும் என கதறலையும் கேட்டு எழுந் தாதிருக்கின்றனை என? மூனபுரீ சத்ருக்களை வதித்து எதன்மேல் பங்கமைவத்தனையோ, அப்படிப்பட்ட இந்த வீரசயனத்திலேயே, நீ இபபொழுது யுத்தத்தில அடி பட்டுப் படித்திருக்கின்றனை. நீ யுத்தத்தில் விருப்பமு டையவனாகையால உனக்கு யுத்தத்திலேயே மரணம் கே ரிட்டது. நீ பலத்தைக கபடயுத்தத்தில் உபயோகப்ப டுத்தமாட்டாய்; ஆகையால் இது தோஷமின்றிப் பரி சுத்தமா யிருப்பது. உனக்கு யுத்தமென்றால் மிகவும் விரு ப்பம். என் ப்ராணநாதா! வெகுமதி கொடுப்பவனே! இப் படிப்பட்ட நீ, இப்பொழுது என்னை அநாதை யாக்கித் தனியேவிட்டுப் போயினையே! எனக்கு எவர் திக்கு? பண் டிதனும் விருப்பமுள்ளபெண்ணைச் சூரனுக்கு எவ்விதத்திலும் கொடுக்கலாகாது. சூரனது பார்யையாகிய நான் வித வையாகிப் பாழானேன் பார். எனது மேன்மைபோயிற்று. எனக்குச் சாஸ்வதமாயிருந்த பதிப்ரேமசுகமும் தொ லைந்தது. இவ்வளவுமாத்ரமன்றே! ஆழ்ந்ததும் மிக விஸ் தாரமுடையதுமான துக்கஸமுத்ரத்தில் மூழ்கினன். ப்ரா ணேஸ்வரனாகிய நீ ஹதனானதைக் கண்ணாரக்கண்டும் என் மனம் நூறுசுக்கலாய் வெடித்துப்போகாதிருக்கின்றதே!

---

1 காடிகள்.

இவ்வளவு கடினமாயிருப்பதால் இது கல்லில் சிறந்தபாக
த்தை யெடுத்துச செய்யப்பட்டதாக வேண்டுமே யன்றி
வேறில்லை. இது நிச்சயம். எனக்குக் கணவனும் கண்ப
னும் இயற்கையாகவே எனக்குப்ரீதியை விளைப்பவனும்
யுத்தத்தில் மிகுந்த பராக்ரம முடையவனுமாகிய சூரன்
மரணம் அடைந்தனனே! மற்றவன் இருந்தென்ன? பதி
போனபின்பு பெண்பிள்ளை புத்ரவதியாயிலும் மிகவும் பரி
பூர்ணமாகத் தனதானய முடையவளாயினும், அவளைப்
பண்டிதர்கள் விதவையெனறே சொல்லிக்கொள்வார்கள்.
வீரனே! நீ சரீரத்தி னின்று பெருகின ரக்தப்ரவாஹத்
தினமேல் படித்திருப்பது கண்டால பட்டுப்பூச்சியின வர்
ணமேபோல் சிவந்த மெத்தையுடைய படுக்கையின்மேல்
படுத்தாற்போலிருக்கிறது. வானரதிலகனே! உன தேஹ
மெல்லாம் தூசியும் ரக்தமும் கலந்து சுற்றிலும நிறைந்தி
ருக்கின்றது; ஆகையால எனகையில் நிற்கமல நழுவிப்
போகையால் இதைக் கட்டியணைக்கவும் யாத்தப்படாதி
ருக்கின்றனன. ஸுக்ரீவனுக்கும் உனகமும பெரிபவைரம்
உண்டாயிருக்கும்பொழுது, ராமன் ஸுக்ரீவனுக்கு உன்னை
யுண்டான பயத்தை ஒரு பாணத்தினாலேயே போகவிட்
டாணைகையால் இனி ஸுக்ரீவன் ப்ரயோஜனம் கைகூடப்
பெற்றவனே! நீ மரணம் அடைகையில் உன்னைத் தழுவி
அணைப்பதற்கும் நேராதபடி உனமார்பில் கட்டினபாணம்
துக்கையால் உன்னை வெறுமனே கண்களால் காண்பது
மாத்ரமேயாகப் பெற்றவளானேன்' என்று புலம்பினள்
அப்பொழுது நீலன், பர்வதகுஹையில் மறைத்து ஜ்வலிக்
கின்ற க்ரோதவிஷ ஸர்ப்பத்தை இழுப்பதுபோல் வாலியின்
தேஹத்தில் காட்டப்பட்டிருக்கிற ராமபாணத்தைப்பிடுங்
கிப் போட்டனன். அங்ஙனம் பிடுங்குகையில் அத்தப்பா
ணத்தின் ஓனி, ஸூர்யனிடத்தி னின்று புறப்பட்டு அஸ்

தமய பர்வததநின் சிகரத்தில் தடைபடுகினறு சிரணம் போல் ப்ரகாசித்தது. பர்வதத்நினினறு சிவந்த மைகிக தாதுக்களோடு கலதது சிவதத ஜலதாரைகள் பெருகுவது போல் வாலியின் தேஹத்திலுள்ள வரணங்களினின்று ரக்ததாரைகள் பெருகின. தாரை, அஸத்ரத்நிறை அடிக்கப்பட்டிப போர்க்களப் புழுதிகளால நிரம்பிய சூரணிய தன் பர்த்தாவைக் கண்ணீர்களால் தேஹம் முழுவதும் தூசிபோகும்படி தணைத்து விட்டனள். அங்ஙனம்ராமபாணத்நிறை அடிக்கப்பட்டு அவயவமெல்லாம் ரக்ததத்தில் தனதநிருக்கிற கணவனைப் பார்த்துத் தாரை பொனவரணம் பொருந்திய கண்களையுடைய தன புதல்வனிய அங்கதனை அழைத்துக் 'குழந்தாய்! மிகவும் பயங்கரமான தக்ஷதயின் கடைசி அவஸ்தையை (மரணவஸ்தையை)க் காண்பாயாக. பாபகர்மத்நிறலுண்டான வைரம் இபோது முடிந்து விட்டது குமார! யமக்ருஹத்திற்குபபோகும் வானரோப்வரனுக்கு, உதயஸூரயன்போல் சிவந்த சரீரமுடையவனுக்கு, மானங்காதிப்பதும் கெடிபபதுஞ செய்பவனுக்கு, உன்னைப்பெற்ற தக்ஷதக்கு, நமஸ்காரஞ் [illegible]' என்றனள். தாய் இங்ஙனஞ்சொல்லுகையில் அங்கத [illegible] 'காள அங்கதா?' எனறு தன் மாரைச் சொல்லிக்கொண்டு பருத்துருண்ட புஜதண்டங்களால தன் தாதங்களைப் பிடித்துக்கொண்டு நமஸ்காரஞ் செய்தனன. அப்பொழுது தாரை வாலியைப் பார்த்து 'அங்கதன் உனக்கு நமஸ்காரஞ் செய்கையில முன் போல் 'குழந்தாய்! ஆயுள்வளரப் பெற்றிருப்பாயாக' எனறு என் நிவனை ஆசீர்வதியா திருக்கின்றனை? ஸிம்ஹதத்நிலல் அந்தகஷணத்தில் கொல்லப்பட்ட எருமைதப் பசுவும் தன்றும் விடாமல் சுற்றிக்கொண்டிருப்பதுபோல், ஹதனாகி ப்ரஜ்ஞையில்லாதிருக்கின்ற உன்னை நானும் என்புதல்வ

னும் பணிந்துகொண் டிருக்கின்றனம். நீ யுத்தமென்னும் யாகத்தைச்செய்து ராமபாணமென்னும் ஜலத்தில் அவப் ருதஸ்னானஞ் செய்தனை யே! பார்யையாகிய எனனை விட்டு எபபடி செயதனை? முனபு தேவேந்ரன் யுத்தத்தில் ஸங் தோஷமுற்று உனக்குகொடுத்த கான்சனமாலை இப்பொ (முது உன வக்ஷஸ்தலத்தில் எனக்குப் புலப்படவில்லையே! ஏன்? மானங்கொடுப்பதுங் கெடுப்பதுஞ் செய்பவனே! ஸரி ர்யன எப்பொழுதும் ப்ரதக்ஷிணஞ் செய்துகொண் டிருக் கையால் அவனது காந்தி மேருபாவதத்தை விடாதிருப்ப துபோல், நீ மரணம் அடைந்திருப்பினும் ராஜ்யலக்ஷ்மி உ னனை விடாதிருக்கின்றது. நீ, கான்சனன ஹிதவசனத் தைக்கேளாமற் போயினை. உன்னை அப்பொழுது யுத்தத் திற்குப் போகவொட்டாமல் தடுப்பதற்கு எனக்கு ஸாத் யப்படாமற் போயிற்று யுத்தத்தில் நீ ஹதனாகுமபொழுதே என் லக்ஷ்மியும் எனனை விட்டுபபோயிற்று' என்று புலம் பினள் இருபத்துமூனறாவது ஸர்க்கம் முற்றிற்று.

தாரையின் புலபபலக்கேட்டு ஸுக்ரீவன் துககித்தலும, ராமன் அவனை ஸமாதா னப் படுதது தலும், தாரை ராமனி டம் ப்ரபத்தி செய்தலும்.

அனக்தரம் பலிஷ்டனாகிய வாலி தம்பி ஸுக்ரீவன், அங்ஙனம் கண்ணுங் கண்ணீருமாகி சோதனஞ் செய்து கொண்டு அணைகமுடியாத சோகஸமுத்ரத்தில் மூழ்கியி ருக்கின்ற தாரையைப்பார்த்து வருத்தமுற்றவனாகித் தன் தமையனைத் தானே, எங்குமிலலாதபடி கொன்றதற்கு மிகவும் பரிதாபமுற்றனன். அதத ஸுக்ரீவன் பெரிய மன முடையவன. ஆகையால் முகம் முழுவதும் கண்ணீர்பெ ருகப்பெற்றுத் தாரையைப் பார்த்து க்ஷணமாத்ரத்தில் ப்ராத்ருவதத்தைப்பற்றி மிகவும் மனம் பரிதபிக்கப்பெற்று

ப்ருத்யர்களால் சூழப்பட்டு மெல்ல மெல்ல ராமனது அருகிற் சென்றனன். அங்ஙனம் வில்லைக் கையிற்பிடித்துஸர்ப்பம்போன்ற பாணங்கள் அமைத்து உத்தமஞகி எங்கும் பெரும் புகழ்பெற்றுச் சுபலக்ஷணங்கள் பொருந்தி அழகான மேனியுடையவனாயிருக்கின்ற ராமனிடம் லக்ஷ்மணன் சென்று 'ஆரேத்ரனே! நீ செய்த பாதிஜ்ஞையின்படி உன் கார்யத்தைச் செய்தனை அதற்குப் பலனாகிய ராஜ்யத்தை எனக்கு விளைவித்தனை. ஆனால், ராஜகுமாரனே! எனக்குப் போகங்களில் மாத்ரமேயன்று, ஜீவிதத்திலுங் கூட எள்ளளவும் மனம் பொருந்தாதிருக்கின்றது. ராமா! பட்டமஹிஷியாகிய இதைத் தாரை இப்படி மிதமின்றி ரோதனஞ செய்துகொண்டிருக்கையில், கிஷ்கிந்தாபுரத்திலுள்ள வானர்கள் அனைவரும் துக்கதிஞல் பரிதபித்து முறையிட்டுக்கொண்டிருக்கையில், அண்ணனுகிய வாலி ஹதனாகையில், அங்கதனும் பித்ருமரணத்திஞல் பிழைப்பனே மாட்டானே என்னும்படி ஸந்தேஹப்படவேண்டியிருக்கையில், இந்த ராஜ்யம் எள்ளளவும் என்மனத்திற்கு இஷ்டமாயிலலை. இக்ஷ்வாகு வம்சத்திற்பிறந்தவனே! முன்பு நிஷ்காரணமாக எனதினத்துரத்தின கோபத்திஞலும் பருஷமாகச்சொன்ன வார்த்தைகளைப் பொறுக்கமுடியாதிருந்ததையாலும் என்னை அவமதித்து மிகவும் தலைக்குமேலேறியிருந்ததையாலும் அண்ணனைக் கொலலுவது எனக்கு ஸம்மதமாயிருந்தது. இப்பொழுது நீ வானரக்கூட்டங்களுக்குத் தலைவனுகிய வாலியைக் கொன்றபின்பு மிகவும் நிர்பயமாகப் பரிதபிக்கின்றனன். எனக்குப் பரிதாபம் பொறுக்கமுடியாதிருபபினும், இனி எப்படியோ ஒரு விதத்தில் என வானரஜாதிக்குத் தகுந்த வ்ருத்தியைக்கொண்டு தான் ஜீவித்திருக்கும்காலம் முழுமையும் அந்த ருச்ய மூகபர்வதத்தில் வாஸஞ் செய்கையே எனக்கு மிகவும்

கன்மையாகத் தோற்றுகின்றது. இந்த வாலியைக்கொன்
று ஸ்வர்க்கம் கேருமாயினும் எனக்கு வேண்டாம். அது
எனக்கு மேலன்று. ராமா! மதியிற் சிறந்த மஹாநுபாவ
ரூகிய இவ்வாலி 'உன்னைக்கொல்ல எனக்கு இஷ்டம்
இல்லை. நீ இஷ்டப்படி போவாய்' என்று என்னுடன் சொல்
லினன். அந்த வார்த்தை அந்த மஹாநுபாவனுடைய புத்
திக்கே தகுந்திருக்கின்றது. துர்புத்தியாகிய எனக்கோ
இங்ஙனம் அவனைக் கொல்விக்கையே உரியதாயிற்று.
ராமா! அண்ணனைக் கொல்வதால் உண்டாகும் ராஜ்யலா
கம் அதிகமோ? கொன்றபிறகு உண்டாகும் துக்கம் அதி
கமோ? விசாரியாமல் கேவலம் காமத்தையே முன்னிட்
டுக்கொண்டு தம்பியாயிருப்பவன்எவ்வளவு பாபிஷ்டனா
னும், எங்காயினும மஹா குணமுடைய அண்ணனை எப்
படியாயினும் வதிக்க விரும்புவானோ? ஆகையால் என்னை
ப்போன்ற பாபிஷ்டன ஒருவனும் இல்லை. வாலி மிகவும்
பெருத்தனமையுடையோ ரூகையால் தன பெருந்தன்மை
யைக் கடக்காதிருந்ததைபற்றி என்னைக்கொலவது அவ
னுக்கு இஷ்டமாகவில்லை. நான் மிகவும் துர்ப்புத்தி யாகை
யால் அண்ணனது ப்ராணனைத் தீர்க்கும்படியான மர்
யாதைமீறின கார்யத்திற்கு ப்ரயத்னித்தனன். வாலி,
நான் வருக்ஷத்தின் கிளைகளால் அடிக்கப்பட்டுப் பாண
யைப்பொறுக்க முடியாமல் கூச்சலிட்டுக்கொண்டிருக்கை
யில், என்னைப் பார்த்து நல்வார்த்தைகளைச் சொல்லி
'மீளவும் இபபடி யுத்தஞ்செய்ய வரவேண்டாம்' என்று
மொழிந்தனன. வாலி உடனபிறந்தமையையும் பூஜ்யஸ்வ
பாவத்தையும தாமத்தையும் பத்ரமாக வைத்துக்கொண்
டிருந்தது எனனைக் கொல்லாமல விட்டுக்கொண்டு வந்த
னன். நான் கோபத்தையும் காமத்தையும் கைப்பற்றி என்
வானர ஸ்வபாவத்திற்குத் தகுந்த கார்யத்தை நிறைவேற்

றினன். நரேந்த்ரா! முன்பு த்வஷ்டாவின் குமாரனாகிய விச்வரூபனைக் கொன்றது இந்த்ரன் மஹா பாபத்தைப் பெற்றாற்போல், நான் இப்பொழுது அண்ணனை வதிப்பித்து இவ்வளவு அவ்வளவென்று எண்ணக்கூடாததும் ஸத்புருஷர்கள் பரிஹஸிக்கத் தகுந்ததும் அன்றி ஒருகாலத்திலும் விரும்பத்தகாததும் பார்ப்பதற்கு எவ்வளவும் யோக்யமாகாததுமாகிய மஹா பாபத்தைப் பெற்றனன். அவன் தேவேந்த்ர ணைகயால் வரங்களைக் கொடுப்பானென்னும் ஆசையால் அவனது பாபத்தைப் பூமியும் ஜலமும் வ்ருக்ஷங்களும் ஸ்த்ரீகளும் வாங்கிக் கொண்டனர். இனிக் கேவலம் ஓர் குரங்காகிய என பாபத்தை எவன் வாங்கிக்கொள்ள ஸமமதிப்பான்? ராமா! அதர்மிஷ்டமும் வம்சநாசத்திற்கு மூலமாயிருப்பதுமாகிய இந்தப் பாபத்தைச் செய்து இனி ப்ரஜைகளால [1] ராஜஸம்மானம் பெறுவதற்குத் தகுந்தவனல்லேன்; யௌவராஜ்யத்திற்கும் உரியனல்லேன்; இனி மஹாராஜ்யத்திற்கு உரியனல்லேனென்பது சொல்ல வேண்டுமோ? சிஷ்டஜனங்கள் மிகவும் நிந்திக்கத் தக்கதும் தேவஸ்தானம் கிடமும் ஸமஸ்த லோகங்களாலும் கைவிடப்பட்டதுமாகிய மஹா பாபத்தைச் செய்தவனுனேன். மழையில்லாண்டான ஜலப்ரவாஹம் பள்ளத்தைத் குறித்துபோவதுபோல், இம்மஹாதுக்கம் என்னை அடைந்தது. மதித்தயானை ஆற்றின் கரையைக் கொம்புகளால குத்திக் கிளறுவதுபோல், அண்ணனைக் கொல்லுவதே பின்புறமும் வாலுமாகவும் அவனுக்கு மனவருத்தத்தை விளைக்கையே துதிக்கையும் கண்களும் சிரஸும் தந்தங்களுமாகவும்பெற்று விளங்கும் மஹா பாபமென்னும் மத்தகஜம மிகவும் மேலெழுந்து கஷ்டங்கள் தாறும் வளர்ந்துகொண்டு என்னை ஹிம்ஸிக்கின்

---

1 ராஜனென்னும் கொண்டாட்டம்.

றது. விவேகாதிகளால் சோகத்தை அடக்கிக்கொள்வாய் என்கிறாயோ? புருஷதிலகனே! ராமா! அக்னியில் வர்ணம்மாறின பொன்னைக் காய்ச்சும்பொழுது அது தன் வேறுடருந்த அழுக்கைப் பொறுக்காமல் அதை எப்படி வேறுபடுத்துமோ, அப்படியே என்மனத்தில் ஜன்மாந்தரஸஞ்சிதத்தினால விவேகம்முதலிய ஸாதுவ்ருத்தங்கள் எவையேனும் இருப்பினும் அவை தன்வேறுடருக்கின்றகான் செய்த ப்ராத்ருவதமென்னும் பாபத்தைப்போறுக்கமுடியாமல் புறப்பட்டுப்போகும். ஐயோ! என் செய்வேன். ராகவா! மேலும், என் நிமித்தமாகவே இவ்வங்கதன் தகனத்தை மாண்டதற்குப் பரிதபிப்பதைக்கண்டு மஹாபலிஷ்டர்களான இவ்வானரகணாதிபதிகளின் கூட்டத்திற்கு, இப்பொழுதே பாதிப்ராணன் போனற்போல் எனக்குத் தோற்றுகின்றது. வீரோத்தமனே! லௌஜன்யமுண்டாகப் பெற்றுச் சொன்னபடி தவறுபல் கேட்கும் புதல்வனையும் உலகத்தில ஸுகமாகப பெறலாமன்றி அங்கதனைப்போன்ற நற்பிள்ளையைப் பெறுவதுமாத்ரம் மிக அரிது. அன்றியே எதத்தேசத்திற்குப் போயினும் ஸோதரனது ஸகிதானம் கிடைப்பது ஸாத்யமன்று வீர! பெரியோர்களில் தலைவனே! ஒருகால் அங்கதன் பிழைத்திருப்பானாயின், அவன் தாய் தாரையும் அவனை ரக்ஷிப்பதற்காக ஜீவித்திருப்பாளன்றி, அவன் ஜீவித்திராதபக்ஷத்தில் ஜீவித்திருக்கமாட்டாளென்பதில் சிக்ஷயம். இப்படிப்பட்ட மஹாபாபியாகிய நான, இனியாவது என் தமையனைடும் என்புதல்வன அங்கதனைடும் ஸ்னேஹத்தை நிறைவேற்றுமவனாகி எரிகின்ற அக்னியில் ப்ரவேசிக்கின்றனன். இந்த வானரவீரர்கள் அனைவரும் உனது ஆஜ்ஞையின்படி தடப்பவராகி ஸீதாதேவியைத் தேடுவார்கள். ராஜகுமார! நான் இருக்கவேண்டிய

அவஸ்யமில்லை. நீ மிகுந்த சக்தியுடையோ ரணையால், நான் மரணம் அடைந்து மறைந்தபின்னும், உன் கார்ய மெல்லாம் குறைவின்றி நிறைவேறுகுமும். இப்படிப்பட்ட பாபத்தைதச் செய்து குலத்தைதப் பாழாக்கி ப்ராணனை வைத்துக்கொண்டிருப்பதற்கு எள்ளளவும் தகாத என்னை, ராமா! அக்னிப்ரவேசஞ் செய்ய அனுமதிப்பாயாக' என்றனன. சத்ருவீரர்களை அடகுகும் நிறமையுடைய அதத ரகுகுலதிலகரகிய ராமன், தன்னை பற்றி ரருடைய விரோதிகளை போக்குவோரணையால லக்ஷ்மீவனது வார்த்தைதயை கேட்டு, முனபு வாலியைகொன்று அனகதரம் வாலின்தம்பி அதத லக்ஷ்மீவன வருத்திச்சொனன வார்த்தையைக் கேட்டுக் கண்களில நீரபெருகத தானும் வருத்தபபட்டு எதுதேதாற்றுமல் விசாரத்தோடிருநதனன். அனகதரம் அதத க்ஷணத்தில் பூமியைப்போல் பொறுமையுடையவனும் ஸமஸதலோகங்களையும் பாதுகாப்பவனுமாகிய ராமன, தாரை பலதடவை தன்னைப்பார்த்து வபஸனத்தில மூழ்கி ரோதனஞ் செய்து மன இரக்கம விளைத்துகொணடிருக்கையில, அவளது வருத்தத்தைதத தீரகுமபோருடடு கலவார்த்தை சொலல முயனறது அவளை பாராகவதனன. அப்பொழுது அகன்ற கண்களுமம கபிராஜன மதியும் பொருநதிய கபிவீரபத்னியாகிய தாரை, கபிஸிமஹந் களுக்குத் தலைவனரிய பாதத்தாவான வாலியைத் தழுவி யணைத்துக்கொணடு தரையில் படுத்திருக்கையில ராமன வருவதைதக்கண்டு மதநரி ப்ரதானர்களான வானரர்கள் அவளை எழுநதிருகக எடுதததனர. அதத்தாரை துக்கத்தினமிகுதியால் பர்தாரவை விடமுடியாமல துடிதது கணவனைக் கட்டிகொணடு மதநரிகளால பலாத் காரஞ்செய்து பாத்தாவிடமிருந்து எடுத்து அபபுறம்

கொண்டிவிடப்பட்டவளாகி, அப்பொழுது தனுஸ்ஸை யும் பாணத்தையும் தரித்துத் தன் தேஜஸ்ஸினால் ஸூர்யன்போல் ஜ்வலிக்கின்ற ராமனைக்கண்டனள். மான் குட்டியின கண்போன்ற கண்களையுடைய அந்தத் தாரை [1] ஸமஸ்த ராஜலக்ஷணங்களும் பொருந்தி அழகான கண் கள் அமைந்து இதுவரையில் எனறும பார்க்கப்படாத புருஷோத்தமனாகிய ராமனைக்கண்டு இவனே அந்த ஸ்ரீராமனென்று தெரிந்துகொண்டனள். மேன்மைப்படுத் துகைக்குரிய அந்தப் பெண்மணி அங்ஙனம் வ்யஸனத் திலாழ்ந்து வருந்தி அடிக்கடி மூர்ச்சித்துக்கொண்டு, அனந்தரம் தேவேந்த்ரனைப் போன்றவனும் சத்ருக்களுக் கு எள்ளளவும் அணுகமுடியாத மஹாநுபாவனுமாகிய ராமனுடைய ஸமீபத்திற்கு மிக்க வேகத்துடன் போயினள். இங்ஙனமிருக்கின்ற அந்தத் தாரை சோகாதிஸயத்

---

1 இவகு 'ஸ ஸுவ்ருத்தம் பாயிவலக்ஷணஸம்பந்நம் சாருதேஹாம மாஜுஹாவைதேஹ்யா! அஜ்ஜவ்ஹட பூவம் புருஷப்பயாரமம் ஸ காகுத்ஸ்ய இதி பராஜ்ஜதே' எனபது மூலம்.(அயம் ஸ ராம இதி ப்ரதிஜ்ஞே) இவனே அந்த ராமனென்று தெரிந்துகொண்டனள். வாலியைக் கொன்ற ராமனிவனே யென்று தெரிந்துகொண்டனள. அலலது— அங்கதன் முன்பு தன்னைநி எவனைக குறித்துச சொல்லினதோ அ ந்த ராமனே இவனென்று தெரிந்து கொண்டனள. அலலது பொரி போர்கள எவனைப் புண்டரீகாக்ஷதவம்முதலிய குணங்களுடையவனு கச் சொலலகேகட் டிருந்தனளோ அந்த ராமன இவனே யெனறு தெரிநதுகொண்டனள. (அஜ்ஜவ்ஹட பூவம) இதுவரையில என்றும் பாக்கப்படாதவனை. யோகஸமாதிபத தவிர மற்றவைகளால பா ர்க்க முடியாதவரகையால சாம தேதரகளால பாரக்ககூடாதவ னை.(ம்ருஜுஸ்வபாவ ஸ்-த்ராசாருதேஹதரம்) இளமான் கண போன்ற கண களையுடையவள அழகிய கண்களையுடைய ராமனைக கண்டனள. 'விஜ்ஞாதே வவிஜ்ஞாதரி விஜ்ஞஜ்ஞபரிஸ்ரமம்' என்கிறபடியே தான் அழகிய கண்ணுடையவளாகையால் முதலில ராமனது அழகிய கண் களை மேலேயே திருஷ்டியை வைத்தாளென்று கருத்து.

திரஸ் கோபித்து மெய்ம்மறந்து ஓர்பாணத்திரஸ் குறி வைத்துத தன கணவனைக்கொன்று முடித்த அந்தராமனைக் கிட்டித் தன்னுல் ஆனமட்டும் பருஷங்களைப்பேசி நிச்சயித்துக் கொண்டவளாயினும் ராமஸகிதனைத்தின் மஹிமையால் மனக்கலக்கந்தீர்ந்து சுத்தஸத்வம்விளங்கப் பெற்றுராமனை இங்ஙனம் புகழத்தொடங்கினள். [1] நீ அப்

I இங்கு 'தவமப்ரமேயஸ்ய ஊராஸ்ருஜஸ்ய ஜ்ஞாநஜ்ஞியஸ் சேஷ தமயார்மிசஸ்ய! அக்ஷய்யகீர்த்திஸ் விசக்ஷணஸ் சக்ஷிதிக்ஷமாவாந் க்ஷதஜோபமாக்ஷ' என்று மூலம். (த்வம்) மேற்சொலலப்போகிற கல்யாண குணகணத்துக்குத தகுந்த தாமிஸலக்ஷண்யத்தை யுடைய நீ. (அப்ரமேயஸ்ய) 'வேஹாஹம' என்று தொடங்கி 'மஹாநதம்' 'க இத்யாவேஹ' என்று வேதகணத்துக்கும அளவிடவொண்ணுதவன். (அப்ரமேயஸ்) 'ஸோ அகமஹ வேஹ யஹிவா ந வேஹ' என்கிறபடியே தனக்கும் தன் பெருமைக்கு அளவிடமுடியாதிருப்பவன். (தவம அப்ரமேயஸ்) ப்ரத்யக்ஷமாகக் கணணுக்குப் புலபபட்டுக கொண்டிருப்பினும் மனத்திரஸ் இப்படிப்பட்ட ஸ்வபாவமுடைபவனென்று நிசசயிப்பதற்கு முடியாதவன். (தவம் அபரமேயஸ்) நீ தணுஸ்ஸையும் பாணத்தையும் தரித்திருப்பினும் சங்கசக்ரகளைத தரித்த அப்ரமேயனே. (தவமப்ரமேயஸ்) இதோ புலபபடுகினறநீ. அதாவது —உன்னுடைய ஸௌலப்யத்தைசையே அளவிடக்கூடாததாயிருககின்றது. (தவமப்ரமேயஸ்) இங்கு (தவம்) எனனும் ஒருமைபால் நீ பரிகரகளினறித தனியராயிருபபினும் ப்ரதாபத்தின மிகுதிபால அளவிறந்த பரிகாரமுடையவன் போல அமைதக்கூடாதிருகினறனை. இங்ஙனம அதக்காரணமான மனத்திரஸ்லும் அறியககூடாத நீ பாவற்ற கரணஙகளான நேதாதிகளால அறியமுடியாதவனென்று சொலலவேண்டுமோ? என்கிறுள— (ஊராஸ்ருஸ்) அணுகமுடியாதவன். மனதிற்கும் கூட அணுகமுடியாதவன். இனி பரகாராநதரத்தால எப்படி அணுகக்கூடுமென்று கருத்து. (ஊராஸ்ருஸ்) 'ஷஜீலை விஸாரண மத்யவஸாஹேஷ' என்றுயாது பாடதத்தில ஷஜீலை தாதுவுககுச சொல்லப்பட்ட மூன்றர்த்தங்களையும் தந்த்ரத்திரஸ்ல இகுச சொலலுகிறது. விஸாரணமாவது— நாசம். நித்யரஸைகயால நாசத்திற் கிணஙகாதவன். ஸர்வவ்யாபகரஸைகயால அசைக்கமுடியாதவன். நித்யாநந்தரஸைகயால அவஸாதப்

ரமேயன், உன்னைப் பெறுவது எவர்க்கும ஸாத்யமன்று.நீ பதித்தமுடிபாதவன். அவஸாதம —வருசதம. ஒருவராலும் வருத்தப் படுத்த முடியாதவன். (ஊராஸஉ) 'மஹாஜுதேந யேந ஹதஸ் ஸபநயாக' என்கிற ஸன்மார்ககத தபஸினவர்களுகக்குப் பெறமுடியாத வன். (ஊராஸஉஙிச) வாலி வதத்திலை கோபித்திருபபவாகளுக்கு ப்ரதீகாரஞ் செய்ய அணுகவும ஸாதயப்படாதவன (ஊராஸஉஙிச) வேதபாஹ்ய பாகளுக்கும குதருஷ்டிகளுகக்கும் அணுகமுடிபாத வைப வமுடையவன். இவ்வனைம அபரமேயனும துராஸதனுமாகிச செருகழித்துத் திரிபவரையினும பரதாரகளிலாவது பிறருடைய ராஜ யங்களிலாவது ஆசையிலலாதவனென்கிறாள — (ஜிதேந்ரியக) கிஸ்ப்ருஹரஹி ஸுக்ரீவனுக்கு ராஜ்யங்கொடுத்தவன். (ஜிதேந் ரியக) எவனேனும் ஒருதரியைப்பாரத்து வர்ணிகவாவது வர்ணிப்பான். நீயோ 'ரமாமக பரஸ்த்ரீகளைக் கண்ணெடுத்தும பாரான) என்கிறபடியே தலைபடுதத்தும் பாராய. (ஜிதேந்ரியஸ்ச) 'பரஸ்யதயசக்ஷுர்ஸ்ஸ. ஸ்ரஜேத்யகாண' 'அபாணிபாதோ ஜவநோ க்ரஹீதா' (கண்ணில்லை,பாகின்றனன். காதிலலை, கேட்கின்றனன) (கால கையில்லை, ஓடுகின்றனன் பிடிக்கின்றனன்) எனகிறபடியே ஸாவேந்தரியங்களும் இலலாமறபோயினும ஸாவத்தையும ஸர்வதேசத்திலும ஸர்வகாலத் திலும அறியுந்தன்மையனென்றபடி. (ஜிதேந்ரிய) 'ஊர்த்வரஹம் மநஸாப்யநஸ்மரந்ரிரியைரபி ஊர்ஜஸ்வி' எனகிறபடியே இந்த்ரி யங்களை வென்றவன். வாக்குகும மனத்திற்கும் உட்படாதவன். (த்வம் ஜிதேந்ரியக) 'ஸர்வம் வாகயம் ஸாவயாரணம்' என்னும் ந்யாயதின்படி நீயே ஜிதேந்த்ரியன். 'அஹலயாயை ஜாரஸ் ஸேரபதிரஹ்ருஷாத்மநயாம் ப்ரஜாநாயோS பாவீஹ்ருஜத ஹ்ருரோரிந் ஊரவலாம்' (இந்தரன் அஹலையையோடு வ்யபிசாரஞ்செய்தனன்.ப்ர ஹ்மா தன் பெண்ணைப் புணர்ந்தனன். சந்தரன் குருபாரையயிடம் போயினன்) என்று உன்னை யொழிந்தவரெலலோரும விஷய சப லர்களே. நீ யொருத்தனே ஜிதேந்த்ரியன். இப்படி இவன் விரகத ரையினும நமமை ரிமஷிக்கையால அதார்மிகனென்று நினைத்திருந் தேன். ஆயினும் அப்படி யன்றென்கிறாள — (உத்தமயார்மிகஸ்ச) தன்னைச் சாரதவர்களை ரக்ஷிககும்பொருட்டு இப்படிப்பட்ட கார் யஞ் செய்கையால் பரமதார்மிகன். தன்னைப்பற்றினர் கார்யத்தை

இந்திரியங்களை வென்றவன். தார்மிகர்கள் அனைவரிலும்

மாதரமே செய்பவனை அதம தாமிகன். தனகுமம பிறாகுமம உபயோ
கப்படுங காரியஞ்செய்பவன் ஏடுத்தமான தாமிகன். பிறர்கா
வே காரியஞ்செய்பவன் உத்தமதார்மிகன். அல்லது—வர்ணாஸ்ரம
தர்மங்களால் ஆராதிகத்தகுந்தவன் தார்மிகன பகதிமாகத்தி
ரை பஜிக்கதகுந்தவன் உதமதார்மிகன். அலலது—சரணாகத
ரக்ஷகன் உத்தமதாமிகன். அலலது—'உபாயோ மருவெவஸ்யாத்
தேநாநுஷ்டீதோ விரஹமலோகங மசமதி' என்கிறபடியே குரு
வசன பரிபாலனமென்னுந் தாமமுடையவன் உத்தமதாமிகன். அல்
லது—வருந்தின ஸுகரீவனை ரக்ஷிகக்கையால தாமிகன். அக்ருத்
யத்தினை நாகதத்திற்காளாகிய வாலியை வதித்து அவனைப் பரிசுத்த
னாகச செயகையால் உதமதாமிகன. அனறியே 'ஆர்ஜவம்யம
பரோ யர்மஃ' என்னுந தாமமுடையவன் தாமிகன். 'தனனை ஆஸ்ரி
தித்தவர்களுக்குத் தன மாமைக் கொடுப்பவன் உத்தம தாமிகன்.
மறைந்திருந்து வதஞ்செயதமையாலும் நிரபராதியைக் கொன்றமை
யாலும் இவனைப்படி தாமிகனுவானென்னும சங்கையைப் பரிஹ
ரித்துக்கொண்டு சொலலுகிறாள. (அகூடப கீரத்திஸ்தி ச) வாலி உன்
னை ஆஸ்ரயித்த ஸுக்ரீவனுககு அபாதஞ் செய்தவனுகையால உ
னக்கும் அபாதியே. நியகஜந்துகளில் வேட்டையாடும் காமத்
தில் எதிர்முகமாயிலலாதவறறைக கொலவது பாபமன்று. பாபிக்
—னுக்கு ப்ராயஸ்சித்தரூபமாகிய வதம எதிர்நின்றே செய்யவேண்டு
மென்பதிலலை. மறைநதிருந்தும் செய்யக்கூடுமம. மேலும் நிர்யக்ஜந்
துவோடு எதிர்முகமாயிருந்து யுதஞ்செய்வது ஸாவபௌமனுக்
குக் கலஙகத்தை விளைகுமாகையால அஙஙனஞ் செய்யலாகாது.
ஆகையால மறைநதிருந்து வாலி வதஞ்செய்கையால் உன் கீர்த்தி
யைத் தாழ்விக்கலலாகாதென்று கருத்து. உன் கீர்த்திக்கு ஒருகுறையு
மில்லை யென்றபடி. (அகூயயகீர்த்திஸ்தி ச) 'தஸ்ய நாம மஹதீயஸஃ'
என்கிறபடியே மிகுதியும் மேலான கீர்த்தியுடையவன். (விசகூ
ணஸ்தி ச) தாரத்ருஷ்டியுடையவனுகையால யுக்தாயுக்தங்களை விசாரி
த்துக் காரியஞ் செய்பவன். ஆனது பற்றியே நிரபராதியை வதிக்க
லாகாதென்று ஒருதடவை வாலியால ஸுக்ரீவனுக்கு அவமானத்
தை விளைவித்தனன். பிறகு குறிவைக்கும்பொழுது பேதந் தெரிவ
தற்காகக் கழுத்திலதையை ஸுக்ரீவன் கழுத்தில் கட்டினன்

மேலானவன். எல்லையிலலாத புகழுடையவன்; மிகுந்த வலலமையுமணமந்தவன்; பூமிபோல் நிகுந்த பொறு

ஆவஞனம் சதருஸமஹாரஞ் செய்பவனேயினும் 'ஸபுத்ரபௌத்ரம் ஸாமாத்யம் ஸமந்தரிஜ்ஞாதி வாநயவம்! ஹத்வா' என்கிறபடியே அவனைப் பிளளைபோன்களோடு கொலலாமல ஒருவனை மாத்ரமே அடித்து அகதாதிகளுக்கு எவ்விதத்திலும் பாதை செய்யாதிருக்கையால பெரும் பொறுமையுடையவனெனகிறாள—(கஷிதிக்ஷமாவான) நீ ஆஸ்ரிதாகளுககு அபராதிகளாயிருப்பவாகளை வம்சத்துடன் நாசஞ் செய்ய ப்ராப்தமாயிருப்பினும அகஞனஞ் செய்யாமல நீ பொறுமையைக் காட்டுவது மிகவும் புகழத் தகுகதென்று கருத்து. (கஷிதிக்ஷமாவான்) 'க்ஷமயா பூயிவீஸமம்' என்கிறபடியே பஞ்சாசதகோடி விஸ்தீர்ணமுடைய பூமிககு எவ்வளவு பொறுமையோ அவ்வளவும் உன்னிலருவனுக்கு உண்டென்று கருத்து. இககு மதுப்ரதயயம் நித்யயோகத்தைச சொலலுகிறது. ஆகையால எப்பொழுதாயினும் பொறுமையிலலாமை இலலையென்றபடி. (க்ஷதஜோபமாக்ஷ:) ரக்தத் தைநிகர்த்த கண்களுடையவன். வாலிபிடத்திலுளள கோபத்திலல இப்பொழுதும் உன் கண்கள சிவந்திருகின்றன. அன்றியே 'ரகதாஸயதேதரபாணி:' 'த்ரிதாம்ர:' (வாய கணைகள கைகள் என்னும் இம்மூன்றும சிவநதிருகபபெற்றவன்) என்று வாமுத்ரிகுத்திற் சொலலியபடி மஹா புருஷலக்ஷணமுடையவனகையால் 'ராமோ ரக்தாநதலோசந:'என்கிறபடியே சிவநத கடையுடைய கண்கள் அமையப்பெற்றவன். இககு அப்ரமேயத்வாதி விசேஷணங்களிலுஞ்சென்றேறாமனிடத்தில் பாதிவ்ரத்தை (மேன்மையை)த் தெரிவிக்கப் போதுமான அடையாளமென்று தெரிவிக்கும்பொருட்டு ஒவ்வொருபதத்தோடும் சகாரங்கூட்டப்பட்டது. (கஷிதிக்ஷமாவான்) என்னுமிடத்தில சகாரம் ஏனில்லையென்னில—பொறுமை மற்றுள்ளிடத்தில் ஸம்பவிக்கக்கூடுமென்பதைத் தோற்றுவிக்கும் பொருட்டே, (க்ஷதஜோபமாக்ஷ:) என்றவிடத்தில சகாரம் ஏன் இல்லை யென்னில்—அந்தக் குணம் திருமேனியைச சேர்ந்ததாகையால் கீழ்சொன்ன குணங்களைக்காட்டிலும் வேறுபட்டமையைத் தோற்றுவிக்கும்பொருட்டே. அன்றியே—'க்ஷதஜோபமாக்ஷ' என்று ஸம்புத்தியாகவுங் கொள்ளக்கூடும். (அதாவது—அப்படி பாடாந்தரமென்று கருத்து.) அன்றியே (அப்ரமேயஸ்ச) ஆஸ்ரிதர்களாகாதவர்க்கு அறியக்கூடா

மையுடையவன்; சிவந்த கடையுடன் விளங்குங் கண் களுடையவன்; ஹஸ்தத்தில் தனுர்பாணத்தை யும் தரித்தவன்; மஹா பலமுடையவன்; மஹாவீர்யத் தைத் தெரிவிக்குமபடி திடமும் லேசுமாக அமைந்த அவ யவலக்ஷணசங்களுடையவன். இப்படிப்பட்டலக்ஷணங் கள் ஸாதாரண சரீரத்தில் உண்டாகா. இப்பொழுது துஷ்டலம்ஹாரத்திற்காக மனுஷ்யசரீரம் (பெற்றிருக் கிறேயன்றி அதை)விட்டு, அப்ராக்ருதமான திவ்ய தேஹ லாபாக்யத்தோடிருப்பவன். நீ எந்த ஒரு பாணத் தினால் என் பத்தாரைவக் கொன்றனையோ, அத்தப் பா ணத்தினாலேயே என்னையுங்கூட வதிப்பாயாக. நான உன் னால் வதிக்கப்பட்டு என் பரியஞ்சிய வாலியிடம்போகின் றனன். ராமா! நீ எலலோரையும ஸுகதோஷிக்கச் செய் பவன். இந்தக் காயஞ்செய்து வாலியையுங்கூட ஸுக தோஷபடுத்துவாயாக. நானிலலாமல வாலி எள்ளள வும் மனக்களிப்புறமாட்டான். தாமரை யிதழ்போனற

தவனும், சகாரத்தாலை ஆரிரிதர்களுககு மாத்ரம் அறியகூடியவ னும். (ஊராஸுரிச) தனனைப் பற்றுதவர்களுககு அணுகமுடியா வதனும, சகாரதாறு னைப்பறறிஉ்ளாககு ஸுலபலையிருப்பவ னும். (ஜிதேந்ரி ... ரலை ஆரிரிதாவிஷயதில சா பலமுடையவனும்.(உதசம. , சகாரத்தால அதாமதனை தூரத்திலேயே தடுத்து நிற்பவனும். (அகஷய்யகோதரிச) சகாரத் தாலை அந்தக் கோத்திரகுத்தகுந்த காயஞ் செய்பவனும். (விசகஷ ணரிச) சகாரதாலை 'மித்ரஹாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயமஹமயிஞ் சந' (மித்ரபாவதாதால் வந்தவனை எவ்விதத்திலும் விடமாட்டேன்) என்கிறபடியே ஆரிரிதர்களை விட ஸமர்தாலை காதவனும். (கூரிதிரு மாவாந்) முன்சகாரம இங்கும் தேஹலீதீபந்யாயத்தால ஸம்பந்திக் கிறது. இதாலை தயாதிகுணங்களும் சொலலப்படுகின்றன. தேஹ லீதீபந்யாயமாவது—நடையில் வைத்தவிளக்கு முன்னுகும் பின் னுக்கும் வெளிச்சம் கொடுக்குமென்பதுவே. அப்படியே இங்கு முன் புள்ள சகாரம் முன்னே பின்னும் சேருமென்றபடி.

கண்களையுடைய வாலி ஸ்வர்க்கத்திலுங்கூட அப்ஸரஸ்த்ரீகளோடுகூடி அவர்களைப் பார்த்து அவர்களில் என்னுடைய காணுகின்ற, சித்ர விசித்ரமான சிவந்த புஷ்பங்களைச்சூடின கேசபாசங்களோடும் விசித்ரமான அலங்காரங்களோடும் விளங்குகின்ற அந்த அப்ஸரஸ்த்ரீகளை அனுகாமலே இருப்பான். வீரனே! பர்வதப்ரேஷ்டமாகிய ருச்யமூகத்தில் ரமணீயமான தாழ்வரைகளில் நீ ஸீதையைப்பிரிந்து எப்படி பரிதபிப்பாயோ, அங்ஙனமே வாலி, ஸமஸ்தபோகங்களுக்கும் இடமாகிய ஸ்வர்க்கத்தை அடைந்தும், தான் இல்லாதபக்ஷத்தில் என்னைப் பிரிந்தமையால் பரிதபித்து வெலவெலத்திருப்பான். யௌவனமுடைய புருஷனுக்குத் தன் பத்னியைப் பிரிந்தால் எவ்வளவு துக்கம் உண்டாகுமோ, அது உனக்கே தெரியும். நீ அம்மஹாதுக்கத்தைப் பட்டுக்கொண்டிருக்கிறாயாகையால் என்னைச் சீக்ரம் கொல்வாயாக. கொல்வாயாயின், நான் வாலியிடம் போவேனுகையால் அவன் என்னைக் காணுமையால் உண்டாகுந் துக்கத்தைப் பெறுமல்லிருப்பான். ராஜகுமாரனே! மஹானுபாவனுகிய நீ 'நமக்கு ஸ்த்ரீயைக் கொல்வதால் உண்டாகுந் தோஷம் வரக்கூடாது' என்று நினைக்கிறையோ? அது யுக்தமன்று. 'வாலியின் ஆத்மாவே இந்தத் தாரை' என்று நினைத்து என்னை முடிப்பாயாக. அப்பொழுது உனக்கு ஸ்த்ரீவததோஷம் வராது. தர்மசாஸ்த்ர வசனங்களாலும் அனேகமான வேதவாகயங்களாலும் பார்யை புருஷனுக்கு ஆத்மாவே யாகையால் அவனைகாட்டிலும் வேறுபட்டவளல்லளென்று தெரிய வருகின்றதல்லவா? ஆகையால் என்னை வதிப்பதும் வாலி வதத்திலேயே உட்படுமாதலால் உனக்கு ஸ்த்ரீவததோஷம் உண்டாகாது. தோஷம் உண்டாகாமற் போவதுமாத்ரமே அன்று. உலகத்

தில் பார்யாதானத்தைக் காட்டிலும் மேலான தானம் எதையும் பண்டிதர்கள் கண்டவரல்லர். ஆகையால் என்னைக் கொன்று வாலியுடன் சேர்க்கையால் உனக்குப் புண்யமும்கூட சேரும். வீரனே! நாங்கள் ஸ்நேஹிப்பது மாத்ரமேயன்றி உத்தமதார்மிகனுகிய நீயும் தர்மத்தைப் பரிசீலனஞ்செய்து என்னை என் ப்ரியனுகிய வாலிக்குக் கொடுத்தவனுவாய். இங்ஙனம் என்னை என் ப்ராணநாயகனுக்குக் கொடுக்கையால் உனக்கு வாலி வதத்தாலுண்டான வீரஹத்யாதோஷஸம்பந்தமும்கூட சேராது. (என்னைக் கொல்வது உனக்கு வாலிவதப்ராயச்சித்தமாகின்றது. இங்ஙனம் என்னைக் கொல்வதனல் நீ வாலிக்குப் பார்யாதானஞ் செய்தவனுவாயாகையால் என் வதத்தினல் உனக்கு எந்தப் பாபமும் ஸம்பந்திக்காது.) நான் மனவருத்தமுற்றிருக்கின்றவள்; நாதனற்றவள்; என பர்த்தாவும் என்னை வஞ்சித்துப் போகின்றனன். இங்ஙனம் மஹத்தான ஆபத்தில அகப்பட்டுக்கொண்டிருக்கிற என்னை வதிக்கத்தகும். வதித்துப் புண்யங் கட்டிக்கொள்வாயாக. நரேந்த்ரா! மதித்த யானைபோல் விலாஸத்துடன் நடப்பவனும் மிகவும் சிறப்புற்றதாகிய திவ்ய காஞ்சனமாலை விளங்கப்பெற்றவனும கபிகுலசூடாமணியும் புத்தியில் சிறந்தவனுமாகிய வாலியை விட்டு நான என்னைவோ வெகுகாலம் ஜீவித்திருக்கமாட்டேன. எப்படியாயினும் மரணம் அடைவது நிஜம். ஆகையால் நான் சாவதைக்காட்டிலும் நீயே என்னைக்கொன்று புண்யம் பெறுவது நலம்' என்றனள். இங்ஙனம் தாரை சொல்லுகையில், ப்ரபுவும் மஹானுபாவனுமாகிய ராமன் கேட்டு அந்தவணிதையை ஆச்வாஸப்படுத்தி ஹிதவசனங்களைச் சொல்லத் தொடங்கி 'வீரபத்னீ! நீ வீரனுக்குப் பார்யையாயிருந்தும் பிழைக்கமாட்டேனென்றது முதலிய இப்படிப்பட்ட விபரீத

புத்தி உண்டாகப் பெற்றிருப்பது யுக்தமன்று. இப்படிப் பட்ட புத்தி கூடாது. இந்த உலகமெல்லாம் ப்ரஹ்மாவால் சிருமிக்கப்பட்டதென்பது தெரிந்த விஷயமே யல்லவா? அங்ஙனம் சிருமிக்கும்பொழுது அந்த ப்ரஹ்மாவே ஜனங் களுக்கு ஸுகதுக்க யோகங்களையும் உண்டாக்கினனென் று பண்டிதரும் பாமரர்களுமாகிய உலகத்தவர் அனை வரும் சொல்வார்கள். ப்ரஹ்மா ஏற்படுத்தின விதி மூன்று லோகங்களுக்கும் கடக்கமுடியாதது. ஸமஸ்தமும் அந்த விதிக்கு உட்பட்டதே. ஆகையால் துக்கப்படவேண்டாம். வாலி இருக்கும்பொழுது போலவே மிகுந்த ஸந்தோஷத் தையும் வாலி ஸமபோகத்தை விகர்த்த ஸமபோகத்தை யும் பெறுவாய். உன் புதல்வன் அங்கதன் யுவராஜனைப் போகினறனன். வாலி அங்ஙனமஹதனைகவேண்டுமென்று ப்ரஹ்மதேவனுடைய விதி அப்படியாயிருந்தது. அதை அதிக்ரமிக்கத்தாமன்று. எதிலும உனனைப்போன்ற சூர பத்னிகள் இங்ஙனம் வருந்தமாட்டார்கள்' எனறனன். இங்ஙனம் அங்கதனுக்கு யௌவராஜ்யத்தைக் கொடுக் கும் ப்ரபாவம் பொருந்தி, அதற்கு விரோதிகளாயிருப்பவ ரெல்லோரையும் முடிக்கவல்லவனாகிய ராகவன் ராமன இங்ஙனம் ஆஸ்வாஸப்படுத்துகையில் அந்தத் தாரை வீர பத்னியாகையாலும், ராமன் அங்கதனுக்கு யௌவராஜ் யங் கொடுக்க வல்லவனென்றும், அவனது பகைவரைப் பறந்தோடச் செய்யுந் திறமையுடையவனென்றும் தெளி சிற் பட்டமையாலும், அழகிய அலங்காரங்களால் மேனி விளங்கப் பெற்றுக் கொஞ்சும் மனஸ்ஸமாதானம் அடைந் து புலம்பிக்கொண்டிருந்தவள் புலம்புதலை நிறுத்தி வெறு மனே யிருந்தனள். இருபத்துநான்காவது ஸர்க்கம் முற் றிற்று.

ராமன் எலலோர்க்கும் ஸமாதானஞ் சொலலுதலும், வாலிகது ஸமஸ்காரஞ் செய்விததலும்.

அனந்தரம் ராமன், தானும் லக்ஷ்மணனும் ஸுக்ரீவதிகளைப்போல் ஸமானமாகவே துக்கித்து ஸுக்ரீவனையும் அங்கதனையும் தாரையையும் ஆர்வாஸைப் பதித்துக்கொண்டு 'துங்கத்திலல் எவவளவு பரிதாபமுற்றிருப்பினும், அதுலல் மரணம் அடைநதவனுக்கு எள்ளளவும் நன்மை உண்டாகாது. இப்பொழுது, மேல் கடத்தவேண்டிய ப்ரேதகார்யங்களைச் செய்வது நன்மையை விளக்கவற்று. அதை அவச்யம் செய்யவேண்டும். கண்ணீர் விடுவது லோகாசாரத்தைப்பற்றி வநததாகையால் அது எல்லோர்க்கும் அனுஷ்டிக்கத்தக்கது. நீங்களும் அப்படியே அதை அனுஷ்டித்தீர்கள். இனிப்போதும். இதைக்காட்டிலும் மேற்பட்டு எதும் உங்களால செய்ய ஸாத்யப்படாது. ஈச்வரனே ஸமஸ்த லோகங்களுக்கும் காரணம். ஸமஸ்த பூதங்களையும் நியமிப்பவன் ஈச்வரனே. ஈச்வரனைக் கடநததது உலகத்தில் எதுவுமே இல்லை. உலகமெல்லாம் ஈச்வரனுக்குப் பராதீனமாகிக் கார்யங்களைச் செய்கினறனவேதயன்றி ஸ்வதந்த்ரமாயன்று. எவனும் எந்தக் கார்யத்தையும் ஸ்வதந்த்ரமாகச் செய்பவனல்லன். எவனும் எவனையாயினும் பேதிக்கவும் ஸமர்த்தனல்லன். ஏனென்னில்—உலகமெல்லாம் ஸ்வபாவத்திற்கு (அதாவது-ஈச்வரனுக்கு) உட்பட்டு வர்த்திக்கின்றது. ஆகையால் காலமே உலகத்திற்கெலலாம் கதி. ஈச்வரன ஸ்வதந்த்ரனேயாகையால் அவன் எதற்கும் உட்பட்டவனல்லன. ஈச்வரனுக்குச் சாசமாவது மற்றை விகாரங்களாவது உண்டாகா. அவனிரங்குபஸ்வதந்த்ரன. தான செய்த வ்யவஸ்தையைத் தான் அதிக்ரமிக்க மாட்டானென்பது சொல்லவேண்டுமோ? ஈச்வரனுக்குப் பந்துத்வம் இல்லாமையால் பக்ஷி

பாதமும் உண்டாகாது. அவனை அவனருளாலேயே வசப்படுத்திக் கொள்ளவேண்டுமேயன்றி வசீகரிப்பதற்கு மற்றோருபாயம் இல்லை. அவனை வெல்லும்படியான பராக்ரமம் இல்லையாகையால் அவன் எவனுடைய பராக்ரமத்திற்கும் பயப்படமாட்டான். அவனுக்கு கண்பர்கள், ஜ்ஞாதிகள் என்னும் ஸம்பந்தம் இலலை; ஆகையால் அபராதிகளிடத்தில் தண்டனை கடத்திக்கொண்டிருப்பான. ஆனதுபற்றி ஸமஸ்தத்திற்கும் காரணபூதனாகிய ஈச்வரன் ஜீவனுக்குப் பரதந்த்ரனல்லன். அவனவனுடைய கர்மத்திற்குத் தகுந்தபடி ஈச்வரன் ஸமஸ்தத்தையும் வர்த்திக்கச் செய்வான. ஈச்வரனைகாத ஜந்து செய்யவேண்டிய கார்யம் இதுவே. சாஸ்த்ரநிஷ்கர்ஷத்தை நன்றாகத் தெரிந்துகொண்ட புத்திசாலி! அந்தந்தச் சேதனனுடைய கர்மத்திற்கு அனுகுணமாகவே ஈச்வரன் பரிணமித்து கடப்பானென்றுதெரிந்துகொண்டு மனக்கவலையற்றிருக்கவேண்டும். ஆகையால் ஈச்வரன் எதைக்கார்யஞ செய்தபோதிலும சோகம்பெறலாகாது. நமக்கு ஹிதமே செய்வானென்றிருக்கவேண்டும். தர்ம அர்த்த காமங்கள் ஈச்வரனுடைய மர்யாதையைக் கடக்காமல் விளைந்துவரும். அவற்றில எது பெறக்கூடுமோ, அதை யெல்லாம் ஈச்வரனே பெறுவிக்கின்றனன். வானரேச்வரனாகிய வாலி என்பாணத்தினால் அடிக்கப்பட்டு ப்ராயச்சித்தம் அடைந்தமையால் பாபந் தொலைந்து முன்புள்ள பரிசுத்யத்தைப் பெற்றுத் தான் விஹிதகாலங்களில் அனுஷ்டித்த தர்ம அர்த்த காமங்களைப்பற்றி க்ரியைகளின் பலனாகிய ஸ்வர்க்கத்தை அனுபவிப்பதற்காக இங்கிருந்து போயினன். மஹானுபாவனாகிய வாலி 'விஹித கர்மங்களை அனுஷ்டிப்பதனாலும் ப்ராணன்களைப் பொருள்செய்யாமல் யுத்தஞ் செய்தமையாலும் பூர்வம் தான்

ஸம்பாதித்து வசஞ்செய்துகொண்டிருந்த ஸ்வர்க்கத்தை இப்பொழுது பெற்றனன். கபிகுலநாதனுகிய வாலியை வதித்தபின்பெற்றனமே, அது மிகவும் சிறந்தது. ஆகையால் அவனைப் பற்றிப் பரிதபிக்கவேண்டாம். போரும். ஸத்க்ரியைடந்தவனைக் குறித்துச் சோகிக்கலாகாது. இந்த ஸமயத்தில் எதைச் செய்யவேண்டுமோ, அதை ஏமாறுமல் நடத்துவாயாக' எனறனன். ராமன சொல்லிமுடிக்கையில், சத்ருவீரர்களை அழிக்குந்திறமையுள்ள லக்ஷ்மணன் துக்கத்தின் மிகுதியால் ப்ரஜ்ஞை தப்பியிருக்கின்ற ஸுக்ரீவனைப்பார்த்து வனைக்கத்துடன் 'ஸுக்ரீவா! இனி நீ வாலிக்கு ப்ரேதகார்யங்களைச் செய்வாயாக. நீ தாரையோடும் அங்கதனோடுங்கூடி வாலிகுத் தஹன ஸம்ஸ்காரத்தை நடத்தும்பொருட்டுச் சந்தனம் முதலிய சிறந்த உலர்ந்த காஷ்டங்கள் பலவற்றைக் கொண்டுவருமபடி வானரர்களுக்கு ஆஜ்ஞை செய்வாயாக. நீ துக்கித்திருக்கின்ற இவ்வங்கதனை ஆச்வாஸப்படுத்தி இவனை வாலிக்கு ஸம்ஸ்காரஞ்செய்யமுயலச் செய்வாயாக. இந்தப் பட்டணமெல்லாம் இனி உன்னதீனமாகையால் இனி நீ இந்தப் பட்டணத்தின் போகக்ஷேமங்களைப் பார்க்கவேண்டும். இப்படி மூடனைபோல் துக்கித்திருப்பது யுக்தமன்று. அங்கதன் புஷ்பமாலைகளையும் நாணவிதவஸ்த்ரங்களையும் நெய்யையும் எண்ணெயையும் வாஸனத்ரவ்யங்களையும அன்றியே இப்பொழுதே ஸம்ஸ்காரஞ் செய்வதற்காக ஏதேது அவச்யமாகவேண்டுமோ அவையெல்லாவற்றையும தான் கொணடுவருவடுகுதாரனே! நீ சீக்ரமாகச்சென்று பல்லகைகளெடுபபித்துக்கொண்டு வேகத்துடன் வருவாயாக. த்வரைப்படுகைஎப்போதும் யுக்தமும் குணம் பொருந்தியதுமாமேயல்லாமல் ப்ரக்ருதத்தில் விசேஷித்து யுக்தமும் குணமுடை

யதுமாயிருக்கின்றது. அவனை எடுப்பதற்கு ஸமர்த்தர்க ளும் பலிஷ்டர்களுமா யிருக்கும் வாஹகர்களான வான ரர்களை ஸித்தப்படுத்துவாயாக' என்றனன். ஸுமித்ரா தேவியின் வயிறு குளிரப் பிறந்து சத்ருவீரர்களை அடக் குந் திறமையுடைய லக்ஷ்மணன் இங்ஙனம் ஸுக்ரீவனுக் குச் சொல்லி அருகதாம் தமையனது ஸமீபத்தில் நின்று கொண்டிருந்தனன் தாரன, லக்ஷ்மணன்சொன்ன வார்த் தைபகதேகட்டு மனம் பரபரக்கப்பெற்றுச் சிவிகையைக் கொண்டுவரும் பொருட்டுச் சீக்ரமாகக் கிஷ்கிந்தா புரத் திற்குள் ப்ரவேசித்தனன். அருகத் தாரன் சீக்ரமாகவே சிவிகையை எடுத்துக் கொண்டு திரும்பி வருதனன். அந்தச் சிவிகையைத், தூக்கத் தகுந்த சூரர்களான வானரர்கள் தூக்கிகொண் டிருந்தனர். அது திவ்ய மாகி அழகிய லிம்ஹாஸனம் இடப்பெற்று ரதமேபோல் விளங்கிக்கொண் டிருந்தது. அதில் வேலைசெயயப்பட்ட பக்ஷிகள் ரத்புறங்களிலும் அற்புதமாக ப்ரகாசித்தன. செடியைப்போன்ற சித்ரவேலைகள் அதன் அழகை மேன் மேலும் வளரச் செய்துகொண்டிருந்தன. அழகான ரே கைகளாலும் காலாட்களைப்போன்ற பொம்மைகளாலும் மேலான லக்ஷ்மிவிலாஸம் ஏற்படுத்தப் பெற்றிருந்தது; மேலும், அது ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் லித்தர்களு டைய விமானம் போன்று சிறிய சாளரங்களும் பெரிய சாளரங்களும் விளங்கவும அத்தகத லத்திபத்தங்கள் நன் ரூப் அமைக்கவும் பெற்று விசாலமுமாகி ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. விஸ்வகர்மா தனது ஸாமர்த்ய மெல் லாம் விளங்கும்படி மிக்க பரபத்னத்துடன அதை அதி மநோஹரமாக நிர்மித்தனன. மரத்தால் செய்யப்பட்ட க்ரீடாபர்வதங்கள் அதில விளங்கிக் கொண்டிருந்தன. மெருகிடப் பெற்றிருக்கையால் அது மிகவும் பளபளவெ

ன்று விளக்கமுற்றிருந்தது. அதில் உத்தமமான ஆபரணங்களும் முத்துமாலைகளும் தாணவித புஷ்பஸமூங்களும் அழகாகப் புலப்பட்டுக் கொண்டிருந்தன. அழகின் பொருட்டு வற்பதித்தப்பட்ட பொய்க்குணலறைகளும் பொய்க்கான கங்களும் அதில் நிறைந்திருந்தன. அது முழுவதும் சென்சந்தனம் பூசப்பெற்று அழகாயிருந்தது; தற்புறமும் னிதிதிபுஷ்பங்கள் இறைக்கப் பெற்றிருந்தது. மேலும், ஆங்காகுப் பாலஸூர்யபிமபம்போல் ப்ரகாசிக்கின்ற செந்தாமரைப்பூமாலைகளால அலங்கரிக்கப் பட்டிருந்தது. ராமன் உத்தமமான இப்படிப்பட்ட சிவிகையை பார்த்து லக்ஷ்மணனைநோக்கி இனிச் சீக்ரம் வாலியைப் பலக்கில்வைத்து ப்ரேதகார்யத்தை தடத்துவையாக வென்று மொழிந்தனன். அனந்தரம் அதஸமயத்தில ஸுக்ரீவன் அழுதுகொண்டே அங்கதனுடன்கூட வாலியை எடுத்துப் பல்லக்கில் வைத்தனன். அப்பொழுது வானராதிபதியான ஸுக்ரீவன் மணிமண்டிதமான வாலியை நானாவிதமான அலங்காரங்களாலும புஷ்பமாலைகளாலும வஸ்த்ரங்களாலும் அலங்கரித்துச் சிவிகையிலவைத்து வானரர்களைப் பார்த்து, 'தமையனுகிய வாலிக்கு உத்தரக்ரியைகளை அவர் பெருமைக்குத் தகுதபடி தடத்துவீர்களாக. வானரர்கள் பலவகைபபட்டரத்னங்கள் பலவற்றையும் இறைத்துக்கொண்டு முனனே தடப்பார்களாக. அவர்களுக்குப் பின்னே சிவிகையைக்கொண்டு போவீர்களாக' என்று ஆஜ்ஞாபித்தனன் ராஜாக்களுக்கு அவரவர்து ஜ்ஞப்யர்ய விபோஷங்களுக்குத் தகுந்தபடி உத்தரகரியைகளை எவ்வண்ணம் தடத்துவார்களோ, அவ்வண்ணமே ஸுக்ரீவாதிகளும் வாலிக்கு ஸமீபபந்துக்களான தாரன் முதலிய வானரர்களெல்லோரும் அங்கதனைச்சுற்றி சோதனஞ் செய்துகொண்டே சீக்ரமாகச் சென்றனர். அனந்தரம்

அவனுக்கு மிகவும் வசப்பட்டிருப்பவர்களும் மிகவும் பக்
தர்க்களுமாகிய வானரஸ்த்ரீகள் அனைவரும் 'வீர! வீர!'
என்று பேரைச்சொல்லி எல்லோரையும்விட அதிகமாக
ரோதனஞ் செய்துகொண்டே சென்றனர். வானரபத்னி
களான தாரை முதலிய வானரமடந்தையர் அனைவரும்
கேட்போர்களுக்கு மிகவும் மன இரக்கமுண்டாகும்படி
ரோதனஞ் செய்துகொண்டு கணவனைப் பின்சென்றனர்.
அந்த வனமத்யத்தில் அங்ஙனம் கதறுகின்ற அந்த வா
னரஸ்த்ரீகளது ரோதனத்வனியால் அங்குள்ள வனங்
களும் பர்வதங்களும் முழுவதும் ரோதனஞ்செய்பவை
போலிருந்தன. ஓர் பர்வதத்தின் ஸமீபத்தில் ஏகாந்த
மாயிருபபதும் ஜலம நிரம்பியதுமாகிப மணற்குன்றில் பல
வானர்கள் மிக்க மனவருத்தத்துடன் சிதையேற்பதித்
தினர். அனந்தரம் வாலிகர்கள் அவவிடத்தில் தோள்
களினின்று சிவிகையை இறக்கி அனைவரும் வருத்தத்
துடன ஏகாந்தமான இடத்தில் நின்றுகொண்டிருந்
தனர். அனந்தரம் தாரை பல்லக்கில் பதித்திருக்கின்ற
தன் கணவனைப்பார்த்து அவனது சிரஸைத் தன்மடியில்
இட்டுக்கொண்டு மிக்க மனவருத்தத்துடன் 'ஐயோ! வா
னரமஹாராஜா! ஆ! காதா! என வத்ஸலனே! ஆ! அனை
வர்க்கும் பூஜிக்கத்தகுந்தவனே! மஹாபாஹுவே! ஆ! என்
னைச நாயகனே! எனனைக் காண்பாயாக. இங்ஙனம்
சோகத்தினால் வருந்துகின்ற இந்த ஜனத்தைக் கண்ணை
த்தும் பாராக்கமாட்டாய என்? மரணங்கொடுப்பதுங் கெ
ட்டுப்பதுஞ் செய்பவனே! நீ மரணம் அடையினும் உன்மு
கம் பிரகாசித்திருக்கும் பொழுதைப்போலவே ஸாயங்கா
லத்து ஸூரியனை நிகர்த்துப்ரகாசிப்பதாகி ஸந்தோஷத்
துடன் கூடினதுபோல புலப்படுகின்றது. வாலீ! இப்பொ
ழுது யமன் ராமரூபந்தரித்துவந்து இவ்வனத்தில் ஒரு

பாணத்திரூல் எங்களெல்லோரையும் விதவைகளாகச் செய்து உன்னைக் கொண்டுபோகின்றனன். ராஜ்யப்ரஷ்டனுகிய வாலி! உனக்கு என் தெரியவில்லை? சந்த்ரபிம்பம்போன்ற முகமுடைய இவ்வானரஸ்த்ரீகள் உனக்கு இஷ்டமான பார்யைகளல்லவா? இவர்கள் இங்ஙனம் கஷ்டப்பட்டுக் கால்கடையாக நடந்துவந்து துக்கித்துக் கொண்டிருக்கையில் வெறுமனே இருக்கின்றனையோ? இவர்கள் என்றும் உனக்குப்ரீதிக்கிடமாயிருப்பவர்களல்லவா? வானரர் தலைவனுகிய ஸுக்ரீவனை இப்பொழுது ஏன் பாராதிருக்கின்றனை? தோஷமற்றவனே? வானராதிபதீ! தாரன்முதலான உன் மந்த்ரிகளும் கிஷ்கிந்தாபுரத்தில் வாஸஞ்செய்யும் மற்ற ஜனங்களும் உன்னைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள் காண்பாய். சத்ருக்களை யழிப்பவனே! இவ்வானரர்களனைவரையும் அவரவர்க்குத் தகுந்தபடி செலவுகொடுத்தனுபவிப்பாயாக. அனந்தரம் எல்லோரும் இஷ்டப்படி மனமதக்ரீடைகளில் முயன்று விளையாடலாம்' என்று புலம்பினள். அப்பொழுது அங்ஙனம் பதியின மரணத்திற்கு வருந்திப புலம்புகின்ற தாரையை வானரஸ்த்ரீகள் துக்கத்திரூல் பீடிக்கபபட்டவராகி வாலியிடமிருந்து அப்புறம் கொண்டுபோயினர். அனந்தரம் அங்கதன சோகத்திரூல் இதரியங்கள் கலங்கப்பெற்று ரோதனஞ் செய்துகொண்டு ஸுக்ரீவனும் தானுமாகத் தந்தையச் சிதையின மேல எடுத்துவிட்டனன். அனந்தரம் அங்கதன் இந்த்ரியங்களெல்லாம் தந்தம் நிலைமை தவிர்ந்திருக்கப்பெற்று மரணம்அடைந்தந்தைக்குச் சாஸ்த்ரங்களிற் சொல்லியபடி அக்னிப்ரதானஞ் செய்து அப்ரதக்ஷிணஞ் செய்தனன். அவ்வானரர்கள் அங்ஙனம் சாஸ்த்ரப்படி வாலிக்குத் தஹனஸம்ஸ்காரஞ்செய்து . ஜலதர்ப்பணஞ் செய்வதற்காகக் குளிர்ந்த

ஜலம்பொருந்திச் சுபமாயிருப்பதாகிய நதியின் அருகில் வந்தனர். அனந்தரம் அவ்விடத்தில் அவ்வானரர்கள் ஸுக்ரீவனேடும் தாரையோடுங்கூடி அங்கதனை முன்னிட்டுக்கொண்டு வாலிக்கு ஜலதர்ப்பணஞ்செய்தனர். மஹாபலஞ்சிய ராமன், தானும் ஸுக்ரீவாதிகளைப்போலவே வருத்தமுற்றவனாகி வருத்தியிருக்கின்ற ஸுக்ரீவன்மூலமாகவே வாலிக்கு பரேதகார்யங்களை யெல்லாம் செய்வித்தனன். அப்பொழுது மஹாபௌருஷமுடையவனும் ஜகத்ப்ரஸித்தனும் ஜ்வலிக்கின்ற அக்னியைப்போல் ஒளிவிளங்கப் பெற்றவனும் ராமபாணத்தினால் அடிக்கப்பட்டவனுமாகிய வாலிக்குத் தஹனஸம்ஸ்காரஞ் செய்து அப்பொழுதே லக்ஷ்மணனேடு கூடின ராமன் ஸமீபத்திற்கு வந்தனன். இருபத்தைதாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஸுக்ரீவ பட்டாபிஷேகம். }

அனந்தரம் வாலிக்கு உத்தரக்ரியைகளை நடத்தி ஸ்னஞ்செய்து ராத்துணிபோடு ஸுக்ரீவன் இருக்கையில், மந்த்ரிகளான வானரர்கள் அவனைச் சுற்றிக்கொண்டிருந்தனர். ஸுகரீவனும் அம்மந்த்ரிகளும் ஆகிய அனைவரும், எவர்க்கும் துக்கத்தை விளைவிக்காத மஹாபாஹுவாகிய ராமனிடஞ்சென்று ப்ரஹ்மதேவனிடம் ரிஷிகள்போல் கைகளைக் குவித்துக்கொண்டு நின்றனர். அனந்தரம், பொன்மலைபோன்ற மேனி விளங்கவும் பாலஸூர்யனைபோல்முகம்ப்ரகாசிக்கவும் பெற்றுத்துலங்குகின்ற வாயுகுமாரனை ஹனுமான் கைகூப்பி வணக்கத்துடன் ராமனைப் பார்த்து 'ப்ரபூ! உனது அனுக்ரஹத்தினால் ஸுக்ரீவன் எப்படிப்பட்டவர்க்கும் பெறக்கூடாததும் தன்னை பாட்டன் கரமத்தில் உருவதுமாகி விளங்கும் பிரதான வானர ராஜ்யத்தைப பெற்றனன். ஸுக்ரீவன் இனி உன்

னிடம் அனுமதி பெற்று மங்களாலங்காரஞ் செய்யப்பெ
ற்ற நகரத்தில் ப்ரவேசித்து நண்பர்களோடுகூடி எல்லாக்
கார்யங்களையும் செய்வான். ஸுக்ரீவன் காணவித வாஸ
னைத்ரவ்யங்களாலும் ஔஷதிகளாலும் சாஸ்த்ரப்படி
அபிஷேகஞ் செய்யப்பெற்று, அதன பிறகு உன்னை விசே
ஷித்து ரத்னங்களாலும் புஷ்பங்களாலும் பூஜிப்பான்.
நீ இங்கிருந்து அழகான கிஷ்கிந்தா நகரத்திற்கு வந்து
வானரர்களை அனைவர்க்கும் ஸந்தோஷம் விளைவித்து
ஸுக்ரீவனை வானரராஜனாகச் செய்வாய்' என்றனன். சத்
ருவீரர்களை அழிப்பவனும் புத்தியிற் சிறந்தவனுமாகிய
ராமன் பேசுவதில் ஸமர்த்தனாகையால், ஹனுமான்
சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அவனுடன 'கல்வியிற்
கையுடையவனே! நான தந்தையின் ஆஜ்ஞையைப் பரிபா
லனஞ் செய்கின்றவனாகையால் இதற்பதினான்கு ஸம்வத்
ஸரங்களும் க்ராமத்திற்குள்ளாவது பட்டணத்திற்குள்
ளாவது புகக்கூடாது. நீங்களிலேயிருக்கும் வீரனாகிய வான
ராதிபனை ஸுக்ரீவனை ஸமஸ்த ஸம்பத்துக்களும் நிறை
ந்து ரமணீயமாயிருக்கின்ற கிஷ்கிந்தைக்குள் அழைத
துக்கொண்டுபோய்ச் சீக்ரம் சாஸ்த்ரப்படி, அவனுக்கு
வானர ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் நடத்துவீர்களாக'
என்றனன். ஸதாசாரங்களை ராமன் நன்றாக அறிந்தவன்;
ஆகையால அவன் இங்ஙனம் ஹனுமானுக்குச் சொல்லி,
ஸதாசாரம் அமைந்தவனும் மஹாபல பராக்ரம சாலியு
மாகிய ஸுக்ரீவனைப் பார்த்து 'வீரா! இவ்வங்கதனையும்
கூட யௌவராஜ்யத்தில் அபிஷேகஞ் செய்வாயாக. இவ
வங்கதன் உனகுத் தமையனாகிய வாலிக்கு ஜ்யேஷ்டகு
மாரன்; பராக்ரமத்தில் உனக்குச் சரியானவன்; மிகுத
புத்தியுடையவன். ஆகையால் யௌவராஜ்யத்திற்குத் தகு
ந்தவன். கல்வியற்கை யுடையவனே! வர்ஷாகாலம் வந்

தது. அதில் இந்த ஸ்ராவணமாதம் முதலாவது. வர்ஷாகால மென்னப்படும் மாதங்கள் [1] நான்கும் ஆரம்பித்தன. லஷ்மணா! இது யுத்த ப்ரயத்னத்திற்குத் தகுந்தகாலமன்று. நீ ரமணீயமான இந்தப் பட்டணத்திற்குப்போவாயாக. நானும் லக்ஷ்மணனும் இந்தப் பர்வதத்தில் இருக்கின்றனம். லஷ்மணா! இந்தப் பர்வதத்தின்குஹை மிக்க ரமணீயமும் விசாலமும் வேண்டிய காற்றுடையதுமாகி விளங்குகின்றது. இதனருகில் ஜலங்களும் தாமரைப் புஷ்பங்களும், கருநெய்தல்களும் ஸம்ருத்தமாயிருக்கின்றன. ஆகையால் இது எனக்கு வாஸஞ் செய்யத் தகுந்ததே [2]


---

1 வர்ஷாகாலம் இரண்டுமாதங்களே. ஆயினும் கீழ்சென்ற ஆடிமாதத்தையும் மேலவரும் அறபிசிமாதத்தையும் கூட்டிகொண்டு இந்நான்கு மாதங்களும் யுத்தத்திற்குத் தகாதவையாகையால் நான்கென்று இவ்விதஞ் சொல்லப்பட்டன. அன்றியே—'பஞ்சானை மாஸா:' என்கிற ஸ்ம்ருதியின்படி பக்ஷங்கள மாஸங்களென்னப் படுகையால நான்குமாதங்கள் நான்கு பக்ஷங்களென்று சிலர் கருதுகின்றனர்.

2 இவ்விதஞ் 'காததிகே ஸமநுப்ராப்தே' என்று கார்த்திகைமாதம் ஸமீபித்து வருகையைச சொலலுகையால் அற்பிசிமாதத்தின் கடைசியைச சொலலுகிறது. ராமனே 'ஷயமாஸ்விவயுஜே மாஸி பிங்மாக்ஷ ப்ரதிசோஷிதா:' என்று இந்த ஏற்பாட்டை அற்பிசியாதமீருகச சொல்லியிருக்கின்றனன், 'ப்ரதிசோஷிதா:' என்கிறவிடத்திலு ப்ரசோதனமாவது ஸந்தாபம். புறப்படுவதைச சொல்லுகிறதன்று; புறப்படுவது மார்கழிமாதத்தில். தான் ஏற்பாடுபண்ணின கார்த்திகைமாதத்தைக் கடக்கையால் ராமனுக்கு ஸுக்ரீவன்மேல் கோபமும் வக்ஷமணனை அனுப்பினதும். ஆகையால கார்த்திகைமாதங் கடந்து மார்கழிமாதத்திலேயே வானரர்கள புறபபட்டிருக்கவேண்டும். அவ்வனம் அவாகள வீதையைத் தேடச்சென்று ஸ்வயம்ப்ரபையின் பிலத்தில்வெகுகாலமிருந்து அதினின்று வெளிப்பட்டு வரும்பொழுது 'ஹேமந்தவாஸந்திகாந உபவக்ஷ்ட்வா' (வஸந்தருதுவிலுளள வ்ருக்ஷங்களைப்பார்த்து) என்றது வஸந்தகாலத்தில் புஷ்பிப்பதற்குத் தொடக்கமான இலையுதிர்காலமாகிய பங்குனிமாதத்தைப் பற்றியாதல்,

ஸௌம்யா! கார்த்திகைமாஸம் ஸமீபித்து வரும்பொழுது நீ ராவணவதத்தின பொருட்டு ப்ரயத்னஞ் செயயவேண்டும். இனி நீ உனது வானராராஜ்பத்தில பட்டாபிஷேகம் பெற்று உனது நண்பர்களை ஸந்தோஷப்படித்துவாயாக' என்றனன். இங்ஙனம் வானராதிபதி ஸுக்ரீவன் ராமனிடம் அனுமதி பெற்று, வாலி இதுவரையில் பரிபாலித்து வந்த ரமணீயமான கிஷ்கிந்தாபுரத்திற்குள் ப்ரவேசித்தனன். அனேகமாபிரம் வானரர்கள் அவனைரப்பவரன

பக்ஷாந்தரத்தில-பங்குனியும் சித்திரையும் வஸந்தருது வென்றதைப் பற்றியாதல. இவ்விடத்தில இங்ஙனம காமஞ்சொளளவேண்டும். அதெப்படி யெனில 'உத்தராஸ்யாஷிநா பூவஸ்பாவயம் ஜாநீயாத்' என்னும் ந்யாயதத்தின்படி உத்தரோத்தரத்தை எடுத்துகூறுவதால பூவ பூர்வத்தின் காலஸங்கயைத் தெரிவிப்பது வால்மீகியின் சைலி. சித்திரைமாதத்தில ராமன் அயோத்தையினின்று புறப்பட்டனன். அகஸ்த்யாஸ்ரமத்திற்கு வருவதன் முன்னம பத்து ஸம்வத்ஸரங்களாயினவென்று சொலலப்பட்டது. பிறகு பருசவடியில மூன்றுஸம்வத்ஸரங்கள கடந்து சித்திரைமாதம் வருகையில சூர்ப்பணகையின் காது மூக்குகளை யறுத்ததும் கரதிகளினவதமும் நடந்ததாகத்தெரியவருகின்றது. ராவணன் மாரீசனுடைய போதனத்தில் கொஞ்சம தாமதித்து அந்த சைத்ரமாதத்திலேயே ஸீதையைக் கொண்டுபோயினன். ஸீதாவிரஹத்தில ராமன் வருந்தி வஸந்தருதுவை வாணிக்கும் க்ரமத்தில சித்திரைமாதத்து மந்தமாருதத்தை வர்ணித்தாலுகையாலும் ஸீதை யங்கையில் ஸம்வத்ஸரம் இருந்ததாகச சொலலியிருக்கையாலும் சித்திரைமாதத்திலேயே ஸீதை அபஹரிக்கப்பட்டனள. மீளவும் பங்குனிமாததில ராவணவதம.சரத்ருதுவில் ஸேனையைக் கூட்டினது. மாகழியில வானராகள புறப்படுதல். ஸ்வயம்ப்ரபையின் பிலத்தில் வெதுகாலம் கடந்தது இதையே'காலஸ்ய நோ மஹாந் யாத3'என்று கபிகள் சொல்லினர். பிலத்தினின்று வெளிப்பட்டபின்பு பங்குனிமாதத்தின் சுகலபக்ஷத்ரயோதசியினன்று ஹனுமான் ஸமுத்ரத்தைத் தாண்டுதல. சதுர்தசியினன்று மீளவும் தாண்டிவருதல். பூர்ணிமையினன்று யுத்தயாத்ரை. மற்றவை யுத்தகாண்டத்திற்சொலலப்படும்.



1775, அரசர் பிரபுக்கள்.

கிஷ்கிந்தையுள் ப்ரவேசிக்கையில், தாரும்ம் ப்ரவேசித்து அவனுக்கு நமஸ்காரஞ் செய்து நாற்புறத்திலும் சூழ்ந்து பணிந்து நின்றனர். அனந்தரம் பட்டணத்திலுள்ள ப்ரஜைகள் அனைவரும் வானர கணாதிபதியான ஸுக்ரீவனைக் கண்டு அவனிடத்திலேயே மன நிலைமை கொண்டு பூமியில் படும்படி தலைவணக்கி அவனுக்கு நமஸ்காரஞ் செய்தனர். மிகுந்த வீர்யமுடையவனும் மஹா பலனுமாகிய ஸுக்ரீவன் தன் முன்பு அங்ஙனம் வணங்கின பட்டணத்து ஜனங்களை எழுந்திருக்க எடித்து அவர்களோடு கல் வார்த்தைகளைப் பேசி, அனந்தரம் தாரையைக் கைவசஞ்செய்துகொள்ளும்பொருட்டு வாலியின் அந்தப்புரத்திற்குப் போயினன். அங்ஙனம் அவ்விடம் சென்று அவ்வரனரேச்வரன ஸுக்ரீவன் வெளிப்பட்டு வந்தவுடனே, அவனுக்கு, தேவதைகள் தேவேந்த்ரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதுபோல், பந்துக்கள் பட்டாபிஷேகஞ் செய்தனர். அப்பொழுது வானரர்கள் ஸுக்ரீவனது பட்டாபிஷேகத்திற்காக ஸ்வர்ணத்தால அலங்கரிக்கப்பட்ட வெண் குடையையும் பொற்கும்புகளிடப் பெற்றவைகளும் புகழை வளரச் செய்பவைகளுமான இரண்டு வெண் சாமரங்களையும் ஸமஸ்த ரத்னங்களையும் ஸகலமான விதைகளையும் ஓஷதிகளையும் பாலோடுகூடின வருக்ஷங்களின் தளிர்களையும் புஷ்பங்களையும் வெளுத்த வஸ்த்ரங்களையும் கற்பூரம் முதலிய வெளுத்த அங்கராகங்களையும் கல்ல மணமுடைய பூமாலைகளையும் சிலத்தாமரைகளையும் சிறந்த சந்தனங்களையும் காணுவித கந்த த்ரவ்யங்களையும் மஞ்சள் கலந்த அக்ஷதைகளையும் ஞாழல் புஷ்பங்களையும் தேனையும் நெய்யையும் தயிரையும் புலித்தோலையும் காட்டுப்பன்றித் தோலால் செய்யப்பட்ட பாதரக்ஷைகளையும் கொண்டுவந்தனர். அனந்தரம் அவ்விடத்திற்குப் பதிறுறு கன்னிகைப்

பெண்கள் மெய்க்கூண்டையும் மனச்சிலையாற் செய்யப்பட்ட திலகத்தையும் கோரோசனத்தையும் எடுத்துக்கொண்டு மனக்களிபபு விளங்க வதனர். அனந்தரம் மந்திரங்களை யுணர்ந்த வானர புரோஹிதர்கள் யாஜனத்தின் பொருட்டு வரவழைக்கப்பட்ட ப்ராஹ்மணோத்தமர்களுக்கு ரத்னங்களையும வஸ்த்ரங்களையும் காணுவித பக்ஷியங்களையும் கொடுத்து ஸந்தோஷப்படுத்தி அகனியை ஜ்வலிக்கச் செய்து சுற்றிலும் தர்ப்பங்களைப் பரப்பிக் காலம் தவறுமல விதிபின்படி மந்திரங்களைச்சொல்லி ஹவிஸ்ஸை ஹோமஞ் செய்தனர். பினபு ஸ்வர்ணமயமான கல்கள் இடப்பெற்றதும் மேலான மெத்தை பரபபப்பெற்றதுமாகிய சிறந்த ஆஸனத்தில, ரமணீயமும் பலவகைப்பட்ட புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டதுமாகி விளங்கும் உப்பரிகையின மேல்பாகத்தில் ஸுக்ரீவனைக் கிழக்குமுகமாக காணுவித மந்த்ரங்களைச் சொல்லி உட்காரவைத்து, நதிகளினின்றும் நதங்களினின்றும், ஸமஸ்த தீர்த்தங்களினின்றும் ஸகல ஸமுத்ரங்களினின்றும் நிர்மலமான புண்ய ஜலங்களைக்கொண்டு வந்து ஒன்றுசக் கலத்து அந்த ஜலங்களைப் பொற்குடங்களில் வைத்து கல்ல முஹூர்த்தத்தில் சாஸ்த்ரத்திற் சொல்லிய க்ரமத்தினபடியும் கல்பஸூத்ர காரமாக தவறுமலும் கஜன் கவாக்ஷன கவயன் சரபன் கந்தமாதனன் மைந்தன த்விவிதன் ஹனுமான் ஜாம்பவான் நலன் ஆகிய இவர்கள் மிகவும் தெளிவாயிருப்பதும் கமகமவென்று மணங்கமழப் பெற்றதுமாகிய அந்தப் புண்யதீர்த்தங்களை மங்களகரமான [1] வ்ருஷபஸ்ருங்கங்களாலும் பொற்கலசங்களாலும் எடுத்து ஸுக்ரீவனுக்கு, வஸுக்கள் ஆயிரங்கண்ணனுகிய தேவேந்த்ரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதுபோல, பட்டாபிஷேகஞ் செய்தனர். ஸுக்ரீவனுக்

1 ருதுகளின் கொம்புகள.

குப்பட்டாபிஷேகம் நடந்தவுடனே மஹாணுபாவர்களான வானரப்ரேஷ்டர்கள் அனைவரும் ஆயிரமாயிரமாகக் குவியல் கூடிப் பரமஸந்தோஷம் பெற்றுக் கிலகில வென்று சப்தஞ் செய்தனர் வானரர் தலைவனுகிய ஸுக்ரீவன் ராமனது ஆஜ்ஞையைச் சிரஸாவஹித்து அங்கதனை அணைத்து ஆலிங்கனஞ் செய்து, அவனுக்கு யௌவராஜ்யத்தில் பட்டங் கட்டினன். அங்கதன் பட்டாபிஷேகம் பெற்ற பின்பு தந்தையில்லாத குழந்தை யென்று அவனிடத்தில் மன இரக்கமுற்றிருந்த மஹாணுபாவரான வானரர்கள் ஸுக்ரீவனை நல்லது நல்லதென்று கொண்டாடினர். ஸுக்ரீவ அங்கதர்களுடைய பட்டாபிஷேக மெனனும் அம் மஹோத்ஸவம் நடக்கும்பொழுது கிஷ்கிந்தா புரத்திலுள்ள ஸமஸ்த வானரர்களும் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து மஹாணுபாவனுகிய ராமனையும் லக்ஷ்மணனையும் அடிக்கடி புகழ்ந்தனர். அம் மஹோத்ஸவத்தில பர்வதகுஹையிலிருக்கும் கிஷ்கிந்தா நகரம், ஜனங்கள் ஸந்தோஷத்தினால் பருத்த மேனியுடன விளங்கவும், ராஜஸ்ரீவங்களையுடைய டக்கயங்களும் ஸாதாரண டக்கயங்களும் ப்ரகாசிக்கவும் பெற்று மிகவும் அழகுற்று விளங்கிற்று. அப்பொழுது வீர்யசாலியாகிய வானரேச்வரன் ஸுக்ரீவன் மஹாணுபாவனுகிய ராமனிடம் சென்று பட்டாபிஷேகம் நடந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்து தன் பார்யையாகிய ருமையுடன்கூடித் தேவேந்த்ரன் தேவராஜ்யம் பெறுவதுபோல் வானரராஜ்யத்தைப் பெற்றனன். இருபத்தாருவது ஸர்க்கம் முற்றிற்று.

{ராமன் ஸீதா விரஹத்தால் சோகித்தலும், லக்ஷ்மணன் ஸமாதானப் படுத்தலும்.}

ஸுக்ரீவன் பட்டாபிஷேகம் பெற்றுக் குஹாருபமாயிருக்கும் கிஷ்கிந்தையில் ப்ரவேசித்த பின்பு ராமன் தம்

பிதேயாதிகூட ப்ரஸ்ரவண பர்வதத்திற்குப் போயினன். அதில் பெரும் புலிகளின் காஜூனைகளும் மான்களின் கூட்டங்களும் கற்புறமும் நிறைந்திருந்தன. மேலும், அதில் பலவகைப்பட்ட புதர்களும் கொடிகளும் சூழ்ந்திருந்தன. வ்ருக்ஷங்கள் பலவும் அங்கு நிறைந்து கெக்கரித் திருந்தன. காடிகளும், குரங்குகளும், கொண்டைமுயல்களும், பூனைகளும் அங்கு உலாவிக்கொண் டிருந்தன. மேலும் அது மேகஸமூஹம்போல் கறுத்துக்கல்மயமாகி எப்பொழுதும் நிர்மலஜலங்கள் நிரம்பியதுமாகி விளங்கிற்று. அந்த ப்ரஸ்ரவண பர்வதத்தின சிகரத்தில அகலமும் நீளமுமுடைய ஓர் குஹையை ராமன் தானும லக்ஷ்மணனும் வாஸஞ் செய்வதற்காக ஏற்பதித்திக் கொண்டனன. பாபமற்றவனும் கல்வியற்ற புடையவனுமாகிய அந்த ரகுநந்தனன. ஸுக்ரீவனை அங்ஙனமமைபம ஏற்படித் திக்கொணடி அனந்தரம் வணக்கமுடையவனும னைகங்கர்ய சேவையை வளர்த்துகொள்பவனுமாகிய தம்பி லக்ஷ்மணனைப்பார்த்து அப்பொழுதைக்குத் தகுந்த பெரிய் வாக்யத்துடன 'சதருக்களை யழிபபவனே! இந்தப் பாவதத்தின குஹை ரமணீயமும் விசாலமுமா யிருக்கின்றது. இதில் வேண்டிய காற்றுமாத்ரமே வீசுகின்றது. ஆகையால் வர்ஷாகாலராத்ரிகள முழுமையும் இந்தக் குஹையில் வஸித்திருப்போம். ராஜகுமாரா! இந்தப் பர்வத சிகரம் ரமணீயமாகி உந்ததுமா யிருக்கின்றது. இதில் வெளுப்புக் கற்களும், கறுப்புக கற்களும், சிவப்புக்கற்களுடி மனக் களிப்பை விளைவிக்கின்றன. மேலும் ஆங்காங்குக் கைரிகதாதுக்களும் நிறைநதிருக்கின்றன. குஹைகளும் மலை யருவிகளும் இதில் விளங்குகின்றன. காணுவித வருக்ஷஸமூஹங்களும் சூழ்ந்திருக்கின்றன. பலவகைப் பக்ஷிகளும் கலகலவென்று கூவிக்கொண் டிருக்கின்றன. மயில்

கள் கேகா வென்று சப்தஞ் செய்கின்றன. புஷ்பித்த ஜாதிச்செடிகளும் குந்தச் செடிகளும் கொச்சிலிச்செடிக ளும், பொன் மருதாணிமரங்களும், கடப்பமரங்களும், அர்ஜுன வ்ருக்ஷங்களும், ஸாலவ்ருக்ஷங்களும் விளங்கு கின்றன. ராஜகுமாரா! மலர்ந்த தாமரைகளால் அலங்க ரிக்கப்பட்டு விளங்குகின்ற இந்தத் தாமரைபோடையும் வர்ஷாகாலத்தில் நன்றாக நிறைந்து நமது குறைக்கு நீரம்பவும தூரமாகாமல் ஸமீபித்திருக்கும். லக்ஷ்மணனே! வடகிழக்கு மூலையில் பள்ளமா யிருக்கும் ப்ரதேசத்தில் இதற்குறை எற்பட்டு கிருதிரிக்கில வாசற்படி விளங் கப்பெற் றிருக்கையால வடகிழகின்னவுவரும மழை உள்ளே படாது. ஆகையால இது நன்றாயிருக்கும். மே லும் இது மேலண்டை பாகத்தில உயாந்திருகையால் மேலகாறறும் உள்ளே வரப் பெறுமல ஸுகமாயிருகும். லக்ஷ்மண! மேலும இதக குறைகின வாசஸ்லிருக்கும் இதற்கல மேற்பள்ளமின றிச்சதுரமாகிமிக்க அழகுற்று விஸ்தாரம் பொருந்தி மழமழத்து உரைத்த மைகுவி யல்போல் கறுத்திருக்கினறது. எனனபபடின! இதனவட பாகத்தில் அழகு விளங்கபபெற்ற இதுப பர்வதசிகரத் தைக் காண்பாயாக. இது உரைத்த மைக்குவியல்போல் கறுத்து ஆகாயத்தில் கிளம்பின மேகம்போ லிருக்கின் றது. தென் திசையில் வெளளிபோல் விளங்குவதும் கை லாஸ சிகரம்போல் புலப்படுவதும் பலவகைப்பட்ட கைரிக தாதுக்களால் அலங்கரிக்கப்பட்டதுமாயிருகும் மற்றொ ரு சிகரத்தைக் காண்பாயாக. மேலும் இதற்குறையின் கீழ்பாகத்தில், த்ரிகூட பாவதத்திலுள்ள கங்காநதிபோ ல் இழக்குமுகமாகப் பெருகிவருகின்ற நதியைக் காண்பா யாக. இதநதி சிறிதும் சேறில்லாதிருக்கினறது. இது சண் பகம் திலகம் பனை பச்சிலை குருக்கத்தி பத்மகம்ஸாளம்

அசோகம் நீர்வஞ்சி தினிசி மகிழ் தாழை தவம் கூந்தல் பனை வெள்ளிலத்தி நீர்க்கடம்பு பாம்புச்செடி ஸ்ரீபுன்னை இலைகளாலும் மற்றும் பலமரங்களாலும் அழகாய் விளங்குகின்றது. இந்தி கரையில்முளைத்த காணவி தவ்ருக்ஷங் களோடு கூடியிருக்கையால், ஆடையாபரணங்களால அலங்கரிக்கப்பட்ட மடந்தைபோல் ப்ரகாசிக்கினறது. பறவைகள் பலவும் குலியலகூடிப் பலவாறு கூவப்பெற்றதும் ஒன்றுக்கொன்று மிகுந்த ப்ரீதியுடைய சக்ரவாகப் பறவைகள் விளங்கப் பெற்றதும் ஹம்ஸங்களும் ஸாரஸங்களும திரியபபெற்று மிகவும் அழகாயிருகின்ற மணற் குனறுகள் அமைந்திருப்பதுமாகிய இநத, சிலமபுத்தண்டை முதலிய ஆபரணங்களை யணிநது பருத்த இடையின் பின்புறமுடையவளாகி மதுர தவனி யெழும்பும்படி நகைக்கின்ற ஓர் யுவதிபபோல ப்ரகாசிக்கிறது. மேலும் இது ஓரிடத்தில் கருநெய்தலகளாலும் மற்றோரிடத்தில செங்கழுநீர்களாலும் மற்றோரிடத்தில் வெளுத்த ஆம்பல் மொட்டுகளாலும் நிரம்பிபதாகி மிகவும் விளங்குகினறது. லஷ்மணனே! பல நீரப்பறவைகளுடனகூடி மயில்களும் க்ரௌஞ்சப் பறவைகளும் மதுர த்வனிகள் செய்யப்பெற்று ரிஷிகள் கூட்டங்கூடடமாக வநதிறங்கி ஸ்னானஞ்செய்வது பற்றி இந்தி அதி ரமணீயமா யிருக்கின்றது. இந்தச் சந்தனமரங்களின் சாலையைக் காண்பாயாக. ஸரங் கோத்தாற்போல் அமைநதிருக்கின்றது. அப்படியே மருதமரங்களின் வரிசையும் மனத்திலல் ஸங்கல்பித்து ஓரேகாலத்தில் உண்டாக்கப்பட்டதுபோல் புலப்படுகினறது. சத்ருக்களை யழிப்பவனே! இந்த ப்ரதேசம், ஆ! எவ்வளவு அழகாயிருக்கின்றது. லஷ்மித்ரீ! இங்குநாம் நன்றுக ஸ்தேர்ஷத்துடன் விளையாடிக்கொண் டிருக்கலாம். ஆகையால் இங்கேயே வஸித்திருப்போம். ராஜகு

மாரா! அற்புதமான வனங்கள் அமையப்பெற்று ரமணீய மாயிருக்கும் ஸுக்ரீவனது ராஜதானியாகிய கிஷ்கிந்தை இவ்விடத்திற்கு ஸமீபமே. சூரர்களில் தலைவனே! கிஷ்கிந்தையில் நடக்கும் கீதவாத்யங்களின் கோஷங்களும் ம்ருதங்க ஆடம்பரங்களோடு இறைச்சலிடுகின்ற வானரர்களின் கோஷங்களும் இங்குச்செவிப்படுகின்றன. ஆகையால் கிஷ்கிந்தை இவ்விடத்திற்கு ஸமீபமாகவேயிருக்கின்றது வானரச்ரேஷ்டனெனிய ஸுக்ரீவன், தன்பார்யையாகிய ருமையையும் வானர ராஜ்யத்தையும் பெரிய ஸம்பத்தையும் பெற்றுப பந்துக்களால் சூழப்பட்டு மிகவும் ஸுகதோஷமுறுகின்றனன். இது-நிஜம்'என்றனன். ராமன் இங்ஙனம் லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்லிப் பார்க்கத் தகுந்த பல குணஹகளோடும் புதர்களோடும்கூடிய ப்ரஸ்ரவண பர்வதத்தில் அந்தக் குஹையில் லக்ஷ்மணனும் தானுமாக வஸித்திருந்தனன். அந்த ப்ரஸ்ரவண பர்வதம புஷ்பம் பழம்முதலிய பலவஸ்துக்கள் நிறைந்து எப்படிப்பட்டவர்க்கும் மிகவும் ஸுகத்தை விளைவித்துக்கொண்டிருக்கும். ராமன் அந்தப் பர்வதத்தில வாஸஞ்செய்பவை யினும் தனக்கு ப்ராணனைகளைக் காட்டிலும் மேலானவனும் ராவணனால் அபஹரிக்கப்பட்டவனுமாகிய தன் ப்ராணநாயகியையே எப்பொழுதும் சிந்தித்துக்கொண் டிருந்தமையால் அவனுக்குச் சிறிதாயினும் மனக்களிப்பு உண்டாகவில்லை. பகலில் விரஹத்தை நிவர்த்திக்கும் வஸ்துக்களைப் பார்த்துப் பரிதபிக்கை மாத்ரமேயன்றி, அவன், க்லேசஷித்து, ராத்ரிகளில் படுக்கும்பொழுது உதய பர்வதத்தினின்று கிளம்பின சந்த்ரனைக்கண்டு விரஹதாபத்தின் மிகுதியால் எள்ளளவும் நித்ரைபெறுமல் வருத்தமுற்றிருந்தனன். ஸீதையை நினைத்துக் கொள்கையாலுண்டான சோகத்தினால் கண்ணீர் தளும்பப் பெற்று

மனங் கலங்கிச் சோகித்துக்கொண்டு சோகமே கதியாயி ருக்கின்ற ராமனைப் பார்த்துத் தம்பி லக்ஷ்மணன் தானும் அவனேடொக்க வருத்தி அவனை நல்வார்த்தை சொல் லிக்கொண்டே 'வீரர்களில் தலைவனே! துக்கப்பட்டது போதும். நீ இங்ஙனம் வ்யஸனப் படுவது யுக்தமன்று! துக்கப்பட்டுக் கொண்டிருப்பவனுக்கு ஸமஸ்த கார்யங் களும் கெட்டுப்போம். இது உனக்குத் தெரிந்த விஷய மேயல்லவா? உலகத்தில் எல்லாரைக் காட்டிலும் நீ புருஷ ப்ரயத்னத்தை அவலம்பித்துக் கார்யஞ் செய் பவன்; கார்யஸித்திக்குக் காரணமான தெய்வத்தினிடத் திலும கிஷ்டையுடையவன்; தெய்வமுளதென்னுமநிஷ்வ என்னும் மாறுதிருக்கப் பெற்றவன்; தர்மங்களை உணர் ந்து ஆசரிக்குந தனமையன; இடைவீடில்லாத ப்ரயத்ன முடையவன். அப்படிபபட்ட நீ இப்படி. சோகத்தினால் மனங் குதிரப்பெறுமல முயற்சியற்றிருப்பாயாயின், எந தப் பகைவனையும் வெல்ல வல்லவனகமாட்டாய். அதிலும் விசேஷித்துக் கபடோபாயங்களைச் செய்யும் ராக்ஷஸனை ராவணனை யுத்தத்தில் கொல்வதற்கு எவ்விதத்திலும் வல்லவனகமாட்டாய். சோகத்தைவிடுத் தொலைப்பா யாக. முயற்சியை ஸ்திரமாகக் கைப்பற்றுவாயாக. இங் ஙனஞ்செயது அந்த ராக்ஷஸனை ராவணனைப் புத்ரமித் ராதிகள் ஒருவரும் மிகாதபடி வதிப்பாயாக. ராமா! ஸுஷேணர்களோடும் வனங்களோடும் பர்வதங்களோடும் கூடின பூமண்டலத்தை யெல்லாம் தலைகீழாகச் செயய வல்லவாய். இனி ராவணனைக் கொல்வது உனக்கு எவ் வளவு? இப்பொழுது வர்ஷாகாலம் வந்துவிட்டது. ஆகை யால் சரத்காலம் வரையில் காத்திருப்பாயாக. அதன் பிறகு ராவணனையும் அவனுடைய ஸைன்யத்தையும் பந துக்களையுங்கூட வதிப்பாய். நான் நீறுபூத்த நெருப்பை

எரியச்செய்கின்ற ஆஹுதிகளால் எரியச்செய்வதுபோல் கித்ரைபோகின்ற உன் பராக்ரமத்தைக் கிளப்பும்படியான வார்த்தைகளால் மேலெழச்செய்கிறேனன்றி உனக்கில் லாத பராக்ரமத்தை உபதேசிக்கிறேனல்லேன்' என்ற ணன். லக்ஷ்மணன் சுபகரமாகவும் ஹிதமாகவும்சொன்ன அந்த வார்த்தையை மிக்க ஆதரத்துடன் அங்கீகரித் துத் தன்னிடத்தில் மேன்மையை விரும்பும் மனமும் மிகுந்த ஸ்னேஹமுமுடைய தம்பி லக்ஷ்மணனைப்பார்த்து 'லக்ஷ்மண! அனுராகமுடையவனும் ஸ்னேஹம் மிகப் பெற்றவனும் ஹிதத்தை விரும்புவோனும் உண்மையான பராக்ரமமுடையவனும் சொல்லவேண்டிய வார்த்தைக ளெல்லாம் சொலலினை. ஸமஸ்த கார்யங்களையும் கெடுக் கும்படியான இந்தச் சோகத்தை இதோ துறந்துவிட்ட னன். பராக்ரமஸமயங்களில் எதிரின்றி விளங்கும் தேஜ ஸ்ஸை ஏற்றுக்கொள்கிறனன். உன் வார்த்தையின் படி சரத்காலம் வந்து நதிகள் தெளிந்து லக்ஷ்மீவனும் அருள்புரியும் வரையில எதிர்பார்த்துக் கொண்டிருக்கி றன. வீரனுமிருபபவன தனக்கு உபகாரஞ்செய்தவர் களுக்குத் தவறுமல் ப்ரத்யுபகாரஞ் செய்வான். அங்ங னம் தனக்குச்செய்த உபகாரத்தைமறந்து ப்ரத்யுபகாரஞ் செய்யானுயின, ஸாத்விகர்களுக்கு மனம் நோகும். ஆகை யால் அவரகள் நிந்திப்பார்கள். நம்மைப்பற்றி யில்லாமற் போயினும் ஸஜ்ஜனபவாதத்திற்குப் பயப்படுவோனைகை யால். அதைப்பற்றியாவது நமக்குத் தவறுமல ப்ரத்யுப காரஞ் செய்வான' எனறனன். அனதரம் லக்ஷ்மணன் இங்ஙனம் ராமன சொனனதுகேட்டுக கைகூப்பி ராமன துவசனத்தைக் கௌரவித்து முன்பு செய்யவேண்டிய கார்யத்தைக் குறித்து ஆலோசித்துச் சுபமான தனது அபிப்ராயத்தைத் தெளிவாக இனிய காட்சியுடைய ராம

னைப் பார்த்துச் சொல்லத் தொடங்கி 'தசரத்ரனே! வானரர்தலைவனுகிய ஸுக்ரீவன் உன் விருப்பத்தையெல்லாம் தான் செய்வதாகச் சொனனவார்த்தையைத் தவறுமல் சீக்ரமாகவே ஈடேற்றுவான். ஆகையால் நீ பகைவனை அடக்கும்பொருட்டுத் தைர்யத்தை யேற்றுக்கொண்டு சரத்ருது வரும்வரையில் இந்த வர்ஷாகாலத்தில் விளையும் விரஹதாபத்தைப் பாராட்டாமல் பொறுத்திருப்பாயாக. கோபத்தை அடக்கிக்கொண்டு சரத்காலம்வரையில் காத்திருப்பாயாக. இனி நான்கு மாதங்கள் எப்படியாவது என்னோடுகூடப் பொறுத்திருப்பாயாக. இதற்குள் சரத் ருதுவும் வரும். ஸிம்ஹங்களால விளங்குகின்ற இந்தப் பர்வதத்தில் இத்தனைகாலம் சத்ருவதத்தில உத்ஸாஹத்தை மேன்மேலும பெருகச செய்துகொண்டு வஸித்திருப்பாயாக. இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் வர்ஷருதுவை வர்ணித்தல.

ராமன அங்ஙனம் வாலியைக்கொனறு ஸுக்ரீவனுக்கு வானராராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ் செய்வித்து மால்யவ னென்னும் ப்ரஸ்ரவணபர்வதத்தில் வாஸஞ்செய்துகொண்டு லக்ஷ்மணனைப்பார்த்து 'இப்பொழுது ஸுக்ரீவன கிஷ்கிதையிலிருக்கும்படிகசும நாம் இங்கிருக்கும்படிக்கும் ஸங்கேதம் பண்ணிகொண்ட காலமாகிய வர்ஷருது இதோ வந்தது. ஆகாயம் முழுவதும் பர்வதம் போனற உருவமுடைய மேகங்கள் நிறைந்திருக்கின்றன காண்பாயாக. ஆகாயம் ஸூர்ய கிரணங்களின் மூலமாய் ஸமுத்ராஜலத்தைப் பருகிக் கார்த்திகைமாதம் முதல் ஆடிமாதம் வரையிலுள்ள ஒன்பதுமாதங்கள் கர்ப்பம் தரித்து, இப்பொழுது ஸமஸ்த ரஸங்களுக்கும் காரணமான

ஜலத்தை ப்ரஸவிக்கின்றன. பர்வதத்தில் படிந்து மேகங்கள் மேன்மேலும் படர்ந்திருக்கின்றன. ஆகையால் இந்த மேகங்களாகிற படிகளின்வழியால் ஏறி ஆகாயஞ் சென்று குடமல்லிப் புஷ்பங்களின் மாலைகளாலும் மருதப்பூமாலைகளாலும் ஸூர்யனை (ஸூர்யமண்டலமத்யத்தில் எப்பொழுதும் த்யானிகத்தக்க நாராயணனை) அலங்கரிக்கக் கூடும். மழுபெய்து வெளுத்துக் கொஞ்சம் ஜலத்தோடுகூடின மேகங்கள் ஸந்த்யாராகம்பட்டு நடுவில் சிவதலும் ஓரங்களில் வெளுத்தும் கொஞ்சம் ஜலத்திலுல் கனாகதும் விளங்கி ஆகாயத்தில் பரந்திருக்கையால், ரக்தம் பட்டு நடுவில் சிவந்த வெளுப்புத்துணிகளால் ஆகாயத்தின வ்ரணங்களுக்கு மருந்துச் சீலையிட்டாற்போலிருக்கின்றன. ஆகாயம் இளங்காற்றுகிற இடைவிடாத பெருமூச்சுக்களும் ஸந்த்யாகாலத்துச் சிவப்பாகிற குளிர்ச்சியின் பொருட்டான சந்தனப்பூச்சும், முழுமையும் பரந்திருக்கிற வெளுத்த மேகங்களாகிற விரஹத்தால் விளையக்கூடிய வெண்மையும் விளங்கப்பெற்றுத் தனது ஆசைநாயகனையைப்பிரிந்து அந்தப் பிரிவினுல் பீடிக்கப்பட்டதுபோல் புலப்படுகின்றது. வெயிலில் மிகவும் காய்ந்து புதிய மழைஜலங்களால் கனைந்திருக்கின்ற இந்தப்பூமி விரஹதாபத்தினுல் பரிதபித்துக் கண்ணீர்களால் கனைந்திருக்கின்ற ஸீதை பாஷ்பங்களை விடுவதுபோல், தானும் பாஷ்பங்களை (ஆவிகளை) விடுகின்றது. மேகங்களினிடையினின்று புறப்பட்டு மெதுவாயிருப்பவைகளும் செங்கழுநீர் மலர்களில் படிந்து ஸுகமான குளிர்ச்சி உண்டாகப்பெற்றவைகளும் தாழைமடல்களைச் சார்ந்து நன்மணம் அமைந்தவைகளுமான காற்றுக்கள் குவித்த கைகளால் வாரியெடுத்துப் பருகலாம்போல் நிறைந்து வீசுகின்றன. முழுவதும் மருதமரங்கள் மலர்ந்

திருக்கப் பெற்றதும் தாழைமடல்களால் மணங்கமழ்வதும் தாபம்தீரப் பெற்றதுமாகிய இந்தப் பர்வதம், பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டு நல்ல மணமுள்ள சந்தனங்களைப் பூசி, சத்ருக்கள் தொலையப்பெற்றுப் பட்டாபிஷேகம் நடத்திக்கொள்ளும் ஸுக்ரீவன் ஜலதாரைகளால் அபிஷேகம் செய்யப்பெறுவதுபோல், தானும் வர்ஷதாரைகளால் அபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றது. பர்வதங்கள் கறுத்தமேகங்களால் மறைக்கப்பட்டுத் தாரைதாரையாக விழும் வெளுத்த ஜலப்ரவாஹங்களும் பொருந்திக் காற்றுநிறைந்த குஹைகளால் சப்தித்துக கொண்டிருப்பது கண்டால் க்ருஷ்ணஜினங்களை உடுத்து யஜ்ஞோபவீதங்களைத தரித்துக் காற்றுநிறைந்த கண்டத்துடன் வேதாத்யயனம் பண்ணத் தொடங்கிற்போலிருக்கின்றன. ஆகாயம் மின்னலகளால் மின்மினிப்புற்று மேககர்ஜனங்கள் உண்டாகப் பெற்றிருக்கையால பொன்மயமான சாட்டைகளால் அடிக்கபபட்டு உரக்க அத்யயனஞ் செய்துகொண்டு உள்ளே நோவுபடுகின்ற மாணாக்கரைப்போல் புலப்படுகின்றது. கறுத்த மேகத்தினிடையில் புலப்படுகின்ற மின்னற்கொடி, ராவணனது மடியில் தபோமாற்றழுற்று மன இராக்கதத்திற்கிடமான ஸீதைபோல எனக்குத் தோற்றுகின்றது. மேகங்கள் பூச்சுப் பூசினற்போல் கனமாக மூடிக்கொண்டிருக்கையில் நக்ஷத்ரங்களும் சந்த்ரனும் தெரியாமையால் 'இது கிழக்கு இது மேற்கு' என்று ஏற்படாதிருக்கும்படி திசைகள மறைந்திருத்தல், மடந்தையரோடுகூடின காமுகர்களுக்கு மிகவும் ஸுகமாயிருக்கின்றது; ஆனல் மடந்தையரைப் பிரிந்த விரஹிஜனங்களுக்கு வருத்தத்தையே விளைவிக்கும. லக்ஷ்மண! ஓரிடத்தில் மலைச்சாரல்களில் குடமல்லிகள் வர்ஷருதுவந்தமையால் ஸத்தோவர்ஷமுற்றனவாகிப் புதிய ஜலத்து

ளிகள் படுதலாலுண்டாகும் ஆவியால் மூடப்பட்டுப் புஷ்
ங்கள் நிறைந்து, காதலிகளைச்சேர்ந்து ஆநந்தபாஷ்பம்
ஓருங்கப்பெற்றுப் புன்னகையுடன் விளங்கும் முகமுடைய
காமுகர்போல் தோற்றி எனக்குக் காமவிகாரத்தை
மேன்மேலும் வளர்க்கின்றன காண்பாயாக. இப்பொ
ழுது பூமியில் தூசி அடங்கிவிட்டது. காற்று பனியோ
டுகூடிக் குளிர்ந்து வீசுகின்றது. வெயிலாலுண்டாகும்
வெப்பம் முதலிய தோஷங்களெல்லாம் தொலைந்தன. ரா
ஜாக்களின் யுத்தப்ரயாணங்களும் நின்றிருக்கின்றன. தே
சாந்தரத்திற்குப் போனவர் சுகமது தேசங்களைச் சேரு
கின்றனர். இப்பொழுது ஹம்ஸங்கள் மானஸஸரஸலின்
வாஸத்தை நினைத்துக்கொண்டு மிக விருப்பமுற்றுப்
புறப்பட்டன. இப்பொழுது சக்ரவாகப்பறவைகள் காம
விகாரம் மிறப்பெற்றுப பேடுகளோடு கலந்திருக்கின்றன.
மிகவும் மழை ஜலங்களால் வழிகள் கல்லப்பட்டுக் கெட்
டிருக்கையால் வண்டிமுதலியவை அவற்றில் செல்லமாட்
டாதிருக்கின்றன. ஆகாயத்தில் ஆங்காங்கு மேகங்கள்
சூழ்ந்திருக்கையால், அது சிலவிடங்களில் கண்ணுக்குப்
புலப்படுவதும் சிலவிடங்களில் புலப்படாததுமாயிருக்கின்
றது; ஆகையால் சிலவிடங்களில் பர்வதங்களால் மறைக்
கப்பட்டுத் தோற்றுவதும் மற்ற இடங்களில் தோற்றுவ
தும அவ்விலகளின்றி ஓய்ந்திருப்பதுமாகிய மஹாஸமுத்ரம்
போல் ப்ரகாசிக்கின்றது. மாமரப் புஷ்பங்களும் கடம்
பப் புஷ்பங்களும் கலந்து நிறைந்திருப்பவைகளும், கைரி
தாதுக்களால் சிவந்த புதிய ஜலப்ரவாஹங்களோடு
கூடியவைகளும், மயில்களின கேகா சப்தங்கள் ஓயாது
விளங்கப் பெற்றவைகளுமாகிய மலையாறுகள் மிக்கவே
கத்துடன் பெருகிவருகின்றன. மிகுந்த ருசியுடையதும்
வண்டுபோல் கறுத்திருப்பதுமாகிய நாவற்பழங்களை ஜன

ங்கள் ஏராளமாகப் புகிக்கின்றனர். மாம்பழங்கள் சிவப்பு மஞ்சள் முதலிய பலவர்ணங்க ளமைந்து கன்றுகப் பழுத் துக் காற்றால் அடிக்கப்பட்டுத் தரையில் வீழ்கின்றன. மன் னல்களோடுகூடிக் குயில் குயிலாகக் கொக்குகளும் சூழப்பெற்றுப் பர்வதசிகரம்போன்ற உருவமுடைய மேக ங்கள், டக்கயங்களோடுகூடி கக்ஷத்ரமாலைகளால் விளக் கழுற்றுப் பெரிய சிகரங்கள்போல் உயர்வுற்று ஒன்றோ டொன்று யுத்தஞ் செய்கின்ற சிறந்த மத்தகஜங்கள்போல் பெருத் த்வனியெழும்படி கர்ஜிக்கின்றன. வனங்கள் மழை ஜலங்களில் கன்றுகப் புற்கள் படர்ந்து வளர்ந்த இடமு டையனவாகி மயில்கள் வேடிக்கைய்ாக நர்த்தனஞ் செய் யப்பெற்று மேகங்கள் மழை பெயதுகொண்டிருக்கையில் (அல்லது மேகங்கள் கனறுகப் பெபது நிறகையில) ஸாய ங்காலங்களில் மிகவும் ரமணீயமா யிருக்கின்றன காண் பாயாக. மேகங்கள், கொக்குகள் சூழபபெற்று மிகுத ஜலபாரம் நிறைதிருக்கையால் கர்பிணிகள்போல பாவ தங்களினமேல் ஏறும்பொழுது இளைப்பின மிகுதியால் ஊங்கொட்டுவதுபோல் காஜனஞ செய்து கொண்டு பெரிய சிகரங்களில நின்று நின்று இளைப்பை யாற்றிக் கொண்டு போகினறன. கர்ப்பந் தரிக்கும் பொருட்டு மே கங்களை எதிர் பார்ப்பவைகளும் ஆனதுபறறியே மேகத் தை அணுகும்பொருட்டு வருமவைகளுமாகி ஸந்தோஷத் தில் பறநதுவருகினற கொககுகளின குயில், ஆகாயத் தில் தொங்கும்படி இடப்பட்டுக் காற்றால அசைகினற மேலான வெண் தாமரைப் பூமாலைபோல் விளங்குகிற் றது. பூமி, புதிய பசும்புல் முழுவதும் உண்டாகப்பெற்று அவைகளின் இடையிடையில் சிவந்திருக்கும் சிறிய பட் டுப்பூச்சிகள் உலாவப் பெற்றுச் சித்ரவர்ணமா யிருப்பது பற்றி அரக்குக் குழம்பினால நடு நடுவில் பொட்டுகளிடப்

பெற்றுச் சித்ரமெழுதினதும் கிளியின்மேனி வர்ணம்பொ
ருந்தியதுமாகிய பச்சைப்பட்டிடித்தின அங்கதனைப்போ
ல் ப்ரகாசிக்கின்றது. இப்பொழுது யோகநித்ரை மெல்ல
மெல்ல விஷ்ணுவைத் தொடருகின்றது. நதி வேகத்து
டன் ஸமுத்ரத்தைச் சேருகின்றது. கொக்குகள் ஸந்தோ
ஷத்துடன் மேகத்தை அணுகுகின்றன. மடந்தையர்க
ளும் காமவிகாரங் கொண்டு தமது காதலருடன் புணரு
கின்றனர். வனங்களில மயில்கள் நர்த்தனஞ் செய்யத்தொ
டங்கின. கடமப வருக்ஷங்கள் கிளைகள் முழுமையும் ந
ருகப் புஷ்பித்திருகின்றன. எருதுகள் பசுக்களிடத்தில்
மிகவும காமவெறி மீறப்பெற்றிருக்கின்றன. பூமி, பயிர்க
ளும் காடுகளும் செழிததிருக்கப்பெற்று ரமணீயமா யிரு
க்கின்றது. இப்பொழுது நதிகள் பெருகுகின்றன. மேகங்
கள் மழைபெய்கின்றன. மதித்தயானைகள் கர்ஜிக்கின்
றன. அடவிகள் செழிப்புற்று ப்ரகாசிக்கினறன. காதலி
களைப் பிரிந்த காமுகர் வ்யஸனத்தில் ஆழ்ந்து சிகதை
யுற் றிருக்கினறனர். மயிலகள் நர்த்தனஞ் செய்கின்ற
ன. வானரர்கள் ஓரிடத்திலேயே வேண்டிய உணவு
கள் அகப்படுகையால் மனக்கவலையற் றிருக்கின்றனர்.
(ஸுக்ரீவனது பக்ஷத்தைச் சேர்ந்த வானரர்கள் ஸுக்
ரீவன் ராஜ்யம பெற்ரு ளுகையால் ஸந்தோஷமுற் றிருக்
கினறனர்.) மழைக்கு முன்னமே ஸந்தோஷமுற்றிருந்த
மத்தகஜங்கள் தாமரைமலர்களின் மணத்தை மோந்து
மேன்மேலும் ஸந்தோஷமுற்றவையாகி அடவியில் பாயும்
மலையருவிகளில், ஜலம் மேலிருந்து கீழ்விழுகையா லுண்
டாகுஞ் சப்தத்தைக் கேட்டு மருண்டு மயில்களோடு
கூடக் கூச்சலிடுகின்றன. வண்டுகள் கடம்பப்பூக்களில்
மிருந்திருக்கும் தேனைப் பருகி உடனே மதம் உண்
டாகப் பெற்று, அவை மழைஜலங்கள் பட்டு கனைந்தி

ருக்கையால் அந்தப் புஷ்பங்களை விட்டு அதன் கிளைகளில் தொங்கியிருந்து அகத மதத்தை மெல்லமெல்ல வீசின்றன. நெருப்பில் பற்றிக் கருகிய பொடியாயிருக்கும் உமிக்குஷியல்போல் கறுத்து மிகவும் ரஸம் நிரம்பிய பழங்களால் நிறைந்திருக்கும் காவற் கிளைகள் வண்டுகளால் சூழப்பட்டவைபோல் ப்ரகாசிக்கின்றன. மேகங்கள் மின னல்களால் அலங்கரிக்கப்பட்டு மிகவும் கம்பீரமான பெருந் த்வனியுடன் கர்ஜிப்பதனல் டக்கயங்களோடுகூடி மிகவும் பெருங் கர்ஜனை செய்கின்றவைகளும் யுத்தத்தில் முயன்றவைகளுமாகிய மத்தகஜம்போல் பரகாசிக்கின் றன. மலையைச் சார்ந்த அடவிக்குப் போவதாகப் புறப் பட்டு வழியைப்பற்றி நடந்து செல்கின்றமதத்தகஜம் மேக த்தினை கர்ஜனையைக் கேட்டு மற்றொரு யானையின த்வ னியாக ப்ரமித்து யுத்தஞ்செய்ய விரும்பிப் பின்னே திரும்பியது. வன ப்ரதேசங்கள் ஓரிடத்தில் வண்டிக்கூட் டங்களால் சிறந்த லங்கித முடையனபோலவும், ஓரிடத் தில் மயில்களால் மனோஹரமாக நர்த்தனஞ் செய்வன போலவும், ஓரிடத்தில் மேலான பானைகளால மதம்பெரு கப் பெற்று மதித்தனவைபோலவுமேதோற்றி இரவனம் பல விஷயங்களுக் கிடமாகி விளங்குகின்றன. வனபூமி, கடம் பப்பூக்களும், மராமர பூக்களும், மருதம்பூகளும், வாழைப்பூக்களும் நிறைத்து சிவந்த புதிய ஜலமுடைய னவாகி மதித்த மயில்களின் கேகா சப்தங்களாலும், கர்த்தனங்களாலும் அழகாயிருக்கையால், அலங்காரத் தின் பொருட்டுப் புஷ்பங்கள் இறைக்கப் பெற்றுப் பான பாத்ரத்தின் பொருட்டான வாழைப்பூக்களின் மேலிதழ் கள் நிரம்பியதும் மதம்பிடித்து இறைச்சலிட்டுகொண்டு கர்த்தனஞ்செய்யும் புருஷர்களோடு கூடியதும் மத்யம் நிறைந்ததுமாகிய பானபூமிபோல் (கள்கடைபோல்) இரு

க்கின்றது. விசித்ர வர்ணங்கள் பொருந்தின இறகுக ளுடைய சாதகபக்ஷிகள், இதுவரையில் தாஹமுற்றி ருந்து, இப்பொழுது, வர்ஷாதிதேவதையாகிய தேவேந் த்ரன் கொடுக்கையில் ஆகாயத்தினின்று விழுந்து இலை களின் இடையில் பற்றி மிகவும் நிர்மலமாகி முத்துப் போல் விளங்கும் ஜலத்தை ஸதோஷத்துடன் தாஹந் தீரப் பருகுகின்றன. வண்டுகளின ஜுங்காரமே தந்த்ரி களின் த்வனியாகவும், தவளைகளின் த்வனியே கண்டதா ளமாகவும் மேககர்ஜனங்களே ம்ருதங்கவாத்ய த்வனி யாகவும் பெற்று விளங்குகின்ற அரண்யங்களில் ஸங்கீ தம் நடக்கிறுப்போ லிருக்கின்றது. தொங்குகின்ற தோரணைகளால ஆபரணம் அணிந்தாற்போல் விளங்கு கின்ற மயில்கள் ஓரிடத்தில் சில நர்த்தனஞ் செய்துகொ ண்டும், ஓரிடத்தில் சில கேகா சப்தங்களைச் செய்து கொண்டும், மற்றுஞ் சில மற்றோரிடத்தில வருக்ஷங்க ளின் நுனிகளில சரீரத்தை இட்டு ஒன்றுஞ் செய்யாமல் மத்யஸ்தமாக வெறுமனேயும் இருப்பதைக் கண்டால், சில நர்த்தனஞ் செய்பவரும் சில பாடுவோர்களும் சில் கேட்போர்களுமாகப் புலப்படுகையால் அடவிகளில் ஸங் கீதஸபை நடப்பதுபோ லிருக்கின்றது. பலவகைப்பட்ட உருவங்களும் வர்ணங்களும் த்வனிகளுமுடைய தவளை கள், மேகங்களின் கர்ஜனங்களைக் கேட்டு, வெகுகாலம் ஸமஸ்த வ்யாபாரங்களையும் அடக்கிக்கொண்டிருந்த நித் ரையைத் துறந்து விழித்துக் கொண்டு புதிய மழையின் தாரைகளால் அடிக்கப்பட்டு இறைச்சலிடுகின்றன. மன் மதவிகாரம் மிகுந்திருக்கப்பெற்ற யுவதிகள் யௌவன மதத்தினால் பெரியோர்களையும் பரிஜனங்களையும்பொருள் செய்யாமல் கர்வமுற்றுத் தமது உயர்வுற்ற கொங்கை கள் மேன்மேலும் உயர்ந்து விளங்கப்பெற்றுப் புதியமண

ப்பெண்களுக்குரியதாகிய லஜ்ஜையையுங்கூடக் கடந்து கல்ல பழம்முதலிய உபஹாரங்களையும் சந்தனகற்பூர குஸுமதாம்பூலம் முதலிய போக த்ரவ்யங்களையும் கொண்டி தமது காதலரிடம் போவதுபோல், நதிகளும் ஜலப்ரவாஹம் மிகவும் திரம்பிவருகையில் அதனல் மேற்கிளம்பின சக்ரவாகங்களோடுகூடி, வெள்ளத்தின் வேகத்தினல் உடைந்த கரைகளைக் கடந்து மிக்க உத்ஸாஹமுற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டுவரும் பழம்முதலிய உபஹாரங்களும் புஷ்பம்முதலிய போக த்ரவ்யங்களும் விளங்கப்பெற்றுத் தமது பர்த்தாவாகிய ஸமுத்ரத்தைதக் கிட்டுகின்றன. காட்டுத்தீயால் கொளுத்தபட்டுக் கறுத்திருக்கின்ற பர்வதங்களின் அடிபாகத்தில் ஒன்றோடொன்று கலந்து காட்டுத்தீயால கொளுத்தப்பட்டுக் கறுத்த வேறு சில பர்வதங்கள் விளங்குவதுபோல, கறுத்தமேகங்களில் படிந்து புதிய ஜலம் நிரம்பின கறுத்தமேகங்கள் ப்ரகாசிக்கின்றன. மயிலகள் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து கே கா என்று உரக்கக் குலாவப்பெற்றவைகளும் பட்டுப்பூச்சிகள் உலாவப் பெற்றவைகளும் கடம்பபூக்களினவாஸனையும் மருதம்பூக்களின் மணமும அமைந்து ரமணீயங்களுமா யிருக்கின்ற வனதரங்களில் யானைகள் ஸஞ்சரிக்கின்றன. தாமரைகளில் புதிய ஜலதாரைகள் விழுதலால் தாதுக்கள் உதிர்ந்திருக்கையில் வண்டுகள் அவைகளை வேகமாகத் துறந்து வர்ஷாகாலத்தில் கடம்பப்பூக்கள் புதிதாகப் புஷ்பித்துத் தாதுக்களோடு விளக்கமுற் றிருக்கையால் ஸந்தோஷத்துடன் அவைகளை அடைகின்றன. யானைகள் மதங்கொண்டன எருதுகள் ஸந்தோஷமுற்று விளையாடுகின்றன. அரண்யங்களில் ஸிம்ஹங்கள் மிகவும் இளைப்புற்று விளங்காதிருக்கின்றன. சிறந்த பர்வதங்கள் தளிர் புஷ்பம்முதலிய

வற்றூல் மறைஹாமமா யிருக்கின்றன. ராஜாக்கள் யுத்த யாத்ரையைத் தவிர்த்து அசையாதிருக்கின்றனர். தேவேந்த்ரன் மேகங்களோடு விளையாடுகின்றனன். மேகங்கள் ஆகாயத்திற் சேர்ந்து, ஸமுத்ரகோஷம் தோல்வியடையும்படி மிகக் கம்பீரமான கர்ஜனங்களுடன் பெரிய ஜலப்ரவாஹம் உண்டாகும்படி மழைகளைப்பெய்து, நதிகளும், தடாகங்களும், தாமரையோடைகளும் கடைவாவிகளும் பூமிமுழுவதும் ஜலம்நிறைந்து கோடிபெருகும் படிக்குச் செய்தன. மழை இடைவீடின்றி மிக்க வேகத்துடன் பெய்கின்றது. காற்று, பெருங் கோஷத்துடன் வீசுகின்றது. நதிகள் ஜலப்ரவாஹம் பூர்ணமாயிருக்கப் பெற்றுக் கரைகளை உடைத்துக்கொண்டு வழிகளைத் தவறிப் பெரிய வேகத்துடன் பாய்கின்றன. மனிதர்கள் நீர் நிறைந்த குடங்களைக் கொண்டு அபிஷேகஞ் செய்கையில் ராஜாக்கள் தமது ராஜ்ய லக்ஷ்மியைக் காண்பிப்பதுபோல் பர்வத ப்ரதேஷடங்கள், தேவேந்த்ரன் தூண்டுகையில் காற்றினல் ஏவுண்டு விளங்கும் மேகங்க ளென்கிற ஜலகும்பங்களால் அபிஷேகஞ் செய்யப்பட்டுத் தமது நிர்மலமான உருவத்தைக் காட்டுகின்றன. ஆகாயம் மேகங்களால் சூழப்பட்டிருக்கின்றது. ஆகையால் இரவில் நக்ஷத்ரங்களும் பகலில் ஸூர்யனும் புலப்படவில்லை. பூமி முழுவதும் புதிய ஜலப்ரவாஹங்கள் நிறைந்திருக்கின்றன. இருட்டு, பூச்சுப் பூசினற்போல் மூடிக்கொண் டிருக்கையால் திசைகள் தோற்றுதிருக்கின்றன. மிகவும் பெரியன வாகிய பர்வதசிகரங்கள் வர்ஷதாரைகளால் சுத்தஞ்செய்யப்பட்டு மிகவும் பருத்து அகன்று வெளுத்த மலையருவிகள் கீழ்மிழப்பெற்று, முத்துமாலைகள் தொங்கப்பெற்றவைபோல் ப்ரகாசிக்கின்றன. மேலான பர்வதங்களில் பெரிய அருவிகள் அப்பர்வதங்களி லுள்ள பெருங் கற்களில்

தடைபட்டுத் தமது வேகம் குறையப்பெற்று மயில்கள் மதுரமாகக் கூவுகின்ற குஹைகளில் சிதறி விழும்பொழுது முத்துமாலைகள் அறுந்து இறைந்தாற்போல் இருக்கின்றன. பர்வதங்களில் மிக்க வேகத்துடன் பெருகிவருகின்ற அகன்ற அருவிகள் சிகரங்களின் ஸமீப ப்ரதேசங்களில பரவி அவைகளைச் சுத்தஞ் செய்துகொண்டு முக்தாஹாரங்கள்போல் புலப்பட்டுக் கீழ்விழுபவையாகி அங்குள்ள பெரிய குஹைகளின் கடப்ரதேசங்களில் நிலகின்றிருக்கின்றன. ஆகாயத்தி னின்று திசைகளில் சிதறும்படி முழுவதும் வீழ்கின்ற ஜலதாரைகள் ஸுரத ஸமயங்களில் வேகத்தினுல் அறுந்து சிதறின தேவதா ஸ்த்ரீகளின் ஹாரங்களி னினறு நழுவின முத்துக்களோவென் னும்படி விளங்குகின்றன. பக்ஷிகள் கூடுகளில் சேருகையாலும் தாமரைகள் மூடிகொள்கையாலும் ஜாதிப்பூ மலர்தலாலும் ஸந்தியன அஸ்தமித்தா னென்று தெரிகின்றதே யன்றி மேகம் சூழ்ந்திருக்கையால் ஸந்தியன் அஸ்தமிப்பதை நேரே பார்க்க முடியாதிருக்கின்றது. ராஜாக்களின யுத்தயாத்ரைகள் நின்றிருக்கின்றன. யுத்தத்திற்காகப் புறப்பட்டு முனனேகடந்த ஸைனயும் திருமபிவிட்டது. ஜலப்ரவாஹம் தடுக்கையால் யுத்தஞ்செய்ய வழியிலலாமையைப் பற்றி வைரங்கள் சாந்தமாயிருக்கின்றன. முழுவதும் ஜலம் நிறைந்திருக்கையால் இதுவழி என்றும் இது வழி அன்றென்றும் தெரியாமல் எல்லாம் ஸமமாகவே இருக்கின்றன. புரட்டாசி மாதத்தில் ஸ்வதமோ தவிரும்பும் ஸாமவேதிப்ராஹ்மணர்களின ஹவிர்தானக்ஷேத்ரங்கூடிய அத்யயனாரம்பஸமயம் இதோ வந்திருகின்றது. கோஸலதேசாதிபதியாகிய பரதன், வர்ஷாகாலமாகிய நான்குமாஸங்களிலும் வீட்டிற்கு வேண்டிய ஸாமக்ரிகளும் மற்ற வஸ்துக்களும் ஸம்பாதிப்பது கஷ்ட

மாகையால் ஆடிமாதத்துப் பூர்ணிமைக்கு முன்னமே வீட்டிற்கு வேண்டிய ஸாமக்ரிக ளெல்லாவற்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டிய கார்யங்களை யெல்லாம் தீர்த்து மற்ற வஸ்துக்களையும் தனஸமூஹத்தையும் ஸித்தப்படுத்திக்கொண்டு அந்த ஆடிமாதத்துப் பூர்ணிமையை வரத்திற்கு அங்கமாகக் கொண்டிருப்பான. இது நிச்சயம். நான் எங்கேனும் போய்வரும்பொழுது என்னைப் பார்த்து அயோத்யாபுரத்தில் வஸிக்கும் ஜனங்கள் ஆநந்தத்தினல் செய்யும் கோலாஹலம்போல, இப்பொழுது மழையினல் முழுவதும் ஜலம் நிறைந்த ஸரயூநதி ப்ரவாஹத்தின் வேகம் மேன்மேலென வளர்ந்துவரும். இது நிச்சயம். ஸுக்ரீவன் பகைவனை வென்று பார்யையைப் பெற்றுப் பெரிய ராஜ்யத்தைக் கைப்பற்றினதனையால் உபயோகத்திற்கு மிகவும் உரியதாகிய இந்த வர்ஷாகாலத்தில் ஸகல ஸுகங்களையும் அனுபவிக்கின்றனன். லக்ஷ்மண! நானே, பார்யையைப் பறிகொடுத்துப் பெரிய ராஜ்யத்தையும் போக்கடித்துக்கொண்டு இன்னம் சத்ருவை ஜயிக்காதிருக்கிறேனதனையால் ஜலத்தில் நனைந்த ஆற்றின்கரைபோல் அலைகின்றனன். என்சோகமோ மிகவும் விஸ்தீர்ணமா யிருக்கின்றது. வர்ஷாகாலம் மிகவும் கடக்கமுடியாதிருக்கின்றது. ராவணனே பெரிய பகைவன். இம்மூன்றையும் கடப்பது மிகவும் அஸாத்யமென்று என்னக்குத் தோற்றுகின்றது. இதற்காலத்தில் ராஜாக்களுக்கு யுத்தயாத்ரை செய்யாமையே உரியது. எனென்னில் வழிகள்கடக்க மிகவும் அஸாத்யமா யிருக்கின்றன. இவ்விரண்டையும் பார்த்தே, நான், ஸுக்ரீவன் இப்பொழுதே ராவணனைக்கொன்று ஸீதையைக் கொண்டுவரும் பொருட்டு ப்ரயத்னஞ் செய்யவேண்டுமென்று எவ்வளவு வணங்கி ப்ரார்த்தித்தபோதிலும் கொஞ்சமாயினும் ஸரி

யன்றென்று ஒன்றுஞ் சொல்லாமலே இருந்தனன். இவ் வளவேயன்றி ஸுக்ரீவன் இதுவரையில் மிகவும் கஷ்டப் பட்டு வெகுகாலத்திற்குப் பின்பு இப்பொழுது பார்யை யைப் பெற்றனன். நம் கார்யமோ மிகவும் பெரியது. ஸ்வல் பப்ரயத்னத்தினாலாவது ஸ்வல்பகாலத்தினாலாவது ஸாதி க்கக்கூடிய தன்று. ஆகையால், 'அவனை முன்னம் நம் கார்யம் செய்வாயாக' என்று மொழிய விரும்பவில்லை. ஸுக்ரீவன் வர்ஷாகாலமெல்லாம் இளைப்பாறி, சரத்கா லம் வருவதைக் கண்டு தானே நான்செய்த உபகாரத் தைத் தெரிந்துகொண்டு நன்றியுடன் கடப்பான். இதற்கு ஸந்தேஹம் இல்லை. சுபலக்ஷண முடையவனே! அதற்குக் காரணத்தைப்பற்றி நான் சரத்காலம் வருவதை எதிர்பார்த்துக்கொண்டு, திசைகளும் தெளிந்து ஸுக்ரீ வனும் அருள்புரியும் வரையில் காத்திருக்கின்றனன். வீரனேயிருக்கும் புருஷன தனக்கு உபகாரஞ்செய்தவர்க்கு ப்ரத்யுபகாரஞ் செய்யாமல் தவறமாட்டான். அங்ஙனம் தனக்கு கடத்தின உபகாரத்தை மறந்து ப்ரத்யுபகாரஞ் செய்யாஞையின ஸாத்விகராகிய ஸத்புருஷர்கள் மனம் நோகப்பெறுவார்கள். ஆகையால் நம்மைப்பற்றிச்செய் யாமற் போயினும் ஸத்புருஷர் மனம் நோகுமே யென் றுயினும் நமக்குத் தவறுமல் ப்ரத்யுபகாரம் செய்வான்' என்றனன். அனந்தரம் லக்ஷ்மணன் ராமன் சொனனது கேட்டு அஞ்சலி செய்து அவனது வார்த்தைகளைக் கௌரவித்து முன்னம் செய்யவேண்டிய கார்யங்களைக் குறித்து ஆலோசித்துச் சுபமாகிய தனது அபிப்ராயீத் தைத் தெளிவாயிருக்கும்படி இனிய காட்சியுடைய ராம னைப் பார்த்துச் சொல்லத் தொடங்கி 'நரேந்த்ரனே! வானரேந்த்ரனாகிய ஸுக்ரீவன் சொன்ன ப்ரகாரம் தவ றாமல் உன் விருப்பத்தை யெல்லாம் சீக்ரமாகவே செய்து

மூடிப்பான். ஆகையால் பகைவரை அடக்கி அழிப்ப தற்கு வேண்டிய தைர்யத்தை யேற்றுக்கொண்டு சரத்கா லம் வரும் வரையில் இந்த வர்ஷாகாலத்தைக் கொஞ்சம் பொறுத்திருப்பாயாக' என்றனன். இருபத் தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஹனுமான் ராமகாயத்தைமறந்த ஸுக்ரீ வனுக்குத தெரிவித்தலும், ஸுக்ரீவன் நல னைக்கொண்டு ஸகல ஸைன்யங்களையும் வர வழைக்கும்படி ஆஜ்ஞாபித்தலும். }

ஆகாயம் மேகங்களும் மின்னல்களும் தோலையப் பெற்று நிர்மலமாகி ஸாரஸபக்ஷிகள் த்வனி செய்யவும் நிலவு பூச்சுப் பூசினாற்போல் அழகாயிருக்கவும் பெற்று மிகவும் ப்ரகாசித்தது. ஸுக்ரீவன் தன் சத்ருவாகிய வாலியைக் கொல்லுங் கார்யத்தை முடித்துக்கொண்டு ராஜ்ய ஸித்தியைப்பெற்று ரத்னவஸ்த்ராபரணாதிகளான ஸமஸ்த போகவஸ்துக்களும் ஸம்ருத்தமா யிருக்கவும் பெற்று, ராஜ்யம் பெற்றபின்பு இங்ஙனமிங்ஙனம் செய்ய வேண்டுமென்று தான் ஸங்கல்பித்துக் கொண்டிருந்த மனோரதங்க ளெல்லாவற்றையும் தன் ப்ராணநாயகியா கிய ருமையையும் தான் மனத்தில் மிகவும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த தாரையையும் பெற்றுக் காமுகர் வழியில் இழிந்து எல்லாவற்றையும் விட்டுக் காமபுருஷார்த்தத்தி லேயே மனத்தை மிகவும் நிலைநிறுத்திக்கொண்டு, தர் மத்தையாவது அர்த்தத்தையாவது ஸம்பாதிப்பதில் விருப்பம் உண்டாகப் பெறாமல் மனத் தெளிவினறி எப் பொழுதும் ஸ்த்ரீகளிடத்தில் கால் தாழப்பெற் றிருந்த னன். இங்ஙனம் தனங்களைக் கைப்பற்றிக்கொண்டு மனத் தில் கவலையேதுமில்லாமல் தேவேந்த்ரன் நந்தவனத்தில் அப்ஸரஸ்த்ரீகளின் கூட்டங்களோடு விளையாடுவதுபோல்

இரவும் பகலும் ஸ்த்ரீலோலனுகி விஷயாடிக்கொண்டு ராஜகார்யங்களை மந்த்ரிகள்வசம் செய்து மந்த்ரிகள்செய்தனைச் சிறிதும் விசாரியாமல், தான் ரக்ஷியாதிருக்கிற ராஜ்யம் நன்றுயிருக்குமோ இராதோ எனனும் சங்கையும் உண்டாகப் பெறுதிருந்தனன். ஹனுமான், அங்ஙனம் ஆகாயமெங்கும் மேகங்களின்றி நிர்மலமாயிருப்பதையும் ஆனதுபற்றியே ஸீதைனைக் கூட்டவேண்டுங்கால மென்பதையும் கண்டு, ஸுக்ரீவன அவ்வண்ணம் காம வ்யாபாரத்தில் மனந தாழப்பெற்று ஸ்வாமி கார்யத்தை மறந்திருப்பதையுங் கண்டனன். அவன அந்தந்தக் கார்யங்களின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவன்; எந்தக் காலத்தில் எந்தத் தர்மத்தைத் தவறாமல் செய்யவேண்டுமோ அந்த விசேஷங்களை யெல்லாம் நன்குணர்ந்தவன்; அவைகளுக்குரிய வயவஹாரங்களில் வேண்டிய ஸாமர்த்ய முடையவன்; ஆகையால், அப்பொழுது செய்யவேண்டியது இன்னதென்று நிச்சயித்துக்கொண்டு வாக்ய ஸ்வரூபமுணர்ந்த வானரர் தலைவனுகிய ஸுக்ரீவனிடஞ் சென்று மதுரங்களும் யுக்தி அமைந்தவைகளும் மனக களிப்பைக் கொடுப்பவைகளுமாகிய வாக்யங்களால அவனை மனந தெளியச் செய்துகொண்டு, அவனுக்குத் தனனிடத்தில் ஸ்னேஹமும் ப்ரீதியும் உண்டென்கிற நம்பிக்கையால் தன்னை ஆப்தனுகினைத்துத் தன் வார்த்தையில் நம்பிக்கை வைப்பா னெனனும் நிச்சயத்தினால் அவனுக்கு ஸுகத்தை விளைப்பதும் யதார்த்தமும் நீதி அமைந்ததும் நல்வார்த்தை பொருந்தியதும் தர்மார்த்தங்கள் நிறைந்ததும் நயாயம் ஸம்ருத்தமா யிருக்கப்பெற்றதுமாகிய வாக்யத்தைச் சொல்லத் தொடங்கி 'ராஜ்யம் பெற்றனை. கீர்த்தியையும் அடைந்தனை. குலக்ரமத்தில் வந்த ராஜ்யஸம்பத்தை எதிரில்

லாமற் செய்து வளர்த்துக் கொண்டனை. இனி நண்பர் களைப் பாராட்டி அவர்களது கார்யங்களைச் செய்து முடிப்பது மிகுந்திருக்கின்றது. அதை நீ தப்பாமல் செய்ய வேண்டும். எவன் மித்ரர்களைக் கைப்பற்றவேண்டுங் காலத்தைக் குறிப்பறிந்து மித்ரர்களிடத்தில் அவர்க்கு நம் பிக்கை உண்டாகும்படி பரதக்ரஹி எப்பொழுதும் நன்றாக கடந்துகொள்வானே, அவனுடைய ராஜ்யமும் கீர்த்தியும் ப்ரதாபமும் வ்ருத்தியடையும். ராஜனே! எவனுக்குப் பொக்கசமும் ஸைன்யமும் நண்பர்களும் தன் ப்ரபுத்வமும் ஒன்றுக்கொன்று அனுகூலங்களாகி ஒன்றுங் குறையாமல் கூடியிருக்குமோ, அவன் மஹாராஜ்யத்திற்கு அதிபதியாவான். அந்தக் காரணத்தைப் பற்றியும், மீ ஸதாசாரமுடையவனும் ஸன்மார்க்கத்தில கடப்பவனுமாயிருப்பது பற்றியும் ப்ரதிஜ்ஞைசெய்தப்ரகாரம் உனது மித்ரன் கார்யத்தை கடத்துவாயாக. எவன் தனக்குப் போக ஸாதனங்களாகிய கார்யங்களை யெல்லாம் விட்டு உத்ஸாஹத்துடன் ஆதரம் விளங்குமாறு மித்ரகார்யங்களையே இடைவிடாமல் செய்துகொண் டிருப்பானே, அப்படிப்பட்டவன் தன் கார்யங்களை உபேக்ஷித்திருப்பினும் அவனுக்கு அனர்த்தங்கள் ஸம்பவியா. எவன் மித்ரகார்யங்களை அதனதனுக்குத் தகுந்த காலங்களிற் செய்யாமல் காலம் கடந்த பின்பு செய்வானே, அவன் எவ்வளவு பெரிய கார்யங்களைச் செய்யினும் மித்ரர்களின் ப்ரயோஜனம் நிறைவேறு தாகையால் செய்யாதவனே யாவான். சத்ருக்களை யழிப்பவனே! வீரா! நாம் இப்பொழுது மித்ரனுடைய ராமனது கார்யத்தைச் செய்யவேண்டும். அது ஸீதையைத் தேடவேண்டியதே யாகையால் இப்பொழுது ஸீதையைத் தேடிக்க வேண்டும். வீரனே! சத்ருக்களை யழிப்பவனே! அவஶ்யம் செய்யவேண்டிய

தாகய இந்த மித்ரகார்யம் இப்பொழுது காலங் கடந்த தாயிற்று. ராஜனே! ப்ராஜ்ஞனாகிய ராமன் ப்ரதிஜ்ஞை செய்தகாலம் தெரிந்தவனாயினும் ஸீதையைத் தேடிக் கொண்டு வருவதற்கு மிகவும் த்வரைப்படுமவனாயினும் உன் மனத்தையே அனுஸரித்துப்போவானன்றிக் காலம் கடந்ததென்று உனக்குச் சொல்லமாட்டான். ராமன் கேவலனன்று; பெரிய குலத்திற் பிறந்து அதை வளரச்செய்யுங் குலதீபகன்; நமக்கு எப்போதும் ஆப்தனாயிருப்பவன; மேலும் அளவிறந்த மஹிமை யுடையவன். நீயும் குணங்களில் நிகரற்றவன். வானரர் தலைவனே! நீ அந்த ராமனது கார்யத்தை இப்பொழுது தவறுமல் செய்யவேண்டும். அவன முன்னம் உன் கார்யத்தைச் செய்தனன். ஆகையால் வானர வீரர்களைக் குறித்து ஸீதையைத் தேடும்படி ஆஜ்ஞைசெய்வாயாக. 'இப்பொழுதே காலங் கடந்துபோயிற்றே' என்கிறாயோ? ராமன் தூண்டுவதற்கு முன்னமே நாம் கார்யஞ்செய்வோமாயின் காலாதிக்ரமதோஷம் அவ்வளவாக நமக்கு விளையாது. அவன் தூண்டினபின்பு கார்யஞ் செய்தோமாயின் காலங் கடந்தவராவோம். வானரேந்த்ரனே! நீ உனக்கு உபகாரஞ் செய்யாதவனுடைய கார்யத்தையுஞ் செய்பவன. இனி உனக்கு ராஜ்யத்தையும் தனத்தையும் கொடுத்து மஹோபகாரஞ் செய்த ராமனது கார்யத்தைச் செய்வானென்பது சொல்ல வேண்டுமோ? குரங்குகளும் கரடிகளும் திரள்திரளாகப் பணித்திருக்கப்பெற்று அவர்களுக்குத் தலைவனையிருப்பவனே! நீ ராமகார்யத்தை நிறைவேற்றுவதற்கு வல்லவனும் பராக்ரமமுடையவனுமாயிருந்தும், அவனுக்குப்ரீதியை விளைக்கும்பொருட்டு ஸீதையைத் தேடும்படி வானரஸைன்யங்களுக்கு ஆஜ்ஞைசெய்யாமல் ஏன் வெறுமனேயிருக்கின்றனை? ராமன் தேவர

ஸுரர்களையும் மஹோரகர்களையும் பாணங்களால் தனக்கு உட்படும்படி செய்யவல்லவ னல்லவா? ஆனால் நீ செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுவா யென்று எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறு னிவ்வளவே யன்றி வேறில்லை. ராமன் தன் ப்ராணன்களை விடுவதற்கும் பின்வாங்காமல் சங்கை யேயின்றி வாலியைவதித்து உனக்கு ப்ரியஞ்செய்தனன். அப்படிப்பட்ட ராமனது பத்னியாகிய ஸீதையைப் பூமியி லும் ஆகாயத்திலுங்கூடத் தேடவேண்டும். தேவதைக ளாயினும் கந்தர்வர்களாயினும் யக்ஷர்களாயினும் ராம னுக்குப்பயத்தை விளைவிக்கவல்லரல்லர். இனி இந்த அற் பராக்ஷஸர்கள் அவனுக்கு எவ்வளவு? வானராதனே! அந்தக் காரணத்தைப் பற்றி அங்ஙனம் அளவிடவொண் ணாத சக்தியுடையோனும் முன்பு உனக்கு ப்ரியஞ் செய்த வனுமாகிய ராமனுக்கு நீ எல்லாவிதத்திலும் ஸஹாயஞ் விளைப்பது யுக்தமா யிருக்கின்றது. கபிராஜனே! நீ ஆஜ் ஞைசெய்வாயாயின், எங்களில் எவனாயினும் பாதாளத்தி லாவது பூமியிலாவது ஜலத்திலாவது மேல் ஆகாயத்திலா வது எதிர்நின்றித்திரியவல்லவனே. எப்படிப்பட்டவர்க்கும் எதிரிடக்கூடாதவராகி உனக்கு மிகவும் சொன்னபடி கே ட்பவராகையால பாபமற்றவருமான வானரர்கள் கோடி கோடியாக உன் வசத்தில் இருக்கின்றனர். உனக்காக எவன் என் செய்யவேண்டுமோ, எந்தெந்தக் கார்யத்தில் முயற்சி செய்யவேண்டுமோ, அதை ஆஜ்ஞை செய்வா யாக' என்றனன். அங்ஙனம் ஹனுமான் காலத்தையறி ந்து நன்றுகச் சொனன ஹிதவசனத்தைதக் கேட்டு பலம் மிகுந்திருக்கப் பெற்ற ஸுக்ரீவன் மித்ரகார்யம் செய்ய வேண்டுமென்னுஞ் சிறந்த நினைவுடையவனுயினன். அவ ன், தன் மனத்திற்கு மிகவும் ப்ரியமாயிருப்பவனும் எப் பொழுதும் தன ஸஹாயமுதலியவற்றின் விஷயமாக வே

ண்டிய ப்ரயத்னங்களைச் செய்துகொண்டிருப்பவனுமாகிய நலீனப்பார்த்ரு ஸமஸ்த திசைகளினின்றும் ஸைன்யங்களெல்லாவற்றையும் வரவழைத்துச் சேர்க்கும்படி ஆஜ்ஞாபிப்பவனுகி 'ஸைனபதி! உன் கீழிருக்கும் ஸைநாயகர்களுக்கு என் ஸைனியெல்லாவற்றையும் யூதபாலர்களான வர ணர வீரர்களனைவரையும் இவ்விடத்திற்குச் சீக்ரம் வந்து சேரும்படி ஆஜ்ஞையிடுவாயாக. ப்ரயத்னஞ் செய்பவராகிச் சீக்ரமாக நடப்பவர்களும் ஸைனியின் நுனியைப் பாதுகாப்பவர்களுமான வானர வீரர்களும் ஆங்காங்குள்ள ஸைனிகளையும் என் கட்டளையின்படி சீக்ரத்தில் வரவழைப்பார்களாக. ஸமீபப்ரதேசங்களிலுள்ள ஸைனியை நீயே பார்த்து வரவழைப்பாயாக. எந்த வானரன் இதுமுதலாகப் பதினைந்து ராத்ரிகளுக்குள் இவ்விடம் வந்து சேராதிருப்பானே, அவனுக்கு மரணதமான தண்டனை விதிக்கப்படும். இதற்கு ஸந்தேஹமில்லை. என்கட்டளைக்கு மாறுபாடில்லை. ஆகையால் நீ அந்த ஆஜ்ஞையை நிறைவேற்ற முயன்று அங்கதனுக்கூடமற்ற வானரர்களுக்கும் வயது சென்றவனுகிய ஜாம்பவான் முதலியவர்க்கும் அவரவரிடஞ் சென்று நான் ஆஜ்ஞாபித்த ப்ரகாரந் தெரிவிப்பாயாக' என்று இங்ஙனம் வீர்யம் மிகுந்திருக்கப் பெற்றவனுகிய ஸுக்ரீவன் வ்யவஸ்தை ஏற்படுத்தி மீளவும் அந்தப்புரத்திற்குப் போயினன். இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

சரத்ருது வருவதும், ஸுக்ரீவன் ப்ரயத்னஞ் செய்யாமைக்கு ராமன் கோபித்தலும்.

ஸுக்ரீவன் கிஷ்கிந்தையுள் ப்ரவேசித்தனன். ராமன் வர்ஷகாலம் முழுவதும் மிகவும் மன்மத பாதையால்

பீடிக்கப்பட்டவனைக் கடத்தி, அனந்தரம் மேகங்களும் மெல்லமெல்லத் தொலைந்து போகையில் நிர்மலமான ஆகாயத்தையும், மேகத்தின் மறைவின்றி ஸ்வச்சமாக விளங்கும் சந்த்ரமண்டலத்தையும், சரத்ருதுவைப்பற்றி நிலவென்னும் பூச்சூப்பூசிக்கொண்டாற்போல் ப்ரகாசிக்கின்ற ராத்ரியையும் கண்டு, ஸீதை காணுதிருப்பதையும் ஸுக்ரீவன் மன்மத க்ரீடைகளில் கால் தாழ்ந்திருப்பதையும் ஸங்கேதம் பண்ணிக்கொண்ட காலம் கடந்து போனதையும் நினைத்து முன்பைவிட மிகவும் துக்கமுற்றவனாகி மூர்ச்சையடைந்தனன். புத்திமானாகிய ராமன் பிறகு சில நேரங் கழிந்து ப்ரஜ்ஞை தெளியப்பெற்று ஸீதை மனத்திலேயே இருப்பினும் அப்பொழுது அவளைக்குறித்து இவ்வண்ணம் சிந்திக்கத் தொடங்கினன். ராமன் பொன்மயமான கைகாதுக்களால் விளங்குகின்ற பர்வத சிகரத்தில் உட்கார்ந்து, சரத்காலத்தில் நிர்மலமாயிருக்கின்ற ஆகாயத்தைக் கண்டு மனத்தில் ப்ராணநாயகியை நினைத்துக்கொண்டனன். ஆகாயம் மேகங்களும் மின்னல்களும் தொலையப்பெற்று நிர்மலமாகி ஸாரஸப்பறவைகளின் சப்தங்களால மிகவும் அழகாயிருக்கக்கண்ட ராமன மனவருத்தம் மேலெழுந்த உணர்ச்சிகளுடன் புலம்பத் தொடங்கி 'முன்னம் ஆஸ்ரமத்தில் ஸாரஸப்பறவைபோல் இனிய ஸ்வரமுடையளாயிருக்கும் என் ப்ராணநாயகி மனோஹரமான ஸாரஸப் பறவைகளின் த்வனிகளைக் கேட்டு மனக்களிப்புற்றிருந்து, இப்பொழுது ராக்ஷஸர்களின் கொடிய சிந்தனைகளில் அகப்பட்டு எங்ஙனம் க்ரீடித்திருப்பாள்? என்னன்பு நாயகி அந்த இளம்பருவமுடையவள், பொன் புஷ்பங்கள்போல் புஷ்பித்திருக்கும் நிர்மலமான வேங்கையின் புஷ்பங்களைப் பார்த்து மன்மத விகாரங் கொண்டு என்னை நாற்புறமும் பார்த்தும் காணுமல் எங்ஙனம் மன

க்களிப்புறுவாள்? எந்த அவயவத்திலும் தோஷஞ் சிறி
துமில்லாத அந்த ஸுந்தரி அந்த இன்மொழியாள் மூவ்வ
பு கலஹம்ஸங்களின் ஸ்வரத்தைக் கேட்டுக் கண்விழித்
துக்கொள்வாளே! அவள் இப்பொழுது எப்படி விழித்
துக் கொள்கிறாளோ? தன்னருகில் கூடத் திரிகின்ற சக்
ரவாகப் பறவைகளின் கலகல சப்தத்தைக் கேட்டு அத
னல் மனவிகாரமுற்றுப் பொறுக்கமுடியாமல் வெண்தாம
ரை போன்ற தன் விசாலநேத்ரங்களை விழித்து விலாஸத்
துடன் தான் வரும் வழிகளையெல்லாம் பார்த்துக் கொண்
டிருப்பாளே! அவள் இப்பொழுது எங்ஙனம் ப்ராணன்
களை வைத்துக்கொண்டிருப்பாள்? இப்பொழுது இளமா
ன் கண்போன்ற கண்களையுடைய அந்த ஸீதையில்லாமை
யால் தாமரையோடைகளிலும் நதிகளிலும் கடைவாவிக
ளிலும் பெருங் கானகங்களிலும் சிறிய வனங்களிலும் தி
ரிந்துகொண்டிருப்பினும் எனக்கு மனக்களிப்புண்டாகவி
ல்லை. சரத்ருதுவில் காமவிகாரத்தை வளரச் செய்கின்ற
உபகரணங்களால் காமுகர்களுக்கு மனமயக்கத்தை விளை
க்கும் கருவிகளெல்லாம் பரிபூர்ணமாயிருக்கப்பெற்ற மன்
மதன், ஸீதை என்னைப் பிரிந்திருக்கிறாளென்றும் மிக
வும் மெல்லியற்கையுடையவளென்றும் தயை செய்து அம்
மடந்தையர் மணியை வெகுதூரம் பாணங்கள் புகுமள
வும் காட்டிப் பாதியாதிருப்பானே? ஏது? பாதித்தே தீரு
வான்' என்று புலம்பினன். சாதகபக்ஷி ஜலத்திற்காகத்
தேவேந்த்ரனைக் குறித்துப் புலம்புவது போல், புருஷதி
லகனுகிய அந்த ராஜகுமாரன் இங்ஙனம் பலவாருக ஸீ
தையைக் குறித்துப் புலம்பினன். அனந்தரம் கைங்கர்ய
ரூஷமவிலாஸம் பொருந்திய லக்ஷ்மணன் பழங்களைக்
கொண்டு வரும் பொருட்டு ரமணீயங்களான மலைச்சார
களில் சென்று குறுக்கு வழிகளில் ஸந்துபொந்துகளை

ல்லாந் திரிந்து திரிந்து திரும்பி வந்து தன் அண்ணனு கிய ராமனைக் கண்டனன். லக்ஷ்மணன் தன்மனமுடையவ ணுகையால் அங்ஙனம் ஜனஸஞ்சார மில்லாத வனப்பிதே சத்தில் தனியனுகிப் பொறுக்க முடியாத கிந்தை மேலெ ழுப்பெற்று மெய்ம்மறந் திருக்கின்ற ராமனைப்பார்த்து அ ண்ணனது வருத்தத்திற்குத் தானும் பரிதபித்தவனுகித் தைன்யத்துடன் அந்த ராமனை நோக்கிப் 'பெரியோனே! மனதைக் காமவிகாரத்திற் குட்படுத்துவதனல் என்ன ப்ரயோஜனம்? பௌருஷத்தை இழந்து வருந்துவதால் என்ன உபயோகம்? மேலைதைர்யத்தை இங்ஙனம் அடிக் கடி அழித்துக் கொள்கின்றனையே! உத்ஸாஹத்துடனி ருக்கவேண்டுங் காலத்தில் உத்ஸாஹத்தை இழந்திருப் பதனல் என்ன பயன் விளையும்? மனவூக்கத்துடன் உத் ஸாஹத்தை யேற்றுக்கொண்டு நடத்தவேண்டிய கார் யத்தை ஆராய்ந்து நிச்சயிக்கவேண்டுங் காலத்தில் இங் ஙனம் காமவிகாரத்திற் காளாவதும் தன் பௌருஷத்தை இழந்து வருந்துவதும் யுக்தமன்று. கம்பீரமான ப்ரதாப முடையவனே! கார்யத்தில் முயற்சியையும் கலக்கமில்லா த மனத்தையும் தைர்யமும் உபாயமும் அமைந்த காலத் தையும் ஸஹாயஞ் செய்யும் ஸுக்ரீவாதிகளின் ஸாமர்த் யத்தையும் தேவதோபஸனம் முதலிய தன் வ்யாபாரத் தையும் கார்யஸித்திக்கு ஸாதனமாகக் கொண்டு கார் யத்தை நடேற்றிக் கொள்வாயாக. வீரனே! மனுவின் வம்சத்திற்கு நாதனே! ராமா! உன்னை நாதனுகப்பெற்ற ஸீதை மற்றெருருவனல் எவ்விதத்திலும் பெறக்கூடியவ ளல்லள். சிறந்த வீரர்களால் பூஜிக்கத் தகுந்தவனே! எவனுயினும் அக்னீஜ்வாலையைக் கையால் பிடித்துக் கொளுத்தப்படாமற் போவானே!' என்றனன். அங்ங னம், பதிலுரைக்கமுடியாததும் இயற்கையாகவே ஸித்

தமாயிருப்பதும் வருங்காலத்திலும் நிகழ்காலத்திலும் ஸுகத்தை விளைப்பதும் ராஜநீதி அமைந்ததும் நல்வாழ்த்தை பொருந்தியதும் தர்மார்த்தங்கள் நிறைந்ததுமாகிய வார்த்தையைச் சொல்லின சுபலக்ஷணங்க ளுடைய வனுகிய லக்ஷ்மணனைப் பார்த்து ராமன் 'குமாரா! நீ சொன்னபடி உத்தேசித்த காரியத்தை, அதற்குத் தகுந்த தைர்யத்தை யேற்றுக்கொண்டு ஸகலேதரு மிலலாமல் கடத்தப் பார்க்கவேண்டியதே. அதற்கு மேலும் வேண்டிய உத்ஸாஹம் முதலிய க்ரியாவிசேஷங்களை அவலம்பிக்க வேண்டுவது அவஸ்யமே. இப்பொழுது நாம் முயன்றிருக்கிற துர்க்கடமான (முடிக்கரோத) காரியம் ஸீதாப்ராப்தியை விளைவித்துப் பலிக்குமா என்று ஆலோசிப்பதும் அவஸ்யமே' என்றனன. ராமன் மீளவும் காமரையிதழ்போன்ற அகன்ற கண்களை யுடைய ஸீதையை நினைத்துக்கொண்டு துக்காவேசத்திலல் முகம் வாடி வதங்கப் பெற்று லக்ஷ்மணனைப் பார்த்து, தேவேந்த்ரன பூமிக்கு வேண்டிய மழையைப் பெய்து தணியச் செய்து பயிர்களையும் பலிக்கப் பண்ணித் தான செய்ய வேண்டுங் கார்யங்கள் முடியப் பெற்று திப்சித்தனை யிருக்கின்றன. ராஜகுமாரனே! மேகங்கள் செவிகளினியதும் கம்பீரமுமாகிய த்வனியைச் செய்து கொண்டி பர்வதங்களிலுள்ள வ்ருக்ஷங்களின்மேல் ஸஞ் சரிப்பவையாகி ஜலங்களை வர்ஷித்து இளைப்புற்றவை போல் வெறுமனே இருக்கின்றன. கருநெய்தல்களின இதழ்போல் கறுத்த மேகங்கள் பத்துத்திசைகளையும் கறுப்பாகச் செய்து முழுவதும் வ்யாபித்து இப்பொழுது மதம்வாங்கின யானைகள்போல் சாந்தமா யிருக்கின்றன. கல்வியற்கை யுடையவனே! மழையைப் பெய்விக்கும் காற்றுகள் மிகவும் குளிர்ந்தவையாகிக் குடமல்லிகளுடைய

வும் மருதம்பூக்களுடையவும் வாஸனைகளால் மேனுஹ ரங்களாகி மிக்க வேகத்துடன்வீசி இப்பொழுது நின்றி ருக்கின்றன. தோஷமற்றவனே ! லக்ஷ்மண ! மேகங்க ளின் கர்ஜனைகளும் யானைகளின் கீங்காரங்களும் மயில் களின் கேகா என்னும் சப்தங்களும் மலையருவிகள் விழு தலா லுண்டாகுங் கோஷங்களும் இப்பொழுது திரு லென்று நின்றுவிட்டன. பர்வதங்கள், பெரிய மேகங் கள் சாற்புறமும் பெய்த மழை ஜலங்களால் கன்றுக அல ம்பப்பட்டு நிர்மலங்களாகி சாணுவர்ணங்களை யுடைய தாழ்வரைக ளுடையனவாகிக் கைரிகதாதுக்களா லுண் டான சாணுவித சாந்திகள் அமைந்து குங்குமம்மூத லிய பலவகைப்பட்ட வாஸனத்ரவ்யங்களைப் பூசிக்கொண் டாற்போல ப்ரகாசிக்கின்றன. புதிய புணர்ச்சிகாலங்க ளில் யுவதிகள் வெட்கத்தினால் மெல்லமெல்ல இடையின் முன்புறங்களை வெளியிடுவதுபோல், சரத்ருதுவில் நதி கள் மெல்லமெல்ல மணற்குனறுகளை வெளியிடுகின்றன. சரத்ருது தன் ஸம்ருத்தியை ஏழிலைப்பாலை மரங்களின் கிளைகளி லும் ஸர்ஜன் சந்தான் சகஷுத்ரங்கள் ஆகிய இவற்றின் சாந்திகளி லும் மேலான யானைகளின் விலா ஸங்களி லும் இங்ஙனம் மூன்று இடங்களில் பங்கிட்டுப் பாந்திருக்கின்றது. ஸர்ஜனுடைய முதல் கிரணங்கள் பட்டு மலர்ந்திருக்குந் தாமரையோடைகளில் சரத்கால குணத்தினால் மேன்மையுற்றிருக்கின்ற லக்ஷ்மி சாறுத்தும் சிவத்தும் வெளுத்தும் பலவர்ணங்கள் பொருந்தின தாம ரைப்பூக்கள் நிறைந்திருக்கையால் சித்ரவிசித்ரமான சாந் திகள் விளங்கப்பெற்று மேன்மேலும் ப்ரகாசிக்கின்றது. ஆரண்யங்களில் சாற்று, ஏழிலைப்பாலைப் பூக்களின் வா ஸனை அமையப்பெற்று, அந்த வாஸனைக்கு வண்டி னங்கள் ஜம்மென்று சானஞ்செய்துகொண்டு பின்னு

டர்ந்துவரப் பெற்று இடைவீடின்றி வீசிக்கொண்டிருக் கையால் மதித்த யானைகளுக்கு மேன்மேலும் மதம் வளர்ந்துவருகின்றது. மிதுனங்களா யிருக்கையால் ஒன்றுக் கொன்று எதிர்முகமாகக்கூடி மனக்களிப்புற்று அகன் றழகிய இறகுகளை விரித்துக்கொண்டு தாமரைத் தாதுக் களின் தூள் மேனிமுழுவதும் படியப்பெற்று விளங்கும் ஹம்ஸங்களும் சக்ரவாகங்களும் தாமரையோடைகளில் மிகவும் விருப்பமுடையவை யாகையால் பெரியகதிகளின் மணற்குன்றுகளில் விளையாடுகின்றன. மிகுந்த மதமுள்ள யானைகளிடத்திலும் கர்வமுற்றிருக்கின்ற எருதுக்கூட் டங்களிலும் தெளிந்த ஜலமுடைய நதிகளிலும் சரத்கா லசோபை அனேகவிதமாகப் பிரிக்கப்பட்டு விளங்குகின் றது. ஆகாயத்தில் மேகங்கள் தொலைந்துபோனதைக் கண்டு அரண்யங்களில் மயில்கள் தமக்கு அலங்காரமா ன தோகைகளைத் துறந்து .ப்ரீதிக்கிடமான பேடைக ளிடத்தில் ஆஸக்தியில்லாமல் காந்தி குன்றப்பெற்று மனக்களிப்பையும் இழந்து கேகா சப்தங்களையும் மறந்து சிந்தை யுற்றவையாகி என்னவோ த்யானஞ் செய்வனபோ லிருக்கின்றன. வெங்கைமரங்கள், மனத் திற்கினிய வாஸனைகளை வீசிக்கொண்டு மிகுதியும் உயர்ந்து புஷ்பங்களின மிகுந்த பாரங்களால் கிளைக ளின் நுனிகள் வணங்கப்பெற்றுப் பொன்வர்ணமும் பொ ருந்தி, கண்ணுக்கு மிக இனிமையா யிருக்கையால் தீபங்களிட்டாற்போல் வளந்தாங்களை விளங்கச் செய் கின்றன. இப்பொழுது மேலானயானைகள் ஏழிலைப்பா மரங்களின் புஷ்பவாஸனையை மோந்து மதம் மேலெழப் பெற்று மதஜலம் பெருகுகின்ற கண்ட ஸ்தலமுடைய வையாகி அந்த மதத்தினால் காமவிகாரங்கொண்டு ப்ரீ திக்கிடமான பேடைகளுடன்கூடித் தாமரையோடைக

னிலும் அரண்யங்களிலும் விளையாட விரும்பழுற்று கடை மேனமேலும் மெதுவாகப் பெற்று ஸஞ்சரிக்கின்றன. ஆகாயம் மேகங்களினறிச் சாரணபிடிக்கப்பட்டி அழுக் கில்லாத ஆயுதம்போல நிர்மலமாயிருக்கின்றது. நதீஜலங் கள் ப்ரவாஹஞ் சிறுகப்பெற் றிருக்கின்றன. காற்றுக் கள் கருநெய்தல்களில்பட்டு வருணையால் குளிர்த்து வீசு கின்றன. திசைகள் மேகங்கள் சூழ்ந்திருக்கையற்றிருக் கையால் இருள்மூடப்பெற்றிருத்தல் தவிர்த்து வெளிச்ச முற்று ப்ரகாசிக்கின்றன. பூமி, வெயில் காய்கையால் சே றெல்லாம் உலர்ந்து கொஞ்சம் கனமாகத் தூள்கிளம்பப் பெற்றிருக்கின்றது. ஒருவர்க்கொருவர் மிகுந்த வைர மும் அஸூயையும் உண்டாகப்பெற்றிருக்கும் ராஜாக்கள் ஒருவர்மேல் ஒருவர் எடுத்துவிட்டுப் போவதற்கு இது தகுந்தகாலமா யிருக்கின்றது. இப்பொழுது எருதுகள் சரத்ருது வந்திருக்கையால் அதன குணத்தைப்பற்றிச் சரீரபுஷ்டியும கர்தியும் வளர்ந்துவரப்பெற்று மிகவும் மதங்கொண்டு மேனிமுழுமையும் தூளாக்கிக் கொண்டு ஒன்றோடொன்று போர்புரிய விரும்பிப் பசுமந்தையின் நடுவில் ஸந்தோஷமுற்று எக்காரமிடுகின்றன. அரண் யங்களில் பெண்யானைகள் அனுராகம் தீவ்ரமாக மேலெ ழுப்பெற் றிருக்கையால் தந்தமது கூட்டங்களோடுகூட மன்மதவிகாரங் கொண்டு மதித்து மதகமனத்துடன் நடந்து செல்கின்ற தம் பர்த்தாவாகிய ஆண்யானைகளைச் சுற்றிக்கொண்டு போகின்றன. முன்னம் தனவான்களா யிருந்து பிறகு காலதோஷத்தினல் தரித்ரர்களாயிருப்ப வர் புதிய தனவான்கள் செய்யும் அவமானத்திற்கு ஏதுஞ் செய்யமுடியாமல தீனர்களாயிருப்பதுபோல், மயில்கள் தமக்கு ஆபரணமான தோகைகளை இழந்து நதீதீரங்க ளுக்குப் போகையில், சரத்காலசோபையால் கர்விதத்தி

ருக்கினற ஹம்ஸங்கள் அவைகளை மிரட்டுபவைபோல் கூவுவதைக்கேட்டு அம் மயில்கள் மதமின்றி மனக்களிப் பற்றுச் செல்கினறன. சிறுத யானைகள் கண்ட ஸ்தலத் தைப் பிளந்துகொண்டி மதஜலம் பெருகப்பெற்றுப் பெருங் கோஷங்களால நீர்க்காகங்களையும் சக்ரவாகங் களையும் பயமுறுத்தி மலர்ந்த தாமரைகளால் விளங்கு கினற தாமரையோடைகளைக் கலக்கிக்கலக்கி ஜலம்பருகு கின்றன. சேறில்லாமல தெளிந்த ஜலமுடையவைகளும் மணற் குன்றுகளால அழகாயிருப்பவைகளும் பசுக்கூட் டங்கள் விளங்கப்பெற்றவைகளும் தமது சப்தங்களால் சப்திக்கினறவைகளுமாகி விளங்கும் நதிகளில ஹமஸங் களும் ஸாரஸபபறவைகளும் ஸகதோஷத்துடன் திரிகின் றன. இப்பொழுது நதீப்ரவாஹங்களின் த்வனிகளும சலசலவென்ற பெரியமலபருவிகளின் சப்தங்களும் பெரு ங்காற்றுகள் வீசும் கோஷங்களும் மயில்களின் கேகார வங்களும் ஒப்பதிருக்கினறன. தவளைகளின கூச்சல் களும் சீக்ரத்தில தின்றுவிட்டன. அவைகள் வர்ஷா காலம் போகையால் உத்ஸாஹங் குறைந்திருக்கப் பெற றன. மேகங்கள் புலப்பட்டு வர்ஷாகாலம் வருகையில அக்காலம் முழுவதும் வெளியில் திரிய தோராமல் பிலங் களில் மறைந்திருந்து ஆஹாரமில்லாமையால பசியினால் பீடிக்கப்பட்டு உடல் மிகவும் இளைக்கப்பெற்றுக கொடிய விஷங்களையும் பலவித வர்ணங்களையுமுடைய ஸர்ப்பங்கள் இபபொழுது பிலங்களினின்று புறப்பட்டு காற்புறமும் திரிகின்றன. ப்ரகாசிக்கின்ற சந்திரகிரணங்கள் படி தால் நிர்மலமாக நக்ஷத்ரங்கள புலபபடுகையில, ஸந்த்யா ராகம தானே ஆகாயத்தினினறு கழனறுபோகின்றது. ராத்ரி, உதிக்கினற சந்த்ரபிம்பமே முகமாகவும் பளபள வென்று விளங்கும் பாரத நக்ஷத்ரங்களே கண்களாக

வும் பெற்று நிலவாகிற உத்தரீயத்தைப் போர்த்துக் கொண்டு, சந்த்ரபிம்பம்போன்ற முகமும் அழகிய கண்களும் விளங்கப்பெற்று வெளுத்த வஸ்த்ரம் போர்த்துக் கொண்ட மடந்தைபோல் விளங்குகின்றது. குயில்கூடி ரமணீயமாகப் புலப்படும் ஸாரஸப்பறவைகள் தனகு பக்வ மாயிருக்கின்ற சம்பாப்பயிர்களின் கதிர்களை வாயிற்கவ விக்கொண்டு ஸந்தோஷமுற்றுக் கோசக்கப்பட்ட பூமாலை காற்றுவேகத்தினால் உயரக் கிளம்பிப் போவதுபோல, மிக்க வேகத்துடன ஆகாயத்தில கிளம்பிச் செலலுகின் றன. நித்ரைபோகின்ற வெளுத்த ஓர் ஹஸ்தத்தையுடை யதும் ஆம்பற்பூக்கள் பலவும் மலர்திருகப்பெற்றதுமா கிய ஆழ்ந்த பெரிய மதுவின் ஜலம், ராத்ரியில மேகங் களிலலாமையால் நிர்மலமான பூர்ணசந்த்ரனிம் ரக்ஷித் ரங்களாலும் கூடி விளங்கும் ஆகாயமபோல பரகாசிக கின்றது. ஆங்காங்கு விசாலபாகத் தோற்றும் ஹமஸங் களோ அரைநூல மாலைபாகவும் மலர்ந்த தாமரைகளும் கருநெய்தலகளும் மாலைபாகவும் பெற்று விளங்கும் நடை வாவிகள், பூஷணங்களாலும பூமாலைகளாலும் அலங் காரஞ் செய்துகொண்ட உத்தம வனிதைகள்போல் மிகுத் த சோபையுடன் ப்ரகாசிக்கின்றன. விடியற்காலத்தில் இ டைப்பெண்கள் கடையும் தயிர்ப்பாணைகளின ஓசையும் கனறுகளை நினைத்துக்கூவும் பசுக்களின கதறலும் கா ளையெருதுகள் காமவிகாரங் கொண்டி செய்யும் முகாரங் களும் ஆகிய பல சப்தங்கள் இடையர்வாசிக்கும புல்லாங் குழல்களின் இனிய ஓசையுடன கலந்த வாத்யகோஷத் துடன்கூடிக் காலைவேளையிலவீசுங் காற்றினால அதிக மாகி முழுவதும் பரந்து ஒனறோடொன்று கலந்து வாசங் துவருகின்றன. ததீதீரங்கள் மதமாருதத்தினால் அசைக் கப்பட்டவைகளும் வெளுத்த புஷ்பங்களால விளக்க

முற்றவைகளும் அழுக்கெடுக்கப்பட்டு நிர்மலமான வெண் பட்டு வஸ்த்ரம்போல் ப்ரகாசிப்பவைகளுமாகிய புதிய நாணற்புற்களால் சூழப்பட்டு, வெண்பட்டுடுத்த வனிதை யின் ஜகனம்போல் சோபையுற்றிருக்கின்றன. அரண்யங் களில் எதிரின்றித் திரிபவைகளும் தேன்களிப்பருகி மதி த்துப் பேடைகளுடனகூடி. மனக்களிப்புற்றுத் தாமரைப் பூக்களிலும் வேங்கைப்பூக்களிலும் திரிகையால் அவை களின் தூள்பட்டுப் பொன்வர்ணம் பொருந்தி விளங்கும் வண்டுகள் காற்றிலுள்ள கமகமவென்ற வாஸனையின பொருட்டு அதைப் பின்தொடர்ந்து போகின்றன. தெளிந த ஜலங்களும் மலர்ந்த ஆம்பலும் க்ரௌஞ்சப்பறவை களின் கலகல சப்தமும் முதிர்ந்த சம்பாப்பயிர் நிலமும் மந்தமாருதமும் நிர்மலமான சந்த்ரமண்டலமும வாஷா காலம் கடந்தது இப்பொழுது சரத்காலம் வந்ததென்று தெரிவிக்கின்றன. இப்பொழுது மீனகள் அரைநூல்மா லைபோல் விளங்கப்பெற்ற நதிகள் ராத்ரிமுழுவதும் காத லருடன ஸம்போகித்து இளைப்புற்றிருக்கின்ற காமினிகள் விடியற்காலத்தில் மெல்லமெல்ல நடப்பதுபோல, மெது வாகப் பாய்கின்றன. சக்ரவாகப் பறவைகளோடுகூடிப் பாசிகள் அமைந்து நாணற்புற்களால் சூழப்பட்டிருக் கின்ற நதிக்கரைகள் கோரோசனைகளாலும் மகரிகாதி பத்ரங்களாலும் அலங்காரஞ் செய்யப்பெற்று வெண்பட் டால் மூடப்பட்டுவிளங்கும் மடந்தையர் முகங்கள்போல் ப்ரகாசிக்கின்றன. இப்பொழுது மலர்ந்த கருங்குறிஞ்சிப் புஷ்பங்களாலும வேங்கைப்புஷ்பங்களாலும் பலவர்ணங் கள் பொருந்தி விசித்ரமாயிருப்பவைகளும மிகவும் மதங் கொண்ட வண்டுகளின் ஜுங்காரங்களால் விளக்கமுற்ற வைகளுமாகிய வனங்களில மன்மதன வில்லையும் கொடி யபாணங்களையும் எடுத்துக்கொண்டு காதலிகளைப்பிரிந்த

காமுகர்களுக்குப் பயம் விளைவிப்பவனாகிப் பெருமிதக்குடன விளையாடுகிறான். மேகங்கள் தன்கு மழைபெய்தமையால ஜனங்களை ஸந்தோஷப்படுத்தி நதிகளையும் தடாகங்களையும் நிறைத்துப் பூமியில் பயிர்களைப் பலிக்கச்செய்து ஆகாயத்தை விட்டு மறைந்தன. லக்ஷ்மணனே! எருமைகள் தெளிந்த ஜலமுடையனவாகிச் சிறிது பறவைகளின் கலகல சபதங்களோடுகூடிச் சக்ரவாக ஸமூஹங்கள் நிறைபப்பெற்று விளங்குகின்றன. மலைச் சாரல்களில் வேங்கைமரங்களும் ஏழிலைப பாலைமரங்களும் மலையத்திமரங்களும் உச்சித் திலகமரங்களும் ஞாழல்களும் கருஞ்சிவதைகளும் நன்கு புஷ்பித்துப புலப்படுகின்றன. லக்ஷ்மணா! நதிகளின் மணற் குன்றுகளில ஹம்ஸங்களும் ஸாரஸங்களும் சகரவாகங்களும் க்ரௌஞ்சபறவைகளும் விளையாடுகின்றன பார். ராஜகுமாரனே! லக்ஷ்மண! ஒருவர்மேல ஒருவர் வைரமுறைத்து ஒருவரை யொருவர வெல்ல விரும்பும் மன்னர்கள் யுத்தத்தினபொருட்டு முயற்சிசெய்யும் ஸமயம் வந்தது. ராஜகுமார! ராஜாக்கள் யுத்தத்திற்காக முதலில் ப்ரயாணஞ செயயும் ஸமயம் இது.ஸுக்ரீவனை அகப்படவில்லை. அங்ஙனம் பராபத்னஞ் செய்வதாகவும் தெரிபவில்லை. லக்ஷ்மணனே! ஸீதையைப் பாராமல் துக்கத்திலாழ்ந்து பரிதபிக்கின்ற எனக்கு வர்ஷிகமாதங்கள் காலகும் நூறுண்டுகள் கடந்தாற்போல் எப்படியோ கடந்தன. அந்த ஸீதை, பெண் சக்ரவாகமதனபர்த்தாவாகிய ஆண் சகவாகத்தை விடமாட்டாமல பினதொடர்வதுபோல், தன பர்த்தாவைப் பினதொடர்ந்து அரண்யத்திற்கு வந்தனள். அதிலும் உத்பானவனத்திற்குப் போகும்விதமாகவே சிறிதும் மனவருத்தமுறாமல் மிக்க ஸந்தோஷத்துடன் மிகவும் கஷ்டமான இந்தத் தண்டகாரண்யத்திற்கு வந்

தனள். லக்ஷ்மண! ராஜ்யத்தைதம் போக்கடித்துக்கொ
ன்டு ஊரினின்றும் துரத்தப்பட்டு ப்ராணநாயகியைப்
பிரிந்து வருத்தமுற்றிருக்கின்ற என்னிடத்தில் ராஜ்ஜ
கிய லக்ஷ்மணுக்குத் தயை பிறவாதிருக்கின்றதே. லெள
ம்ய! பரதனோ துர்ப்புத்தியாகிய கபீச்வரன் லக்ஷ்மீ
வன தனக்குள 'இந்த ராமன திக்கற்றவன்; ராஜ்யங்
கைசோரப் பெற்றவன், வெகுதூரத்தினினறு வீடடைத்
துறந்து வந்திருப்பவன, காமவெறி கொண்டவன், ராவ
ணன, பாயையை அபஹரித்து அவமானஞ் செய்கையில்
தீனனாகி என்னையே சரணம் அடைந்தான்' எனறு இந
தக் காரணங்களைப்பற்றி அலக்ஷ்யபுத்தியால என்னை
ஆதரியாமல் அவமானஞ செய்தனன். லக்ஷ்மீவன சரத்
காலம் வந்தவுடனே லீதையைத்தேட ஆரம்பிக்கவேண்
டுமென்று லக்ஷபத்தை லங்கேதம் பண்ணிக்கொண்டு
அங்ஙனம் ப்ரதிஜ்ஞை செயது, துர்ப்புத்தி யாகையால்
தன்கார்யம் தீர்ந்ததவு னே 'எனகார்யம் ஆயிற்று, இனி
என'என்று உபேக்ஷை செய்துகொண்டு தன்னை அறியா
திருக்கிறனன். நீ கிஷ்கிந்தைக்குப் போவாயாக. போய்,
காம லக்ஷங்களில கால்தாழப் பெற்றிருக்கும் மூர்க்க
னகிய அந்த வானரத்தலைவனை லக்ஷ்மீவனப பார்த்து
ந்ன சொன்னதாக இங்ஙனஞ்சொலவாயாக. 'என் தன
க்கு முனனம் உபகாரஞ செய்தவர்களும் தனனைச் சர
ணம் அடைந்தவர்களுமான தன்னல் ஒருகார்யம் நிறைவேற்
றிக்கொள்ள விருப்பமுற்றவர்களுமாகிய சிலர்க்கு 'கார்
யஞ் செய்கிறேன' எனறு ப்ரதிஜ்ஞை செய்து ஆசை
உணடாக்கிப் பினபு தவறுகின்றவனை, அவன உலகமினத்
திலும் புருஷாதமன எனப்படுவான. என் நலலதாயி
னும் கெட்டதாயினும் தான சொன்ன வார்த்தையைத்
தவறுமல் ஸத்யமாக்குவானே, அப்படிப்பட்ட வீரன புரு

ஷோத்தம னெனப்படுவான். எவர் தாம் ஸ்னேஹிதரிட மிருந்து உபகாரம்பெற்றுத் தமது கார்யத்தை முடித் துக்கொண்டு, அந்த ஸ்னேஹிதர்கள் தமது கார்யம் கைகூடபபெறுமல் துக்கித்திருக்கும்பொழுது அவர்க்கு ப்ரத்யுபகாரஞ செய்யாதிருப்பார்களோ, அப்படிப்பட் டவர்கள் பிழைத்திருக்கும்பொழுது அவர்களை ஸத்புரு ஷர்கள் எவரும் கண்ணெடுத்துப் பார்க்கவுமாட்டார் களல்லவா? அவர்கள் மரணம் அடைந்த பின்புங்கூட அவரது சரீரங்களை, மாம்ஸந் தின்னும் ஜந்துக்களும் பக்ஷிக்கமாட்டா' என்றுரைப்பாயாக. நான் யுத்தத்தில் ஸ்வர்ணத்தினால் விளங்கும் பிடியுடைய என பெரிய வில் லை இழுத்து காணேற்றுகையில், மின்னற் குவியல்போல் தகதகவென்று விளங்குகின்ற அதன் பயங்காமான உரு வத்தை ஸுக்ரீவன் பார்க்க விரும்புகின்றனன். இது நிச் சயம். நான் யுத்தத்தில் கோபித்தவனாகி விலை இழுக் கையில் என கையில நான் உறையும் பயங்கரமான சப் தத்தைப் பயங்கரமான வஜ்ராயுதத்தின் கோஷத்தைப் போல் அவன் மீளவும் ஒருதடவை கேட்க விரும்புகின் றனன். வீரனே! ராஜகுமாரா! ஸாலவ்ருக்ஷத்தை முறித் ததனாலும் வாலியைக் கொன்றதனாலும் என் பராக்ர மத்தை நன்றாக அறிந்திருந்தும் நீ ஸஹாயமாயிருப்பது தெரிந்தும் இந்த ஸுக்ரீவனுக்கு, இவ்வனம் காலம் கட ந்துபோமாயின் நம்மையும் கொன்றுவிடுவா னென்று வி சாரமும் உண்டாகாதிருக்கின்றதே. சத்ரு பட்டணங்களை யழிக்கும் திறமையுடையவனே! ஸ்னேஹஞ்செய்தல் வாலி யைவதித்தல் என்னும் இந்த ப்ரயத்னம் எதுக்காகச் செய்யப்பட்டதோ, அதை இபபொழுது ஸுக்ரீவன் தன் கார்யம் தீர்ந்தபின்பு தெரிந்துகொள்ளாதிருக்கின் றனன். வானரர் தலைவன் ஸுக்ரீவன் வர்ஷாகாலம் போ

னவுடனே வருகிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்து இன்னம் காமினிகளோடு விளையாடிக்கொண்டு கான்குமாதங்கள் கடந்த பினபும் அறியாதிருக்கின்றனன. ஸுக்ரீவன், தானும்தன மந்த்ரிகளும பந்துக்களுமாகக்கூடி எப்பொழுதும் விளையாடிக்கொண்டு மத்யபானஞ்செய்து கொணடு மெயம்மறந திருக்கிறனன்றித் துககத்தினல் தினர்களாரயிருகக்கும் கம்மிடத்தில தனைசெய்யாதிருக்கின்றனன. அப்பா! நீமிகுந்த பலமுடையவன்; ஆகையால் கிஷ்கிந்தைக்குப் போவாயாக.போய், ஸுக்ரீவனுக்கு என்கோபமிருக்கும் விதத்தைத் தெரியச்சொல்வாயாக. மேலும் இந்த வார்த்தையையுங்கூடச் சொலவாயாக. 'ஸுக்ரீவ! வாலி அடிக்கபபட்டு எந்தமார்க்கத்தில் போயினானே, அம்மார்க்கம் இப்பொழுதும் மறைந்துபோகவிலலை. அது உனக்கும் இருக்கவே இருகின்றது. ஆகையால் செயத ப்ரதிஜ்ஞையைத் தவறவேண்டாம். தவறி வாலிபோனவழியில விழுவேண்டாம். கானமுனபு யுத்தத்தில பாணத்தைதரட்டி வாலி யொருவனை மாத்ரமே வதித்தனன். சொன்னவார்த்தை தவறின உன்னையோ பந்துக்களோடு வதித்துவிடுவேன' என்று கூறுவாயாக. புருஷதிலகனே! கார்யலகிதி இப்படி இருக்கின்ற தாகையால் இப்பொழுது எதைது ஹிதமோ அதைல்லாவற்றையுஞ் சொல்வாயாக. காலதாமதஞ் செய்யவேணடாம. ஆகையால் த்வரைப்படுவாயாக போய் ஸுக்ரீவனைப் பார்த்து 'வானரேச்வரனே! நீ எனகுச் செய்கிறேன் னென்று ப்ரதிஜ்ஞைசெய்த கார்யத்தையும் ப்ரதிஜ்ஞையையும் தவறுமல செய்துமுடிப்பது அவச்யமான தர்மமென்றுணர்ந்து ஸத்யமாக நிறைவேற்றுவாயாக. அங்ஙனம் செய்யமாட்டாயாயின், கான தொடுக்கும் பாணங்களால் ப்ராணன்களைத் துறந்து யமலோகத்

தை அடைந்து அங்கு வாலியை இப்பொழுதே காண் பாய்; அப்படிப்பட்ட கதியை வரவழைத்துக் கொள்ள வேண்டாம் என்பதாக' என்று மொழிந்தனன். அங்ஙனம் அண்ணனிய ராமன் கோபம் தீவிரமாக வளர்ந்து வரபெற்றுத் தீனனிப் புலம்பிக்கொண்டிருப்பதை ருகக்கண்டு கொடிய தேஜஸ்வியும் மனுவம்ச திலகனுமாகிய லக்ஷ்மணன் வானரராதனிய ஸுக்ரீவன்மேல் மிகவும் க்ரூரமான புத்தியை ஏற்றுக்கொண்டனன். மூப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அங்கதன் ஸுக்ரீவனேடு லக்ஷ்மணன் கோபித்துவருவதைக் கூறுதல்.

ராஜகுமாரனிய ராமன் அங்ஙனம் மிகுந்த காமாதிசயத்தினல் பாதிக்கப்பட்டிருக்கையால் தீனனிக்துக் கத்தி லாழ்ந்திருப்பினும் ஸத்வம குறையாமல், ஸுக்ரீவன் பாதிஜ்ஞை தவறினதற்குக் கோபம் மேலெழப் பெற்றிருபபதைக் கண்டி தசாதகுமாரனும் ராமனுக்குப் பின் பிறந்தவனுமாகிய லக்ஷ்மணன் தனது அண்ணனைப் பார்த்து 'கண்பர்களோடிடாத்த ஸுகத்துக்கங்கனுடைய னுயிருக்கையே ஸத்புருஷர்களின் ஆசாரம. அதில் அந்த வானரன நிற்கமாட்டான். ராமனிறை ஸ்னேஹம் கோர்த்த மைபா லன்றே வானரராஜ்யத்தையும் பார்யா ஸுகமத் தையும் மற்றுமுள்ள கன்மைகளையும் பெற்றேனனனும் நினைவு அவனுக்கு உண்டாகாது. நம் விஷயத்தில அனு கூலித்து நடக்கவேண்டு மென்று அவனுக்குப புத்தி யில்லை. ஆகையால் இனி வானரராஜ்ய லக்ஷ்மி அவ னுக்கு நிலை நிற்காது. வீரனே! ஸுக்ரீவன் புத்தி மயங்கிக் காம ஸுகங்களில் காலந்தாழ்த்து, நீ ராஜ் யம் ஸம்பாதித்துக் கொடுத்தது முதலிய உபகாரத்

திற்கு ப்ரத்யுபகாரஞ் செய்யவேண்டு மென்னும் எண்ணமும் இல்லாதிருக்கிறு ணைகயால் இப்பொழுது என்னை அடிக்கப்பட்டவனைத் தனது அண்ணனுகிய வாலியைக் காண்பானை. இப்படிப்பட்ட துர்க்குணனுக்கு ராஜ்யம் கொடுக்கலாகாது. இப்பொழுது தீவரமாக மேலெழும்புகின்ற என கோபவேகத்தை எனக்கு அடக்கத் தரமன்று. ஆகையால் லக்ஷ்மண் தவறின அந்த ஸுக்ரீவனை இப்பொழுதே வதித்துவிடுகிறேன். வாலி குமாரனுகிய அங்கதன், வானரவீரர்களோடுகூட ராஜகுமாரத்தியாகிய ஸீதாதேவியைத் தேடிக் கண்டுபிடிப்பானுக' என்றனன. ராமன சத்ருவீரர்களைக் கொல்பவனேயன்றி ஆச்ரிதர்களை வதிப்பவனல்லன். லக்ஷ்மணன் அங்ஙனம் யுத்தத்தில் கொடிய கோபங்கொண்டவனுகி இங்ஙனம் தான் செய்யப்போகிற ஸங்கதியைச்சொல்லி வில்லைக் கையிலேந்திப் போய்க்கொண்டிருக்கையில் ராமன்கண்டு தனது திருப்திக்கப்பட்டவைகளும் நல்வார்த்தை அமைந்தவைகளுமான உரைகளைச் சொல்லத்தொடங்கி 'உலகத்தில உன்னைப்போன்றவன் எவனையினும் இங்ஙனம் மித்ரவதமென்னும் பாபத்தைச்செய்வானே? எவன் தனக்குக் கோபத்தினல் மித்ரனைக்கொல்லவேண்டும் பாபத்திற்கு முயலுவானே, அதை விவேகத்தினல் பரிஹரித்துக்கொள்கிறானே, அப்படிப்பட்டவீரன் புருஷர்களனைவரினும் உத்தமனெனப்படுவான். லக்ஷ்மண! ஸதாசாரம் பொருந்திய நீ இப்படிப்பட்ட மித்ரனைக் கொல்லநிச்சயிக்கும்படியான கொடூரமாகிய பாபத்திற்கு உட்படலாகாது. பூர்வம் நாம் ஸுக்ரீவனுக்கு செய்துகொண்ட ஸ்னேஹத்தை அனுஸரித்து முன்னம் நீ அவனிடத்தில் வைத்திருந்த ப்ரீதியையே இப்பொழுதும் வைப்பாயாக. ஸுக்ரீவன் க்ரமமாகக் காலத்தில் வர

வில்லையேயன்றி மற்றேதும் அவ்வளவாக அபராதஞ் செய்தவனல்லன். ஆகையால் அவனோடு பருஷமாகப் பேசுவதைத் தவிர்ந்து நல்ல குளிர்ந்த வார்த்தையைக் கூறுவாயாக' என்றனன். சத்ருவீரர்களையடக்குந் திறமையுடைய அத்தப் புருஷதிலகன் லக்ஷ்மணன், தன் தமையன் தர்மத்தின்படி செய்யவேண்டிய கார்யம் இன்னதென்று நியமிக்கத் தெரிந்துகொண்டு கிஷ்கிந்தாபுரத்திற்குப்போயினன். அனந்தரம் அழகிய மதியுடையவனும் ப்ராஜ்ஞனும் தனது அண்ணனுக்கு ஹிதஞ்செய்வதில் கண்ணையத்தவனும் சத்ருக்களுக்குக் காலன்போன்றவனுமாகிய லக்ஷ்மணன, ஸுக்ரீவனைக்கொல்லவேண்டுமென்னும் நினைவின் வேகத்தை அடக்கிக் கொண்டு ஸுக்ரீவனுடைய வீட்டிற்குப் போயினன், ப்ரளயகாலத்து யமனபோன்ற அத்தலக்ஷ்மணன், இந்த்ரதனுஸ்ஸுபோல் புலப்படுவதும் பாவதசிகரம் போன்றதுமாகிய வில்லைக் கையிற் பிடித்துக்கொண்டு தாழ்வரையோடு கூடின மந்தர பர்வதமபோல்ப்ரகாசித்தனன. அங்ஙனம் புத்தியில் ப்ருஹஸ்பதியோடொத்த ராமன் தம்பி லக்ஷ்மணன், ராமன் ஆஜ்ஞாபித்ததைச் சிறிதும் மீறாமல நடத்துபவனுமித் தான் ஸுக்ரீவனேநி சொல்லவேண்டிய ராமனது வார்த்தையையும் ஸுக்ரீவன் அதற்குப் பதிலுரைப்பதையும் தான் அதற்குப் பதிலான விஷயங்களைச் சொல்லவேண்டிய மறுமொழியையும் ஆலோசித்துக்கொண்டு போயினன. அப்பொழுது லக்ஷ்மணன், ராமனுக்குக் காமக்ரோதங்களால் மேலெழுந்த கோபமெனனும் நெருப்பு தன்னைச் குழ்ந்திருக்கையில் அக்னியோடுகூடிய வாயுதேவன்போல் கோபித்தவனாகி மிக்க வேகத்துடன் போயினன். அவன் வழியில் குறுக்கேயிருக்கின்ற மராமரங்களையும் பனமரங்களையும் அஸ்வகர்ண வரு

க்ஷங்களையும் மற்றும் பல மரங்களையும் தன் பாஹு பலத்தினால் விழுத்தள்ளிக்கொண்டும் துடைகளின் வேகத்தினால் பர்வத சிகரங்களையும் இதரமான வருக்ஷங்களையும் பறக்கடித்துக்கொண்டும் அடிகளிடும் வேகத்தினால் கற்களைப் பொடிபொடியாகச் செய்துகொண்டும் வேகத்துடன் கடந்து யானைபோல் முன்னடியைத் தாரமாகவைத்துக் காய வசத்தினால் மிக்க விரைவாகப் போயினன். அந்த இக்ஷ்வாகு குலமித்ரன் இடைவெளியின்றி நெருக்கமாயிருக்கின்ற பர்வதங்களின் கநிஷ்ட வானரலைனகளால் சூழப்பட்டு எபபடிபபட்டவாககும் புகக்கூடாத வானரேந்ரனை லக்ரீவனுடைய ராஜதானிபாகிய கிஷ்கிந்தையைக் கண்டனன. லக்ஷ்மணன லக்ரீவனிடத்தில் உள்ள கோபவேகத்தினால உதடு துடிக்கப்பெற்றுக் கிஷ்கிரதைதகு வெளியில் திரிகின்ற பயங்கர உருவமுடைய வானரர்களைக் கண்டனன. பட்டணத்திற்கு வெளியில் திரிபவர்களும யானைகள்போல புலப்படுபவாகளுமாகிய அவ்வானரர்கள் புருஷ்திலகனுகிய லக்ஷ்மணன் வருவதைக் கண்டு அனைவரும எவமோ சத்ரு வதானென்று பர்வதங்களிடையில் நூறு நூறுகச் சிகரங்களையும் மிகவும் பெரிய வருக்ஷங்களையும எதிரிட்டுச்சண்டைசெயும் பொருட்டுக் கையிற் கொண்டனர். லக்ஷ்மண அங்ஙனம் அவர்கள் ஆயுதங்களைக் கையிலெடுதுவதைக்கண்டு கோபம் இருமடங்காகப் பெற்று மிகவும் கட்டைகளிடப் பெற்ற அக்னிபோல ஜ்வலித்தனன். அத வானரர்கள், அங்ஙனம கோபித்து பரளயகாலத்து மிருத்யுவைப்போல் பயங்கரமுகப் புலப்படுகின்ற லக்ஷ்மணனைக் கண்டு பயத்தினால அவயவங்கள் விலவிலக்கப் பெற்றுக் கிடுகிடுவென்று நடுக்கமுற்றுக் குவியல குவியலாக கற்புறமும் பறந்தோடிப போயினர். அனந்தரம் அந்த வானரோத்தமர்

கள் ஸுக்ரீவனது க்ருஹத்திற்குப் போய் லக்ஷ்மணன் கோபமுற்றிருப்பதையும் கிஷ்கிந்தைக்கு வருவதையும் அவனுக்குத் தெரிவித்தனர். அப்பொழுது ஸுக்ரீவன் காம மோஹங்கொண்டு ஏகாந்தத்தில் தாரையுடன்கூடி க்ரீடித்துக் கொண்டிருந்தானையால் அந்த வானரவீர்கள் சொன்ன வார்த்தைகளைச் செவியுற்றிலன். அனந்தரம் அப்பொழுது மந்த்ரிகள் லங்கதியைத் தெரிந்துகொண்டு வருவீரகளென்று அனுபபுகையில மஹேபோலுமு யாஜனேபோலும் மேகங்கள்போலும் புலப்படிவர்களும் பார்த்தமாத்ரத்தில் பயிர்க்கூச்சலி விளைப்பவர்களுமாகிய வானரர்கள் பட்டணத்தி னின்று புறப்பட்டனர். அவர்கள் அனைவர்க்கும் ஈகங்களும் தசதங்களுமே ஆயுதங்கள்; அனைவரும் பயங்கரமான உருவழுடையவர்கள்; எல்லோரும் விகாரமாகப் புலப்படுவர்கள்; எல்லோரும் பெரும் புலிகள்போல் பலத்தினல் கொழுத்தவர்கள்; எல்லோரும் விகாரமான முகமுடையவர்கள். அவர்களில் சிலர் பத்துயாஜன பலமுடையவர்களும் சிலர் நூறுயாஜன பலமுடையவர்களும், சிலர் ஆயிரம்யாஜன பலமுடையவர்களுமாயிருந்தனர். கோபமுற்றிருக்கும் லக்ஷ்மணன், முழுவதும் மஹா பலிஷ்டர்களும் வ்ருக்ஷங்களைக் கையிலேந்தினவர்களுமாகிய வானரவீரர்கள் சிறைதிருக்கப் பெற்று எப்படிப்பட்டவர்க்கும் அணுகமுடியா திருக்கின்ற கிஷ்கிந்தா புரத்தைக் கண்டனன். அனந்தரம் கொடிய பலமுடைய அவ்வானரர்களெல்லோரும் கோட்டைவாசற் படிக்கு வைத்திருக்கும் இரும்புத் தடியின் அடியாகப் புறப்பட்டு வெளியேவந்து லக்ஷ்மணனுக்குத் தோற்றும்படி நின்றனர். புத்தியிற் சிறந்த அவ்வீரரான லக்ஷ்மணன், ஸுக்ரீவன் மனவுக்கமற்றிருப்பதையும் அண்ணனாகிய ராமன் துக்கித்திருப்பதையும் கினைத்து

மீளவும் கோபத்திலை மெய்ம்மறந்தவ னுயிளான். அந்தப் புருஷ லலாமன கோபத்திலல் நீண்டி உஷ்ணமாயிருக்கும் பெருமூச்சுக்களை எறிந்துகொண்டு கண்கள் சிவக்கப் பெற்றுப் புகையுடனகூடின நெருப்புப்போல ப்ரகாசித்தனன். அவன் பாணங்களின் ஆணிகளை அகைசயும் காக்குகளாகவும் வில்லை படமாகவும் தன் தேஜஸ்லை விஷப்பெருக்காகவும் விளங்கப்பெற்று ஐந்து தலைகளுடைய ஸர்ப்பம்போல பயங்கரனை யிருந்தன. அங்ஙனம் ஜ்வலிக்கின்ற ப்ரளய காலாக்னீபோலும் கோபமுற்ற ஆந்திசேஷன்போலும் புலப்படுகின்ற அதத லக்ஷமணனிடத்திற்கு அங்கதன சென்று பபத்திலை மிகவும வருத்தமுற்றனன். பெரும் புகழோனகிய அதத லக்ஷ்மணன ரோஷத்திலல் கண்கள் சிவக்கப்பெற்று அங்கதனை நோக்கி ‘பயலே! ராமன் தம்பி, பகைவரைப் பறகதாடச் செய்யும் பராக்ரமசாலியாகிய லக்ஷ்மணன, இதோ உனனிடம் வந்திருக்கினறான’ என்று என்வரவை ஸுக்ரீவனுககுத் தெரிவிபபாயாக. அண்ணனுக்கு நேரிட்ட வ்யஸனத்திலல் மிகவும் பரிதபித்து அந்த லக்ஷ்மணன வாசலில் நின்றுகொண் டிருக்கின்றனன. ஸுக்ரீவா! அவனது வார்த்தையைக் கேட்க உனக் கிஷ்டமுளதாயின், அவனிடம் நீ போவதேன, உன்னிடம் அவனை வரவழைத்துக் கொளவதேன, எது யுக்தமோ நடத்துவாயாக’ என்று இநத வாக்பத்தைச் சொலலி, அப்பா! சத்ருக்களை யழிப்பவனே! சீக்ரம் வருவாயாக’ என்றனன். அங்கதன லக்ஷ்மணனது வார்த்தையைக் கேட்டுச் சோகம் மேலெழப் பெற்றுச் சிற்றப்பனகிய ஸுக்ரீவனிடனு சென்று ‘இதோ லக்ஷ்மணன் வந்திருக்கிறான’ என்று மொழிகதனன். அனந்தரம் பலிஷ்டனகிய அங்கதகுமாரன, லக்ஷ்மணன் வார்த்தையைக்கேட்டு மனந் தத்தளிக்கவும் துக்

கத்தினல் முகம் விலவிலக்கவும் பெற்றுச் சீக்ரம் ராஜனு கிய ஸுக்ரீவனது சரணங்களுக்கு நமஸ்காரஞ் செய்த னன. கொடிய தேஜஸ்வியாகிய அந்த அங்கதன தந்தை யின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு வணங்கி அனந்த ரம் தாயாகிய தாரையின் பாதங்களில் வந்தனஞ் செய்து சிறியதாயாகிய ருமையின் பாதங்களிலும் நமஸ்காரஞ் செய்து அதனபிறகு லக்ஷ்மணன் சொனன ஸமாசாரத் தையெல்லாம் தெரிவித்தனன். அந்த ஸுக்ரீவன் அப் பொழுது நித்ரையின் மயக்கம்வந்து கண்மூடிக்கொள்கை யாலும் மத்யபானத்தினல் விளையும் மதத்தினல மெய்ம்ம றந்திருக்கையாலும் மன்மதவிகாரத்தினல் மதிதப்பி யி ருக்கையாலும் விழித்துக்கொள்ளவிலலை. அனந்தரம் வா னரர்கள் லக்ஷ்மணனைப் பார்த்துப் பயத்தினல் மனம் த ழதழக்கப்பெற்றுக் கோபித்திருக்கின்ற அந்த லக்ஷ்மண னத தெளியசசெய்யும் பொருடடுக கிலகிலவென்று சப் தஞ் செய்தனர். மஹா ப்ரவாஹம்பொங்கிக் கரைபுரண் டிவருவதுபோல் எதிரினறி வேகத்துடன்வந்த லக்ஷ்மண னைப் பார்த்து அவ்வானரர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஓரேதடவையில் வஜ்ராயுதம்போலும் இடிபோலும் பெ ரும் த்வனி உண்டாகும்படி லக்ஷ்மணனுக்கருகில் ஸிம் ஹநாதஞ் செய்தனர். அந்தப் பெரும் த்வனிக்கு ஸுக் ரீவன் மதத்தினல் கண்கள் சிவந்து ஸுகமாகத் திறக்க முடியாமல் திடநதப்பி யிருக்கவும் பூமரலகளும் பூஷ ணங்களும் தாறுமாருகப் புலப்படவும் பெற்றுக் கண்வி ழித்துக் கொண்டனன. அனந்தரம் சிறநத மநத்ராலோ சன சக்தியுடபோர்களாகையால் ஸுக்ரீவன மனத் திற்கு மிக இனியவர்களும் அந்தப்புரத்திற்குள் ப்ரவே சிக்கத் தகுநதவர்களுமாகிய ப்லக்ஷனென்னும் ப்ரபாஸ னென்னும் மந்த்ரிகளிருவர் அங்கதன் வசனத்தைக்

கேட்டு அவன் அழைக்கையில் அவனுடன சென்று'லக்ஷ்மணன் தர்மார்த்தங்கள் விஷயமாகப் பலவித உரைகளைக்கூற வருதிருக்கிறான்' என்று லக்ஷ்மீவனுகருக்குச் சொல்லினர். அவ்விருவரும் தேவாகளுக்குத் தலைவனுகிய இந்திரன்போல் ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்திருக்கின்ற லக்ஷ்மீவனைத் திடமான ஸாமவசனங்களால் தெளிவுறச்செய்து அவனைச் சுற்றிச் சூழ்ந்து உட்கார்ந்து 'ராமலக்ஷ்மணர்கள் ஸத்யஸந்தர்; மஹாணுபாவர்; அண்ணனதம்பிகளிருவரும ராஜ்யபரிபாலனஞ செய்யத் தகுந்தவர்கள்; உன்னுடன் ஸ்னேஹம் பண்ணிக் கொண்டு உனக்கு ராஜ்யங்கொடுத்தவர்களல்லவா? அவ்விருவர்களில் ஒருவனை லக்ஷ்மணன வில்லேக கையிலேந்தி வாசலில் வந்திருக்கின்றனன். அவனைப்பார்த்து வானரர்கள் பயந்து கிடுகிடுவென்று நடுங்கிக் கூச்சலிடுகின்றனர். அந்த ராமன் தம்பியாகிய இந்த லக்ஷ்மணன், இது புகக்கூடாத துர்க்கமாயினும் தான தனியனேயாயினும் ராமனது ஆஜ்ஞையைப்பற்றி ராமவாக்யமே ஸாதியாகவும் பகைவரை அடக்கவேண்டு மென்னும முயற்சியே ஸாதகமாகவும்பெற்று இவ்விடம் வந்திருக்கின்றனன. நீ தேவஷனே! தசரதனின் அருமைக குமாரனுகிய அந்த ஸுமித்ரையுங்கூடச் சீக்ரம்போவாயாக வென்று லக்ஷ்மணன் உன்னிடம் அனுபபினன். வானரேந்த்ரனே! மஹாவீர்யசாலியாகிய அந்த லக்ஷ்மணன கண்களில் தீவாகோபம் தோற்றப் பார்வையால் வானரர்களைக் கொளுத்திவிடுபவன்போல் வாசலில் காத்துக்கொண் டிருக்கின்றனன். லக்ஷ்மீவா! நீயும் உன புதல்வனும் சீக்ரம் லக்ஷ்மணனிடம்போய் அவனைத் தலைசாய்த்துவணங்கி எப்படியாவது அவன் கோபத்தைப் போக்குவாயாக. ராஜனே! தர்மாத்மாவாகிய ராமன் யாதுகூறுவானே, அந்தக் கார்

யத்தை ஜாக்ரதையுடன் தவறுமல் கடத்தவேண்டும். நீ மாயாதையைவிடாமல காப்பாற்றிக்கொள்வாயாக. நீ செய்த பாதிஜ்ஞாதையைத் தவறுமல் நிறைவேற்றிக் கொள்வாயாக' என்று மொழிந்தனர். முப்பத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஸுக்ரீவனுக்கு ஸீதாபதேசஞ செய்தல. }

புஷ்பிற் சிறந்த ஸுக்ரீவன, அங்கதன்முதலான மந்த்ரிகள்சொனன வார்த்தைகளைக்கேட்டு, லக்ஷ்மணன் கோபித்து வருகிறான் எனறு தெரிந்து ஸிம்ஹாஸனத்தினின்றும் இழிந்தனன. ஸுக்ரீவ கார்யாலோசனைகளில ஸமர்த்தரைபால் ஏற்றக்குறைகளை நிச்சயித்து ஆலோசனைசெய்யத் தெரிந்தவராகி எப்பொழுதும் ஆலோசனை செய்வதில் யிருப்பவர்களுமாகிய மந்த்ரிகளைப்பார்த்து 'நான் சிறிதும் பொய்யுரைத்தலில்லை. தபுக்காரியமும் செய்ததில்லை. இப்படியிருக்க ராமன் தம்பி லக்ஷ்மணனுக்குக் கோபம் எதனால் உண்டாயிற்றென்று ஆலோசிக்கின்றனன. எப்பொழுதும் என்னிடத்தில் ரக்தரங்களையே தேடித் துராத்மாக்களாகிய என் சத்ருக்கள் எனமேல இல்லாத தோஷங்களை லக்ஷ்மணனுக்குச் சொல்லி யிருப்பார்கள். இவ்விஷயத்தை முந்துறமுன்னம் நீங்க ளெல்லோரும் உங்கள் புத்தி ஸமர்த்யத்தைக் கொண்டு க்ரமப்படி லக்ஷ்மணனுக்குக் கோபம உண்டானதற்குக காரணம் யாதோ, நாம் இப்பொழுது என்செய்யவேண்டுமோ, அதெல்லாவற்றையும் நிபுணமாக நிச்சயித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். (பயத்தினல் ஆஸனத்தினின்றும் இழிந்தவனல்லேன்.) லக்ஷ்மண னிடத்திலாவது ராமனிடத்திலாவது எனக்கு எள்ளளவும் பய

மிஸ்லி. ஆனால் ஸ்ரீனஹித்தை யிருபபவன் காரணமின்
றித் தகாத இடத்தில் கோபமுறுவானாயின், எப்படிப்
பட்டவனுக்கும் நிச்சயமிப்பு உண்டாகுமேயன்றி மாறாது.
மித்ரனை யும்பாதிப்பது எல்லாவித்திலும் ஸுகமே.
அதை ஸ்ரீனஹத்தைக் காப்பாற்றுவதுமாத்ரம் கஷ்டம்.
மனம் நொந்து சிலபடமல் சபலமாயிருக்கு மாணகயால்
துனி னைவதும்பம முன்டாகிலும் ஸ்ரீனஹமும் கெடிதியடை
கினறது. மறறபாவஞ்செய்த ராமன் எனக்குச செய்த
உபகாரத்தை நிற்ந்த சரியாக. ப்ரத்யுபகாரஞ செய்வதற்கு
எனக்கு எவ்வித்திலும லாத்யமன்று. இத்தக் காரணத்
தைப்பற்றியே ராம படப்பதிலிருனறறி மறறொருத்தற்கு
மன்று என்றான். லக்ஷ்மண இங்ஙனஞ் சொல்லுகை
யில், வானரஸ்ரேஷ்டனாகிய நலனுமன் வராமத்தில்
னிக இனை யில் தனது வரமும் விளங்கும்படி 'வரனர
திபதி யிக்ஷ்வாகு ஸ்ரீனஹமும் உண்டாகப்பெற்று சுற்றுணங்
களோடுகூடின உபகாரகரை உன்னைப்போன்றவனை மற
வாதிருப்பது ஓர் ஆச்சர்யம் அனறு. உனக்கு இது லஹ
ஜ்மே ஸ்ரீராமபிரான் உனகது ப்ரீதியை விளக்கும்
பொருட்டுப் பாத்தகத வாரத்தில் தூரதது சென்னையதத்ர
னைப்போன்ற பரராகரமசாலிபரகிய வாலியைக் கொன்று
விட்டான். எல்லாவித்திலும் ராமன் உனமேல் ப்ரண
யத்தைபங் கொண்டி தன் கும்பியாகிய லக்ஷ்மியை வளரச்
செய்யும் லக்ஷ்மணனை உன்னிடம் அனுப்பி யிருப்பதென
பதறி வேறில்லை. இவவிஷயத்தில் எள்ளளவும் ஸகேத
ஹமே இல்லை. ஸுகரீவா! நீ காலமறிகதவர்களில் மேலா
னவன்; ஆயினும் நீ எமாறியிருக்கையால் உனகுக்
காலம் தெரியாதிருக்கின்றது. கன்கு விகஸித்த எழிலைப்
பாலின் புஷ்பங்களால் கறுத்தழகிய சரத்ருதுவும்கூட
வந்துவிட்டது. ஆகாயத்தில மேகங்கள் மறைதது க்ர

ஹஸ்தங்களும் கஷ்டிதங்களும் நிர்மலமாயிருக்கின்றன. சிரைகளும் நதிகளும் குளங்களும் எல்லாம் தெளிந்திருக்கின்றன. வானரர் தலைவனே! யுத்தத்திற்கு ப்ரயத்னஞ் செய்யும் ஸமயம் வந்துவிட்டது. வதனகமும் தீ அறிவதற்கிருக்கிற யாகைபால் மதிமயக்கமும் நிருகிறினையும் உடையவனும் தீர்க்கதர்சியுமான ஸுஷேணன் இதுவே ப்ரயாணகாலமென்று நிச்சயித்திருக்கின்றனன். மேலும் பலதரப்பட்ட வாக்கியங்களால் அவன மற்றிருநூர் மூலமாகச் சொல்விவிடுப்பின வார்த்தைகளை நாமறிவோம். ஸுஷேணன் சொல்லுகிறான்: 'ஸர்வஸைன்யாதிபதியான நீலனுக்கு ராஜனுடைய தகுந்த மந்திரிகள் ராஜனுக்கு அவச்யம் ஹிதத்தைப் போதிக்கவேண்டி மாகைபால் நான் இப்பொழுது ராஜபயத்தை விட்டினாக்குத்தெரிந்து ஹிதத்தைத் நிச்சயமாகச் சொல்லுகின்றனன். ராமனை கையில் வில்லேந்திக் கோபமூறுவானேயின், தேவாஸுரஸகிதனான ப்ரபஞ்சத்தையெல்லாம் தன்வசத்தில் கிடுத்திக்கொள்ளவல்லவன். எவர் கோபித்திருப்பானேயின், அருள்புரியச் செய்துகொள்ளவேண்டுமோ, அப்படிப்பட்ட பலவந்தனைக் கோபமூறச் செய்யலாகாது. அதிலும் விசேஷித்து அவனுல் முதலில் உபகாரம்பெற்று அதை மறவாதிருக்

கும் க்ருதஜ்ஞன் எள்ளளவும் அங்ஙனஞ் செய்யலாகாது. ராஜனே! நீ இப்பொழுது உன் புதல்வனேடும் பந்து ஜனங்களோடுங்கூடி அயனுக்குத் தலைசாயத்து நமஸ்கா ரஞ்செய்து பர்த்தாவின வசத்தில் பார்யை இருப்பது போல், நீ அவன் வசத்திலேயே நின்று உன் ப்ரதிஜ்ஞை யைத் தப்பாமல் நிறைவேற்றவேண்டும். கபிகுலநாதனே! நீ ராமன் வார்த்தையையாவது லக்ஷ்மணன் வார்த்தை யையாவது மனத்திலும் எள்ளளவும் அதிக்ரமிப்பது யுக்தமன்று. தேவநாதனேபோன்ற மஹா தேஜஸ்வி யாகிய ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் உள்ள திவ்யாலெ த்ர பலம் மாத்ரமேயன்றி மனுஷ்யர்களுக்கு ஸ்வபாவஸித் தமான தேஹபலமுங்கூட உன் மனத்திற்கே தெரிந்திருக் கின்றதல்லவா' எனறனன். முப்பத்திரண்டாவது ஸர்க் கம் முற்றிற்று.

அநதப்புரதிற்கு வநத லக்ஷ்மணனைத் தாரை அருளபுரியச செய்தல்.

அனந்தரம், ராமனது ஆஜ்ஞையால், சத்ருவீரர் களையழிக்குந் திறமையுடைய லக்ஷ்மணன, தன்னை அங் கதன் ஸுக்ரீவனிடம்போய்த் திரும்பிவந்து அழைக்க, பயங்கரமாகக் குஹைபோன்றிருககும் கிஷ்கிந்தையுள் ப்ர வேசித்தனன். மஹா சரீரர்களும் மஹா பலிஷ்டர்களு மாகிய வானரர்கள் அந்தப் பட்டணத்துவாசலில் காத் துக்கொண்டிருந்தனர். அவர்கள் லக்ஷ்மணனைப் பார்த் து, எல்லோரும் கையையக் கூப்பிக்கொண்டு நின்றிரு நதனர். அநத வானரர்கள், கோபித்துப பெருமூச்சுவிடு கின்ற தசரதகுமாரனகிய லக்ஷ்மணனைபபார்த்துப் பயந்து அவனருகிற்போக வல்லமையற்றிருந்தனர். ஸ்ரீமானகிய அந்த லக்ஷ்மணன் ரத்னங்களால் நிர்மிக்கப்பட்டுத் திவ்

யமாகிக் கடைகளில் ரத்னங்கள் பரப்பப்பெற்று அதிரமணீயமாகிப் பெரிய குஹைபோல் விளங்கும் அந்தக் கிஷ்கிந்தையைக் கண்டனன். அங்குத் தனிகர்களின் உப்பரிகைகளும் தேவாலயங்களும் நிறைந்திருந்தன. பலவகைப்பட்ட கடைகளும் விளக்கமுற்றிருந்தன. விரும்பினபலன்களெல்லாம் கொடுக்கும் பல வ்ருக்ஷங்களும் புஷ்பித்திருக்கும் பல புஷ்பவ்ருக்ஷங்களும் சோபித்திருந்தன. மேலும், தேவதைகளுக்கும் கந்தர்வர்களுக்கும் பிரதவராணையால் நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவர்களும் திவ்யமாலிகளையும் திவ்யாம்பரங்களையும் தரித்திருப்பவர்களும் கண்ணுக்கு வியப்பாகப் புலப்படுவோர்களுமாகிய வானரர்கள் ப்ரகாசித்துக்கொண்டிருந்தனர். சந்தனம் அகரு பத்மம் என்னும் நல்ல வாஸனையுடைய பூச்சுத்ரவ்யங்களின் வாஸனை பரவும் மைரேயமென்னும் மத்யங்களுடையவும் ஸாதாரண மத்யங்களுடையவும் வாஸனையாலும அந்தப பட்டணத்து ராஜமார்க்கங்களெல்லாம் மணங்கமழப் பெற்றிருந்தது. அந்தப் பட்டணத்தில் லக்ஷ்மணன், தெளிந்த நீர்பொருந்தி விளங்கும் பர்வத நதிகளையுங் கண்டனன். லக்ஷ்மணன் ரமணீயமான அங்கதன்வீட்டையும், மைந்தனது மந்திரத்தையும், த்விதனுடைய பவனத்தையும், கவயனுடைய கேஹத்தையும். கவாக்ஷனுடைய வாஸஸ்தானத்தையும், கஜனுடைய க்ருஹத்தையும், சரபனது பவனத்தையும், வித்யுன்மாலியின் ஸதனத்தையும், ஸம்பாதியின் நிகேதனத்தையும், ஸுர்பாக்ஷனுடைய ஸதனத்தையும், ஹனுமந்தனுடைய நிசாந்தத்தையும், அப்படியே வீரபாஹு ஸுபாஹு மஹா ப்ரபாவனாகிய நலன் குமுதன் ஸுஷேணன் தாரன் ஜாம்பவான் ததிவக்த்ரன் நீலன் ஸுபாடலன் ஸுநேத்ரன் ஆகிய இவர்களுடைய இருப்பிடத்தையுங்

கண்டனன். மஹாஜவபாவர்களான அந்த வானரப்ரேஷ்டர்களுக்கு ராஜமார்க்கத்தில் மிகவும் திடமாக ஏற்படுத்தப்பட்ட மேலான இருப்பிடங்களை லக்ஷ்மணன் கண்ணுற்றனன். அந்த க்ருஹங்கள் வெளுத்த மேகங்கள்போல் ப்ரகாசித்துக்கொண்டு திவ்யமாலைகளால் அலங்காரஞ் செய்யப்பெற்று மிகுந்த தனதான்யங்கள் நிறைத்து உத்தமஸ்த்ரீகளுடன் விளக்கமுற்றிருந்தன. அனந்தரம் மஹாபலஞ்சிய லக்ஷ்மணன, அதிரமணீயமாகித் தேவேந்த்ரபவனம்போன்றிருக்கும் வானரேந்த்ரனுடைய ஸுக்ரீவனுடைய பவனத்தைத கண்டனன். சுற்றிலும் சுண்ணம்படிக்கப்பெற்று வெளுத்த அரணுடன்கூடி எப்படிப்பட்டவர்க்கும் புகக்கூடாததாயிருந்தது. அதில் கைலாஸ சிகரம்போன்று வெளுத்த உப்பரிகையின் நுனி விளங்கிக்கொண்டிருந்தது. விரும்பும பலனகளை யெல்லாம் கொடுக்கும் பல வருக்ஷங்களும் புஷ்பித்திருக்கும் பல புஷ்ப வ்ருக்ஷங்களும் ப்ரகாசித்தன. இந்த ஸாமான்ய வருக்ஷங்களையன்றித் தேவேந்த்ரன கொடுத்த வ்ருக்ஷங்களும் விளக்கமுற்றிருந்தன. அந்தத் திவய வ்ருக்ஷங்கள் சோடை விளங்கப் பெற்றுக் கறுத்த மேகங்கள்போல் புலபபட்டுக்கொண்டு திவ்யமான புஷ்பங்களும் பழங்களும் நிறைந்து குளிர்ந்த நிழலைக் கொடுபபனவையாகி மநோஹரமாக ப்ரகாசித்தன. பலிஷ்டர்களான வானராகள் ஆயுதங்களைக் கையில் பிடித்து அதன் வாசலில் காத்துக்கொண்டிருந்தனர். மேலும் அது திவய மாலைகளால் விளங்குவதாகி வெளுத்திருந்தது. அதன் தலைவாசற்படி மேலான பொன்மயமாயிருந்தது. மஹாபலஞ்சிய லக்ஷ்மணன் எவராலும் தடுக்கப்படாமல ஸுர்யன் மஹாமேகத்தை அடைவதுபோல், ரமணீயமாகிய ஸுக்ரீவனது பவனத்தில் ப்ரவேசித்தனன். தர்மாத்மாவாகிய

லக்ஷ்மணன் பலவகை ஜனங்கள் பலரும் நிறைந்திருக்கின்ற ஏழுகட்டுகளைத் தாண்டிப்போய் அப்புறத்தில் மிகவும் ஸுரக்ஷிதமான பெரிய அந்தப்புரத்தைக் கண்டனன். அதில் ஆங்காங்குப் பொன்னாற் செயயப்பட்ட மஞ்சங்களும் வெள்ளி மஞ்சங்களுமான மேலான படுக்கை பரப்பப்பெற்ற உத்தம ஆஸனங்களும் பற்பல விளக்குழற்றிருந்தன அவன் அந்தப்புரத்தில் நுழைந்துகொண்டே வீணைமுதலிய வாத்யங்களின சப்தங்களைச் செவியுற்றனன். மேன்மைபொருமான ப்ருதியுடனகூடித் தந்திகளில் ஒலிகளும் காணவித கீதங்கள் கலந்து, அந்த த்வனிகளை சிகர்த்து எற்றக்குறை யில்லாதிருக்குமாறு பதங்களும் அக்ஷரங்களும் விளங்குமபடி கணடதறிஞலபாடும் கீதங்களால் அது மிகவும இனிபபை விளைத்துக்கொண்டிருந்தது. அதை மஹாபலனான, ஸுக்ரீவனது அந்தப்புரத்தில் காணவித தேவஸ்திரீகளும் ஆபரணங்களும் அமைந்து விளங்குகின்ற பர்யங்கத்திறலும் யெளவனப பருவத்திறலும மிகுந்திருக்கும படி கண்டனன். அதை லக்ஷ்மணன் ஸுக்ரீவனது அந்தப்புரத்தில் பிறந்து பலவகைப பூமாலைகளை அணிந்து மேலான பூஷணங்களைத் தரித்து, மேலும் பழங்கொண்டிருப்பதிலும் பூமாலை தொடுப்பதிலும் மிகுந்த ஸாமர்த்தியம் அமைந்திருக்கும் நாரீமணிகளைக் கண்டனன். தனது ஆபத்தை நிகளால் த்ருபதிபடைந்து தமக்கு நியமித்த கார்யங்களில் மன வுக்கமுடையவராகி உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து விளங்கும் ஸுக்ரீவனது பரிஜனங்களைக் கண்டனன். அனந்தரம் புந்மாருதியை அந்த லக்ஷ்மணன் சிலம்புத்தண்டைகளின் த்வனியையும் ஸ்த்ரீகளது அரைநூலமாலையிற் சதங்கைகளின ஓசையையும் செவியுற்று (அவை உபரி ஸுரதத்தை அறிவிக்கின்றன வாகையால) வெட்கினன். அவ்வீரன ஸ்த்ரீக

னின் ஆபரண த்வனியைக்கேட்டு அப்பொழுதுங்கூட ஸுக்ரீவன ஸ்த்ரீலோலனே யிருக்கிறா னென்று தெரிகின் றமையால கோபம் மேன்மேலும் பெருகப்பெற்றுத் திசை களெலலாம் சப்தத்தினால் நிரமபச் செய்துகொண்டு காணை இழுத்து ஒலிக்கச் செய்தனன். மஹா பாஹு வாகிய லக்ஷ்மணன ராமனுக்கு ஸுக்ரீவன்மேல உண்டா ன கோபம் தன்னையும் சூழ்ந்திருக்கையால், வேகத்து டன் அந்தப்புரத்தில் ஸுக்ரீவனிடம்போக த்வனரப்பட் டவ னெயினும் ஸதாசாரத்தினால அங்ஙனம் போகாதிருக் குமபடி தடுக்கபபட்டானகையால ஸ்த்ரீக ளிருகும் பட தேசத்தை விட்டு ஏகாகதத்தில் நின்றிருந்தனன். பிறகு வானராதிபதியாகிய ஸுக்ரீவன அதத்தனுஷ்டானகார த்வனிபால் லக்ஷ்மணன வருதானென்று தெரிந்துகொ ண்டு பயத்தனால உபர்தத ஆஸனதத்தினின்று சலித்த னன. அனந்தரம் தனக்குள் 'பூர்வம எனக்கு அங்க தன் சொனன பரகாரம் அண்ணனிடத்தில மிகுந்த பரீ தியுடைய லக்ஷ்மணன இதோ வருதனன். இது வெளிச் சமே' என்று சொல்லிக்கொண்டனன். ஸுக்ரீவன லக்ஷ்மு ணன் வருதானென்று அங்கதன் சொலலத் தெரிந துகொண்டது மாத்ரமே யனறி தாமணைவியினுலுங்கூடத் தெரிந்துகொண்டனன். அனந்தரம பயத்தினால அவன் வரம் சாமிலலாமல உலரப்பெற் றிருந்தன. பிறகு வானரஸ்த்ரீஷ்டானைகிய அந்த ஸுக்ரீவன பராகினறி மனவுக்கங் கொண்டி பயத்தினால் மனம் தத்தளிகபப் பெற்று, இனிய காட்சியுடையளாகிய தாரையைப பார்த் து, ஹிதமாயிருக்குமபடி 'அழகிய புருவமுடையவளே! ராமன் தம்பியாகிய லக்ஷ்மணனுடைய வ்ருதயம் இயற் கையாகவே மெதுவாயிருபபது. அபபடிப்பட்டவன இப் பொழுது கோபித்துக்கொண்டி வருதிருக்கிறுபபோலிருக்

கிறதே! அதற்குக் கோபத்திற்குக் காரணம் எதுவாயிருக்கும்? சிக்கிதக் கிடமாகாதிருப்பவளே! அந்தக் குமாரனுகிய லக்ஷ்மணனுக்குக் கோபம் உண்டான காரணம் என்னவென்று உனக்குத் தோற்றுகின்றது. லக்ஷ்மணன் கேவலனன்று; புருஷர்களிற் சிறந்தவன். அப்படிப்பட்டவன் காரணமில்லாமல் கோபஞ்செய்யமாட்டான். நான் எதேனும் இந்த லக்ஷ்மணனுக்கு அப்ரியஞ் செய்ததாக உனக்கு ஞாபகம் வருகின்றதா? இதை நீ வேகமாகப் புத்தியால ஆலோசித்து எனக்குச் சொல்லவேண்டும். அதைவிட நீயே லக்ஷ்மணனிடம்போய் அவனைக் காண்பது யுக்தமாயிருக்கின்றது. அவனைப்பார்த்து சல்லவார்த்தைகளால் தெளிவுறச் செய்வாயாக. பெரியோர்கள் எப்பொழுதும் ஸ்த்ரீகளிடம் கொடிதாக நடக்கமாட்டார்கள். ஆகையால் லக்ஷ்மணன் உனைனப் பார்த்தவுடனே மனந் தெளியப்பெற்றுச் சினதாபத்தைக் காட்டமாட்டான். முதலில நீபோய லக்ஷ்மணனிடம் நல்வார்த்தைகள் பேசவேண்டும். இவ்வண்ணம் தொடங்குகையால் கோபத்திலை சிலதப்பி யிருக்கும் அவனது இந்த்ரியங்களும் மனமும் கலகலதீர்ந்து தெளிவுபெற்றவை யாகும். அதன்மேல் தாமரையிதழ்போன்ற கண்களையுடைய அந்த அரிதமஞ்சிய லக்ஷ்மணனை நான் பார்ப்பேன்' என்றனன். அந்தத் தாரை லம்போதரத்தில் மெய்ம்மறந் திருப்பவளாகையால் அடிகள் தழுதழுக்கப்பெற்று மத்யபான மதத்திலை கண்கள் திடம்தப்பிச் சோர்ந்திருக்கவும் ரத்னகேயூரால் படுத்துணி சிறிது அவிழ்ந்தது விழுகையில் அரைநாண் மாலையும் அதனுடன் அணிந்த பொற்சாதும்கலத்து தொங்கவும் லம்போதர சின்னங்கள் விளங்கவும் வணக்கத்திலை தடிபோல் நுண்ணியதானமேனி வணங்கவும் பெற்று லக்ஷ்மணனது அருகிற் சென்றனள். அந்த ராஜ

குமாரன் பரமதார்மிக ணுகையால் அங்ஙனம் ஸம்போக சின்னங்களோடுவரும் வானராராஜனது பார்யையாகிய தாரையைப் பார்த்தவுடனே, அவளது காந்தியையும் ஸம்போகத் தவட்சியால் விளையும் மடப்பம் முதலியவற்றையும் பாராட்டாமல் உதாஸீனஞ்சி ஸத்ரீஸந்நிதான மாகையால கோபத்தை அடகித் தலிவணக்கிக்கொண்டிருந்தனன். அந்தத் தாரை ஸம்போக சினனங்களோடு வந்தவளாயினும் பானமதத்திணல் அவற்றில் வெட்கமில்லாமல், தான வந்தவுடனே லக்ஷ்மணன் பார்வை தெளிந்திருப்பது பற்றியும் ஸ்னேஹ பலத்திணலும் தைர்யம் மிகப் பெற்றவளாகி அவனை கல்வார்த்தைகளால முனனம் உபலாலனஞ் செய்துகொண்டு மிகவும பொருள அமைகதிருககும்படி, 'ராஜகுமாரனே! உனக்குக் கோபம் வருவதற்குக் காரணம் யாது? உன் வாய் வார்த்தையில் கிற்காமல் எவன் அதிக்ரமித்தனன்? எவன் முன்பின பாராமல் உலர்ந்த அடவியில பற்றி பெரிகின்ற காட்டுத்தீயினருகே போக வல்லவன்?' எனறனள். தாரை அங்ஙனம் கல்வார்த்தைகளோடு முற்றுமுன்னம் பேசி, மிகுந்த நீதியிணல ப்ரயோஜனத்தைக் காட்டிக்கொண்டு கபடமின்றி ஸ்னேஹம் விளங்கும்படி உரைத்த வார்த்தையைக்கேட்டு, லக்ஷ்மணன் 'தாரே! நீ பர்த்தாவின் கண்மையில் மன வுக்கமுடையவளாகையால விஷயம் இன்னது இனியதென்று அறியாமட்டாய். உன் பர்த்தாவாகிய அகத ஸுக்ரீவன் காம வயாபாரங்களில கால் தாழப்பெற்றுத் தர்மார்த்தங்களை ஸங்க்ரஹிக்கமல் அவை அழிந்துபோகும்படி நடகின்றனன். இது உனக்குத் தெரியாதோ? தாரே! ஸுக்ரீவன் ராஜகார்யங்களைப் பாரான; துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்ற எங்களைப் பாரான; மந்த்ரிகளும் தாணுமாக எப்பொழுதும்



1834. அந்தப்புரத்திற்கு வந்த லக்ஷ்மணனைத் தாரை ஸமாதானப் படுத்துதல்.

மீளவும் லக்ஷ்மணனைப் பார்த்து நம்பிக்கை உண்டாகும் படி 'ராஜகுமாரனே! வீரர்களில் தலைவனே! ஸுக்ரீவன் காம பரவசனாகியிருக்கின்றமையால் அவன்மேல் கோபித் துக்கொள்வதற்கு இது ஸமயமன்று. மேலும் உங்களுக் குப் பந்துவாயிருக்கின்ற அவன்மேல் இப்படி மிகுந்த கோபம்வைப்பது யுக்தமன்று. இவ்வளவுமாத்ரமேயன்றி இவன் உங்கள் கார்யத்தை நிறைவேற்றுவதிலேயே ஊக் கமுடையவனாயிருக்கின்றனன். இத்தனை காரணங்களைப் பற்றி இப்பொழுது இவன் காமவிகாரத்தினால் மதி மயங்கி உங்கள் கார்யத்தில் கொஞ்சம் பராக்காயிருப்பி னும் நீ பொறுக்கவேண்டியதே. குமாரனே! வீர்யமுத லிய குணங்களில் மேலாயிருப்பவனை தன்னைகாட்டிலும் குறைந்த பலமுடைய அற்பனைமேல் எவ்வண்ணம் கோப முறலாகும்? முயற்சியுடையவனும சாந்தியசனும் பெ ருந்தவத்திற் கிருப்பிடமுமாகிய உனக்கன்போனற மற்ற புருஷன் எவன் கோபத்திற்குட்படுவான்?' என கோபத் தைதே அறிந்தாயன்றி அதன் காரணத்தை அறியவில் லையே' எனனைவணடாம். ஸுக்ரீவனுக்குப் பரம ஆப்த னாகிய ராமனுக்குக கோபம் உண்டானவகையும் அதற்குக் கோபம் இபபடிப்பட்டதினபதையும் கான அறிதிவன். அதற்குக காரணம ஸுக்ரீவன் ஸீதையைத்தேட முயற் சி செய்யாமல் காலவிளம்பம் செய்கையே யென்றறிவன் நீ எமக்கு எதைச்செய்தனையோ அம்மஹாபகாரத்தை யுங்கூட அறிதிவன. அதற்குப்பதில் நாங்கள் என்செப் யவேண்டுமோ, அவையும் நான் அறிதிவன். புருஷதிலக் னே! மேனியிற்பிறக்கும் காமத்திற்குள்ள வலிவு ஸஹிக் கமுடியாதென்பது தெரிந்தவிஷயதிம. இப்பொழுது ஸுக்ரீவன காமத்தினால் இடைவிடன்றி எவரிடத்தில் ம னஞ்செல்லப் பெற்றிருக்கினறாரே, அந்த ஸ்த்ரீகளையும்

கூட அறிவேன், நீ இங்ஙனம் கோபத்தின்வசம் அகப் பட்டுக் கொண்டிருப்பது கண்டால் உனக்கு எம்மைப் போல் காமதந்த்ரமாகிய ராதிக்ரீடாதிகளில் அவ்வளவு ஜ்ஞானம் இல்லையென்று தோற்றுகிறது. காமதந்த்ரங் களை அறிந்திருப்பாயாயின, நீ அங்ஙனம் காமத்தில் காலதாழுப் பெற்றிருக்கின்ற ஸுக்ரீவனிடத்தில் த்வே ஷஞ் செய்திருக்கமாட்டாய். காமலோலுகிய மனிதன் தேசகாலங்களையாவது தர்மார்த்தங்களையாவது பார்க்க மாட்டானல்லவா? லக்ஷ்மண! நீ சத்ருக்களை அடக்குந் தன்மையன். ஆயினும் என அருகிலிருப்பவனும் ஆனது பற்றியே காம வ்யாபாரங்களில் கால தாழ்ந்து காமாவே சத்தில வெட்கமின்றியிருக்கும உன்னுடன் பிறந்தவன் போன்ற வானரயமச ரானுகிய ஸுக்ரீவனை இவ்வள வில் பொறுக்கவேண்டும். தர்மத்தையும் தவத்தையு மே விரும்புகின்ற மஹர்ஷிகளுங்கூடக் காமத்தைப் பின் தொடர்ந்து காமினிகளிடத்தில் இடைவீடின்றி மன மயக்கமுற்றிருப்பார்கள். இனி இயற்கையாகவே சபல னுகிய வானரன், அதிலும் வானரராஜனு யிருப்பவன் காமஸுகங்களில் கால் தாழுப்பெறுமல் எப்படி இருப் பான?' என்றனன். அந்தத்தாரை, இங்ஙனம் அளவி டக்கூடாத மஹிமையுடைய லக்ஷ்மணனுடன மிகவும் பொருளடக்கமுடைய மொழிகளைக்கூறி மீளவும் லக்ஷ்ம ணனைப் பார்த்து லீலையுமைத் திருக்குமாறும் மத்யமான மதத்தினுல் தழுதழுப்புற் றிருக்குமாறும் தன பர்த்தா வுக்கு நன்மையை விளைக்கும் வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கிப் 'புருஷதிலகனே! ஸுக்ரீவன் மன்மத வ்யா பாரங்களில் மன வுக்கமுற்றிருப்பினும் வெறுமனே இரு க்கிறு னல்லன். உங்கள் கார்யத்தை நிறைவேற்றும்பொ ருட்டு ப்ரயத்னஞ் செய்வதற்காகமாத்ரம் வெகுதாளைக்கு

முன்னமே வானரர்களுக்கு ஆஜ்ஞை செய்திருக்கின்றனன். மஹா பராக்ரமசாலிகளும் காமரூபிகளுமாகிய வானரவீரர்கள் தமது வாஸஸ்தானமாகிய நாலு பர்வதங்களில் ஸின்று லக்ஷங்கோடிக் கணக்குடையவர் வந்திருக்கின்றனர். ஆகையால் மஹா பாஹுவே! உள்ளேவருவாயாக. அந்தப்புரஸ்த்ரீகளிருக்குமிடத்திற்கு வரலாகாதென்று இங்கேயே நிற்கும் ஸதாசாரத்தை அனுஷ்டித்துப் பாதுகாத்துக் கொண்டவனுமினை. ஸ்னேஹத்தைப் பற்றித் தனது மித்ரர்களின் பார்யைகளைப் பார்ப்பது தோஷமன்று' என்றனள். சத்ருக்களை யழிப்பவனும் மஹா பாஹுவுமாகிய அந்த லக்ஷ்மணன் தாரையும் உள்ளே வருவாயென்ற ணழைக்கையாலும் ராமகார்யத்திலுள்ள விரைவினாலும் அந்தப்புரத்திற்கே போயினன். அனந்தரம் லக்ஷ்மணன் அங்ஙனம் உள்ளேபுகுந்து மிகுந்த விலையுள்ள பதிக்ஷைகள் பரப்பப்பெற்றுப் பொன்மயமான பரமாஸனத்தில் ஸுகர்யன்போல் உட்கார்ந்திருக்கின்ற ஸுக்ரீவனைக் கண்டனன். அந்த ஸுக்ரீவன் உத்தமங்களான காணுவித ஆபரணங்களின் காந்திகளால் சரீரம் முழுவதும் விசித்ரமாக விளங்கபெற்றுத் திவ்யரூபத்துடன் ப்ரகாசித்துக்கொண்டிருந்தனன். பெரும்புகழோனாகிய அந்த ஸுக்ரீவன் திவ்யங்களான பூமாலைகளையும் ஆடைகளையும் தரித்து மஹேந்த்ரன்போல் ஜயிக்கமுடியாதவனாகித் திவ்யாபரணங்களையும் திவ்யமாலைகளையும் தரித்திருக்கும் அழகிய மடந்தையர்கள் சூழபெற்று விளக்கமுற்றிருந்தனன். லக்ஷ்மணன அங்ஙனம் ஸ்த்ரீஜனமத்யத்தில் பேரோலக்கத்துடன் காமபரவசனாயிருக்கின்ற ஸுக்ரீவனைக் கண்டு மிகுந்த கோபாவேசங்கொண்டு கண்கள் சிவக்கப்பெற்று யமனைப்போல் பயங்கரனாயிருந்தனன். அங்ஙனம் மேலான பொன்வர்ணமும் மிக

ரும் அகன்ற கண்களும் உடைய அவ்வீரன், ருமையை அழைத்த அசனத்துக்கொண்டி சிறந்த பொன்னற் செய்யப்பட்ட பரமாஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ஸுக்ரீவன், மேலும் விசாலமான கண்களையுடைய மஹாபலஞ்சிய லக்ஷ்மணனைக் கண்டனன. முப்பத்து மூன்றாவது ஸர்க்கமுமுற்றிற்று.

{ஸுக்ரீவன் லக்ஷ்மணன ராமன்சொன்ன ஸமாதானத்தையச சொலலுதல.}

அங்ஙனம் அந்தப்புரத்தில நுழைந்து கோபாவேசங்கொண்டி எதிரினறி யதிருக்கும் புருஷதிலகனையிய லக்ஷ்மணனைக் கண்டி ஸுக்ரீவன் பயமுற்றனன். அண்ணனாகிய ராமனுக்கு ஸ்பஸனம் உண்டானதைப் பற்றிப் பரிதபிக்கினறவனும் கோபாவேசத்தினால பெருமூச்செறிந்துகொண்டி தேஜோவிசேஷத்தினால ஜ்வலிக்கின்றவனுமாகிய தசரதகுமாரனான லக்ஷ்மணனைக் கண்டி ஸுக்ரீவன உயர்ந்த ஸ்வர்ணஸிம்ஹாஸனத்தினின்றும் கீழே குதித்து அலங்காரஞ் செய்யப் பெற்றதும் உத்ஸவத்தின் பொருட்டு மேல் எடுக்கப்படுவதுமாகிய இந்த்ரத்வஜம் போல் எழுந்து நின்றனன். ஆகாயத்தில் பூர்ணசந்த்ரன் உதித்த வுடனே பின்னே நக்ஷத்ரங்கள் உதிக்குமாபோல், ஸுக்ரீவன் எழுந்தவுடனே அவன் பின்னே ருமைமுதலிய ஸ்த்ரீகள் அனைவரும் எழுந்தனர். மத்யபான மதத்தினாலும் மன்மதாவேசத்தினாலும் கண்கள் மிகவும் சிவக்கவும் ஓளிவிளங்கவும் பெற்ற ஸுக்ரீவன், கைகூப்பி லக்ஷ்மணனை எதிர்கொண்டி பெரிய கல்பவ்ருக்ஷம்போல் நின்றிருந்தனன். நக்ஷத்ரங்களினிடையில் சந்த்ரன்போல் ஸ்த்ரீகளின் இடையில் ருமையுடன் நிற்கின்ற ஸுக்ரீவனைக் கண்டி லக்ஷ்மணன் கோபமுற்றவ

ணுகிப் 'பலம் மிகுந்திருக்கப் பெற்றவனும் நற்குலத்தில் பிறந்தவனும் வருத்தமுற்றவரிடம் தயையுடையவனும் இந்திரியங்களை வென்றவனும் செய்த உபகாரங்களை மறவாதவனும் உண்மையே பேசுந் தன்மையனுமாகிய மன்னவன் உலகத்தில் புகழ்பெறுவான். எந்த மன்னவன் அதர்மத்தில் மனவுக்கங்கொண்டு தனக்கு முன்னம் உபகாரஞ்செய்த மித்ரனுக்கு அஸத்யமாகப் ப்ரதிஜ்ஞைசெய்வானே, அவனைக்காட்டிலும் பாபிஷ்டன ப்ரபஞ்சத்தில் ஒருவனும் இல்லை. புருஷன் ஒரு குதிரைவிஷயமாக அஸத்யஞ் சொல்வானின் நூறுகுதிரைகளைக்கொன்ற பாபத்தைப்பெறுவான். ஒரு பசுவின்விஷயமாக அஸத்யம் பேசுவானேயின், ஆயிரம் பசுக்களைக்கொன்ற பாபத்தைப் பெறுவான். அங்ஙனம் புருஷன்விஷயமாக அஸத்யங்கூறுவானேயின் ஆத்மஹத்தியையும் ஸ்வஜனஹத்தியையும் செய்த பாபத்தைபபெறுவான. இனி மஹாபுருஷனைகுறித்து ராமன் விஷயத்தில் அஸத்யம் பேசுதல சொல்லவேண்டுமோ? கபீச்வரனே! முன்னம் மித்ரர்களால் தன் கார்யத்தைதச் செய்வித்துக்கொண்டு எவன் வார்த்தையினபடி மீளவும் அவரது கார்யத்தைதச் செயயமாட்டானோ, அவன் க்ருதகனனுவான். ஸமஸ்த ப்ராணிகளும் அவனை வதிகக லாகும். வானரனே! பூர்வம் ஸ்வாயம்புவமனு க்ருதக்ன னைப் பார்த்துக் கோபாவேசங்கொண்டு ஸமஸ்த லோகங்களாலும் கொண்டாடப்பட்ட இந்த ப்லோகத்தை மொழிந்தனன். அதைப் படிக்கிறேன் கேட்பாயாக.

'ப்ரஹ்மஹத்தியை செய்தவனுக்கும் மத்யபானஞ் செய்தவனுக்கும் பொன் திருடினவனுக்கும் வ்ரதங்கெட்டவனுக்கும் (அதாவது=குருபக்தி குருசுச்ரூஷை முதலிய ப்ரஹ்மசர்ய வ்ரதங்கெட்டவனுக்கும்) குரு பார்யையிடம் போனவனுக்கும் ப்ராயஸ்சித்தம் பெரியோர்களால் விதிக்கப்

பட்டிருக்கின்றதேதயன்றி க்ருதக்ணனுக்கு மாத்ரம் ப்ராயச்சித்தமே இல்லை' என்பதுவே. வானரா! நீ முன்னம் ராமனல் உன் கார்யத்தைச் செய்வித்துக்கொண்டு க்ருதக்ருத்யனாகி (ப்ரயோஜனங் கைகூடப்பெற்றுப்) பிறகு நீ அவன் கார்யஞ் செய்யாதிருக்கின்றனை. ஆகையால் நீ பூஜிக்கத் தகாதவனும் க்ருதக்ணனும் அபத்தஞ்சொல்பவனுமாகின்றனை. வானரா! க்ருதக்ணனாகாமல் ராமன் செய்த உபகாரத்தை மறவாதவனாகவே யிருப்பாயாயின், ராமனல் உன் கார்யத்தை நிறைவேற்றிக் கொண்டதற்குப் பதிலாக ஸீதையைத் தேடும்பொருட்டுத் தகுந்த ப்ரயத்னஞ செய்யவேண்டுமல்லவா? ஸர்ப்பம், தவளைகளைத் தனருகில் வரவழைத்து விழுங்கும்பொருட்டு அவைகளைப்போல் தானுங் கூச்சலிடும். நீயும் முதலில் கார்யத்தின்பொருட்டு ஸத்யஸந்தன்போல் அபிநயஞ்செய்து, இப்பொழுது க்ராம்யங்களான விஷயபோகங்களில் மனந் தாழப்பெற்று ப்ரதிஜ்ஞையைப் பொய்யாக்கிவிட்டனை. ராமன், தவளைபோல் கூச்சலிடும் ஸர்ப்பம்போன்றவனிவனென்று உன்னை அறியாமல் அகப்பட்டுக்கொண்டனன். மஹாபாக்யமுடையவனும் தயைக்கிருப்பிடமும் மஹாநுபாவனுமாகிய ராமன், நீ பாபாத்மாவும் துர்ப்புத்தியுமாயிருப்பவனென்றறியாமல் வானர ராஜ்யத்தை உனக்குஸம்பாதித்துக் கொடுத்தனன். ராமன் எப்படிப்பட்ட கார்யத்தையாயினும் அவலீலையாகவே செய்துமுடிக்க வல்லவன். அப்படிப்பட்ட ராமன் உனக்குச்செய்த உபகாரத்தை நினையாமல் மறப்பாயாயின், இதோ இப்பொழுதே கூரான பாணங்களால் அடிக்கப்பட்டவனாகி வாலியைப் பார்க்கப்போவாய். ஸுக்ரீவா! வாலி ஹதனாகி எந்த மார்க்கத்தினல் போயினனோ, அந்தமார்க்கம் இப்பொழுது மூடப்படவில்லை. ஆகையால் செய்த ப்ரதிஜ்ஞை

யைத் தவறவேண்டாம். வாலி போனவழியே போகவேண்டாம். நீ இக்ஷ்வாகு வம்சத்திற்கு அலங்காரனுகிய ராமனது விலவினின்று கிளம்பின வஜ்ரம்போன்ற பாணங்களை நீ இனிப் பார்க்கப்போகின்றனை. ஆனல் இதுவரையில் நீ அந்தப் பாணங்களின் கொடுமையை அனுபவித்ததில்லை. இது நிச்சயம். ஆனதுபற்றியே நீ விஷயஸுகங்களை அனுபவிக்கின்றனை. இங்ஙனம் ஸுகங்களில் மனக்தாழுப்பெற்று ராமனது கார்யத்தை மனத்திலுங்கூட நினையாதிருக்கின்றனை' என்றனன். முப்பத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

தாரை மீளவும் லக்ஷ்மணனை நலவாதத் தைகளால் ஸமாதானப் படுத்துதல்.

ஸுமித்ரா புத்ரனுகிய லக்ஷ்மணன் ஸ்தோஜாவிசேஷத்தினல் ஜ்வலிப்பவனைபோல் புலப்பட்டுப் பருஷமாகப் பேசிக்கொண்டிருக்கையில், சந்த்ரபிம்பம்போன்ற முகமுடைய தாரை அவனைப் பார்த்து 'லக்ஷ்மண! நீ இங்ஙனஞ் சொல்லலாகாது. வானரேச்வரனுகிய ஸுக்ரீவன் எவர்க்கும் பருஷமாகப் பேசத்தகுதனவனல்லன. அதிலும் விசேஷித்து ப்ரியமித்ரனுகிய உனக்கு இங்ஙனம் பருஷமாகப் பேசுவது யுக்தமன்று. கபீச்வரனுகிய ஸுக்ரீவன் க்ருதக்னனன்று; வஞ்சகனுமன்று; மறைவாக அனிஷ்டஞ் செய்பவனுமன்று; கொடுந்தன்மையனல்லன். அபத்தங் கூறுவோனுமல்லன; எள்ளளவுங் கபடமுடையவனலலன். வீரா! வீரனுகிய இந்த வானரன், ராமன் தனக்குப் பிறரால் செய்யமுடியாத மஹோபகாரம் யுத்தத்தில் செய்ததை எள்ளளவும் மறந்தவனல்லன். பரந்தபா! ராமனது அனுக்ரஹத்தினலேயே ஸுக்ரீவன் இப்பொழுது கீர்த்தியையும் ஸாச்வதமான கபிராஜ்யத்தை

யும் பார்யையாகிய ருமையையும் என்னையும் பெற்றனன் இவன் முன்பு வெகுகாலம் மிகவும் பெருங்கற்களில் படுத் திருந்தாரைகையால் இப்பொழுது இம்மஹாஸுகத்தைப் பெற்று மேனகையைப் பெற்ற விஸ்வாமித்ரமுனிவரைப் போல் காலம்வந்த ஸந்தர்ப்பத் தெரிந்துகொள்ளாதி ருக்கின்றனன். லக்ஷ்மண! முன்னம் தர்மாத்மாவாகிய விஸ்வாமித்ரமஹர்ஷி மேனகையுடன மன்மதஸுகங்க ளில் கால் தாழப்பெற்றுக் காலம் ப்ராப்தமாயிருப்பதை அறியாதிருந்தாரல்லவா? இனிப் பிறருடைய ஸங்கதி யைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? லக்ஷ்மண! வெகுகா லம் கஷ்டப்பட்டு, இளைப்புற்றிருந்து இப்பொழுது சரீர ஸ்வபாவமாகிய மன்மத வ்யாபாரத்தில் அகப்பட்டுக்காம ஸுகங்களில் த்ருப்தி உண்டாகப்பெறாமல் சபலையிருப் பவளைகையால் இவன் காமபரவசனாயிருக்கும் தப்பை இப் பொழுது பொறுக்கவேண்டும். அப்பனே! லக்ஷ்மண! நீ ஸுக்ரீவனது நிச்சயமான அபிப்ராயம இனனதென்று தெரிந்துகொள்ளாமலும முன்பின பராக்ரமமும் அற்பன் போல் திடீலென்று கோபத்திற்காளாவது யுக்தமன்று. புருஷச்ரேஷ்டனே! விவேகமுடையோர்களாகிய உன்னைப் போன்ற மஹாபுருஷர்கள் யுக்தாயுக்தங்களை ஆலோசியா மல் திடீலென்று கோபமுறமாட்டார்கள். லக்ஷ்மண! நீ ஸமஸ்த தர்மங்களையும் அறிந்தவன். ஸுக்ரீவன் விஷய மாக ராமன் முயற்சிகொண்டு உன்னைத் தெளிவுறச்செய் யப் பார்க்கின்றனன். மஹாரோஷத்திலல் மிதமினறி உண்டாயிருக்கின்ற இத்தத்தாகதரவைத் துறப்பாயாக. அருள் புரிவாயாக. ராமனுக்கு ப்ரீதி உண்டாகும்பொ ருட்டு ஸுக்ரீவன் தன்பத்னியாகிய ருமையையும் என்னை யும் வானராராஜ்யத்தையும் ராகஜுதுரகாதி தனங்களையும் தான்யங்களையும் ரத்னங்களையும் மற்றுமுள்ள எல்லாவற்

றையும் கைவிடுவானென்று எனக்குத் தோற்றுகின்றது. ஸுக்ரீவன் யுத்தத்தில் ராவணனைக்கொன்று ரோஹிணி யோடுகூடிய சந்த்ரனைப்போல் ஸீதையுடன் ராமனைச்சேர்ப்பிக்கப் போகின்றனன். லங்கையில், ராக்ஷஸர்கள் லக்ஷங் கோடியே மூன்றுலக்ஷத்து அறுபதினாயிரம்பேர் இருப்பதுமாத்ரமேயன்றி மேலும் பல லக்ஷக்கணக்குடைய ராக்ஷஸர்களும் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் நினைத்தபடி வடிவங்கொள்ளவல்லவர். அவர்களை எதிர்ப்பது எப்படிப்பட்டவர்க்கும் ஸாத்யமன்று. அப்படிப்பட்ட ராக்ஷஸர்களெல்லோரையும் கொல்லாமல், ஸீதையைக் கொண்டுபோன ராவணனைக் கொல்வது ஸாத்யமன்று. லக்ஷ்மண! அந்த ராக்ஷஸர்களை யுத்தத்தில் கொல்லுவது ஸாத்யமன்று அதிலும் விசேஷித்துக் கொடுஞ்செயலுடைய ராவணனை, ஸுக்ரீவனுடைய ஸஹாயஸம்பத்தியில்லாமல் கொல்லுவது எவ்விதத்திலும் ஸாத்யமன்று. ராவண வ்ருத்தாந்தமெல்லாம் எனக்குத் தெரியாது; வானரத்தலைவனாகிய வாலி இந்த லங்கையில்லாள் தெரிந்தவனைகையால் இப்படியென்று எனக்குச் சொல்லினன். இது எனக்குள் தான் தெரிந்துகொண்டதன்று. அவனிடங் கேட்டேனைகையால் சொல்லுகின்றனன். உனக்கு ஸஹாயஞ் செய்வதற்காகவே யுத்தத்தின் நிமித்தம் பல வானரர்களையும் வானரயூத நாதர்களையும் அழைத்துக்கொண்டு வரும்பொருட்டு வானரவீரர்களை அனுப்பியிருக்கின்றனன். இந்தக் கபீச்வரனாகிய ஸுக்ரீவன், மிகுந்த பராக்ரமமுடையவர்களும் மஹாபல ஸம்பன்னர்களுமாகிய வானரர்கள் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனன். அந்தக் காரணத்தைப்பற்றி ராமனுக்குக் கார்யஸித்தியாகும் பொருட்டு இங்கிருந்து இன்னம் வெளிப்புறப்படாதிருக்கின்றனன். லக்ஷ்மண!

நீ வருவதற்குமுன்னமே ஸுக்ரீவன் ஸீதையைத்தேடும் விஷயமாக வானர ஸைன்யங்களையெல்லாம் பதினேழு தினங்களுக்குள் வரவேண்டுமென்றும் வராதவனுக்கு மரணமே தண்டனையென்றும் ஏற்பாடு செய்திருக்கின் றனன். ஆகையால் அந்தப்ராகாரம் மஹாபலிஷ்டர்க ளான வானரர்கள் அனைவரும் இன்றைக்கு இவ்விடம் வந்து சேரவேண்டும், சத்ருக்களை யழிப்பவனே! காகுத் ஸ்தா! ஆயிரங்கோடி கரடிகளும் ஆயிரங் கொண்டைமு யல்களும் தேஜஸ்ஸை ஜ்வலிக்கப்பெற்ற பலகோடி வான ரர்களும் இப்பொழுது வந்து உன்னைப் பணிவார்கள். கோபத்தை விடுவாயாக. வானரேச்வரனே!! ஸுக்ரீவ னது வனிதைகள் அனைவரும் உன முகத்தைப்பார்த்து முன்பு வாலி வதத்தினால் பயம் அனுபவித்தவர்களாகை யால் அப்படிப்பட்டது இப்பொழுது ஏதேனும் விளையு மோவென்று ஸகேதஹப்பட்டுக் கோபத்தினால் ரக்தம் போல சிவந்திருக்கின்ற உன் கண்களைக்கண்டு சிறிதும் மனக்களிப்பு கோப்பெறுதிருக்கின்றனர். ஆகையால் கோபத்தைவிட்டு அருள்புரிவாயாக' என்றனள். முப்பத் தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

லக்ஷ்மணனும் ஸுக்ரீவனுமஸ்னேஹத் துடன் ஸம்பாஷித்தல்.

தாரை இங்ஙனம் வணக்கமும் கர்மமும் அமைந் திருக்கும்படி உரைத்த வார்த்தையைக் கேட்டு லக்ஷ்ம ணன் ம்ருதுஸ்வபாவனாகையால அந்த வார்த்தையை அங்கீகரித்துக் கோபத்தைத் துறந்து மனந்தெளிவுப் பெற்றனன். தாரையின் வார்த்தையை லக்ஷ்மணன அங் கீகரித்த வுடனே ஸுக்ரீவன், ஸுனைஞ் செய்தவுடன் ஈரத்துணியை விடுவதுபோல், லக்ஷ்மணனிடத்தில் உன்

டான பயத்தைத்துறந்து மனம் தெளியப்பெற்றனன். அனந்தரம் வானரேஸ்வரனுகிய ஸுக்ரீவன் தன் கண்டத்தில் விசித்ரமாகிப் பலவித போகங்களைக்கொடுக்கும் திவ்யமான பூமாலையை அறுத்துப் பொகட்டு மதமயக்கம் தெளியப்பெற்றனன். ஸமஸ்தவானரர்களுக்கும் பதியாகிய அந்த ஸுக்ரீவன் பயங்கரனை லக்ஷ்மணனுக்கு ஸந்தோஷத்தை விளைத்துக்கொண்டு வணக்கத்துடன் 'ஸுமித்ராபுத்ரனே! எனனைவிட்டிருந்த ஸம்பத்தும் கீர்த்தியும் ஸாம்ராஜ்யமான வானராராஜ்யமும் மற்றுமுள்ள இவையெல்லாம் எனக்கு ராமனது அனுக்ரஹத்திலேயே மீளவும் சேர்ந்தனவேயன்றி வேறில்லை வீரா! அரிதமானே! தான்செய்த வீரகார்யத்திலல் பரக்யாதியடைந்த அம்மஹாபுருஷன் ராமன் எனக்காக வாலியின்மேல அங்நனம் பராக்ரமத்தை உபயோகப்படுத்தினதற்குத் தகுந்த ப்ரத்யுபகாரம் எவனுற் செய்யமுடியும்? மஹாவ்ருக்ஷங்களேழையும் பர்வதத்தையும் பூமியையும் ஓரே பாணத்திலல் பிளக்கும்படியான மஹாவீரனுக்கு மற்றொருவன ஸஹாயத்தால் என்னகேவண்டும்? லக்ஷ்மண! ராமன் விலவின் நாணை இழுத்து ஓலிப்பிக்கையில் அதத்வனியால் பூமியும் பர்வதங்களும் நடுங்கினவே! அப்படிப்பட்ட மஹாவீரனுக்குப் பிறர் உதவியால் பணி யாதிருக்கின்றது? புருஷதிலகனே! சத்ருவாகிய ராவணனையும் அவனது ஸைன்யத்தையும் வதிக்க ராமன் முன்னே நடக்கையில் நான அவனைப் பின்தொடர்ந்து வரவேண்டியவனேயன்றி அவனுக்கு ஸஹாயஞ்செய்ய நான் எவ்வளவு? நான் 'ராமன் என்னை ஒன்றுஞ்செய்யமாட்டான்' என்கிற நம்பிக்கையாலும் நட்பின் மிகுதியாலும் ஏதேனுஞ் சிறிது மிதமிஞ்சி நடந்தேனையினும் உங்கள் வேலைக்காரனுகையால அந்த அபராதத்தைப் பொறுக்கவேண்டும். உலகத்தில் தப்பு

செப்பாதவன் எவனும் இல்லை' என்றனன். மஹாநு பாவனாகிய ஸுக்ரீவன் இவ்வண்ணம் சொல்லிக்கொண்டி ருக்கையில், லக்ஷ்மணன் ஸந்தோஷமுற்றவனாகி ப்ரேமத் துடன் அதைக் கபிவரனைப்பார்த்து 'வானரர்தலைவனே! நீ காதலாகி, அதிலும் விசேஷித்து ராமனிடத்தில் வணக் கமுற்றிருக்கிறாயாகையால் எனதண்ணன் ராமன் எல்லா விதத்திலும் ஸுகாதனேயாயினன். ஸுக்ரீவா! உன் ப்ர பாவமும் உன் தூய்மையும் இவ்விரண்டையும் பார்க்கையி ல் எல்லாவற்றிலும் சிறப்புற்ற இந்த வானராராஜ்யலக்ஷ்மி யை அனுபவிப்பதற்கு நீயே உரியனையிருக்கின்றனை. ஸு க்ரீவா! நீ ஸஹாயமாயிருக்கையில் ப்ரதாபம் மிகுந்திருந் தப்பெற்ற ஸ்ரீராமன் சீக்ரமாகவே யுத்தத்தில் சத்ருக்களை யெல்லாம் வதித்து விடுவான். ஸுக்ரீவா! நீ சொன்னவா ர்த்தை, தர்மங்களெல்லாந் தெரிந்தவனும் செய்த உபகா ரத்தை மறவாதவனும் யுத்தங்களில் பின்வாங்காதவனு மாகிய மஹானுபாவன் சொல்லத்தகுந்ததும் யுக்திகள் அமைந்ததுமாயிருக்கின்றது. கபிச்ரேஷ்டனே! என் த மையன் ராமனும் நீயும் தவிர, நிக்ரஹானுக்ரஹஸாமர்த் யங்கள் உண்டாயிருந்தும் தமது தோஷங்களை அறிந்து நாம்செய்தது தப்பென்று ஒப்புக்கொள்பவரை மற்றவ னைச் சொல்லலாம்? கபிகுலாலங்காரனே! மேலும் நீ பராக்ரமத்திலும் பலத்திலும் ராமனிடத்தவன்; இ த்தனைகாலங் கழித்து உன்னை ஸஹாயமாக எமக்குத் தெய்வதைகள் கொடுத்தார்களை யன்றி வேறுவிதமாக உ ன்னைப்போன்றவனைப் பெறுவது ஸாத்ய மன்று. வீர! இப்பொழுது மேல் செய்யவேண்டுவ தென்னவெனில், நீ இங்கிருந்து சீக்ரமாக என்பின்னே புறப்பட்டுவந்து, பார் யையைப்பறிகொடுத்துப் பரிதபிக்கின்ற உன் மித்ரனாகிய ராமனை ஸமாதானப்படுத்துவாயாக. ராமன் துக்கத்தி னை

திலல் வருந்திப் புலம்பும் வார்த்தைகளைக் கேட்பதனல் நான் உன்னைப் பருஷவசனங்கள் பேசினன். நீ அதை மனத்தில் வைக்காமல் பொறுக்கத்தகும்'என்றனன். முப்பத்தாருவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் ஸமஸ்த வானரர்களையும் வரவழைத்தல்.

மஹாநுபாவனுகிய லக்ஷ்மணன் இங்ஙனம் சொல்லுகையில் ஸுக்ரீவன் தன் பக்கத்தில் நின்றிருக்கின்ற மந்த்ரியாகிய ஹநுமானைப் பார்த்து 'மஹேந்த்ரபர்வதத்திலும் ஹிமவத்பர்வதத்திலும் விந்த்யபர்வதத்திலும் கைலாஸசிகரத்திலும் வெளுத்த சிகரங்களையுடைய மந்தரபர்வதத்திலும் ஆக இவ்வைந்து பர்வதங்களிலிருப்பவர்களையும், மேல்திசையில் ஸமுத்ரதீரத்தில் பாலஸூர்யன்போல் ப்ரகாசிக்கும் பர்வதங்களிலிருப்பவர்களையும், ஸந்த்யாகால மேகம்போல் சிவந்த ஸூர்யன் உதிக்குமிடமாகிய உதயபர்வதத்தில் பயங்கரமான பத்மதாளவனத்தில் வஸிக்கும் வானரோத்தமர்களையும், மைபோலும் மேகம்போலும் கறுத்த யானைபோல் விளங்குந்தன்மையுடன் அஞ்சனபர்வதத்தில் வஸிக்கும் வானரர்களையும், மேருபர்வதத்தின் சாரல்களில் மனச்சிலாமயமான குகைகளில் பொன்வர்ணமுடையவராகி வஸிக்கும் வானரர்களையும், தாம்ரபர்வதத்திலிருப்பவர்களையும், பாலஸூர்யன்போன்ற மேனியின் வர்ணமுடையவர்களும் மைரேயமென்னும் மத்யத்தைப் பானஞ்செய்பவர்களும் பயங்கரமான வேகமுடையவர்களுமாகி மஹாருணபர்வதத்தில் வஸிக்கும் வானரர்களையும், மேலும் மிகவும் அழகாகி மேலானமணங்கள் கமழப்பெற்ற பெரியவனங்களிலிருப்பவர்களையும், அழகிய தாபஸாச்ரமங்களிலிருப்பவர்களையும், இவ்வளவேயன்றிப் பூமண்டலத்தில் அவ்வவ்விடங்களி

விருக்கும் அத்தத்த வானரர்களையும் மற்றுமுள்ள அனை வரையும் நீ இப்பொழுது சீக்ரத்தில் வரவழைப்பாயாக. ஸாமதாநத்யுபாயங்களைப் பரக்கச்செய்து அவர்களெல் லோரையும் அழைத்துக்கொண்டு வரும்பொருட்டு வான ரர்களை ஆங்காங்கு அனுபபுவாயாக. நான் முதலில் மஹா வேகமுள்ள தூதர்களை அனுப்பினேனே! சீக்ரத்தில் ஸ மஸ்தவானரர்களையும் கொண்டுவரும்படி அவர்களை த்வ ரைப்படுத்துவதற்காக, நீ வேறுசிலவானரர்களை அவரிடம் அனுப்புவாயாக. காமஸுகங்களில் கால்தாழ்ந்தது சோம் பேறிகளாய்ச் சீக்ரமாகக் கார்யஞ் செய்யாத வானரர்கள் எவரெவர் இருக்கின்றார்களோ அவர்களெல்லோரையும் பார்த்துச் சீக்ரமாக ஓரேகாலத்தில என்னிடம் அழைத் துக் கொண்டுவருவாயாக. என கட்டளையின்படி எவர்பத் துத்தினங்களுக்குள் இந்துவரது சோரர்களோ அதத் துர்ப்புத்திகளை ராஜாஜ்ஞையை மீறினதற்காக வதிக்க வேண்டும். இனி இதில் என் ஆஜ்ஞையின்படியே தடக்கு ம் வானரஸிம்ஹர்கள் நூறுபிரங்கோடிபபேர் புறப்பட்டு வானரர்களை அழைத்துக்கொண்டு வருவதற்காக நாற்றி ஸைகளுக்கும் போவார்களாக. மேகங்கள்போலும் பர்வ தங்கள்போலும் பயங்கரமான உருவம் பொருந்திய வா னரதிலகர்கள் என் ஆஜ்ஞையின்படி இங்கிருந்து ஆகா யத்தை மறைப்பவர்போல் புலப்பட்டுக்கொண்டு எல்லாத் திஸைகளுக்கும் போவார்களாக. அந்த வானரர்க ளெல் லோரும் பூமியி லுள்ள வானரர்களின் வாஸஸ்தானங்களை யெல்லாம் அறிந்தவர்களாகையால் என் ஆஜ்ஞையால் அவ்வவ்விடங்களுக்குச் சென்று பூமியி லுள்ள ஸமஸ்த வானரர்களையும் அழைத்துக்கொண்டு வருவார்களாக' என்றனன். வாயுகுமாரனாகிய ஹநுமான வானரர் தலை வனான ஸுக்ரீவனுடைய வார்த்தையைக்கேட்டு எல்லாத்

திசைகளுக்கும் பராக்ரமமுடைய வானரர்களை அனுப்பினன். அவர்களும் ராஜாவான ஸுக்ரீவனது கட்டளையின்படி. அந்த க்ஷணத்தில் பக்ஷிகளும் சக்ஷத்ரங்களும் திரியும் மார்க்கமாகிய ஆகாயத்து வழியாகப் போயினர். அந்தவானரர்கள் ராமகார்யத்திற்காக ஸமுத்ரத்திலுள்ள தீவுகளிலும் பர்வதங்களிலும் வனங்களிலும் தாமரை யோடைகளிலும் இருக்கும் ஸமஸ்த வானரர்களையும் ராஜாஜ்ஞையைத் தெரிவித்துவருது சேரும்படி தூண்டினர். ராஜாதிராஜனுடைய ஸுக்ரீவன் பாளயகாலத்தும் ம்ருத்யுவைப் போன்றவனைகபால அவனது ஆஜ்ஞையைக் கேட்டவுடனே வானரர்கள் அவன் கடோரமாகத் தண்டிப்பானென்னும் பயத்தினால் எல்லோரும் புறப்பட்டுவருதனர். அனந்தரம் ராமன் எதற்காரணத்தினால் வருகிறானோ, அதைப் பற்றி அஞ்சன பர்வதத்தினின்று மலைப்போலகறுத்தமேனியுடையவர்களும் மஹாவேகமுடையவர்களுமாகி விளங்கும் மூன்றுகோடி வானரர்கள் புறப்படுவந்தனர் ஸுர்யன அஸ்தமிக்குமிடமாகிய அஸ்தகிரிபர்வதத்தினின்று அதில் மேலான பொன்வர்ணம்போன்ற மேனியினகாந்தியுடையவராகி வலித்திருந்த வானர்கள் பத்துக்கோடிபேர புறபட்டனர். பிறகு கைலாஸபர்வத சிகரத்தினின்று ஸிம்ஹத்தின சடைகள்போன்ற வர்ணம்பொருந்திய ஆயிரங்கோடி வானர்கள் வந்தனர். காய் கிழங்கு ஸேவிக்களைத்தினின்று ஜீவிப்பவராகி ஹிமவத்பர்வதத்தில் வலித்திருக்கும் பத்துலக்ஷங்கோடி வானர்கள் வந்தனர். விந்ய பர்வதத்தினின்று அங்காரகன் போல் சிவந்து விளங்கும் பயங்கரமான உருவமும் செய்யுமுடைய பலவாயிரங்கோடி வானர்கள் சீக்ரம் புறப்பட்டனர். க்ஷீரஸமுத்ரதீரத்தில் வஸிக்கும் வானரர்களும் கமலவனத்தில் வஸிப்பவர்களும் காரிகேளவனத்தில்[1] கா

1 தேங்காய்.

நிகேளங்களேயே ஆஹாரமாகக்கொண்டு வஸிப்பவர்களும் பலர் வேகமாகப்புறப்பட்டு வந்தனர். அவர்களைக் கணக்கிடமுடியாது. அடவிகளின்றும் கதீதீரங்களினின்றும் பெருவேகத்துடன் வானரஸைன்யம் மிக விஸ்தீர்ணமுடையதாகையால் ஸூர்யனை விழுங்குவதுபோல் புலப்பட்டுக்கொண்டுவந்தது. ஸமஸ்தவானரர்களையும் த்வரைப்படுத்தி அழைத்துக்கொண்டு வரும்பொருட்டு தலலல்முதலில் அனுப்பப்பட்டுப் போன வானரவீரர்கள் ஹிமவத்பர்வதத்தில் மிகவும் ப்ரஸித்தமாகிய ஓர் மஹாவ்ருக்ஷத்தை (அல்லது-பெருப்பெருத்த பல வ்ருக்ஷங்கள் நிறைந்து ப்ரஸித்தமாகிய ஹிமவத் பர்வதத்தைக்) கண்டனர். முன்பு ரமணீயமாகி அந்த ஹிமவத்பர்வதத்தில், ஸமஸ்த தேவதைகளுங்கும் ஸந்தோஷத்தை விளைவிப்பதும் திவ்யமும் பரிணாமமுமாகிய மஹோத்ஸவப்ரபாகம் ஒன்று நடத்தப்பட்டது. அந்த வானரர்கள் அந்த யாகம் நடந்த இடத்தில் ஹோமஞ்செய்யும்பொழுது நழுவிக் கீழ்விழுந்த நெய்முதலிய ஹவிஸ்ஸுக்களால் முளைத்தவை களுமை அம்ருதம்போன்ற ருசியுடையவைகளுமாகிய பழங்களையும் மேர்களையும் கண்டனர். அந்த ஹவிஸ்ஸுக்களாலுண்டாகித் திவ்யங்களும் மநோஹரங்களுமாகிய பல மூலங்களை ஒருகால் தினபவன் மற்றொருமாதம்வரையிலும் பரியுண்டாகப் பெறுமல் த்ருப்தியடைந்திருப்பான். அந்த வானரக்கூட்டத் தலைவர்களை காய்கிழங்குகளை ஆஹாரமாகக்கொள்ளுந் தன்மையாலை திவ்யங்களான அந்தக் காய்கிழங்குகளை எடுத்துக்கொண்டது மாத்ரமேயன்றி அங்குள்ள திவ்ய ஓஷதிகளையுங் கூட எடுத்துக்கொண்டனர். அந்த வானரர்கள் ஸுக்ரீவனுக்கு ப்ரீதியை விளக்குமபொருட்டு அந்த யாகபூமியிலுள்ள பல மூலங்களையும் கல்ல வாஸனையுடைய அந்

குள்ள புஷ்பங்களையுங்கூட எடுத்துக்கொண்டுவந்தனர். அந்த வானரோத்தமர்கள் அனைவரும் பூமியி லுள்ள ஸமஸ்த வானரர்களையும் அழைத்து, உடனே அந்த வானரர்கூட்டம் வருவதற்குமுன்னமே கிஷ்கிணைதக்கு வந்தனர். அந்த வானரயூதநாதர்கள் சீக்ரமாக நடக்குந் தன்மையராகையால் ஸுக்ரீவனிருக்குங் கிஷ்கிந்தைதக்கு லக்ஷ்மணனிருக்கும் முஹூர்த்தத்திலேயே வந்துசேர்ந்தனர். அவர்கள் ஸமஸ்த ஓஷதிகளையும் திவ்யங்களான காய்கிழங்குகளையும் எடுத்துக்கொண்டுவந்து ஸுக்ரீவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து, இங்ஙனம் அவனுடன் "ஸமஸ்த பர்வதங்களுக்கும் ஸமுத்ரங்களுக்கும் வனங்களுக்கும் போயினம். ஆங்காங்குள்ள வானரர்களெல்லோரையும் அழைத்தனம். உன ஆஜ்ஞையின்படி பூமியி லுள்ள ஸமஸ்த வானரர்களும் வருகின்றார்கள்" எனறனர். வானரர் தலைவனாகிய ஸுக்ரீவன் அவர்கள் இங்ஙனம் சொன்னது கேட்டு ஸந்தோஷமுற்றவனாகி அவரிடத்திலுள்ள ப்ரீதியால் அவர்கள்கொடுத்த காணிக்கைகளையெல்லாம் அங்கீகரித்தனன். முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவனும் லக்ஷ்மணனும் ராமனிடம் போதல்.

ஸுக்ரீவன் அந்த வானரர்கள்கொடுத்த காணிக்கைகளை யெல்லாம் அங்கீகரித்து அவர்களை நல்வார்த்தைகளால் ஸமாதானப்படுத்தி எல்லோரையும் விடைகொடுத்தனுப்பினன். ஸுக்ரீவன் இங்ஙனம் தான்சொன்னகார்யஞ் செய்துவந்த சூரர்களாகிய அந்த வானரவீரர்களுக்குச் செலவுகொடுத்து அனந்தரம் தனையும் மஹாபலனாகிய ராமனையும் க்ருதார்த்தர்களாக நினைத்தனன். கொடிய பலமுடையவனும் ஸமஸ்தவானரசிகாமணியுமா

கிய ஸுக்ரீவனைப் பார்த்து, லக்ஷ்மணன் அவனை வணக்கத்துடன் ஸந்தோஷப்படுத்திக்கொண்டு 'ஸௌம்ய! உனக்கு இஷ்டமாயிருக்குமாயின், இப்பொழுது கிஷ்கிந்தையினின்று புறப்படுவாயாக. ராமனிடம் போவோம்' என்றனன். ஸுக்ரீவ லக்ஷ்மணன்சொன்ன வார்த்தையைகேட்டுப் பரமஸந்தோஷம் அடைந்து அவனுடன் 'அப்படியே ஆகட்டும். ராமனிடம் போவோம். நான் உன ஆஜ்ஞையின்படி நடக்கவேண்டியவனேயன்றி வேறில்லை' எனறனன். ஸுக்ரீவன் சுபலக்ஷணங்கள் பொருந்திய லக்ஷ்மணனுக்கு இங்ஙனஞ்சொல்லி உடனே தாரை முதலிய ஸ்த்ரீகளெல்லோரையும போங்களென்று விடைகொடுத்தனுப்பினன். அனந்தரம் ஸுக்ரீவ 'இங்கு வாருங்கள்' என்று வானரவீரர்களை உரக்க அழைத்தனன். அவன் அங்ஙனம் அழைத்ததைக் கேட்டவுடனே அந்தப்புர ஸ்த்ரீகளைப்பார்க்க உரியராகிய வானரர்கள் வேகத்துடன் வந்து எலலோரும் கைகூப்பிநின்றனர். பிறகு ஸூர்யன்போல ப்ரகாசிக்கின்ற ராஜனகிய ஸுக்ரீவன் தனனெதிரில் வந்திருக்கிற அந்த வானரர்களைப் பார்த்து 'வானரர்களே! சீக்ரமாக என் பல்லக்கைக் கொண்டுவருவீர்களாக' என்றனன். அந்த வானரர்கள் சீக்ரமாக வரவும் போகவும் வல்லவராகையால் ஸுக்ரீவனது ஆஜ்ஞையைக் கேட்டவுடனே பார்க்க இனிதாகிய ஓர் பல்லக்கைக் கொண்டுவந்தனர். வானரராதன் ஸுக்ரீவன் பல்லக்கு வருவதைக்கண்டு லக்ஷ்மணனைப்பார்த்து லக்ஷ்மண! நீ சீக்ரம் பல்லக்கில் ஏறுவாயாக' என்றனன். இங்ஙனம் சொல்லி ஸுக்ரீவன் பொன்மயமாகி ஸூர்யன்போல் ப்ரகாசிப்பதும் பெரிய வானரர்களால் வஹிக்கப்பட்டதுமாகிய பல்லக்கில் லக்ஷ்மணனும் தானுமாக ஏறிக்கொண்டனன். சிரஸ்ஸின்மேல் வெண்கொற்

றக்குடை விளங்கவும் நாற்புறங்களிலும் வானரர்கள் வெ
ளுத்த சாமரங்களை வீசவும் சங்கத்வனிகளும் பேரிவா
யங்களும் முழங்கவும் வானரர்கள் மங்களஸ்துதி பாடங்
களைச் செய்து புகழவும் பெற்று இங்ஙனம் நிகரில்லாத
ராஜ்யலக்ஷ்மியால விளக்கமுற்றவனாகி ஸுக்ரீவன் புறப்
பட்டனன். அவனை, கொடிய தேஜஸ்ஸுடையவர்களும
ஆயுதங்களைக கையிலேந்தினவர்களுமாகிய வானரர்கள்
அனேகமாயிரம்பேர் தன்னைச் சூழ்ந்திருக்கப்பெற்று ரா
மனிருக்குமிடத்திறகுப் போயினன். மஹா தேஜஸ்வி
யாகிய அந்த ஸுக்ரீவன், ராமன் வஸிக்குந் தேசமானகே
யால மேன்மையுற்று விளங்கும் அந்த ப்ரஸ்ரவண பர்வ
தத்திற் கருகேசென்று பிறகு லக்ஷ்மணனும் தானுமா
கப் பல்லக்கினின்று கீழிழிந்தனன். ஸுக்ரீவன் ராமனி
டம் போனவுடனே கைகூப்பிக்கொண்டு நின்றனன். அங்
ஙனம் ஸுக்ரீவன் கைகூப்பிநிற்கையில் வானரர்களும்
கைகுவித்து நின்றனர். (அந்த வானரர்கள் தாமரை
போன்ற அஞ்சலிகளுடன் கைகளை மேலெடுத்து ஸுக்ரீ
வனைச் சுற்றிக்கொண்டு நின்றனர்.) ராமன், வானரர்கள்
அனைவரும் கூப்பின கைகளை மேலெடுத்து நின்றிருக்கை
யால், தாமரை மொக்குகளோடுகூடின தடாகம்போன்ற
அந்தப் பெரிய வானரசேனையைப் பார்த்து ஸுக்ரீவனி
டத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனாயினன். அந்த வான
ரேச்வரன் ஸாஷ்டாங்கமாகத் தனது சரணங்களில் வீழ்
கையில், ராமன் அவனை எழுந்திருக்க எடுத்து ப்ரீதியா
லும் பஹுமானத்தாலும் ஆலிங்கனஞ் செய்தனன். தர்
மாத்மாவாகிய அந்த ஸ்ரீராமன் அங்ஙனம் அனைத்து
உடனே 'உட்காருவாய்' என்று மொழிந்தனன். பிறகு
ஸுக்ரீவன் தரைமேல் உட்காருகையில், ராமன் அவ
னைப் பார்த்து 'வானரர்தலைவனே! எந்தவிரன தர்மத்

தையும் அர்த்தத்தையும் காமத்தையும் பிரித்து அவற் றை அந்தந்தக் காலங்களில் எப்பொழுதும் தவறுமல் அனுபவிப்பாரே, அவனே ராஜனெனத்தகும். எவன் தர் மார்த்தங்களைத் துறந்து காமத்தைமாத்ரமே எப்பொ ழுதும் பின்தொடர்ந்திருப்பாரே, அவன் மரத்தின் நுனி யில் நித்ரைசெய்பவன்போல் கீழே விழுந்தபின்பே கண் விழித்துக்கொள்வான். சத்ருக்களை வதிப்பதில் முயற்சி யுடையவனும் நண்பர்களைச் சேர்ப்பதில் மனவுக்கமுடை யவனும் தர்மார்த்தகாமங்களை அந்தந்தக் காலங்களில் பிரித்து வேறு வேறுகப் அறிந்து அவற்றின் பலன்களை அனுபவிப்பவனுமாகிய மன்னவனமாத்ரமே ராஜதர்மங் களை நனகு நிறைவேற்றுவோனவான். சத்ருக்களை அழிப் பவனே! இது யுத்தப்ரயத்னத்திற்குச் தகுந்தகாலம். சரத்ருது வந்தது. இபொழுது செய்யவேண்டிய கார் யத்தைக் குறித்து உன் மத்ரிகளாகிய வானரர்களோடு ஆலோசிப்பாயாக' எனறனன. லக்ஷ்மீவன் ராமன சொ ன்னவார்த்தைதனையக் கேட்டு அவனுடன் 'ஜயசீலர்களில் தலைவனே! முன்பு நான போக்கடித்துக்கொண்ட லம் பத்தும் யசஸ்லக்ஷ்மும் ஸாம்ராஜ்யதமான வானராஜ்யமும் இவையெல்லாம், தேவா! உனது அனுக்ரஹத்தினலும் உன் தம்பியின் அனுக்ரஹத்தினலும் எனக்கு மீளவும் ப்ராப்தமாயின. (கிடைத்தன). எவன் தனக்குப் பிறர் செய்த உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரஞ் செய்யமாட்டா னே, அவன் புருஷர்கள் அனைவரிலும் அதமன். சத்ருக் களை அழிப்பவனே! இந்த வானரஸ்ரேஷ்டர்கள் நூறு பேர்கள்போய் பூமியில் பலிஷ்டர்களான லமஸ்த வான ரர்களையும் அழைத்துவந்தனர். ராமா! பெரிய அரண் யங்களையும் சிறிய வனங்களையும் எவர்க்கும் புகக்கூடாத மற்ற இடங்களையும் சந்து பொந்துகளையும் நன்கறிந்தவர்

களும் சூரர்களுமாகிய சிறந்த கரடிகளையும் கொண்டை முயல்களையும் அழைத்துவந்தனர். ராமா! தேவதை களுக்கும் கந்தர்வர்களுக்கும் பிறந்தவர்களும் காமரூபிக ளும் வீரர்களுமாகிய வானரர்கள் தமது ஸைனகளோடு கூடி வருகின்றனர். பாகதபோ! வீரர்களான வானர முக்யர்கள் சிலர் நூறு வானர்களோடும், சிலர் லக்ஷம் வானர்களோடும் சிலர் கோடி வானர்களோடும், சிலர் பதினாயிரம்பேர்களோடும் சூழ்ந்து வருகின்றனர். சில வா னரயூதநாதர்கள் அற்புதக் கணக்குள்ள வானர்களோ டும் சிலர் கர்வலங்ஙையுள்ள வானர்களோடும், சிலர் ம த்யலங்க்யர்களான வானர்களோடும், சிலர் அதலங்க் யர்களோடும், சிலர் ஸுதர்ல லங்க்யர்களோடும், சிலர் பார ர்த்த லங்க்யர்களோடும் வருகின்றனர். ராஜனே! மஹே ந்த்ரஸமபோன்ற பராக்ரமமபொருந்தி மேருபர்வதம் போலும் மந்தர பர்வதம்போலும் புலப்படுவோர்களுமாகி விந்த்யபர்வதத்திலும் மேருபர்வதத்திலும் வஸித்திருக் கும் வானரர்கள் உன் கார்யநிமித்தமாக வருகின்றனர். ராவணஸஹ பந்துக்களோடுகூட யுத்தத்தில்கொன்று ஸீதையைக் கொண்டுவந்து உனக்கு ஸமர்ப்பிக்கவல்ல மஹாதீரர்களான வானரர்களும் உன் ஸந்நிதானத்திற்கு வருகின்றார்கள்' என்றனன். அனந்தரம் மிகுந்த மதியு டைய ராமன் அங்ஙனம் தனது ஆஜ்ஞையின்படி தவரு மல் தன் கார்யத்தின்பொருட்டு வானர் தலைவனாகிய ஸுக்ரீவன் நடத்தின ப்ரயத்னத்தைக்கண்டு ஸந்தோ ஷம் மிகப்பெற்று -அதனல் மலர்ந்த கருநெய்தல்போல் மேன்மேலும் பார்க்க இனிதானமேனியின் காந்தி வளரப் பெற்றுப் புலப்பட்டனன். முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸமஸ்த வானர ஸைன்யங்களும் வந்து கூடுதல்.

தார்மிக சிரோமணியாகிய ராமன், இங்ஙனம் கை கூப்பிக் கொண்டிருக்கிற ஸுக்ரீவனை அழுந்தக் கட்டியணைத்து 'இந்த்ரன் மழை பெய்யினும், ஸூர்யன ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ப்ரகாசத்தை விளைவிக்கினும், அவை அவர்களுக்கு ஸஹஜதர்மமாகையால் எப்பொழுதும் ஆச்சர்யமன்று. பரந்தபா! சந்த்ரன் தன் கிரணங்களால் பூமி முழுமையும் நிர்மலமாகச் செய்கின்றனன். அதுவும் அவனுக்கு ஸஹஜமாகையால் ஓர் அற்புதமன்று. அப்படியே உன்னைப்போன்றவர் மித்ரர்களுக்கு ப்ரத்யுபகாரஞ் செய்யினும் அது உங்களுக்கு ஸஹஜமாகையால் சிறிதேனும் ஆச்சர்யமன்று. ஸௌம்யனே! இங்ஙனம் மித்ரர்களுக்கு ப்ரத்யுபகாரஞ் செய்வது உன்னிடத்தில் எள்ளளவும் ஆச்சர்யமன்று. நீ எப்பொழுதும் மித்ரர்களுக்கு ஸந்தோஷத்தை விளைக்குங் கார்யங்களைச்செய்து அந்த ப்ரியவார்த்தையைச் சொல்ல வருபவனென்று நான் அறிவேன். நண்பனே! நீ நாதனுயிருக்கையில், நான் இனி ஸமஸ்த சத்ருக்களையும் யுத்தத்தில் வெல்லவல்லேன். நன்மனமும் நட்பும் பொருந்திய நீயே எனக்கு ஸஹாயஞ் செய்யவேண்டும். முன்பு இந்த்ரனை வஞ்சித்துப் புலோமனது புத்ரியாகிய சசீதேவியைப் புலோமனது அனுமதியால் அனுஹ்லாதனென்பவன் அபஹரித்தாற்போல், ராக்ஷஸாதமனாகிய ராவணன் என்னை மோசஞ்செய்து ஸீதையைக் கொண்டுபோயினன். பூர்வம் சசீதேவியை அனுஹ்லாதன் அபஹரித்ததற்கு அனுமதிசெய்திருந்த அவன் தந்தையாகிய புலோமனை இந்த்ரன் வதித்தாற்போல் சீக்ரத்திலேயே யுத்தத்தில் கூரான பாணங்களால் அந்த ராவணனை வதிக்கின்றேன்' என்றனன். இதன் நடுவில் ஆகாயத்தில் தீவ்ரமான ஸூர்யகாந்தியை மறைத்துக்கொ

ண்டு பெருந்தூள் கிளம்பிற்று. அந்தத் தூள் நிரம்புகை யால் திசைகள் தெரியாதிருந்தன. பூமியெல்லாம் பர்வ தங்களோடும் வனங்களோடும் நடுக்கமுற்றது. அனந்த ரம் பர்வதம்போன்ற உருவமுடையவரும் கூரான கோ ரைப் பற்களுடையவரும் மஹா பலிஷ்டர்களுமாகிய வா னரர்கள் கணக்கின்றி வந்து பூமிமுழுவதும் மறைத்து கின்றனர். அனந்தரம் ஓர் இமைப்பொழுதில் ஒவ்வொரு வரும் நூறுகோடி பரிவாரத்துடன் காமரூபிகளும் மஹா பலிஷ்டர்களும் மேகம்போல் பெருங்கோஷ முண்டாகும் படி கர்ஜனைசெய்பவர்களுமாகிய வானரயூதநாதர்களும் கதிதீரத்தில் பிறந்தவர்களும் பர்வதத்தில் வஸிப்பவர்க ளும் ஸமுத்ரதீரத்தி லிருப்பவர்களும் மற்றுமுள்ளவர்க ளுமாகிய வானரர்களும் பலர் பூமிமுழுமையும் மறைத் துக்கொண்டுவந்தனர். அப்பொழுது பராக்ரமம் மிகுந் தவனும் செல்வப் பெருக்குடையவனுமாகிய சதபலி யென்பா னொரு வானரவீரன் மேருபர்வதத்தில் வஸிக் கும் பதினாயிரங்கோடி வானரர்களால் சூழப்பட்டு வந்து புலப்பட்டனன். அவ்வானரர்களில் சிலர் பாலஸூர்யன் போல் சிவந்தமேனியுடன் ப்ரகாசித்தனர். சிலர் சந்த்ரன் போல் வெளுத்தவர்ணம் விளங்கப்பெற்றிருந்தனர். சிலர் தாமரைத்தாதுபோன்ற வர்ணத்துடன் விளங்கினர். சிலர் வெளுத்திருந்தனர். அனந்தரம் மேருபர்வதம் போன்ற பெருஞ் சரீரமுடையவனும் மஹாவீரனும் தர ரையின் தந்தையுமாகிய ஸுஷேணன் பதினாயிரங்கோடி வானர ஸைன்யங்களுடன் வந்து புலப்பட்டனன். அங்ங னம் ஸுக்ரீவனது மாமனும் பல வானரர்கூட்டங்களுக் குத் தலைவனும் ருமைக்குத் தந்தையுமாகிய தாரன் ஆயி ரங்கோடி வானரர்களுடன் வந்துசேர்ந்தனன். அனந்த ரம் தாமரைத்தாதுபோன்ற மேனியின் வர்ணமும் பால

ஸுர்யன்போன்ற முகமும் பொருந்தி மிகுந்த மதியுடை யவனும் ஸமஸ்தவானரர்களில் சிறந்தவனும் செல்வப்பெ ருக்குடையோனுமாகிய ஹனுமானுடைய தந்தை கேஸரி யென்னும் வானரோத்தமன் அனேகமாயிரம் வானர ஸைன்யங்களோடு வந்து சேர்ந்தான். பயங்கரமான பராக்ரமமுடையவனும் கொண்டைமுயல்களுக்கு மஹா ராஜனுமாகிய கவாக்ஷன ஆயிரங்கோடி வானரர்களுடன் வந்து சேர்ந்தனன். அனந்தரம் பகைவரை உருமாய்க்க வல்ல தூம்ரனென்பவன் பயங்கரவேகமுடைய சிறந்த இரண்டாயிரங் கரடிகளுடன் வந்தனன். மஹா வீர்யமு டைய பனஸனென்னும் வானரயூதநாதன், பெருமலை போன்றவர்களும் பயங்கரமான உருவ முடையவர்களு மாகிய மூன்றுகோடி வானரவீரர்களோடு வந்தனன். அனந்தரம் மைக்குவியல்போல் கறுத்திருக்கிற நீல னென்னும் வானரர்கூட்டத் தலைவன் பத்துக்கோடி வா னர வீரர்களோடு புலப்பட்டனன். அதன் பிறகு மஹா பராக்ரமசாலியும் மேருபர்வதம்போன்ற மேனியுடைய வனுமாகிய கவய னென்னும் வானரவீரன் பத்துக் கோடி வானரர்களுடன் வந்து சேர்ந்தனன். மஹாபல னாகிய தரீமுகனென்னும் வானரயூதபதி ஆயிரங்கோடி வானரர்கள் சூழப்பெற்று வந்து ஸுக்ரீவனுக்கு முன்னே நின்றனன். அனந்தரம் அப்ரமேதவணைதகளின் புதல்வர் களும் மஹாபலிஷ்டர்களுமாகிய மைந்த த்விவிதர்கள் இருவரும் ஆயிரங்கோடி கோடிவானர ஸைன்யங்களோ டுகூடத் தோற்றினர். மஹாபலிஷ்டனும் மஹாவீரனும் மஹா தேஜஸ்வியுமாகிய கஜனென்பவன் மூன்றுகோடி வானரர்களுடன ஸுக்ரீவனுக்கருகே வந்தனன். மஹா தேஜஸ்வியும் கரடிகளுக்குத் தலைவனுமான ஜாம்பவான் பத்துக்கோடி கரடிகளுடன்வந்து ஸுக்ரீவனைச் சூழ்ந்து

கின்றனன். பல பராக்ரமங்கள் மிகுந்திருக்கப்பெற்ற ருமண்வானென்னும் வானரன் நூறுகோடி ஸைன்யங்கள் சூழப்பெற்று ஸுக்ரீவனிடம் வந்தனன். அனந்தரம் பத்துலக்ஷங்கோடி வானரர்களும் லக்ஷங்கோடி வானர்களும் பினெழுடர்ந்துவரப்பெற்ற கந்தமாதனனென்பவன் வந்து சேர்ந்தனன். அனந்தரம் பராக்ரமத்தில் தந்தையைப்போன்ற யுவராஜனாகிய அங்கதன் ஆயிரம் பத்மக் கணைக்குடையவைகளும் நூறு சங்கக் கணைக்குடையவைகளுமாகிய வானர ஸைன்யங்களோடுகூடி ஸுக்ரீவனிடம் வந்தனன. அனந்தரம் நக்ஷத்ரம்போல் ப்ரகாசிப்பவனும் பயங்கரமான பராக்ரம முடையவனுமாகிய தாரனென்னும் வானரன் ஐந்துகோடி வானர்களுடன் வந்து தூரத்தில் புலப்பட்டனன். வீரனும் வானரயூதநாதனுமாகிய இந்த்ரஜானுவென்பவன் பதினென்று கோடி வானர்களுக்கு ப்ரபுவாயிருப்பவன் அத்தனை வானர்களும் சூழப்பெற்றுவந்து புலப்பட்டனன். அனந்தரம் பாலஸூர்யன்போல் சிவந்தமேனியின் வர்ணமுடைய ரம்பனென்பவன் பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவும் நூறு நூறுகவும் வானர்களால் சூழப்பட்டுவந்தனன். வீரனும் மிகுந்த பலமுடையவனுமாகிய துர்முகனென்னும் வானரயூதபதி இரண்டுகோடி வானரவீர்களோடு ஸுக்ரீவனுக்கு முன்னேவந்து நின்றனன. கைலாஸ சிகரம்போன்றவர்களும் பயங்கரமான பல பராக்ரமசாலிகளுமாகிய ஆயிரங்கோடி வானர்கள் சூழப்பெற்று ஹனுமான் தோற்றினன். மஹா வீர்யம் பொருந்திய கலன் நூறுகோடிக் கணக்கிலும் ஆயிரங் கணக்கிலும் நூறுநூறுகவும் வகைவகையாகப் பிரிந்து வருகின்ற வானர்களால் சூழப்பட்டு வந்தனன். அனந்தரம் மஹானுபாவனாகிய அந்த ஸுக்ரீவனுக்கு மிகவும்

ப்ரியமாயிருப்பவனும் செல்வம் மிகுந்தவனுமாகிய ததிமுகன் பத்துக்கோடி வானரர்களுடன் வந்து சேர்ந்தனன். சரபன் குமுதன் வஹ்னி ரம்ஹஸ் வீரன் ஆகிய இவர்களும் மற்றுங் காமரூபர்களான வானரயூதபதிகள் பலரும் வந்து பூமி முழுமையும் பர்வதங்களையும் வனங்களையுஞ் சூழ்ந்து நின்றனர். அவர்களைக் கணக்கிடமுடியாது. பூலோகத்தில் தேவயோனிகளாகப் பிறந்த அப்ராக்ருதரான வானரர்களும் கேவல வானரர்களும் எல்லோரும் வந்தனர். அந்த வானரர்கள் உத்ஸாஹத்தின் மிகுதியால் தாண்டியும் கர்ஜனை செய்தும் மேகங்கள் ஸூர்யனைச் சுற்றிக்கொள்வதுபோல் ஸுக்ரீவனைச் சுற்றிக்கொண்டு நின்றனர். மிகுந்த புஜபலமுடைய அவ்வானரர்கள் மஹா ஸதேதாஷித்துடன் பலவிதமான ஸிம்ஹநாதங்களைச் செய்து தம் தலைகளை மேலெடுத்துக் காட்டி ஸுக்ரீவனுக்குத் தமது வரவைத் தெரிவித்தனர். அப்பொழுது ஸுக்ரீவனிடம் போகத்தகுந்த மற்றுஞ் சில வானரப்ரதானர்கள் வணக்கம் விளங்குமாறு ஆடைமுதலியவற்றைச் சுருட்டியடக்கிக்கொண்டு ஸுக்ரீவனருகிற் சென்று கைகூப்பி நின்றனர். ஸுக்ரீவன் ஸமஸ்த தர்மங்களையும் அறிந்தவனுகையால் கைகூப்பிக்கொண்டு த்வரையுடன் அந்த வானரதிலகர்களனைவரையும் ராமனுக்கு ஸமர்ப்பித்துப் பின்பு அவர்களெல்லோரையும் பார்த்து 'வானரோத்தமர்களே! யூதபதியாயிருப்பவன், தன் ஸைன்யத்தையெல்லாம் மலையருவிகளின ஓரங்களிலும் ஸமஸ்த வனங்களிலும் விதிப்படி இறக்கிவைல், தன் பலத்தின் அளவைத் தெரிந்துகொள்ள முடியுமாகையால், நீங்கள் அங்ஙனஞ் செய்வீர்களாக' என்றனன். மூப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸீதையைத் தேடும்பொருட்டு விதனைக் கீழ்த்திசைக் கனுப்புதல.

அனந்தரம் ஸமஸ்த ஸாதனங்களும் ஸம்ருத்தமாயிருக்கப் பெற்ற வானர நாதனாகிய ஸுக்ரீவன் சத்ரு ஸைன்யங்களின் மிடுக்கை யடக்கும் புருஷலக்ஷணமாகிய ராமனைப் பார்த்து 'எனக்குத் தெரிந்த தேசங்களினின்று வந்தவர்களும் என் ராஜ்யத்தில் வாஸஞ் செய்பவர்களும் மஹா பலிஷ்டர்களும் காமரூபிகளும் மேலான யானைகள் போல் புலப்படுபவர்களுமாகிய வானரர்களனைவரும் வந்திறுத்திருக்கின்றனர். பயங்கரமான உருவமுடையவர்களும் தைத்யதானவர்களைப் போன்றவர்களுமாகிய இந்த வானர யூதபதிகளனைவரும் மஹா பராக்ரமசாலிகளும் விரைவாக நடக்குந் தன்மையர்களுமாகிய அனேக வானரர்களோடு வந்திருக்கின்றனர். இவர்கள் முன்பு செய்த கார்யங்கள் ஒவ்வொன்றும் புகழ்பெற்றிருக்கின்றன. இவர்களெல்லோரும் வெகுதூரம் தாண்டுவது பாய்வது முதலிய அஸாத்ய கார்யங்களில் பேர்பெற்றவர்; மிகுந்த பலமுடையவர்; இளைப்பற்றவர்; பல பராக்ரம கார்யங்களைச் செய்து ப்ரஸித்தி பெற்றவர்; பெரும் ப்ரயத்னங்கள் செய்வதில் மேன்மையுற்றவர். ராமா! பலவித் பர்வதங்களில் வஸிப்பவரும் பூமியிலும் ஜலத்திலும் ஸஞ்சரிக்க வல்லவருமாகிய அனேகங் கோடி வானரவீரர்கள் வந்திருக்கின்றனர். இவர்களெல்லோரும் உன் வேலைக்காரர்களே! சத்ருக்களை யழிப்பவனே! இவர்களெல்லோரும் உனது ஆஜ்ஞையைச் சிறிதுங் கடக்கமாட்டார்கள். எல்லோரும் ஸ்வாமியின ஹிதத்தில் மனஸுக்கமுடையவர். உன் அபிப்ராயத்தை நிறைவேற்றவல்லவர். இதோபார். இந்த வானர யூதபதிகள் ஒவ்வொருவரும் பயங்கர பராக்ரமர்களான பலவாயிரம் ஸைன்யங்களோடு கூடியிருக்கின்ற

னர். புருஷ ப்ரேஷ்டனே ! இந்தக் காலத்தில் எது உசித மென்று உனக்குத் தோற்றுகின்றதோ, அதைச் சொல்வாயாக. இதெல்லாம் உன் ஸைன்யமே. மேலும் உன்னதீனத்திலிருக்கஸித்தமாயிருகஇன்றது. ஆகையால் உன் இஷ்டப்படி ஆஜ்ஞை செய்வாயாக. இந்த வானரர்கள் செய்யவேண்டிய கார்யமின்னதென்று உள்ளபடி எனக்குத் தெரிந்தேயிருக்கின்றது. ஆயினும் நீயே உள்ளபடி இவர்களுக்கு ஆஜ்ஞை செய்யத்தகும்' என்றனன். இவ்வண்ணம் ஸுக்ரீவன் விண்ணப்பஞ் செய்கையில் தசரதகுமாரன் ராமன் கைகளை நீட்டி அந்த ஸுக்ரீவனை அழுந்தக் கட்டியணைத்து 'மஹா ப்ராஜ்ஞனே ! என் ப்ராணகாயகி ஸீதை பிழைத்திருப்பதும் இல்லாததும் ராவணன் வஸிக்குமிடமும் தெரியவேண்டும். ஸீதை பிழைத்திருக்கும் ஸமாசாரத்தையும் ராவணனிருக்குமிடத்தையும் தெரிந்துகொண்டு, பிறகு அபபொழுது எது செய்யத்தகுமதோ அதை நீயும் கணும ஆலோசித்து ஏற்பமத்துவோம். வானரர் தலைவனே ! இக்கக் கார்ய விஷயமாக கருவது லக்ஷ்மணனுவது கியமிப்பவரல்லோம். இந்தக் கார்யம் ஸாதிப்பவனும் கியாமகனும் நீயே. ப்ரபூ! இந்தக் கார்ய விஷயமாக எனக்குள்ள நிச்சயத்தையும் இவர்களுக்கு ஆஜ்ஞாபிப்பாயாக. என் கார்யம் எப்படிப்பட்டதோ, அவ்விஷயமெல்லாம் உனக்கே தெரியும். ஸந்தேஹமு இல்லை. நீ எனக்கு லக்ஷ்மணன்போல் இரண்டாவது கண்பன்; ஸ்னேஹிதன்; வணக்கமுடையவன்; பராகரமம் அறைந்தவன்; எல்லாமறிந்தவன; தேசகால விசேஷங்களை யுணர்ந்தவன்; எனது ஹிதத்தை விரும்புமவன்; கார்யஸ்வரூபங்களை யறிந்தவர்களனைவரிலும் மேலாயிருப்பவன்; கார்யங்களை கன்கு ஸாதித்துக் கைதேர்ந்தவன்; கார்யங்களின் உண்மையை கன்கறிந்தவன்' என்றனன்.

ராமன் இங்ஙனம் சொல்லுகையில், வானரர் தலைவன் ஸுக்ரீவன், அந்த ராமனும் புத்தியிற் சிறந்த லக்ஷ்மணனும் கேட்டுகொண்டிருக்கையில், பர்வதம் போன்ற உருவமுடையவனும் மேகம்போல் கர்ஜிப்பவனும் திடமான சரீரமுடையவனுமாகிய வினதனென்னும் வானரயூதபதியைப் பார்த்து 'வானரோத்தமா! நீ அந்தந்தத் தேசங்களுக்கும் அந்தந்தக் காலங்களுக்கும் தகுந்த நீதியை அனுஸரித்துக் கார்யாகார்யங்களை நிச்சயித்து, மஹாபலிஷ்டர்களான லக்ஷம் வானரர்கள் சூழ்ந்து வரப் பெற்றுச் சத்ரு ஸைன்ய புத்ரர்களாகிய வானரர்களுடன்கூடிப் பர்வதங்களும் வனங்களும் அரண்யங்களும் சூழ்ந்து விளங்குங் கீழ்த்திசையைக் குறித்துச் செலவாயாக. அந்தக் கிழக்குத் திசையில் பர்வதசிகரங்களிலும் வனங்களிலும் நதிகளிலும் ஸீதா தேவியைத் தேடிப் பார்ப்பாயாக. நீங்கள் ரமணீயமான கங்காநதிக்கும் ஸரயூநதிக்கும் கௌசிகீநதிக்கும் யமுனாநதிக்கும் யமுனையைச் சேர்ந்த பர்வதத்திற்கும் ஸரஸ்வதீ நதிக்கும், ரத்னம்போல் நிர்மலமான ஜலமுடைய சோணநதத்திற்கும் மஹீ தேசத்திற்கும், பர்வதாரண்யங்களோடு விளங்கும் காலமஹீ தேசத்திற்கும் ப்ரஹ்மமால விதேஹ மாளவ காசி கோஸல தேசங்களுக்கும் பெரிய க்ராமங்கள் பலவும் நிறைந்த மகத் தேசத்திற்கும் புண்ட்ர வங்க தேசங்களுக்கும் கோசகரர்க்களென்னும் ராஜாக்களின் ராஜதானிக்கும் வெள்ளிகள் விளையும் பூமிக்கும் போய் அந்த இடங்களிலெல்லாம், ராமனது பரிய பார்யையாகிய ஸீதா தேவியைத் தேடிவா யாக. ஸமுத்ரத்தினிடையிலுள்ள பர்வதங்களையும் அகன்ற மந்தரபர்வதத்தின் சிகரத்தையும் பற்றிப் பயங்கரமான உருவமுடைய மனிதர்கள் வாஸஞ் செய்கின்றனர். அவர்களில் சிலர் காதில்லாதவர்களும், சிலர் உதட்டில் கா

துடையவர்களும், சிலர் பயங்கரமான இருப்புமுகமுடை யவர்களும், சிலர் ஓரே பாதம் உண்டாகப்பெற்று மிகுந்த வேகமுடையவர்களும், சிலர் மனிதர்களைப் பக்ஷித்துக் கொண்டு மாணத்தையே அறியாமல் மஹா பலிஷ்டர்க ளாயிருப்பவர்களும், மேலும் செவியில் சிலை உண்டாகப் பெற்றுப் பொன் வர்ணமுடைய மேனியுடன் இனிய காட் சியுமுடைய சிலர்களும் பச்சை மத்ஸ்யங்களைத் தின்ப வரும் தீவுகளில் வாஸஞ்செய்துகொண்டு ஜலத்திற்குள் ஸஞ்சரிக்க வல்லமையுற்றுப் பாதிமனுஷ்ய சரீரமும் பாதி புலியின் தேஹமும் பொருந்திப் பயங்கார்களான ஓர்வகை ப்பட்ட சிலர்களும் இருப்பார்கள். அவர்கள் வஸிக்கு மிடமெல்லாம் ஸீதையைத் தேடிவாயாக. பிறகு பர்வதங் களில் ஏறிப்போகத் தகுந்த தீவுகளும் பாய்ந்து தாண்டிப் போய்ச் சேரவேண்டிய தீவுகளும் நெருப்பங்களால் போகக் கூடிய தீவுகளும் உள்ளன. நீங்கள் அந்தத் தீவுகளுக்கெல் லாம் சென்று, அனந்தரம் ரத்னங்கள் விளையும் பூமிகள் பொருந்தி ஏழுகண்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கும் ய வத்வீபத்திற்குப் போவீர்களாக. அங்கிருந்து பொன்விளை யும் பூமிகள் விளங்கப் பெற்ற ஸுவர்ண ரூப்யகமென்னு ம் தீவுக்கும் போவீர்களாக. அனந்தரம் யவத்வீபத்தைக் கடந்து போகையில் தேவதானவர்கள் உலாவப்பெற்றுக் கொடி முடிகளால் ஆகாயத்தை அளாவியிருக்கும் சிசி பர்வதம் தோற்றும்; அதற்குப் போவீர்களாக. இங்ஙனம் இந்த த்வீபாதிகளில பர்வத குஹைகளிலும் எல்லோருங் கூடிப் பெரும்புகழுடைய ஸீதா தேவியைத் தேடிப்பார்ப் பீர்களாக. அனந்தரம் நீங்கள் லவணஸமுத்ரத்தின் அக்க ரைக்குச்சென்று அங்கு ஸித்தசாரணர்கள் திரியப்பெற்ற தும் சிவந்த ஜலமுடையதும் ஆழமாயிருப்பதும் வேகமா கப் பெருகிவருவதுமாகிய சோணநதத்தைச் சேர்ந்து

அங்கு அழகான தூறைகளிலும் காணுவிதவனங்களிலும் ஆங்காங்கு ராவணனையும் ஸீதாதேவியையும் தேடிப்பார்க்கவேண்டும். அனந்தரம் ப்லக்ஷத்வீபத்தில் மனோஹரமான உத்யானங்கள் பல விளங்கப் பெற்றுப் பர்வதங்களினின்றுபெருகிவருகின்ற நதிதீரங்களிலும் குஹைகளையுடைய பர்வதங்களிலும் வனங்களிலும் ஸீதாதேவியையும் ராவணனையும் தேடவேண்டும். அனந்தரம் மிகவும் பயங்கரமான இக்ஷ்வாஸ்முத்ரத்தின் தீவுகளையும் காற்றினால் கலக்கப்பட்டுப் பெருங்கோஷத்துடன் கர்ஜிக்கின்ற இக்ஷ்வாஸமுத்ரத்தையும் பார்ப்பீர்கள். அந்த இக்ஷ்வாஸமுத்ரத்தில் பெருஞ் சரீரமுடையவரும் வெகு காலமாகப் பசித்திருப்பவருமாகிய அஸுரர்கள் ப்ரஹ்மதேவனது வரத்தினால் எப்பொழுதும் நிழலைப் பிடித்து இழுத்து மனிதர்களையும் விழுங்குவார்கள். நீங்கள் ப்ரளயகால மேகங்கள்போல் மஹா பயங்கரமாகிப் பெருப்பெனிய ஸர்ப்பங்கள் நிறைந்திருக்கப் பெற்றுப் பெருகத்வனியுடன் கர்ஜிக்கின்ற அந்த இக்ஷ்வாஸமுத்ரத்தை, அந்த அஸுரர்கள்கையில அகப்படாமல் உபாயமாகத்தாண்டி அப்புறம் சிவந்த ஜலமுடையதும் பயங்கரமாயிருபபதுமாகிய மதுஸமுத்ரத்தையுங் காண்பீர்கள். அங்கு விசாலமாகி மிகவும் புகழ்பெற்ற ஸால்மலிவ்ருக்ஷம் (முள்ளிலவமரம்) புலப்படும். அந்தச் சால்மலித்வீபத்தில் விப்ரகர்மாவால் நிர்மிக்கப் பட்டதும் கைலாஸபர்வதம்போல் வெளுத்தவர்ணமுடையதும் உயர்ந்திருப்பதும் காணுவிதரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய கருத்மானுடைய க்ருஹத்தைக் காண்பீர்கள். அந்தச் சால்மலித்வீபத்தில் காணுவித ரூபமுடையவர்களும் பர்வதம்போல் பயங்கரமான உருவம் பொருந்தியவர்களுமாகிய மந்தேஹரென்னும் ராக்ஷஸர்கள் பர்வதசிகரங்களில் இருப்பார்கள். அந்த மந்தேஹர்

எப்பொழுதும் ப்ரதிதினமும் ஸூர்யோதய காலத்தில் ப்ராஹ்மணர்கள் ஜபிக்கும் காயத்ரீ மந்த்ரப்ரபாவத்தினல் அடிக்கப்பட்டவரும் ஸூர்யனல் கொளுத்தப்பட்டவருமாகி ஜலத்தில் விழுவார்கள்; மீளவும் மீளவும் எழுந்து பர்வதசிகரங்களில் வர்த்திப்பார்கள். நீங்கள் ஒருவராலும் தடுக்கமுடியாதவராகையால் அனந்தரம் (வழியில்) க்ருதஸமுத்ரத்தையும் க்ஷத்வீபத்தையும் ததிஸமுத்ரத்தையும் க்ரௌஞ்சத்வீபத்தையும் கடந்தவராகி) வெளுத்த மேகம்போல் விளங்குவதும், அலைகளால் முக்தாஹாரங்கள் அமையப்பெற்றுற்போல் ப்ரகாசிப்பதுமாகிய க்ஷீரஸமுத்ரத்தைக் காண்பீர்கள். அதன் நடுவில் திவ்யமான வாஸஸ்தானங்கள் விசப்பெற்ற புஷ்பங்கள் நிறைந்த வெள்ளிவ்ருக்ஷங்கள் கற்புறத்திலும் மலர்ந்து வெளுத்து விளங்கும் ருஷபமென்னும் மஹாபர்வதம் ஒன்றுளது. மேலும் அதில் பொன்தாதுக்களுடன் தளதள வென்று விளங்கும் வெள்ளித்தாமரைகள் விளங்கவும் ராஜஹம்ஸங்கள் ப்ரகாசிக்கவும் பெற்று ஸுதர்சனமென்னும் பேருடைய ஓர் ஸரஸ்ஸு உளது. தேவதைகளும் சாரணர்களும் யக்ஷர்களும் கின்னரர்களும் அப்ஸரஸ்த்ரீகளும் கூடி ஸந்தோஷத்துடன் விளையாடும்பொருட்டு அந்த ஸரஸ்ஸுக்கு வருவார்கள். வானரர்களே! நீங்கள் க்ஷீரஸமுத்ரத்தைக் கடந்தபின்பு ஸர்வபூதங்களுக்கும் பயத்தை விளைவிப்பதும் ஸமுத்ரங்களனைத்திலும் மேலாயிருப்பதுமாகிய தூய்நீர் ஸமுத்ரத்தைக்காண்பீர்கள். ஔர்வமஹர்ஷியின் கோபத்தினுலுண்டாகிக் குதிரைமுகமுடையதும் படபாக்னியென்று ப்ரஸித்திபெற்றதுமாகிய அம்மஹாதேஜஸ்ஸு அந்த ஸமுத்ரஜலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தேஜஸ்ஸுக்கு ப்ரளயகாலத்தில் ஜங்கமஸ்தாவரங்கள் அடங்கிய மஹாவேகமுள்ள அந்த ஜல

மெல்லாம் எரிகருவியாமென்று கூறுகின்றனர். அங்கு அந்த ஜலஸமுத்ரத்தில் வாஸஞ்செய்யும் ப்ராணிகள் பல பராக்ரமங்கள் மிகுந்திருக்கப் பெற்றவராயினும் அந்தப் படபாக்னியைப் பார்த்துப் பொறுக்கமுடியாமல் உரக்க இறைச்சலிடுவது செவிப்பட்டுக் கொண்டிருக்கும். அந்தச் சுத்த ஜலஸமுத்ரத்திற்கு அக்கரையில் பதின்மூன்று யோ ஜனை தூரத்தில் ஜாதரூபசில மென்னும் பேருடைய பெரி ய பொன்பர்வதம் ஒன்றிருக்கின்றது. வானரர்களே! அனந் தரம் அந்தப் பர்வதசிகரத்தில் சந்த்ரன்போல் வெளுத்து ப்ரகாசிப்பவனும் தாமரையிதழ்போல் அகன்ற கண்களு டையவனும் கறுத்த வஸ்த்ரந்தரித்து ஆயிரம்சிரஸ்ஸுக ளுடன் விளக்கமுற்றவனும் ஸமஸ்த பூதங்களாலும் வண ங்கப்படுபவனும் பூமண்டலத்தைத் தரிப்பவனும் தேவ னும் ஸர்ப்பமூர்த்தியுமாகிய ஆதிசேஷனாகிற காண்பீர் கள். அம்மஹாஸர்பவனத்தில் பொன பனைமரம். அது மூன்று சிகரமுடையதும் வேதிகையோடுகூடி அந் தப்பர்வதத்தின் சிகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுமாகி மிக வும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். தேவதைகளுக்கு ப்ர புக்களாகிய த்ரிமூர்த்திகள் அதைத் தாலத்வஜத்தைக் கீழ்த்திசைக்கு எல்லையாக ஏற்படுத்தினர். அதன்பிறகு பொன்மயமான உதயபர்வதம் பளபளவென்று விளக்க முற்றுப் புலப்படும். ஸ்வர்ணமயமும் திவ்யமுமாகிய இந் தப் பர்வதத்தின் நுனி நூறுயோஜனைதூரம் உயர்ந்து வேதிகையுடன்கூடி ஸ்வர்க்கலோகத்துடன் உறைத்து கொண்டு ப்ரகாசிக்கும். அது, ஸூர்யன்போல் தகதக வென்று விளங்கும் ஸ்வர்ணமயமான திவ்ய ஸாலவருக்ஷங் களும் பனைமரங்களும் தமாலவ்ருக்ஷங்களும் புஷ்பித்த கர்ணிகார வருக்ஷங்களும் நிறைந்து அழகாயிருக்கும். அந்தப் பர்வதத்தின் நுனியில் ஒருயோஜனை விஸ்தாரமு

டையதும் பத்துயோஜனை உயரமுடையதும் ஸ்வர்ணமய மாயிருப்பதும் திடமுமாகிய லௌமனஸமென்னும் சிகர மொன்றுளது. பூர்வம் புருஷோத்தமனாகிய விஷ்ணுதே வன் பலிசக்ரவர்த்தியிடம் மூன்றடிகள் இரந்து வாங்கி அளக்கும்பொழுது முதலடி கிழக்குத்திசைக்கு எல்லை யாகிய இந்த உதயபர்வதத்தின் லௌமனஸமென்கிற சிகரத்திலும் இரண்டாவது அடி மேல்திசைக்கு எல்லை யாகிய ஸாவர்ணிமேருபர்வதத்தின் சிகரத்திலும் இட்ட னன். ஸூர்யன் அஸ்தமித்தபின்பு ஜம்பூத்வீபத்தின் வடபாகத்தில் ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவந்து மிகவும் உயர் ந்திருக்கிற இந்த லௌமனஸ சிகரத்திற் சேர்ந்தபின்பு மேருவின் தென்பக்கத்திலிருப்பவர்களுக்கு (நம்மெல்லோ ர்க்கும்) நன்கு புலப்படுவான். அந்த லௌமனஸ சிகரத் தில்பெருந்தவப் பெருக்குடையவரும் ஸூர்யன்போல் ஒளி யுடன் ப்ரகாசிப்பவருமாகிய வைகானஸரென்றும் வால கில்யரென்றும் மஹர்ஷிகள் பளபளவென்று விளக்கமுற் றுப் புலப்படுவார்கள். எதனுடைய ஸந்நிதானத்தில் ஸம ஸ்த ப்ராணிகளுடைய கண்களும் விஷயங்களை க்ரஹிக் கும் ப்ரகாசத்தைப்பெறுமோ, அந்த ஸூர்யனென்னும் தேஜஸ்ஸை ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் த்வீபம் ஸா தர்சனமென்னும் யதார்த்தநாமத்துடன் உதயபர்வதத்தி னருகில் விளக்கமுற்றிருக்கும். அந்த உதயபர்வதத்தி லுள்ள சிகரங்களிலும் குஹைகளிலும் வனங்களிலும் நிரித்து ஆங்காங்கு ஸீதா தேவியையும் ராவணனையும் தேடிப்பார்ப்பீர்களாக. பொன்மயமான உதய பர்வதத் தின் தேஜஸ்ஸும், மஹா தேஜஸ்வியாகிய ஸூர்யனு டைய தேஜஸ்ஸும் ஒன்றோடொன்று கலந்து ப்ரகாசி ப்பதுபற்றி விடியற்காலத்து ஸந்த்யை ரக்த வர்ணத்துட ன் ப்ரகாசிக்கின்றது. இந்தக் கிழக்குத் திக்கு பூமிக்கும்

லோகத்திற்கும் முதல் த்வாரமாகவும் ஸூர்யனுக்கு உத யஸ்தானமாகவும் ஸ்ருஷ்டியாதியில் ப்ரஹ்மதேவனால் நிர் மிக்கப்பட்டதாகையால் இது பூர்வ திக்கெனப்படும். அ க்த உதய பர்வதத்தின் பின் பாகங்களிலும் மலையருவிக ளிலும் குஹைகளிலும் ஆங்காங்கு ஸீதா தேவியையும் ராவணனையும் தேடவேண்டும். அவ்வுதயாசலத்திற் கப்பு றம் கீழ்த்திசையில் சந்த்ர ஸூர்யர்களின் ஸஞ்சாரமில் லாமையால் அந்தகாரஞ் சூழப்பெற்றுக் கண்தெரியாமை யைப் பற்றித் தேவதைகள் மாத்ரம் உலாவிக்கொண்டிரு ப்பார்கள். ஆகையால் பிறர்க்குப் புக அரிதாயிருக்கும் மேலும் நான் சொன்ன இடங்கள் மாத்ர மன்றிக்கே கிழக்குத் திக்கில் நான் சொல்லாத இதர பர்வதங்களிலும் குஹைகளிலும் வனங்களிலும் தேசங்களிலும் எல்லாவற் றிலும் ஸீதாதேவியைத் தேடிப் பார்க்கவேண்டும். வான ரோத்தமர்களே! இதுவரைக்குமே வானரர்க்குப் புக ஸாத்யமாகும். அதன்மேல் ப்ரதேசம் ஸூர்யஸஞ்சாரமி ல்லாமல் க்ராமம் நகரம் பர்வதம் அரண்யம் முதலிய பிரி விஜனயில்லாமையால் எப்படியிருக்குமோ எமக்குத் தெரி யாது. நீங்கள் உதய பர்வதம் வரையில் சென்று ஸீதா தேவியும் ராவணனும் இருக்கும் வாஸ ஸ்தானத்தைக் கண்டுபிடித்து ஒரு மாதம் நிரம்புவதற்கு முனனமே திரு ம்பி வரவேண்டும். ஒரு மாதத்திற்கு மேல்பட்டகாலம் வெ ளியில் வஸிக்கலாகாது. அங்ஙனம் வராதிருப்பவன் என் னால் விதிக்கப்படும் மரணதண்டனைக்குப பாத்ரனவான். ஸீதாதேவியைப் பார்த்து எல்லாவித்திலும் கார்ய ஸித்தியைப்பெற்றுத் திரும்பவேண்டும். வானரர்களே! நீங்கள் காணவித வனஸஞ்சாரங்களால அழகாயிருப் பதும் இந்த்ரனுக்கு ப்ரியமுமாகிய கிழக்குத்திக்கில் வல வமையுடன் திரிந்து தேடிப்பார்த்து ரகுவம்சத்திற்பிறந்த

ராமனது பார்யையாகிய ஸீதாதேவியைக் கண்டுபிடிப்பீர்களாயின் அவ்விடமிருந்து வந்து ஸுகமாயிருப்பீர்கள்' என்றனன். காற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஸுக்ரீவன் தென் திசைக்கு ஹனுமான் முதலானவர்களை அனுப்புதல். }

ஸுக்ரீவன் அங்ஙனம் அந்தப்பெரிய வானர ஸைன்யத்தைக் கீழ்த்திசைக் கனுப்பி, அனந்தரம் அனேக யுத்தங்களில் பராக்ரமத்தைச் செலுத்திக் கைதேர்ந்தவரென்று தெரிந்த வானரர்களைத் தென் திசைக்கு அனுப்பினன். வானரர் தலைவனும் வீரனுமாகிய ஸுக்ரீவன் வானரர்களின் தாரதம்யத்தை நன்கறிந்தவனுகையால் அக்னியின் குமாரனுகிய நீலனையும் ஹனுமானையும் மஹாபலிஷ்டனும் ப்ரஹ்ம புத்ரனுமாகிய ஜாம்பவானையும் ஸுஷேணனையும் சாரிணையும் சரகுல்மனையும் கஜனையும் கவாக்ஷனையும் கவயனையும் ஸுஷேணனையும் ருஷபனையும் மைந்தனையும் த்விதனையும் விஜயனையும் கந்தமாதனனையும் அக்னி புத்ரர்களாகிய உல்காமுகன் அனங்கன் என்னுமிருவரையும் மேலும் வேகத்திலும் பராக்ரமத்திலும் மேலாகிய அங்கதன் முதலான வீரர்களையும் தென் திசைக்குப்போக ஆஜ்ஞாபித்தனன். ஸுக்ரீவன் எங்குத் தடையின்றி வேகமாகச் செல்லும் வல்லமையுடைய பெரிய வானர ஸைன்யத்தை அத வீரர்களுக்கு முன்னே ஸஹாயமாகப் போகும்படி நியமித்து அவர்களைத் தென் திசைக்குப போக ஆஜ்ஞாபித்தனன். வானரர் தலைவனுகிய அத ஸுக்ரீவன் அவ்வானர வீரர்களுக்கு அதத் தென்திசையில் மிகவும் தெரியக்கூடாத சிலதேசங்களைத் தெரியச் சொல்லினன். நீங்கள் ஆயிரஞ் சிகரங்களோடு கூடி நாணுவித்த வ்ருக்ஷங்களும் கொடிகளும் விளங்கப்பெ

ற்ற விந்த்ய பர்வதத்தையும் பெரிய ஸர்ப்பங்களுக் கிருப்பிடமாகித் தாண்டமுடியாத கர்மதாநதியையும் விந்த்ய பர்வதத்தினருகிலுள்ள ரமணீயமான கோதாவரீ நதியின் ஓர் பாகத்தையும் மஹாநதியாகிய க்ருஷ்ணையையும் மிகவும் பூஜிக்கத் தக்கதும் மஹா ஸர்ப்பங்கள் ஸஞ்சரிக்கப்பெற்றதுமாகிய வரதா நதியையும் மேகலா நதியையும் உத்கலா நதியையும் தசார்ணதேசத்திலுள்ள நகரங்களையும் அஸ்மவந்த பர்வதத்தையும் குதிரைகள் நிறைந்த அவந்தி பட்டணத்தையும் இவையெல்லாவற்றையும் சென்று தேடிப்பார்க்கவேண்டும். விதர்ப்பதேசத்திலும் ரிஷிகதேசத்திலும் ரமணீயமான மாஹிஷகதேசத்திலும் வங்கலிங்க தேசங்களிலும் காசிகதேசத்திலும் பர்வதங்களும் குஹைகளும் நதிகளும பொருந்தி விளங்கும் தண்டகாரண்யத்திலும் அந்தத் தண்டகாரண்யத்திலுள்ள கோதாவரி நதியிலும் ஆந்த்ரதேசத்திலும் புண்ட்ர சோள பாண்ட்ய தேசங்களிலும் கேரளதேசத்திலும் தேடிப்பார்ப்பீர்களாக. அனந்தரம் கைரிகதாதுக்களால் விளங்கும் ஸஹ்யபர்வதத்திற்கும் போவீர்களாக. அதற்பர்வதம் விசித்ரங்களான சிகரங்கள் அமையப்பெற்றுப் புஷ்பித்திருக்கையால் நாலுவர்ணங்கள் பொருந்திய வனங்களுடன் கூடி ஆங்காங்குச் சந்தன வனங்களால் விளக்கமுற்றிருக்கும். அம்மஹா பர்வதம் முழுவதிலும் ஸீதாதேவியைத் தேடவேண்டும். அனந்தரம் அங்குத் தெளிந்த ஜலமுடையதும் மங்களத்தை விளைப்பதும் அப்ஸரஸ்த்ரீகளால் புகழப்பட்டதுமாகி விளங்குந் திவ்யநதியாகிய காவேரியைக் காண்பீர்கள். அனந்தரம் ப்ரஸித்தமாயிருக்கின்ற அந்த மலயபர்வதத்தின் சிகரத்தில் உட்கார்ந்து ஸூர்யன்போல் மஹா தேஜஸ்ஸுடன் விளங்குகின்ற ரிஷிதிலகராகிய அகஸ்த்யரைக் காணலாம். அ

ணந்தரம் மஹாநுபாவராகிய அந்த அகஸ்த்யமாமுனி யின் அநுக்ரஹம் பெற்று அவரால் அநுமதிக்கப் பட்ட வராகி முதலிகள் நிறைந்த மஹா நதியாகிய தாம்ரபர்ணி யைக் கடப்பீர்களாக. மேனி முழுவதும் சந்தனம் பூசிக் கொண்டு உயர்ந்த கொங்கைகளுடன் அழகாய் விளங்கும் ஓர் பெண்மணி தன் காதலனிடம் போவதுபோல், திவ்ய சந்தன வ்ருக்ஷங்களால் மறைக்கப்பட்ட பலதீவுகளுடன் ப்ரகாசிக்கின்ற அத்தத் தாம்ரபர்ணீ நதி ஸமுத்ரத்தை அடைகின்றது. வானரர்களே! அங்கிருந்து கடப்பீர்களா யின் பாண்ட்யநகர த்வாரத்தில் ஸ்வர்ணமயமாகி முத்துக் களால் அலங்காரஞ் செய்யப்பெற்று நன்கு நிர்மிக்கப் பட்ட பொற்கவாடத்தைக் காண்பீர்கள். அங்கிருந்து ஸமுத்ரதீரஞ் சென்று ஸீதையைத் தேடும் பொருட்டு ஸமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தை ஆலோசித்து நிச்சயித்துக் கொள்வீர்களாக. அங்கு ஸமுத்ரதினி டையில் அகஸ்த்யரால் வைக்கப்பட்ட மஹேந்த்ர மென் னும் பர்வதம் இருக்கின்றது. அது நாநாவர்ணங்கள் பொருந்தின பலவித வ்ருக்ஷங்கள் நிறைந்து பூவும்காயும் நிரம்பி ஸம்ருத்தமா யிருக்கப்பெற்றுப் பொன்மயமாகி ஜ்வலிக்க ஒளியுடன் மஹா ஸமுத்ரத்தில் ஆழ்ந்திருக்கின் றது. மேலும் அது பலவித ஸகல வ்ருக்ஷங்களாலும் கொடிகளாலும் விளக்கமுற்றுத் தேவதைகளும் சிறந்த யக்ஷர்களும் அப்ஸரஸ்த்ரீகளும் பணியவும், ஸித்தர்க ளும் சாரணர்களும் குஷியல் குஷியலாக நிறைந்து மெக்க ரிக்கவும் பெற்று மிகவும் மநோஹரமா யிருக்கும். அவ்வி டத்திற்குத் தேவேந்த்ரன் பர்வந்தோறும் இடைவீடின்றி ஸமுத்ர ஸ்நானத்தின் பொருட்டு வருவான். அந்தஸமுத் ர மத்யத்தில் இக்கரையில் நூறுயோஜனை விஸ்தீர்ண முடையதும் மனிதர்களுக்குப் போகமுடியாமல் மிக்கவி

ளக்கழுற்றதுமாசில ஓர் த்வீபம் (தீவு) இருக்கின்றது. அந்த த்வீபம்முழுமையும் ஸீதாதேவியைத் தேடவேண்டும். அந்த த்வீபத்தில் மற்ற இடங்களைக் காட்டிலும் விசேஷித்து ஸீதாதேவியை எல்லா ப்ரயத்னங்களோடும் தேடிப்பார்க்க வேண்டும். எனென்னில்:—அந்த ப்ரதேசமே துர்ப்புத்தியும் தேவேந்த்ரனை நிகர்த்த தேஜஸ்ஸுடையவனும் ராக்ஷஸர்களுக்கு ப்ரபுவும் கம்மல் வதிக்கத்தகுந்தவனுமாகிய ராவணனுக்கு வாஸஸ்தானம். அந்தத்வீபத்திற்கு வடபாகத்தில் அத்தற்கு ஸமுத்ரத்தினிடையில அங்காரகை யென்னும் ராக்ஷஸி ஒருத்தி இருக்கின்றனள். அவள் ஜந்துக்களின் நிழலைப்பிடித்து இழுத்து அவைகளைப் பக்ஷித்துக்கொண்டிருப்பாள். வானர்களே! நீங்கள், ராவணன் எந்த இடத்தில் ஸீதையை வைத்திருப்பா னென்று ஸந்தேஹம் உண்டாகுமோ, அந்த ப்ரதேசங்களெல்லாவற்றிலும் ஸீதை இருப்பதும் இல்லாததும் நிச்சயமாகத் தேடிப்பார்த்து நிஸ்ஸம்சயமாக ஏற்படுத்திக்கொண்டு, மஹா தேஜஸ்வியும் ராஜனுமாகிய ராமனது பத்னியான ஸீதாதேவியைத் தேடவேண்டும். அந்த லங்கா த்வீபத்தைத் தாண்டி நூறு யோஜனை தூரத்தில ஸமுத்ரத்தில் ஸித்தசாரணர்கள் நிரியப்பெற்று மிகவும் அழகான புஷ்பிதகமென்னும் பர்வதம் இருக்கின்றது. அந்தப் பர்வதம் ஒருபக்கத்தில் சந்த்ரன்போல் வெளுத்தும் மற்றொருபக்கத்தில் ஸூர்யன் போல் சிவந்தும் ஸமுத்ராஜலம் சூழ்ந்து உயர்ந்த சிகரங்களால் ஆகாயத்தை உறைவதுபோல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். தக்ஷிணையனத்தில் அந்தப் பர்வதத்தின் ஸ்வர்ணமயமான சிகரத்தில் ஸூர்யன் தங்குவான்; சந்த்ரன் வெள்ளிமயமாகி வெளுத்திருக்கும் மற்றொரு சிகரத்தில் தங்குவான். வானர்களே! க்ருதக்னர்

கஷ்க்கும் க்ரூரர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் அந்தப் பர்வதம் புலப்படாது. நீங்கள் அந்தப் பர்வதத்திற்குத் தலைவணக்கி நமஸ்காரஞ் செய்து அங்கு ஸீதாதேவியைத்தேடிப் பார்ப்பீர்களாக. வானரர்களே! உங்களை எதிரிட எவர்க்கும் ஸாத்யமன்றுகையால் நீங்கள் தலைடையின்றி அந்தப் பர்வதத்தைக் கடந்த பின்பு ஸுர்யவந்தமெனனும் பர்வதம் இருக்கின்றது. அதற்குப் புகக்கூடாத வழியில போகவேண்டும். புஷ்பிதக பர்வதத்தினின்று பதினான்கு யோஜனைதூரம் இருக்கும். அனந்தரம் அந்த ஸுர்யவந்தமென்னும் பர்வதத்திற் கருகில் வைத்யுதமெனனும் பர்வதம் இருக்கின்றது. அதிலுள்ள வ்ருக்ஷங்கள் விரும்பின பழங்களையெல்லாங் கொடுப்பனவாகி ஸமஸ்தகாலங்களிலும் மதுரமாயிருக்கும். வானரர்களே! அந்தப் பர்வதத்தில் பெரியோர்களுக்கே அனுபவிக்கத்தகுந்த பழங்களையும் வேர்களையும் பக்ஷித்து மிகவும் மேன்மையுள்ள தேன்களையும் பருகி அவ்வருகுள்ள தேசத்திற்குப் போவீர்களாக. அங்குக் கண்களுக்கும் மனத்திற்கும் இனிமையைக் கொடுக்குங் குஞ்சரமென்னும் பர்வதம் இருக்கின்றது. அந்தப் பர்வதத்திலேயே விஸ்வகர்மா அகஸ்த்யர்க்கு க்ருஹம் நிர்மித்துக் கொடுத்தனன். அந்தப் பர்வதத்தில் அகஸ்த்யமுனியின் க்ருஹம் ஒருயோஜனை விசாலமும் பத்துயோஜனை நீளமும் பொருந்திப் பொன்வர்ணமுடையதாகி நாலுவிதரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டுத் திவ்யமாக விளங்கும். அங்கு ஸர்ப்பங்களுக்கு வாஸஸ்தானமாகிய போகவதியென்னும் பட்டணம் இருக்கின்றது. அது அகன்ற கட்டுகள் நிறைந்து நாற்புறத்திலும் காக்கப்பட்டிருக்கையால் எப்படிப்பட்டவர்க்கும் எதிரிடமுடியாததாயிருக்கும். கூரான கோரைப்பற்களும் அமைந்து மஹாவிஷ

முடையவைகளும் பயங்கரமான உருவத்துடன் புலப்படு மவைகளுமாகிய ஸர்ப்பங்கள் அதைக் காத்துக்கொண் டிருக்கும். அங்கு மஹா ப்ராஜ்ஞரகிய ஸர்ப்பராஜன் வாஸுகி வாஸஞ்செய்கின்றனன். நீங்கள் அகஸ்த்ய க்ரு ஹத்தினின்று புறப்பட்டு அத்தப் போகவதீபுரம்போய்த் தேடவேண்டும். மேலும், அதன் ஸமீபத்தில் மிகவும் ரஹஸ்யமா யிருக்கும் ப்ரதேசங்க ளெல்லாவற்றிலுங் கூ டத் தேடிப்பார்க்கவேண்டும். அத்தப் போகவதீபுரத்திற் கப்புறம் ருஷபமென்னும் ஓர் பர்வதம் உளது. அது வ்ரு ஷபத்தின் உருவம்போல் அமைத்து ஸமஸ்தரத்னங்களும் நிரம்பப்பெற்றுச் சோபையுற்றிருக்கும். அத்தப் பர்வதத் தில் திவ்யமான சந்தனமரங்கள் விளையும். அவற்றில் சில கோரோசனை வர்ணமுடையவைகளும் சில தாமரை யிதழின வர்ணமுடையவைகளும் சில தமால வருக்ஷத் தின் வர்ணமுடையவைகளும் சில அக்னிபோல் சிவப்பு வர்ணமுடையவைகளுமா யிருக்கும். நீங்கள் அத்தச் சந் தனமரங்களைப் பார்த்து ஒருக்காலும் தொட்டுப்பார்க்க வேண்டாம். ஏனெனனில் பயங்கரமான உருவமுடைய ரோஹிதரென்னுங் கந்தர்வர்கள் அத்தச் சந்தன மரங் களுக்குக் காவலிருக்கின்றனர். அத்த ருஷபபர்வதத்தில் ஸைலூஷ னென்றும் க்ராமணியென்றும் சிக்ருவென் றும் தப்ரனென்றும் பப்ருவென்றும் ஏழு கந்தர்வராஜர் கள் ஸூர்யனை நிகர்த்த ஒளியுடன் ப்ரகாசித்துக் கொண்டிருப்பார்கள். புண்யகர்மம் செய்தவர் சிலர் ஸூர் யன போன்ற ஒளியுடையவர்களும், சிலர் சந்த்ரனைப் போல் விளக்கமுற்றவர்களும், சிலர் அக்னியைப்போல் ப்ரகாசிப்பவருமாகி அந்தப் பர்வதத்தில் வாஸஞ் செய் வார்கள். பூமியின் கடைசிபாகமாகிய அவ்விடத்தில் தமது புண்யகர்மங்களால் ஸ்வர்க்காதி புண்யலோகங்

கனை வென்ற மஹா புருஷர்கள் பிறர்க்குக் கண்கொண்டு காண முடியாத மஹா தேஜஸ்ஸுடன் ப்ரகாசித்துக் கொண்டிருப்பார்கள். அதற்குமேல் மிகவும் பயங்கரமான பித்ருலோகம் உளது. அது யமனுடைய ராஜதானி. அது புகக்கூடாத் பேரிருள்மூடப்பெற் றிருக்குமாகையால் உங்களுக்குப் புக ஸாத்யமன்று. வானரோத்தமர்களே! நீங்கள் வீரர்களாயினும் இவ்வளவு மாத்ரமே உங்களுக்குப் போகவும் போய்த் தேடவும் ஸாத்யமாகும். இதற்குமேல் எப்படிப்பட்ட கமனசக்தி யுடையோர்களுக்கும் போகமுடியாது. இப்பொழுது நான் சொன்ன இடங்கள் முழுவதிலும், நான் சொல்லாமற் போயினும் உங்களுக்குப் புலப்படும் மற்ற இடங்களிலும் முழுமையும் கன்கு தேடிப்பார்த்து ஸீதாதேவியின் போக்கிடம் தெரிந்துகொண்டு திரும்பிவரவேண்டும். என்மாதத்திற்குள்ளாகவே 'புலப்பட்டாள் ஸீதை' என்று மொழிவாரை, அவன் என்றுமு ஸமானமான வைபவத்தைப் பெற்று ஸமஸ்த போகங்களையும் அனுபவித்து ஸுகமாக விளையாடிக்கொண் டிருப்பான். அவனைக்காட்டிலும் ப்ரியனையிருப்பவன் எனக்கு மற்றவனும் இல்லை. அவன் என் ப்ராணன்களைக் காட்டிலும் விசேஷித்து மேற்பட்டவனுவான். அவன் எவ்வளவு அபராதங்கள் அடிக்கடி செய்யினும் எனக்குப் பந்துவைப்போல் இஷ்டனேயாவான். நீங்கள் மிதமில்லாத பலபராக்ரமங்களையுடையவர்; சௌர்யதைர்யாதி ஸமஸ்த ஸத்குணங்களும் அமைந்த நற்குலங்களில் ஜனித்தவர். ராஜகுமாரத்தியாகிய ஸீதாதேவியைப் பெறும்படி அதற்குத்தகுந்த பௌருஷங்களையெல்லாம் கடத்துவீர்களாக' என்று மொழிந்தனன். நாற்பத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் மேற்றிசைசகு ஸுஷேணன் முதலிய வானர்களை அனுப்புதல்.

ஸுக்ரீவன் அங்ஙனம் ஹனுமான் முதலிய வானர்களைத் தென்திசைக்குப் போகும்படி அனுப்பி, அனந்தம் மேகங்கள்போல் கறுத்து உயர்ந்த உருவங்களையுடைய வானர யூதபதியும் தாரைக்குத் தகுதியாகையால் தனக்கு மாமனும் பயங்கரமான பராக்ரமமுடையவனுமாகிய ஸுஷேணனைப் பார்த்து அவனை எதிர்கொண்டு கமல்கரித்துக கைகளைக் குவித்து, மேலும் மிகுந்த காந்தியுடையவனும் சூர்களாகிய கபி ப்ரேஷ்டர்களால சூழப்பட்டவனும் மஹேந்த்ரன்போல் ஓளி விளங்கப்பெற்றவனும் புத்தியும் பராக்ரமமும் மிகுந்திருக்கப் பெற்றவனும் கருத்மதனைபோல் மிகுந்த காந்தியுடையவனும மரீசி மாமுனியின் மூத்தகுமாரனுமாகிய மாரீசனெனனும் மஹா கபியையும், மேலும் மிகுந்த காந்தியுடையவர்களும் மஹா பலிஷ்டர்களும் அவனுக்குத் தம்பிகளுமாகிய மாரீசர்க ளென்பவர்களையும் இங்ஙனம் மரீசிகுமாரர்க ளனைவரையும் மேற்கு திக்குக்கு அனுப்பமுயன்று 'வானரோத்தமாகளே! நீங்கள் ஸுஷேணனை முன்னிட்டுக்கொண்டு இரண்டுலகமும் வானர்களைத் தேடிப் பார்ப்பீர்களாக. வானரமுக்யர்களே! ஸுராஷ்ட்ர தேசத்திலும் பாஹ்லிக தேசத்திலும் பயங்கரமான சூலதேசத்திலும் பயிர்முதலிய ஸம்ருத்திகள் அமைந்து ரமணீயங்களான மற்ற தேசங்களிலும், விசாலங்களான பல நகரங்களிலும் புண்ணியவனத்திலும் மஹிழமரங்களும் கறுவிலிமரங்களும் நிறைந்த குக்குஷி தேசத்திலும் அங்ஙனம் தாமழுவனங்களிலும் சென்று ஸீதாதேவியைத் தேடிப்பார்க்கவேண்டும். மேற்குமுகமாகப் பெருகுவதும் குளிர்ந்த ஜலமுடையதும் பரிசுத்த

மூமாகிய கதிகளிலும் நிஷ்யாஸ்ரமங்களிலும் அரண்யங்களிலும் புகக்கூடாத மார்க்கங்களிலும் பர்வதங்களிலும் மற்றுமுள்ள எல்லா இடங்களிலும் தேடுவீர்களாக. வானரர்களே! அனந்தரம் நீங்கள் ஜலமில்லாத பூமிகளிலும் மிகவும் உயாகத சிகரங்களை யுடைய மலைகளிலும் அங்குனம் பல பாலதங்கள் குவியலா யிருக்கப் பெற்று ஸஞ்சரிக்கமுடியாத மேற்குத்திக்கு முழுவதிலும் தேடிப் பார்த்து அனந்தரம் அங்கிருந்து மேற்கு ஸமுத்ரத்திற்குச் சென்று ஜலங்களில நூறுயோஜனை நீளமுடைய திமிகளென்னும் மீனகளோடும் முதலைகளோடும் கூடிக் கலக்கமுடியாமல் கம்பீரமாகி விளங்குகின்ற அந்த ஸமுத்ரத்தைக் காண்பீர்கள். அந்த ஸமுத்ரத்தின் கரையில் நீங்களும் உங்கள் பரிஜனங்களாகிய வானரர்களும், தாழைப்புதர்களிலும் தமாலவனங்களிலும் தென்னந்தோப்புகளிலும் வேடிக்கையாக விளையாடுவீர்கள். அங்கு ஸமுத்ரக்கரையோரத்தி லிருக்கும் பாவதங்களிலும வனங்களிலும் ராவணனது வாஸஸ்தானத்தையும ஸீதாதேவியையும் நன்கு தேடிப்பார்க்கவேண்டும். முரசீபட்டணத்திலும் அழகியதான ஜடபுரத்திலும் அனகபுரத்திலும் அங்கலோபாகரத்திலும் (ஜனங்கள் புகுவார்களாயின் அது நெருக்கமா யிருகையால் புலப்படா திருப்பது பற்றி) அலக்ஷிதமெனலும் பேருடைய அரண்யத்திலும் மேலும் விஸ்தீர்ணங்களான மற்ற தேசங்களிலும் பட்டணங்களிலும் ஆங்காங்கு ஸீதாதேவியையும் ராவணனையும் தேடிப்பார்க்கவேண்டும். ஸிதாந்த ஸமுத்ரத்தில் கலக்குமிடத்தில் நூறு சிகரங்களுடையதாய் மிகவும் உயர்ந்த பல பெரிய வ்ருக்ஷங்களோடுகூடிய ஹேமகிரியென்னும் மஹா பர்வதம் ஒன்றிருக்கின்றது. ரமணீயங்களான அந்த மலையின் சாரல்களில் இறகுடைய ஸிம்

ஹங்கள் விளங்கும். அவை ஸமுத்ரத்திலுள்ள திமி மத்ஸ்யங்களையும் கஜங்களையும் எடுத்துக்கொண்டுபோய், தமது வாஸஸ்தானமாகிய கூண்டுகளில் வைத்துக்கொண்டிருக்கும். சுற்றிலும் ஜலங்கள் நிறைந்த இந்த ப்ரதேசத்திலுள்ள யானைகளும் அந்த ஹேமகிரியின் சிகரத்திலுள்ள யானைகளும் மிகுந்த ஆஹாரங்களால் த்ருப்தி அடைந்து மதித்து மேக கர்ஜனைபோன்ற கீங்காரங்களைச் செய்துகொண்டு மதத்தினால் கண்தெரியாமல் அந்த ஸிம்ஹங்களின் கூடுகளிருக்கும் ப்ரதேசங்களில் பயமின்றி ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும். அந்த ஹேமகிரியின் ஸுவர்ணமயமான சிகரங்கள் மிகவும் உயர்ந்திருக்கையால் ஆகாயத்தை உறைத்துகொண்டு புஷ்பித்துச் சித்ரவர்ணங்களோடு விளக்கமுற்ற வ்ருக்ஷங்கள் அமைந்திருக்கும். காமரூபர்களாகிய நீங்கள தாமதஞ்செய்யாமல் அந்தச் சிகரம் முழுவதிலும் கண்டு தேடிப்பார்ப்பீர்களாக. வானரர்களே! ஸமுத்ரத்தில் கொஞ்சதூரம் போகையில் அதன் நடுவில் பொன்மயமாகி நூறுயோஜனதூரம் விஸ்தாரம் அமைந்து தேஜோவிசேஷத்தினால் பாக்க முடியாதிருக்கும் பாரியாத்ர மென்னும் பர்வதத்தினுடைய சிகரத்தைக் காண்பீர்கள். அந்தச் சிகரத்தில், பலிஷ்டர்களும் அக்னியைப்போல் தீக்ஷ்ணமாயிருப்பவர்களும் பயங்கரமான உருவமுடையவர்களும் காமரூபிகளுமாகிய கந்தர்வர்கள் இருபத்து நான்குகோடிக் கணக்குடையவர் வாஸஞ்செய்கின்றனர். அவர்கள் அக்னிஜ்வாலைபோல் ஜ்வலக்கமுற்று ஆயிரமாயிரமாய்க் கும்புகூடியிருப்பார்களாகையால் பயங்கர பராக்ரமர்களான வானரர்களுங்கூட அவர்களருகிற்போக முடியாது. மேலும் அவ்விடத்திலிருக்கும் பழங்களையுங்கூட அணுமாத்ரமேனும் வானரர்கள் பறிக்கலாகாது. ஏனென்னில்:—

அவர்கள் மஹாவீர்களும் மிகுந்த தைர்யமுடையவர்களும் மஹாபலிஷ்டர்களும் பயங்கர பராக்ரமர்களுமாகையால் எவர்க்கும் அணுகமுடியாதவராகி அங்குள்ள காய் கிழங்குகளையும் பழம்வேர் முதலியவற்றையும் காத்திருப்பார்கள். அங்ஙனம் அங்குள்ள பல மூலங்களில் சாபலம் உண்டாகாதிருக்குமாறு யத்னப்பட்டு ஜாக்ரதையுடன் ஸீதாதேவியைத் தேடவேண்டும். ஸாதாரண வானரர்களைப்போல் திரிவீர்களாயின் அந்தக் கந்தர்வர்களால் சிறிதும் பயம் உண்டாகாது. ஆகையால் அங்ஙனம் தேடிப் பார்ப்பீர்களாக. அந்த ஸமுத்ரத்தில் மேலும் கொஞ்சதூரம் போவீர்களாயின், வைடூர்ய மணியின் காந்தியமைந்து வஜ்ரமணிபோல் கடினமாகி நாணவித வ்ருக்ஷங்களும் கொடிகளும் நிறைந்திருக்கும் வஜ்ர மென்னும் மஹா பர்வதம் புலப்படும். அழகியதான அந்த வஜ்ரகிரி நூறுயோஜனை தூரம் உயர்ந்திருக்கும். வானரர்களே! அதன் குஹைகளில ப்ரயத்னப்பட்டு ஸீதாதேவியைத் தேடவேண்டும். அனந்தரம் லவண ஸமுத்ரத்தின் மூன்று பாகங்களைக் கடந்த பினபு நான்காவது பாகத்தில் சக்ரவந்தமென்னும் ஓர் பர்வதம் உளது. அதில் முன்பு விஶ்வகர்மாவால ஆயிரம் இலைகளையுடைய சக்ராயுதம் நிர்மிக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சக்ரவந்த பர்வதத்திலேயே பூர்வம் விஷ்ணுதேவன் ஓர் தேவாஸுர யுத்தத்தில் புருஷோத்தம ரூபத்துடன் அவதாரஞ் செய்து சக்ராயுதத்தை ரக்ஷிக்கின்ற ஹயக்ரீவ னென்னும் தானவனை வதித்துச் சக்ராயுதத்தையும், பஞ்சஜனனென்னும் தானவனைக் கொன்று அவனது எலும்பாகிய பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தையும் கைப்பற்றினன். அந்தப் பர்வதத்தில் விசித்ரங்களான தாழ்வரைகளிலும் விசாலங்களான குஹைகளிலும் ராவணனையும் ஸீதையையும் தேடவேண்

டும். அதன்பிறகு அறுபது யோஜனைதூரத்தில் ஆழமா யிருக்கும் ஸமுத்ரத்தில் பொற்சிகரங்களை யுடையதும் மஹா தேஜஸ்ஸுடன் ப்ரகாசிப்பதுமாகிய வராஹமென் னும் பர்வதம் உளது. அந்தப் பர்வதத்தில் ஸ்வர்ணமய மான ப்ராக்ஜ்யோதிஷ மென்னும் பட்டணம் உளது அந்தப் பட்டணத்தில் துர்ப்புத்தியாகிய நரகாஸுரன் வாஸஞ் செய்வான். அந்தப் பர்வதத்தை சித்ரங்களான தாழ்வரைகளிலும் விசாலங்களான குஹைகளிலுமாக வை ணவியும் ஸீதாதேவியையும தேடவேண்டும். அதைப் பர் வதராஜனைக் கடந்தபின்பு வேறொரு பர்வதம் புலப்படும். அதன் குஹைகள் உள்ளெல்லாம் பொன்மயமாயிருக்கும். வெளியிலும் அவை பொன்மயங்களே. இங்ஙனம் முழுவ தும் ஸ்வர்ணமயமாகி மலைபருவிகளின தாரைகளோடு கூடி அது அழகாயிருக்கும். அதில் யானைகளும் பன றி களும் ஸிம்ஹங்களும் தம் த்வனியாலுண்டாகும் ப்ரதி த்வ னியைக் கேட்டுக் கர்வித்து எப்பொழுதும் அதற்கு ப்ரதி யாகக் கர்ஜித்துக்கொண்டேயிருக்கும். அந்தப் பர்வதத் தில் தான பச்சைக் குதிரைகளையுடையவனும் செல்வப் பெருக்கமைந்தவனுமாகிய தேவேந்த்ரனுக்குத் தேவ தைகள் தேவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்தனர். அந்தப் பர்வதம் மேகவர்ணமெனப்படும். நீங்கள் தேவேந்த்ரனால் பரிபாலிக்கப்படும் அந்தப் பர்வதத்தைக் கடந்து அதற் கப்புறம் பாலஸூர்யன் போன்ற வர்ணமுடையவைகளும் முழுமையும் ப்ரகாசிப்பவைகளும் நன்கு புஷ்பித்த பொன் வ்ருக்ஷங்களோடு கூடியவைகளுமாகிய அறுபதினாயிரம் பர்வதங்களைக் காண்பீர்கள். அந்தப் பர்வதங்களினிடை யில் ராஜாவாகி எல்லாவற்றிலும் மேன்மையுற்று விளங் கும் ஸாவர்ணிமேருவென்னும் பர்வதம் இருக்கின்றது. முன்பு ஸூர்யன் அருள்புரிந்து அந்தப் பர்வதத்திற்கு

வரந்தந்தனன். அந்த ஸுர்யன் அதைப்பார்த்து 'என் அனுக்ரஹத்தினல் உனனிடத்திலுள்ள வ்ருக்ஷங்கள் கற் கள் முதலியவையெல்லாம் இரவும் பகலும் ஸ்வர்ணமாயி ருக்குமாக. மேலும் உன்னிடம் வாஸஞ் செய்யும் தேவ தைகளும் கந்தர்வர்களும் தானவர்களும் எவரெவர் உள ரோ அவர்களெல்லோரும் காந்தியின் மிகுதியால் ரக்த வர்ணமுடையவரும் ஸ்வர்ணத்தின் காந்தியுடையவர்களு மாயிருப்பார்களாக' என்று, இங்ஙனம் வரங் கொடுத்த னன். விச்வேதேவதைகளும் வாயுக்களும் அஷ்ட வஸு க்களும் தேவதைகளும் ஸாயங்கால ஸந்த்யையில் பர்வ தப்ரதேஷ்டமாகிய ஸாவர்ணிமேருவைச் சேர்ந்து அங்கு ஸுர்யனுக்கு உபஸ்தானஞ் செய்வார்கள். ஸுர்யன் அ வர்கள் செய்யும் பூஜையை அங்கீகரித்து அஸ்தமய பர்வ தத்தை அடைந்து ஸமஸ்த பூதங்களுக்கும் புலப்படாத வனுவான். அந்த ஸாவர்ணி மேருவுக்கும் அஸ்தமய பர் வதத்திற்கும் பதிணாயிரம்யோஜனை தூரம் இருக்கின்றது. ஸுர்யன் அந்தப் பதிணாயிரம் யோஜனை தூரத்தை ஒரு காழிநாழிகைக்குள் கடந்து சீக்ரத்தில் அந்த அஸ்தமய பர்வ தத்திற்குப் போய்ச் சேருவான். அந்தப் பர்வத சிகரத் தில் விச்வகர்மாவால் நிர்மிக்கப்பட்ட பெரிய திவ்ய பவ னம் ஒன்றுளது. அது ஸுர்யன்போல் தகதகவென்று விளக்கமுற்று மேடைகள் பற்பலவும் சுவியல்சுவியலாக நிரம்பப்பெற்றிருக்கும். மேலும், அதில் காணவித பக்ஷி கள்நிறைந்து விபப்பை விளக்கவல்ல அழகான வ்ருக்ஷங் கள் அமைந்து ரமணீயமாயிருக்கும். அது பாசாயுதத் தைக கையிலேந்தினவனும் மஹானுபாவனுமாகிய வரு ணனது வாஸஸ்தானம். ஸாவர்ணிமேருபர்வதத்திற்கும் அஸ்தமய பர்வதத்திற்கும் நடுவில் பத்து சிகரங்களும் சி த்ரவர்ணமுடைய வேதிகையும் அமைந்து பொன்மயமாகி

அழகு விளங்கப்பெற்று ஓர் பிணமரம் ப்ரகாசித்துக்கொ
ண்டிருக்கும். தர்மங்களை உணர்ந்தவரும் தமது தவமஹி
மையால் பூஜிக்கப்பட்டவரும் ப்ரஹ்மதேவனை நிகர்த்தவ
ருமாகிய மேருஸாவர்ணியென்பவர் வாஸஞ் செய்யப் பெ
ற்ற ஸாவர்ணிமேருவென்னும் பர்வதத்திலுள்ள ஸமஸ்த
துர்க்க ப்ரதேசங்களிலும் ஸரஸ்ஸுக்களிலும் நதிகளி
லும் ராவணனையும் ஸீதாதேவியையும் நன்கு தேடிப்பார்
க்கவேண்டும். ஸூர்யன்போல் ப்ரகாசித்துக்கொண்டிரு
க்கும் மஹர்ஷியாகிய அம்மேருஸாவர்ணிக்குத் தலைசாய்
த்து நமஸ்காரஞ் செய்து அவரைப் பார்த்து ஸீதாதேவி
யின் வ்ருத்தாந்தத்தைக் கேட்கவேண்டும். ஸூர்யன் ரா
த்ரி கடந்து விடியற்காலமாகையில் உதித்து உதய பர்வ
தம் முதற்கொண்டு இப்பொழுது சொன்ன அஸ்தமய பர்
வதம் வரையிலுள்ள ப்ரதேசத்தை மாத்ரமே இருட்
டைப் போக்கி ப்ரகாசிக்கச் செய்துகொண்டு அஸ்தகிரி
யைச் சேருவான. வானர ஸ்ரேஷ்டர்களே! இவ்வளவு
தூரம் வரைக்குமே வானரர்களுக்குப் போக ஸாத்யப்
படும். இதற்குமேல் ஸூர்ய ப்ரகாசமில்லாமையால் இரு
ள் மூடப்பெற்று நகரம் க்ராமம் முதலிய ஏற்பாடில்லா
மையால் என்னிருக்கிறதோ எமக்குத் தெரியாது. நீங்
கள் அஸ்தமய பர்வதம் வரையில் சென்று ஸீதாதேவியு
டையவும் ராவணனுடையவும் இருப்பிடத்தைத் தேடித்
தெரிந்துகொண்டு ஒருமாதம் நிரம்புவதற்கு முன்னமே
வந்து சேரவேண்டும். ஒரு மாதத்திற்கு மேல் இருக்கலா
காது. அங்ஙனம் மாதத்திற்குள் வராமல் தாமதஞ் செ
ய்வோரையின் அவனுக்கு என்னால் மரணதண்டனை கே
ரும். உங்களோடுகூடச் சூரனும் என் மாமனுமாகிய ஸு
ஷேணனை வருவான். நீங்கள் இவன் விரும்பின கார்யங்க
ளைச் செய்துகொண்டு, இவன் சொன்னதை அப்படியே

யென்று செவியுற்று அங்ஙனமே நடக்கவேண்டும். எனக்கு மாமனும் பூஜிக்கத் தகுந்தவனுமாகிய ஸுஷேணன் மஹா புஜன், மிகுந்த பலமுடையவன். நீங்களும் பராக்ரமசாலிகள். நீங்கள் இருவகையருும் சேர்ந்து ஸமஸ்த கார்யங்களையும் இங்ஙனம் செய்யவேண்டுமென்று நிச்சயித்து வ்யவஸ்தை ஏற்படுத்திக்கொள்ள வல்லவர். நீங்கள் இந்த ஸுஷேணனைத் தலைவனாக ஏற்படுத்திக்கொண்டு இவனது ஆஜ்ஞைக்கு உட்பட்டு மேற்குத் திசையில் ஸீதாதேவியையும் ராவணனையும் தேடிப்பார்ப்பீர்களாக. அபாரதேஜஸ்ஸுடைய ராமனது பார்யையை ஸீதாதேவியைக் கண்டே வருவீர்களாயின், நமக்கு ராமன் செய்த உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரஞ் செய்தவராவோமாகையால் க்ருதார்த்தர்களாவோம். நான் சொன்னதேயனறி இன்னம் இக்கார்யத்தை ஸாதிக்கும் வழி உளதாயின், அதையுங்கூட நீங்கள் தேச காலங்களையும் கார்யாகார்யங்களையும் ஆலோசித்துச் செய்யவேண்டும்' என்றனன். அனந்தரம் ஸுஷேண முதலான வானரர்கள் அனைவரும் யுக்திகள் பொருந்தின ஸுக்ரீவனது ஆஜ்ஞையைக் கைப்பற்றி ஸுக்ரீவனிடம் செலவு பெற்றுக்கொண்டு வருணன் பரிபாலனஞ் செய்து வரும் மேற்குத் திசைக்குப் போயினர். நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஸுக்ரீவன் வடதிசைக்குச் சதவலி முதலிய வானரர்களை அனுப்புதல். }

தர்மங்களை உணர்ந்தவனும் ஸமஸ்த வானர ச்ரேஷ்டனுமாகிய ஸுக்ரீவன், அங்ஙனம் தன் மாமனாகிய ஸுஷேணனை மேற்குத்திக்குக்குப் போகும்படி அனுப்பி, அனந்தரம் வீரனும் வானர ச்ரேஷ்டனுமாகிய சதவலியைப் பார்த்து ப்ரத்யுபகாரத்தின் பொருட்டாகையால்

தனக்கு ஹிதமாயிருப்பதும், அன்பிற்கிடமான ஸீதாதே
வியின் சேர்த்திக்கு ஹேதுவாகையால் ராமனுக்கு ஹித
மாயிருப்பதுமாகிய வசனத்துடன 'நீ உன்னைப்போல்
பராக்ரமமுடையராகிய லக்ஷம் வானரர்களை அழைத்துக்
கொண்டு யமபுத்ரர்களாகிய இம்மந்த்ரிகளுடன்கூடி ப்ர
யாணஞ் செய்வாயாக. நீங்கள், அகன்று ஹிமவத் பர்வ
தத்திலுல் அலங்கரிக்கப்பட்ட வடதிசைக்குப் போய், அ
ங்கு சின்னதக்கிடமாகாத ராமனது பத்னியாகிய ஸீதா
தேவியைத் தேடவேண்டும். வானரர்களே! நீங்கள் கார்
யத்தை யறிந்தவரனைவரிலும் மேலாயிருப்பவர்; ஆதை
யால் நீங்கள் போகுங் கார்யம் நிறைவேறி ஸீதாதேவி
யைத் தேடிக்கொண்டுவந்து கொடுத்து ராமனுக்கு ஸந்
தோஷத்தை விளைவித்தால், நாம் கடனினின்று விடு
பட்டுக்ருதார்த்தராவோம். மஹானுபாவனாகிய ராமன்
முதலில் நமக்கு உபகாரஞ் செய்தனன். அதற்கு நாம் ப்ர
த்யுபகாரஞ் செய்தால் நம் பிழைப்பு ஸபலமாகும். முன்பு
உபகாரஞ் செய்யாதவனுயினும் தன கார்யத்தை நிறை
வேற்ற விரும்புவானுயின் அவனது கார்யத்தை நிறை
வேற்றுமவனுக்கு ஜன்மம் ஸபலமாமென்னில்—இனிப்
பூர்வம் உபகாரஞ்செய்தவனே தன் கார்யத்தை நிறை
வேற்றிக்கொடுக்க விரும்பும்பொழுது அதை நிறைவேற்
றுவதால் ஜன்மம் ஸபலமாமென்று சொல்லவேண்டுமோ?
நீங்கள் எமக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும் விரும்புமவ
ராகையால், இங்ஙனம் ப்ரத்யுபகாரஞ் செய்யவேண்டு
மென்னும் புத்தியைக் கைப்பற்றி ஸீதாதேவி அகப்படு
மாறு கையிலாகுமளவும் ப்ரயத்னஞ் செய்யவேண்டும்.
சத்ருபட்டணங்களை வெல்ல வல்லவனாகிய இந்தப் புருஷ
ஸத்தமன் ராமன் ஸமஸ்த பூதங்களுக்கும் பூஜிக்கத்
தகுந்தவன்; நம்மிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவன். ஆ

கையால் இவன் கார்யத்தை முக்யமாகச் செய்யவேண்டும். நீங்கள் வடதிசையில் ம்லேச்சதேசம் புலிந்ததேசம் சூரஸேனதேசம் ப்ரஸ்தலதேசம் இந்த்ரப்ரஸ்தம் முதலிய பரததேசம் தக்ஷிணகுருதேசம் மத்ரதேசம் காம்போஜதேசம் யவனதேசம் சகதேசம் ஆரட்டதேசம் பாஹ்லிகதேசம் ரிஷிகதேசம் பௌரவதேசம் டங்கணதேசம் சீனதேசம் பரமசீனதேசம் விஹாரதேசம் காததேசம் ஹிமவத்பர்வதம் ஆகிய இவற்றில் முழுவதும் தேடி, அனந்தரம் தூர்க்கம ஆரண்யத்திலும் நதிகள் பர்வதங்கள் முதலிய மற்றுமுள்ள இடங்களிலும் புத்தி பராக்ரமத்துடன் தேடிப்பார்க்கவேண்டும். வெள்ளலத்தி வனங்களிலும் பத்மகவனங்களிலும் தேவதாருவனங்களிலும் திரிந்து ஸீதாதேவியையும் ராவணனையும் கன்றுகத்தேடவேண்டும். அனந்தரம் தேவதைகளும் கந்தர்வர்களும் உலாவப்பெற்ற ஸோமாச்ரமத்திற்குப்போய் அங்கிருந்து பெரிய தாழ்வரைகளால் விளங்கும் காலபர்வதம்போய்ச் சேரவேண்டும். அந்தக் காலபர்வதத்தில் அகன்ற கல்வெடிப்புகளிலும் குஹைகளிலும் திரிந்து ஆங்காங்கு மஹா பாக்யவதியான ஸீதாதேவியைத் தேடவேண்டும். நீங்கள், பொன்விளையும் பூமியோடுகூடின பர்வதப்ரஷ்டமாகிய அந்தக் காலபர்வதத்தைக்கடந்து, அனந்தரம் ஸுதர்சன பர்வதத்திற்குப் போவீர்களாக. வானரர்களே! ஸுதர்சனபர்வதத்தைக் கடந்த பின்பு பக்ஷிகளுக்கு வாஸஸ்தானமாகிய தேவஸகமென்னும் பர்வதம் உளது. அதில் காணுவித பக்ஷிகள் நிறைந்திருக்கும். பலவகை வ்ருக்ஷங்களும் விளங்கப்பெற்று அப்பர்வதம் மிகவும் ரமணீயமாயிருக்கும். அந்தப் பர்வதத்திலுள்ள வனஸமூஹங்களிலும் மலையருவிகளிலும் குஹைகளிலும் திரிந்து அந்தந்த ஸ்தலங்களில் ஸீதாதேவியையும் ராவ

ணைனையும் தேடவேண்டும். அந்தப் பர்வதத்தையுங் கடந்தபின்பு நாற்புறத்திலும் நூறுயோஜனை விஸ்தாரமுடைய சூனயப்பிரதேசம் ஒன்றுளது. அங்குப் பர்வதங்களாவது நதிகளாவது வ்ருக்ஷங்களாவது புலப்படாது. ஆகையால் அங்கு எந்த ஜந்துவும் உண்டாகாது. மஹாபயங்கரமாகி மயிர்க்கூச்சலை விளைக்கும்படியான அந்தச் சூன்யாரண்யத்தை நீங்கள் தடைசெய்யாமல் த்வரையுடன் கடந்து வெளுத்து விளங்கும் கைலாஸபர்வதத்தைக்கண்டு ஸந்தோஷம் அடைவீர்கள். அதற்பர்வதத்தில் வெளுத்த மேகம்போல் விளக்கமுற்றுப் பொன்வேலைகள் செய்யப்பெற்று அழகான குபேரனது திவ்ய பவனம் உளது. அது விஸ்வகர்மாவால் நிர்மிக்கப்பட்டது. அதில் தாமரைகளும் கருநெய்தல்களும் ஏராளமாயிருக்கப்பெற்ற (மானஸமென்னும்) ஓர் தாமரையோடை உளது. அதில் ஹம்ஸங்களும் நீர்க்காகங்களும் நிறைந்திருக்கும். அப்ஸரஸ்த்ரீகள் குஷியல் குஷியலாக அங்கு விளையாடிக்கொண்டிருப்பார்கள். அக் கைலாயத்தில் விஸ்ரவஸ்ஸின் குமாரனும் செல்வப்பெருக்குடையவனும் யக்ஷராஜனுமாகிய குபேரன், ஸமஸ்தபூதங்களும் தன்னைப் பக்தியுடன் நமஸ்கரிக்கப்பெற்று யக்ஷர்களோடு விளையாடலுற்றிருப்பான். அந்தக் கைலாஸத்தில் சந்த்ரவர்ணமுடைய தாம்வரைகளிலும் குஹைகளிலும் திரிந்து அந்தந்த இடங்களில் ஸீதாதேவியையும் ராவணனையும் தேடிப்பார்க்கவேண்டும். அனந்தரம் நீங்கள் க்ரௌஞ்சபர்வதஞ் சேர்ந்து அதில் குபேரனால் செய்யப்பட்டதும் ஒருவராலும் புகக்கூடாததுமாகிய ரந்த்ரத்தில் எள்ளளவும பராக்கின்றி ஜாக்ரத்தையுடன் புகுவீர்களாக. ஏனென்னில்:— அதில் புகுவது மிகவும் கஷ்டம். அந்தப் பிலத்தில் ஸூர்யன்போல் மிகுந்த ஒளியுடன் விளக்கமுற்றவர்களும் ஸம.

ஸ்த தேவதைகளாலும் நன்கு பூஜிக்கப்பட்ட மஹாஜ்ஞ பாவர்களும் தேவரூபர்களுமாகிய மஹர்ஷிகள் வாஸஞ் செய்வார்கள். ஆகையால் அங்குப்போவது கஷ்டம். அந்த க்ரௌஞ்சபர்வதத்தில் மற்ற குஹைகளிலும் தாழ்வரைகளிலும் சிகரங்களிலும் வெடிப்புகளிலும் நதிப்ரதேசங்களிலும் நிரித்து அவ்வவ்விடங்களில் ஸீதாதேவியைத் தேடவேண்டும். க்ரௌஞ்சபர்வதத்தின் ப்ரதான சிகரத்திலும் வ்ருக்ஷங்களில்லாத காமபர்வதத்திலும் பக்ஷிகளுக் கிருப்பிடமான மானஸபர்வதத்திலும் ஆங்காங்குத் தேடவேண்டும். அந்த மானஸபர்வதத்திற்கு ஸாமான்ய ப்ராணிகள் மாத்ரமேயன்றித் தேவதைகளும் தானவர்களும் கூடப் புகவல்லரல்லர். அதன் தாழ்வரைகளிலும் நதிப்ரதேசங்களிலும் மேல்பூமிகளிலும் நீங்களெல்லோரும் நன்கு தேடிப்பார்க்கவேண்டும். க்ரௌஞ்சபர்வதத்தைக் கடந்துபோகையில் மைனகபர்வதம் இருக்கின்றது. அங்கு மயனென்னும் தானவன் தனக்குக் ருஹம் நிர்மித்துக் கொண்டிருக்கின்றனன். அந்தப் பர்வதத்தின் தாழ்வரைகளிலும் நதிப்ரதேசங்களிலும் குஹைகளிலும் மேலும் கிம்புருஷ மடந்தையர்களின் வாஸஸ்தானங்களிலும் திரிந்து அந்தந்த இடங்களில் ஸீதாதேவியை நன்றாகத் தேடவேண்டும். அந்த இடத்தைத் தாண்டிப்போகையில் ஸித்தர்கள் உலாவப்பெற்ற ஓர் ஆச்ரமம் இருக்கின்றது. அங்கு [1] அணிமாத்யஷ்டைச்வர்ய முடையவர்களும் தவப்பெருக் குடையவருமாகிய வைகானஸர்களும் வாலகில்யர்களும் வஸித்திருக்கின்றனர். தவமஹிமையால் அணிமாத்யஷ்டைச்வர்ய ஸித்திகளைப்பெற்றுப் பாபமற்

I அணிமைமுதலிய அஷ்டைச்வர்யங்களாவன—'அணிமா மஹிமாசைவ ஹரிமா ல஘ிமா ததா । ப்ராப்திஃ ப்ராகாம்ய மீசத்வம் வசித்வம் சாஷ்ட ஸித்தயஃ' என்றுணர்க.

றவான அம் மஹானுபாவர்களுக்கு நீங்கள் அவச்யம் நமஸ்காரஞ் செய்யவேண்டும். நமஸ்காரஞ்செய்து வணக்கத்துடன் ஸீதாதேவியின் வ்ருத்தாந்தத்தை வினவவேண்டும். அந்த ஆச்ரமத்தில் பொன காமரைகள் நிறைந்து ஸூர்யன்போல் விளங்குவதும் அழகான ஹம்ஸங்கள் திரியப்பெற்றதுமாகிய வைகானஸ மென்னும் ஓர் தடாகம் உளது. குபேரனது பட்டத்து வாஹனமாகிய ஸார்வபௌமமென்னும் திக்கஜமும் தன் பெண்டகளுடன் கூடி எப்பொழுதும் அங்கு விளையாடிக் கொண்டிருக்கும். அந்த வைகானஸ ஸரஸ்ஸுக் கவ்வருகில் ஆகாயத்தில் சந்த்ரஸூர்யர்களின் [1] ப்ரசாரமாவது நக்ஷத்ரங்களுடையவும் மேகங்களுடையவும் ஸஞ்சாரமாவது எள்ளளவும் கிடையாது. அது நிஸ்ஸப்தமாகிச் சூன்யமா யிருக்கும். சந்த்ரஸூர்யர்களின் ப்ரசாரம் அங்கு இலலாமற்போயினும் தேவதைகளைப்போன்ற வர்களும் இயற்கையாகவே விளங்கிய ஜ்ஞானமுடையவர்களுமாகிய தபஸ்ஸித்தர்கள் இளைப்புற்றிருப்பார்களாகையால் அவரது தேஹகாந்திகளால் ஸூர்யகிரணங்களாற்போலவே அவ்விடம் வெளிச்சம் உண்டாகப்பெற்றிருக்கும். அந்த ப்ரதேசத்தைக் கடந்தபின்பு சைலோதையென்னும் நதி இருக்கின்றது. அந்நதியின் இருகரைகளிலும் கீசகங்களென்னும் (காற்றுவீசும்பொழுது சப்திக்குந் தனமையுள்ள) மூங்கில்கள் இருக்கின்றன. அவ்விரண்டு கரைகளிலுமுள்ள மூங்கில்கள் மிகவும் உயர்ந்து ஒன்றோடொன்று கனமாகப் பின்னிக் கொண்டிருக்கையால் ஸித்தர்கள் அவைகளின்மேல் அக்கரைக்குப் போவதும் வருவதுமா யிருப்பார்கள். அனந்தரம் புண்யவான்களுக்கு வாஸஸ்தானமாகிய உத்தரகுருதேசம் இருக்கின்றது. அந்தத்தேசம் புண்யஞ்செய்த

---

1 திரிதல்.

வர் அதன் பலன்களை அனுபவிப்பதற்காகவே ஏற்பட்ட தாகையால், அங்குப் பொன்தாமரைகளோடுகூடி நீலவைடூர்ய வர்ணமுடைய தாமரைக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு ஜலம் ஸம்ருத்தமா யிருக்கப்பெற்ற நதிகள் ஆயிரமாயிரமா யிருக்கின்றன. அவ் வுத்தரகுரு தேசத்தில் குளங்கள் செந்தாமரை வனங்களும் பொன் தாமரை வனங்களும் பாலஸூர்யவர்ணம் பொருந்திய தாமரைவனங்களும் நிரம்பி விளக்கமுற்றிருக்கும். அந்தத் தேசம் முழுவதிலும் நீலமணிகள்போன்ற இதழ்களும் பொன்வர்ணமுடைய தாதுக்களும் பொருந்தி அற்புதமா யிருக்கின்ற கருநெய்தல் குளங்கள் மிகுந்திருக்கும். மேலும் அந்தத் தேசத்தில் நதிகளில் திரட்சியான முத்துக்களும் பெரு விலையுள்ள மணிகளும் பொன்களும் பெரு மணற் குன்றுகள்போலிருக்கும். ஸமஸ்தரத்னமயமான சிறந்த பர்வதங்களும் பொன்வர்ணங்களாகி அக்னி போல் சிகுநிகென்று விளங்கும் பர்வதப்ரதேஷ்டங்களும் அந்நதிகளின் இடையில் ஆங்காங்கு அமிழ்ந்து ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். அங்கு வ்ருக்ஷங்கள் எப்பொழுதும் புஷ்பங்களைப் பூத்துப் பழங்களை விளைத்துப் பக்ஷிகள் நிறைந்து நல்ல வாஸனையும் இனிய ருசியும் பொருந்தி ஸுகஸ்பர்சமுடையவையாகி விரும்பினவற்றை யெல்லாங் கொடுத்துக்கொண்டிருக்கும். மேலும் சில உத்தம வ்ருக்ஷங்கள் முத்துக்களும் வைடூர்யங்களும் இழைக்கப் பெற்றிருக்கையால் விசித்ரவிப்பனவகளும் எல்லாதாதுக்களிலும் தரிக்கத்தக்கவகளுமாகிய ஆபரணங்களை ஸ்த்ரீகளுக் குரியதாகவும் புருஷர்களுக் குரியதாகவும் கொடுக்கின்றன. வேறு சில வ்ருக்ஷங்கள் மிகுந்த விலையுடையவைகளும் சித்ரங்களான படுக்கைகள் அமைக்கப் பெற்றவைகளுமாகிய பலவகைப் பொற்கட்டில்களைக்கொ

டுக்கின்றன. அந்த உத்தரகுருதேசத்தில் இதர வ்ருக்ஷங்களும் சில மனத்திற்கினிய பூமாலைகளையும் மிகவும் சிறந்த பானத்ரவ்யங்களையும் காலுவித பக்ஷியங்களையும் குணவதிகளும் ரூபவதிகளும் யௌவனம் அமைந்தவர்களுமாகிய அழகான மடந்தையர்களையுங் கொடுக்கின்றன. அங்குகந்தர்வர்களும் கின்னரர்களும் கிம்புருஷர்களும் ஸித்தர்களும் நாகர்களும் வித்யாதரர்களும் ஸூர்யனைப் போல் விளக்கமுற்றவராகிக் காதலிகளுடன் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அங்கு அனைவரும் புண்யகர்மசீலர்கள்; எல்லோரும் விளையாடுந்தன்மையர்; எல்லோரும் காமமும் அர்த்தமும் ஸம்ருத்தமாயிருக்கப்பெற்றுத் தத தமது காதலிகளுடன் வாஸஞ் செய்வார்கள். அங்கு கீதவாத்ய கோஷங்களும் மிகுந்த சிரிப்பு சபதங்களும் ஸமஸ்த பூதங்களின் செவிகளும் மனத்திற்கும் இனிப் பாகப் புலப்பட்டுக்கொண்டிருக்கும். மேலும் அந்தத் தேசத்தில் ஸததோஷமற்றவளுவது காதலிகளைப் பிரிந்தவளுவது ஒருவனும் அகப்படமாட்டான். அங்கு மனோஹரங்களான ஸௌகம் முதலிய குணங்கள் நாள்தோறும் வளர்ந்து வருகின்றன. அந்த உத்தர குருதேசத்தைக் கடந்து போகையில், வடக்கு லவண ஸமுத்ரம் இருக்கின்றது. அந்த ஸமுத்ரத்தில் மத்ய ப்ரதேசத்தில் ஸ்வர்ணமயமான ஸோமகிரியென்னும் ஓர் மஹாபர்வதம் இருக்கின்றது. விஷ்ணுலோகத்திலும் ப்ரஹ்மலோகத்திலும் இந்த்ர லோகத்திலும் வஸிக்கும் தேவதைகள் அந்த ஸோம கிரியைப் பார்க்கவல்லரேயன்றி மற்றவர்க்கு அதைப் பார்ப்பது அஸாத்யம். அந்தத் தேசத்தில் ஸூர்யனது கடையாட்டம் இல்லாமற் போயினும், ஸூர்யகாந்தியின் கடையாட்டமுடைய தேசம் ப்ரகாசிக்கின்றஸூர்யனால் வெளிச்சமுற்றிருப்பதுபோல், அம் மஹா பர்வதத்தின்

ப்ரகாசத்திலல் இது வெளிச்சமுடையதாயிருக்கும். அ
க்த ஸோமகிரியில் விப்வாத்மாவாகிய விஷ்ணுபகவானும்
ஏகாதச ருத்ர ஸ்வரூபியாகிய சிவனும் ஸர்வதேவதை
களுக்கும் அதீப்வரனாகிய ப்ரஹ்மாவும் ஒவ்வொருவரும்
ப்ரஹ்மர்ஷிகள் பலரும் தம்மைச் சூழ்ந்திருக்கப்பெற்று
அங்கு வாஸஞ் செய்வார்கள். அந்த உத்தரகுருதேசத்
திற்கு வடக்காக நீங்கள் எள்ளளவும் போகவேண்டாம்.
தைத்யர்முதலிய விசேஷ சக்தியுடையவர்க்கும் அதற்கு
மேல் போகமுடியாது. அந்த ஸோமகிரி தேவதைகளுக்
கும் புக அரிதாயிருக்கும். ஆகையால் நீங்கள் அந்தப்
பர்வதத்தைப் பார்த்து, உடனே அவ்விடமிருந்து சீக்ர
மாகத் திரும்பி வரவேண்டும். வானரோத்தமர்களே!
இவ்வளவு தூரம் வரையிலுமே வானரர்களுக்குப் போக
முடியும். அதற்கு மேலுள்ள தேசம் ஸூர்யஸஞ்சாரமில்
லாமையால் அந்தகாரம் மூடப்பெற்று நகரம் க்ராமம் மு
தலிய ஏற்பாடுகளின்றி யிருப்பதாகையால எப்படியிருக்
குமோ எமக்குத் தெரியாது. நான் இப்பொழுது விவரித்
துச் சொன்ன ப்ரதேசங்கள் முழுவதிலும் நன்கு தேடிப்
பார்ப்பீர்களாக. மேலும் அதத்திசையில் நான் சொல்
லாத ப்ரதேசங்கள் எவையாயினும் உளவாயின் அவற்றி
லுங்கூடத் தேடவேண்டுமென்று மதிகொள்வீர்களாக.
வானரர்களே! நீங்கள் வேகத்தில் வாயுவையும் தேஜஸ்
ஸில் அக்னியையும் நிகர்த்தவராகையால் நீங்கள் நன்று
கத் தேடி ஸீதாதேவியைப் பார்த்துக் கார்யத்தை ஸாதி
த்துக்கொண்டு வருவீர்களாயின் ராமனுக்கு ப்ரியஞ்
செய்ததாகும். எனக்கும் அதைக்காட்டிலும் மஹாஸந்
தோஷத்தை விளைத்தவராவீர். வானரர்களே! அங்ங
னம் கார்யஸித்தியைச் செய்தபின்பு நீங்களும் உங்கள்
பந்துக்களும் என்னால் மதிக்கப்பட்ட ஸமஸ்த ஸுகா

திகளாலும் பூஜிக்கப்பட்டவராகிச் சத்ருக்களொருவரு மின்றிக் காதலிகளுடன் கூடிப்ராணிகள் பலரையும் போஷித்துக்கொண்டு ஸுகமாகப் பூமிமுழுமையும் திரிந்து விளையாடிக்கொண்டிருப்பீர்கள்' என்றனன். காற்பத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் ஹனுமானுக்கு அடையாளமாக அங்குலீயகங் கொடுத்தல.

ஸுக்ரீவன் விசேஷித்து ஹனுமானிடத்தில் தன் கார்யத்திற்கு வேண்டிய ஸமாசாரத்தைச் சொல்லினன். ஏனெனில்:—கபிச்ரேஷ்டனாகிய அந்த ஹனுமான் கார்யத்தைத் தப்பாமல் ஸாதிப்பவனென்று ஸுக்ரீவன் நிச்சயித்திருந்தனன். ஸமஸ்த வானரர்களுக்கும் அதிகாதனாகிய ஸுக்ரீவன் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து பராக்ரமம் பொருந்திய வாயுகுமாரனாகிய ஹனுமானைப் பார்த்து 'வானரர் தலைவனே! தன்னைப் போன்ற சத்ருக்கள் நிறைந்திருக்கும் பூமியிலாவது, மேகாதிகள் ஸஞ்சரிக்கும்படியான பிடிப்பில்லாத அந்தரிக்ஷமென்னும் ஆகாயத்திலாவது, சுழல்காற்று வீசும்படியான அம்பரமென்னும் ஆகாயத்திலாவது, ப்ரபலர்களான தேவதைகள் வஸிக்கும் ஸ்வர்க்கத்திலாவது, திர்யக் ஜாதிகள் ஸஞ்சரிக்கமுடியாத ஜலத்திலாவது நீ தடையின்றி ஸஞ்சரிக்கவல்லவன். அஸுரலோகமும் கந்தர்வலோகமும் தேவலோகமும் ஸமுத்ரங்களும் பர்வதங்களும் அமைந்த ஸமஸ்த லோகங்களும் உனக்குத் தெரிந்தவைகளே. மஹாகபீ! வீரோத்தமனே! எதிரில்லாத கமனத்திலும் (திரிவதிலும்) வேகத்திலும் தேஜஸ்ஸிலும் லாகவத்திலும் நீ மஹா தேஜஸ்வியாகிய உன் தந்தை வாயு தேவனுக்கொப்பானவன். தேஜஸ்ஸில் உன்னைக்

காட்டிலும் மேலான ப்ராணி ஒன்றும் பூமியில் உண்டாக வே உண்டாகாது. உன்னை நிகர்த்திருப்பதும் ஒன்றுமே இல்லை. ஆகையால் ஸீதாதேவியைப் பெறும்படி நீயே தகுந்த ப்ரயத்னஞ் செய்து கார்யத்தை நிறைவேற்ற வேண்டும். ஹனுமானே! நீ நீதியில் பண்டிதன். பலமும் புத்தியும் பராக்ரமமும் தேசகாலங்களை அனுஸரித்திருப் பதும் நீதியும் ஆகிய இவையெல்லாம் உன்னிடத்திலிருப் பதுபோல் மற்றெவனிடத்திலும் இராது' என்றனன். ராமன், ஸுக்ரீவன் ஹனுமானைப் பார்த்துச் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு, அவன கார்யபாரத்தையெல் லாம் ஹனுமான் மேல் வைத்திருப்பதை அறிந்தும், தானும் தனக்குத் தெரிந்தவரையிலும் ஹனுமான் கார் யஸாதகனென்று தெரிந்துகொண்டும், தனக்குள் 'வான ரேச்வரன் ஸுக்ரீவன், ஹனுமான் தப்பாமல் கார்யத் தை ஸாதிப்பானென்று எல்லாவிதத்திலும் நிச்சயித்துக் கொண்டிருக்கின்றனன். ஹனுமானும் செய்ய நிச்சயி த்த கார்யத்தைச் செய்து முடிக்கும் தன்மையன். இந்த ஹனுமான் முன்பு பல பெரிய கார்யங்களை ஸாதித்ததி லில் இவன் சக்தி அனைவர்க்கும் தெரிந்திருக்கின்றது. ஆனது பற்றியே இவனை அதிபதியாகிய ஸுக்ரீவன் மிகவும் கைப்பற்றிக் கௌரவித்து வருகின்றனன். இப்ப டிப்பட்டவன் ப்ரயாணமாய்ப் போகையில் கார்யம் கைகூ டுவது எள்ளளவும் தவறுது; மிகவும் நிச்சயம்' என்று ஆலோசித்தனன். மஹாதேஜஸ்வியாகிய ராமன், கார்ய ங்களை நிறைவேற்றுவதால் மிகவும் புகழ் பெற்றிருக்கிற அந்த ஹனுமானைப் பார்த்துத் தன் இந்த்ரியங்களும் மனதும் களிப்புறப் பெற்றுத் தன்னை ப்ரயோஜனம் கை கூடப் பெற்றவனாக நினைத்துக்கொண்டனன். அனந்தரம் அந்தப் பாந்தபன் மனக்களிப்புற்று ராஜகுமாரத்தியாகிய

ஸீதாதேவிக்கு அடையாளமாகத் தன் பேருடன்கூடி மி
கவும் அழகாயிருக்கின்ற மோதிரத்தை ஹனுமானிடங்
கொடுத்து, 'கபிஸ்ரேஷ்டனே! இந்த அடையாளத்தைப்
பார்த்து ஸீதை உன்னைக்குறித்து ஸம்சயமாவது பயமா
வது உண்டாகப்பெறுமல் நீ என்னிடமிருந்து வந்தவனை
ன்று தெரிந்துகொள்வாள். வீரனே! உனது உத்ஸாஹ
மும் பலமும் பராக்ரமமும் ஸுக்ரீவன் உன்னுடன் சொ
ன்ன வாய் ஸமாசாரமும், கார்யஸித்தி தப்பாமல் நேருமெ
ன்று எனக்குச் சொல்பவைபோலிருக்கின்றன' என்றன
ன். வானரஸ்ரேஷ்டனாகிய அந்த ஹனுமான் அந்த அ
ங்குலீயகத்தை வாங்கிச் சிரஸில் வைத்துக்கொண்டு கை
கூப்பி ராமனது பாதாரவிந்தங்களில் ப்ரணமஸ்செய்து உ
டனே புறப்பட்டனன். வீரனாகிய அந்த வாயுகுமாரன், பெ
ரிய வானரஸைன்யம் பின்தொடர்ந்து வரப்பெற்று அந்த
ஸைன்யம் முழுவதையும் இழுத்துக்கொண்டு மேகங்கள்
இல்லாத ஆகாயத்தில் நிர்மலமான மண்டலத்துடன் நக்ஷ
த்ர ஸமூஹங்களோடு விளங்கும் சந்த்ரன்போல் ப்ரகாசித்
தனன். மீளவும் ராமன் ஹனுமானைப் பார்த்து 'ஹனுமா
னே! நீ மஹாபலமுடையவன்; ஸிம்ஹமபோல் பராக்ரமம்
மிகுந்திருக்கப்பெற்றவன்; ஆகையால் உன் பலத்தை ஆஶ்ர
யித்திருக்கின்றனன். அபாரமான உன் பராக்ரமங்களை
யெல்லாங்காட்டி ஸீதை அகப்படும்படி ப்ரயத்னஞ் செய்ய
வேண்டும்' என்றனன். காற்பத்து நான்காவது ஸர்க்கம்
முற்றிற்று.

அனுப்பபட்ட வானர ஸைன்யங்களின் ஸந்நாஹம்.

வானரநாதனாகிய ஸுக்ரீவன் அந்த வானரர்களை
அழைத்து ராமகார்யம் ஸித்திப்பதற்காகப் பக்ஷபாதமி
ல்லாமல் மீளவும் அவர்களைப் பார்த்து 'நான் எவரை

வர்க்கு எந்தெந்தத் திக்கில் எப்படியெப்படி தேடச் சொன்னேனே அவரவர் அந்தந்தத் திசைகளில் அப்படியப்படியே தேடவேண்டும்' என்றனன். அந்த வானரப்ரேஷ்டர்கள் தமது அதிபதியின் உக்ரமான ஆஜ்ஞையைக் கேட்டு, அனந்தரம் எல்லோரும் விட்டில்கள்போல் கணக்கின்றிப் பூமியெல்லாம் நிறைத்துப்பரவாணமாய்ப் புறப்பட்டனர். ராமனும், வானரர்கள் ஸீதையைப் பார்த்து வருவதற்குக் கெதிவாக ஏற்படுத்தின அம்மாதம் எப்பொழுது கடக்குமோவென்று எதிர் பார்த்துக்கொண்டு லக்ஷ்மணனுடன் அந்த ப்ரஸ்ரவண பர்வதத்திலேயே வஸித்திருந்தனன். அப்பொழுது வீரரஷிய சதபலி ஹிமவத்பர்வதத்தினல் சூழப்பட்டு ரமணீயமாயிருக்கும் வடதிசையைக் குறித்துப் போகத் தொடங்கினன். வானரயூதபதியாகிய விநதன் கிழக்குத்திக்குக்குப் போக முயன்றனன். வானரயூதநாதனும் வாயுபுத்ரனுமாகிய ஹனுமான், தாரன் அங்கதன் முதலிய வானரவீரர்களோடு அகஸ்த்ய மஹர்ஷி ஸஞ்சரிக்கும்படியான தென்திசைக்குப் போக ஸங்காஹங் கொண்டனன். வானரப்ரேஷ்டரஷிய ஸுஷேஷணன் மஹா பயங்கரமும் வருணனல் பாதுகாக்கப்பட்டதுமாகிய மேற்குத் திக்குக்குப் போக விருப்பமுற்றனன். முன்னமே ஸுக்ரீவன் ராஜ்ய லாபத்தினல் மனக்களிப்புற்றவன்; இப்பொழுது முக்யர்களான வானரஸைந்யாதிகளை ஸமஸ்த திசைகளுக்கும் க்ரமப்படி அனுப்பி ராமகார்யத்தையும் நிறைவேற்றினுலுகையால் முன்பைக்காட்டிலும் மேலான ஸுகத்தை அடைந்து ஆநந்தித்தனன். அந்த வானரயூதநாதர்களனைவரும் ராஜாவாகிய ஸுக்ரீவனல் ஆஜ்ஞாபிக்கப்பட்டவராகி 'ராவணனைக கொன்று ஸீதா தேவியைக் கொண்டுவருவோம்' என்று சொல்லிக்கொண்டு தந்தமது திசைகளுக்குத் வரைப்பட்டுப் போயினர்.

மஹா பலிஷ்டர்களான அவ்வானரர்கள் சப்தஞ் செய்து கொண்டும், மேலும் ஸந்தோஷத்தின் மிகுதியால் உரக்கக் கூச்சலிட்டுக்கொண்டும் பயங்கரமாக மொழிந்து ஸிம்ஹநாதங்களைச் செய்து விரைவாக ஓடிச்சென்று விகார சப்தங்களைச் செய்து கொண்டும் ப்ரயாணமாய்ப போயினர். 'ராவணன் யுத்தத்திற்கு வருவானையின், காலைருவனே அவனைக் கொன்றுவிடுவேன் என்று ஒருவன் மொழிந்தனன். ஒருவன் 'நான,ராவணனைக்கொன்று அங்கிருந்து ப்ரமத்திலல் கடுகிடுவென்று நடந்துகின்ற ஸீதாதேவியை இதோ இப்பொழுதே மிக்க வேகத்துடன் கொண்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே நிற்பீர்களாக' என்றனன். 'ஸீதாதேவி பாதாளத்திலிருப்பினும் காலைருவனே போய்க்கொண்டுவருகிறேன' என்று மற்றொருவன் மொழிந்தனன். 'நான மரங்களை முறித்துப் பொகுகிறேன். நான் பர்வதங்களை விழுத் தள்ளுகிறேன. நான் பூமியைப் பிளந்துவிடுவேன். நான் ஸமுத்ரங்களைக் கலக்கி விடுகிறேன்' என்று ஒவ்வொருவனும் பயங்கரமாக மொழிந்தனர். 'நான் ஒருயோஜனை தூரம் கிளம்பித் தாண்டுவேன். இதற்கு ஸந்தஹமில்லை' என்று ஒருவன் மொழிந்தனன. 'நான் நூறுயோஜனை கிளம்புவேன' என்றனன. மற்றொருவன. 'நான நூறுயோஜனைகளுக்குமேலும் தாண்டுவேன்' என்று மற்றொருவன்மொழிந்தனன். 'பூமியிலும் ஸமுத்ரத்திலும் பர்வதங்களிலும் வனங்களிலும் பாதாளமத்யத்திலும் நான் தடையின்றி ஸஞ்சரிப்பேன்' என்றொருவன் மொழிந்தனன். இவ்வண்ணம் அப்பொழுது அவ்விடத்தில் பலகர்விதர்களாகிய வானரர்கள் வானரேந்த்ரனாகிய ஸுக்ரீவனுக்கெதிரில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வசனங்களைக் கூறினர். நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுக்ரீவன் ராமனுக்கு ஸமஸ்த பூமண்டலமும் தனக்குத் தெரிந்த விதத்தைக் கூறுதல்.

அந்த வானரமுக்யர்கள் போனபின்பு, ராமன் ஸுக்ரீவனைப் பார்த்து 'நீ ஸமஸ்த பூமண்டலத்தையும் எப்படி அறிந்தனை?' என்று விஞவினன், பிறகு ஸுக்ரீவன் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து ராமனைப் பார்த்துப் 'புருஷதிலகனே! ஸமஸ்த வ்ருத்தாந்தத்தையும் ஸவிஸ்தாரமாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக. மஹிஷாத்தி ஜுருவமுடைய துந்துபியென்னும் அஸுரனும் அவன் பிள்ளை மாயாவி யென்பவனும் வாலியின்மேல் எதிர்த்து வரும்பொழுது, அவன, அவனிருவரையும் மலயபர்வதத்தின் குஹைக்குத் துரத்தினன். வாலி அவர்களைக் கொல்லும் பொருட்டு அம் மலயபர்வதத்தின் குஹைக்குள் கூட ப்ரவேசித்தனன். அப்பொழுது வாலி வணக்கத்துட னிருக்கிற என்னைக் குஹையின் வாசலில் காவல் வைத்தனன். அனந்தரம் ஒரு ஸம்வத்ஸரம் கடந்தபின்னும் வாலி வெளிப்புறப்பட்டு வரவில்லை. அனந்தரம் அப்பொழுது ரக்த ப்ரவாஹத்திலுல் அந்தப் பிலம் முழுமையும் நிரம்பிற்று. நான் அதைக்கண்டு ஆச்சர்யம் அடைந்து 'என தண்ணனுக்கு என்னுயிற்றே' என்னும் துக்கத்திலுல் விஷந் தின்றவன்போல் பீடிக்கப்பட்டனன். அனந்தரம் எனதண்ணன் வாலி ஸ்பஷ்டமாக முடிந்திருப்பா னென்று எனக்குப் புத்தி உண்டாயிற்று. மஹிஷாகாரனுகிய துந்துபி குஹையினின்று வெளிப்பட்டு வர முடியாமல் அங்கேயே நாசம் அடைய வேண்டுமென்று, நான் அந்தக் குஹையின்வாசலை மலைபோன்ற பெருங் கல்லையிட்டு மூடிவிட்டனன். பின்பு, நான் வாலி பிழைத்திருப்பானென்னும் விஷயத்தில் ஆசையற்றுக் கிஷ்கிந்தைக்கு வந்து தாரையையும் ருமையையும் பெற்று மிக

வும் பெரிதாகிய வானர ராஜ்யத்தை யெல்லாம் கைப்பற் றிக் கொண்டனன். நான் கிஷ்கிந்தையில் நண்பர்கள் சூழப்பெற்று எந்தப் ப்யமுமின்றி ஸுகமாயிருந்தனன். அனந்தரம், தானவர் தலைவனாகிய மாயாவியைக்கொன்று வாலியும் வந்தனன். பிறகு நான் அண்ணை னென்னுங் கௌரவத்தினாலும் பயத்தினாலும் கட்டுப்பட்டு வாலிக்கு மீளவும் ராஜ்யத்தைக் கொடுத்தனன். அவ்வாலி துஷ்ட ஸ்வபாவனுகையால் கோபாவேசங் கொண்டு இந்த்ரியங் கள் கலங்கப்பெற்று என்னைக் கொல்லத் தொடங்குகை யில், நானும் என் மந்த்ரிகளோடுகூட ஓடிப்போயினன். அவனும் கோபத்தினால் என்னைப் பின்தொடர்ந்து துரத் தினன். அனந்தரம் நான் வாலிபயத்தினால் மந்த்ரி களோடுகூடி நானுவித நதிகளையும் வனங்களையும் பட்டண ங்களையும் பாராத்துகொண்டு ஓடினேன். அனந்தரம் அப் பொழுது பூமிமுழுமையும் குளப்படிபோல் நினைத்துக் கண்ணுடியைப்போலவும் கொள்ளிக்கட்டையின் சக்ர த் தைப்போலவும் ஸ்பஷ்டமாகக் கண்டனன். அப்பொழுது நான் வாலியால் பின்தொடர்ந்து துரத்தப்பட்டு ஓடிக்கொ ண்டு கிழக்குத்திக்குக்குச் சென்று நானுவித வருக்ஷங்க ளையும் பர்வதங்களையும் ரமணீயங்களான நதிகளையும் பல வகைப்பட்ட ஸரஸ்ஸுக்களையும் கண்டனன். அங்குக் கைரி கதாதுக்களால் அழகாயிருக்கின்ற உதயபர்வதத்தையும் எப்பொழுதும் அப்ஸரஸ்த்ரீகளால் ஸேவிக்கப்பட்ட க்ஷீர ஸமுத்ரத்தையும் கண்டனன். ப்ரபு' கீழ்த்திசையினின்று திரும்பிவேகமாக ப்ரயாணமாய் வந்தனன். நான் திரும் பிவருங்காலத்தில் வாலி என்னைப் பின்தொடர்ந்து துரத் தினன். அனந்தரம் நான் கிழக்குதிக்கினின்று மீளவும் தி ரும்பி விந்த்ய பர்வதத்தின் வ்ருக்ஷங்களால் சூழப்பட்டுச் சந்தனமரங்களால் அழகாயிருக்கின்ற தென்திசையைக்

குறித்து ஓடிப்போயினன். பிறகு கான் தென்திசையில் மற்றுஞ் சில வ்ருக்ஷங்களையும் பர்வதங்களையும் பார்த்துக் கொண்டு போகையில், வாலி விடாமல் துரத்துவதைக் கண்டு, பிறகு மேற்குத் திக்குக்குப் போயினன். கான் மேற்குதிக்கில் காணவித தேசங்களையும் பார்த்துப் பர்வதஶ்ரேஷ்டமாகிய அஸ்தமய பர்வதத்தைக் கண்டு அத்தப்பர்வதத்தில் தங்கியிருப்பினும் வாலி விடாமல் என்னை மிகவும் துரத்திக்கொண்டு வருகையில் திரும்பி வடதிசையைக் குறித்து ஓடிப்போயினன். வடதிசையில் ஹிமவத் பர்வதத்தையும் மேருபர்வதத்தையும் வடக்கு ஸமுத்ரத்தையுங் கண்டனன். இப்படி எங்குப்போயினும் வாலி விடாமல் துரத்திக்கொண்டு வருகையால் எனக்கு ரக்ஷகனவது இருப்பிடமாவது கோதிருக்கையில், அப்பொழுது புத்தியிற் சிறந்த ஹனுமான் என்னைப் பார்த்து 'வானரேச்வரனே! முன்பு மதங்க மஹர்ஷி அந்த ஆச்ரம மண்டலத்தைக் குறித்து வானரேச்வரனாகிய வாலியைச் சபித்திருக்கிறாரல்லவா? அது இப்பொழுது எனக்கு நினைவுக்கு வந்தது. அந்தச் சாபத்தினால், வாலி அவ்வாச்ரமத்தில் ப்ரவேசிப்பானாயின், அவன் சிரஸ்ஸு நூறுசுக்கலாய் வெடித்துப்போகும். ஆகையால் நாம் மதங்காச்ரமத்தில் ஸுகமாகப் பயமின்றி வஸித்திருக்கக் கூடும்' என்றனன். ராஜகுமாரனே! அனந்தரம் கான் ருச்யமூகபர்வதம் வந்து சேர்ந்தனன். வாலி அப்பொழுது மதங்கமாமுனியிடம் பயத்தினால் இவ்விடம் வரவில்லை. ராஜனே! கான் இவ்வண்ணம் அப்பொழுது பூமண்டலத்தை யெல்லாம் ப்ரத்யக்ஷமாகக் கண்டனன். பிறகு இந்த ருச்யமூக பர்வதத்தின் குஹைக்கு வந்து சேர்ந்தேன்' என்றனன். நாற்பத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

தென் திசைக்குப் போனவர் சுவிர மற்றத் திசைகளுக்குப் போனவ ரெலலோரும திரும்பி வருதல்.

கபிராஜனாகிய ஸுக்ரீவன் ஸீதையைப்பார்த்து வரும்பொருட்டு ஆஜ்ஞாபித்தனுப்பின வானராதிபதிகள், அவன் சொன்னபடியே சீக்ரமாக அந்தந்தத் திசைகளுக்குப் போயினர். அவர்கள் ஸரஸ்ஸுக்களிலும் நதிகளிலும் புதர்களிலும் செடி செட்டில்லாத பொட்டை நிலங்களிலும் பட்டணங்களிலும் நதிகளால் புகக்கூடாத ப்ரதேசங்களிலும் பர்வதங்களிலும் ஸீதா தேவியைத் தேடினர். ஸுக்ரீவன் ஆஜ்ஞாபித்த வானர ஸைந்யகர்கள் அனைவரும், பர்வதங்கள் சிறிய வனங்கள் பெரிய அரண்யங்கள் முதலிய ப்ரதேசங்க ளெல்லாவற்றிலும் நன்றாகத் தேடினர். அவர்களெல்லோரும் ஸீதையைக் கண்டு பிடிக்கும் விஷயத்திலேயே மனஸுக்கம் மிகப்பெற்று, ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவராகி வேறுவேறாகப் பகலெல்லாம் தேடி ராத்ரியில் பூமியில் ஓரிவரோடொருவர் சேர்ந்திருந்தனர். அந்த வானரர்கள் அந்தந்த இடங்களில் அம்மாதத்திலுள்ள எல்லாத் தினங்களிலும் பகல் முழுவதும் ஸீதையைத் தேடி, ராத்ரிகளில ஸமஸ்த ருதுக்களிலும் பூத்துக் காய்த்துப் பழுத்திருக்கின்ற வ்ருக்ஷங்களைச் சேர்ந்து அங்குப் பக்ஷியேற்படித்திப் படித்துக்கொண்டு வந்தனர். அந்த வ்ருக்ஷங்கள் அவர்களால் அனுபவிக்கப்பட்டு ஸாபல்யத்தை அடைந்தன. அனந்தரம் அந்த வானர ஸைந்யாதிபதிகள் ப்ரயாணமாய்ச் சென்ற காள்முதற் கொண்டு மாதம் நிரம்பும்வரையில் தேடி ஸீதாதேவியைப் பார்க்கப் பெற்றிலரெனறு நிராசரர்களாகி கபிராஜனாகிய ஸுக்ரீவனிடம் வந்து தாம் போய்வந்த வ்ருத்தாந்தத்தை அறிவித்து ப்ரஸ்ரவண

'மென்னும் மால்யவத் பர்வதத்திற்குப் போயினர். மஹா பலசாலியாகிய விநதன் தன்னுடன்வந்த வானரர்களுடனே ஸுக்ரீவன் சொன்ன ப்ரகாரம் கிழக்குத்திக்கெல்லாந்தேடி. ஸீதையைக்காணுமல் வெறுமனே வந்தனன். அப்பொழுது வீரனகிய வானரர்தலிவன் சதவலி வடதிசையெல்லாந் தேடி ஸீதையைக் காணுமலே ஸைனகளுடன்வந்து சேர்ந்தனன். ஸுஷேணனும் வானரர்களோடு மேல்திசையெல்லாந் தேடி மாதம் நிரம்பியும் ஸீதையைக் காணுமலே ஸுக்ரீவனிடம் வந்து சேர்ந்தனன். அந்த வானர ப்ரேஷ்டர்கள் அனைவரும் ப்ரஸ்ரவண பர்வதத்தின் நுனியில் ராமனுடன் உட்கார்ந்திருக்கிற ஸுக்ரீவனிடம் வந்து நமஸ்கரித்து 'ஸமஸ்த பர்வதங்களிலும் தேடினோம். சிறிய வனங்களிலும் பெரிய வனங்களிலும் எல்லாவற்றிலும் தேடிப்பார்த்தோம். நதிகளிலும் ஸமுத்ர தீரங்களிலும் ஸமஸ்த ராஜ்யங்களிலும் தேடினோம். நீ சொன்ன குஹைக ளெல்லாவற்றிலும் தேடினோம். கொடிகள் படர்ந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கிற பெரும் புதர்களிலும் தேடிப்பார்த்தோம். புகக்கூடாத த்வீபங்களிலும் மிகவும் கஷ்டப்பட்டு ப்ரவேசிக்கக்கூடிய இடுக்குப்ரதேசங்களிலும் தேடி மிகவும் பருத்த சரீரங்களை யுடைய ப்ராணிகளைக் கண்டு ராவணனோ அன்றோ வென்று தேடிப்பார்த்துக் கொன்றுவிட்டனம். ஹனுமான் மிகுந்த பலமுடைய மஹாவம்சத்தில் பிறந்தவன்; மஹா தைர்யமுடையவன்; இவ்வளவேயன்றி ஸீதையை ராவணன் எந்தத் திசைக்குக் கொண்டுபோயிருப்பானோ, அந்தத் திசைக்கே போயிருக்கின்றனன். ஆகையால் வாயுகுமாரனகிய அந்த ஹனுமான் ஸீதையைப் பார்த்துவரக்கூடும்' என்று மொழிந்தனர். நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஹனுமான் முதலானவர்கள் தென் திசை
கருப்போய் ஸீதையைத் தேடுதலும், அங
ரு ஓர அஸுரனைக் கொல்லுதலும்.

ஹனுமான், தாரன் அங்கதன் முதலான வானரர்க
ளோடு தென் திசைக்குப்போய் ஸுக்ரீவன் ஆஜ்ஞாபித்த
அவ்வவ்விடங்களில் தேடத் தொடங்கினன். அவன் அந்த
வானரோத்தமர்க ளனைவரோடுங்கூடி வெகுதூரஞ்சென்
று விந்த்ய பர்வதத்திலுள்ள குஹைகளிலும் வனங்களி
லும் சிகரங்களிலும், நதிகளால் புகக்கூடாத இடங்களி
லும் குளங்களிலும் பெரிய வ்ருக்ஷங்களிலும் நாலுவித
மாக வரிசையமைந்திருக்கும் வ்ருக்ஷ ஸமூஹங்களிலும்
விந்த்யத்தி னருகில் பெரிய வ்ருக்ஷங்க ளமைந்த குளங்க
ளிலும் ஸீதாதேவியைத் தேடினன். வீரர்களாகிய அவ்
வானரர்க ளனைவரும் அங்ஙனம் தென திசையில் எல்லா
இடங்களிலும் எவ்வளவு தேடிப்பார்க்கிலும் ஜனகரா
ஜன் புதல்வியாகிய ஸீதையைக் காணவில்லை. எப்படிப்
பட்டவர்க்கும் எதிரிடமுடியாத அவ்வானரர்கள் ஸீதா
தேவியைத் தேடிக்கொண்டு பலவிதமான பழங்களையும்
வேர்களையும் பக்ஷித்து ஆங்காங்குத் தங்கியிருந்து சென
றனர். அந்த விந்த்யப்ரதேசம் பல குஹைகளும் அரண்
யங்களு முடையது; மிகவும் பெரியது. ஆகையால் அங்
குத் தேடுவது மிகவும் கஷ்டம். மேலும் அத்தேசம் ஜன
ஸஞ்சாரமற்று ஜலமென்பதே இல்லாமற் புகமுடியாததும்
பயங்கரமுமாகி மயிர்க்கூச்சலை விளைத்துக்கொண்டிருக்
கும். அவ்வானரர்களனைவரும் அப்பொழுது அத்தேசத்
தைவிட்டு அங்ஙனமே ஜனங்களும் ஜலங்களுமில்லாத அ
ரண்யங்களில் மிக்க வருத்தத்துடன் தேடி, அனந்தரம்
எப்படிப்பட்டவர்க்கும் போகக்கூடாத மற்றொரு தேசத்
தில், எதனாலும் பயப்படாதவராகையால், புகுந்தனர். அ
த்தேசத்தில் வ்ருக்ஷங்கள் காய்களின்றிப் புஷ்பங்களு

மில்லாமல் இலைகளுமற்றிருந்தன. அங்குள்ள நதிகள் ஜல மேயில்லாதிருந்தன. மேலும் அங்கு வேர் அகப்படுவது மிகவும் கஷ்டம். அங்கு மஹிஷங்களாவது ம்ருகங்களாவது யானைகளாவது பெரும்புலிகளாவது பக்ஷிகளாவது மற்றும் வனத்தில் திரியும் இதர ஜந்துக்களாவது புலப்படா. அன்றியும் அதில் கல்லவ்ருக்ஷங்களும் ஓஷதிகளும் கொடிகளும் புதர்களும் தோற்ரு. மலர்ந்த தாமரையுடையவைகளும் பார்க்க இனியவைகளும் கல்ல மணங்கமழப்பெற்றவைகளும் நிகுநிகென்ற இலையமைந்தவைகளுமாகிய தாமரை யோடைகளும்அங்கு அகப்படா. ஆனது பற்றியே வண்டுகளை அங்குக் காணவும் முடியாது. கண்டுவென்னும் மஹாநுபாவராகிய ஓர் தபோதனர் உளர். அவர் ஸத்யத்தையே பேசுந் தன்மையர். அம்மஹர்ஷி மிகவும் கோபமுடையவர். அவர் மிகுந்த தபோநியமமுடையவராகையால், எப்படிப்பட்டவர்க்கும் அவரைக் கிட்டுவது ஸாத்யமன்று. அம்மஹர்ஷியின் புதல்வர் பதிணறு வயதுடையவர் ஒருவர் அவ்வனத்தில் மரணம் அடைந்தனர். அம்மஹர்ஷி தன் புதல்வன் மரணம் அடைந்ததைப்பற்றி அவ்வனத்தின்மேல் மஹா கோபமுற்றனர். தர்மஸ்வபாவராகிய அவர் அம் மஹாவனம் முழுமையும் எவர்க்கும் வாஸயோக்ய மாகாததும் புகக் கூடாததும் மான்களும் பக்ஷிகளுமில்லாததுமாகச் சபித்தனர். அவ் வானரவீரர்கள் அந்தச் சூன்ய ப்ரதேசத்திலுள்ள வன மத்யங்களிலும் பர்வதகுஹைகளிலும் நதிகள் உண்டாகுமிடங்களிலும் மனவுக்கத்துடன் நன்ருகத் தேடினர். ஸுக்ரீவனுக்கு ப்ரியஞ்செய்யுந் தன்மையராகிய அம் மஹாதைர்யசாலிகள் அங்கு எவ்வளவுதேடிப்பார்த்தும், ஸீதையையாவது அவளை எடுத்துக்கொண்டுபோன ராவணனையாவது காணவில்லை. அவ்வானர்

கள், கொடிகளும் புதர்களும் நிறைந்து பயங்கரமாகிய ஓர் ப்ரதேசத்தில் நுழைகையில், அங்குத் தேவதைகளையும் பொருள்செய்யாத கொடுஞ்செயலுடைய ஓர் அரக்கனைக் கண்டனர். வானரர்கள் பர்வதம்போல் பயங்கரமான உருவமுடைய அந்த ராக்ஷஸனைக் கண்டு எல்லோரும் துணியை இழுத்துக் கட்டிக்கொண்டு யுத்தத்திற்கு ஸித்தமாயிருந்தனர். பலிஷ்டனுகிய அவ்வஸுரனும் பர்வதம்போன்ற உருவத்துடன் புலப்படுகின்ற அந்த வானரர்களெல்லோரையும் கண்டு 'இதோ நீங்களெல்லோரும் செத்தீர்கள்' என்றனன். அனந்தரம் அந்த ராக்ஷஸன மிகுந்த கோபாவேசத்துடன் கெட்டியாகக் கைவிரல்களை மடக்கின முஷ்டியை உயரத் தூக்கிக்கொண்டு வானரர்கள்மேல் எதிர்த்து வந்தனன். அனந்தரம் வாலிகுமாரனுகிய அங்கதன் அந்த ராக்ஷஸன் மேல்விழுந்து வருவதைக்கண்டு 'இவனே ராவணனென்று நினைத்துச் சீக்ரம் அவனை அறையால் அறைந்தனன். அவ்வஸுரன் வாலிகுமாரனுகிய அங்கதனல் அடிக்கப்பட்டுக் குருதியைக் கக்கிக்கொண்டு பர்வதம் விழுவதுபோல் தரையில் வீழ்ந்தனன். அந்த ராக்ஷஸன் மரணம் அடைந்தபின்பு ஜயசீலர்களான அவ்வானரர்கள், அவனே ராவணனென்றும் அந்தக் குஹையில் ஸீதை இருப்பாளென்றும் நினைத்து அந்தப் பர்வதகுஹைகளெல்லாவற்றிலும் பலவாறு நன்முகத் தேடிப்பார்த்தனர். அனந்தரம் அவர்கள் எல்லோரும் அவ்வரண்யம் முழுமையும் தேடி, அவ்வளவோடு நிற்காமல் மீளவும் அவற்றினருகிலிருக்கும் மற்றொரு பயங்கரமான பர்வதகுஹைக்குச் சென்றனர். அவர்கள் அந்தக் குஹையிலும் தேடி அங்கும் ஸீதையைக்காணுமல் இளைப்புற்று மிகவும் வருத்தமுற்று ஏகாந்தத்தில் ஓர் மரத்தினடியில் எல்லோரும் கூட்டமாக உட்கார்ந்தனர். நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஹனுமான் மீளவும் வேறு இடங்களில் தேடிப்பார்த்தல்.

அனந்தரம் மஹாப்ராஜ்ஞனாகிய அங்கதன், மிகவும் இளைப்புற்று வானரர்க ளெல்லோரையும் பார்த்து அவர் களை ஸமாதானப் படுத்திக்கொண்டு 'ஸாதாரணமான வனங்களி லும் பர்வதங்களி லும் நதிகளி லும் புகமுடியாத கார்வனங்களி லும் பிலங்களி லும் பர்வத குஹைகளி லும் நன்றாகத் தேடிப்பார்த்தோம். அந்த ப்ரதேசங்களில் எங்கும் ஸீதையாவது தேவகன்னிகையைப்போன்ற அவ ளை எடுத்துக் கொண்டுபோன ராவணனாவது புலப்பட வில்லை. நமக்குக்காலமோ மிகவும் கடந்துவிட்டது. ஸுக் ரீவனை கொடிய தண்டனைவிதிக்குத் தன்மையன். ஆகை யால் நீங்கள் உபேக்ஷைசெய்யாமல் எல்லோருங்கூடி நன் றாக முழுவதும் தேடிப்பார்க்கவேண்டும். நீங்கள் சோம் பலுக் குட்படாமலும் மனவருத்தப்படாமலும் நித்ரை யின்றி நமக்கு ஜனகராஜன் புதல்வியாகிய ஸீதை அகப்ப டும்படி நன்கு தேடிப்பார்ப்பீர்களாக. மனவெறுப்பில்லா மையும் உத்ஸாஹமும் தைர்யமும் ஆகிய இவை கார்ய ஸித்தியைக் கொடுப்பவையென்று பெரியோர்கள் மொழி வார்கள். ஆகையால் நான் இங்ஙனம் மொழிந்தனன். மற்றொருதடவை புகக்கூடாத இவ்வனத்தில் தேடிப்பார் ப்பீர்களாக. எல்லோரும் சோம்பலைவிட்டு மீளவும் இவ் வனத்தில் தேடிப்பார்ப்பீர்களாக. கார்யஞ்செய்துகொண் டிருந்தோமாயின் அவஶ்யம் அதற்குப் பலன் உண்டா கும். ஆகையால் வெறுப்புறுவது வேண்டாம். இனி எழுந் திருப்பீர்களாக. இங்ஙனம் நித்ரைசெய்வது நமக்கு எள் ளளவும் யுக்தமன்று. ராஜாவாகிய ஸுக்ரீவன் மிகவும் கோபிஷ்டன்; மேலும் தீக்ஷ்ணமாகத் தண்டிக்குந் தன் மையன். ஆகையால் அவனது ஆஜ்ஞையை எப்பொழு

தும் பயத்துடன் கடத்தவேண்டும். ராமனும் மஹா ப்ர பாவனுகையால் அவனுக்கும் பயப்படவேண்டும். வானரர் களே! உங்களுக்கு நன்மையை விரும்பியே நான் இவ்வ ளவு மொழிந்தனன். உங்களுக்கு இஷ்டமாயின் அவ்வண் ணம் கடத்துவீர்களாக. அல்லது நம்மெல்லோர்க்கும் ஹிதமாயிருப்பது மற்றொருகார்யம் உளதாயின் அதை யாயினும் சொல்வீர்களாக' என்றனன். அங்கதன் சொன் ன வசனத்தைக்கேட்டுக் கந்தமாதனன் தாஹத்தினுலும் இளைப்பினுலும் பீடிக்கப்பட்டிருக்கையால் மொழிகள் தெளிவற்றிருக்குமாறு ஹீனஸ்வரத்துடன் 'அங்கதன் உங்களுக்குச் சொன்னது மிகவும் யுக்தமாயிருக்கின்றது. அங்ஙனம் செய்வதனல் உங்களுக்கு ஹிதமும் ஆனுகூல் யமும் உண்டாகும். ஆகையால் அவன் சொன்னபடி கட த்துவீர்களாக. பர்வதங்களிலும் குஹைகளிலும் பிலங்க ளிலும் ஜனஸஞ்சாரமில்லாத வனங்களிலும் மலையருவிக ளிலும் மீளவும் நன்முகத் தேடிப்பார்ப்பீர்களாக. மஹா னுபாவனுகிய ஸுக்ரீவன் ஆஜ்ஞாபித்தப்ரகாரம் நீங்க ளெல்லோரும் சேர்ந்து வனங்களிலும் பர்வதங்களிலும் துர்க்க ப்ரதேசங்களிலும் ஸீதாதேவியைத் தேடிப்பார்ப் பீர்களாக' எனறனன. அனந்தரம் மஹா பலசாலிகளா கிய அவ்வானரர்கள் எழுந்து மீளவும் தென்திசையில் விந்த்ய பர்வதத்தின் அரண்யங்களில் தேடத் தொடங்கி னர். அவ்வானரர்கள் ஸீதையைக்காண மன விருப்பமுற் றவராகி விந்த்யபர்வதத்தில் சிகரங்களோடுங் குஹைக ளோடுங்கூடிச் சரத்காலமேகம்போல் வெளுத்து விளங் குவதும் சோபையமைந்ததும் வெள்ளிமயமா யிருப்பது மாகிய ஓர் பாகத்தில் ஏறி அங்குரமணீயமாயிருக்கின்ற வாகுப் பயிர்களிலும் ஏழிலைப்பாலைவனங்களிலும் ஸீதா தேவியைத் தேடினர். அவர்கள் அந்தப் பர்வதம் முழுவ

கிலும் ஸமஸ்த குஹைகளிலும் பார்த்துத் தேடியும் ஸீதை அகப்படாமையால் இழிந்தனர். அவ்வானரர்கள் அங்ஙனம் ஸ்ரமப்பட்டு ப்ரஜ்ஞைதப்பி அம்மலையினின்று கீழே இழிந்து கொஞ்சதோரம் தங்கியிருந்து அதன்பிறகு ஓர் செடியின்கீழ்ச் சேர்ந்தனர். அவ்வானரர்கள் கொஞ்சம் இளைப்பாறலுற்று மனவுக்கம்பெற்று மீளவும் தென் திசைமுழுவதிலும் ஸீதாதேவியைத் தேடத்தொடங்கினர். ஹனுமான் முதலான அவ்வானரோத்தமர்கள் மீளவும் தேடுவதற்குப் புறப்பட்டு விந்த்யபர்வதம் முதற்கொண்டு ஸமஸ்த ப்ரதேசங்களிலுந் திரிந்து தேடினர். கற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஹனுமான் முதலியவர் குகூபிலத்தில் ஸ்வயம்ப்ரபையைக் காணுதல். }

ஹனுமான் தாரனீலரும் அங்கதனீலரும் கூடி விந்த்ய பர்வதத்திலுள்ள குஹைகளிலும் வனங்களிலும் ஸீதாதேவியைத் தேடினன், அம்மேலான பர்வதத்தில் ஸிம்ஹங்களோடும் பெரும்புலிகளோடும் கூடின விஷமப்ரதேசங்களிலுள்ளபெருங்கற்களிலும் பெரிய மலையருவிகளினின்று பெருகிவரும் நதிகளிலும் தேடிப்பார்த்தனன். அனந்தரம் அவர்கள் அந்தப் பர்வதத்தின் கிருதிமுலைக்குப் போய்ச்சேர்ந்தனர். அவர்கள் அங்கிருக்கும்பொழுதே ஸுக்ரீவன் நியமித்த கெடுவாகிய மாதகாலம் முடிந்துவிட்டது. அந்த விந்த்யப்ரதேசம் மிகுந்த குஹைகளும் அரண்யங்களும் நிறைந்து மிகவும் பெரிதாயிருக்கையால் அங்குத் தேடுவது மிகவும் கஷ்டம். அதனால் அங்கிருக்கும் பொழுதே அவர்க்கு அம்மாதம் கடந்துபோயிற்று. அந்த கிருதிமுலையில் வாயுகுமாரனாகிய ஹனுமான் வானரர்களில் ஒவ்வொருவரையும் தன்னருகில் சேர்த்துக்

கொண்டு அந்தப் பர்வதத்தின் குஹைமுதலிய எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தனன். கஜன் கவாக்ஷன் கவயன் சரபன் கந்தமாதனன் மைந்தன் த்விவிதன் ஸுஷேணன் ஜாம்பவான் நலன் யுவராஜனாகிய அங்கதன் தாரன் ஹனுமான் ஆகிய இவர்கள் பல பர்வதங்களோடு கூடின அந்தந்த ப்ரதேசங்களில் தேடி, அனந்தரம் தென்திசையில் வேறு இடங்களிலும் ஆங்காங்குத் தேட முயன்று விஸ்தீர்ணமான ஓர் பிலத்தைக் கண்டனர். அவர்கள் பசியும் தாஹமும் மிகுத்திருக்கப் பெற்றுக் குடிக்க ஜலம் அகப்படாமல் திரிந்துகொண்டிருக்கையில் ஓர் மஹா பிலத்தைக் கண்டனர். அது மயனென்னும தானவனால் காக்கப்பட்டிருப்பது. அதில் எப்படிப்பட்டவர்க்கும் ப்ரவேசிக்கமுடியாது. ருக்ஷபில மென்னும் பேருடையது. அது கொடிகளாலும் புதர்களாலும் மூடப்பட்டிருப்பது. அந்தப் பிலத்தினின்று க்ரௌஞ்சங்களும் ஹம்ஸங்களும் ஸாரஸங்களும் சக்ரவாகங்களும் ஜலத்தில் நனைந்து தாமரைத் தாதுக்களின் தூள்களால் சிவந்த இறகுகளுடன் மேல்கிளம்பின. அனந்தரம் அவ்வானரதிலகர்கள், கலல வாஸனை கமழப்பெற்று எள்ளளவும் புகக்கூடாத அம்மஹாபிலத்தைக் கண்டு மனத்தில் மிகவும் ஆச்சர்யம் அடைந்தனர். மஹா தேஜஸ்விகளும் மிகவும் பலிஷ்டர்களுமாகிய அவ்வானரோத்தமர்கள் காலவித ஜந்துக்கள் நிறைந்து, தைத்யாலயமான பலியின் வாஸஸ்தானமான பாதாளம்போல் பார்க்கவும் முடியாமல் மஹா பயங்கரமாயிருப்பதும் எவ்விதத்திலும் ப்ரவேசிக்கமுடியாததுமான அம்மஹாபிலத்தைக் கண்டு 'இது பாதாளமோ? அல்லது ராக்ஷஸமாயையோ?" என்று சங்கித்துக்கொண்டே அந்தப் பிலத்தில் நுழையப்போயினர். அனந்தரம் பர்வதசிகரம்போன்ற உருவமுடைய ஹனு



1911. வானரர்கள் பிலத்தில் புகுதல்.

மான் புகக்கூடாத வழிகளிலும் மிகுந்த அனுபவமு டையவனுகையால் ஸமஸ்த வானரர்களையும் பார்த்து, 'தெற்குத்திக்கில் பர்வத ஸமூஹங்கள் நிறைந்திருக்கும் தேசங்களை யெல்லாம் காமெல்லோரும் தேடிப்பார்த் தோம். ஆயினும் ஸீதையைக் காணப்பெற்றிலோம். மே லும் குஹையினின்று ஹம்ஸங்களும் க்ரௌஞ்சங்களும் ஸாரஸங்களும் சக்ரவாகங்களும் ஜலத்தில் நனைத்து கார் புறத்திலும் வெளிப்பட்டு வருகின்றன. மேலும் இந்தக் குஹையின் வாசலில் வ்ருக்ஷங்கள் பச்சைனறிருக்கின் றன. ஆகையால் அதில் நீர்நிறைந்த கிணறுவது மடுவா வது இருக்கவேண்டும். இது நிஜம்' என்றனன். இங்ங னம் ஹனுமான் சொல்லுகையில், அவ்வானரர்களனை வரும் அந்தப் பிலத்தில் ப்ரவேசித்து, அங்கு சந்த்ர ஸூ ர்யர்களின் ப்ரகாசமில்லாமையால் பயங்கரமாகி டயிர்க் கூச்சலை விளைப்பதுமாகிய அந்தகாரம் நிறைந்திருக்கக் கண்டனர். அந்த வானரச்ரேஷ்டர்கள் அந்தப் பிலத்தி னின்று வெளிவரும் ஸிம்ஹங்களையும் மற்றும் பலவித மான அந்தந்த ம்ருகங்களையும் பக்ஷிகளையும் பார்த்துக் கொண்டே இருள்மூடியிருக்கும் அப்பிலத்தில் ப்ரவேசித் தனர். அதில் அவ்வானரர்களின் நேத்ரங்களாவது ப்ரபாவமாவது பராக்ரமமாவது தடைபடவில்லை. வாயு வின்கதிபோல், அவரது பார்வை அந்தகாரத்திலும் சிறி தும் தடைபடாமற்சென்றது. அந்தக் கபிகுஞ்சரர்கள் அங்ஙனம் அந்தப் பிலத்தில் வேகமாக ப்ரவேசித்தபின்பு கொஞ்சதூரத்தில் வெளிச்சமுடையதும் ரமணீயமுமா கிய ஓர் சிறந்த ப்ரதேசத்தைக் கண்டனர். அனந்தரம் அவர்கள் நாணுவித வ்ருக்ஷங்களோடுகூடிப் புகக்கூடா திருக்கிற அந்தப் பிலத்தில் இருட்டில் தப்பிப்போவோ மென்கிற பயத்தினல் ஒருவரையொருவர் பிடித்துக்கொ

ண்டு ஓருயோஜனதூரம் போயினர். அவர்கள் தண்ணீர் தாஹமுற்று ஜலத்தைதக்காண விரும்பி ப்ரஜ்ஞைதப்பித் தழுதழுத்திருப்பினும் சோம்பற்படாமல் அந்தப் பிலத் தில் சிறிதுதூரம் விடாமற்போயினர். அவ்வீரர்கள் அங் ஙனம் பசிதாஹங்களால் இளைப்புற்று முகத்தில் வாட்டந் தோற்றப் பிழைப்பில் ஆசையைத்துறந்து போய்க்கொ ண்டிருக்கையில், அப்பொழுது கொஞ்சதூரங் கழிந்த பின்பு வெளிச்சத்தைதக் கண்டனர். அனந்தரம் அவர்கள் அங்கு இருட்டின்றி வெளிச்சமுற்று ரமணீயமாயிருக்கிற ஓர் ப்ரதேசத்தில் சேர்ந்து, அங்குளரிகிற அக்னிபோல் ப்ரகாசிக்கின்ற பொன்மயமான மராமரங்களையும் குடஜ வ்ருக்ஷங்களையும் மகிழமரங்களையும் தவவ்ருக்ஷங்களை யும் சண்பகமரங்களையும் நாககேஸர வ்ருக்ஷங்களையும் பூத்திருக்கிற கர்ணிகார வ்ருக்ஷங்களையும் கண்டனர். மேலும் அவ்விடத்தில் அற்புதமான பொன் பூங்கொத்து க்களும் சிவந்த தளிர்களும் தலையிற் சூடும்படி தொடுத்த பூமாலைகளும் கொடிகளும் அமைந்து பொன் பூஷணங்க ளே பழங்களாகப்பெற்றுப் பாலஸூர்யன்போல் விளங் கும் வைடூர்யமணிமயமான தண்டுகளுடன்கூடி [1] நிஜரு பகாந்தியால் ப்ரகாசிக்கினற வெள்ளி வ்ருக்ஷங்களையுங் கண்டனர். மேலும், நீல வைடூர்யமணி வர்ணமுடைய வைகளும் நானாவிதபக்ஷிகள் அமையப்பெற்றவைகளும் பாலஸூர்யன்போல் விளங்கும் பெரிய தாமரைமலர்க ளால் சூழப்பட்டு ப்ரகாசிக்கின்றவைகளும் பொன்மய மான பெரிய மத்ஸ்யங்களும் பெரிய ஆமைகளும் விளங் கப்பெற்றவைகளும் தெளிந்த ஜலம் நிறைந்தவைகளு மான தாமரைக்குளங்களையும் கண்டனர். வானரர்கள் அந்தப் பிலத்தில் பொன்சாளரங்கள் பொருந்தி முத்து

---

1. தமது உருவத்தின் பிரகாசத்தினல்.

ஸரங்களால் அலங்கரிக்கப்பட்ட பொன் விமானங்களும் வெள்ளிவிமானங்களும் பொன்னுப்பரிகைகளும் வெள்ளி உப்பரிகைகளும் அமைந்து வைடூர்யமணிகளால் அலங்காரஞ் செய்யப்பெற்ற மேலான மாளிகைகளையும் நாற்புறத்திலுங் கண்டனர். நன்கு புஷ்பித்தும் நிரம்பப் பழுத்தும் பவழத்தின் வர்ணமுடையவைகளுமான வ்ருக்ஷங்களையும் பொன்மயமான வண்டுகளையும் பலவகைப் புஷ்பஸரங்களையும் ரத்னங்களிழைத்திருக்கும் பொன்மயமான படுக்கைகளையும் மிகவும் சிறந்த ஆஸனங்களையும் முழுவதும் கண்டனர். வானரர்கள் அவ்விடத்தில் குவியலாகக்கிடக்கிற பொன்பாத்ரங்களையும் குவியலாயிருக்கிற வெள்ளிப் பாத்ரங்களையும் அங்ஙனமே குவியலாயிருக்கின்ற வெண்கலப்பாத்ரங்களையும் குவியல்குவியலாகக் கிடக்கிற திவ்யங்களான அகரு சந்தனங்களையும் பரிசுத்தங்களும் ருசியுடையவைகளுமான காய்கிழங்குகளையும் சிறந்த பானத்ரவ்யங்களையும் ருசியுள்ள தேன்களையும் மிகவும் சிறந்த திவ்யவஸ்த்ர ஸமூஹங்களையும் சித்ரகம்பள ஸமூஹங்களையும் காணுவித[1] அஜினாஸிகளையும் அக்னிபோல் பளபளவென்ற மேலான பொன் குவியல்களையும் ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கக் கண்டனர். மஹாபலசாலிகளும் சூரர்களுமாகிய அவ்வானரர்கள் அங்ஙனம் அந்தப் பிலத்தில் ஆங்காங்குத் தேடிக்கொண்டு சென்று ஸமீபத்தில் ஒரு ஸ்த்ரீயைக் கண்டனர். அம்மடந்தை மரவுரியையும் க்ருஷ்ணாஜினத்தையும் தரித்து ஆஹாரநியதியுடையவளாகித் தேஜோவிசேஷத்தினால் ஜ்வலிப்பவள்போல் ப்ரகாசித்துக்கொண்டிருந்தனள். அங்ஙனமிருக்கின்ற தாபஸியைப் பார்த்துக் கபிகள் மிகவும் பயத்தையும் ஆச்சர்யத்தையும் அடைந்து எல்லோரும்

---

1 மான்தோல்களின் குவியல்களையும்.

அருகில் நின்றிருந்தனர். அப்பொழுது ஹனுமான் அவளைப் பார்த்து 'நீயார்? இத்தப்பிலம் எவருடையது?' என்று வினவினன். அனந்தரம் பர்வதம்போன்ற உருவமுடைய ஹனுமான் ககளைக்குவித்து அத்தக் கிழவிக்கு நமஸ்காரஞ்செய்து அவளைப்பார்த்து 'நீயார்? இத்தக்ருஹமும் பிலமும் இத்த உத்தம த்ரவ்யங்களும் எவருடையவை' என்று வினவினன். ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஸ்வயம்ப்ரபை வானர்களுக்கு ருக்ஷபில வ்ருத்தாந்தத்தைக் கூறுதல். }


இங்ஙனம் ஹனுமான் மொழிந்து, மீளவும் க்ருஷ்ணஜின முடுத்தவளும் மஹாணுபாவையும் பரமதார்மிகையுமாகிய அந்தத் தாபஸியைக்கண்டு 'நாங்கள் வழிதடந்த ஸ்ரமத்தினல் இளைப்புற்றுப் பசி தாஹங்களால் பீடிக்கப்பட்டவராகி இங்கு ஜலம் முதலியவை இருக்குமென்று நினைத்து முன்பின்பாராமல் எல்லோரும் இருள்மூடப்பெற்ற இத்தப் பிலத்திற்குள் வந்தனம். நாங்கள் முக்யமாகத் தாஹத்தினல் இளைப்புற்று இத்தப் பெரிய பூமி பிலத்தில் ப்ரவேசித்தனம். இங்கு மிகவும் அற்புதங்களாகத் தோற்றுகின்ற இத்தப பலவிதமான திவ்ய பதார்த்தங்களைக் கண்டவுடனே 'இது அஸுரமாயையோ! என்னவோ' என்று பயந்து ஒன்றுந் தோற்றப்பெறாமல் செய்வது தெரியாதிருக்கின்றனம். பாலஸூர்யன்போல் விளங்குகின்ற இத்தப் பொன் வ்ருக்ஷங்களும் பரிசுத்தங்களும் ருசியுடையவைகளுமாகிய இத்தப் பலமூலங்களும் பொன் விமானங்களும் பொற்சாளரங்கள் அமைத்து ரத்னங்களால் அலங்காரமுஞ் செய்யப்பெற்ற வெள்ளிக்ருஹங்களும் எவனுடையவை? கன்கு புஷ்பித்து கல்ல பழங்கள் பொருந்தி கன்மணங் கமழ்கின்றவைகளும் பரிசுத்தங்களுமாகிய இத்தப்

பொன் வ்ருக்ஷங்களும் நிர்மல ஜலங்களில் புலப்படுகின்ற இந்தப் பொன் தாமரைகளும் எவன் ப்ரபாவத்தினால் உண்டானவை? பொன் ஆமைகளும் பொன்மத்ஸ்யங்களும் திரிகின்றனவே! இவை எப்படி உண்டாயின? லோக ப்ரபாவத்தினாலோ அல்லது பிறருடைய தபோமஹிமையாலோ இவை உண்டாயின? எங்களில் எவர்க்கும் இந்த விஷயம் தெரியாதாகையால் நீ எல்லாவற்றையும் தெரியச் சொல்லவேண்டும்' என்றனன். ஹனுமான் இங்ஙனம் சொல்லுகையில் ஸர்வபூதங்களுக்கும் ஹிதஞ் செய்பவளும் தர்மங்களை ஆசரிப்பவளுமாகி விளங்கும் அந்தத் தாபஸி அவர்களைப் பார்த்து 'மஹா தேஜஸ்வியும் மிகுந்த மாயாவியும் தானவோத்தமனுமாகிய மயனென்பவனொருவன் இங்கே இருந்தனன். அவன் தன் விசித்ரசக்தியால் இந்தப் பொன்மயமான வனத்தையெல்லாம் நிர்மித்தனன். பொன்மயமாயிருப்பதும் திவ்யமுமாகிய இந்த உத்தம க்ருஹத்தை நிர்மித்த மயன், முன்பு தானவ முக்யர்களுக்கு விச்வகர்மாவா யிருந்தனன். அவன் மஹாரண்யத்தில் பலவாயிரமாண்டுகள் தவஞ் செய்து ப்ரஹ்மதேவனிடத்தில் சுக்ரன் செய்த சில்பசாஸ்த்ரங்களெல்லாம் தன்னொத்தாகும்படி வரம் பெற்றனன். அனந்தரம் மாயாபலமுடையவனாகி ஸமஸ்த காமபோகங்களும் மனம் போனபடியெல்லாம் நிரம்பப்பெற்று விளங்குகின்ற அந்த மயன் இந்த ஸ்வர்ணமய வனத்தை நிர்மித்து இம்மஹா வனத்தில் சிலகாலம் ஸுகமாக வஸித்திருந்தனன். தானவச்ரேஷ்டனாகிய அந்த மயன் ஹேமையென்னும் அப்ஸாஸ்த்ரீயிடத்தில் பற்றுடையனாயிருப்பதை அறிந்து த்ரிலோகநாதனாகிய தேவேந்த்ரன் பராக்ரமத்தைக்காட்டி வஜ்ராயுதத்தினால் அவனைக் கொன்றனன். மயன் இந்த ஸ்தலத்தை விட்டுப் போன பின்பு இந்த உத்தம வனத்

ணதயும்ரமணீயங்களும் ஸாரஸ்வதங்களுமாகிய இதி லுள்ள போக்ப வஸ்துக்களையும் வெள்ளிமயமான இந்தக்ருஹத் தையும் ஹேமைக்குக்கொடுத்தனன். வானரோத்தமனே! நான் மேருஸாவர்ணியின் குமாரத்தி. நான் ஸ்வயம்ப்ர பையென்னும் பேருடையவள். ஹேமையினுடைய இந்த க்ருஹம் முதலியவற்றை ரக்ஷித்துக்கொண்டு இங்கிருக் கின்றன். ந்ருத்த கீதங்களில் மிகவும் ஸமர்த்தையாகிய ஹேமை எனக்குப்ரியமுடைய தோழி. மேலும் அவள், பிறர்க்கு என்னைத் திரஸ்கரிக்கமுடியாதபடி எனக்கு வர ங்கொடுத்திருக்கின்றனள். ஆகையால் நான இங்கு இந் த க்ருஹத்தை ரக்ஷித்துக்கொண்டிருக்கின்றனன். நீங் கள் எந்தக் கார்யத்தை உத்தேசித்து எந்தக் காரணத் தினால் கானகங்களில் தேடிப்பார்க்கிறீர்கள்? புகக்கூ டாத இவ்வனத்தையுங் கூட எப்படி கண்டு பிடித்தீர் கள்? நீங்கள் இங்கு பக்ஷிக்கத் தகுந்த பழங்களையும் வேர்களையும் பக்ஷித்து ஜலங்களைப் பருகி உங்கள் வ்ருத் தாந்தத்தை யெல்லாம் எனக்குச் சொல்லவேண்டும்' என் றனள். ஐம்பத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஹனுமான் ஸ்வயம் ப்ரபைக்குத் தாம் வந்த கார்யத்தைத் தெரிவித்தல். }

அனந்தரம் தர்மத்தை அனுஷ்டிக்குந் தன்மையு டைய அந்தத் தாபஸி ஸ்வயம்ப்ரபை மிகுந்த ஆதரத்து டன் பராக்ரமசாலிகளாகிய அந்த வானரோத்தமர்கள னைவரையுங் கண்டு 'வானரர்களே! பழங்களைப் பக்ஷித் து உங்கள் ப்ரமம் தீர்ந்தபின்பு உங்கள் வ்ருத்தாந்தத் தை நான் கேட்கக்கூடுமேயாயின், சொல்வீர்களாக; கேட்க விரும்புகின்றேன்' என்றனள். அவள் சொன்ன



1916. ஸ்வயம்ப்ரபை வானரர்களுக்குப் பல மூலாதி கனிகள் கொடுத்தல்.

வார்த்தையைக் கேட்டு வாயுகுமாரனாகிய ஹனுமான் கபடத்தை விட்டு நடந்தபடியே தம் ஸங்கதியெல்லாஞ் சொல்லத் தொடங்கி 'ஸமஸ்தலோகங்களுக்கும் ப்ரபுவும் மஹேந்த்ரவருணர்களை நிகர்த்தவனும் ஸம்பத்தெல்லாம் அமைந்தவனுமாகிய தசரத குமாரன் ராமன் தன் தம்பி லக்ஷ்மணனோடும் பார்யை ஸீதையோடும் தண்டகாரண்யத்திற்கு வந்தனன். அவன் பார்யையான ஸீதாதேவியை ஜனஸ்தானத்தில் ராவணன் பலவந்தமாக எடுத்துக் கொண்டு போயினன். அந்த ராமனுக்கு ஸ்னேஹிதனும் வீரனும் வானர ச்ரேஷ்டர்களுக்கெல்லாம் ராஜனுமாகிய ஸுக்ரீவனென்னும் வானரன் ஒருவன் உளன்; நாங்களெல்லோரும், அகஸ்த்யர் ஸஞ்சரிப்பதும் யமனல் பரிபாலனஞ் செய்யப்பட்டதுமாகிய தென்திசைக்கு அவனல்தான் அனுப்பப்பட்டோம். ஸுக்ரீவன், பயங்கரமான உருவமுடைய அங்கதன் முதலிய இந்த வானரர்களனைவரையும் பார்த்து 'நீங்களெல்லோரும்சேர்ந்து விதேஹராஜன் புதல்வியாகிய ஸீதையையும் காமரூபியும் ராக்ஷஸனுமாகிய ராவணனையும் தேடிக் கண்டு பிடிப்பீர்களாக' என்று ஆஜ்ஞாபித்தனன். நாங்களெல்லோரும் தென்திசையெல்லாம் தேடி இளைப்புற்றுப் பசியின்பாதையால் ஓர்மரத்தின் கீழ்ச் சேர்ந்தனம். எல்லோரும் முகம் விலவிலக்கப்பெற்று ஆலோசனை செய்ய முயன்று சிந்தையென்னும் மஹா ஸமுத்ரத்தில் மூழ்கி அக்கரை சேர வழியின்றித் தீனர்களாயிருந்தனம். அனந்தரம் நாங்கள் நாற்புறத்திலும் கண் வைத்து உற்றுப் பார்க்கையில் ஓர் பிலம் புலப்பட்டது. அது கொடிகளாலும் வ்ருக்ஷங்களாலும் மறைக்கப்பட்டு இருள்மூடப் பெற்றிருந்தது. அத்தப் பிலத்தினின்று ஹம்ஸங்கள் க்ரௌஞ்சங்கள் ஸாரஸங்கள் முதலிய பக்ஷிகள்

ஜலத்தில் நனைத்து இறகுகளால் ஜலத்துளிகளை உதறிக் கொண்டு வெளிப்பட்டன. 'நல்லது; இதில் நுழைவோம்' என்று நானே இந்த வானரர்களுக்குச் சொல்லினன். வானரர்களெல்லோர்க்கும் கூட, நனைந்த பக்ஷிகளைப் பார்க்கையால் ஜலம் இருக்குமென்று அனுமானம் உண்டாயிற்று. மேலும் ஸ்வாமி கார்யத்திலுள்ள த்வரையால், 'போய்ப் புகுவோம்' என்று எல்லோர்க்கும் ஸம்மதி உண்டாயிற்று. அனந்தரம் நாங்கள் ஒருவரையொருவர் கெட்டியாகக் கட்டிக்கொண்டு பிலத்வாரத்தில் சென்று சீக்ரமாக இருள்மூடின அந்தப் பிலத்தில் ப்ரவேசித்தனம். இது எங்கள் கார்யம். இந்தக் கார்யத்தைப்பற்றியே இங்கு வந்தோம். பசியினால் வருந்துகின்ற நாங்களெல்லோரும் உன்னிடம் வந்து சேர்ந்தோம். நீ ஆதித்ய தர்மத்தை அவலம்பித்துக் கொடுத்த பழங்களையும் வேர்களையும் நாங்கள் பசிதீர எல்லோரும் பக்ஷித்தனம். பசியால் சாவதற்கிருந்த எங்களெல்லோரையும் நீ இப்பொழுது ரக்ஷித்தனையே! இதற்கு வானரர்கள் ப்ரத்யுபகாரமாக உனக்கு என் செய்யக்கூடும்? சொல்வாயாக' என்றனன். வானரர்கள் ஹனுமான் மூலமாக இங்ஙனஞ் சொல்லுகையில் ஸர்வஜ்ஞனாகிய ஸ்வயம்ப்ரபை வானரயூதபதிகளனைவரையும் பார்த்து, 'பலிஷ்டர்களான வானரர்களெல்லோரிடத்திலும் எனக்கு மிகுந்த ஸந்தோஷம் உண்டாயிற்று. நான் கேவலம் தர்மத்திலேயே முயன்று நடக்குந் தன்மையள். எனக்கு மற்றொன்றிலும் கார்யம் இல்லை. ஆகையால் ப்ரத்யுபகாரஞ் செய்வது வேண்டாம்' என்றனள். ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸ்வயம்ப்ரபை வானர்களைப் பிலத்தி
னின்று தன் மஹிமையால் வெளிப்
படுத்துதலும், வானர்கள் கெடு
கடந்ததற்கும் ஸீதையைக் கா
ணமைக்கும் வெறுப்புறுதலும்.

தாபஸியாகிய ஸ்வயம்ப்ரபை இங்ஙனம் சுபமாகவும் தர்மம் அமைந்திருக்குமாறும் மொழிந்த வசனத்தைக் கேட்டு ஹனுமான், நிந்தைக் கிடமாகாத கார்யங்களை ஆசரிக்குந் தன்மையுடைய அவளைப் பார்த்து, 'தர்மஞ் செய்யுந் தன்மையுடையவளே! நாங்களெல்லோரும் இப் பொழுது உன்னையே சரணம் அடைந்தனம். மஹாநுபாவனாகிய ஸுக்ரீவன் எங்களுக்கு ஸங்கேதஞ் செய்த கெடுவாகிய காலமுங் கூட, நாங்கள் இம்மஹாபிலத்தில் நுழைந்துகொண்டிருக்கும்பொழுதே கடந்தது. நீ மிகவும் தர்மஸ்வபாவை. ஆகையால் பயங்கரமான இந்தப் பிலத்தினின்று எங்களை எப்படியாயினும் வெளிப்படுத்தி ரக்ஷிக்கவேண்டும். ஸுக்ரீவன் ஆஜ்ஞை செய்த கெடு கடக்கப்பெற்றவராகையால், அவனது மரணதண்டனைக் குட்பட்டவராயிருப்பதுபற்றி ஆயுள் முடிந்தவராகி அந்தப் பயத்தினால் இளைத்திருக்கின்ற எங்களெல்லோரையும் நீ ரக்ஷிப்பது யுக்தமாயிருக்கின்றது. தர்மஞ் செய்யுந்தன்மையளே! ஸீதையைத் தேடும் பெரிய கார்யம் எங்களுக்குச் செய்யவேண்டியதாயிருக்கிறது. நாங்கள் இங்கு அகப்பட்டுக்கொண்டிருப்பதனால் அந்தக் கார்யத்தையுங் கூடச் செய்யாதவர்களாயினேம்' என்றனன். ஹனுமான் இங்ஙனஞ்சொல்லுகையில் அந்தத் தாபஸி அவ்வானரர்களைப் பார்த்து இந்தப் பிலத்தில் புகுந்தவன் ப்ராணன்களோடு இதினின்று வெளிப்பட்டுப் போவது ஸாத்யமன்றென்று நினைக்கிறேன். ஆயினும், நான் பலநியமங்களை ஆசரித்து ஸம்பாதித்த தவமஹிமையால் வானரர்களெல்லோரையும்

இத்தப் பிலத்தினின்று வெளிப்படுத்துகிறேன். வானரப்ர
ரேஷ்டர்களே! நீங்களெல்லோரும் கண்களை மூடிக்கொ
ள்வீர்களாக. கண்களை மூடிக்கொள்ளாதபக்ஷத்தில் இ
ந்தப் பிலத்தினின்று வெளிப்படுவது எள்ளளவும் ஸாத்ய
மன்று' என்றனள். அனந்தரம் வானரர்களெல்லோரும்
பிலத்தினின்று தாண்டும்படி நேர்ந்ததற்கு மிகவும் ஸ
ந்தோஷம் அடைந்து கண்ணிமைகளை மூடிக்கொள்வது
மாத்ரமேயன்றிச் சீக்ரமாக மெதுவான விரல்களையுடைய
கைகளாலும் கண்களை மூடிக்கொண்டனர். அப்பொழு
து மஹா பராக்ரமசாலிகளாகிய அவ்வானரர்கள் அங்ங
னம் கைகளால் கண்களை மூடிக்கொள்கையில், ஸ்வயம்ப்ர
பை அவர்களெல்லோரையும் ஒருநொடிப் பொழுதிலேயே
அந்தப் பிலத்தினின்று வெளியிற்கொண்டுவந்து சேர்த்த
னள். அனந்தரம் தர்மசாரிணியாகிய அந்தத் தாபஸி அ
ந்த வானரர்களெல்லோரையும் அந்த ஸங்கட ப்ரதேசத்
தினின்று வெளிப்படுத்தி அவர்களை ஆச்வாஸப்படுத்தி
'காஞ்சனமயமான வ்ருக்ஷங்களும் கொடிகளும் நிறைந்திருப்
பதும் அழகியதுமாகிய இது விந்த்யபர்வதம். இது ப்ரஸ்
ரவண பர்வதம். இது ஸகரர்களால் தோண்டப்பட்ட
மஹா ஸமுத்ரம். வானரதிலகர்களே! உங்களெல்லோர்க்
கும் சுபம் உண்டாகுமாக. என் க்ருஹத்திற்குப் போய்
வருகிறேன்' என்றனள். இங்ஙனம் மொழிந்து ஸ்வயம்
ப்ரபை அழகியதான அந்தப் பிலத்திற்குள் ப்ரவேசித்த
னள். அனந்தரம் அவ்வானரர்கள் நாற்புறத்திலும் கர்ஜி
த்துக்கொண்டு பயங்கரமான அலைகள் நிறைந்ததும் பய
ங்கரமாயிருப்பதும் அக்கரை தெரியாததும் வருணனுக்
கு ஸ்தானமுமாகி விளங்கும் மஹா ஸமுத்ரத்தைக் கண்
டனர். மயன் தன் விசித்ரசக்தியால் எப்படிப்பட்டவர்க்
கும் புகக்கூடாதபடி நிர்மித்த அந்தப் பிலத்தில் வானரர்

கள் திரிந்துகொண்டிருக்கும் பொழுதே, ராஜனுகிய ஸுக்ரீவன் ஏற்பதித்தின கெடுவாகிய மாதம் முழுவதும் கடந்துபோயிற்று. அனந்தரம் அம்மஹா பராக்ரமசாலி கள் அப்பொழுது விந்ய பர்வதத்தில் வ்ருக்ஷங்கள் நன் கு புஷ்பித்திருக்கப் பெற்ற தென்மேற்கு மூலையாகிய ஓர் தாழ்வரையில் உட்கார்ந்து சிந்திக்கத் தொடங்கினர். அனந்தரம் அவ்வானரர்கள் வலத்த ருதுவில் பலிக்கத் தகுந்த மாமுதலிய வ்ருக்ஷங்கள் நன்கு புஷ்பித்துப் புஷ்ப பாரத்தினல் விளங்கும் நுனிகளுடன் கூடிப் பலவாயிரங் கிளைகள் நிரம்பப்பெற்று விளங்குவதைக்கண்டு, காலம் மிகவும் கடந்து சென்றதற்கு ஸுக்ரீவனல் பயம் நேரு மென்று மிகவும் சங்கித்தனர். அவர்கள் வஸந்தருது ஸமீபித்த தென்றும் அப்பொழுது சிசிரருது நடக்கிறதெ ன்றும் ஒருவரோடொருவர் விசாரித்துத் தெரிந்துகொ ண்டு, ஸுக்ரீவன் சொல்லியனுப்பின ப்ரகாரம் ஸீதை யைக் காணுமபாலும் அவன ஏற்பதித்தின கெடுவாகிய மாதம் கடக்கையாலும் இப்படி தமது பரோபகாரங்களெ ல்லாம் பாழாகையில் பயந்து தரையில் வீழ்ந்தனர். அனந் தரம் ஸிம்ஹரும் போலும் வ்ருஷபம்போலும் பெருத்த தோள்களையுடையவனும் பருத்து நீண்ட புஜங்களுடைய வனுமாகிய யுவராஜன் அங்கதன் மிகவும் ப்ரஜ்ஞையால், அவ்வானரர்களில் வயது சென்றவர்களும் சிஷ்டர் களுமாகிய வானரர்களை மதுரவசனத்தால் அழைத்து அவரவர்களைத் தகுந்தபடி கௌரவித்து 'வானரர்களே! கபிராஜனுகிய ஸுக்ரீவனது ஆஜ்ஞைப்படி காமல் லோரும் ப்ரயாணமாய் வந்தனம். காம் பிலத்திலிருக்கும் பொழுதே அவன் ஏற்படுத்தின கெடுவாகிய மாதம் முழு வதும் கடந்துவிட்டது. உங்களுக்கு இது தெரியவில்லை யா என்ன? காம் அற்பசி மாதம் முதற்கொண்டு கா

லங் கணைக்கிட்டு அந்தந்தக் கார்யங்களுக்கு நியமிக்கப் பட்டிருக்கின்றனம். ஸுக்ரீவனது ஆஜ்ஞையால் ப்ரயாண மாய்வந்தனம். ஏற்படுத்தினகாலமும் கடந்துபோயிற்று. இனிச் செய்யவேண்டிய கார்யம் எது? விசாரிப்பீர்க ளாக. நீங்கள் ஸுக்ரீவனது நம்பிக்கைக்குப் பாத்ரமாயி ருப்பவர்; நீதி மார்க்கத்தை நன்றாக அறிந்தவர்; ஸ்வா மியாகிய ஸுக்ரீவனது ஹிதத்திலேயே ஆஸக்தியுடைய வர்; எல்லாக் கார்யங்களிலும் ஸமர்த்தர்; உங்களில் எவ னுக்காவது கார்யத்தை ஸாதிப்பதில் ஜகத்தில நிகரான வன ஒருவனும் இல்லை. உங்கள் பௌருஷம் ஸமஸ்த திக் குகளிலும் ஸுப்ரஸித்தமாயிருப்பது. ஸுக்ரீவனது ஆ ஜ்ஞையைப்பற்றி நீங்கள் என்னை முன்னிட்டுக்கொண்டு புறப்பட்டு வந்தீர்கள். நாம் வந்த கார்யம் நிறைவேறுமல் கெடுவையுங் கடத்திவிட்டோம். ஆகையால் இனிச் சாக வேண்டியவர்களே. இதற்கு ஸந்தேஹம் இல்லை. வானரர் தலைவனாகிய ஸுக்ரீவனது கார்யத்தைச் செய்யாமல் எவ ன் ஸுகம் பெறுவான்? ஸுக்ரீவன் தானே ஏற்படுத்தின கெடு கடந்துபோகையில், வானரர்களெல்லோர்க்கும் ப்ராயோபவேசமே யுக்தம. ஸுக்ரீவன் இயற்கையாகவே மிகவும் தீக்ஷ்ணமா யிருபபவன். அவன் ப்ரபுவாயிருக்கின் றனன். ஆகையால கெடுவைத்தவறின அபாதத்தோடு நாம் அவனிடம் போவோமாயின். தப்பாமல் எல்லோரை யும் தண்டிப்பனே யன்றி ஒருவனையாயினும் என்னன வும் மன்னிக்கமாட்டான். நாம் கெடுவைக் கடந்துபோவ து மாத்ரமேயன்றி ஸீதையின் ஸமாசாரத்தை அறியா மல போகையால் நம்மைக் கொல்லும் பாபத்திற்கே முயற் சிகொள்வா னன்றி மன்னிக்கமாட்டான். அதனால் நாம் பிள்ளைகளையும் பார்யைகளையும் தனங்களையும் க்ருஹங் களையும் கைவிட்டு இவ்விடத்திலேயே இப்பொழுதுப்பா

யோப வேசத்தினல் மரணம் அடைவது யுக்தம். காமின் கிருந்து போனவுடனே மஹாராஜா ஸுக்ரீவன் கொல்லா மல் விடமாட்டான். இது நிஜம். அங்கு ஸுக்ரீவனுல் னவ்விதத்திலும் நிகரில்லாதபடி கோரமாக வதிக்கப்படி வதைக்காட்டிலும், இங்கேயே ப்ராயோபவேசத்தினல் மரணம் அடைவது நல்லது. 'உன்னை யுவராஜனுகச் செய்த ஸுக்ரீவன் பிடித்துக் கொல்வானே' என்கிறீர் களோ? எனக்கு பௌவராஜ்யத்தில் ஸுக்ரீவன் பட்டங் கட்டவில்லை. எவனுக்கும் எள்ளளவும் மனம் நோகும்ப டியான கார்யங்களைச் செய்யாத மஹாராஜன் ராமன் எனக்குப் பட்டாபிஷேகம் செய்தனன். ஸுக்ரீவன் முன் னமே என்மேல் பகையுடையவனுகையால் என்மேல் தப் பைக் கண்டவுடனே என்னைக் கொல்லவேண்டுமென்று கெட்டியாக நிச்சயமுற்றவனுகித் தீக்ஷண தண்டனை விதி த்து என்னைக்கொலவான். நான் கிஷ்கிந்தையில ஸுக்ரீ வனல் என் பானன்களை முடித்துக்கொள்கையில, என் ஸ்னேஹிதர்க ளெல்லோரும் அந்த வ்யஸனத்தைப் பார்த்து வருந்தும்படி செய்தால் எனக்கு ப்ரயோஜனம் யாது? இங்கேயே புண்யமான ஸமுத்ரக்கரையில் ப்ரா யோப வேசஞ்செய்து ப்ரானன்களை விட்டுவிடுகிறேன்' என்றனன். யுவராஜனுகிய குமாரன் அங்கதன் மொழிந்த அந்த வார்த்தைகளைக்கேட்டு அந்த வானரோத்தமர்க ளனைவரும் மன இரக்கமுண்டாகும்படி 'ஸுக்ரீவன் இய ற்கையாகவே க்ரூரன். ராமனை ப்ராணதயகியின்மேல் மிகுந்த ஆஸக்தியுடையவனுகையால் காம ஸீதையைக் காணுமலே திரும்பித் தன்னிடம் வரக்கண்டு, அவன் ராமனுக்கு ப்ரியமாக, அவன் விரும்பினபடி கம்மைத் தப் பாமல் கொன்றுவிடுவான். இவ்விஷயத்தில் ஸந்தேஹ மில்லை. இவ்வளவே யன்றி அபராதஞ் செய்தவர்க்குத்

தம்ப்ரபுவினிடம் போவதே யுக்தமன்று. ஸீதையைத் தேடி அவளது வ்ருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்வோமாயின், வீரரான ஸுக்ரீவனிடம் போவோம். இல்லையாயின இங்கேயே ப்ராணன்களைவிட்டு யமன்வீட்டிற்குப் போவோம்' என்றனர். அங்ஙனம் பயந்திலால் வருந்தியிருக்கின்ற வானரர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டுத்தாரன் 'துக்கித்தது போதும். உங்களுக்கு இஷ்டம் உளதாயின், எல்லோரும் இந்தப் பிலத்தில புகுந்து வஸித்திருப்போம். இது மாயையால் நிர்மிக்கப்பட்டதல்லவா? ஆகையால் இதற்குள் புகுவது எவர்க்கும் ஸாத்யமன்று. மேலும், இதில் வருக்ஷங்களும் ஜலங்களும், போஜ்ய த்ரவ்யங்களும் பானத்ரவயங்களும் ஸம்ருத்தமாயிருக்கின்றன. ஆகையால் இங்கு நாம் ஸுகமாயிருக்கக் கூடும். இங்கு நமக்குத் தேவேந்த்ரனாலாவது ராமனாலாவது ஸுக்ரீவனாலாவது என்னளவும் பயம் உண்டாகாது' என்றனன். அங்கதனுக்கு அனுகூலமாகத் தாரனுங் கூடச் சொன்னதைக் கேட்டு, வானரர்களெல்லோரும் ஸந்தோஷமுற்றவராகி 'எங்ஙனம் செய்தால் நமக்கு ஹிம்ஸை உண்டாகாதோ, அங்ஙனம் சீக்ரமாக ஏற்பாடு செய்வீர்களாக' என்று மொழிந்தனர். ஐம்பத்துமூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஹனுமான் அங்கதனுடைய மதத்தைக் கண்டித்து ஸுக்ரீவனிடம் போகலாமென்றுரைத்தல். }

அனந்தரம் சந்த்ரன்போல் காந்தி விளங்கப் பெற்றதாரன் அங்ஙனம் சொல்வதுகேட்டு ஹனுமான் 'இனி ஸுக்ரீவனது வானராராஜ்யத்தை யெல்லாம் அங்கதன் தப்பாமல் பறிப்பான்' என்று நினைத்தனன். ஹனுமான்

வாலிகுமாரனாகிய அங்கதனை [1] க்ரஹணம் தாரணம் முத லிய எட்டுக் குணங்கள்பொருந்திய புத்தியுடையவ னென் றும் [2] நான்குவகைப்பட்ட பலமுடையவனென்றும் [3] தேச காலஜ்ஞதை முதலிய பதினாறு குணங்களால் ப்ரகாசிப் பவனென்றும் கினைத்தனன். சந்த்ரன் சுக்லபக்ஷம் முத் லாகக் காந்தியின் மிகுதி மேன்மேலும் வளரப்பெறுவது போல் க்ரமமாக இடைவீடின்றித் தேஜஸ்ஸும் பலமும் பராக்ரமமும் வளரப்பெற்றுப் புத்தியில் ப்ருஹஸ்பதியைப் போன்று பராக்ரமத்தில தனது தக்ஷனை நிகர்த்து, ஒருக்கால் ஹிதமுபதேசிக்கும் சுக்ரனது வசனத்தைக் கேட்கின்ற தேவேந்த்ரன்போல், தாரனது வசனத்தைச்

---

1 இவகு 'ஹ்ரஹணம் தாரணம் சைவ ஸ்மரணம் பாதிபாஹகம்! ஊஹோஹாபோஹோ ஹாயவிஜ்ஞானம் தத்த்வஜ்ஞானம் சயோ-குணாஃ' என்னும் ப்ரமாணத்தைக காண்க. விஷயத்தை அறிதல, அதைநெஞ் சில் நிறுத்தல், அதை மறவாதிருத்தல; அதைப் பிறரறியக் கூறுதல், அதற்கு வேண்டிய அர்த்தஸஞ்சயக் கூட்டிக்கொளளல், அதற்கு விருத்தமான அபசகத்தைக் கழிதல, அதன் ஸ்வரூபஸ்வபாவங்களை உணாதல, அதை உளளபடி அறிதல் ஆகிய இவை புத்திகுணங்க ளாம்.

2 பாஹுபலம் மந்த்ரபலம் உபாயபலம் தந்துபலம் என்னும் நான்கு வகைப்பட்ட பலமுடையவன்.

3 பதினாறுகுணங்களாவன.—'தேஶகாலஜ்ஞதா தார்ட்யம் ஸர்வகலேஶ ஸுநிஷ்டதா! ஸர்வவிஜ்ஞானிதா தாக்ஷ்யமுபாயஜ்ஞத்வம் ஸுவ்ரதமநதபதா! அவிஸம்வாதிதா ஸௌசம் ஶக்திஜ்ஞத்வம் கதஜ்ஞ தா! ஶரணாகதவாத்ஸல்ய மமர்ஷத்வமசாபலம்' என்று சொலலப் பட்டனை. தேசகாலஙகளை அறிதலும், வலிவும், ஸமஸ்த கஷ்டங்க ளையும் பொறுத்திருத்தலும், எலலாம் உணர்தலும், வல்லமையும், ப்ர யத்னமும், ஆலோசனையை வெளிப்படுத்தாமலும, அபத்தங் கூறு மையும, சூரத்வமும், பிறருடைய வலவமை பறிதலும, பிறாசெயத ஞ்றிை பறவாமையுட, சரணம் அடைந்தவரிடத்தில ப்ரீதியும், கோபமும, சாபலமிலலாமையும் ஆகிய இவையே.

செவியுற்றுப் பர்த்தாவாகிய ஸுக்ரீவனது கார்யத்தில் பரிச்ரமப்பட்டிருக்கும் ஸர்வ சாஸ்த்ரஜ்ஞராகிய அங்கதன் ஸுக்ரீவரேறு வேறுபடாமல் அவனுக்கு அனுகூலனாம்படி ஹனுமான் நீதிகளைச் சொல்லத் தொடங்கினன். ஹனுமான் ஸாம தான பேத தண்டோபாயங்களில் மூன்றாவதாகிய பேதோபாயத்தைக் கொண்டு, பேச்சில் வல்லமை விளங்க, அந்த வானரர்க ளெல்லோரையும், அங்கதனது அபிப்ராயத்தினபடி அதப்பிலத்தில் புகுந்திருந்து காலத்தைக் கழிக்கும் விஷயத்தினின்று வேறுபட்டு வரும்படிக்குச் செய்தனன். வானரர்களெல்லோரும் மனம் வேறுபட்டிருக்கப்பெற்ற பின்பு அந்த ஹனுமான கோபஸ்வரூபமாகிய தண்டோபாயத்தை அவலம்பித்து அதற்குத்தகுந்த பயங்கரமான பல வாக்யங்களைச்சொல்லி அங்கதனுக்கும் பயத்தை விளைவித்தனன. 'அங்கத! நீ யுத்தத்தில் உன் தந்தையைக்காட்டிலும் மிகவும் வல்லவனல்லவா? உன் தந்தையைப்போல் கபிராஜ்ய பாரத்தையெல்லாம் திடமாக வஹிக்க வல்லவன். குரங்குகளில் தலைவனே! இது தவிர, வானரர்கள் எப்பொழுதும் சஞ்சலமான மனமுடையவர். இவர்கள் பார்யைகளையும் பிள்ளைகளையும் விட்டு உனது ஆஜ்ஞைக்கு உட்பட்டு எள்ளளவும் பொறுத்திருக்கமாட்டார்கள். உன்னெதிரில் சொல்லுகிறேன். இந்த ஜாம்பவானும் நலனும் மஹாகபியாகிய ஸுஷேணனும் உன்னை அனுஸரித்துவரமாட்டார்கள். அப்படியே நானும் உன்னை அனுஸரித்து வரமாட்டேன். இந்த எங்களெல்லோரையும் ஸாம தான பேதங்களாலாவது தண்டோபாயத்தினாலாவது ஸுக்ரீவனிடமிருந்து உன் வசம் இழுத்துக்கொள்ள உன்னல் ஸாத்யமன்று. பலம் மிகுந்திருக்கப் பெற்றவன் அற்பபலனை விரோதித்துக்கொள்ளலாமென்று நீதியுணர்ந்தவர் சொல்வார்க-

ளையன்றித், தர்ப்பலன் பலவத்தேனுமி விரோதம் வைத்துக்கொள்வது அவர்க்கு ஸம்மதமன்று. பலஹீனன் ஆத்மரக்ஷணஞ் செய்துகொள்ள வேண்டியவனுகையால் அவனுக்குப் பலவத்தேனுமி விரோதம் வைத்துக்கொள்வது எள்ளளவும் யுக்தமன்று. ஸ்வபலம் இல்லாமற் போயினும் உனக்கு ரக்ஷகமாக எந்தக்குஹையை நினைக்கின்றுயோ, தான் 'இத்தப் பிலம' என்று சொல்லச் செவிப்பட்ட இந்த ருக்ஷபிலத்தைத் பிளப்பது லக்ஷ்மண பாணங்களுக்கு அற்பகார்யமே. (நீ ரக்ஷகமாக நினைக்கும் பிலத்தை லக்ஷ்மணபாணங்கள் அநாயாஸமாகப் பிளந்துவிடும்.) முன்பு இந்த்ரன் மயனைக்குறித்து இந்தப் பிலத்தின்மேல் வஜ்ராயுதத்தை ப்ரயோகித்துச் சிறிதே செய்தனன். த்வாரம் மாத்ரமே உண்டாகச் செய்தானன்றி மற்றொன்றுமில்லை. லக்ஷ்மணனே இவ்விதானையைக் கிழிப்பதுபோல் இந்தப் பிலத்தைக் கூரானபாணங்களால் பேதித்துவிடுவான். அப்படி நிகரில்லாத சக்தியமைந்த வஜ்ராயுதத்திற்கும் இடிக்கும் நிகரான பாணங்கள் பலவும் லக்ஷ்மணனிடம் இருக்கின்றன. அவை மலைகளையாயினும் பேதிக்கவல்லவை. அவைகளுக்கு இந்தப்பிலம் எவ்வளவு? பரந்தபனே! நீ ஸுக்ரீவனேடு விரோதித்து இந்தப் பிலத்திலிருக்க முயன்றவுடனே இவ்வானரர்களெல்லோரும் நிச்சயித்துக்கொண்டு உன்னைவிட்டுப்போயார்கள். இவர்கள் உன்னேடிருக்க ஆரம்பித்தவுடனே பார்யைகளையும் பிள்ளைகளையும் நினைத்துக்கொண்டு எப்பொழுதும் மனவருத்த முற்றவராகித் தகுந்த ஆஹாரங்கிடையாமையால் பசியுற்று மெத்தென்ற படுக்கையில் படுத்துக்கொள்பவராகையால் இங்குக் கடினமானபூமியின்மேல் படுக்கமுடியாமல் பல விதத்தில் வருந்தி உன்னைப் பின்னைவிட்டுப் போய்விடுவார்கள். அங்ஙனம் உன்

னை இவ்வானரர்கள் விட்டுப்போனபின்பு, நீ உன் மித்ரர்களையும் உன் ஹிதத்தை விரும்பும் பந்துக்களையும் பிரிந்து மிகவும் திகிலடைந்து காற்றில் பறக்கும் புல்லைக் காட்டிலும் குறைந்தவனாய். பயங்கரங்களும் பகைவரை உருமாய்க்க வல்லவைகளும் மஹாவேகம் அமைந்தவைகளும் அணுக முடியாதவைகளுமாகிய லக்ஷ்மணனது பாணங்கள், ராஜன் சொன்ன கார்யத்தைச் செய்யாதிருக்கிற உன்னைத் தப்பாமல் கொன்றுவிடும். நீ எங்களுடன் வந்து வணக்கமுடையவனாகி எப்பொழுதும் போலே இருப்பாயாயின், அப்பொழுது மாத்ரமே ஸுக்ரீவன் தனக்குப் பின்புக்ரமமாக உனக்கு வானராஜ்யத்தில் பட்டங்கட்டிவான். உன் சிற்றப்பனாகிய ஸுக்ரீவன் தர்மஸ்வபாவன்; பிறர்க்கு ஸந்தோஷஞ் செய்யுந் தன்மையன்; வ்ரதங்களில் திடமாயிருப்பவன்; பாபமற்றவன்; செய்த ப்ரதிஜ்ஞையைத் தவறமாட்டான்; உன்னை ஒருநாளும் எள்ளளவும் வதிக்க மனங்கொள்ளமாட்டான். அங்கத! இவ்வளவேயன்றி, ஸுக்ரீவன் உன் தாய்க்கு மிகவும் ப்ரியமாயிருப்பவன்; ஆகையால் அவளது ப்ரியத்தையே விரும்பிக்கொண்டிருப்பான். அவன் ப்ராணங்களும் அவளதினங்களே! நீ அவளது குமாரன். ஆகையால் தனக்கும் குமாரனேயன்றி வேறிலலை. (அவனுக்கு வேறு ஸந்தானமும் இல்லை.) ஆகையால் அவனிடம் நீ போகக்கூடும்' என்றனன். ஐம்பத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

அங்கதாதி வானரர்கள் ப்ராயோபவேசஞ் செய்தல்.

ஹநுமான, வணக்கமுடையதும் தர்மம் பொருந்தியதும் ராஜபக்தி யமைந்ததுமாகிய வாக்யத்தைமொழி

யக்கேட்டு, அங்கதன் 'ஸ்திரபுத்தியும் ஆத்மசுத்தியும் [1]அத்தக்காண சுத்தியும் [2]தயாளுத்வமும் [3]நிஷ்காபட்ய மும் பராக்ரமமும் காம்பீர்யமும் ஸுக்ரீவனிடத்தில் சிறி தும் ஸம்பவிக்கமாட்டா. தன்னுடன் பிறந்தவனும் தனக் குப்பெரிதோபனுமா யிருப்பவன் பிழைத்திருக்கும் பொழு தே அவனுடைய ப்ரியபார்யையும் பட்டமஹிஷியும் தர் மத்தின்படி தனக்குத் தாயுமா யிருப்பவளை, உலகத்தவர் ஜுகுப்ஸைபடுமபடி கைப்பற்றினனே. மேலும், மஹா னுபாவனாகிய தனது அண்ணன் யுத்தத்திற்காகப் பிலத் தில் புகுந்திருக்கும்பொழுது 'நீ இந்தப் பிலத்தின் வாச லில இருந்து பகைவன் தப்புவித்துக்கொண்டு இதினின் றும் வெளிப்படுவானையின், எதிர்த்துத் தடுப்பாயாக' என்று தனகு நியமித்துப் பிலத்தில் புகுந்தபின்பு பெரும்பாறை யால் அந்தப் பிலதுதின தவாரத்தை மூடிவிட்டானே! இப்படி நிலைதக்கிடமா யிருப்பவனும் த்ரோஹியுமாகிய ஸுக்ரீவனுக்கு எப்படி தர்மம் தெரியும்? தான் கையைப் பிடித்துகொண்டு ஸத்யஞ்செய்த ராமனை, வாலியைக் கொன்று தனக்கு உபகாரஞ்செய்த பெரும்புகழோனையும் கூட ஸுக்ரீவன் மறந்தானே! இப்படிப்பட்டவன எவன் செய்த உபகாரத்தை நினைப்பான்? 'ஸீதனகனை வரவ ழைத்து ராமனிடம் தன்றியைக் காண்பிக்க வில்லையா' எனகிறீர்களோ? அவன லக்ஷ்மணனுககுப் பயந்து அத லால ஸீதனையைத்தேட நமமை நியமித்தானே யன்றிப் பயங்கரமான அதர்மத்திற்குப் பயதனறோ! அப்படிப்பட் டவனிடத்தில் தர்மம எது? இப்படிப்பட்ட பரமிஷ்ட னும [4]கருதகனனுமாகிப் பூர்வம் தனக்குச்செய்த உபகா ரத்தை நினைப்பது மின்றிச் சஞ்சலசித்தனுமாகிய ஸுக்

---

1 மனநினைத்தி. 2 தயையுடன் இருதலை.
3 கபடமிலலாமலிருத்தல. 4 நன்றியிலலாதவன்.

ரீவணிடத்தில், அவன் குலத்தில் பிறந்தவனும் பிழைக்க வேண்டுமென்னும் நினைவுடையவனும் பூஜ்யனுமாகிய எவனுக்கு நம்பிக்கை உண்டாகும்? ஸுக்ரீவன், குணமுடையவனாயினும்குணமில்லாதவனாயினும் தன் புதல்வனை ராஜ்யத்தில் ஏற்படுத்துவானேயன்றிப் பிறனை வணங்கிய நான் எள்ளளவும் பிழைத்திருக்கக்பொருன். நான் முதலிலேயே என் தாய் விரோதித்த ஹிம்ஸையால் அபராதஞ் செய்தவனாயினன். அதிலும், அவனுடன் விரோதித்துக்கொண்டு ருக்ஷபிலத்தில் இருக்கவேண்டுமென்று நான்செய்த ஆலோசனையும் வெளிபாய்விட்டது. மேலும் ப்ரபு மந்த்ராதிசக்திகளுமிலலாதவன். இப்படிப்பட்ட நான் அநாதனைபோல் பலமற்றவனைக் கிஷ்கிந்தையுள் புகுவேனைபின் எபபடி ஜீவித்திருக்கப் போகிறேன? ஸுக்ரீவன் மறைவாக வஞ்சனஞ் செய்பவனும் க்ரூரனும் [1]காதுகனுமானகையால் ராஜ்யத்தைப்பற்றி என்னைராஹஸ்யமாகத் தண்டிக்கத் தொடங்கிக் கயிற்றிற்கட்டியாவது உறிபோடுவித்தாவது கொன்றுவிடுவான். உறியில் அகப்பட்டு மரணம் அடைவதைக் காட்டிலும் ப்ராயோபவேசத்தினால் மரணம் அடைவதே எனக்கு மேலாகத் தோற்றுகின்றது. ஆகையால எனக்கு அனுமதி கொடுத்து நீங்களெல்லோரும் க்ருஹத்திற்குப் போவீர்களாக. நான் உங்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்கிறேன் கேளுங்கள். நான் கிஷ்கிந்தாபுரிக்கு வரமாட்டேன். இங்கேயே ப்ராயோபவேசத்தினால் ப்ராணன்களை விடுகிறேன். நான் கிஷ்கிந்தைக்குவந்து மரணமடைவதைக்காட்டிலும் இங்கு மரணம் அடைவதே நலம். பஸிஷ்டர்களான ராமலக்ஷ்மணர்களைப் பார்த்து எனக்குப்பதிலாக நமஸ்காரஞ்செய்து க்ஷேமம் விசாரிக்கவேண்டும். வானரேந்த்ரனும் எனது சிற்றப்பனுமான

---

1 ஹிம்ஸிப்பவன்.

கிய ஸுக்ரீவனைப் பார்த்தும் நீங்கள் எனக்குப் பதி லாக நமஸ்கரித்து க்ஷேமத்தையே விசாரிப்பீர்களாக. சிற்றன்னையாகிய ருமையைப் பார்த்து ஆரோகயமும் க்ஷேமமும் விசாரிக்கவேண்டும். என் தாயான தாரை யைத் தகுந்தவார்த்தைகளால் ஸமாதானப்படுத்தவேண் டும். என் தாய் தாரையை நினைத்துக்கொண்டால் மிக வும் மன இரக்கம் உண்டாகின்றது. இயற்கையாகவே அவள் புதல்வனிடத்தில் மிகுந்த ப்ரீதியும் ஆதரமும் உடையவள். இனி நான் இங்கு முடிவதைக் கேட்பாளா யின் உடனே ப்ராணன்களை விடுவாள். இது ஸ்பஷ்டம்" என்றனன். அங்கதன் இவ்வளவு மொழிந்து அந்த வ்ரு த்த வானரர்களுக்கு நமஸ்காரஞ் செய்து மனவருத்த துடன் ரோதனஞ் செய்துகொண்டு பூமியின்மேல் தர்ப் பங்களைப் பரப்பிக்கொண்டு படுத்தனன். அங்கதன் அங் ஙனம் படுப்பதுகண்டு மற்ற வானரோத்தமர்கள அனைவ ரும் வருத்திக் கண்களி னின்று வெகுநீர்பெருகப் பெற்று ரோதனஞ் செய்தனர். அவர்கள் ஸுக்ரீவனை நிந்தித் துக்கொண்டும் வாலியைப் புகழ்ந்துகொண்டும் அங்கத னைச் சூழ்ந்துகொண்டு எல்லோரும் ப்ராயோபவேசஞ் செய்ய நிச்சயித்தனர். அத்த வானரச்ரேஷ்டர்கள் வாலி புத்ரனிய அங்கதனுடைய மதத்தை அறிந்து இங்ங ணம் மரணம் அடைவதே நலமென்று நினைத்துத் தாமும் ப்ராயோபவேசஞ் செய்து ப்ராணன்களைவிடவிரும்பி அங் கு ஜலம் எடுத்து ஆசமனஞ்செய்து ஸமுத்ரத்தின வடக ரையில தெற்கு நுனியாகத் தர்ப்பங்களைப் பரப்பிக் கிழக் குமுகமாகப் படுத்துக்கொண்டனர். ராமன் வனத்திற்கு வருவதையும், தசரதன மரணம் அடைவதையும், ஜனஸ் தானத்தில் கரதூஷணர்களின் வதத்தையும், ஸீதாப ஹரணத்தையும், ஜடாயுவதத்தையும், யுத்தத்தில் ராம

ணல் வாலி அடிபட்டதையும், ஸுக்ரீவன் கெடுவைக் கட
க்து வெறுமனே யிருப்பதற்கு ராமன் கோபித்துக்கொ
ண்டதையும், அனந்தரம் ஸீதையைத்தேட ஸுக்ரீவன்
வானரர்களை அனுப்பினதையும், தமக்கு ப்ராயோபவே
சமென்னும் பயம் பராப்தமானதையும் ஆகிய இவைமுத
லாக நடந்தவற்றை யெல்லாம் அவ்வானரர்கள் சொல்லிக்
கொண்டிருந்தனர். அங்ஙனம் பெரிய பர்வதசிகரம்போ
ன்ற அம்மேலான வானரர்கள் சப்தம் உண்டாகும்படி
சொல்லிக்கொண்டு பதித்துக்கொள்கையில், மேற்கிளம்
பின மேககர்ஜனைபோன்ற அவர் செய்கிற அத்த த்வனி
யால் அம் மஹாபர்வதத்தின் குஹைகள் முழுவதிலும்
பெரிய ப்ரதித்வனி உண்டாயிற்று. ஐம்பத்தைந்தாவது
ஸர்க்கம் முற்றிற்று.

ஸம்பாதி வருதலும், ஸம்பாதியைப்பார்த்து
வானரர்கள துக்கவெம்பாவதணைந்
செய்தலும்.

அவ் வானரர்கள் அத்தப் பர்வதத்தில் ப்ராயோப
வேசத்திற்காகப் பதித்திருந்த இடத்திற்குக் கழுகு ராஜ
னெய ஸம்பாதி வரதைதாடங்கினன். ஜடாயுவுக்கு அண்
ணனும் பல பொருஷங்களால புகழ்பெற்றவனும ஸ்ரீமா
னும் சிரஞ்சீவியுமாகிய ஸம்பாதியென்னும் கழுகுராஜன்
விந்த்யபர்வதத்தின் குஹையினின்று புறப்பட்டி, அங்கு
ப்ராயோபவேசஞ்செய்த வானரர்களைப்பார்த்து ஸந்தோ
ஷமுற்றவனாகி 'உலகத்தில் தெய்வமானுஷபனைகளுக்குத் தப்
பாமல போகக்ஷேமங்களை நடத்திக கொண்டிருக்கும்.
வெகுகாலங்கழிந்தது இபபொழுது, அது இதத்தின்
பண்டத்தைதனகளுக்குவற்பத்திற்று ஆனது பற்றியே, நா
னை இதை உத்தேசித்துப் போகாதிருப்பினும், இதுவே
னென்னிடமவந்து சேர்ந்தது. உத்தமர்களான இதவான



1933. ஸமபாதியைக்கண்டு வானரர்கள் பயப்படுதல.

ரர்களை ஒன்றொன்றுகப் பிடித்துக் கொன்று கொன்று பக்ஷிக்கிறேன்' என்று அவ்வானரர்களைப் பார்த்து மொழிந்தது. அங்ஙனம் ஸம்பாதி ஆஹாரத்தின் பொருட்டுப் போரசையுடன் மொழிந்த வார்த்தையைக்கேட்டு அங்கதன் மிகவும் திகில் அடைந்து ஹனுமானை பார்த்து வானரர்களாகிய நம் மெல்லோரையும் பாழ்செய்யும்பொருட்டு ஸீதையென்னும் வ்யாஜத்தினால் ஸூர்யபுத்ரனுகிய ஸாக்ஷாத்யமனே இவ்விடம் வந்தனன்பார். ராமனது கார்யத்தைச் செய்து முடித்திலோம். ராஜாவாகிய ஸுக்ரீவனது ஆஜ்ஞையையும் நிறைவேற்றவில்லை. இதற்குள் இவ்வானரர்கள் ஸீனைவர்க்கும் இங்ஙனம் வருமென்று முன்பு நினையாத இந்த விபத்து நேரிலென்று ஸம்பவித்ததே! கழுகு ராஜனுகிய ஜடாயு ஸீதைக்குப்ரியஞ்செய்ய விரும்பி ஜனஸ்தானத்திற் செய்த கார்யத்தை யெல்லாம் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்லவா! அந்த ஜடாயுவைப் போலவே ஸமஸ்தப்ராணிகளும் தர்பக்ஷத்துக்கருங்கூட கம்மைப்போல் ராமனுக்குப்ரியஞ் செய்வதற்காக ப்ராணன்களையுந் துறக்கின்றன. ப்ராணிகளெல்லாம் ஸ்நேஹத்திற்கும் கருணைக்கும் உட்பட்டு ஒவ்வொன்றும் ராமனுக்குத் தனித்தனியே உபகாரஞ் செய்கின்றன. தர்மஜ்ஞனுகிய அந்த ஜடாயு ராமனுக்கு உபகாரஞ் செய்வதற்காக ஸந்தோஷத்துடன் தேஹத்தைவிட்டானனைகையால் அவன் ராமனுக்குப்ரியஞ்செய்தவனாயினன். நமும் ராமகார்ய நிமித்தமாகத் திரிந்து திரிந்து மிகவும் இளைப்புற்றுப் பிழைப்பில் ஆசையைத் துறந்து, புகக்கூடாத இந்த ப்ரதேசங்களில் வந்திருக்கின்றனம். இவ்வளவிலும் ஸீதையைப் பார்த்தவரல்லோம். ராமகார்யத்தின் பொருட்டுகழுகுராவணனோடு யுத்தஞ்செய்து மரணம்அடைந்தகருத்ராராஜனுகிய ஜடாயுமாத்ரம் ஸுக்ரீவபயத்தில் நம்

மைப்போல் அகப்படாமல் அதினின்று தப்புவித்துக்கொ
ண்டு பரமகதியைப்பெற்று ஸ்வர்கம் அடைந்தனன். ஜடா
யு மரணம் அடைந்ததனலும் தசரதன் காலஞ்சென்றதன
லும் ராவணன் ஸீதாதேவியை எடுத்துக்கொண்டுபோன
தனலும் வானரர்களுக்கு இப்பொழுது ப்ராணலக்ஷ
ம் உண்டாயிற்று. ராமலக்ஷ்மணர்கள் ஸீதையோடு வன
வாஸஞ் செய்ததும், ராமபாணத்தால் வாலி அங்ஙனம்
ஹதனானதும், ராமன் கோபத்தினல் ஜனஸ்தானத்தி லு
ள்ள ராக்ஷஸர்க ளெல்லோரையும் அங்ஙனம் வதித்து
முடித்ததும் ஆகிய இவ்விகாரங்களெல்லாம் தசரதன்
கைகேயிக்கு வரங்கொடுத்ததனல் வந்தன' என்றனன்.
மஹாமதியாகிய அந்தக்கழுகுராஜன், அங்கதன சொன்
னதுக்கநுகூலமான வார்த்தைகளைக்கேட்டு வானரர்களெ
ல்லோரும் பூமியில் வீழ்ந்திருபபதையும் பார்த்து மனது
மிகவும் கலங்கப்பெற்றுத் தீனஞ்சி இங்ஙனஞ் சொல்லத்
தொடங்கினன். ஐம்பத்தாறுவது ஸர்க்கம்முற்றிற்று.

ஸம்பாதிக்கும் வானராகளுக்கும் ஸமபாஷணம்

அனந்தரம் கூரானமுகமுடைய அந்த ஸம்பாதி அப்
பொழுது அங்கதன சொன்ன வார்த்தைகளைக் கேட்டுப்
பேரொலியுடன் 'எனக்கு ப்ராணன்களைக்காட்டிலும் ப்ரி
யமெகிய என்தம்பி ஜடாயு ஹதனனென்று என்மனம்
நடுங்கும்படி பேரொலியுடன எவரே சொல்லுகின்றனன்.
அவன் யாவன்? ஜனஸ்தானத்தில் ஜடாயுவுக்கும் ராவ
ணனுகுகும் யுத்தம் எப்படி கேர்ந்தது? வெகுகாலங்கடக்
தபின்பு இப்பொழுது என் தம்பியின்பேரைக் கேட்கப்
பெற்றேன். நீங்கள் என்னைப் புகக்கூடாத இத்தப் பர்வ
த சிகரத்தினின்று நீங்களிருக்கு மிடத்திற்கு இறக்க
வேண்டுகிறேன். குணஜ்ஞனும் பல பராக்ரம கார்யங்க

னால் புகழ்பெற்றவனுமாகிய என் தம்பியின்பேரை மிக வும் நெடுநாள் கழித்தபின்பு உங்கள்மூலமாய்க் கேட்க கேர்ந்ததற்கு மிகவும் ஸந்தோஷித்தனன். வானரோத்த மர்களே! ஆகையால் ஜனஸ்தானத்தில் வாஸஞ் செய்திரு ந்தஎன் தம்பிஜடாயு எந்நனம்வதிக்கப்பட்டானேனை அதன் விவரத்தைதக்கேட்க விரும்புகின்றேன். பெரியோர்களுக்கு ப்ரியஞ்செய்பவனுகிய ராமன் எவனுக்கு ப்ரீதிக்கிடமான பெரிய குமாரனே, அப்படிப்பட்ட தசரதன் என் தம்பிக்கு எப்படிஸ்னேஹிதனுயினன்? சத்ருக்களை அழிக்கவல்லவர் களே! ஸஹ்யகிரணங்களால் எனது இறகுகள் கொளுத் தப்பட்டனவாகையால் எனக்கு உங்களருகே வரச்சக்தி யில்லை. இம்மலே மேலிருந்து நீங்களிருக்குமிடத்திற்கு இற ங்கவிரும்புகின்றேன்'என்றனன். ஸம்பாதி மொழிந்த வார் த்தை சோகத்திஞல் ஹீனஸ்வரமாயிருந்தது. அப்படியி ருப்பினும் அவ்வானரர்கள், அவன் தம்மை ஹிம்ஸிப்பா னென்று சங்கித்தவராகையால் அதைக் கேட்டும் எள்ள வும் நம்பவில்லை. ப்ராயோபவேசஞ் செய்திருக்கின்ற அ வ்வானரர்கள் நமபிக்கையுண்டாகப பெருமையன்றிக்கே அதற்கு விபரீதமாக அநதக்கழுகுராஜனைப் பார்த்து 'இது நம்மெல்லோரையும் பக்ஷித்துவிடும்' என்று பயங் கரமான அபிப்ராயங் கொண்டனர். மேலும், அவ்வான ரவீரர்கள் 'நாம் மரணத்தை விரும்பியே ப்ராயோபவே சஞ் செய்தனம். இது இப்பொழுது நம்மைப் பக்ஷித்துவி டுமாயின், நாம் சீக்ரமாக இஷ்டஸித்தியைப் பெற்று ப்ர யோஜனங் கைகூடப்பெறுவோம்' என்று இங்ஙனம் எல் லோரும் நினைத்தனர். அப்பொழுது அங்கதன் பர்வத சிகரத்தினின்று ஸம்பாதியை இறக்கி அவனைப் பார்த்து 'பக்ஷி! மஹா பராக்ரமசாலியும் தார்மிகனுமாகிய எம்பா ட்டன் ருக்ஷராஜஸ்ஸென்னும் வானரன் இருந்தனன். அவ

ணுக்கு நூறுகோடிபுருஷர்களின் பலமுமுடைய வாலியென் றும்ஸுக்ரீவனென்றும் இரண்டுபின்னாகள் உண்டாயினர். என் தகைதையாகிய வானராராஜன் வாலி பராக்ரமகார்யங் களால் உலகத்தில் ப்ரஸித்தி பெற்றிருந்தனன். இக்ஷ்வா கூவம்சத்து ராஜாக்களுடையதாகிய ஸமஸ்த பூமண்டல த்திற்கும் ப்ரபுவும் மஹாரதனும் செல்வப்பெருகுடைய வனுமாகிய தசரதகுமாரன் ராமன் தந்தையினுஜ்ஞை யைத் தலையால் வஹித்துத் தர்மமார்க்கத்தில் நிலின்று தம்பி லக்ஷ்மணனும் பார்யையாகிய ஸீதையும் தொடர்ந் துவரப் பெற்றுத் தண்டகாரண்யத்திற்கு வந்தனன். அவ ன் ஜனஸ்தானத்திலிருக்கும்பொழுது அவன பார்யையா கிய ஸீதையை ராவணன் பலாத்காரஞ் செய்து அபஹரி த்துக்கொண்டு போயினன். ராவணன் ஸீதையை ஆகாய வழியாகக்கொண்டு போகுங் தருணத்தில் ராமனது தந் தைக்கு நண்பனும் கழுகுராஜனுமாகிய ஜடாயுமாத்ரம் கண்டனன். பிறகு ஜடாயு யுத்தத்தில ராவணனை ரதமற் றவனாகச் செய்து மைதிலியை எடுத்துக்கொண்டுபோக வொட்டாமல் நிறுத்திக் கடைசியில் இளைப்புற்றுக் கிழவ னாகையால் ராவணனல் அடிக்கப்பட்டனன். அனந்தரம் அவன் ராமனல் ஸத்ஸங்காரம் பெற்று உத்தமகதியை அ டைந்தனன். பினபு ராமன மஹாபலபராக்ரமனும் என சிற்ற ப்பனுமாகிய ஸுக்ரீவனுடன் ஸ்னேஹஞ் செய்துகொ ண்டு என் தந்தையாகிய வாலியை வதித்தனன். ஸுக்ரீ வன், தானும் தன் மந்த்ரிகளுமாக என் தந்தை வாலியி டம் வைரம் வைத்துக்கொண்டிருந்தானைகயால, ராமன் வாலியை வதித்து ஸுக்ரீவனுக்கு வானராராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ் செய்வித்தனன். அந்த வானர நாதன் அந்த ராமனல் வானராராஜ்யத்தில் பட்டாபிஷேகம் பெற் று ஸமஸ்த வானரோத்தமர்களுக்கும் ராஜனயிருக்கின்ற

ணன். அவனது ஆஜ்ஞைபின்படிக்கே காங்கள் வந்திருக்கின்றனம். காங்கள ராமனுக்காகவே அவனுஜ்ஞையின்படி அவவவ்விடங்களில எவ்வளவு தேடிப் பார்க்கிலும் ராத்ரியில ஸூர்யகாந்தி அகப்படாததுபோல் ஸீதாதேவி அகப்படவேயில்லை. அங்ஙனம் காங்கள் மிகுந்த ஜாக்ரதையுடன் தண்டகாரண்யம முழுமையும் தேடித்திரிக்கது, தெரியாமைபால் தர்மசாரிணியாகிய ஸ்வயம்ப்ரபையின் திறந்த வாயிலபுடைய பிலத்துள் ப்ரவேசித்தனம். மயன் தன விசித்ர சக்திபலத்தைக் கொண்டி நிர்மித்த அத்தப் பிலத்துள் காங்கள் திரிதுகொண்டிருக்கையில், அங்கேயே எங்களுக்கு ராஜனாகிய ஸுக்ரீவன் ஏற்பாடு செய்பத கெடுவாகிய மாதம் கடந்துபோயிற்று. நாங்களெல்லோரும் மஹாராஜா ஸுக்ரீவனது ஆஜ்ஞையின்படி செய்யவேண்டியவர். இப்பொழுது அவன் விதித்த வ்யவஸ்தையை அதிக்ரமித்தவராகையால் அவனிடம் போகமுடியாமல பயப்பட்டு ப்ராயோபவேசஞ் செய்தனம். அப்படிப்பட்ட மஹாவீரனாகிய ராமனும் லக்ஷ்மணனும் ஸுக்ரீவனும் எங்கள் மீது கோபமுறறிருக்கும்பொழுது காங்கள் அவ்விடம் போனாலுமாயின, ஒருவனையிலும் எள்ளளவும் பிழைக்கவல்லவனல்லன்' எனறனன். ஐம்பத்தேழாவதுஸர்க்கம் முற்றிற்று.

ஸம்பாதி ஸீதையிருக்குமிடத்தை வானராகளுக்குக கூறுதல.

அத ஸம்பாதி, இங்ஙனம ப்ராணன்களைவிட முயன்றிருக்கிற வானரர்களின துக்க வசனத்தைக் கேட்டுத் தானும் துக்கித்தவனாக கண்ணீர் பெருக்கிக்கொண்டு அவர்களை நோக்கிப் பேரோலியுடன் 'வானரர்களே! நீங்கள் யுத்தத்தில் பலவந்தனாகிய ராவணனால் அழிக்கப்பட்

டதாகச் சொன்ன ஜடாயு என் தம்பி. ராவணன் என் தம்பியை வதித்தானென்று கேட்டபொழுதும் நான் கிழவனாகி இறகுகளை இழந்திருக்கையால் அதையுங்கூடப் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிருக்கின்றது. ராவணனைக்கொன்று என் தம்பியின் பகையைத் தீர்த்துக்கொள்ள எனக்கு இபபொழுது சக்தி இல்லாமற்போயிற்றே! என் செயவேன்? முனபு வ்ருத்ராஸுரவதம் நடந்தபொழுது நாங்கள் அண்ணன் தம்பிகளிருவரும் ஒருவர்க்கொருவர் வேகாதிசயத்தைப் பரீக்ஷிக்க விரும்பி ஆயிரங் கிரணங்களோடு ஜ்வலிக்கின்ற ஸூர்யனது ஸமீபத்திறகுப் போயினம். நாங்கள் மண்டலாகாரியாகச் சுழித்துத தினந்துகொண்டு ஆகாயமார்க்கத்தில வெகுதூரம் கடந்து போயினம். அனந்தரம் ஸூர்யன ஆகாய மத்யத்திற்கு வருகையில் ஜடாயு ஸூர்யனுடைய வெப்பத்தைப் பொறுக்கமுடியாமல் வருத்தமுற்றனன். என் தம்பி அங்ஙனம் ஸூர்யகிரணங்களால பீடிக்கப்படுவது கண்டு நான் ப்ராத்ருஸ்னேஹத்தினல் மிகவும் தழுதழுப்புற்று என இறகுகளால் ஸூர்ய கிரணங்கள் அவன மேல்படாதபடி மறைத்தனன. வானோரததமர்களே! நான இறகுகள் தீயப்பெற்று இதத விதய பர்வதத்தில் வீழ்ந்தனன். நான் இங்கேயே வாஸஞ்செயவேகாண்டு இறகுகளில்லாமையால் மற்றெவ்விடத்திற்கும் போகவாமுடியாமையால் என் தம்பியின ஸமாசாரம் ஒன்றுமே எனக்குத் தெரிய வில்லை' என்றனன். ஜடாயுவின தமையன் ஸம்பாதி அங்ஙனஞ் சொலலுகையில், அப்பொழுது யுவராஜனும் மஹா ப்ராஜ்ஞனுமாகிய அங்கதன் அவனைப் பார்த்து 'நீ சொனனதெல்லாம் கேட்டேன். நீ எங்கள் ஜடாயுவுக்குத் தமையனையின், உனக்குத் தெரியுமாறல் அந்த ராவணனிருக்குமிடத்தைச் சொல்லுவாயாக. ராக்ஷஸராஜனை

கிய அந்த ராவணன் தான் செய்யுங் கார்யத்திலில் விரோ
யும் அனர்த்தத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. அப்படிப்
பட்ட மூர்க்கன் இருக்குமிடம் ஸமீபமோ, தூரமோ,
உனக்குத் தெரிந்திருக்குமாயின், எமக்குச் சொல்வா
யாக' என்றனன். அனந்தரம் மஹா தேஜஸ்வியும் ஜட
யுவின் தமையனுமாகிய ஸம்பாதி வானரர்கள் ஸந்தோ
ஷிப்பிக்கும்படி தனக்குத் தகுந்த வார்த்தைகளைச் சொல்
லத் தொடங்கி 'வானரர்களே! நான் கழுகு, அதிலும்
இறகுகள் எரியப்பெற்றவன்; மிகுந்த வயோதிகத்தால் வீர்யம்
குறையப்பெற்றவன். நான என செய்யமுடியும்? ஆயினும்
ராமனுக்கு வார்த்தை மாத்ரத்திலாவது என்னாலான
மேலான ஸஹாயத்தைச் செய்கிறேன். வருணனுக்குக்
கீழுள்ள அதலாதி லோகங்களையும் த்ரிவிக்ரமனு
கிய விஷ்ணுவே தவன அளந்த ஊர்த்வ லோகங்களையும்
தேவாஸுரர்களது யுத்தங்களையும் அம்ருத மதனத்தை
யும் பார்த்திருக்கின்றனன் இது ராமனது கார்யமாகை
யால் நான உங்களெல்லோர்க்கும முன்னதாகச் செய்ய
வேண்டியவனாயிருக்கின்றனன். ஆனால கிழத்தனமையால்
என் தேஜஸ்ஸு குறைந்துவிட்டது. என் ப்ராணன்களும்
தேஹலஸ்திபகதங்களும் கட்டித் தளர்ந்திருக்கின்றன.
அழகு மிகுந்திருக்கப்பெற்றவளும் ஸமஸ்த ஆபரணங்க
ளாலும் அலங்கரிக்கப்பட்டவளுமாகிய ஓர் யௌவனப்
பருவமுடையமடந்தையை, துராத்மாவாகிய ராவணன்
எடுத்துக்கொண்டுபோகக் கண்டனன். அத்தயுவதி 'ராமா
ராமா!' என்றும், 'லக்ஷ்மண லக்ஷ்மண' எனறும் முறை
யிட்டுக்கொண்டும் ஆபரணங்களை வாங்கி எறிந்துகொண்
டும் ராவணனிடமிருந்து விடுவித்துக்கொள்ள அவயவங்
களை உதறிக்கொண்டும் இருக்கக் கண்டனன். பர்வதத்
தின் நுனிமேல் ஸூர்யகாந்தி வ்யாபிப்பது போலும், மே

கத்தின மேல் மின்னல் விளங்குவதுபோலும் கறுத்த ராக்ஷஸன் மேல் அப்பெண்மணியின் மேலான பட்டு வஸ்த்ரம் ப்ரகாசித்தது. ராமனது பேரைச் சொல்லுகையால் அப்பெண்மணியே ஸீதையென்று நிஸ்சயிக்கிறேன். இனி ராவணனிருக்கும் இடத்தைச் சொல்லுகிறேன. கேட்பீர்களாக. ராவணனென்னும் அந்த ராக்ஷஸன் தேவ விப்ரவஸ்ரவஸின புதல்வன்; குபேரனுடைய தம்பி. அவன் லங்கையென்னும் நகரத்தில் வாஸஞ் செய்கின்றனன. இங்கிருந்து நாறுயோஜனதூரத்தில் ஸமுத்ரத்தில் ஓர் த்வீபம் இருக்கின்றது. அதில் அழகியதான லங்கையென்னும் பட்டணம் உளது. அதை ரமணீயமாக விச்வகர்மா நிர்மித்தனன். அதற்குப் பொன் திண்மதிள்களுடைய விசித்ரங்களான பொன் வாசற்படிகள் விளங்கும். ஸூர்யன் போல் தகதகவென்று ப்ரகாசிக்கின்ற பெரிய மதில் அதைச் சுற்றிக்கொண்டிருக்கும். அதலங்காபுரத்தில் ராவணனது அந்தப்புரத்தில் ஸீதாதேவி அகப்பட்டு முன்பு உடுத்தின பட்டு வஸ்த்ரத்துடன் ராக்ஷஸஸ்த்ரீகள் கண்காத்துக்கொண்டிருக்கையால் மிகவும் துக்கித்திருக்கின்றனள். ஜனகராஜன புதலவியாகிய ஸீதையை நீங்களெல்லோரும பார்ப்பீர்கள். லங்கை ஸமுத்ரத்தால் சுற்றிலும் சூழப்பட்டு [1] ஸுரக்ஷிதமாயிருக்கின்றது. ஆகையால நீங்கள் நிரம்பவும் நாறுயோஜன தூரமுடைய அந்த ஸமுத்ரத்தைத் தாண்டி அதன தென்கரையைச்சேர்ந்து லங்கையில் புகுவீர்களாயின் அங்கு ராவணனைக் காண்பீர்கள். வானரர்களே! நீங்கள் விரைவாக அந்த லங்கைக்கே போவீர்களாக. நீங்கள் அவ்விடம் சென்று ஸுகமாக ஸீதையைப்பார்த்துத் திரும்பிவருவீர்களென்று

---

1 ஸுரக்ஷிதமாயிருக்கின்றது - நன்றாகக் காக்கப்பட்டிருக்கின்றது.

கான் திவ்யஜ்ஞானத்திஞல் கண்டுகொள்கின்றனன். குலிங்கமென்னும் சில பக்ஷிகளும் அவைகளைப்போல் தான்யங்களால் ஜீவிக்கும் இதரபக்ஷிகளும் பூமிக்கு ஸமீபமான ஆகாயத்தில் முதல்மார்க்கத்தில ஸஞ்சரிக்கும். காக்ைகளும் செடிகளின் பழங்களைத்தின்று ஜீவிக்கும் பறவைகளும் அதற்குமேல் இரண்டாவது மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். நீர்க்காகங்களும் க்ரௌஞ்சப் பறவைகளும் அழுகுரல் பக்ஷிகளும் அதற்குமேல் மூன்றுவதுமார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். டேகைகள் அதற்குமேல் நான்காவது மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். கழுகுகள் ஐந்தாவது மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். பலமும் வீர்யமும் அமைந்து ரூபயௌவனங்கள் பொருந்தி விளங்கும் ஹம்ஸங்கள் அதற்குமேல் ஆறுவதுமார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். விநதையின் புத்ரர்களாகிய அருணகருட வம்சங்களில் பிறந்தவை அதற்கும் மேல் ஏழாவது மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். வானரோத்தமர்களே! நானும் என்குலத்தில் பிறந்தவர்களும் விநதாபுத்ரனாகிய அருணனில் பிறந்தவராகையால் எங்களெல்லோர்க்கும் ஏழாவது மார்க்கம். நான் இங்கிருந்தே ராவணனையும் ஸீதையையும் நன்றாகப் பார்க்கின்றனன். எப்படியெனில் எங்களுக்குக் கருடனுக்குப்போல் திவ்யத்ருஷ்டியும் அபபடியே மஹாபலமும் உண்டு வானரர்களே! ஆகையால் ஆஹாரபலத்தினாலும் ஸ்வபாவஸித்தமான சக்தியாலும் எங்களுக்கு எப்பொழுதும் குறைவின்றி நூறுயோஜனை தூரம்வரையில் பார்வை உண்டு. தெய்வத்தினால் கோழிகளுக்குப் பாதமூலத்திலேயே இரை ஸம்பாதிக்கும் வயாபாரம் விதிக்கப்பட்டிருப்பதுபோல் எமக்கு வெகு தூரதேசத்தில் ஆஹாரத்தைக் கண்டுபிடிக்கும்படி. பார்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸீதையை எடுத்துக்கொண்டுபோய் இக்கைக்கிட

மான கார்யத்தைதச்செய்த துராத்மாவாகிய ராவணனை ராமனுல் கொல்லுவிப்பீர்களாயின், நான் என் தம்பிவிஷயத்தில் அந்த ராவணனிடத்திலுள்ள பகையைத் தீர்த்துகொள்ளவேண்டிய கார்யமும் செய்தாற்போலாகும். ஸமுத்ரத்தைதத் தாண்டுவதற்கு உபாயமவேதனும் காண்பீர்களாக. நீங்கள் ஸீதையைக் கண்டு இஷ்டகார்யம் ஸித்திக்கப்பெற்றுக கிஷ்கிந்தையைச் சேருவீர்கள். ஸ்வர்க்கத்தை அடைந்த மஹாநுபாவனுகிய தம்பி ஜடாயுவுக்கு ஜலதர்பணனு செய்கிறேன். அதற்காக நீங்கள் எனனை வருணனுக கிருப்பிடமாகிய ஸமுத்ரத்தினருகில் கொண்டுபோக விரும்புகிறேன்'என்றனன். பிறகு மஹாபராக்ரம சாலிகளாகிய அவ்வானரர்கள் இறகுகள எரிக்கபடியால் அசக்தனும் பக்ஷிராஜனுமாகிய ஸம்பாதியை ஸமுத்ரக்கரையிலசேர்த்தது, அங்கு அவன் தமபிக்கு ஜலதர்ப்பணஞ் செய்தபினபு மீளவும் முன்பிருந்த இடத்திற்கே கொண்டுபோயச்சேர்த்து ஸீதையுடையவும் ராவணனுடையவும் ஸமாசாரத்தைதத தெரிந்துகொண்டு ஸகலதாவஷமுற்றனர். ஐம்பத்தெடடாவது ஸர்க்கம முற்றிற்று.

ஜாம்பவான வினவுகையில ஸம்பாதி
தன புத்ரனுகிய ஸுபார்ஸ்வன மூலமாய்
ராவணன ஸீதையை எடுத்துகொகா
ண்டுபோன வருத்தாந்தம் தனக
குத் தெரிடுமென்றுகூறுதல.

அனந்தரம அவ்வானரோத்தமர்கள் கழுகுராஜனுகிய ஸம்பாதி அம்ருதம்போல் மதுரமாக மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு மேனியில் மயிர்க்கூச்சலுண்டாகும்படி மிகுந்த ஸகலதாவஷம் அடைந்தனர. அனந்தரம் வானரர்களை யதிலாதிலும் மேலாகிய ஜாம்பவான் ஸமஸ்த வானரர்களும் தானுமாக உடனே பூமியினின்று

எழுந்து அந்த ஸம்பாதியைப் பார்த்து 'ஸீதை எங்கே இருக்கின்றனள்? அவளை எவன் எடுத்துக்கொண்டுபோயினன்? அப்படி போகையில் எவன் பார்த்தனன்? நீ இவ்விஷயத்தையெல்லாம் தெரியச்சொல்லவேண்டும். நீயே வானரர்களுக்குக் கதியாவாயாக. வஜ்ராயுதம்போல் இறைச்சலிட்டுக்கொண்டு மேல் விழும்படியான ராமபாணங்களுடையவும் லக்ஷ்மணன் தானே ப்ரயோகிக்கும் பாணங்களுடையவும் கோடுமையை எவன் மனத்தில் நினையாதிருக்கின்றான்' என்று விணவினன். வானரர்கள் ஸீதா வருத்தாகதத்தைக் கேட்பதிலேயே மனஆக்கமுற்று மிகுந்த ப்ரீதியுடன் தன்னை வினவுவதைக் கண்டு ஸம்பாதி ஸந்துஷ்டனாகி மீளவும் அவர்களை ஆச்வாஸப்படுத்தமுயன்று 'ஸீதையை ராவணன் எடுத்துக்கொண்டுபோனதை நான் எப்படிகேட்டேனே, எவன் எனக்குச் சொல்லினனே, அவ்வழகிய கண்ணுடைய பெண்பிள்ளை இப்பொழுது எங்கிருக்கின்றனளோ, அதையெல்லாம் இபபொழுது சொல்லுகிறன கேட்பீர்களாக. நான் வெகுயோஜனை விஸ்தாரமுடையதும் புகக்கூடாததுமாகிய இந்தப் பர்வதத்தில் வீழ்ந்து இங்கேயே வெகுகாலமாக பலபராக்ரமங் குறையப்பெற்றிருந்து இவ்வளவில் கிழவனையினன். நான் இப்படிப்பட்ட அவஸ்தை அடைந்ததைக் கண்டு பக்ஷிகளிற் சிறந்தவனாகிய என் புதல்வன் ஸுபார்ச்வனென்பவன் எனகக்குக் காலம் தவறாமல் ஆஹாரங் கொடுத்துப் போஷித்துவருவான். கந்தர்வகளுக்குக் காமம் மிகவும் தீவரமாயிருக்கும். ம்ருகங்களுகக்குப் பயம் மிகவும் தீவரமாயிருகக்கும். எங்களுக்கோ பசி மிகவும் தீவரமாயிருக்கும். என் புதல்வன் ஸுபார்ச்வன் ஒரு ஸமயத்தில், நான் மிகவும் பசியால் வருந்தி ஆஹாரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில்,

ஸுர்யன் அஸ்தமித்த பினபு மாம்ஸங் கொண்டுவராமல வெறுங் கையுடனே என்னிடம் வந்தனன். நான் பசியும் தாஹமும் மிகுதிருகக்பெற்று அதிலும் கிழவனைகையால் கோபித்தவனைகிப் பக்ஷிஸ்ரேஷ்டனைகிய எனகுமார்ஜன விரட்டினேன். அவன் எனக்கு எப்பொழுதும் ஸந்தோஷத்தை விளவிபபவனைகையால ஆஹாரமில்லாமையால் கோபித்திருக்கிற என்னை வெகுதூரம் மனனிக்கும்படி வேண்டித் தான வெறுமனே வரதத்தற்கு ஹேதுவை நடந்தபடியே சொல்லத்தொடங்கி 'எனனப்பனே! நான் எப்பொழுதும் போவதுபோலவே தகுதகாலத்தில மாம்ஸத்திற்காக ஆகாயத்தில் பறந்து சென்று மஹேந்ரபர்வதத்தின் த்வாரத்தை மறைத்துக்கொண் டிருந்தேன். ஸமுத்ரத்தில் பலவாகத்திரிகின்ற ஜந்துக்களைப் பிடிக்கும்பொருட்டு நாலைருவன் தலைவனைக்கி அவைகளின் வழியைக் குறுக்கே தடுத்துக்கொணடிருந்தனன். அந்த மலர்ந்த மைக்குவியல்போல் கறுத்த காந்தியுடைய எவனே வொருவன் ஸுர்யோதயம்போல ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்ற ஒரு பெண்பிள்ளையை எடுத்துக்கொண்டுபோகக் கண்டனன. நான ஆஹாரத்தை விரும்பினவனைகையால் அவவிருவரையும பார்த்து அவர்களையே ஆஹாரமாகப் பிடித்துக்கொள்ள நிசசயித்தனன். இதற்குள் அந்தப் புருஷன் வணக்கத்துடன கல்வார்த்தைகளைச் சொலலிக்கொண்டு எனனை 'விடுவாய்' என்று யாசித்தனன். நல்வார்த்தையுடன வேண்டுவோர்களை எவரும் எவ்விடத்திலும் அடிக்கமாட்டார்களல்லவா? எவர்களுமன்று; நீசர்களும் அடிக்கமாட்டார்களல்லவா? இனி என்னைப்போன்றவன் அடிக்கமாட்டானென்று சொல்லவேண்டுமோ?' அந்தப் புருஷன தன் தேஜோவிசேஷத்தினல் ஆகாயத்தைக் குறுகச்செய்ட

வண்போல் மிக்க வேகத்துடன் போயினன். அனந்தரம் ஆகாயத்தில் திரிகின்ற பூதங்கள என்னிடம் வந்து என்னைக் கொன்றுவித்தன. மஹர்ஷிகள் எனைப் பார்த்து அப்பா! நீ தெய்வாதீனமாகத் தப்புவித்துக்கொண்டு பிழைத்தனை. எப்படியோ இவன் உனைவிட்டுத் தன்[1] ரக்ஷியவர்க்கத்துடன் போயினன். ஆகையால் உனக்கு நன்மை ஆயிற்று. ஸந்தேஹம் இலலை' எனறனர். அனந்தரம் ஆகாயத்தில் திரிகின்ற ஸித்தர்கள் எனனுடன் இங்ஙனம் மொழிந்தனர். அந்தப் புருஷன் ராக்ஷஸர்களுக்கு ராஜாவாகிய ராவணனென்றும், ஆபரணங்கள் தரையில் வீழவும் பட்டுத்துணி நழுவவும் தலைமயிர்கள் அவிழ்ந்து கலையவும்பெற்றுச் சோகவேகத்தினால் வருந்தி ராமலக்ஷ்மணர்களின் பேரைச்சொல்லிக் கூவுகின்ற அந்த மடந்தை ஜனகராஜன் புதல்வியும் ராம பார்யையுமாவாளென்றும், அவன் அப்பெண்மணியை எடுத்துக்கொண்டு போகின்றானென்றும் எனக்குப் பின்பு தெரியவந்தது. இவ்வளவுபொழுது போனவிதம் இது' எனறு காலத்தை அறிந்தவர்களில மேன்மையுற்றவரான ஸுபார்ச்வன் மொழிந்தனன். அந்த ஸமாசாரத்தைக் கேட்டபின்பும் ராமன் நிமித்தமாகப் பராக்ரமத்தை நிறைவேற்ற எனக்குப் புத்தி உண்டாகவில்லை. நான் பக்ஷிபாகையால் எனக்கு இறகுகளே பலம். அந்த இறகுகள் போனபிறகு எந்தக் கார்யத்தையாயினும் எப்படி செய்வேன்? இறகுகள் போயினும் புத்தி நற்குணங்கள் அமைந்திருக்கையால் அதனால் நான் எவ்வளவு ஸஹாயஞ் செய்யக்கூடுமோ, அதைச் சொல்லுகிறேன். அதைக்கேட்டு உங்கள் பௌருஷமே அதற்கு ஆதாரமாகையால் உங்கள் பௌருஷபலத்தினால் அதை ஸாதித்துக் கொள்வீர்களாக. நான்

---

1 ரக்ஷிக்கவேண்டிய வஸ்துக்களின் கூட்டம்.

வார்த்தையாலும் புத்தியாலும் உங்களெல்லோர்க்கும் ஸஹாயஞ் செய்கினறனன். ராமனது கார்யம் என் கார்ய மேயன்றி வேறில்லை. இதற்கு ஸந்தேஹம் இல்லை. வானர ஸ்ரேஷ்டனாகிய ஸுக்ரீவன் தேவதைகளுக்கும் எதிரிட முடியாதவர்களும் மிகுந்த புத்தியுடையவர்களும் பலிஷ்டர்களும் கம்பீர மனமுடையவர்களுமாகிய உங்களை அனுப்பினனல்லவா? வீணனவர்களை அனுப்பினனல்லன். கூராகிக் கங்கபக்ஷிகளின இறகுகள் கட்டப்பெற்ற ராம லக்ஷ்மணர்களின் பாணங்கள் மூன்று லோகங்களையும் ரக்ஷிக்கவும் சிக்ஷிக்கவும் வல்லவை. ராவணன் மிகுந்த தேஜஸ்ஸும் சிறந்த பலமும் உடையவனெனிருப்பினும் இரு பபாணங்க. ஆயினும் நீங்கள் மிகவும் ஸமர்த்தர்களாகையால் உங்களுக்குச் செய்யமுடியாதது எதுவும் இல்லை. ஆகையால் ஆலஸ்யம் செயபவேண்டியதிலலை. புத்தியிற் சிறந்த உங்களைப்போனறவர் கார்யங்கள் வந்தபொழுது எள்ளளவும் தாமதஞ் செய்யார்களல்லவா?' என்றனன். ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ஸம்பாதி தன் இறகுகள தீய்ந்துபோனது முதலிய வ்ருத்தாந்தங்களைக கூறுதல். }

அனந்தரம் ஸம்பாதி ஜடாயுவுக்கு ஜலதர்ப்பணஞ் செய்து ஸ்னானத்தை முடித்துக்கொண்டபின்பு வானர யூதபதிகள் அந்தப பர்வதத்தில அவனைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். ஸமஸ்த வானரர்களும் தன்னைச் சூழ்ந்திருக்கபபெற்றுத் தன் ஸமீபத்தில உட்கார்ந்திருக்கினற அங்கதனைப பார்த்து ஸம்பாதி நிசாகரமுனி சொன்னபடி தனக்கு வானரர்களைப பார்க்க நேர்ந்ததற்கு நம்பிக்கையுடையவனாகி மிகுந்த ஸந்தோஷத்துடன் மீளவும் அவர்களை நோக்கி 'வானரர்களெல்லோரும் சப்தஞ்செய்

யாமல் மிக்க மனவூக்கத்துடன் கான் சொல்லும் வார்த்தையைக் கேட்கவேண்டும். கான் ஸீதாதேவியின் வ்ருத்தாந்தம் அறிந்தவிதத்தை உள்ளபடி சொல்லுகிறேன். கான் முன்பு ஸூர்யகிரணங்கள் அவயவங்களில் நிரம்பவும் படப்பெற்றுக் கொளுத்தப்பட்டவனாகி இந்த விந்த்யடவ்வதத்தின சிகரத்தில் அரண்யத்தில் வீழ்ந்தனன். பிறகு நான் ஆறுதினங்கள் கடந்த பின்பு கொஞ்சம் ப்ரஜ்ஞை உண்டாகப்பெற்று அப்பொழுதும் திடந்தப்பி மூர்ச்சையடைந்தவன் போல் பரவசனாகித் திசைகளை யெல்லாம் கண்டேனன்றி, அது எந்த ப்ரதேசமோ, கொஞ்சமும் எனக்கு அடையாளம் தெரியவில்லை. அனந்தரம் ஸமுத்ரதீரத்திலுள்ள பர்வதங்களையும் ஸமஸ்த நதிகளையும் ஸரஸ்ஸுக்களையும் வனங்களையும் ஸமுத்ரதீரத்தையும்கண்டு, இது இன்ன ப்ரதேசமென்று அடையாளந்தெரிந்துகொண்டனன். இது தக்ஷிண ஸமுத்ரத்தில் பக்ஷிகணங்கள் ஸதாதாஷித்துடன நிறைந்திருப்பதனாலும் குஹாமத்யங்களும சிகரங்களும் அமைந்த விந்த்ய பர்வதத்தின் ஓர் பாகமென்றும் நிச்சயித்துத் தெரிந்துகொண்டனன். இந்தப்ரதேசத்தில தேவதைகளாலும் நன்கு பூஜிக்கப்பட்டதும் பரிசுத்தமுமாகிய ஓர் ஆஸ்ரமம் இருந்தது. அதில் உக்ரதபஸ்வியாகிய நிசாகரென்னும் ஓர் மஹர்ஷி இருந்தனர். தர்மஜ்ஞர்களே! அம்மஹர்ஷி மரணம் அடைந்தபின்பு கான் அவரைவிட்டு ஒருவனே இந்த ப்ரதேசத்தில் வாஸஞ்செய்ய ஆரம்பித்து இபபொழுதைக்கு எண்பதினாயிரம ஸம்வத்ஸரங்களாயின. அனந்தரமான மிகவும் கஷ்டப்படடு மிகவும் இடைக்காயிருகினற விந்த்ய சிகரத்தினின்று மெதுவாக இழிந்து ரிஷிகளால் பறிக்கபபட்டு மொக்கையாகிக கூராயிருக்கின்ற தர்ப்பங்களையுடைய ஆப்ரம பூமிக்கு மிகவும் வருத்தத்துடன மீளவும் வந்து

சேர்ந்தனன். தான் அங்ஙனம் மிகவும் வருந்தி அக்காலத்தில் அதத நிசாகர மஹர்ஷியைக் காண விரும்பினன். ஏனெனில்—முன்பு தானும் ஜடாயுவும் பலதடவை அவரைத் தர்சனஞ் செய்து ஸேவித்திருந்தனம். அம்மஹர்ஷியின் ஆச்ரமத்தில் புஷ்பங்களாவது பலங்களாவது இலலாதவ்ருக்ஷமே கிடையாது. ஆகையால் அதத ஆச்ரமம் ஸமீபித்தவுடனே நல்ல வாஸனையுடைய காற்றுகள வீசின. அங்ஙனம் புண்யமாகிய அவ்வாச்ரமம் சேரதது ஓர செடியின் கீழ் பகவானகிய நிசாகரரைப் பார்கக விரும்பிக காத்திருந்தனன். அனந்தரம் ஸனனஞ்செயது[1] நிஜ தேஜஸ்ஸுடன விளக்கமுற்று வடதிசைமுகமாகி ஓருவராலும் அவமதிக்கமுடியாத அம்மஹர்ஷி என்னைக் கிட்டிவரக்கண்டனன். ஸமஸ்த பூதஙகளும் பரஹ்மதேவனைச் சுற்றிச் சூழ்ந்து பணிவதுபோல் அம்மஹரஷிையைக் கரடி களும் சாமரம்ருகங்களும் புலிகளும் ஸிம்ஹங்களுமயானை களும் ஸர்ப்பங்களும் சுற்றிப்பணிந்திருநதன பிறகு அம்மஹர்ஷி ஆச்ரமத்திற்குள் நுழைவது கண்டு, ராஜன் அயத்தப்புரம் புகுநதபினபு மநத்ரி முதலிய பலம் விடைபெற்றுப் போவதுபோல, அதத ஜநதுக்களெலலாம் தந் தமிடத்திற்குப் போயின. அம்மஹர்ஷி ப்ரீதியுடன என்னைப் பரர்த்து ஆச்ரமத்திற்குள் நுழைநதது மீளவும் கொஞ்சகோரங் கழித்து வெளிவநது தான் வந்தகார்யத்தை விசாரித்தனர். 'ஸௌமயனே! உன் தேஹத்திலுள்ள மயிரகள் [2]விகலமாயிருக்கையால் உன உருவமே தெரியாதிருக்கின்றது. மேலும் உன் இறகுகள் இரண்டும் அக்னியால் வெக்து உன் தோலெல்லாம் புண்ணுள்ளதாகப் புலப்படுகின்றது. தான், முன்பு வேகத்தில் வாயுவை நிகர்த்து ஸமு

---

1 தனது தேஜஸை.

2 இடைவெளியாகி அற்பமாயிருக்கையால்.

ஸ்த கழுகுகளுக்கும் ராஜர்களும் காமருபிகளும் அண்ணன் தம்பிகளுமாகிய இரண்டு கழுகுகளைப்பார்த்திருக்கின்றனன். ஸம்பாதீ! நீ அவற்றில் பெரியவனல்லையா? உன் தம்பி ஜடாயு. நீங்களிருவரும் மனுஷ்ய ரூபந் தரித்தவராகி என பாதங்களில் நமஸ்காரஞ் செய்துகொண்டிருப்பீர்கள். உனக்கு வயாதி ஏதேனும உண்டாயிற்று? இல்லையாயின இறகுகள எபபடி வீழ்ந்துபோயின? அல்லது எவரேனும் உனனைத் தணடித்தார்களா? எவர்? வினவுகினறேன். எனக்கு யதார்த்தத்தை மொழிவாயாக' என்று வினவினர். அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸம்பாதி தன் இறகுகள் வெந்துபோன
வ்ருதாந்தத்தை நிசாகர மஹர்ஷிக
ளுக சொல்லுதல

அனந்தரம், நான் முன்பின் பாராமல் முயன்று பயங்காரமாக எவர்க்குஞ் செய்யமுடியாமல் ஸஹ்யனைப் பின்னோடாகது போனதுமுதல் கடத்தின வருத்தாகதத்தையெல்லாம் அம்முனிவர்க்குச் சொலலினன. 'மஹானுபாவரே! இறகுகள் வெந்து என் தேஹமெல்லாம் புண்ணுமிருக்கையாலும் லஜ்ஜையால் இந்த்ரியங்களெல்லாங்கலங்கப் பெற்றிருக்கையாலும் மிகவும் இளைப்புற்றிருக்கையாலும் உமக்கு மறுமொழி கூற வல்லமையற்றிருக்கின்றனன். வீரர்களாகிய நானும் ஜடாயுவும் ஒருவர்மேல் ஒருவர் போட்டியிட்டுக்கொண்டு கர்வத்திணை உடம்பு தெரியாமல் ஒருவர்க்கொருவர் பராக்ரமத்தை அறிய விரும்பி ஆகாயத்தில் கிளமபிப் போயினம். நாங்களிருவரும் கைலாஸ பர்வத சிகரத்தில் ரிஷிகளின் முன்னிலையில் 'ஸஹ்யன் அஸ்தமயபர்வதம் போய்ச் சேரும் வரையில் அவனைப் பின்றொடர்ந்து கடக்கவேண்டுமென்று பத்தயம் வைத்திக்கொண்டு இருவரும் ஓரோகாலத்தில் ஆகாய

த்தில் கிளம்பினம். அனந்தரம் பூமியி லுள்ள நகரங்களெல்லாம் வேறு வேறுக எங்களுக்கு வண்டியின் சக்கரத்தளவு புலப்பட்டன. நாங்கள் வழியில் சிலவிடங்களில் வாத்யத்வனிகளையும் வேதகோஷங்களையும் செவியுற்றனம். மேலும் சிவந்த வஸ்தரங்களை உடுத்துக் கர்ணரு செய்கின்ற பல பெண்மணிகளைக் கண்டனம். நாங்கள சீக்ரமாக ஆகாயத்திற் கிளம்பி ஸரிர்யமார்க்கத்திற்சென்று கீழ்க் கண்விட்டுப் பார்க்கையில் நாங்களிருந்த அரண்யம் அப்பொழுது பசும்புல் தரைபோல் மிகவும் ஸூக்ஷ்மமாகப் புலப்பட்டது. பூமியில் நிறைந்திருக்கின்ற பர்வதங்கள் சிறிய கற்கள்போல் தோற்றின. பூமியி லுள்ள நதிகள் நுண்ணிய கயிறுகள்போல காணப்பட்டன. அப்பொழுது ஹிமவந்தமும் விந்த்யமும் பர்வதங்களிற் சிறந்த மேருவும் மதிவில் இருக்கும் யானைகளைபோல் பூமியில் ப்ரகாசித்தன. ஸரிர்யமார்க்கத்தில் ஸஞ்சரிக்கும்பொழுது எங்களுக்குத் தீவ்ரமாகப் புழுக்கமும் இளைப்பும் உண்டாகையேயனறிப் பயமும் மனமயக்கமும் கண்கள் இருளமூடப் பெற்று ஒன்றும தெரியாமல பயங்கரமான மூர்சனையும் உண்டாகத் தொடங்கின. இது தென திசையென்றும, இது ஆகனேயமென்றும, இது மேல்திசையென்றும், இது கிழகென்றும், இது வடக்கென்றும், திசைகள் சிறிதும் தெரியவில்லை. அந்தந்த ஸந்திவேசங்களோடு ஏற்பாட்டினிருந்த லோகமுழுவதும் அந்த ஏற்பாடெல்லாம் அழியப்பெற்று ப்ரளய காலாக்னியால கொளுத்தப்பட்டு உருமாய்ந்திருப்பதுபோல் புலப்பட்டது. என் மனம கலங்கித் தனக்காச்ரயமான கண்களினினறு விடுபட்டு மிகவும் அழிந்து நசித்தாற்போலிருந்தது. ஆகையால் என் பார்வையும் அழிந்துவிட்டது. மீளவும் வெகு ப்ரயத்னத்துடன் என்மனத்தைக் கண்களில் ஊன்றி

மிக்க ப்ரயாஸத்துடன் ஸூர்யஜனைக் கண்டனன். அப்பொழுது ஸூர்யன் எமக்குப் பூமியவ்வளவு ப்ரமாணமுடையவனைகப் புலப்பட்டனன். அனந்தரம் ஜடாயுவும் என்னேதெ சொல்லாமலே மெய்ம் மறந்து பூமியினமேல் விழுந்தொடங்கினன். அங்ஙனம் அவன் விழுவதைக்கண்டு நானும் சீக்ரமாக ஆகாயத்தினின்று என்னைக் கீழ்விழுவிட்டனன். ஜடாயுவை நான் என் இறகுகளால் மறைத்துக்கொண்டு வருவதுபற்றி அவன் கொளுத்தப்படவில்லை. நான் மாத்ரம் ஆகாயத்தினின்று விழும்பொழுது அனவதானத்தினல் கொளுத்தப்பட்டனன். ஜடாயு ஜனஸ்தானத்தில் விழுந்திருப்பானென்று சங்கிக்கின்றனன். நான்மாத்ரம் இறகுகள் வெந்து மூர்ச்சை அடைந்து இந்த விந்த்யபர்வதத்தில் வீழ்ந்தனன். என் இறகுகளையும் தம்பியையும் ராஜ்யத்தையும் பராக்ரமத்தையும் இழந்து இனி நான் ப்ராணன்களை வைத்திருக்கப்பொறேன். ஸர்வவிதத்திலும் சாகவேண்டுமென்றே எனக்கு விருப்பமாயிருக்கிறதாகையால இந்தப் பர்வத சிகரத்தினின்று வீழ்ந்து மரணம அடைகிறேன்' என்று மொழிந்தனன். அறுபத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

நிசாகரமுனி ஸம்பாதிகு இறகுகளமுளைக்கும ப்ரகாரத்தைக் கூறுதல.

'நான் இங்ஙனம் அம்முனிதிலகரிடம் விண்ணப்பஞ்செய்து மிகவும் வருந்தி ரோதனஞ்செய்தனன். அனந்தரம் அம் மஹானுபாவர் சிறிதுநேரம் த்யானித்து என்னைப் பார்த்து 'உனக்கு இறகுகளும் சிற்றிறகுகளும் ப்ராணன்களும் நேத்ரங்களும் பல பராக்ரமங்களும் மீளவும் புதிதாக உண்டாகும். முன்பு நான், வருங்காலத்தில் ஓர் பெரியகார்யம் நடக்கப்போகிறதென்று கேட்டிருக்கின்ற

னன். இதைத் தவமஹிமையால் தெரிந்துகொள்வது மாத்ரமேயன்றிப் பெரியோர் மூலமாகக்கேட்டும் தெரிந்து கொண்டிருக்கின்றனன. இக்ஷ்வாகு வம்சத்தில் தசரத னென்னும் ஓர் மன்னவன உளன். அவனுக்கு மஹா தேஜஸ்வியாகிய ஓர் புதல்வன ராமனென்பவன பிறக்கப் போகினறனன. தகாத, வனவாஸஞ் செய்வாயென்று ஆஜ்ஞைசெய்கையில, ஸத்யபராக்ரமனாகிய அந்தராமன் தம்பியாகிய லக்ஷ்மணனும் தானுமாக அரண்யத்திற்கு வருவான. தேவதானவர்களாலும் வதிக்க முடியாத ராக்ஷஸாதிபதியாகிய ராவணனென்பவன், ராமன் ஜனஸ்தானத்தி லிருக்கும்பொழுது அவனது பார்யையை அபஹரிக்கப்போகின்றனன. பஹுபார்யவதியும் பெரும்புகழுடையவளுமாகிய அந்த ஸீதை, தனக்கு ராவணன் ஆசைப்படத்தகுந்த பக்ஷியங்களையும் போஜ்யங்களையும் போகத்ரவ்யங்களையும் எவ்வளவோ கொடுத்து ஆசைப் படித்தப்பார்க்கிலும் மஹா பதிவ்ரதையாகையால் பர்த்தாவைப் பிரிந்து துக்கத்தில் மூழ்கியிருப்பதுபற்றி அவையெல்லாவற்றையும் எள்ளளவும் அனுபவிக்கமாட்டாள். இந்த்ரன், அவள் புசியாதிருப்ப தறிந்து தான் அவளுக்கு உத்தமமான திவ்யான்னங் கொடுப்பான். ஸீதை, அம்ருதத்தை நிகர்த்துத் தேவதைகளுக்கும் பெறமுடியாத அந்தத் திவ்யானனத்தைப்பெற்று இந்த்ரன் கொடுத்ததெனறு தெரிந்து, அதில் முன்பாகத்தை எடுத்து 'என் பர்த்தாவும் ப்ரபுவுமாகிய ராமனும் என் மைத்துனனன லக்ஷ்மணனும் ஜீவித்திருப்பார்களாயினும் அல்லது அவர்கள் மரணம அடைந்து [1] தேவத்வமபெற்றிருப்பார்களாயினும அவரிருவர்க்கும் இந்த அன்னம் சேருமாக' எனறு மொழிந்து பூமியின்மேல் வைப்பாள். ஸம்பாதி!

1 தேவலோகத்தை.

ராமனல் அனுப்பப்பட்ட வானரர்கள் அவளைத் தேடும் பொருட்டு வரப்போகின்றனர். நீ அந்த வானரர்களுக்கு ராமனது பட்டமஹிஷி பாக்ய ஸீதாதேவியின் வ்ருத்தாந்தத்தைச் சொல்லவேண்டும் நீ எல்லாவிதத்திலும் இங்கிருப்பதே நலம். இப்படி இறகுகளில்லாதவன் எங்குப் போகவல்லவனாய்? நீ இங்கேயே தேசகாலங்களை எதிர்பார்த்துகொண்டு வஸித்திருப்பாயாக. உனக்கு இறகுகள் மீளவும் உண்டாகும் உனக்கு இப்பொழுதே இறகுகள் உண்டாகும்படிக்குச் செய்ய நான முயற்சிகொள்ளேன். ஏனென்னில் நீ இங்கேயே இருப்பாயாயின், உலகங்கட்கெல்லாம் ஹிதத்தைச் செய்வாய். ராஜபுத்ரர்களாகிய அந்த ராமலக்ஷ்மணர்களின கார்யம உனக்குமாத்ரமேயன்றி ஸமஸ்த ப்ராஹ்மணர்களுக்கும் தேவதைகளுக்கும் முனிவர்களுக்கும தேவேந்த்ரனுக்கும் அவச்யம் செயயத்தக்கது. எனக்கும் அண்ணன்தமபிகளாகிய ராமலக்ஷ்மணர்களிடபபாக்க விருபபம் இருகினறதே யாயினுமம, இனி வெகுகாலம்வரையில பராணனகளை வைத்துக்கொண்டிருப்பது எனக்கிஷ்டமாயில்லை. ஆகையால் அதற்குள்ளேயே சரீரத்தை விடுவேன' என்று ஸமஸ்தத்வார்த்தங்களையும் அறிந்த அம்மஹர்ஷி இங்ஙனம் கூறினர். அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸம்பாதிக்கு இறகுகள முளைத்தலும், வானராகளுக்கு ஸம்பாதி செய்யவேண்டிய காரயத்தைக கூறுதலும்.

அம்மஹர்ஷி வாக்யங்களை உணர்ந்தவர்கள அனைவரிலும் தலைவராகையால இங்ஙனம இதுமுதலானவைகளும் இன்னும் மற்றவைகளுமாகிய பற்பல உரைகளைச் சொல்லி எனனைப் புகழ்ந்து எனக்கு அனுமதி கொடுத்துத் தான் ஆஸ்ரமத்தில புகுந்தனர. அனந்தரம் நான்

மெல்ல மெல்ல அந்தப் பர்வத குஹையினின்று நகர்ந்து விந்த்யபர்வதத்தினமேல் ஏறி உங்கள்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். அம்மஹர்ஷியின் வசனத்தை மனத்திலேயே வைத்துத் தேசகாலங்களை எதிர்பார்த்துக்கொண்டு இப்பொழுதைக்கு நிரம்ப நூறுஸம்வத்ஸரங்களைக் கடத்தினன. அந்த நூறு ஸம்வத்ஸரங்களைக் கடத்தினபின்பு நிசாகரமுனி மஹாப்ரஸ்தானஞ்சென்று ஸ்வர்க்கம அடைந்தனர். அதன்பிறகு எனக்குள் பலவாறாக உவாஸங்களைச் செய்துகொண்டு ஸகேதஹஜமுற்றும் பரிதாபத்திலை வருந்தியிருந்தனன். மரணம் அடையவேண்டுமென்னும்புத்தி உண்டாகும்போதெல்லாம் மஹர்ஷி மொழிந்த வார்த்தைகளை நினைத்து அதைவிட்டு ஸமாதானப்படித்திக்கொண்டிருப்பேன. 'உனக்கு மறுபடியும் இறகுகளும் பலமும வரப்போகின்றன' என்று கான் என் ப்ராணன்களை விடாமல காத்திருக்கும்படி எனக்கு அம்முனிவர் விளவித்த ஆசை, நனகு ஜ்வலிக்கின்ற அக்னிஜ்வாலை இருட்டைப் போக்குவதுபோல், என் துகத்தைப் போகஇக்கொண்டிருக்கும. கான துராத்மாவாகிய ராவணனுடைய பராக்ரமத்தை அறிந்தும் எனபுதலவனைப் பாரத்து 'நீ ராவணனைக் கொனறு ஸீதையைக காக்காமல் என் வநதனை?' என்று விரட்டினன். அந்த ஸீதாவிலாபத்தைக்கேட்டும் ராமலக்ஷ்மணர்க ளிருவரும் ஸீதையைப் பிரிநதிருக்கிறார்களென் றறிநதும் எனபுதல்வன் தசரதரிடம் ஸ்னேஹம் வைத்து ஸீதையை விடுவித்து எனக்கு ப்ரியஞசெய்யாமற் போயினன் என்று கூறினன். அப்பொழுது ஸம்பாதி அங்ஙனம் வானரர்களைப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே ஸமஸ்த வானரர்களின் கண முனனமே அவனுக்கு இறகுகள் முளைத்தன. அனந்தரம் ஸம்பாதி தன சரீரத்தில் சிவந்த



1955. ஸம்பாதி மீளவும் இறகுகள் முளைக்கப் பெற்று மேற்கிளம்புதல்.

இறகுகள் அமைந்த சிறைகள் முளைப்பதைக்கண்டு நிக நில்லாத ஆநந்தம் அடைந்து வானரர்களைப் பார்த்து மஹாநுபாவராகிய நிசாகரமுனிவரது ப்ரபாவத்தினால், ஸௌர்யகிரணங்கள் பட்டுத் தீபந்த ளன் சிறைகள் இப் பொழுது மறுபடியும் முளைத்தன. நான் பிளவனத்தி லிருக்கும்பொழுது எனக்கு எப்படிப்பட்ட பலமும் பௌரு ஷமும் பராக்ரமமும் இருந்தனவோ, அவையெல்லாம் இப்பொழுது எனக்கு உண்டாயிருக்கின்றன. நீங்கள்-எல் லாவிதத்திலும் ப்ரயத்னஞ் செய்வீர்களாக. தப்பாமல் ஸீதாதேவியைக் காண்பீர்கள். இதற்கு சந்தேஹமும் மற்றொன்றும் வேண்டாம். இதோ எனக்குச் சிறைகள் முளைத்தனவன்றோ இதுவே உங்களுக்கும் கார்யம் கைகூ டுமென்னும் நம்பிக்கையை விளைவிக்கின்றது' என்றனன். பக்ஷிச்ரேஷ்டனாகிய, அந்த ஸம்பாதி இங்ஙனம் ஸமஸ் த வானரர்களோடும் மொழிந்து ஆகாச ஸஞ்சாரத்தில் தன புதிய சிறகுகளுக்குள்ள பலத்தை ஆறிய விரும்பி ஆகாயத்திற் கிளம்பினன. வானர ப்ரதேஷ்டர்கள், ஸம் பாதி 'நீங்கள் ஸீதையைக் காண்பீர்கள்' என்றுமொழிந் ததைக் கேட்டு, அதற்கு நிதர்சனமாக அவனுக்கு மீள வும் சிறைகள் முளைத்ததையுங் கண்டு மிகுந்த ஸந்தோ ஷத்தினால் தெளிந்த மனமுடையராகிப் பராக்ரமத்தை உபயோகப்படுத்தி ஸீதாதேவியைக் காண்கையாகிற நன் மையைப் பெறுதற்கு ப்ரயத்னிப்பவராயினர். அனந்தரம் வாயுவைநிகர்த்த மஹா வேகத்தையுடைய அவ்வான ரோத்தமர்கள் பௌருஷத்தைக் கைப்பற்றி ஸீதாதேவி யைத் தேடமுயன்று அபிஜித்தென்னும் முஹூர்த்தம் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்து அம்முஹூர்த் தத்தில் தென்திசைமுகமாகப் போயினர். அறுபதாது மூன்றுவது ஸர்க்கம முற்றிற்று.

வானரர்களை ஸமுத்ரத்தினருகில் சேருதல்.

ஸிம்ஹத்தை நிகர்த்த பராக்ரமமுடைய அவ்வானர வீரர்கள் ஸம்பாதியின் வசனத்தினால் ஸீதை யிருக்கு மிடத்தைத்தெரிந்து ஸந்தோஷத்தினால் இப்படியும் அப்படியும் கிளம்பிக் குதித்தல்களைச் செய்துகொண்டு மிகவும் எல்லாரும் ஒன்றுகூடி ஸிம்ஹநாதஞ் செய்தனர். வானரர்கள் ஸம்பாதி சொன்னதைக் கேட்டு மிகவும் ஸந்தோஷம் அடைந்து ஸீதாதேவியைக்காண மனவிருப்பங் கொண்டு ராவணனது வாஸஸ்தானமாகிய லங்காத்வீபத்திற்குப் போகநினைத்து அதற்கு வழியாகிய ஸமுத்ரத்தைக்குறித்துப் போயினர். பயங்கர பராக்ரமர்களாகிய அவ்வானரவீரர்கள் அநந்த இடத்திற் சேர்ந்து ஸமஸ்த லோகங்களிலுமுள்ள எல்லாவஸ்துக்களும் நிறைந்திருக்கையால் பெரிதாகிய ஸமஸ்தலோகத்தையும் நிகர்த்த மற்றொரு லோகமோ என்னும்படி விளங்கும் ஸமுத்ரதீரத்தைக்கண்டனர். மஹா பலசாலிகளாகிய அவ்வானரவீரர்கள் தக்ஷிணஸமுத்ரத்தின் வடகரையைச் சேர்ந்து அங்கு இறங்கினர். அங்கு மிகவும் பெரியசரீரமுடையவைகளும் வாயைத் திறந்துகொண்டு விகாரமாயிருபபவைகளுமாகிய நாணவித பெருப் பருத்த ஜந்துக்கள ஜலத்தில் க்ரீடித்துக் கொண்டிருந்தன. அலைகளுமி அங்கு முழுவதும் நிறைந்து பயங்கரமாயிருந்தன. அலைகள் வீசுதலாலும் ஜந்துக்கள் திரிதலாலும் அந்த ஸமுத்ரம் ஓரிடத்தில் விலையாடுவதுபோலவும், அலையில்லாத மற்றோரிடத்தில் நித்ரைசெய்வதுபோலவும் புலப்பட்டது மேலும் அது சிலவிடங்களில பர்வதங்கள்போன்ற ஜலராசிகளால் சூழப்பட்டிருந்தது. பாதாளலோகத்தி லிருக்கும மேலான தானவர்களும் ஆங்காங்கு நிறைந்திருந்தனர். இந்நனம் காண்போர்களுக்கு மயிர்க்கூச்சலை விளைக்கி

ன்ற அம்மஹா ஸமூத்ரத்ததைக் கண்டு அவ்வானரவீரர் கள் திகில் அடைந்து வருத்தமுற்றனர். ஆகாயம்போல் அதிவிசாலமாகி அக்கரை காணப்படாதிருக்கின்ற ஸமுத்ரத்தைப் பார்த்து, எல்லோரும் ஒரே இடத்தில் திகிலுற்று 'இனி என்செய்யவேண்டும்' என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். வானரர் தலைவனாகிய அங்கதனவானரஸைனியல்லாம ஸமுத்ரத்தைப் பார்த்தவுடனே பயப்பட்டுச் சிந்தையிலாழ்ந்திருப்பதுகண்டு, பயந்திருக்கிற அந்த வானரர்களெல்லோரையும் தைர்யம் உண்டாகும்படி ஆச்வாஸபபடுத்தினன். அவன ஸமயத்திற்குத் தகுந்த மதியும் மஹா பலமும் உடையவனாகையால மிகவும் வருத்தமுற்றிருக்கின்ற அவ வானரவீரர்களை நோக்கி 'மனத்தில எள்ளளவும் வருத்தப்படவேண்டாம். வருத்தப்படுவதே பெருந்தோஷம். அதைக்காட்டிலும் பெரிய தோஷம் மற்றொன்றுமில்லை கோபித்திருக்கும் ஸர்பம் பாலனைக கொல்வதுபோல், துக்கம் புருஷனைகொன்றுவிடும். பராக்ரமத்தை உபயோகப்படுத்தவேண்டிய ஸமயத்தில் வருத்தம் உண்டாகுமாயின, அது புருஷனைக் கீழேதள்ளிவிடும். அங்ஙனம் தேஜஸ்ஸை குனறப் பெற்றவனுக்கு எந்தப் புருஷார்த்தமும் ஸித்திக்காது' என்றனன். அங்கதன் அனறிரவு கடந்தபின்பு வானரர்களில் பெரியோர்களுடன்கூடி ஸமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தைக் குறித்து மீளவும் ஆலோசனை செய்தனன். தேவேந்த்ரனைச் சூழ்ந்திருக்கும் தேவஸைனபோல் அங்கதனைச் சூழ்ந்திருகினற அவ்வானரஸைன ப்ரகாசித்தது. வாலிகுமாரன் அங்கதனும் ஹனுமானும் தவிர மற்றை எவன் அந்த வானரஸைனயை நிறுத்தவல்லவன்? அனந்தாம் பலைவரை அடக்குந் திறமையுடையவனும் செல்வப்பெருக்கனுமாகிய அங்கதன் அவ்

வானர வருத்தர்களாலும் அம் மஹா ஸேனையாலும் அனுமதிக்கப்பட்டு மிகவும் பொருளடங்கிய உரைகளைக் கூறத் தொடங்கி, இந்த ஸைன்யங்களுக்குள் மஹாதேஜஸ்வியாகிய எவன் ஸமுத்ரத்தைத் தாண்டுவான்? எவன் ஆங்ஙனம் தாண்டி லங்கையில் ஸீதாதேவியைக் கண்டு பகைவரை அடக்குந திறமையுடைய ஸுக்ரீவனை ஸதய ஸந்தனைச் செய்வான்? வானரர்களே! எவ்வீரன் நூறு யோஜனை தூரமுடைய ஸமுத்ரத்தைத் தாண்டிக் கார் யத்தை நிறைவேற்றிக்கொண்டு வந்து இந்த வானரர்கூட்டத் தலைவர்களனைவர்க்கும் ஸுக்ரீவனுல் நேரிட்டிருக் கிற மஹா பயத்தைப போகடவல்லவன்? எவனுடைய ப்ர பாவத்தினுல் நாம் கார்யஸித்தியை அடைந்து இங்கிரு ந்து ஸுகமாகக் கிஷ்கிந்தைக்குப்போய் நம் பார்யைகளை யும் புதல்வர்களையும் க்ருஹங்களையும் காண்போம்? எவ னுடைய அனுக்ரஹத்தினுல் நாம் மிகவும் ஸந்தோஷம் அடைந்து மஹா பலிஷ்டர்களாகிய ராமலக்ஷ்மணர்க ளின் ஸந்நிதானத்திற்கும மஹா பலஞகிய ஸுக்ரீவனது ஸந்நிதிக்கும் போவோம்? உங்களில் எவனையினும் நூறு யோஜனை தூரமுள்ள ஸமுத்ரத்தைத்தாண்ட வல்லவனை யின், அவன் இப்பொழுதே எமக்குச சீகரமாகப புண்ய மான அபயதக்ஷிணையைக் கொடுபபானுக' என்றனன். அங்கதன் சொனன வார்த்தையைக்கேட்டு எவனும் ஏதும் கூறவிலலை. அப்பொழுது அவ்வானரஸேனை முழு மையும் அசையாமல் சித்ரத்தில் எழுதப்பட்டதுபோலி ருந்தது. வானரோத்தமனுகிய அங்கதன மீளவும் அவ வானரர்களைப்பார்த்து 'நீங்களெல்லோரும பலிஷ்டாகி ளில் மேலாயிருப்பவர்; கௌரவமுடைய பெரியகுலத்தில் பிறந்தவர்; பூஜிக்கப்பட்டவர். ' வானரோத்தமர்களே! உங்களில் எவனும எப்பொழுதும் எவ்விடத்திலும் கடை



1959. அங்கதாதிகள் ஸமுத்ரம் தாண்டுவதில் தமக்குள்ள சக்தியை ஜாம்பவானுக்கு அறிவித்தல்.

யில் தடையுடையவ னல்லனே! எவரெவர்க்கு எவ்வெவ்வ ளவு தாண்டச் சக்தி உளதோ அதைச்சொல்லுங்கள்' என்றனன். அறுபத்துநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

{ வானராகள ஸமுதாய தாணுவதிலெ தமக குளள சகதியின் அளவைக கூறுதலெ. }

அனகதரம் அங்கதன சொனன வார்தனதையகேட்டு கஜன, கவாகஷன, கவயன, சரபன், கதமாதனன், மைநதன, த்விவிதன, ஸுஷேணன, ஜாமபவான ஆகிய இவர்களெலலொரும அங்கதனைப் பார்த்து ஸமுத்ர தாண்டவதில தகதமக்குள்ள பலொதலஸாஹஙகளை க்ரம மாக இங்ஙனம மொழிநதனர். அப்பொழுது கஜன 'நான பத்துயோஜனதூர தாண்டுவென' என்றனன. கவாகஷன் 'நான இருபதுயோஜனதூரம் தாண்டவல லென' என்றனன். அனகதரம் கவயன அவவானரர்களைப் பார்த்து 'வானரர்களெ! நான் முபபதுயோஜன தாண்டு வென' என்றனன. அனகதரம வானரதிலகணிய சரபன கபிகளைநொக்கி 'வானரர்களெ! நான நாற்பதுயோஜன தாண்டுவென' என்றனன, பிறகு மஹா தேஜஸ்வியாகிய கதமாதனன் நான ஐம்பதுயோஜனகள் தாண்ட லஸ் தேஹமிலலை' என்றனன். அபபொழுது மைநதன வானரர்களை நொகஙி 'நான் அறுபது யோஜனைகள் தாண்டுவென' என்றனன. பிறகு மஹா பராகரமணிய த்விவிதன 'நான எழுபது யோஜனைகள தாண்டுவென' என்றனன். வானரொதத்தமணிய ஸுஷேணன் அவவானர வீராகளைப பார்த்து 'வானரஸ்ரேஷ்டாகளெ! நான் என்பது யோஜனைதூரம தாண்டுவென' என்றனன். அவர்கள் அப்பொழுது 'அங்ஙனஞ் சொல்லிக்கொண்டிருகையில் ஸமஸ்த வானரர்களுக்குள் எல்லொரிலும்

வ்ருத்தனாகிய ஜாம்பவான் அவர்களிலோரிடத்தி லும் அனுமதிபெற்றுப் 'பூர்வம் எனக்கும் தாண்டுவதில் மேன்மை உண்டாயிருந்தது. ஆனால் அப்படியிருந்த நான் இப்பொழுது வயதுகாரம்பப்பெற்றுக் கிழவனாயினன். இப்பொழுது என்னவெனில், கிழவனாயினும் கபிராஜனாகிய ஸுக்ரீவனும் ராமனும் நிறைவேற்ற நிச்சயித்த இந்த கார்யத்தை எள்ளளவும் உபேக்ஷித்திருப்பது யுக்தமன்று. இப்பொழுது வயதுசென்று காலம்பேதித்திருக்கும்பொழுது எவ்வளவுதூரம் தாண்டவல்லமை யுனக்கு சொல்லுகிறேனென கேட்பீராகளாக. இப்பொழுது தொண்ணூறுயோஜனைகள் தாண்டுவேன. இந்நில ஸந்தேஹமில்லை' என்றனன. அனந்தரம் மீளவும் ஜாம்பவான் அவனானாகளைப் பாராது 'எனக்கு முன்பு நல்ல வயது காலத்தில் எனக்கு நடையிலுண்டான ஸாமர்த்யம் - இவ்வளவுமாத்ரமே அன்று. முன்பு பலிசக்ரவர்த்தியின யாகத்தில் மூன்றடி விஷ்ணுவே த்ரிவிக்ரமாவதாரஞ் செய்து மூன்றடிகளை அளந்துகொண்டிருக்கையில், அதற்குள் மூன்றுலோகங்களையும் வ்யாபித்த அந்த விஷ்ணுவின் உருவத்தை (அதாவது-பரப்ரஹ்மமான்டத்தை) ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவந்தனன. எனக்கு யௌவனகாலத்தில் பிறர் எவர்க்கும் இல்லாத விகரற்ற நடைவலிவு உண்டாயிருந்தது. அப்படிப்பட்ட நான இப்பொழுது கிழவனாயினன். இப்படிப்பட்ட நிலையில் எனக்குத் தாண்டுவதில் இவ்வளவே (அதாவது-நூறுயோஜனை தாண்டுமவ்வளவே) சக்தி இருக்குமென்று உளறிக்கின்றனன. ஆனால் லங்கைக்கு நூறுயோஜனை தாண்டவேண்டியிருக்கையால் இவ்வளவாலும் ப்ரயோஜனம் நிறைவேறாது' என்றனன். அனந்தாம யுவராஜனாகிய அங்கதன் மஹாப்ராஜ்ஞராகிய ஜாம்பவானிடம் அனுமதிபெற்று இனி

மேல் சொல்லவேண்டிய தன் சக்தியின் அளவை மிகவும் பொருளுடைக்கமுடைய வாக்யத்தினால் சொல்லத்தொட ங்கி 'நான இருத நூறுயோஜனைகளுந' தாண்டிப்போக வல்லவனே. ஆனால் மீளவும திரும்பிவரச் சக்தி இருக்கு மோ இராதோ நிசயமாகச் சொல்லவல்லனல்லேன'னனு றனன். வானரோத்தமனும் பேசவல்லவனுமாகிய ஜாம் பவான அங்கதனைப் பாத்து 'வானராகளிலும் [1] பல் லோகாகளிலும மேலாயிருபபவனே! தாண்டுவதில் உன சகதி இப்படிப்பட்டதென்று தெரிகதேயிருக்கின்றது. நீ நூறுயோஜனைகள மாதரமே அன்று. ஆயிரம் யோஜனை களாயினும தாண்டிப்போய்த் திரும்பிவர வல்லவனாய வாய். ஆயினும் இங்ஙனம [2] ப்ருதயர்கள ஸ்வாமியை அ னுபபும்படியான நயாயம எங்கும சொல்லபப-விலலையே! ஆகையால் ஸ்வாமியாகிய உனனை அனுபபுவது வேலைக் காரர்களாகிய எங்களுக்குத் தகுந்ததன்று.என்னனப்பனே! வானரதிலகனே! ப்ரபுவாயிருபபவன வேலைக்காரனை அ னுபபவேண்டியவனே யன்றி, எப்படி. பார்க்கிலும் அவன் வேலைக்காரனையிருக்கத் தகுந்தவனன்றலலவா? நீ எங்க ளுக்கு ஸ்வாமி. நீ இந்த எங்களெல்லோரையும் வேலைக்கு அனுப்பவேண்டுமேயன்றி, உன்னை நாங்கள் வேலைக்கு அனுப்பவது யுக்தமன்று. சத்ருகளை அழிப்பவனே! நீ எங்களுக்கு ப்ரபுவாயிருப்பவனையால் உனனை நாங் களெல்லோரும் பாதுகாத்துவரவேண்டும் வேனையி லு ள்ளவர் அனைவர்க்கும் ப்ரபு ஜாக்ரதையுடன ரகஷித் துக்கொள்ளவேண்டிய வஸ்து. இது நாணுகச்சொல்லு வதன்று. இதுவே உலகத்தில் வழங்கிவரும் நீதி. ஆகை யால் உன்னை நாங்கள் எமது குழைச்சரக்கைப்போல் எப்பொழுதும் மனவுக்கத்துடன பாதுகாத்துவரவேண்

---

1 காடுகளிலும். 2 வேலைகாராகள.

நம் அரிக்தமா! இவ்வளவேயன்றி, இதகக் கார்யத்திற் கெல்லாம், வ்ருக்ஷத்திற்கு வேர்போல், நீ மூலமாயிருக்கின்றனை. கார்யத்திற்கெல்லாம் மூலமாயிருக்கும வஸ்துவை முக்யமாக ரக்ஷிக்கவேண்டும். இதுவே கார்யமுணர்ந்தவர்களுக்குத் தகுந்த நீதி. எனென்னில்-வ்ருக்ஷத்தின்வேர் நன்றாயிருக்கில்லன்றோ பூகாய் முதலியன உண்டாகுங் குணங்கள் நிறவேறும். ஸத்யபராக்ரமா! பரதபா! அங்ஙனம் இங்கு இதகக்கார்யம் ஸாதிக்கும் விஷயத்தில் நீயே புத்தியும் பராக்ரமமும் அமைதது எங்களெல்லோர்க்கும் முக்ய காரணமாயிருதது ஸித்திக்கு மூலமாயிருக்கின்றனை. நீ லங்கைக்குப் போனபக்ஷத்தில எங்களுக்கு ஸித்தி எங்கிருதது உண்டாகும்? வானரோத்தமனே! இவ்வளவேயன்றி, எங்களெல்லோர்க்கும நீ ராஜனாயிருக்கின்றனை. மேலும் ராஜகுமாரன். உனைனப்பற்றியே யன்றோ தாங்கள் கார்யத்தை நிறவேற்ற வல்லவராவோம். நீ இலலையாயின், எங்களுக்கு எனன ஸாமர்த்யம் உண்டாகும்?' என்றனன. மஹாபராக்ரமையுடைய ஜாம்பவான அங்ஙனம் சொல்லுகையில் வாலிகுமாரன அங்கத அவனைப் பார்த்து 'ஸமுத்ரத்தைத தாண்டகானும் போகாமல், மற்றொரு வானரோத்தமனும் போகாதிருப்பின், இனி நாமெல்லோரும் மீளவும் ப்ராயோபவேசஞ் செய்யவேண்டியதே யலலவா. புத்தியிற்சிறதத வானராதனுடைய ஸுக்ரீவனது ஆஜ்ஞையை நிவறவேற்றாமல் கெடுவையுடதப்பி அததக கிஷ்கிநைதக்குப்போயினும், நமக்கு ப்ராணனகளெனனவோ தக்குவது தோற்றவில்லை. ராஜாவாகிய ஸுக்ரீவனுககு அனுக்ரஹம் வரினும் மிதமற்றதே. கோபம் வரினும் மிதமற்றதே. அவனை எற்படுத்தின கெடுவையுங்கடந்து ஸீதையையும் காணாமல் அங்குப் போவோமாயின, நமமெலலோர்க்கும நாசம தப்

பாது. ஆனதுபற்றி, நீ எல்லாம் தெரிந்தவன், இந்தக் கார்யம் நினைத்தபடி யன்றி மற்றொருவிதமாக முடிந்துக் கெடாதபடி நீயே உபாயமேதனும் சன்றாக ஆலோசிக்க வேண்டும்' என்றனன். வீரனும் வானரர் தலைவனுமாகிய அந்த ஜாம்பாவன் அப்பொழுது அங்கதன் தனக்குச்சொன்ன மறுமொழியைக்கேட்டு மிளவும் அவனைப் பார்த்து 'வீரனே! நீமுயன்ற இந்தக் கார்யத்திற்குச் சிறிதும் குறை நேராது. இதைக் கார்யத்தை முடிக்க வல்ல மஹாவீரனை இதோ அனுப்புகினறேன்' என்றனன். அனந்தரம் வானரர்களனைவரிலும் தலைவனாகிய ஜாம்பவான் அங்குள்ள வானரர்களெல்லோரையும் உபேக்ஷித்து பலபராக்ரமங்களில் ப்ரஸித்தனும் ஆகாயத்திற் கிளம்பித் திரிபவர்களெல்லோரிலும் சிறந்தவனும் ஏகாந்தப்ரதேசத்தில் ஸுகமாக உட்கார்ந்திருப்பவனும் வானர மஹாவீரனுமாகிய ஹனுமானைப் பார்த்து அவனையே ஸ்துதிக்கத்தாண்டுவதில் உத்ஸாஹப்படித்தத தொடங்கினன். அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று

{ ஜாம்பவான் ஹனுமானை ஸ்துதிக்கத் தாண்ட உத்ஸாஹப் படுத்தது தல }

அனந்தரம் ஜாம்பவான அலோகலக்ஷங் கணக்குள்ள வானர ஸைன்யமெல்லாம் துக்கத்திலாழ்ந்திருப்பது கண்டு அந்த ஹனுமானைப் பார்த்து 'வானரலோக வீரனே! ஸர்வ ஶாஸ்த்ரங்களும் உணர்ந்தவனே! ஹனுமானே! நீ ஏகாந்தஸ்தலத்தில் வெறுமனே உட்கார்ந்திருக்கிறாயன்றி ஒன்றுஞ் சொல்லாதிருக்கின்றனை யேன்? ஹனுமானே! நீ தேஜஸ்ஸிலும் பலத்திலும் வானரராஜனாகிய ஸுக்ரீவனுக்கும் ராமலக்ஷ்மணர்களுக்கும் நிகராயிருப்பவனலலவா! கச்யபப்ரஜாபதிக்கு விநதை

யிடம் பிறந்த மஹா பலிஷ்டனும் பக்ஷிகளனைத்திலும் சிறந்தவனுமாகிய கருத்மானென்னும் பேருடையவன் ஒருவன் உளன். மிகுந்த வேகமும் கீர்த்தியுமுடைய அம் மஹாபலன் கருடன் ஸமுத்ரத்தில் ஸர்ப்பங்களைப் பிடித் துக்கொண்டு போகும்பொழுது நான் பலதடவை பார்த் திருக்கின்றனன. அதற்குக் கருத்மானுடைய சிறகுக ளுக்கு எவ்வளவு பலம உளதோ, உன் பாஹுக்களுக்கும் அவ்வளவு பலம் உளது. உன பராக்ரமமும் வேகமும் அனைது பராக்ரம வேகங்களைக்காட்டிலும் எள்ளளவும் குறைந்தனையல்ல. வானரபுங்கவனே! உனக்குள்ள பல மும் புத்தியும் தேஜஸ்ஸும் தைர்யமும் மற்றை மஹத் ப்ராணியிடத்திலும் காணோம. அப்படிப்பட்ட உன்னை நீ அறியமாட்டாயா யென்ன? என்னப்பனே! அப்ஸர ஸ்த்ரீக ளெலலோரிலும தலைமையுள்ள புஞ்ஜிகஸ்தலி யெனனும் ஓர அப்ஸரமடந்தை உளள், அவள் மூன்று லோகங்களிலும் பரஸித்திபெற்றவள். ருபத்தில அவ ளுக்கு நிகராயிருப்பவள் மற்றெவளும் இருக்கமாட்டாள். அவள் சாபத்தினல் பூமியில் மஹாமுபாவனாகிய குஞ்சர னெனனுட வானரோத்தமனுக்குப் பெண்ணாகி வானர யோனியில பிறந்து காமரூபமுடையவளாகி அஞ்சனை யென்னும் பேர்பெற்றுக் கேஸரியை மணம்புரிந்தனள். அவள் வானரஸ்த்ரீயா யிருப்பினும் ஸ்வாங்க ஸுந்தரியா யிருந் தனள். அவள் மனம்போனபடியெல்லாம் வடிவந்தரிக்க வல்லவளாகையால் ஒருஸமயத்தில் மனுஷ்ய ஸ்த்ரீரூபந் தரித்து யெளவனத்தினல் விளகுகமுற்றுப் பலவிதமான பூமாலைகளையும் ஆபரணங்களையும் அணிந்து மேலாஃ பட்டுவஸ்த்ரந தரித்து வர்ஷாகால மேகம்போல் கறுத்த வர்ணம்பொருந்திய ஓர் பாவதஸிகரத்தில் உலாவிகொ ண்டிருந்தனள். அங்ஙனம் பர்வதசிகரத்தில் அகன்றகண்

கணுடன் அவ்வஞ்சனை விளையாடிக்கொண்டிருக்கையில், வாயுதேவனை சிவந்த தலைப்புடைய அவளது மேலான பச்சைப்பட்டுவஸ்திரத்தை விசிக்கொண்டுவந்து சிறிதுவிலகச் செய்தனன். அங்ஙனம் வஸ்திரம் விலகிப்போகையில் உருண்டு ஒன்றோடொன்று மிகவும் பொருந்தின அவளது துடைகளையும் பருத்து ஒன்றோடொன்று உறைந்திருக்கின்ற கொங்கைகளையும் அழகான முகத்தையும் வாயுதேவன் கண்டனன். அவ்வஞ்சனைக்குளை அகன்றுருண்ட இடையின் பின்பாகங்களையும் நுண்ணிய இடையையும் மிகவும் அழகான மேனியையும் ஸுந்தரங்களான ஸமஸ்த அவயவங்களையும் பார்த்தவுடனே வாயுதேவன் மனமதவிகாரத்திறல் மோஹமுற்றனன். அவன ஓரு தோஷமும் மில்லாத அந்த ஸுந்தரியிடத்தில் மிகவும் மனஞ் செலலவும் அவயவங்களெல்லாம் மனமதாவேசத்திறல் பரவசமாகவும் பெற்றுத் தனது நீண்ட புஜதண்டங்களால் அம்மடந்தையைக் கட்டியணைத்தனன். அந்த அஞ்சனை பதிவ்ரதையாகையால வாயுதேவன் அங்ஙனம் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டவுடனே தழுதழுப்புற்று 'என ஓருவனுக்கே பார்யையாயிருக்கும் என பதிவ்ரதாதர்மத்தை அழிக்க முயன்றனை?' எனறனள். அஞ்சனை சொன்னவார்த்தையைக் கேட்டு, வாயுதேவன் 'அழகிய இடையின் பினபுறமுடையவளே! ஸுந்தரீ! கான பாதிவ்ரத்யத்திறல் புகழ்பெற்ற உனனை ஆலிங்கனஞ் செய்தும் மனத்திறல் உனதேறுகலமதேனன்றி வேறிலலை ஆகையால் உன் பாதிவ்ரத்யம் கெடுமபடி உனனை ஹிம்ஸிக்கவில்லை. ஆதலால பயபபடவேண்டியதிலலை. பாதிவ்ரத்யம கெடாதிருபபதுமாத்ரமேயனறி உனக்கு மஹாவீரயசாலியும் மிகுந்த மதியுடையவனுமாகிய ஓர் புதல்வன் பிறப்பான. மேலும அவன மஹாதீரனும மஹா

தேஜஸ்வியும் மஹா பல பராக்ரமனுமாயிருப்பா னைகயால் தாண்டுவதிலும் ஆகாயத்தில் கிளம்பிப்போவதி லும் எனக்கு நிகராயிருப்பான' என்றனன். மஹா கபீ! மஹாபாஹூ! இங்ஙனம் வாயுதேவன் மொழி கையில, உன் தாய் அஞ்சனை ஸந்தோஷ அடைந்து அத்தப் பர்வதகுஹையில் வானரதிலகனுகிய உன்னை ப்ர ஸவித்தனள். அனந்தரம் நீ பிறந்தவுடனே அறியாதபால னையினும் அமமஹாரண்யத்தில் ஸூர்யன உதயமாகக் கண்டு அது ஓர பழமென்று நினைத்து அதைத் தின்ன விரும்பிக் கிளம்பி ஆகாயத்திற்குப் போயினை. கபிஸ்ரேஷ் டனே! அனந்தரம் நீ பல ஆயிரம் யோஜனை தூரம் ஆகா யத்திற்சென்று ஸூர்யனது உஷ்ணதேஜஸ்ஸினல் தபித் துத் துரத்தப்பட்டும் நீ வருத்தமுறாதிருந்தனை. வானர ஸ்ரேஷ்டனே! நீ அங்ஙனம் மிக்க வேகத்துடன ஆகா யத்தில் அவ்வளவு தூரம் வரையில் வருவதைக்கண்டு புந் தியிற்சிறந்த தேவேந்திரன் உன்னல் உலகத்திற்கு ஏது கெடுதி நேருமோவென்று சங்கித்துக் கோபத்துடன் உன்மேல் வஜ்ராயுதத்தைப் ப்ரயோகித்தனன். அந்த வேக த்தினல் நீ பர்வதசிகரத்தில் வீழ்ந்தையில உன இடது கபோலத்துமேல்பாகம் முறிந்துபோயிற்று. அதைப் பற் றியே உனக்கு ஹனுமானெனனும்பேர் ப்ரஸித்தமாயிற் று. வாயுதேவன் ஸமஸ்தத்தையும் முறிக்கவல்லவன. மே லும் வாசனையைத்தரித்து லோகங்களுக்கு ஸுகத்தை விளைவிப்பவன். அவன் இப்படிப்பட்ட சக்தியுடையவனு கையால், உன்னை இந்த்ரன அங்ஙனம் அடித்து விழுத் தள்ளினதைக் கண்டு மிகவும் கோபமுற்று மூன்றுலோக ங்களிலும் சிறிதும் காற்று வீசாதிருந்தனன். அங்ஙனம் மூன்றுலோகங்களும கலக்க முற்றிருக்கையில், லோகப் புக்களாகிய தேவதைகள் தத்தளிப்புற்றுக் கோபித்திரு

க்கினற வாயுதேவனை ஸமாதானப் படுத்தினர். ஸத்ய பராக்ரமனே! என்னப்பனே! வாயுதேவன் மனந்தெளி யப்பெற்ற பின்பு ப்ரஹ்மதேவன் யுத்தத்தில் ஆயுதங்களில் வதம் உண்டாகாதிருக்குமாறு உனக்கு வரங்கொடித்த னன. ப்ரபூ! தேவேந்த்ரன் வஜ்ராயுதத்தினல் அடிக்கப் பட்டும் நீ வருந்தாதிருப்பதுகண்டு மனத்தில் ஸந்தோ ஷம் மிகபபெற்று உனக்கு உணமனாவரதபோது மரணம் உண்டாகும்படி உத்தமவரத்தைக் கொடுத்தனன். அங்ங ணம பயங்கர பராக்ரமஞகிய நீ கேஸரியினகேஷேத்ரத்தில் (பார்யையிடத்தில்) பிறந்தவன்; வாயுதேவனுக்கு ஔர ஸபுத்ரன் தேஜஸ்ஸில் அதவாயுதேவனை நிகர்த்தவன; என்னப்பனே! நீ வாயுகுமாரன; கிளம்பிப்போவதில் அதத வாயுவுக்கு ஸமமாயிருப்பவன்; ஸாமர்த்யமும் பராக்ரமும் மிகுந்திருக்கப்பெறறவன. இரண்டாவது கருடனை என் னத்தகுதவன்; இப்பொழுது எங்களுக்கு ப்ராணன்கள் நிலைப்பது கஷ்டமாயிருக்கையால நீ எங்களெல்லோரை யும இப்பொழுது காப்பாற்றவேண்டும் அப்பனே! விஷ் ணுதேவன் த்ரிவிக்ரமாவதாரஞ் செய்தபொழுது. கான் பர்வதங்களும் அரண்யங்களும் நிறைந்த இப்பூமண்டலத் தையெல்லாம் இருபத்தோருதடவை ப்ரதக்ஷிணஞ்செய் தனன். இவ்வளவையன்றி முன்பு அம்ருதத்தைக்கடைந்தெடுத் த ஸமயத்தில், ஸ்ரீத்ரத்தில் பொகட்டுகையடையும் பொ ருட்டுத் தேவதைகளின் ஆஜ்ஞையின்படி கருடனித ழுவி கைகளை கற்புறத்தினின்று ஸம்பாதித்துக் கொண்டு வந்தனன். அந்த ஔஷதிகளை இட்டுக்கடைகதத்துபற்றியே ஸ்ரீத்ரத்தினின்று அம்ருதம் பிறந்தது, அப்பொழுது எமக்குப் பலம் அதிகமாயிருந்தது. அப்படியிருந்த கான் இப்பொழுது கிழவனேனனகையால் என பராக்ரமம் கு றைந்துபோய்விட்டது. இக்காலத்தில் எங்களெல்லாரி

லும் நீயே எல்லா ஸாமர்த்யங்களுமுடையவன். ஆகையால் பராக்ரமத்தைக் கைப்பற்றி வளர்த்து நிற்பாயாக. நீதான் தேவர்களெல்லோரிலும் மேலாயிருப்பவனல்லவா? வானர ஸிம்ஹமே! இந்த வானரஸைன்யமெல்லாம் உன் வீர்யத்தைக் கண்ணாரக்காண விரும்புகின்றது. எழுந்திருப்பாயாக. ஸமுத்ரத்தைத் தாண்டுவாயாக. ஹநுமந்தனே! வானரர்களெல்லோரும் வருத்தமுற்றிருக்கின்றனரல்லவே! நீ இப்படி வெறுமனே இருக்கலாகுமா? முன்பு விஷ்ணு தேவன பலிசக்ரவர்த்தி கொடுத்த மூன்றடிகளை ஆக்ரமித்தாற்போல் நீ மஹாவேகத்தைத் ஏற்றுக்கொண்டு ஸமுத்ரத்தைத் தாண்டுவாயாக' என்றனன். அப்பொழுது ஜாம்பவந்தன் போதனைசெய்து இங்ஙனம் தூண்டுகையில் ப்ரஸித்த வேகமுடையவனாகிய ஹநுமான தன பராக்ரமங்களையெல்லாம அறிந்து அவ்வானரவீரஸைன்யமெல்லாம் ஸந்தோஷிக்கும்படி அற்புதமாக மேனியை வளர்த்திக் கொண்டனன். அறுபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

ஹநுமான் வானர்களை உத்ஸாஹப்படுத்
தி ஸமுத்ரத்தைத் தாண்டுமபொருட்டு
மஹேந்த்ர பாவத்தினமேல ஏறுதல.

அனந்தரம் நூறுயோஜனதூரமுடைய ஸமுத்ரத்தைத் தாண்டமுயன்று மேனியைப் பெருக்கச்செய்து அவ்வளவுக்கவ்வளவு பராக்ரமமமிகுந்து வரபெற்று விளங்கும் வானரோத்தமனாகிய ஹநுமானைப் பார்த்து அவ்வானர்கள் உடனே துக்கத்தைதவிட்டு மிகுந்த ஸந்தோஷம் அடைந்து ஸிம்ஹநாதத்தைச் செய்துகொண்டு மஹாபலனாகிய அந்த ஹநுமானை ஸ்தோத்ரத்தைச் செய்தனர். காரணன் த்ரிவிக்ரமாவதாரத்தில் மூன்றடிகளால் மூன்றுலோகங்களை அளக்க உத்ஸாஹபடும்பொழுது ப்ராணிகள் கண்டாற்போல், அவ்வானர்கள் எல்

லோரும் ஸமுத்ரத்தைத்தாண்ட உத்ஸாஹத்துடன் சரீரத்தை வளர்த்திக்கொண்டிருக்கிற அந்த ஹனுமானைஸ்தோஷமும் ஆச்சர்யமும் மேலெழப்பெற்றுக் கண்டனர். மஹா பலஞ்கிய ஹனுமான் தன்னை அங்ஙனம் வானரர்கள் ஸ்தோத்ரஞ் செய்துகொண்டிருக்கையில் ஸந்தோஷப்பெருக்கினால் பலம் வளரப்பெற்று வாலை உதறிப் பூமியில் தட்டி வ்ருத்தி அடைந்தனன். அங்ஙனம் வ்ருத்தர்களாகிய வானரச்ரேஷ்டர்கள் ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டிருக்கையில், அவ்வளவுக் கவ்வளவு தேஜஸ்ஸு வளரப்பெற்று விளங்குகின்ற அந்த ஹனுமானது உருவம் நிகரற்றிருந்தது. பர்வதகுஹையில் ஸிம்ஹம் வளர்ந்து மேனியை நெறித்துக்கொண்டு வருமாறு அப்பொழுது வாயுகுமாரனாகிய ஹனுமான் வளர்ந்தனன். அங்ஙனம் வளர்ந்துவருகின்ற புத்திமானாகிய ஹனுமானது முகம் ஜ்வலிக்கின்ற மடக்குபோலவும் புகையில்லாத அக்னிபோலவும் தகதகவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அனந்தரம் ஹனுமான் வானர மத்யத்தினின்று எழுந்து மேனியில் ஸந்தோஷத்தினால் மயிர்க்கூச்சலுண்டாகப்பெற்றுப் பெரியோர்களான வானரர்களுக்கெல்லாம் நமஸ்காரஞ்செய்து அவர்களை நோக்கி 'அக்னிக்குஸ்நேஹிதனாகிய வாயுதேவன் நிரியுத்தன்மையுடையவன், மஹா பலமுடையவன், அளவிறந்த சக்தியுடையவன், ஆகாயத்திலேயே ஸஞ்சரிக்குந் திறமை யமைந்தவன், அவன் பர்வதசிகரங்களையும் பிளந்திருக்கின்றனன். நான் அப்படிப்பட்ட சீக்ர ஸஞ்சார சக்தியும் மஹாவேகமும் மஹாபலமுமுடைய வாயுவுக்குப் பிறந்தவன். ஆகையால் தாண்டுவதில் எனக்கு நிகரானவன் மற்றெவனும் இல்லை. நான் நடுவில் சிறிதும் இளைப்பாறிக் காலதாமதஞ் செய்யாமல் மிகவும் சீக்ரமாக, மிகுந்த விஸ்தாரமுடையதும்

ஆகாயத்தை அளாவியிருப்பதுமாகிய மேருபர்வதத்தி
ற்கு ஆயிரந்தடவை ப்ரதக்ஷிணஞ் செய்வேன். கான்
எனது பாஹுக்களால் விரைவில ஸமுத்ரத்தைக் கலக்கி
இறைத்துப் பர்வதங்களோடும் நதிகளோடும் மஹி
ளோடுங்கூடின இப்பூமண்டலத்தை யெல்லாம் அந்த
ஸமுத்ரஜலத்தில் முழ்கச்செய்ய வல்லவன். என் துடைக
ளுடையவும் கணைக்கால்க ளுடையவும் வேகத்தினால்
ஸமுத்ரத்தை மேற்கிளம்பும்படிசெய்து அதிலுள்ள பருப்
பருத்த முதலைகளை ஆகாயத்தில் கிளம்பச்செய்வேன்.
பக்ஷிகள் திரியும் ஸ்தானமாகையால் தனக்குரியதாகிய
ஆகாயத்தில கருடன் ஆஹாரத்தின்பொருட்டு ஸர்ப்பங்க
ளைப் பிடிக்க மஹா வேகத்துடன் திரியும்பொழுது, கான்
அவனை ஓரேமுயற்சியாக ஆயிரம்தடவைகள் சுற்றிவரு
வேன். கான், ஸூர்யன் உதயபர்வதத்தி னின்று புறப்ப
தும்பொழுது அவனுடன்கூடவே புறப்பட்டு அவனுக்கு
முன்னமே அஸ்தமயபர்வதஞ் சேர்ந்து மீளவும் அவன்
ஆகாயமத்யத்தில் ஜ்வலிக்கும் பொழுதே அவனுக்கெ
திரில் வருவேன். வானரச்ரேஷ்டர்களே! அவ்வளவும்
ஸூர்யனை எதிர்கொண்டபின்பு கான் பூமியில் இறங்கி
இளைப்பாறுமலே முதலில் தொடங்கின அம் மஹா
வேகத்துடனே மீளவும் ஓர்தடவை ஸூர்யனை எதிரிட
வல்லேன். இவ்வளவுமாத்ரமே அன்று. ஆகாயத்தில்
திரியும் க்ரஹ நக்ஷத்ராதிக ளெல்லாவற்றையும் வேகத்
துடன் கடந்து கடக்கவல்லேன். வானரர்களே! கான்
ஆகாயத்திற் கிளம்பும்பொழுது ஸமுத்ரத்தைச் சோ
ஷிக்கச் செய்வேன்; பூமியைப் பிளப்பேன்; பர்வதங்
களைச் சூர்ணஞ் செய்வேன். கான் தாண்டும்பொழுது
என் துடைவேகத்தினால் ஸமுத்ரம் முழுமையும் என்
னைப் பினதொடர்ந்துவரும். இப்பொழுது கான் ஸமுத்ரத்

தைத் தாண்டும்பொருட்டு ஆகாயத்தில் கிளம்பினவுட னே என்வேகத்திலல் கொடிகளினின்றும் மரங்களி னின்றும் பலவகைப்பட்ட புஷ்பங்களெல்லாம் என் பின் னே அடித்துக்கொண்டு வரப்போகின்றன. அங்ஙனம் புஷ்பங்கள் நிறைந்திருக்கையால் ஆகாயத்தில் நான் போகும்வழி நக்ஷத்ரங்கள் நிறைந்த ஸ்வாதி நக்ஷத்ரமார் க்கம்போல் (சாயாபதம்போல்) விளங்கும். வானரர்களே! நான் ஆகாயத்தில் கிளம்பும்பொழுதாவது ஆகாயத்தில் போகும்பொழுதாவது ஸமுத்ரத்தின் தென்கரையில் இழியும்பொழுதாவது ஸமஸ்த பூதங்களும் என்னை வேடி க்கையுடன் பார்க்கப்போகின்றன. வானரர்களே! நான் மஹா மேகம்போன்ற மேனியுடன் ஆகாயத்தை விழுங் குவான்போல் ஆகாயத்தையெல்லாம் மறைத்துக்கொண் டு போகும்பொழுது என்னை நீங்களுங்கூடப்பார்ப்பீர்கள். நான் முயற்சியுடன் ஸமுத்ரத்தைத் தாண்டும்பொழுது மேகங்களை யெல்லாம் சிதறச்செய்வேன்; பர்வதங்களை நடுங்கச் செய்வேன்; ஸமுத்ரங்களைக் கலக்கிவிடுவேன். எனக்குள்ள சக்தி கருடனுக்கும் வாயுவுக்கும் மாத்ரம் நேருமேயன்றி மற்றவனுக்கும் ஸம்பவிக்காது. மஹா வேகமுடைய கருடனும் வாயுவும் தவிர ஆகாயத்தில் கிளம்பிச்செல்கின்ற என்னைப் பின்தொடர்ந்துவரும் ப்ரா ணி மற்றொன்றும் எங்கும் புலப்படவில்லை. ஓர் இமைப் பொழுதில் நிமேலென்று மேகத்தினின்று மின்னல் கிளம் புவதுபோல் பிடிப்பில்லாத ஆகாயத்தில் கிளம்புவேன். நான் ஸமுத்ரத்தைத் தாண்டிக்கொண்டிருக்கையில், என் உருவம் முன்பு த்ரிவிக்ரமாவதாரத்தில் பலிகொடுத் த மூன்றடி பூமியை அளக்கின்ற மஹாவிஷ்ணுவின் உரு வம்போல் பயங்கரமாகவும் மிக்க ஆச்சர்யமாகவும் இருக் கும். வானரர்களே! இதெல்லாம் என்புத்திக்குத் தோற்

றுகின்றது. என் மனதும் வலக்கைதுடிப்பது முதலான சேஷ்டைகளும் அங்ஙனமே தெரிவிக்கின்றன. நான் தப்பாமல் ஸீதையைக்காண்பேன். நீங்கள் ஸந்தோஷத்துடன் இருப்பீர்களாக. நான் வேகத்தில் வாயுவை நிகர்த்தவன்; கருடனுக்கொப்பானவன்; பதினாயிரம் யோஜனைகள் தாண்டுவேனென்று எனக்குத் தோற்றுகின்றது. நான் வஜ்ராயுதத்தைக் கையிலெடுத்தின இந்த்ரனைபோயினும் ஸ்வயம்புவாகிய ப்ரஹ்மதேவனைபோயினும் பராக்ரமத்தினால் ஜயித்து அவர்கள் கையினின்று அம்ருதத்தை மிக்க வேகத்துடன் கொண்டுவருவேன். ஆயிரம்படைச் சொல்லி யென்? லங்கையையாயினும் பிடுங்கிக்கொண்டு வருவேனென்று என் அபிப்ராயம்' என்றனன். அங்ஙனம் மிதம் விஞ்சின தேஜஸ்ஸுடன் ப்ரகாசிக்கின்ற அவ்வானர ஸிம்ஹன் கர்ஜித்துக்கொண்டிருக்கையில் வானரர்க ளனைவரும் மிகவும் ஸந்தோஷம் அடைந்து ஆர்ச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த ஹனுமான் அங்ஙனம் ஸமஸ்த வானர பந்துக்களுக்கும் சோகம் தொலையும்படி மொழிந்த அந்த வாக்யங்களைக்கேட்டு ஜாம்பவான மிகவும் ஸந்தோஷித்து அவ்வானரோத்தமனை நோக்கி 'வீர! கேஸரிபுத்ரனே! வாயுகுமார! ஹனுமானே! என்னப்பனே! நீ இப்பொழுது உன் பந்துக்களாகிய ஸமஸ்த வானரர்களுடையவும் மஹாதுக்கத்தையெல்லாம் போக்கடித்தனை. வானரஸ்ரேஷ்டர்களெல்லோரும் சேர்ந்து உன் மங்களத்தை விரும்பி, நீ போகுங்கார்யம் ஸித்திக்கும்பொருட்டு மனஸ்ஸுடன் மங்கலாசாஸனஞ் செய்துகொண்டிருப்பார்கள். மஹர்ஷிகளின் ஸம்மதத்தினாலும் பெரியோர்களது அனுக்ரஹத்தினாலும் இம் மஹாஸமுத்ரத்தை நீ தாண்டுவாயாக. நீ திரும்பிவரும்வரையில் காங்களெல்லோரும் ஒருகாலால்

நின்றுகொண்டிருப்போம். இவ்வானரர்க ளனைவருடையவும் ப்ராணன்கள் உன்னையில் இருக்கின்றன' என்றனன். அனந்தரம் வானரஸிம்ஹனெனிய ஹனுமான் அவ்வானரர் களைப்பார்த்து 'நான் ஸமுத்ரத்தைத் தாண்டும்பொழுது னன்மேலகத்தை இத்தப்பூமி ஸஹிக்கமுடியாது. இத்தம் மஹேந்த்ரபர்வதம் உயர்ந்த கல்ப்ரதேசங்கள் மிருந்திருக்கப்பெற்றது. இதன் சிகரங்கள் நிலபாயிருப்பனவுகளும் (அசையாதிருப்பனவுகளும்) மிகப் பெரியனவுகளுமாயிருக்கின்றன. ஆகையால் இவையே என் வேகத்தைப் பொறுக்கவல்லவை. நானவித வ்ருக்ஷங்கள் நிறைந்து கைனிகதாதுக்களின் பெருக்குகளால் விளக்கமுற்றிருக்கின்ற இம் மஹேந்த்ரபர்வத சிகரங்களில் நான் என் வேகத்தைத் தொடங்குகிறேன். வானரப்ரேஷ்டர்களே! இங்கிருந்து நாறுயோஜனதூரம் தாண்டப்போகையில் என்பாதங்களின் அபிகாதத்தை (உறைத்தலை) இத்தப் பர்வதசிகரங்கள் தரிக்கவல்லவை' என்றனன். அனந்தரம் பகைவரை அடக்குந் திறமையுடைய வாயுகுமாரனும் வாயுவை நிகர்த்தவனுமாகிய அந்த ஹனுமான் பர்வதஸ்ரேஷ்டமாகிய அந்த மஹேந்த்ரபர்வதத்தின்மேல் ஏறினன். அந்தப் பர்வதம் பலவகை வ்ருக்ஷங்களுடையதும் யசும்புல் தரைகளில் திரியும் பல ம்ருகங்களோடு கூடியதும் செடிகளும் புஷ்பங்களும் நிரம்ப நிறைந்ததும் என்றும் வ்ருக்ஷங்கள் புஷ்பங்களும் பலங்களும் ஓயாதிருக்கப்பெற்றதும் ஸிம்ஹங்களும் பெரும்புலிகளும் திரியவும் மத்தகஜங்கள் ஸஞ்சரிக்கவும் பக்ஷிகளின் பழங்களின் ரஸத்தைப்புசித்து மதித்துக் குவியல்குவியலாகக் கலகலவென்று கூவவும் ஆங்காங்குப் பெருகிவருகின்ற மலபருவிகளின் ஜலங்கள் காற்புறமும் நிறைந்திருக்கவும்பெற்று மிகவும் பெரிய சிகரங்களால் விளக்கமுற்றதுமாயிருக்

தது. மஹாபலனும் பராக்ரமத்தினல் தேவேந்த்ரனைப் போன்றவனுமாகிய அவ்வானரோத்தமன் ஹனுமான் அந்த மஹாபர்வதத்தின்மேல் விளையாடினன். அங்ஙனம் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது அம்மஹாபர்வதம் மஹானுபாவனாகிய ஹனுமானது பாதங்களின் அதிகரத்தினல் நெருக்குண்டு, ஸிம்ஹத்தினல் அடிக்கப்பட்ட பெரிய மத்தகஜம்போல் ப்ரகாசித்தது. அப்பர்வதம் அந்தக் கபீந்த்ரனுடைய அடிவைப்புகளால் தன் சிகரங்கள் சிதறப்பெற்று ஜலப்ரவாஹங்களைப் பெருக்கியது. ஹனுமானது பாதங்களின் உறைத்தல்களால் அம்மஹா பர்வதத்தில் அப்பொழுது ம்ருகங்களும் யானைகளும் பயந்தோடிப்போயின. பருப்பருத்தவ்ருக்ஷங்களும் நடுக்கமுற்றன. மத்யபானஞ் செய்வதில் மிக்க அபிநிவேசமுடைய (மனவிருப்பமுடைய) நாகதம்பதிகளும் கந்தர்வமிதுனங்களும் வித்யாதரக்கூட்டங்களும் அந்தப் பர்வதத்தின் பெருப்பெரிய தாழ்வரைகளைவிட்டுப் பயந்தோடிப்போய்க் கொண்டிருந்தன. டக்ஷிகள் மேல் கிளம்பிப்போயின. பெரிய ஸர்ப்பங்கள் பாழிகளில் மறைந்தன. சிகரங்களிலுள்ள பெருங்குகற்கள் இப்படியும் அப்படியும் அசைந்தன. அப்பொழுது ஸர்ப்பங்கள் பாழிகளினின்று பாதி வெளிவந்து படங்களை விரித்துப் பெருமூச் செறிந்துகொண்டிருக்கையில், அந்தப் பர்வதம் பல டக்கயங்கள் கட்டப் பெற்றதுபோல் ப்ரகாசித்தது. அந்தப் பர்வதத்திலுள்ள மஹர்ஷிகள் பயந்து ஓடிப்போகையில், அவர்களைப்பிரிந்த அப்பர்வதம் மஹாரண்யத்தில் ஸஹாயமாயிருப்பவர் கைவிட்டுப்போகையில் ஒண்டியாகிப் பயந்து வருந்துகின்ற வழிப்போக்கன்போலிருந்தது. வேகமுடையவனும் சத்ருவீரர்களை முடிக்கும் திறமையுடையவனும் கம்பீரமனமுடையவனும் மிகவும் புகழ்பெற்ற மஹானுபாவனும் வானர

ர்கனில் சிறந்த வீரனுமாகிய அந்த ஹனுமான் வேகத்
ணைக்காட்டி முபன்று மனத்தில் ஸமுத்ரத்தைத்தாண்ட
னிச்சயித்து அப்பொழுதே மனத்திலல் இலங்காபுரியைச்
சேர்ந்தவனபினன். அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்
றிற்று.

கிஷ்கிந்தாகாண்டமும் முற்றுப்பெற்றது.

ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணேநமஃ.